

16096

அவ்விஷயங்களாவன:—

களும், அவற்றுள்
கல் சர்க்கரைப்பொங்க ...ர்கள் உலகவிவகாரங்களை நடத்துவதற்குக்
காய் வற்றல் அப்பம் வட ...ய முக்கிய உபகரணமாதலால், அவர்கட்குக்
இவ்வகைகளில்அளவிறந்த என்பதையும் அதனாலுண்டாகும் அளவி
புலாவ் ஸப்ஸிபுலாவ் சிந்திபு ...ம் எழுதிவருவதன்றியும், புத்திதீட்சணி
ட்புலாவ் பிரியானி தேசிபு ...முமமைமந்த கதைகளும், குடும்பவிவகார
அனேகபுலாவ் தினுசுகளு ...கர்ப்பஸ்திரீகள் கவனிக்கவேண்டிய முக்
ஷ்த் ரேஸ்ட்கோஷ்த் கல ...தைகட்குக் கற்பிக்கவேண்டிய முறைகளு
சிந்திகோஷ்த் குர்மாகோ ...நடத்தவேண்டிய இல்வாழ்க்கையினியல்பும்
கறிவகைகளும் இன்னும்ப ...களும்;

5. கடவுளைப்பற்றியு ...விசளக்கியமும் கௌரவமும் அடையும்பொ
ருபத்தைத் சம்பாத்தியஞ்செய்வதற்கேற்ற பற்பலவழிவகைகளும், அ
முத்தியடைத ...அனேகசாமான்களை வெளியூரினின்றும் வரவழைக்காமலு
ளிந்து கடையா ...று வரவழைத்தார் ...ம் இலாபம்கொடுத்து வாங்காம
மதசம்மதகைத்தொழில் விதிப்பி ...ம், நாமே இவ்விடத்தில் உற்பத்தி
6. ...து அனுபவிக்கவும், அ ...ளையே ஏராளமாகச்செய்து நல்லஇ
...ற ...பத்துடன்விற்றுத் திர ... சம்பாதித்தற்கேற்ற முறைவகைக
ளும், உதாரணமாக, பலவ ...சோப்புகள், பல்வகைவார்னிஷ்கள், பல
வகை சீல் அரக்குகள் பல ...இங்கிகள்என்னும் இவைபோன்ற இன்
னும் அநே ...கவஸ்துக்க ...பொன்வெள்ளி கில்ட் கொடுக்கும் முறை
களும் ...பேட்ட ...படிக்கும் முறைகளும், இன்னும் இவைபோ
ன்ற அனேகய ...ந்திரவேலைகளும்;

3. ஜாலவித்தைகள்:—அபூர்வமும் ஆச்சரியமு முண்டாகும்
படி காட்டுகின்ற ஜாலவித்தைகளின் ரகசியங்களும் அவற்றின் பேத
வகைகளும், இதபுணர்வதால் இதரர்களாலே ஏமாந்து போகாவண்
ணம நமக்கு சிரிப்பும் கவனசக்தியும் நாளுக்குநாள் விர்ததியாகும்
விதங்களும்;

JL
5 m 2.11, N00 N0011

4. பாகமு:—நாம சமையல்செய்து சாப்பிடுகிற வஸ்துக்கள்
வாய்க்கு உருசிகவும் இன்பமாகவும் வாய்ந்திருக்குமாயின், அதுவே
மனதிற்குத் திருப்தியுண்டாக்கும், அவ்வாறுண்டாயின் நோயணு
காத சுகசரீரிகளாக இன்பத்துடன்வாழலாம். இவ்வண்ணம் சுகித்தரு
ந்த பெரியசக்ரவர்த்திகள் இராஜாக்கள் சுல்தான்கள் நவாபுகள் முத
லியபிரபுக்கள் செய்து சாப்பிட்டுவந்த சமையல் பாகங்களில் மிக்கமா
ரியமானதும் செலவு சொற்பமாயுள்ளதுமான அனேகவிசித்திரமு

கடவுள் துணை.

# விநோத விசித்திரப்

1900-ம் வ

புஸ்தகம் 1.] ஜனவரிமீ 1௳ தி

## நமது கருத்து.

சர்வ வல்லபமுடைய கடவுளருளால் இன்றையத்தினம் (...)திரிகையை எழுதத் தொடங்குகின்றோம். இப்பத்திரிகையை இதை நேசிக்கும் பத்திரிகாபிமானிகளையும், சக ...பத்துக்களும் ...ன்றும் நீக்கி எல்லாச் சம்பத்துக்களுடன் நீடூழிவாழ்ந்துவரும்படி சர்வவல்லபராகிய கடவுள் கருணைபுரிவாராக.

எனைய பத்திராதிப சகோதரர்களுக்கு வந்தனங்கூறுகின்றோம். இப்பத்திரிகையின் முக்கியக்கோட்பாடென்னவெனில், மானிடர்களாகிய நாமனைவரும் இவ்வுலகத்தில் ஜீவிக்கிறவரையிலே சுகசரீரிகளாகவும், தனவான்களாகவும், புத்திரபௌத்திர சம்பன்னர்களாகவும், எவராலும் மதிக்கத்தக்க மேம்பாட்டினர்களாகவும், நிரம்பிய வித்வான்களாகவும், நுண்ணறிவினர்களாகவும் வாழ்ந்திருந்து, மேலுலகத்திலும் நித்யானந்தவாழ்வடைந்து சுகிப்பதற்குப் பலவழிகளைத் தேடிக்கொள்ளவேண்டுமென்பதே. இக்கோட்பாட்டை நிறைவேற்றுதற்காக, வெகுநாள்தேடி அனேகஅரிய நூல்களின் ஆராய்ச்சியாற்கண்டுணர்ந்த பலவேறுவகையான அபூர்வவிஷயங்களெவற்றையும் ஒருவாறுபாகுபடுத்தி, தற்காலம் இதனடியிற்குறித்த ஆறுவகைகட்குள்ளடக்கி, அவ்வவற்றிற்குரிய விஷயங்களை விவரமாய் எழுதிவருவதன்றியும் காலத்திற்குக்காலம் அதிகஉபயோகமடைய நூதனவிஷயங்களும் எழுதப்படும்.



...றைகளும், அவற்றுள் அன்னவகைக்கள் சித்திரான்னவகைகள் பொங்கல் சர்க்கரைப்பொங்கல் குழம்பு கூட்டு ரஸம் கறிதுவையல் ஊறுகாய் வற்றல் அப்பம் வடகம பலகாரம் மிட்டாய்அல்வா பர்பி என்னும் இவ்வகைகளில்அளவிறந்த தினுசுகளும்; புலாவ் அக்னிபுலாவ் முருக்புலாவ் ஸப்ஸிபுலாவ் சிந்திபுலாவ் பிளேட்புலாவ் ஸர்தாபுலாவ் ரோஸ்ட்புலாவ் பிரியானி தேசிபுலாவ் பஞ்சாபிபுலாவ் முதலிய இன்னும் அனேகபுலாவ் தினுசுகளும்; ஆப்கோஷ்த் காராகோஷ்த் மிட்டாகோஷ்த் ரோஸ்ட்கோஷ்த் கலியாகோஷ்த் புக்காகோஷ்த் கச்சிகோஷ்த் சிந்திகோஷ்த் குர்மாகோஷ்த் பிளேட்கோஷ்த் கிமாகோஷ்த் முதலிய கறிவகைகளும் இன்னும்பலவித நூதனபாகங்களின் முறைகளும்;

5. கடவுளைப்பற்றிய விஷயம்:—கடவுளின் யதார்த்தகுண சொரூபத்தைத் தெரிந்துகொள்ளவும், அவரைத்தொழுது துதித்துவாழ்த்தி முத்தியடைதற்கேதுவான மார்க்கங்கள் பலவற்றையுமாராய்ந்து தெளிந்து கடைப்பிடித்து ஒழுகவேண்டியவிதிகளும்; (இவையாவும் சர்வமதசம்மதமானவைகளே)

6. வைத்தியம்:—மானிடதேகம் இவ்விதமாய் இயற்றப்பட்டிருக்கிறதென்றும், அதற்குநோய்கள் இன்னின்னகாரணங்களால் நேரிடுகின்றனவென்றும், பற்பலவாகத்தோன்றும் அந்நோய்களுக்கேற்ற பரிகாரங்கள் இவையிவையென்றும், தெளிவாய் விளக்கிக்காட்டிய அநேகவித ஔஷதங்களும் சிகிச்சைகளும்;

அன்றியும் சகலருக்கும் சுகமும் இலாபமும் உண்டாக்கத்தக்க விஷயங்களெவைகளோ அவைகளைப்பற்றி அடிக்கடி எழுதிவரப்படும். விஷயங்கள்யாவும் வாசிக்க வாசிக்க இன்பத்தையும் கேட்கக்கேட்கப் பிரீதியையும் விளைவிக்கும். இவையனைத்தும் மானிடர்களுக்கு இகபரமிரண்டினும் இன்றியமையாதனவாயுள்ள நன்மைகளைப் பயக்குமென்பதற்கையமேயில்லை. இக்கருத்தைக்கொண்டே பரோபகாரமாய் மிக்களியவர்களும் சுலபத்தில்வாங்கி வாசிக்கக்கூடியவிதமாகத் தபால்சார்ஜ்உட்பட வருடம் ஒன்றுக்கு ஒருரூபாயாகக் குறைந்தசந்தா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

சாதாரணமாக மற்றையபத்திரிகைகளை வாசித்தபின்பு வீசிவிடுவதும் பொட்டளங்கள் கட்டுவதும்போல் இப்பத்திரிகையை உபயோகிக்காமல், இதைப் பத்திரப்படுத்திவைத்திருந்து வருஷமுடிவிற்கூடிய பன்னிரண்டுபத்திரிகைகளையும் சேர்த்து, ஓர்புத்தகரூபமாகப் பைண்டுசெய்துவைத்துக்கொண்டால், எக்காலத்திலும் யாவருக்கும் பிர

யோசனமுள்ள நூலாகும். இன்னும் இதர பத்திரிகைகளை இரவலாக வாங்கி வாசிப்பதுபோல் இதைவாசிக்கலாகாது. ஏனெனில் ஒவ்வொருவரும் இதைவாசித்தபின் தங்கள்குடும்பத்தின்ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் கற்பிக்கவேண்டிய முக்கியவிஷயங்கள் அநேகம் இதில் அடங்கியிருக்கின்றன. சந்தாதாரர்கள் யாவரும் இவ்வாறே செய்வார்களென்றெண்ணியே எட்டுப்பக்கங்கொண்ட பாரம் சைஸில் இப்பத்திரிகையை வெளியிட்டுவரத்தொடங்கினோம். இப்பத்திரிகை நம் கையொப்பநேயர்களுக்குத் தினேதினே உற்சாகத்தையும் குதூகலத்தையும் உண்டுபண்ணத்தக்க ஓர்கருவியாகுமென்பதற்குத் தடையில்லை. நம்நேயர்கள் தாம் இப்பத்திரிகையை ஆதரித்துவருவதுபோலவே தம்முடைய ஏனையநேயர்களும் இதைஆதரித்துவரும்வண்ணம் அவ்வவர்களையும் தூண்டி இதைவிர்த்திக்குக் கொண்டுவருவதற்கேற்ற மார்க்கங்களைத் தேடுவார்களென்று எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு செய்வார்களாயின், தற்காலம் பதினாறுபக்கங்களுடன் மாதத்திற்கொருமுறை வெளிவரும் இப்பத்திரிகையை, முப்பத்திரண்டுபக்கங்களுடன் வாரத்திற்கொருமுறையாக வெளிவிடுவோம். இதுநிற்க.

"கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள் - வெற்ற
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீ
ரெறும்புந்தன் கையாலெண் சாண்." எனவும்,

"முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க - சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்." எனவும் வரும்,

மூதுரைகளுக்கேற்ப, எவ்வளவுகல்விமான்களாகவும் விற்பன்னர்களாகவும் விவேகவான்களாகவுமிருந்தபோதினும் உலகத்துள்ளமானிடர்களில் தவறுதலில்லாதவர்கள் கிடையவேகிடையாது. இதனாலன்றோ,

"அதிமதி நுட்பமோ டருங்கலை கற்பினும்
விதியது வசத்தால் விதிவிலக் கயர்ப்பார்." எனவும்,
"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்." எனவும்,

ஆன்றோர் ஆங்காங்கு கூறியுள்ளார். இந்நியமனப்படி நாம் எழுதிவரும் விஷயங்களில் சிற்சில சந்தர்ப்பங்களிலே ஏதேனும் பிழைபாடுகள் நேரிடவுங்கூடும். அவ்வாறுவாய்க்கும் பிசகுகளைக் கல்விமா



ன்கள் எமக்கெடுத்துக்காண்பித்துத் திருத்தங்கூறுவார்களாயின், அத்திருத்தம்நேரானதாயிருக்கும்பட்சத்தில் அத்தகையோர்க்கு அநேகவந்தனஞ்செய்து அவ்வாறேதிருத்திக்கொள்வோம், அஃதின்றி நாம் எழுதியதே சரியாகவும் அவர்கள் திருத்தியது பிசகாகவுமிருக்கின், நாம்கூறியதே சரியென்பதற்கேற்ற அநேகமுகாந்தரங்களை எடுத்துக்காட்டி அவர்கள் அங்கீகரிக்கத்தக்க சமாதானங்கூறுவோமேதவிர, எத்தகையோரிடத்தும் எதிர்த்துக் குதர்க்கஞ்செய்ய ஒருக்காலும் துணியோம். ஏனென்றால், வாஸ்தவத்தில் இப்பத்திரிகைவாயிலாய் உலகத்தார்க்குவேண்டிய இன்றியமையாத அநேக அரியவிஷயங்களை விளக்கவேண்டுமென்றபிப்பிராயங்கொண்ட நாம், அதைவிட்டு வீண் குதர்க்கவிவகாரங்களிற் பிரவேசிப்போமாயின், நூல்களில் ஆங்காங்குள்ள அரியவிஷயங்களைத்தேடி இப்பத்திரிகையில் எழுதுதற்குச்சமயம்வாய்க்காதென்பதே. ஆகலின் எம்மாலியன்றவரையில் முயற்சித்து எழுதிவரும் விஷயங்கள்யாவும் நம்நேயர்களுக்கு மேன்மேலும் விருப்பைவிளைவிக்குமேயன்றி வெறுப்பைத்தலைகாட்டவொட்டாதென்பதுண்மை. அவ்வண்ணமே எழுதிவரும்படி காருண்யக்கடலாகிய நமதுகர்த்தா கிருபைசெய்தருள்வாராக.

## கடவுள்.

மட்டுக்கடங்காததும் மதிப்புக்கிணங்காததுமான பராக்கிரமமுடைய நமது சிருஷ்டிகர்த்தாவின், வல்லபம் பராக்கிரமம் செய்கை அன்பு இரக்கம் தயை தாட்சணியம் கொடை ஆக்கல் அழித்தல் முதலிய விஷயங்களைப்பற்றிப்பேசவும் புகழவும் எந்தப்பிராணியினாலும் முடியவே முடியாது. ஆயினும் இவ்வுலகில் நமக்கியன்றவரையில் அவருடைய புகழைப்பற்றிப்பேசவேண்டியது நமதுகடமையாயிருப்பதால், இவ்விடத்தில் அதுவிஷயத்தைப்பற்றி மிகவும்சொற்பமாயெடுத்துக்கூறுவோம்.

ஏகபரிபூரணராய் எங்கும் நிறைந்து தனித்துச் சர்வவல்லபத்தோடுங்கூடி ஏகாங்கியாய்நிற்கும் ஏகவஸ்துவேகடவுள். ஆதி அந்தம் அழிவு அற்றவராய் எக்காலத்திலும் சாஸ்விதமாயிருப்பவர் அவர் ஒருவரே. தாய்தந்தையராற் பிறவிகொள்ளாமலும் வேறெந்தவஸ்துவினாலும் சிருஷ்டிக்கப்படாமலும் தன்னந்தனியாய் இன்பதுன்பமற்றவராய் இருக்கப்பட்ட அபூர்வவஸ்துவும்அவரே. ஆண்பெண் அலி என்னும் உருவுகொள்ளாதவரும் ஊர்பெயர் அற்றவரும் உறவு

ற்றவரும் அரூபமுள்ளவரும் அண்டகோடிகளனைத்தையும் சாட்டையில்லாப் பம்பரம்போல் ஆட்டுவிப்பவருமாகிய அற்புதாகாரர்அவரே. அவர் இராஜாதிராஜர் மாயாதிகாரர் பாராளுநாதர் நானாவினோதர் சர்வாதிகாரர் சர்வோத்தமநீதர் என்னும் இத்தகைய அளவிடக்கூடாத அனந்தங்கோடி வல்லபமுடையவர். அவர்ஒருவரே வணக்கத்துக்குரியவர். ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களும் அவருக்கேசொந்தம். அவருக்கொப்பாரும் மிக்காரும்ஒருவருமேயில்லை. அவ்வாறான மகாமகத்துவமும் உன்னதமும் மகிமையும் பொருந்திய கர்த்தாவானவர் நம்மீது வைத்துள்ள அன்பைக்கவனிப்போம்.

அவர் சகல ஜீவான்மாக்களிலும் மேலான அந்தஸ்தான மானிட வகுப்பில் நம்மைச்சிருஷ்டித்து, இன்றியமையாத பிரயோசனங்களைத்தரக்கூடிய கைகால்கள் முதலிய சகல அவயவங்களையும்கொடுத்து, பகுத்தறியும்படி புத்தியையுங்கொடுத்து, நாம் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவுமிருக்கும்படி பெண்டு பிள்ளைகளைக்கொடுத்து, நமக்குவேண்டிய ஆகாரவாகனாதிகளுக்காக, பலதானியவகைகள் புல்பூண்டு ஆடுமாடு குதிரை யானை ஒட்டகம் முதலிய சகலஜீவராசிகளையும் உற்பத்தியாக்கிக் கொடுத்திருக்கிறார். நாம்அவரை நினைக்காவிடினும் நம்மை அவர் ஒருக்ஷணப்போதேனும் மறக்கிறதில்லை. நாம் அவரைப்பார்க்காவிட்டாலும் அவர்நம்மை சதாபார்த்துக்கொண்டேயிருக்கிறார். அவருடைய கருத்தை நாமறியக்கூடாவிடினும் நம்முடையகருத்தை அவர் அறிந்துகொண்டிருக்கிறார். நாம் வேலைசெய்து அலுத்துத்தூங்கினாலும் அவர்நமக்காகச் செய்துவரும் எண்ணிறந்தவேலைகளினால்அலுப்படையாமல் விழித்திருந்துநம்மைப்பாதுகாத்துவருகின்றார். இரவும்பகலும் நமக்காக ஏராளமான வேலைகள் செய்துவருகிறார். அவர் எவருடைய ஒத்தாசைக்கும் எதிர்பார்ப்பவரல்லர். நாம் அனைவரும் அவருடைய உதவிக்கேஎதிர்பார்க்கின்றோம்.

அவருடைய வல்லபத்தைப் பிரஸ்தாபிப்பதற்கு எவரால் முடியும். ஏகாண்டமான பூமியைப்படைத்து,யாதொருதூலமுமில்லாமல் வானத்தை அதற்குமேற் குடையாக்கவித்து அகண்ட சமுத்திரங்களை அணையில்லாமலடக்கி, தானியம் புல்பூண்டு முதலியவைகளின் விளைவுக்காகவும் மனிதர் ஆடு மாடுமுதலிய ஜீவராசிகளின் உபயோகத்திற்காகவும் ஆறு குளம் ஏரி முதலியவைகளில் ஜலமுண்டாக்கி, காலக்கிரமப்படி மழை பனி வெய்யில் முதலியவை பெய்யவும் காயவும் செய்து, மனிதர்முதலிய சர்வஜீவான்மாக்களையும் சிருஷ்டி



த்து, அவர்களை இரட்சித்து அழித்துவிடுதலாகிய இத்தனைவினோத அற்புதச்செய்கைகளுக்கும் அவரேதக்கவர். ஆகையால் தோத்திரத்திற்கும் வணக்கத்திற்கும் பாத்தியப்பட்டவர் அவரைத்தவிர வேறொருவருமேயில்லை. நாம் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் செய்துவரும் ஒவ்வொருசெய்கையும் பேசிவரும் ஒவ்வொருவார்த்தையும் அவர்கவனத்திற்குத்தப்புவதேயில்லை. ஆகையினால் நம்முடைய செய்கைகளனைத்திற்கும் அவரே சாட்சியாக இருக்கின்றார். அவர்கண்ணின்றிப்பார்த்தும் காதின்றிக்கேட்டும் வாயின்றிப்பேசியும்வருகின்றார். அவருடைய அற்புதச்செயல்களுக்கு இணையாக வேறொன்றுமேயில்லை. இத்தகைய அற்புதக்குணங்களமைந்த பேரின்பக்கடலைச் சதா நமது மனதில்தியானித்து அவரைத்தொழுதுவரவேண்டியது நமது சகலமுக்கிய கடமைகளிலும் மிகமுக்கிய கடமையாம்.

## வைத்தியம்.

இக்காலத்திலே உலகத்துள்ள மானிடர்கட்குள் பற்பல வியாதிகள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருவதற்கேற்ப வைத்தியர்களும் அதிகரித்துக்கொண்டே வருகின்றார்கள். வைத்தியத்தொழில் உறுதியுடைய உத்தரவாதமான தொழிலாகையினாலே, அந்தத் தொழிலை அனுசரிப்பவர்கள் மிக்க விவேகிகளாகவும் தக்க சாத்திரங்களை ஆராய்ந்து தெளிந்த அறிவாளிகளாகவும் விசேஷ அனுபவமுடையவர்களாகவும் புத்திகோசரமுடையவர்களாகவும், கேட்ட வினாக்களுக்கு உடனே விடையளிக்கத்தக்க சாமர்த்தியமுடையவர்களாகவும், தேகத்தையும், அத்தேகக் கூறுபாடுகளையும், அதற்கு நேரும் நோயின் விகற்பங்களையும், அவற்றைத் தணிக்கத்தக்க சிகிச்சாபேதங்களையும் ஐயமறத்தெளிந்தவர்களாய்க் கடவுள் வழிபாடும் காருணியமுமுடையவர்களாயும், ஒழுக்கமமைந்தவர்களாயுமிருத்தல்வேண்டும். வைத்தியனுக்கு இவ்வளவு லட்சணங்கள் பொருந்தவேண்டுமென்பதை,

"தெய்வவுபாசனைபலனா லெல்லை காண்ட றிரிகரண சுத்திபன்னோய் தீர்த்த ஞானு, நைவகன்ற தீரமதி நுட்பஞ் சான்றோர் நட்பொழுக்க மேன்மைகுண மன்புள்ளானாய், மெய்வசுதை விகலையணங் குறைபாடார்ந்த விதியுடற்காதாரமட லங்கி மார்ந்தல், கைவருமெண் பேதமெலா முணர்ந்தாற் றானாய்க் காணிலந்த மருத்துவன்கைக் கரணி யுண்ணே."

என்னும் ஆன்றோர் வாக்கானுமறிக. ஆனால் இக்காலத்தில் இவ்வளவு லட்சணங்களமைந்த வைத்தியர்கள் மிகச் சிறுபான்மைய

ராயிருக்கின்றார்கள். இப்போதுள்ளவர்கள் பெரும்பாலும் எத்தன்மையர்களாயிருக்கின்றார்களென்றால், அச்சிட்டுக் கடைகளில் விற்கின்ற வைத்திய புஸ்தகங்களை வாங்கி, அவற்றுள்ள சில ஔஷதங்களைத் தயார்படுத்திக்கொண்டும், பாமரர்களாயுள்ளார் கூறும் சில மருந்து முறைகளை எழுதிவைத்துக்கொண்டும், தாங்கள் சாத்திரப்பழக்கமறியா விவேகசூனியர்களாயிருந்தும் அதிமேம்பாடுற்ற வைத்திய நிபுணர்களைப்போன்று வீறாவாரத்துடன்பேசி ஏழைகளை ஏமாற்றுகின்றவர்களாயிருக்கின்றார்கள். நல்ல வைத்தியர்களைத்தேடச் சக்தியற்ற நோயாளிகள் பலர் அவர்களிடத்திற் சிக்கிக்கொண்டு அவர்கள் வார்த்தைகளை நம்பித் திரவியத்தையும் தேகத்தையும் நஷ்டப்படுத்திக்கொள்ளுகின்றார்கள். இவ்வித தொந்தரையை நிவாரணிக்கும் நிமித்தம் இப்பத்திரிகையின் மூலமாய் வைத்தியத்தைப்பற்றிக் காலத்திற்குக்காலம் நீள எழுதிக்கொண்டுவருவோம. இதை யாவரும் அறிந்திருந்தால் தங்களுக்கும் உறவினருக்கும் நோய்நேர்ந்தகாலத்தில் தாங்களே பரிகாரம் தேடிக்கொள்வதற்கும், மேற்கூறிய விவேகசூனிய வைத்தியர்கட்குத் திரவியங்கொடுத்துத் தேகத்தைப் பாழாக்கிக்கொள்ளாம விருப்பதற்கும் ஏதுவாகும்.

"பிணியினால் வலியுங் கேடாம் பிணியினா லழுகும் போகுந்
துணிவெலாம் பிணியாற் குன்றுந் தொலைவில்லை தனையைச் செய்யுந்
தணிவிலா துள்ளே நின்று சாலவு மொடுக்கும் பொல்லாப்
பிணியதே யொக்குந் துன்பம் பேசிடிற் பிறிது முண்டோ."

என்று ஆன்றோருரைத்தவண்ணம் பிணிகளினாலுண்டாகுந் துன்பமும் கெடுதியும் யாவருமறிந்த விஷயமே. மானிடர்கட்கு மனம் மெய் என்னும் கரணங்களிரண்டும் சுகஸ்திதியிலிருப்பதே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்கணான்கையும் அடைதற்கு முக்கிய சாதனமாகும். ஆயின் இவ்விரண்டினுள்ளும் தேகாரோக்கியமே மனோரோக்கியத்திற்கும் காரணமாகும். ஆகையால் நமது சரீரத்தைச் சுகஸ்திதியில் வைத்துக்கொள்ளும்படியான அறிவைக் கற்றுக்கொள்ளவேண்டியது நமது முக்கிய கடமையாகும். அவ்வறிவைக் கற்றவர்கட்கே பண்டிதர் வைத்தியர் ஆயுள்வேதியர் மருத்துவர் என்னும் பெயர்கள் நூல்களிற் கூறப்பட்டுள்ளன. அத்தகைய பண்டிதர்கள் சரீரத்தைப் பற்றியும், அதன் பாகுபாடுகளைப் பற்றியும், அதைப்பீடிக்கும் பிணி வரலாறுகளைப் பற்றியும், அவற்றை நிவாரணிக்கும் ஔஷதங்களைப் பற்றியும், அதிற்சேரும் சரக்குகளின் குணங்களைப் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டியது ஆவசியகம்.



இவைகளனைத்தையும் தெளிவாய் விளங்குமாறு இப்பத்திரிகையின் மூலமாய்ச் சுருக்கமாகக் காலத்திற்குக்காலம் எழுதிவருவோம். முதலிற் சரீரத்தைப்பற்றிப் பேசுவோம்.

ஓரூரிலிருந்து மற்றோரூருக்குப்போகின்ற பாட்டைசாரியாகிய கல்விமானொருவன், வழியில் நேர்ந்த ஓர் கானகத்தில் அலங்காரமான மாளிகையொன்றைக்கண்டால், அம்மாளிகையினுள்ளேசென்று பார்க்கவேண்டுமென்னும் காதலால் அதனுட்புகுந்து, அதன் வேலைத்திறத்தையும் அதைக்கட்டினவனுடைய வல்லபத்தையும் நோக்கி ஆச்சரியப்பட்டு, அம்மாளிகை எதற்காக அமைக்கப்பட்டதோ? அதையமைத்தவன் யாரோ? என்று ஐயமறத் தெளியவேண்டுமென்னும் ஆவலுண்டாய், அதற்குரிய முயற்சிகளியற்றி அவைகளைக் குறைவறத்தெளிந்துணருவானல்லவா? அதுபோல நாம் மானிடனைப்பற்றி ஆராயச்சிந்திக்கும்போது, அவனைச் சிருஷ்டித்தது யார்? எதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டான்? அவனுடைய அங்கங்கள் எவ்விதமாய் இயற்றப்பட்டிருக்கின்றனவென்று நீள நினைத்துப்பார்க்கின், மானிடனைச் சிருஷ்டித்தது சிருஷ்டித்தலைவரான கடவுளென்றும், அவர் தம்மைச் சேவிக்கும்பொருட்டே அவனைச் சிருஷ்டித்ததன்றி ஏனையகாரியங்கட்கல்லவென்றும், அறிவுடைய யாவர்க்கும் வெள்ளிடைமலைபோல் விளங்காமலிரா. அவனுடைய அங்கம் எவ்விதமாயியற்றப்பட்டிருக்கின்றதென்பதைக் கவனிப்போம்.

மானிடர்களுடைய தூலசரீரம் எலும்பு தசை நாடி. நாளம் நரம்பு சருமம் இருதயம் நுரையீரல் கல்லீரல் மண்ணீரல் இரைப்பை அன்னாசயம் குடல் குண்டிக்காய் மூத்திரப்பை கோசம் பீஜம் கருப்பாசயம் முதலியவைகளால் வேயப்பட்டு, கை கால் கண் வாய் மூக்கு செவி என்னும் அனேக உறுப்புக்களுள்ளவைகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் தத்தமக்குரிய தொழில்களைச் சரிவரச் செய்வதனாலே சரீரமானது நிலைபெற்றுச் சவுக்கியமடையும். ஆகையால் ஒவ்வோருறுப்பின் தொழில் இவையிவையென்றும், அதனதன் பிரயோசனம் இன்னதின்னதென்றும் விசாரிப்போம். (இன்னும் வரும்.).

## கைத்தொழில்.

உலகத்திலுள்ள மானிடர்களுக்குக் கைத்தொழில் அத்தியாவசியமானவை. நாகரீகமுற்றவர்களாயினும் நாகரீக மற்றவர்களாயினும்

இருதிறத்தார்க்கும் கைத்தொழில்கள் இன்றியமையாதவையே. ஒருவன் எவ்வகைச்சம்பத்துடையவனாயினும் கல்விவானாயினும் அவனைப் பசி தாகம் குளிர் முதலியவை பீடிக்காமலிரா. இவற்றை நிவர்த்தித்துக்கொள்ள அவனுக்குக் கைத்தொழில்கள் அத்தியாவசியம். அன்னிய பிராணிகள் தம்மை வருத்துகையில் தமக்குப் பாதுகாப்பாயிருக்கும்படி கொம்பு முதலியகருவிகளையும், குளிர் வெய்யில் பனி மழை முதலியவற்றாற் சங்கடம் நேராதபடி சருமம் உரோமம் இறகு முதலியவைகளையும் மிருகபட்சித் தொகுதிகளுக்குக் கடவுள் அமைத்திருப்பதையொத்து, மானிடர்களுக்கு அவ்வித உறுப்புக்கள் ஏதொன்றையும் அக்கடவுள் அமைத்துவைக்கவில்லை. ஏனெனில் மனிதன் தனது பாதுகாப்புக்காக வேண்டிய சகல அம்சங்களையும் தனது விவேகத்தினாற் க்ரசரணாதி அவயவங்களைக்கொண்டு தானே நடத்திக்கொள்ள வேண்டுமென்பதே கடவுளின்கருத்தாகத் தெரியவருகின்றது. ஏனையபிராணிகளுக்குப் பகுத்தறிவுஎன்னும் அரும்பெருங்குணத்தைக் கடவுள் அமைக்காததனால், அப்பிராணிகள் தம் பாதுகாப்புக்குரியவை இவையிவை என்றுணரச்சக்தியற்றிருப்பதைநோக்கி, அவைகட்கு இயற்கையால் அத்தகையகருவிகளைக் கடவுள் அமைத்துவைத்திருப்பது எவ்வளவு வியக்கத்தக்க அற்புதவிஷயம். மனிதன் தன் பகுத்தறிவைக்கொண்டு கரசரணாதி அவயவங்களினாலே வேலைசெய்து ஜீவிக்கவேண்டியதே கடவுளின்கருத்தாகையால், மானிடர்களாகிய நாம் நம்மாற்கூடியவரையில் முயற்சித்துத் தொழில்களைக்கற்றுக்கொண்டு, அவற்றால் திரவியம் சேகரித்து நாம் சுகானுபவமடைவது மல்லாமல், நமதுறவினர் நேயர் மற்றும் ஏழைச்சனங்களுக்கும் உபகாரிகளாயிருக்கவேண்டியதே நம் முக்கியகடமையாகும்.

கைத்தொழிலை விர்த்திக்குக் கொண்டுவராமலிருப்பதே நமது இந்துதேசத்திற்குப் பெருங்குறைவாயிருக்கின்றது. ஆங்கிலேயர்கள் அவர்களுடைய கைத்தொழிலின் அபிவிர்த்தியினால்தான் சம்பத்தும் கீர்த்திப்பிரதாபமும் அடைந்து வருகிறார்கள். அவர்கள் நம் தேசத்தில் விளையும்படியான அநேக பொருள்களைத் தங்களுடைய சுதேசமாகிய சீர்மைக்குக்கொண்டுபோய், அவ்விடத்தில் அவைகளைப் பலவிதபாகங்களாய்ச்செய்து நமதுதேசத்திற்கனுப்பி விற்று, அதன் மூலமாக நமதுபணங்களையெல்லாம் கொள்ளைகொண்டுபோய், நமது தேசம் வறுமையடையும்படி செய்கின்றார்கள். நாம் கைத்தொழிலில் தினேதினே விர்த்தியடைந்து சகல பொருள்களையும் நாமே செய்து



நம் தேசத்திலேயே விற்றுவந்தால், நம்முடைய பணங்கள் இதரதேசத்திற்குப்போகாமல் நம் இந்துதேசத்திலேயே இருக்குமல்லவா? அப்போது நம்தேசம் பஞ்சத்தினாற் பீடிக்கப்படுவதற்கு முகாந்தரமேயில்லை. அவ்வாறானபோது நம் இந்துதேசவாசிகள் சௌக்கியமாய் வாழ்வார்களென்பதற்குத் தடையேது? ஆகையால் நாம் ஒவ்வொருவரும் கைத்தொழிற்பயிற்சியைக் கையாடிவரமுயலவேண்டும். இச்சிறுபத்திரிகை மூலமாய் அவ்வப்போது கைத்தொழிலென்னும் தலைப்பின்கீழ் நூதனமும் பிரயோசனமுமுள்ள அனேக வஸ்துக்களைச் செய்துகொள்ளும் முறைகளை எழுதிவருவோம். அவ்வாறெழுதிவருவனவற்றை ஒவ்வொருவரும் செவ்வனேகவனித்துக் கையாடி வருவார்களாயின், தாங்கள் சௌக்கியவான்களாவதன்றித் தேசோபகாரிகளாகவுமிருப்பார்களென்பதற் கெள்ளளவும் சந்தேகமில்லை. அடுத்த பத்திரிகைமுதல் கைத்தொழில் பாகங்களை எழுதுவோம்.

## பாக சாஸ்திரம்.

மானிடர்களாகிய நாம் எல்லோரும் இப்பூவுலகத்தில் உயிர்வாழ்ந்திருக்குமளவும், சுகசரீரிகளாயிருக்கவேண்டியதே இம்மையிற்கூறும் பாக்கியங்களெவற்றினும் மேலானபாக்கியம். நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொண்டு முத்திமார்க்கமடைவதற்குரிய வகைகளைத்தேடிக்கொள்வதற்கும் சரீரசவுக்கியமே அஸ்திவாரமாயிருக்கின்றது. அவ்வகைச் சவுக்கியத்தைத் தேடிக்கொள்வதற்குச் சரீரத்திற் பிணியணுகாமற் பாதுகாக்கவேண்டியதே முக்கியகடமை. பிணியணுகாமற் சரீரத்தைக்காப்பதற்கு நல்ல ஆகாரமே முக்கியகாரணம். ஆகாரம் கெட்டதாயிருந்தால் சரீரத்திற்குக் கெடுதியை யுண்டாக்கிவிடும். அவ்வாறு கெடுதியுண்டாக்காமலும் பசிதீபனத்தைக்குறைக்காமலும், வாய்க்கு இன்பமும் உருசியும் தரத்தக்கவிதமாகப் பாகம்செய்யவேண்டியதே அவசியம். நாம் எவ்வளவோ பிரயாசமும் தேககஷ்டமும் எடுத்துக்கொண்டு சம்பாதிப்பதெல்லாம் சாண்வயிற்றுக்காகவேயன்றி வேறல்ல. அந்த வயிற்றை நிரப்புவதை ஒழுங்கீனமின்றி மனதிற்குத்திருப்தியாகும்படி செய்துவந்தால் அதனால் எவ்வளவு பிரயோசனங்கள் உண்டாகின்றன. இக்காரணங்களைக்குறித்துப் பாகவிதிகள் நமக்குத்தெரிந்திருந்தாலன்றி அத்தகைய பிரயோசனங்களை யடையவேலாதாகலின் நாம் ஒவ்வொருவரும் பாகசாஸ்திரவிதிகளை நன்குணர்ந்திருக்கவேண்டியது அத்தியாவசியம்.

நம் இந்துதேசத்திற் பெரும்பான்மையாய்ப் பெண்பாலாரே சமையல்பாகங்களைச் செய்துவருகிறபடியால், முக்கியமாய்அவர்களே இவ்விதிகளையெல்லாம் செவ்வனேதெரிந்துகொண்டு, அவைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டியது முறைமை. குழந்தை பிறந்து யௌவனதசையடைந்து விவாகமாகிறவரையில், குழந்தைகட்குப் போஷிக்கின்ற உத்தியோகத்தைத் தாய் வகித்துவருகின்றாள். விவாகமானபிறகு பெண்சாதியானவள் தன்புருஷனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களனைத்தையும் புரியவேண்டியிருப்பதால், அப்புருஷனுடைய போஷணையுத்தியோகத்தையும் அவளே ஒப்புக்கொள்ளவேண்டும். அப்போது அவனுடையதாய் அவனுக்கு எவ்வித இன்பமான ஆகாரத்தை ஊட்டிவந்தாளோ அதைப்பார்க்கினும் மேலான சுவையை உண்டாக்கக்கூடிய பாகத்தைச் செய்யவேண்டுமென்று மனைவி சிந்திக்கவேண்டும்.

இவ்விஷயங்களனைத்தையும் கவனித்துச் சிறுபெண்களுக்குக் கல்வி கைத்தொழில் முதலியவை கற்பிப்பதுடன் பாகசாஸ்திரவிதிகளையும் அதிமுக்கியமாகச் செவ்வனே பயிற்றுவிக்கவேண்டியது பெற்றோர்களின் பிரதானகடமையாகும். இப்பத்திரிகை மூலமாய் அவ்வப்போது அனேக உருசிகரமான பாகவகைகளை எழுதிவருவோம். அவைகளுள் டில்லி சக்ரவர்த்தியாகிய அக்பர்பாட்சா பிரீதியாகச்செய்து சாப்பிட்டதும், தஞ்சாவூர் சிவாஜி ஸர்போஜி மகாராஜாக்கள் ஆவலோடுபுசித்ததுமாகிய அனேகபாகங்களும், இன்னும் அனேகபிரபுக்கள் உருசியுடனுண்ட அனந்தம்முறைகளும் எழுதிவருவோம். ஆனால் அவர்கள் சுல்பமான செலவில் விசேஷ உருசியைத்தரத்தக்க அனேகம் முறைகள் செய்திருக்கிறார்கள். முக்கியமாய் அவைகளையே இங்கெடுத்தெழுதுவோம். இதில் இந்துக்களுடைய அருமையான பாகங்களும் முஹம்மதியர்களுடைய அருமையான பாகங்களும் முறையே எழுதிவருவோமாகையால், அந்தந்தவகுப்பார்அவரவர்களுடைய பாகங்களில் தேர்ச்சியடைவதன்றியில், இதரவகுப்பார்களின் பாகவகைருசிகளையும் தாங்களே எளிதில் அறிந்துகொள்ளலாம். மாம்சபட்சணம் செய்யாதவர்கள் மாம்ச சம்பந்தமான முறைகளை நீக்கி ஏனையவற்றிற்பயிலலாம். இம்முறைகளைப் பிரதிசஞ்சிகையிலும் தொடர்ச்சியாய் எழுதிவருவோமாகையால், முந்திய சஞ்சிகையின் விஷயம் பிந்திய சஞ்சிகை விஷயத்திற்கு அவசியமாகவிருக்குமென்பதைக் கவனித்து, வாசிப்பவர்கள் முதற்சஞ்சிகையிலிருந்தே



வாங்கி வாசிக்கவேண்டும். பாகவகை கூறத்தொடங்குவதற்குமுந்தி முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய சில அம்சங்களை இதனடியில் எழுதுவோம்.

## எரிகரும்புகள்.

சமைப்பதற்கு ஈரமான விறகுகளை உபயோகித்தால் புகைந்துகொண்டிருப்பதனாலே பதார்த்தங்களின் உருசிகெட்டுப் புகைவாசனை உண்டாய்விடும். இவ்வாறு நேரவொட்டாமல் எப்போதும் காய்ந்த விறகாகவே உபயோகிக்கவேண்டும். இன்னும் சந்தனக்கட்டை தேவதாரு வேம்பு தேக்கு முதலிய கட்டைகளாலும் பதார்த்தங்களின் உருசிகெட்டுப்போகின்றமையின் அவைகளையும் நீக்கிவிடவேண்டும். இன்னும் சீர்மையிலிருந்து சாமான்கள் பாக்பண்ணிவருகின்ற ஜாதிக்காய்ப் பலகையையும், அத்தி ஆல் கள்ளி முருங்கை முதலிய கனமில்லாத இலேசான கட்டைகளையும் நீக்கவேண்டியதன்றியில், சிலர் கிரோஸன் ஆயில் என்னும் எண்ணெயை ஊற்றி அடுப்புப் பற்றவைக்கும் துர்வழக்கத்தையும் நீக்கிவிடவேண்டும். செவ்வனேயுலர்ந்ததும் பழமையானதும் கனதியுள்ளதும் தைலப்பசையுடையதுமான கருவேல் வெள்வேல் புளி காசான் சவுக்கு முதலிய கட்டைகளும் இவைகளைப்போன்றவைகளுமே உபயோகிக்க வேண்டும். மேற்கூறியவையாவும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியவையாகலின் இவ்விடத்திலெழுதவேண்டிய தவசியமாயிற்று. இனி அடுத்த பத்திரிகை முதல் பாகவகைகளை எழுதிக்கொண்டு வருவோம்.

## ஜாலவேடிக்கை.

ஜாலம் என்பது மாயம், அதாவது கைமாற்று புரட்டு உருட்டு கத்து சித்துமுதலியவை. ஆகையினால் ஜாலவித்தைஎன்பது மனிதர்களை ஏமாற்றும்வித்தை. அதைச்செய்பவன் இதராள் தன்செய்கையைத் தெரிந்துகொள்ளாதவிதமாய்ச் செய்யவேண்டும். அவன் ஜாலம்செய்கிறான்என்பது உலகவழக்கச்சொல், அதாவது பொய்யானவிஷயத்தை நிஜம்போற்காட்டுகிறானென்பதே. ஆகையினால் அவ்வித்தை செய்பவன் வாய்ச்சாலக்கு கைச்சாலக்குடையவனாகவும், யுக்திபுத்தியுடைய சாமர்த்தியனாகவும், தந்திரசாலியாகவு மிருக்கவேண்டும். அவ்வாறுள்ளவனாயிருந்து, இந்தவித்தையைக் கற்றுக்கொண்டு அடிக்கடி தனக்குள்ளே பழக்கஞ்செய்துவந்து, அதில் அனுபோகஸ்தனாய்விடவேண்டும். அவ்வண்ணமியற்றி வருவானாயி

ன், இவன்செய்யும் ஜாலவித்தையைக் கண்ணுற்ற யாவரும் இவன் மந்திரத்தினால்தான் இவ்வித்தைகளைச்செய்கிறானென்று ஆச்சரியமடைவார்கள், இதைச்சேர்ந்த அனேகரகசியங்களும் தந்திரங்களும் யுக்திகளும் காலத்திற்குக் காலம் இத்தலைப்பின்கீழ் எழுதிவருவோம் இதைத்தெரிந்துகொண்ட பிரபுக்களிடத்தில் இந்தவித்தையினால் ஜீவனம்செய்துவருவோர்கள் வந்தால் அவன் அப்படிசெய்தான் இப்படிசெய்தான் இது எனக்குத் தெரிந்ததுதானென்றிகழாமலும், அவனுடைய ரகசியங்களை ஜனங்களுக்குமுன் வெளிப்படுத்தாமலும், தமக்கு அந்தவேலைதெரியாததுபோலவே எல்லோருடனுங்கூடி, அவனுடையசாமர்த்தியத்திற்காக அவனைவியந்துபேசி, அவனுக்குச்சன்மானம் செய்தனுப்பவேண்டுமேதவிர, மற்றப்படி அவனை இகழ்ந்து அவமானம்செய்து ஒன்றும்கொடாமல் அனுப்பிவிடுவது பெருந்தன்மைபெற்ற பிரபுக்களின்குணமேயல்ல. ஈனர்கள் அற்பர்கள் உலோபிகள் என்னும் இவர்களுடைய குணமென்பதற்கெள்ளளவுமையமில்லை. ஏழைகளின்மீது எப்போதும் ஈவு இரக்கம் தயை தாட்சணியம் பச்சாத்தாபம் என்னும் இவைகளைக்காட்டுவதே பெருந்தன்மையுடையோர் குணமாகும். ஏனென்றால் இவைகள் யாவும் கடவுட்குச்சொந்தகுணங்கள். சில ஔஷதங்களின் செயற்கையால் அனேக அற்புதவிஷயங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. அவைகளையும் இதேதலைப்பின்கீழ் எழுதிவருவோம். இனி அடுத்த பத்திரிகைமுதல் ஜாலவேடிக்கைகளை முறைமையாக எழுதுவோம்.

## கல்வி.

உலகத்துள்ள அனந்தகோடி பிறவிகளிலே பகுத்தறிவு வாய்ந்துள்ள ஏற்றமொன்றினாலேயே மானிடப்பிறவி உயர்ந்ததென்றும், அத்தகைய அறிவு விளக்கத்தாற்றானே ஏனையஉயிர்களனைத்தும் மானிடர்க்குக்கீழ்ப்படிந்திருக்கவாய்க்குமென்றும், கடவுளாற்செய்யப்படும் செயல்கள் தவிர மற்றுள்ள எல்லாச்செயல்களும் மானிடராலேயே முடிக்கற்பாலனவென்றும், அளவிறந்த நூல்களிற் கூறியுள்ளதை நாமனைவரும் சந்தேகமற அனுபவபூர்வகமாய் உண்மையென்றுணர்ந்திருக்கின்றோமல்லவா? இவ்வளவு சிறப்புற்ற அப்பகுத்தறிவை மேன்மேலும் விர்த்திசெய்வதற்குத் தக்க கருவி கல்வியைத்தவிர வேறொன்றுமேயில்லை. இவ்வாறான கல்வி ஒன்றே பலப்பல பாஷைகளாக உச்சரிப்புப் பேதங்கொண்டு உலகத்துள்ள அனந்த தேசங்களில் அவ்வத்தேசங்கட்கேற்றவாறு பரவியிருக்கின்றது. கல்



வியானது எத்தனைகோடி பாஷைகளாகப் பாகுபாடு பெற்றிருந்த போதினும் முடிவிலே தீர்க்க யோசிக்குங்காலையில், லௌகிகக்கல்வி என்றும் வைதிகக்கல்வி என்றும் கூறப்பட்ட இரண்டு பிரிவினையுடைத்தாயிருக்கும். இவற்றுள் லௌகிகக்கல்வி என்பது விவகாரநிச்சயத்துடனே நீதி கெடாத நடுவுநிலைமை வாய்க்கப்பெற்று அறிவுவிர்த்தி திரவியவிர்த்தி சரீரசுகவிர்த்தி சுகபோகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலியவற்றைக் குறைவின்றியடைதற்கும், வைதிகக்கல்வி என்பது முற்கூறிய இகானந்தத்தைப்போலவே பரானந்தத்திற்கேதுவான ஜபதபாதியனுஷ்டானங்களைத் தடையின்றியடைதற்கும் ஏதுவாகும். இவ்விருபகுப்புள் லௌகிகக்கல்வியே வைதிகக்கல்விக்கும் வழிகாட்டியாகுமாதலின் அதனையே முதலிற்கூறத்தொடங்கினோம்.

கல்வி என்னும் பதத்திற்கு' அறிவு கற்றல் புண்ணியத்தோற்றம்நான்கிறொன்று வித்தை என்னும் நான்கு பொருள்கள் முக்கியமாயுள்ளன. அவ்வொவ்வொரு பொருளையும் முறையே ஆராயப்புகின், அறிவு விர்த்திக்கு வேண்டியது கல்வி என்றும், மானிடர்கள் கற்கவேண்டியது கல்வி என்றும்; தவம் ஒழுக்கம் கொடை என்னும் புண்ணியத் தோற்றங்கள் மூன்றுடனே நான்காவதாகத் தோற்றமுற்பட்ட மூன்றையும் விளக்கத்தக்கது கல்வி என்றும், எவ்வகை வித்தைகட்கும் முதன்மையாயுள்ளது கல்வி என்றும் ஐயமறத்தோன்றும். இந்நான்குபொருள்களினும் முதற்பொருளாயிருக்கும் அறிவின்விளக்கம் கல்வியொன்றினாலேயே வாய்க்குமென்னும் நிச்சயத்தாலன்றோ திருவள்ளுவரும், விளக்கமுள்ள நூல்களைக்கற்றுணர்ந்தவர்களோடு கல்லாதவர்களும் கலந்திருத்தல், மிருகங்களுடனே மானிடர்களிருப்பது போலாமென்னுங்கருத்தையடக்கி,

“விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.”

எனக்கூறியுள்ளார். அன்றியும் எவ்வகைத்தொழிலையேனும் கல்லாதார் கணக்கற்றார்களாகக் கூடிப்புரியினும் கற்றானொருவனியற்றுந்தொழிலுக்கிணையாகாது. கற்றானொருவன் எத்தேயத்திற்கேகினும் அத்தேயத்தில் வழங்கும் தொழில் எவ்வளவு அபூர்வமானதாயினும் அதனைச் சின்னாட்பழகித்தெளிந்து வெகுகாலமாகச் செய்துவந்த அத்தேயத்தார்கள் தொழிலினும் அதியுன்னதமாயியற்றத் தேர்ந்துகொள்வான். அதற்குத் தற்காலம் நம்மை அரசாண்டுவரும் ஆங்கிலேயரே சாட்சியாவார்கள். இவ்விஷயத்தைக்குறித்தே ஔ

வையாரும் காவலனையும் கற்றுணர்ந்தவனையும் ஒப்பிட்டுப்பார்க்கையில் காவலனிலும் கற்றுணர்ந்தவனே மேலாவான்; எவ்வாறெனில், காவலனுக்குத் தனது தேயத்தினன்றிச் சிறப்பில்லை, கற்றுணர்ந்தவனுக்கோ அவன்செல்லும் தேசங்களிலெல்லாம் சிறப்புண்டு என்னும் கருத்தையமைத்து,

"மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன்—மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு." என்னும் வெண்பாவையும்,

திருவள்ளுவர், எதுவாகிலும் தனதுநாடாகவும் தனது ஊராகவும் வாய்க்கத்தருவது கல்வியாயிருக்க, இதனை ஒருவன் தன்மரணபரியந்தம் கல்லாதிருப்பதற்கு யாதுகாரணம் என்னும் கருத்தையடக்கி,

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு." என்னும் குறளையும் கூறியுள்ளார்.

அன்றியும் தவம் ஒழுக்கம் கொடை என்னும் மூன்றனுள் ஒவ்வொன்றினும் சாமானியம் விசேடம் என்னும் பகுப்புள, இத்தகைய பகுப்பைக் கல்வியறிவினாலன்றித் தெளியவேலாது, அவ்வாறு தெளிந்தியற்றுவழிச் சிறப்படையாது, சிறப்பின்றியகாரியத்தைச் செய்வதினும் செய்யாதிருத்தலே நலமாகலின் கல்வியறிவின்றி மேற்கூறியவை வாய்க்கினும் பயனின்றென்பது திண்ணம். மேலும், கல்வியறிவுள்ளோன் தவமும் ஒழுக்கமும் கொடையும் பசுமரத்தாணியறைந்தாற்போன்று வேரூன்றி நிலைக்கும். ஏனையோர்களுடைய தவமும் ஒழுக்கமும் கொடையும் அவ்வாறின்றி, அவ்வப்போது மனம் திரும்பிய வழியே மாறுபடும். இதனாலன்றோ, அறிவுடையானுக்கு ஒன்றுமின்றாயினும் அவனே எல்லாமுடையானாகவும், அறிவற்றவனுக்கு எல்லாமிருக்கினும் ஒன்றுமற்றானாகவும் விளங்குவானென்னும் கருத்தையுள்ளடக்கி,

"அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்." எனத் திருவள்ளுவர் கூறினர்.

இன்னும் உலகத்தில்வழங்கும் எவ்வகைவித்தையேனும் புருடார்த்தமாகக் கூறப்படும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் இந்நாற்பயனையே விளைக்கத்தக்கதாகும். (இன்னும் வரும்.)

கடவுள் துணை.

# விநோத விசித்திரப் பத்திரிகை.

1900-ம் ௵

புஸ்தகம் 1.] பிப்ரவரி௴ 1உ வியாழக் கிழமை. [No. 2

## கடவுள் உண்டு.

கடவுட் டன்மையைப்பற்றிப் பேசுவதற்கு நாம் சக்தியற்றவர்களாயிருக்கின்றோமென்பதை முதற்பத்திரிகையிலேயே தெரிவித்திருக்கின்றோம். ஆகிலும் இயன்றவரையில் அவருடைய உண்மையைப்பற்றிக் கொஞ்சம் எழுதுவோம்.

ஒருமனிதன் ஓர்தேசத்திற்குப் போகையில் வழியிலே தங்கமோதிரமொன்றைக் கண்டெடுத்ததாக வைத்துக்கொள்வோம். அவன் அம்மோதிரத்தைக் குறித்து யாதோர் விர்த்தாந்தமும் சற்றேனுமறிந்திலனாயினும், அம்மோதிரம் ஓர் மனிதனாற் செய்யப்பட்டதென்று நிச்சயித்தற்கு மாத்திரம் சந்தேகமில்லை. ஒருவன் கப்பலேறிக் கடல்யாத்திரை செய்யும்போது, அகஸ்மாத்தாய்த் தோன்றிய அபாயகரமான புயற்காற்றினால் கப்பலுடைபட்டு, அம்மனிதன் அந்தகாரமாய்க் காடடர்ந்துள்ள ஓர் தீவிற் சேர்க்கப்பட்டான். அக்காட்டிலே திரிந்து பார்க்கையில் மனிதர் மிருகம் பறவை என்னும் பிராணிகளொன்றும் வசிக்காத நிஸ்சஞ்சாரக் காடாயிருந்தது. ஆனால் அப்பால் நெடுந்தூரத்திற் போனபோது அங்கோரிடத்தில் அலங்காரமான மாளிகையொன்று கட்டப்பட்டிருந்தது. அதற்குள்ளேசென்று பார்த்தபோது, அவ்விடத்திலும் ஓர் பிராணியேனும் காணப்படவில்லை. இந்த மாளிகையின் விர்த்தாந்தம் யாதொன்றும் அவனறியக்கூடாதபோதினும், அம்மாளிகை ஒருபிராணியினால் கட்டப்பட்டதென்பதைமட்டும் ஆட்சேபனையின்றி யுணருவானல்லவா? இதுபோன்றே நம் திருஷ்டிக்ககப்படக்கூடிய இப்பூலோகத்தையும்

இதை அலங்காரஞ்செய்திருக்கின்ற யானைமுதலெறும்பீறான எண்பத்து நான்கு லட்சம் பேதங்களுள்ள பிராணிகளையும் புல் பூண்டு முதலிய சகல வஸ்துக்களையும் கவனிக்கும்போது இவையனைத்தும் ஒரு வஸ்துவால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று நாம் உறுதிகொள்ளவேண்டுமல்லவா? அத்தகையவஸ்து எதுவோ அதனைத்தான் கடவுளென்று வேதங்கள் கூறுகின்றபடியால் நாமும் அதை உண்மை என்று உறுதிகொள்ளவேண்டியது நமது கடமை.

நாம் ஓர்சோலையை நோக்கிப்பார்த்தால் அதிலுள்ள மரங்களெல்லாம் அசைந்து ஆடிக்கொண்டிருக்கின்றன. அவைகளை அவ்வாறு யாராவது அசைக்கின்றார்களோவென்று பார்த்தால் ஒருவருமே இல்லை. பிறகு எப்படித்தான் அவைகள் அசைகின்றனவென்று ஆலோசித்துப் பார்க்கையில், நம்முடைய திருஷ்டிக்கு அகப்படாத ஒருவஸ்து அவைகளையசைக்கின்றதென்று விளங்குகின்றது. அவ்வாறசைக்கும் வஸ்துவையே காற்றென்று சொல்லப்படுகின்றது. நாம்உட்கார்ந்திருக்கும்போது நம்தேகத்தில் ஜில்லென்று ஒருணர்ச்சி தோன்றுகிறது. அது என்னவென்று ஆராய்ந்துபார்க்கையில், அதுவும் காற்றுவந்து நம்தேகத்தில் மோதுவதாலுண்டாகும் ஒருணர்ச்சியென்று தோன்றுகிறது. கையில் ஓர் பிரம்பையெடுத்து ஆகாயவெளியில் வீசினால் கொன்யி என்று ஓர் தொனியுண்டாகின்றது. அது என்னவென்று யோசித்தாலோ, அதுவும் பிரம்புசெல்கின்ற விசையினால் ஆகாயவெளியில் நிறைந்திருக்கின்ற காற்றைக் கிழித்துக்கொண்டுபோகும்போதுண்டாகும் தொனியென்று தெரியவருகிறது. ஒவ்வோர்காலத்தில் திடீரென்று ஒரேசமயத்தில் அனேக மரங்களையாட்டிக் கீழேவீழ்த்திவிடக் காண்கின்றோம், இது எதனால் நேரிட்டதென்று சிந்தித்துப்பார்க்கையில் சண்டமாருதமென்னும் பெருங்காற்றால்தானென்று தெளிவாகத் தோன்றுகிறது. இத்தகையகாற்றை நாம் கண்களாற் பார்க்கக்கூடாதபோதினும், மேற்கூறிய முகாந்தரங்களுக்கேற்ற அதன் இயக்கத்தினாலும் செய்கையினாலும் காற்றென்னும் பெயருடைய ஓர்வஸ்துஉண்டென்று நாம்நிச்சயிக்கின்றோம். அதற்குக் காற்று என்னும்பெயர் எங்ஙனமுண்டாயிற்றென்றால், எல்லாச் சாஸ்திரங்களிலும் அவ்வஸ்துவுக்குக் காற்றென்னும் பெயர் கூறப்பட்டிருப்பதனால்தான்.

இனிச் சில இதர வஸ்துக்களின் இயக்கத்தைக் கவனிப்போம். சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் என்னும் இவைகள் பிரதிதினமும் முறைமைமாறாமல் ஆகாயத்திற்சஞ்சரிக்கின்றன. மழை பனி பெய்கின்றன. வெய்யில் எரிக்கின்றது. பயிர் புல் பூண்டு விளைகின்றன. கடல் ஆரவாரத்துடன் கர்ச்சிக்கின்றது. ஆடுமாடுகளுலாவுகின்றன. பிராணிகளெவற்றுள்ளும் ஜனனமரண விவகாரங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இன்னும் இதுபோன்ற அனேகவித அற்புதச் செயல்களெல்லாம் நடந்து வருகின்றன. இவற்றின் விநோதங்களையும் முறைபிறழாமையையும் நியமனத்தையும் உற்றுணர்ந்தால், இக்கிரியைகள் யாவற்றிற்கும் ஓர் காரணகர்த்தா இருக்கவேண்டிய தவசியமென்றும், அவ்வாறில்லாதிருக்கின் நெருப்பின்றிப்புகையெழும்பாது என்பதுபோல் ஒரு அற்பமான விவகாரமும் நடப்பதற்கு ஏதுவில்லை என்றும் யாவருக்கும் தெள்ளிதின் வெள்ளிடைமலைபோல் விளங்காமலிரா. ஆகையால் இவையனைத்தும் நம்கண்ணுக்குப்புலப்படாத அற்புதாகாரரான கடவுளின்செயலென்றே திடப்படுவதற் கையமேயில்லை. ரயில் தந்தி கப்பல் புகைக்கூடு முதலிய இன்னும் இதைப்போன்ற வேலைகளைப் பார்க்கும்போதே இவைகளைச் செய்தவன் மிகவும் சாமர்த்தியவானென்று நாம் பிரமிக்கின்றோம். மேற்கூறிய அகடிதகடனா சாமர்த்தியச் செயல்களுக்கு முன்னே இச்செயல்கள் எம்மாத்திரம்! இவ்வற்பச் செயல்களுக்கே யாச்சரியப்பட்டு, அச்செய்கைகளுக்குரியவனை மிகச் சமர்த்தனென்று மெச்சுகின்ற நாம், இத்தகைய கோடானுகோடி செயல்களுக்குங் காரணமாயுள்ள முதலிற்கூறிய செயல்களையுடைய கர்த்தாவைக்குறித்து எவ்வளவு வியப்பும் மதிப்புமுடையவர்களாயிருக்கவேண்டும்! சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினையுடைய மனிதன் என்னும் ஜீவன், அகடிதகடனா சாமர்த்தியராகிய அக்கடவுளின் செயல்களில் ஓர் அற்பச்செய்கையையாவது செய்யச் சக்தியுடையவனாயிருக்கின்றானா? சமுத்திரத்தைச் சத்திக்காமல் தடுக்கவல்லானோ? சூரியனை ஓடாவண்ணம் ஒரு நிமிஷமேனும் நிறுத்தவல்லானோ? ஒரு சிறியசிற்றெறும்புக்குச் சீவனைச் சிருஷ்டிக்க வல்லானோ! இத்தகைய செயல்கள் ஒன்றேனும் முடியவே முடியாது. ஆகையால் இவ்வாறான உலக வியாபாரங்களை நடத்தத்தக்க பராக்கிரமமும் வல்லபமுமுடைய ஓரேகடவுளிருக்கின்றாரென்பதையும், அவர் ஒருவரைத்தவிர வேறேகடவுள் கிடையவே கிடையாதென்பதையும், அக்கடவுள் இல்லாவிட்டால் அற்பக் கிரியையும் நடக்கவே நடக்காதென்பதையும், மேலேகூறியுள்ள பற்பல நியாயங்களால் தெளிவாகவுணர்ந் துறுதிகொள்ளவேண்டும். நாஸ்திகமதமொன்று நீங்க மற்றெல்லா மதங்களினுமுள்ள வேத சாஸ்திரபுராணங்கள் யாவும் கடவுளுடைய சாஸ்வத உண்மையைப் பற்றிக் கரதலாமலகம்போற் காட்டியிருக்கின்றன. (இன்னும்வரும்.)



1-ம் படம்.



2-ம் படம்.

மானிடதேகத்திலுள்ள எலும்புகள் இன்னின்ன இடத்தில் இவ்வாறிவ்வாறு இயற்றப்பட்டிருக்கின்றனவென்பதை மேலேகாட்டியிருக்கும் படங்களால் தெரிந்து கொள்ளலாம்.



## வைத்தியம்.

### எலும்புகள்,

முதல் சஞ்சிகையின் (7-வது பக்கத்தொடர்ச்சி)

தூண் உத்திரம் திரயம் முதலிய மரச்சாமான்கள் வீட்டிற்குப் பலமாகவும் கெட்டியாகவும் நிற்பதுபோல, எலும்புகள் மானிடசரீரத்திற்குப் பலத்தையும் கெட்டியையும் கொடுக்கின்றன. அவைகள் கெட்டியாயிருப்பதோடுங்கூட நம்தேக இயக்கத்திற்கேற்றவண்ணம் வளையக்கூடியவைகளாகவு மிருக்கின்றன. தேகத்தின் அவயவங்கள் ஒவ்வொன்றும், தத்தம் தொழில்களாகிய நடத்தல் இருத்தல் கிடத்தல் வேலைசெய்தல் நிமிர்தல் குனிதல் என்னும் அனேகவகை இயக்கங்களுக்கு வசதியுண்டாகும்படி நீளம் குறுக்கம் தட்டை பெரிது சிறிது என்னும் பாகுபாடுகளுள்ள இருநூற்று நாற்பத்தாறு எலும்புகள் சிருஷ்டிகர்த்தரால் நம்முடைய தேகத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் அந்தந்த அவயவங்கள் உறுப்புக்களாகிய இவைகளுக்கியன்ற தசை நரம்பு சவ்வு முதலியவைகளாற் பொதியப்பட்டிருக்கின்றன. அவைகளில் பலத்தையுடைய புயம் தொடை கால் முதலிய இடங்களில் நீண்ட எலும்புகளும், நானாவித அசைவுடைய கை பாதம் முதலிய இடங்களில் குறுகிய எலும்புகளும், சிரசு முதலிய இடங்களில் மிருதுவான உறுப்புக்களை மூடிக்காக்க வேண்டியதற்காகத் தட்டையான எலும்புகளும், சொற்ப அசைவும் தாங்குதலுமுள்ள இடங்களில் கலப்பான எலும்புகளுமாயிருக்கின்றன.

அவ்வெலும்புகள் 246 க்கும் விவரம்.

| | | | |
|---|---|---|---|
| சிரசில் | 8 | விலாவில் | 24 |
| பற்கள் | 32 | கைகளில் | 64 |
| காதில் | 6 | கால்களில் | 62 |
| முகத்தில் | 14 | கை கால் பெருவிரல் | |
| முள்ளந்தண்டில் | 26 | களின் குளசுக | |
| நாவில் | 1 | ளிலுள்ள சிறு | |
| மார்பில் | 1 | எலும்புகள் | 8 |
| ஆக மொத்தம் | | 246. | |

இவற்றுள் குழந்தைப்பருவத்தில் வெவ்வேறாயிருக்கின்ற சில எலும்புகள் யௌவனத்தில் ஒன்றாகக் கூடிவிடும்.

எலும்பில் இரண்டுவித பதார்த்தங்களுண்டு. அவைகள் பாஸ்பேட் ஆவ்லைம் (Phosphate of Lime) என்னும் சுண்ணாம்பும் ஜிலட்டீன் (Gelatine) என்னும் பசையுமாம். சுண்ணாம்பால் எலும்பு

க்கு உறுதியும் பலமும் கூடி பசை வச்சிரம்போன்றதா யிருப்பதால் அதனாலே நயப்பும் உண்டாகின்றன. எலும்பிலிருக்கின்ற சுண்ணாம்பைமட்டும் நீக்கிவிட்டால் பசை தனியே நிற்கும். அப்போது அதை நம்மெண்ணப்படி வளைக்கலாம். அவ்வாறே எலும்பிலுள்ள பசையை நீக்கிவிட்டாற் சுண்ணாம்புமாத்திரம் நிற்கும். அப்போது அவை அதிசீக்கிரத்தில் தூளாகும். இதைப் பரீட்சிக்கவேண்டுமாயின், எலும்பைத் திராவகத்திற்போட்டுச் சிலநாள் ஊறவைத்தால் அதிலுள்ள சுண்ணாம்புநீங்கிப் பசைமாத்திரம் தங்கும். இவ்வண்ணமே எலும்பை அக்கினியிற்போட்டால் அதிலுள்ள பசைநீங்கிச் சுண்ணாம்புமாத்திரம் நிற்கும். ஆகையால் எலும்பு வளையாமலும் சீக்கிரத்தில் முறிந்துபோகாமலும் கெட்டியாயிருக்கும்படியாக நமது சிருஷ்டிகர்த்தர் இவ்விரண்டு பதார்த்தங்களையும் எலும்புடன்கூட்டிச் சிருஷ்டித்திருக்கிறார்.

குழந்தைப்பருவத்தில் எலும்புகள் இளசாயிருப்பதனால் மிருதுவாகவும் வளையத்தக்கதாகவுமிருக்கும். பிறகு வயது செல்லச்செல்ல அவற்றில் சுண்ணாம்பு படிப்படியாய் அதிகரித்து அத்தன்மைமாறி வைரமேறிமுற்றிக் கடினமான எலும்புகளாய்விடுகின்றன. இளம்பிராயத்திற் பலமான அடி அல்லது காயம்பட்டால் எலும்புகள் வளையுமேயொழியச் சீக்கிரத்தில் முறிந்துபோகாது, முறிந்தாலும் சீக்கிரம் கூடிவிடும். முதிர்ந்தவயதில் பலமான அடிபட்டால் முறிந்துபோகும் சீக்கிரம்கூடாது.

மனிதன் குதிரை ஆடு மாடு முதலாகிய பிராணிகளுக்கு எலும்புகளைச் சதைக்குள்ளும், நண்டு நத்தை இறால் முதலிய ஜந்துக்களுக்கு அவைகளின் உள்ளுறுப்புக்குக் கெடுதிவாராமற் பாதுகாப்பதற்காக ஓடாகி உறுப்புகட்கு வெளியிலும், ஆமையைப்போன்ற ஜந்துக்களுக்கு உள்ளிலும் வெளியிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தேகத்தின் உறுப்புக்கள் பூர்ணவிர்த்தியடைகிறவரையில், அதாவது 20-முதல் 25-வயதுவரையில் எலும்புகள்முற்றுகிறதில்லை. அதற்குப்பிறகுதான் முற்றி வைரமுண்டாகிறது. இந்த இருபத்தைந்து வயதிற்குள்ளேதான் ஒழுங்கீனமான நடத்தல் இருத்தல் படுத்தல் முதலியவைகளால் முதுகுகூன்விழுவதும், நெஞ்சுகுறுகிப்போவதும் இடுப்பு கால் முதலியவைகள் கோணலாய்விடுவதும் நேரிடும், ஆகையால் இந்தவயதிற் பெற்றோர்கள் குழந்தைகளை அதிக ஜாக்கிரதையுடனே கவனித்துப் பாதுகாத்து வரவேண்டியது.

சரீரத்தில் எலும்புகள் ஓர்வித அஸ்திவாரமாயிருப்பதன்றி மூளை இருதயம் புப்புஸம் முதலிய மிருதுவான உறுப்புக்களுக்கு அபாயம் நேரிடாமல் ரட்சித்துத் தசைகட் ஒட்டிக்கொள்ள இடமும் தருகின்றன. (இன்னும்வரும்.)



1. சுக்கின்குணம்.

இது அனேக ஔஷதங்களுடன் சேரக்கூடிய சரக்கு. அழுத்தமாயும் பளுவாயுமிருப்பதே நல்லசரக்குக் கடையாளம். ஔஷதமாக உபயோகப்படுத்தும்போது மேற்றோலைச் சீவிவிடவேண்டும். ஔஷதச்சரக்குகளுக்குள்ளே மேற்றோல் சீவிச்சேர்க்கும் சரக்குகளென்றும், உட்கொட்டையை நீக்கிச்சேர்க்கும சரக்குகளென்றும், பட்டையைநீக்கி நரம்பைச்சேர்க்கும் சரக்குகளென்றும், நரம்பை நீக்கிப் பட்டையைச்சேர்க்கும் சரக்குகளென்றும் இன்னும் பலபல பாகுபாடுகளுண்டு. அவற்றுள் இது மேற்றோல் சீவிச்சேர்க்கத்தக்க சரக்கு. இதற்கு மேற்றோல் விஷமாகும். ஆதலால் ஆயுள்வேதியர் இதற்கு அமிர்தமூடியவிஷம் எனப்பெயர்கூறுவர். இதனை, "சீரமிர்தமூடு விடமஃதையவ்விடமறச்சீவுதறிமுட்டியெண்பான்." என்னும் தேரையருளிய தைலவருக்கச் சுருக்கத்திலுள்ள நாகராதித்தைல விருத்தத்தானுந்தெளிக. (நாகரம்=சுக்கு) அன்றியும் ஆயுள்வேதத்திற் கூறிய கற்கவகைகளுக்குள்ளே முதன்மையானதாய் எடுத்துக்கூறப்பட்டவை திரிகடுகாகும். சுக்கு மிளகு திப்பிலி என்னும் அம்மூன்றனுள் தலைமைபெற்றதும் சுக்கேயாம். இச்சுக்கின்குணத்தை விவரித்துக்கூற ஆயுள்வேத நிபுணரான தேரையருக்குமேலாமையால், சிலகுணங்களைவிரித்து மற்றையகுணங்கட்கெல்லாம் பொதுவாக, "ஈதுக்குதவுமிதீதுக்குதவாதெனும்விதியிலைநவசுறுகுணமுனவே" எனக்கூறி முடித்தார். (நவசு=சுக்கு) எனவே அநுபானபேதத்தாற் சகல ரோகத்திற்கும் உபயோகிக்கலாமென்பது கருத்து. அத்தகைய சுக்கின்குணம் அடங்கலு முரைக்க எம்மனோர்க்கியலாதாயினும் முக்கியமாய்ச் சிலவற்றை இங்கெடுத்துக் கூறுகின்றோம்.

இதை மிதமாய்ச்சாப்பிட்டால் தீபனத்தை அதிகப்படுத்தும். இதனிடத்து மூத்திரதாரையை உஷ்ணப்படுத்தும் குணமிருப்பதால் நீரடைப்புள்ளவர்களுக்குகொடுக்கக்கூடாது. நாக்கசைவற்றிருக்கும் ரோகத்திற்கும் உண்ணாக்கு வளர்ச்சிக்கும் சுக்கைவாயிற்போட்டு மெல்லலாம். சுக்குத்தூளை வெந்நீர்விட்டுக்கிளறித் துணியின்மேல் தடவிநோயுள்ள இடத்திற்போட்டால் வலிநள்நிற்கும். சருமம் சிவந்து போகும். இதனைப் பேதி மருந்துகளுடன் சேர்ப்பதால், வாந்தி குமட்டல் முதலியவை நிவாரணமாம். சுக்குத்தூளைக்களியாகக்கிண்டித்தலைவலிக்கு நெற்றியிலும், தொண்டைவேதனைக்குக் கழுத்தின் மேலும், சமீபப்பார்வைக்குப் புருவங்களின்மேலும் பற்றுப்போடலாம். பல்வலி முதலியவாய்க்குட்பட்ட நோய்கட்கெல்லாம் சுக்கு உப்பு புளி என்னும் இம்மூன்றையும் சேர்த்தரைத்த மொத்தையை

வாயில்வைத்துக்கொண்டு, அதிலுண்டாகும் ஜலத்தை உமிழ்ந்துவிடவேண்டும். இவ்வாறு செய்தால் மேற்கூறிய வாய்க்குட்பட்ட நோய்களனைத்தும் தணியும். காட்பட்ட வாதங்களுக்கும் தேகத்திற்காணும் வலி கடுப்பு முதலியவைகட்கும், சுக்குக்கியாழம்செய்து இரவில் படுக்குமுன் உட்கொள்ளக்கொடுத்து, சால்வை அல்லது கம்பளத்தால் தேகத்தைப் போர்த்துக் கதவு ஜன்னல் முதலியவற்றைக் கால்மணிநேரம் மூடிவைத்தால் தேகத்தில் வியர்வையுண்டாகும், அப்போது மெல்லியவஸ்திரத்தால் அவ்வியர்வையைத் துடைத்துக்கொண்டேயிருக்கவேண்டும். இவ்வாறு செய்துவரின் ஷை||நோய்கள் நிவர்த்தியாகி ஆரோக்கியமுண்டாவதுடன் இரவில் நல்ல நித்திரையுமுண்டாகும். வாந்திபேதி கண்டவர்களுக்குக்காணும் தாகத்திற்கு, ஒரு அவுன்ஸ் தோல்நீக்கிய சுக்கைச் சதைத்து ஒருபுட்டி கொதிக்கிற ஜலத்திற்போட்டுக் கால்மணிநேரம் மூடிவைத்துப் பின் வடிகட்டிக்கொண்டு, வேண்டும்போதெல்லாம் தேவையானவரையில் தாராளமாய்க் குடிக்கக் கொடுக்கலாம். மேல்தோல் நீக்கிய சுக்கைச் சதைத்துச் சுத்தமானமெல்லிய வெள்ளைத்துணியில் தளர்ச்சியாய்ப் பொட்டளங்கட்டிக் கஞ்சிகளிற் போட்டுக் காய்ச்சிக்கொடுக்கச் சுரமுள்ளவர்களுக்குப் பசிதீபனமுண்டாகும். இன்னும் சுக்குக்கு வாய்வு, குன்மம், வாந்தி, குடல்வலி, வயிற்றுப்பசம், ஆமைக்கட்டி, ஏப்பம், பசிமந்தம் முதலியவைகளும் குணமாகும்.

## பாகசாஸ்திரம்.

### பாகம்செய்வதற் குபயோகிக்கத்தக்க பாத்திரம்.

களிம்பு அழுக்குமுதலியவைகளில்லாத சுத்தமான பாத்திரங்களையே பாகம்செய்வதற்கு உபயோகிக்கவேண்டும். மட்பாத்திரங்கள் கற்சட்டிகள் சுத்தவெண்கலத்தாற் செய்தபாத்திரங்கள் ஈயம்பூசிய செப்புப் பாத்திரங்கள் என்னும் இவைகள் பாகம்செய்வதற்கும் மரஅகப்பை மூங்கிலுடன் கொட்டாங்கச்சி இணைத்த அகப்பை இருப்புக்கரண்டி ஈயம்பூசினசெப்புக்கரண்டி என்னும் இவைகள் பதார்த்தங்களைக் கிளறிக் கொண்டிருப்பதற்கும் உத்தமமானவை. களிம்புள்ளதும் ஈயம் பூசாததுமான பாத்திரங்களிலும் கரண்டிகளிலும் செய்த பதார்த்தங்கள் விஷமித்துக் கெடுதிசெய்யுமாகையால் அவைகளை அறவே நீக்கவேண்டும்.

### அரிசிச்சுத்தி.

எப்போதும் நல்ல அரிசியாகப்பார்த்து வாங்கவேண்டும். அரிசி எவ்வளவு நல்லதாயிருக்கின்றதோ, அவ்வளவாகச் சாதமும் நன்றாயி



ருக்கும். அவ்வாறுபார்த்துவாங்கிவரும் அரிசியை மறுபடியும் செவ்வனே தீட்டித் தவிடு உமி நெல் கல் முதலியவைகளைப் போக்கிச் சித்தப்படுத்துவதுதான் அரிசிச்சுத்தியாம்.

### பருப்புவகையராச் சுத்தி.

பாகவகைகளுக்காக உபயோகிக்கப்படும் பருப்புதினுசுகளிற் கல் முதலிய இதர வஸ்துக்களில்லாமல் ஆராய்ந்து வறுத்து உமிநீக்கிச் சித்தப்படுத்துவதுதான் பருப்புவகையராச் சுத்தியாம்.

### ஜலசுத்தி.

ஜலமானது வெயில் காற்று முதலியவை பட்டதாயும் துர்வாசனை நிறபேதம் ருசிபேதம் தடிப்பு முதலியவையிராமல் சுத்தமானதாயும் தெளிவானதாயு மிருக்கவேண்டும். அவ்வாறுள்ள ஜலத்தைச் சுத்தமான பாத்திரத்திலெடுத்துக் கெட்டியாயுள்ள துணி முதலியவைகளால் வடிகட்டுவதுதான் ஜலசுத்தியாம். அத்தகைய ஜலத்தையே சமைப்பதற்கும் குடிப்பதற்கும் உபயோகிக்கவேண்டும். மேற்கூறியவாறு குணங்களமையாததும் சுத்திசெய்யாததுமான ஜலத்தினாற் செய்யும் சமையல் சாதம் என்னும் இவைகள் நமக்கு நாளாவர்த்தியில் வியாதிகளை விளைவிப்பதற்கு அஸ்திவாரமாயிருக்கின்றன.

### குறிப்பு.

பாகங்கள் ஒழுங்காகவும் சுகத்திற்கேதுவாகவும் செய்வதற்கான முக்கிய விதிகளை இங்ஙனம் எடுத்துக் கூறினோம். மற்ற சுலபமும் சாதாரணமுமான அநுகரண ஒழுங்குகளை அவரவர்கள் தங்கள் தங்கள் அநுபோகத்தினால் நாளாவர்த்தியில் திடப்படுத்திக்கொள்ளவேண்டும். ஆனால் பாகவிதிகளை எழுதிக்கொண்டு வரும் வரிசையில் முக்கியமான குறிப்புகள் ஏதேனும் வந்தால் அவற்றை ஆங்காங்கு விவரித்தெழுதுவோம்.

### 2. சிறு அரிசிச்சாதம்.

சாதாரண புழுங்கலரிசிச் சமையல் யாவருக்கும் தெரிந்திருப்பதால் பச்சரிசியின் பாகத்தை இங்கெடுத்துக் கூறுகின்றோம். சிறு அரிசிச் சாதத்தின் பாகம் கஞ்சி வடித்துச் செய்வதும் கஞ்சிவடியாமற்செய்வதும் என இரண்டு வகைப்படுமாகலின், அவ்விரண்டனுள் முந்திய கஞ்சிவடித்துச் செய்யும் பாகமாவது:—

ஒரு படி * சுத்திசெய்த சிறு அரிசியை இருபத்துநான்குநிமிஷம் வரையில் ஊறவைத்துப்பிறகு செவ்வனேகழுவிக் கல்பார்த்து; ஜலத்

* அரிசிச்சுத்தியாவது 24 வது பக்கத்திற் சொல்லியபடி அரிசியைச் சுத்திசெய்துகொள்வதேயாம்.

ளைத வடியவைக்கவேண்டும். அதன் பின் ஐந்துபடி கொள்ளும் ஓர் தவலையில் மூன்றுபடி ஜலம்விட்டு, அதில் ஒருபிடி ‡ உப்பைக் கரைத்துப்போட்டு வேறொரு பாத்திரத்தால் தவலையை மூடி அடுப்பில் வைத்தெரித்து, சற்றுநேரங்கழித்து ஜலம் காய்ந்து சதங்கைக் கொதி கண்டவுடனே, முன்பு ஜலம் வடியவைத்திருக்கும் அரிசியை அதிற் கொட்டிக் கரண்டிக்காம்பினாற்கிளறி மறுபடியும் முன்போலவே தவலையை மூடிவைக்கவேண்டும். சற்றுநேரத்திற்குப்பிறகு ஜலமும் அரிசியும் கொதித்துக்கொண்டிருக்கையில் மூடியைத்திறந்து முன்போலவே கிளறிக் கொஞ்சநேரம் சென்றபோது அரிசி * முக்காற் பாகம் வெந்த பதம்பார்த்து மற்றொருதரம் கரண்டிக் காம்பினாற் கிளறி, பிறகு கஞ்சிவடிக்கும் பாத்திரத்தைக்கொண்டு கஞ்சியைச் செவ்வனே வடித்து, மீண்டும் கரண்டிக்காம்பினாற்கிளறி ஐந்துநிமிஷம் வரையில் புகையில்லாத தணலின்மேல் தவலையை வைத்திருந்து, சற்றுப்பொறுத்து இறக்கிவைத்துக்கொள்ளவும். சாதம் வெகு நேர்த்தியாயிருக்கும்.

## 3. கஞ்சிவடிக்காத சிறு அரிசிச்சாதம்.

இதுவும் முந்திய பாகத்தைப்போலவே செய்யவேண்டும். ஆனால் நான்குபடி கொள்ளும் தவலையில் இரண்டுபடி ஜலம்விட்டு ஒருபடி அரிசியைப் போட்டுக் கொதிக்கவைக்கவேண்டும். இதொன்றுதான் முந்தியதற்கு வித்தியாசம்.

## 4. பெரும் அரிசிச்சாதம்.

இப்பாகமும் கஞ்சிவடிப்பதும் கஞ்சிவடியாததுமென இரண்டு வகைப்படும். அவற்றுள் கஞ்சிவடிக்கும் பாகத்தை முன்னர்க்கூறுவோம் ஒருபடி அரிசியைப் பத்துநிமிஷம் வரையில் ஊறவைத்துச் செவ்வனே கழுவிக் கல்நீக்கி ஜலத்தை வடியவைத்துக்கொள்ளவேண்டும். மற்ற செய்கைகளெல்லாம் 2-ம் நெ. பாகத்திற் கூறியதுபோலவேதான்.

## 5. கஞ்சிவடிக்காத பெரும் அரிசிச்சாதம்.

ஒருபடி அரிசியைப் பத்துநிமிஷம் வரையில் ஊறவைத்துக்கழுவி ஜலத்தை வடித்து, நான்குபடி கொள்ளும் தவலையில் இரண்டுபடி ஜலம் விட்டுக் கொதிக்கவைக்கவேண்டும். மற்ற செய்கைகளெல்லாம் 2-ம் நெ. பாகத்திற் கூறியதுபோலவேதான்.

‡ கைப்பிடியால் ஒருபிடி உப்பை எடுத்து அளந்து வைத்திருக்கும் ஜலத்தில் கரைத்து அடிமண்டியை நீக்கிமேல்தெளிவை இருத்துப் போடவேண்டும். ஒருபடி அரிசிக்கு ஒருபிடி உப்பு வீதம் போடவும். உப்புப் போடாமல் சமைக்கிறசாதம் அவ்வளவு உருசியிராது.

* முக்காற்பதம் வெந்தபாகமாவது:—பருக்கைகள் கைக்குக் கொஞ்சம் மிருதுவாயிருந்து தவலையின் வாயினின்றும் வெள்ளை ஆவி வருகிற தருணம்.



## 6. புதிய அரிசி.

புதிய நெல்லை அரிசியாக்கினவுடனே சமைத்தாற் சரீரத்திற்கு அசௌக்கியத்தைக் கொடுக்கும். அந்த அரிசியை அதன் தவிட்டிற் கலந்து ஓர் சாலிற்கொட்டி, எட்டுநாள் வரையில் வைத்திருந்த பிறகு தீட்டிப் புடைத்துத் தவிடு குறுநொய் முதலியவைகளைப் போக்கிச்சமைக்கவேண்டும். இதைவெகுநேரம் ஊறவைக்கலாகாது. செவ்வனே கழுவிமாத்திரம் வடித்துக்கொள்ளவேண்டியது. அரிசி ஈரமாயிருந்தால் ஜலத்தின் அளவைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாம். மற்ற செய்கைகளெல்லாம் 2-ம் நெ. பாகத்திற் கூறியது போல்தான். புதிய அரிசிச்சாதம் பெரும்பாலாருக்கு ஏற்றுக்கொள்ளாதாகையால் பழைய அரிசியே உத்தமம்.

# கைத்தொழில்.

## 7. வெள்ளைக்கற்கண்டு செய்யுமுறை.

பத்துப்படி ஜலம்கொள்ளும் வாய்அகன்ற ஒரு செப்புப்பாத்திரத்தைச் செவ்வனே கழுவிச் சுத்தப்படுத்தி, அதிக வெண்மையான * ஆஸ்டிரகாம்சர்க்கரை ஒருமணங்கு அதிற்போட்டு, தேவையான ஜலம்(அதாவது சர்க்கரைக்குமேல் இரண்டு அங்குலம் நிற்கத்தக்கது) விட்டு அடுப்பிலேற்றி ஷர்பத்துக்காய்ச்சுகிறவிதமாகக் காய்ச்சவேண்டும், சர்க்கரையெல்லாம் கரைந்து ஜலரூபமானவுடனே அதை இறக்கி வேறொரு பாத்திரத்தில் ஒரு துணி வேடுகட்டி, அதில் இதனை வடிகட்டி, மறுபடியும் அந்தப் பாத்திரத்தைக் கழுவி அடுப்பில் வைத்து வடிகட்டிய சர்க்கரைப்பாகை அதில் ஊற்றி எரிக்கவேண்டும். அது செவ்வனே கொதிக்கும்போது கால்படி பசுவின் பாலைக் கொஞ்சங் கொஞ்சமாய் அதில் தெளித்து அகப்பையால் கிளறிக்கொடுத்தால், அதிலுள்ள அழுக்கையெல்லாம் நுரைரூபமாக மேலே மிதக்கவைக்கும். அத்தருணத்தில் நீண்டகாம்புள்ளதாயும் சிறிய துவாரங்களுள்ளதாயுமிருக்கும் அகப்பையைக்கொண்டு அந்த நுரையை மெதுவாய் வழித்துக்கொண்டே யிருக்கவேண்டும். இவ்வாறு காய்ச்சுகையில் அந்தப்பாகை ஆட்காட்டி விரலாற்றொட்டுப் பெருவிரலாலழுத்திப்பார்த்தால் நூல்போல் வரும். அதுதான் ஷர்பத்துகாய்ச்சும் பக்குவம். ஆனால் நமக்கு அதினும் முதிர்ந்த பக்குவம் வரவேண்டியதாகையால், அதன்பின் காய்ச்சிக்கொண்டேவந்து முன்போலவே அப்பாகைத் தொட்டுப் பதம்பார்த்துக்கொண்டே வரவேண்டியது. விரலால் தொட்டபாகின் சூடுதணிந்தவுடனே கட்டிப்போகும் பதத்திலிறக்கி அந்தப்பாத்திரத்தின் வாய்க்குக் கெட்டியான துணியை வேடுகட்டி ஓரிடத்தில் அசையாமல் வைத்துவிட்டு, ஐந்துநாட்கள் கழிந்து எடுத்துப்பார்த்தால் மேலே கற்கண்டு பூர்த்துக் கட்டியாயிருக்கும். அப்போது இதை வெளியேயெடுத்து ஓர் ஓலைப்பாயிற் போட்டு வெய்யி

* ஆஸ்டிரகாம் சர்க்கரை என்பது வெள்ளையாய் மணல் போன்றிருக்கும். இது மோரிஸ் தீவிலிருந்து அனுப்பிக்கப் படுகின்றது.

விற் காயவைக்க வேண்டும். அதற்கு அடியிலும் உறைந்துபோய்ப் பாளங்களாயிருக்கும், அதையும் எடுத்துக் கட்டிகளையுடைத்து முன்போலவே ஓலைப்பாயிற் போட்டுக்காயவைத்து எடுத்துப் பெட்டிகளில் நிரப்பிப் பாக்செய்து விடவேண்டும். கடைசியாய்க் கொஞ்சம் பாகு கட்டியாகாமல் ஜலரூபமாகவேயிருக்கும். இதைமிட்டாய்க் கடைக்காரருக்கு விற்றுவிடலாம். மேலே பூர்த்துப் போயிருக்கும் சரக்கு முதற்றரமானது. அடியில்கட்டிப்போயிருக்கிறது இரண்டாந்தரம். இதற்கு அடுப்புமாத்திரம் மிட்டாய்க் கடைகளிற் கட்டியிருப்பதுபோலவே, அக்கினியின்காங்கை அடுப்பிற்குள்ளாகவே தங்கும்படியான விதமாய்க் கட்டிக்கொள்ளவேண்டும்.

## (Ice) பனிக்கட்டி.

### 8. பனிக்கட்டிசெய்யச் சுளுவானமுறை.

ஆறுபுட்டி ஜலம்பிடிக்கும்படியான ஒருகல்ஜாடியில், நான்குபுட்டி ஜலத்தை நான்கு முறை துணியினால் வடிகட்டி வார்த்து மெல்லியதாய் அரைத்த இரண்டு அவுன்ஸ் வெடியுப்பை அந்த ஜலத்திற் போட்டு, ஜாடியின்வாய்க்குச் சரியான ஒரு தக்கைபோட்டுக் காற்றுட்புகாமல் டைட்செய்துவிடவேண்டும். இந்தஜாடியை வாய்ப்பக்கம் மேலேநிற்கும்படியாய் ஒரு கயிற்றினாற்கட்டி ஆழமான ஓர் கிணற்றில்விட்டுத் தண்ணீர்க்குள் அமிழ்த்திப் பிறகு தண்ணீரின் மேல்மட்டம்வரையில் தூக்கவேண்டும். மறுபடியும அமிழ்த்தித் தூக்கவேண்டும். இவ்வாறு செய்துகொண்டேயிருந்தால் மூன்று அல்லது நான்குமணிநேரத்திலே ஜாடிக்குள்ளிருக்கும் ஜலம் உறைந்துகட்டியாய்விடும், உபயோகித்துக்கொள்ளலாம்.

### 9. எழுதுகிற கறுப்பு இங்கி.

கடுக்காய்த்தூள்-பலம்-18. அன்னபேதித்தூள்-பலம்-8. விளாம்பிசின் அல்லது கருவேலம்பிசின்-பலம்-7. சுத்தஜலம்-பலம்-145. என்னும் இவைகளுள் கடுக்காய்த்தூளை முதலிலெடுத்து, 130-பலம் ஜலத்திற் போட்டுக்கொதிக்கவைத்து, மிகுதி (15) பலம் ஜலத்தில் அன்னபேதியையும் பிசினையும்அரைத்துக் கரைத்து,கொதிக்கும் ஜலத்திற் கொஞ்சம் கொஞ்சமாய்ப்போட்டு, செவ்வையாய்க் கொதிக்கவைத்து இறக்கிப் பாத்திரத்தின் வாய்க்குத் துணியினால் வேடுகட்டி மூன்று நாள் வைத்திருந்து பிறகு எடுத்து வடிகட்டிப் புட்டியில் அடைத்துக்கொள்ளவும்.

### 10. கறுப்பு இங்கி (வேறுமுறை.)

சூரத்துக்கடுக்காய்த்தூள்-பலம்-15. கோந்து அல்லது கருவேலம்பிசின்-பலம்-3½ அன்னபேதி - பலம் - 8. மாசக்காய் - பலம்-3. சுத்தஜலம்-பலம்-135 - இவற்றுள் மாசக்காயை ஒரு சட்டியிற்போட்டு வறுத்துச்செவ்வலேசிவந்து பின் கறுப்பாகுந் தருணம்பார்த்து, இறக்கி ஆறவிட்டுத் தூள்செய்துகொண்டு கடுக்காய்த்தூளையுஞ்சேர்த்து (125) பலம் ஜலத்திற்போட்டுக் கொதிக்கவைத்து, பிறகு (10)பலம் ஜலத்தில் ஷைபிசினையும் அன்னபேதியையும் அரைத்துச் சிறுகச்சிறுக, கொதிக்கும் கடுக்காய் ஜலத்துடன் கலந்து கொதிக்க வைத்திறக்கித் துணி வேடுகட்டிவைத்து, மூன்று நாளைக்குப்பிறகு வடிகட்டிப் புட்டியில் அடைத்துக்கொள்ளவும். இது முன் இங்கியைவிட மிகக்கறுப்பாயிருக்கும்.



## ஜாலவேடிக்கை.

இவ்வித்தையைச்செய்வதற்கு மிக்கசாமர்த்தியம் வேண்டுமென்று முதற்பத்திரிகையிலேயே நாம் கூறியிருக்கின்றோம். இரண்டு கைகளாலும் வாயாலும் காட்டி மறைப்பதில் வெகுசாதுரியமாய் டக்கு டமாகங்கள் செய்யவேண்டும். இவையனைத்தையும் முக்தி அப்பியாசப்படுத்திக் கைதேர்ந்தபிறகுதான், ஒருவன் ஜாலவித்தைக்காரனென்று வெளிக்குவந்து வித்தைகாட்டவேண்டும். அவ்வாறு அப்பியாசம் செய்யாமல் வெளிப்பட்டால் அவமானமுண்டாகும்.

இவ்வித்தையை உட்கார்ந்து செய்பவர்கள் ஜோல்னு என்னப்படும் ஓர்வகைப்பையிலே, *(தொம்பர்கள் விளையாடும்போது ஜோல்னுப்பை வைத்திருப்பதை நம்மேயரில் அநேகர் பார்த்திருக்கலாம்) மண்டையோடு, எலும்பு, கிண்ணங்கள், பந்துகள், பலகைகள், கலியாணமுருக்கன் கொட்டைகள், கெச்சைக்காய்கள் கூழாங்கற்கள் என்னும் இவைகளும் இன்னும் விளையாட்டுக்குரிய வஸ்துக்கள் முழுவதும் அடக்கஞ்செய்து, அதைத் தங்களுக்கெதிரில் வைத்துக்கொண்டிருந்து, நடிக்கும்போது அந்தப்பையின் வாயைத்திறந்துவைத்துவிட்டு, வாயினாற் சாலக்கான வார்த்தைகள் பேசிக்கொண்டே அடிக்கடி அப்பையிற் கையிட்டு இடுக்கியெடுப்பதற்கும் மறுபடி அப்பையினுட் கையைவைக்காமல் நழுவவிடுவதற்கும் சாதனப்படுத்தியிருக்கவேண்டும்.

நின்றுகொண்டு செய்பவர் மேல்மூடியால் முக்கால்வாசி மூடப்பட்டுக் கால்வாசிதிறந்திருக்கும்படியாக உயரமான ஒரு மேஜையைத் தயார்செய்து வைத்துக்கொண்டு, அதனுள்ளே தான் காட்டப்போகும் வித்தைக்குத்தேவையான சாமான்களை அடக்கஞ்செய்து, வாயினால்டக்காவார்த்தைகளைப்பேசிக்கொண்டும் கையினாற்புரட்டுகள் செய்துகொண்டும் வித்தையைக் காட்டவேண்டும்.

### 11. கல்லைக் கற்கண்டாக்கும் ஜாலம்.

இவ்வித்தையைக்காட்ட வெளிவருவோர்கள், அவ்வாறு வருவதற்கு அநேகநாட்களுக்குமுன்னமே தங்கள் தொண்டைக்குழியிற்

---

* தொம்பர்கள் விளையாட்டை இவ்விடத்தில் உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் காலத்திற்குக்காலம் நாம்பின்னால் எழுதப்போகிறது அதிக உயர்த்தியான ஆச்சரியகரமான ஜாலங்களாயிருக்கும்.

சாமான்களை அடக்கிவைத்துக்கொள்ளும்படியான சாதனம் செய்து கொள்ளவேண்டும். அப்படிசெய்வதற்கு ஆரம்பத்தில் சிறுகற்கண்டுக்கட்டியை உபயோகிப்பது தான் உத்தமம். அது உள்ளே செல்லினும்பாதகமில்லை. அச்சாதகம் சாத்தியமானபோது எந்தச்சாமானையும் தொண்டைக்குழியில் அடக்கிவைத்துக்கொண்டு வாயைச் செவ்வனே திறந்து எவர்க்குக் காட்டினபோதிலும் தொண்டைக்குழியிலிருக்கிற வஸ்துவை ஒருவனும் கண்டுபிடிக்கமாட்டார்கள். சில தொம்பர்கள் தங்கள் வாயிலிருந்து முள்ளுகளும் கல்லுகளும் எடுக்கிறதை நம்தேயரில் அனேகர் பார்த்திருக்கலாம். அவர்கள் தொண்டைக்குழியிற் சாமான்களையடக்கிய சாதனத்தாற்றான் அவ்வாறு செய்கின்றார்கள்.

இவ்வாறான சாதனத்திற்றேர்ந்த சாத்தியன் ஒருவரும் அறியாவண்ணம் ஏற்கெனவே, ஒருகற்கண்டுத் துண்டைத் தொண்டைக்குழியிலடக்கிக்கொண்டு, அதேபருமனுள்ள ஓர்கற்றுண்டைக்கையில் வைத்துக்கொண்டு இதோபார் இக்கற்றுண்டை ஓர்நிமிஷத்திற் கற்கண்டுத் துண்டாக்கிவிடுகின்றேனென்று வாயால் பல டம்பாகார வார்த்தைகளைக்கூறித் தன்வாயை நன்றாகத்திறந்து யாவருக்குங்காட்டி, கைகளைப் பலவிதமாய்ப் புரட்டும்போது கையிலிருக்கும் கற்றுண்டை ஒருவருக்குந்தெரியாமல் நழுவவிட்டுவிட்டு, அக்கற்றுண்டைத் தனதுவாயிற் போட்டுக்கொண்டதுபோல் யாவருக்கும் பாவனைகாட்டி, தொண்டைக்குழியில் அடக்கிவைத்திருக்கும் கற்கண்டுத்துண்டை வாயிலிருந்து எடுத்துக்கொடுக்கப் பார்த்தோர் யாவரும் ஆச்சரியப்படுவார்கள்.

## 12. மண்ணையள்ளித்தடவிப் பலவகை வாசனைகாட்டும் ஜாலம்.

சந்தனம் அத்தர்பில்லை பிநாறிப்பட்டைத்தூள் என்னும் இவைகளைத் தனித்தனியே கஞ்சித்தண்ணீராலரைத்துச் சிறுபயறு பிரமாணத்தில் உருண்டைகள் செய்துலர்த்தி வெவ்வேறாய் வைத்துக்கொண்டு, ஒருவருக்குந் தெரியாமல் தரையில் ஒவ்வோருருண்டையையும் குறிப்பாய்ப் போட்டுவிட்டு, எவனுக்கு இவ்வித்தையைக் காட்டவேண்டுமென்று தான் நினைக்கிறானோ அவனையழைத்துஅங்கு நிறுத்தி, இதோபார் ஒரு நிமிஷத்தில் இந்தமண்ணிற் பலவிதவாசனைகள் வரச்செய்கிறேனென்று காம்பீர வார்த்தைகள்கூறி, அவ்விடத்தில் தான்போட்டுள்ள அவ்வுருண்டைகளுடன் மண்ணையும் சேர்த்தெடுத்து அவன் கையிற்றேய்க்கப் பலவிதவாசனைகள் மாறி மாறியுண்டாகும், அப்போது அதைக்கண்ட அவன் மிக்க ஆச்சரியமடைவான். சிலர் தங்கள் ஐந்துநகக்கண்களிலும் ஐந்துவகை வாசனைவஸ்துக்களை வைத்துக்கொண்டு, அன்னியர் கையில்தடவி வெவ்வேறுவித வாசனைகளைக்காட்டும் வழக்கமுமுண்டு.



## 13. தண்ணீரின்மேல் ஊசி மிதக்கவைப்பது.

காற்றில்லாத இடத்தில் ஒரு மேஜையின்மேல் ஒரு பாத்திரத்தைவைத்து அதில் நிறைய ஜலம்வார்க்கவும். காற்றுடிசெய்கிற மெல்லிய கடிதாசி அதாவது கடிதங்களின் காப்பி எடுக்கின்ற மெல்லியதாளில் 4 அங்குலம் விருத்தாகாரமாய்க் கத்தரித்து, அந்த பாத்திர ஜலத்தின்மேல் மெதுவாய்ப்பரப்பி, அது தண்ணீரில் நனைந்து அமிழ்ந்துவிடுவதற்குமுன், துருப்பிடிக்காத புதிய ஊசியைக் காகிதத்தின்மேல் மெதுவாய்வைக்க, காகிதம் நனைந்து அமிழ்ந்துபோனவுடனே ஊசி ஜலத்தின்மேல்மிதக்கும்.

## 14. ஆச்சரியமான விதமாக மனிதனுடைய முகத்தை மாறவைப்பது.

6-பங்கு (olive oil) ஒலிவ் எண்ணெயில் ஒருபங்கு நீமுருகற்பாஷாணம் (Phosphorus) ஒரு சீஷாவில்போட்டு இளஞ்சூட்டிற்கொஞ்சம் பிடித்தால் உருகிப்போம். இந்த எண்ணெயில் கொஞ்சம் எடுத்து, ஒருமனிதனை வாயையும் கண்ணையும் மூடிக்கொள்ளச்சொல்லி, அவன் முகத்திற் பூசிவிட்டு இருட்டான இடத்திற் கொண்டுபோய்ப் பார்த்தால், எண்ணெய்பட்ட இடமெல்லாம் மிக்கபிரகாசமாயும் நீலநிறமுடைய ஒரு வகைத்தூபமு முண்டாகும். கண் வாய் என்னும் இரண்டிடங்களும் கறுப்பாகத்தெரியும். இதைப்பார்ப்பவர்கள் ஆச்சரியப்படாதிரார்கள். சோப்பு போட்டுக் கழுவிவிட்டாற் போய்விடும். இது பூசுவதாற் கெடுதியொன்றுமில்லை.

## 15. வெள்ளிமரம்.

ஒரு கிளாஸில் ஒரு அவுன்ஸ் உயர்ந்த வெள்ளியை 3 அவுன்ஸ் நைட்ரிக் ஆஸிட் (Nitric Acid)ல் போட்டு, வெள்ளி கரைந்துபோகும் வரையில் வைத்து எடுத்து, ஒரு டிகாண்டர் (decanter) அதாவது சீஷா கூஜாவில் போட்டுக்கொள்ளவும், பிறகு 8 அவுன்ஸ் நல்லரசமும் 24 அவுன்ஸ் சுத்தஜலமும் அதில்விட்டுச் சீஷா கூஜாவுக்குக் கார்க்போட்டு அசையாமல் வைத்துவிடவேண்டியது. ஒருவாரத்திற்குள் வெள்ளிமரம்போலக் கிளை இலைமுதலியவைகள்தோற்றப்படும். நாட்செல்லச்செல்ல அவைகள் விர்த்தியாய் நல்லதோற்றமுண்டாகும்.

### 16 வேறுமுறை.

ஒருசீஷாவினுடைய நெட்டிகார்க்கில் புழுவைப்போல நெளியவைத்த ஒருதுத்தநாகக் கம்பியைக்கோர்த்து, அந்த சீஷாவில்மழைச்சலம் அல்லது வாலையிலிறக்கின வியர்வைத்தண்ணீரை ஊற்றி, அதிற்கொஞ்சம் சுகர் ஆவ் லெட் (Sugar of Lead) பொடிபண்ணிப் போட்டு, ஷை துத்தநாகக்கம்பி ஜலத்தில்நிற்கும்படி கார்க்கைச் சீஷாவுக்குமூடி அசையாமல் வைத்துவிட்டால், அந்தக்கம்பியைச் சுற்றிலும் வெள்ளியிலைகள் உற்பத்தியாய்விடும். பார்ப்பதற்கு மிகவும் நேர்த்தியாயிருக்கும்.

### ஒரு யுக்தியான தீர்ப்பு.

இரண்டு வழிப்போக்கர்கள் ஓர் குளக்கரையிற் சாப்பிட உட்கார்ந்தார்கள். அவர்களுள் ஒருவனிடத்தில் 5 - ரொட்டியும் மற்றவனிடத்தில் 3-ரொட்டியு மிருந்தன. அவர்கள் அவைகளைத் தின்னுவதற்கு முந்தியே வேறொருவனும் அவ்விடத்திற்கு வந்தான். ஆக இம்மூவருமாகச் சேர்ந்து 8 - ரொட்டியையும் தின்றுவிட்டபிறகு, புதிதாய்வந்த வழிப்போக்கன் தன்பங்குக்காக 8 - பணம் அவ்விடத்தில் வைத்துவிட்டுப் போய்விட்டான். 5-ரொட்டிக்காரன் 5-பணத்தைத்தானெடுத்துக்கொண்டு 3-ரொட்டிக்காரனுக்கு 3 - பணத்தைக் கொடுக்கப்போனான், அவன் அதை வாங்காமல் தனக்கு 8-பணத்திற்பாதியாகிய 4 பணம் வரவேண்டுமென்று வாதித்தான். இவ்வாறு வாதம் நேர்ந்தபடியால் இருவரும் நியாயாதிபதியினிடத்திற்போய் முறையிட்டுக்கொண்டார்கள். அவர் இவர்கள் வழக்கை நன்றாய் ஆலோசித்து, எட்டு ரொட்டியையும் மூவரும் சமமாய்த்தின்றபடியினாலே, ஒவ்வொரு ரொட்டியில் ஒவ்வொருவர் மூன்றிலொருபங்கு எடுத்துக் கொண்டிருக்கின்றீர்கள். இப்படி ஒவ்வொன்றையும் மும்மூன்றாகப்பிரிக்கும்போது 8-ரொட்டிகளும் 24-துண்டுகளாகி, அவற்றுள் 5-ரொட்டிக்காரனிடத்தில் 15-துண்டுகளும் 3-ரொட்டிக்காரனிடத்தில் 9-துண்டுகளும் நிற்கிறதோடுங்கூட, மூவரில் ஒவ்வொருவனும் மொத்தத்தில் 8 - துண்டுகள் உண்டதாகிறது. ஆகையாலே 5 - ரொட்டிக்காரனுடைய மீதிதுண்டு 7-ம், 3 - ரொட்டிக்காரனுடைய மீதிதுண்டு 1-ம், புதியவழிப்போக்கனுக்குச் சேர்ந்ததாகிறது. ஆகையால் அவன் கொடுத்தபணத்தில் 5-ரொட்டிக்காரன் 7 - பணமும் 3-ரொட்டிக்காரன் 1-பணமும் எடுத்துக்கொள்ளும்படி தீர்மானித்தார்.



# அநுபந்தம்.

## விநோதார்த்தப்பதங்கள்.

ஓர் சமணசமயத்தரசன் தன்காலில் முள்தைத்துக்கொண்டு உபத்திரவப்பட்டுக் கொண்டிருக்கையில், ஓர்வித்துவான் அச்சங்கதியறியாது அவனிடத்திற்பரிசுபெறச் சென்றான். அவனைக்கண்ட அவ்வரசன் என்னுடையநிலைமை உனக்குத்தெரியுமா என்றுசினந்துரைத்தான். அதுகேட்டவித்துவான் நீமுட்டாளாயிருக்கின்றாய் என்றான். அப்போது அரசன் முன்னினும் கோபம் மூண்டு மந்திரியை நோக்கி, இவனைச் சிறைப்படுத்துவாயாக எனக்கட்டளையிட்டனன். அஃதுணர்ந்தமந்திரி, மன்னரேறே! அவர் வித்துவானாயிருப்பதால் அவ்வாக்கியம் தாங்கள்கேட்ட வினாவிற்கு விடையான வாக்கியமாயிருந்தாலுமிருக்கலாம், சற்றுகோபந்தணிந்து பொறுமையுடன் அவரையே அவ்வாக்கியத்திற்குப் பொருள்கேட்டால் தங்களுக்குக் குதூகலமுண்டாகுமெனக்கூறினன். மந்திரிவாக்கியத்தை மறுக்கமாட்டா மன்னவன், அவ்வித்துவானைப்பார்த்து நான் கேட்டகேள்விக்கு நீருரைத்தவாக்கியம் உத்தரமாமாவென்றான். அதற்குச்சந்தேகமா? கேள்வியொன்றிருக்க உத்தரமொன்றுரைக்க எமக்கென்ன பைத்தியமா? என்றார். ஆனால் அதன்பொருளைக்கூறி எனதுவினாவிற்கு விடையாமாறுவிளக்குவீர் என்றான். அப்போது வித்துவான், மன்னனைநோக்கி நீர் யான்வந்தவுடனே "என்னுடையநிலைமை உனக்குத்தெரியுமா" என்றீர். உம்முடைய நிலைமையாவது சமணசமயநிலைமை, அதை விளக்குவதற்காகவே உங்களுடைய கோட்பாடாகிய கண்டு முட்டு கேட்டு முட்டு என்னும் முக்கியபதத்தை விளக்குகின்ற முட்டு ஆளாயிருக்கின்றீரென்றேன் எனக்கூறினான். அதற்கவ்வரசன் சம்மதியாதவனாய், யான் இப்போதிருக்கும் மேம்பாட்டின் நிலைமையைக்குறித்தல்லவா நான்கேட்டது, அதற்குஇதுவிடையாகுமோ என்றான், மீண்டும் வித்துவான் உமதுமேம்பாட்டின் நிலைமைக்குப் பொருளாகும் பொருட்டன்றோ முட்ட ஆளாயிருக்கின்றாய் என்றேனெனக்கூறினன். அதற்கும் அவ்வரசன் சம்மதியாதவனாய், யான் தற்காலம் முள்தைத்தலால் படும்துன்பத்தின் நிலைமையைக்குறித்தல்லவோகேட்டது, அதற்கு இதுவிடையாகுமா என்றான். பின்னும் வித்துவான் தற்காலம் நீர் படும்துன்பத்தின் நிலைமைக்கும் பொருள்படுமாறன்றோ முள்தாளாய் இருக்கின்றாயெனக் கூறினேனென்றனன். அதற்கும் அவ்வரசன் சம்மதியாதவனாய், எனக்கப்போதுநேர்ந்த கோபத்தின் நிலைமையைக் குறித்தல்லவாகேட்டது, அதற்கும் இதுவிடையாகுமா? என்றான். மறுபடியும்வித்துவான் அக்கோபத்தின்நிலைமையையும் விளக்கும்பொருட்டன்றோ முட்டு ஆளாயிருக்கின்றாயெனக் கூறினேனென்றனன். அதற்கும் அவ்வரசன் இணங்காதவனாய், என்னுடையநிலைமையை நீ உள்ளபடி கூறவில்லை

யென்றனன். அதற்கவ்வித்துவான் உம்முடைய நிலைமையை உள்ளபடியும் விளக்கும்பொருட்டன்றோ முட்டாளாயிருக்கின்றாயென்றே னெனக்கூறினன். இவையனைத்தையும் கேட்ட அரசன் அவ்வித்துவானுடைய பதப்பொருட் சாமர்த்தியத்திற்குமெச்சி வேண்டியவரையிற் பொருளுதவி மிக்கமரியாதையுட னனுப்பினான்.

ஒரு நியாயாதிபதியினிடத்தில் ஒரு ஸ்திரீசென்று, இராமன் என்பவன் என்னை உற்றுப்பார்த்தான் என்று முறையிட்டுக்கொண்டாள். அப்போது நியாயாதிபதி இராமனை வரவழைத்து நீ என் இவளை உற்றுப்பார்த்தாயென்றுகேட்க, அவ்விராமன், ஐயா! இவள் என்னைப்பார்த்தமையால் நானும்பார்த்தேன் என்றான். மீண்டும் நியாயாதிபதி அந்தஸ்திரீயைநோக்கி நீ ஏன் இவனைப்பார்த்தாயென்று கேட்டபோது, அந்தஸ்திரீ, நான் இவனைப்பார்த்ததேயில்லை என்று சாதித்தாள். அப்போது நியாயாதிபதி சற்றுயோசித்து, நல்லது நீ அவனைப்பாராதிருந்தால் அவன் உன்னைப்பார்த்தது உனக்கெப்படித் தெரிந்தது என்று வழக்கைத்தள்ளிவிட்டார்.

ஆதலால் எப்போதும் சத்தியம்கூறுவோர்க்கே ஜயமுண்டாகுமென்பதும் வாய்மையுடையோன் வழக்கிழக்கான் என்னும்பழமொழியு முண்மையாகும்.

வாதிபக்கத்திற் பரிதானம்பெற்றுக்கொண்ட ஓர் நியாயாதிபதி, பிரதிவாதிபக்கத்துச் சாட்சியாகிய ஒருவன் சாட்சிசொல்லுகையில், அவன்மேற்கோபித்து, நீ "நாய்போற் குரைக்காதே" என்றார். அதுகேட்ட சாட்சிக்காரன், "சுவாமி! கள்ளரைக்காணிற்குரைக்குந் தன்மை நாய்க்கியல்புதானே." என்றான். நியாயாதிபதி, தனதுள்ளத் தன்மையைச் சாட்சிக்காரன் சபையில்வெளிப்படுத்திவிட்டானே யென நாணமுற்றான்.

ஆதலாற்பரிதானம் வாங்குவோன் பரிபவமடைவானென்பதுண்மை.

நியாயாதிபதி ஒருவர் ஒருநாள் தனதுகையில் ஓர்பிரம்பைவைத்துக்கொண்டு, அப்பிரம்பினால் தமக்கெதிரிலுள்ள ஒருவனைச்சுட்டிக் காட்டி, இப்பிரம்பின் நுனியில் ஓர் அயோக்கிய னிருக்கின்றானென்றார். அதுகேட்ட எதிரிலுள்ளவன் குஜோத்தியமாக, அந் நியாயாதிபதியைநோக்கி, "மகாப்பிரபு! இப்பிரம்பின் நுனிகளிரண்டினுள் எந்த நுனியிலிருப்பவன்" என்றுவினவினான். அப்போது நியாயாதிபதி வெட்கி மௌனமானான்.

ஆதலால், பேசும்போதுயோசித்துப் பேசவேண்டுமெனவும் "சொற்சோர்வுபடேல்." எனவும் ஆன்றோர் கூறியுள்ளார்.

ஒருவன் மற்றொருவனைப்பார்த்து, உனக்குப்பைத்தியம் பிடித்ததாக நான்சொப்பனங் கண்டேனென்று பரிகாசம்செய்தான். அது கேட்ட அவன் ஐயோ! அது உண்மைதானப்பா என்று அவனை அடியடியென்றடித்து மிதித்துஉதைத்துத் துவைத்தான்.

ஆதலாற் பரிஹாசவார்த்தையே பகைவருகும்.



ஓர் பிச்சைக்காரன், தன்னிடத்தில் மகாராஜாவார்த்தையாடினாரென்று மற்றொருவனுடன் பெருமையாய்க் கூறினான். அது கேட்ட அவன் ஆச்சரியப்பட்டு, மகாராஜா என்ன சொன்னாரென்றுகேட்க, "சீ நாயே ! வழியில்நில்லாதே ஓடு." என்றார் எனக்கூறினன்.

ஆதலால் விவகாரந்தெரியாதார் இவ்வாறே அவமானத்தைச்சன்மானமாகவும் சன்மானத்தை அவமானமாகவும் கொள்வார்கள்.

ஒருவன் தன்னருகிலிருந்தவனிடத்தில் நான் நிஜம்பேசினதேயில்லையென்றான். அதுகேட்ட அருகிலிருந்தவன், நீ இப்போதுதான் முதன்முறையாக நிஜம்பேசினாயென்றான்.

ஆதலால் யோசனையில்லான்சொல்நாசமாகும்.

மரணதண்டனையை நிறைவேற்றுவதற்காக ஒருவனை அழைத்துக்கொண்டுபோகையில், அவ்வேடிக்கைபார்ப்பதற்கு முற்பட்டோடுகின்றவர்களை, அக்குற்றவாளிபார்த்து இரக்கத்துடன், "ஏன்வீணாய் முன்னே ஓடுகின்றீர்கள்! நான்வராமல் அங்கொன்றும் நடவாது." என்றான்.

ஆதலால் வீண்வேடிக்கைபார்ப்போர் விழலர்.

## மூட்டுப்பூச்சிகளைப் போக்குவதற்கு.

வீட்டிலிருந்து மனிதர்களுக்குத் துன்பத்தையுண்டாக்கும் ஜந்துக்களில் மூட்டுப்பூச்சிதான் மிகக் குரூரமுடையது. கடனாது மனிதனுடைய சரீரத்தில் வசித்துக்கொண்டே அவனுடைய தசையைத்தின்று உதிரத்தைப் பானம் பண்ணுகின்றது. மூட்டுப்பூச்சியோ அவ்வாறு சரீரத்தில் சதா வசிக்காமலிருந்தபோதினும், வெளியிலிருந்துகொண்டே தூக்கத்தில் விசேஷமாகவும் விழிப்பில்சொற்பமாகவும் உதிரத்தைப் பானம்பண்ணுகின்றது, உதிரபானம் பண்ணுவதில் இவை இரண்டும் ஒத்திருக்கின்றன. கடனைத்தீர்த்துவிடுதற்கு ஒருவன் எவ்வளவு முயற்சி எடுத்துக்கொள்வானோ அதில் நாலிலொருபங்கு முயற்சியாவது எடுத்துக்கொண்டால்தான் இந்த மூட்டுப்பூச்சி தொலையும். எப்படியென்றால், மூட்டுப்பூச்சிகள் அசுசியினாலும் அழுக்கினாலும் உற்பத்தியாகின்றன, சுத்தமான காற்றும் சுத்தமான இடமும் அதற்குச் சத்துரு. சில வீடுகளில் அலட்சியத்தினாலும் அஜாக்கிரதையினாலும் அதன் சந்ததி பெருகும்படி விட்டுவிட்டு, அவைகளின் வேட்டைக்குட்பட்டுச் சதா துயரமடைந்துகொண்டிருக்கின்றார்கள். அத்துயரத்தினின்றும் நிவாரணை பெறுதற்கு இச்சைகொண்டவர்கள் இதனடியிற் கூறியுள்ள நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

வீட்டில்ஒட்டடை அடித்து, அதிலுள்ள எடுபிடிசாமான்களைச் செவ்வையாய்த் துடைத்து, சுவறுகளிற் கடிதாசி ஒட்டியிருந்தால் அவைகளைக்கிழித்தெறிந்து, ப்ரஷ் அல்லது துடைப்பத்தால் சுவறு

களை அழுக்கில்லாமல் துடைத்து, அதிகமாய்ச் சூடேறியவெந்நீரால் அச்சுவறுகளையும் நாற்காலிகள் கட்டில்கள் அலமாரிகள் முதலிய சாமான்களையும் கழுவிவிட்டு, அவைகளின் இடுக்குகளில் ஈர்க்குகள் போட்டுக்குடைந்து, வீடுமுழுவதும்சுண்ணாம்படித்து விடவேண்டும். நாற்காலி கட்டில் முதலியசாமான்களுக்கு, ஒருபடி தண்ணீரில் ஒரு பலம்படிகாரத்தைத் தூள்செய்துபோட்டுநன்றாய்க்கொதிக்கவைத்து, அத்தண்ணீரை எடுத்துவார்க்கவும். பிறகுவீட்டின் ஜன்னல்களையும் கதவுகளையும் சாற்றி அவைகளிலுள்ள சிறு துவாரங்களையும் துணியினால் அடைத்துவிட்டு, ஒருகந்தைத்துணியில்3-பலம் குழாய்க்கந்தகத்தைப் பொட்டணங்கட்டி ஒரு இரும்புத்தகட்டில் வைத்துக் கொளுத்தி, ஷை வீட்டில் வைத்துவிட்டுக் கதவைமூடிக்கொண்டு, இருபத்தினான்குமணிநேரம் பொறுத்துத் திறக்கவேண்டும். அப்போது கதவுகள் ஜன்னல்கள் முதலியவற்றை நன்றாகத்திறந்து புதிய காற்று உள்ளேசென்று ஆற்றியபின்பே மனிதர்கள் உள்ளே பிரவேசிக்கவேண்டும்.

இவ்வாறு வீடுசாமான் முதலியவைகளைச்சுத்திசெய்துகொண்டு ஒருபெரிய அண்டாவில் தண்ணீரைநன்றாய்க்காயவைத்து, பாய்களனைத்தையும் அந்தத்தண்ணீரில் நனைத்துச் சற்றுநேரம்பொறுத்து எடுத்து அலம்பிஉலர்த்தி, தலையணைகளெவற்றையும்பிரித்துத் துணிகளைத் துவைத்துலர்த்திப் பஞ்சடைத்து, கட்டிலின்மெத்தையையும் அவ்வாறேபிரித்துத் துவைத்துலர்த்திப் பஞ்சடைத்துவைத்துக்கொள்ளவேண்டும். கூடுமானால் கட்டிலையும் கால்கள் சட்டங்கள் முதலியவற்றை வெவ்வேறாகக் கழற்றி இடுக்குகளையெல்லாம் சுத்தம்செய்யினும் உசிதமே. இவ்வளவுவேலை செய்வதனாலேயே எல்லாமூட்டுப்பூச்சிகளும் அவைகளின் முட்டைகளும் அடியோடே மாண்டுபோகும். மீண்டும் அவைகள் உற்பத்தியாகாமலிருப்பதற்காக, அடியிற்கண்ட மருந்துகளைக் கட்டில் நாற்காலி முதலிய சாமான்களிலும் அவைகளின் இடுக்குமுதலிய இடங்களிலும் பூசவேண்டியது. கற்பூரத்தைலத்தைத் தனியேயாவது சுண்ணாம்புஜலத்துடன்சேர்த்தாவதுபூசலாம். கிரோஸனாயிலும் சுண்ணாம்புஜலமும் சேர்த்தாவது பூசலாம். இவ்வாறுசெய்தால் வேறிடத்திலிருந்து மூட்டுப்பூச்சிகள்வந்தபோதிலும் விர்த்திக்காது. இவ்வளவுகஷ்டம் எப்படி எடுத்துக்கொள்வதென்று சிலருக்கு மலைப்புண்டாகும். அவர்கள் கூடியவரையில் வீட்டையும் சாமான்களையும் சுத்தப்படுத்தி, மேற்கூறிய மருந்துகளைக் கட்டில் நாற்காலி முதலியசாமான்களுக்குப் பூசுவதுடன், தாமரையிலையையும் வெண்ணொச்சியிலையையும் ஷை வீட்டிற்குள் பல இடங்களிலும் பரப்பிவைக்கவும். இன்னும் கார்பாலிக் ஆசிட் எண்ணெயும், தேங்காயெண்ணெயுங்கலந்து கட்டில்முதலிய சாமான்களுக்குப் பூசினாலும் மூட்டுப்பூச்சிகள் கூட்டோடே அழியும்.

கடவுள் துணை.

# விநோத விசித்திரப் பத்திரிகை.

## 1900-ம் ௵

புஸ்தகம் 1.] மார்ச்௴ 1௳ வியாழக்கிழமை. [No 3.

## கடவுள் உண்டு.

(19 - ம் பக்கத்தொடர்ச்சி.)

நாஸ்திகமதஸ்தர் சிருஷ்டிகளுக்குக் கர்த்தாஇல்லையென்றும், சகலபொருள்களும் பிரபஞ்சத்தினியல்பாகவே தாமே உற்பத்தியாகின்றனவென்றும், ஆஸ்திகர்களுடன் வாதிக்கிறார்கள். தானாகவே ஓர் கிர்த்தியம் நடக்குமென்பதற்கு மந்தஅறிவும் சம்மதியாதே. உதாரணமாக ரெயில்வே என்ஜினை எடுத்துக்கொள்வோம். அதில் ஓடுவதற்கேற்ற சகலவேகங்களும் இயற்றப்பட்டிருந்தபோதிலும் ஓடுவதற்கு (Steam Power) நீராவியினுடைய சக்தியிருந்தால்மட்டுமே ஓடும். அச்சக்தியற்றவிடத்துத் தானே ஓடுவதற்குக்கூடாது. தலைவனில்லாப்படை வெல்லாது என்பதுபோல, யுத்தகளத்தினின்று போர்புரியும் யுத்தவீரர்கள் ஏற்கெனவே யுத்தப்பயிற்சிகளனைத்திலும் தேர்ந்திருந்தபோதிலும், கம்மாண்டர் (Commander)என்னும் தளகர்த்தன் நின்றுகொண்டு, அவர்களை ஒழுங்காய் நடத்தினால்மாத்திரம் யுத்தம் கிரமமாய்ச்செய்து வெற்றிபெறுவார்களேயன்றி வேறு விதத்தால் ஜயங்கொள்ளார்கள். "மீகாமனில்லாமரக்கலமோடாது" என்பதுபோல, கப்பலைச் சமுத்திரத்தில் நடத்துவதற்குக் கப்பற்றலைவனென்னும் மாலுமி இருந்தால்மட்டுமே கப்பலோடும், அவனில்லாவிடத்து அக்கப்பல் ஓடாது. ஒருவர்த்தகக்கம்பெனியிருந்தால், அதற்கும் ஒரு தலைவனில்லாவிட்டால் அக்கம்பெனிநடந்தேறாது. ஒருஆபீஸை எடுத்துக்கொள்வோம். உதாரணமாகப்போஸ்டாபிஸைப்பற்றிப் பேசுமிடத்து அதற்கும் தலைவராகியபோஸ்ட்மாஸ்டர் இல்லாமல் அக்காரி

யங்கள்நடந்தேறாது. ஒருதேசத்தைஎடுத்துக்கொள்வோம். அதையும் அரசாட்சிசெய்வதற்கு ஓர் அரசனில்லாவிடத்துக் குடிகள்ஒழுங்காய் நடவார்கள். இவ்வாறே எவ்வகைக்கிரியைகளை நாம் ஆராய்ந்துபார்த்தபோதினும்,ஒவ்வொன்றிற்கும் தலைவனிருந்தால்மட்டும் அக்காரியம் ஒழுங்காய் நடத்தப்பட்டுவருமேயொழியத் தலைவனில்லையாயின் அப்போதே அழிந்து அடியோடேமாண்டுபோம். இப்பிரபஞ்சத்தில் நடந்துவரும் கிரியைகள்யாவும் எவ்வளவு ஒழுங்காகவும் நிர்ணயமாகவும் அனந்தங்கோடிவருஷங்களாக நடந்துவருகின்றன. இவைகள் யாவும் தலைவனென்னும் அந்தப்பரிபூரணக்கடவுளில்லாமல் தமக்குத் தாமே நடந்துவரக்கூடுமோ? ஒருபோதும் கூடவே கூடாது. இன்னும் "எஜமானன்கண்பாராதவேலைஇழுக்கு" என்பதுபோலக் கடவுளில்லையென்றாற் பாவஞ்செய்வதற்குப் பயங்கொள்ளவேண்டியதே இல்லை. திருடவேண்டியவன் தன்இஷ்டப்படிதிருடிப் பாதாக்ஷாதாடனம் பட்டுக்கொண்டு ஜெயிலுக்குப்போகலாம். விபசாரம்செய்யவிரும்பினவன் தன்சந்தோஷப்பிரகாரம் தாய் தமக்கை தங்கை புதல்வி என்னும் தாரதம்மியமின்றி மிருகங்களைப்போற் புணர்ந்து குஷ்டம் முதலிய கஷ்டவியாதிகளைப்பெற்றுக்கொண்டு வேப்பிலையுங் கையுமாய் ஊர்சுற்றித்திரியலாம். கட்குடியன் தனக்குவேண்டுமளவு குடித்து வெறிகொண்டு, வழியிற்போகின்றவர்கள் வருகின்றவர்கள் ஆகிய இவர்களை மடிபிடித்திழுத்து வழக்காடிச்சண்டைசெய்து மண்டையுடைத்துக்கொண்டு திரியலாம். இவ்வண்ணமே பாவச்செயல்கள்எத்தனையிருக்கின்றனவோ அத்தனையையும் தாராளமாய் நம் இஷ்டப்பிரகாரம் செய்து வரலாமல்லவா? ஏனென்றால், நாம் பாவம்செய்தால் நம்மைத்தண்டிப்பதற்குக் கடவுள்தானில்லையே. நாம்ஒருவருக்கும் அஞ்சவேண்டியதில்லையென்றேற்படுகின்றது. இக்காலத்தில் உலகத்துள்ள எல்லாஆஸ்திகமார்க்கங்களிலும் கடவுள் ஒருவரிருக்கிறார், பாவம் செய்பவர்களைத் தண்டியாமல் விடார், என்னும் இவைபோன்ற அனேகநிபந்தனைகளும் சட்டங்களும் ஏற்படுத்தியிருக்கும்போதே எத்தனையோபாவங்கள் நடந்துவருவதை நாம் கண்கூடாகப்பார்த்துவருகின்றோம். தண்டிப்பதற்குத்தலைவனில்லையென்றால் உலகம் அல்லோலகல்லோலப்பட்டு அழிவதற்கு ஆட்சேபனையுண்டா? ஆகையால் நாஸ்திகர்சொல்வது பெருந்தப்பு. அவர்களுடைய வாதம் மேற்கூறியவண்ணம் ஆராய்ந்து பார்க்கையில் சுருதி யுக்தி அநுபவம் என்னும் மூன்றுக்கும் ஒத்திராமையின், ஆஸ்திகர்கொள்கையாகிய கடவுளுண்டு என்பதே உண்மை. (இன்னும்வரும்.)



## வைத்தியம்.

### எலும்புகள்.

(22 - ம் பக்கத்தொடர்ச்சி.)

பலவித எலும்புகளுக்குள் ஒவ்வொன்றிற்கும் அததற்குரியதொழில்களுள்ளன. சில எலும்புகள் கபாலத்திலும் நெஞ்சறையிலுமுள்ள உறுப்புக்களை மூடிக்காக்கின்றன. வேறுசிலஎலும்புகள் கை கால் முதலியவை அசைவதற்குதவும் பொருத்துக்களாகும். அவைகளின் அசைவுக்குத்தக்கவிதமாய்ப் பலவகையாக விகற்பப்பட்டிருக்கும். சிலபொருத்துக்கள் விரல் பொருத்துப்போல் அசைவுள்ளதாகவும், வேறு சில தலையோட்டுப்பொருத்துப்போல் அசைவற்றதாகவுமிருக்கும். கபாலத்துடனே முள்ளந்தண்டு பொருந்தியிருக்கிறவிதம் சரீரத்திற் காணக்கூடிய சூட்சங்களுக்குள்ளே அதிகவிசேஷமானது. எப்படியெனில், தலையானது முள்ளந்தண்டிலிருந்து வணங்கவும், அண்ணாந்துபார்க்கவும் பக்கத்துக்குப்பக்கம் சாயவும் திரும்பவும் இப்படி எல்லாவிதத்திலும் அசையக்கூடிய சூட்சமுடையது. இந்தசூட்சமான பொருத்து மேற்கழுத்திலிருக்கிற உயிர்நிலையான முள்ளந்தண்டுக்கொடிக்கு மிகுந்தபாதுகாப்பு. அப்பகுதிக்கு இடையூறுவந்தால் உடனே மரணமுண்டாகும். மூட்டுகளில் கூடுகிற எலும்புகளின்முனைகள் தேய்ந்துபோகாமல் அவைகளின்மேல் ஒட்டிக்கொண்டு மழமழவென்றிருக்கிற வஸ்துவுக்குக் குருந்தெலும்பென்று பெயர். எலும்புகள் சந்திக்கும் இடங்களில் மேற்கண்டகுருந்தெலும்பை ஒருவிதஜவ்வு மூடிக்கொண்டிருக்கிறது. இந்தஜவ்விலிருந்து ஊறுகிற ஒருவித வழுவழுப்பான பாணியானது, வண்டியின் அச்சிலே சக்கரம் தாராளமாய்ச்சுழலுவதற்குக் கொழுப்பு அல்லது எண்ணெய் உதவுகிறதுபோல, எலும்புப்பொருத்துக்கள் அசைவதற்கு இதுஉதவும். மேலேகூறிய குருந்து ஜவ்வு என்னும் இவைகளின் உதவியினாலே பொருத்துக்கள் யாதொருசேதமின்றி அனேகவருஷங்கள் வரையில் தேய்ந்துபோகாமல் அசைந்துகொண்டுவருகின்றன. அதிகஅசைவுள்ளமூட்டுகள் எளிதில் விலகிப்போகத்தக்கவைகள். ஒருமூட்டுவிலகிப்போயிற்றென்று தெரிந்தமாத்திரத்தில் எலும்பைஅதனுடைய ஸ்தானத்திலிழுத்துவிட்டு அசையாமற் சிலநாளைக்குக் கட்டிவைக்கவேண்டும். அவ்வாறுசெய்தால் அ மூட்டுசேர்ந்துகொள்ளும். அப்படிக்கின்றி மூட்டைவிட்டு விலகின எலும்பை நாட்படவிட்டுவிட்டால் பின்பு அதை அதன்நிலையிற்றள்ளுவது மிகவும் அசாத்தியமாகும்.

அஸ்தியைச்சேர்ந்த வியாதிகளைச் சகிக்கக்கூடாதநோய்களால் அறிந்துகொள்ளலாம். எப்படியெனில், எலும்புகள் வியாதிகொள்ளாதிருக்கையில் அவைகளை வெட்டினாலும் அதிகவருத்தந்தோன்றாது. ஆனால் விரற்பிளவைபோன்ற சிலவியாதிகள் அவைகளில் உண்டானாலோ வருத்தம் மிகக் கடுமையாயிருக்கும்.

எலும்பு ஒடிந்துபோனால் ஒடிந்த இடத்தில் நோயும் விரல்வைத்தழுத்தி அசைத்துப்பார்த்தால் நறநறவென்றசத்தமும், உருவம் மாறியிருப்பதும், அசைவில்லாத இடத்தில் அசைவும் ஆகிய இந்நான்கு குறிகளுண்டாகும். இக்குறிகளால் எலும்புமுறிந்ததென்று செவ்வையாகத் தெரிந்துகொள்ளலாம். அதற்குப்பரிகாரம் எப்படியெனில், ஒடிந்தமுனைகளை ஒன்றாகச்சேர்த்து, பத்தைகளால் லகுவாய்க்கட்டி அசையாமல் வைக்கவேண்டும். இறுகக்கட்டலாகாது. சிலவேளை உஷ்ணமும் நோயும் அதிகமாயிருந்தால் அதன்மேல் குளிர்ந்த ஜலம் விடவேண்டும். இரண்டு மூன்றுவாரங்களில் முறிந்தவெலும்பு ஒன்றாய்க் கூடிவிடும் (இன்னும்வரும்).

## 17. பேதிமருந்து.

காவுஸபான்-ஆலுபுகாரா-சூரத்து நிலையாவாரை-ரோஜாப்பூ-கடுக்காய்த்தோல் வகை க-இ வராகனெடை க. தோல்நீக்கிய சுக்கு-கொத்தமல்லி-சோம்பு-ஏலம்-சீரகம் - ஆரஞ்சித்தோல் - அதிமதுரம். வகை-க. இ-வராகனெடை - உ. இவைகளை வெந்நீர்-ஆழாக்கு க-ல். சதைத்துப்போட்டு-இரண்டுமணிநேரம் ஊறவைத்துப்பிசைந்து வடிகட்டிக்கொண்டு, அதில் மூன்று துலாம் சிற்றாமணக்கெண்ணெயாவது அல்லது ஒருதுலாம் (Epson salt) என்னும்உப்பாவது சேர்த்துக் கொடுத்தால் ஆயாசமில்லாமற் பேதியாகும்.

## 18. வேறுமுறை.

*சுத்திசெய்த சீர்மைச் சிவதைவேர் - கடுக்காய்-சுக்கு என்னும் இவைகளின்தூளைச் சமனெடையாக எடுத்துச் சேர்த்துக் கலந்து அதில் ஒன்று அல்லது இரண்டுவராகனெடை தேன்கலந்து கொடுக்கப் பேதியாகும்.

* சிவதைவேர்ச்சுத்தியாவது:—இதன் உள்நரம்பை நீக்கிவிட்டுப்பட்டையைத் தூள்செய்து; வடிக்கட்டி வாயகன்ற சட்டியிற் கொஞ்சம்பால்விட்டு, அச்சட்டிவாய்க்குத் துணியினால் வேடுகட்டி, அத்துணியின்மேல் அத்தூளை வைத்து மேல்சட்டிமூடிப் பிட்டவிப்பதுபோல் அவித்து, எடுத்துக்காயவைத்துக்கொள்வதாம்.



## 19. வாந்திமருந்து.

நஞ்சறுப்பான் அதாவது பேய்ப்பாலை இலைத்தூள் அல்லது வேர்த்தூள் (௨௦) அல்லது (௩௦) உளுந்தினெடை தேனிற்கொடுத்தால் வாந்தியாகும். அஜீரணசுரத்துக்குக் கொடுக்கலாம். வெந்நீர்கொடுத்துக்கொண்டேவந்தால் வாந்தியாய்க்கொண்டேவரும். வாந்திவிசேஷமாகி நிறுத்திவிடவேண்டுமென்றால், குளிர்ந்தஜலத்தைக் கொடுக்கநிற்கும். அதில் நிற்காவிட்டால் காய்ச்சாப் பசுவின்பாலைக்கொடுக்கநிற்கும். (இன்னும்வரும்).

## வேஷதாரிகள்.

நாடகங்களில் புருஷர்கள் பெண்களின் வேஷமும், பெண்கள் புருஷர்களின் வேஷமும் தரித்துக்கொண்டு, அவ்வவ்வேஷங்களுக்குரிய நடனங்கள் நடித்து வருவதை அநேகர் பார்த்திருக்கலாம். புருஷனானவன் பெண்ணின் ஆடைகளையுடுத்து அணிகளைப்பூண்டு அவளுருவத்தைப்போலத் தன் உருவத்தைமாற்றிக்கொண்டு, அப்பெண் பேசுவதைப்போலவே தன்குரலைச்சுருக்கிப்பேசி, அவளுடைய சகல பாவனைகளையும்காட்டிப்பார்ப்பவர்கள் தன்னைப்பெண்ணென்றே நம்பும்படி வேண்டியமுயற்சி செய்கின்றான். இது போலவே புருஷவேஷம் பூண்டபெண்ணும், பார்ப்பவர்களெவர்களும் தன்னைப்புருஷனென்றே நம்பும்படி வேண்டிய முயற்சி செய்து சகல அவயவ அபினயங்களையும் காட்டுகிறாள். இவர்களிருவரும் தத்தமக்குரிய நிச்சய அவயவ அபினயங்களை மாற்றிக்கொண்டு எவ்வளவு காண்பித்தபோதினும், உண்மையை உணர்ந்தவர்களெல்லாம் பெண்வேஷம் பூண்டவன் வாஸ்தவத்தில் புருஷனென்றும், புருஷவேடம் பூண்டவள் வாஸ்தவத்தில் பெண்ணென்றும் தெளிவாயறிந்திருக்கிறார்கள். ஆகையினால் அவர்களிருவரும் பூண்ட வேஷங்களிரண்டும் பொய்யென்பதற்கையமில்லையல்லவா? இது போலவே சில மதவேஷதாரிகளிருக்கின்றார்கள். அவர்களைப்பற்றிய சிலவிஷயங்களை அடியிற்கூறுகின்றோம்:—

ஒவ்வொருமதம் அல்லதுமரபிலுள்ளாரும் அந்தந்தமதம் அல்லது மரபின்கட்டளைகளையும் ஒழுங்குகளையும் கவனித்து, அவைகட்கிணங்க நடந்துவரவேண்டியது அவர்கள் கடமையாயிருக்க, அவைகளை முற்றும் கைவிட்டவர்களாய், அக்கட்டளைகட்கும் ஒழுங்குகட்கும் முரணான காரியங்கள் புரிவதில் முதன்மையானவர்களாயிருந்துகொண்டு, அவ்வம்மதங்கட்கேற்கக் கூறியுள்ள உடையாதிகளை

மாத்திரம் பகல்வேஷக்காரரைப்போலத் தரித்துக்கொண்டு, வாஸ்தவத்தில் அவ்வம்மதக்கட்டளைகட்கும் ஒழுங்குகட்கும் உட்பட்டொழுகும் உண்மையாளர்களெனக் கண்டோர் மதிக்கும்படியிருந்து, சமயம்நேர்ந்தபோது அவ்வம்மதத்தின் கோட்பாடுகளில் நிச்சயபுத்திதங்கட்கிருப்பதுபோல வாய்ஞானம்பேசி வாதுபுரிகின்றவர்கள் பற்பலரிருக்கின்றார்கள். இவ்வாறான பகல்வேஷப்பகடிகள் ஒவ்வொரு மதம்அல்லது மரபிலுமிருக்கிறார்களென்பதுதிண்ணம். உதாரணமாக முஹம்மதியர்களுடைய வேதக்கட்டளைகளில் சில முக்கியமானவை எவையெனில், ஆண்பெண் என்னும் இருதிறத்தாருள், ஒவ்வொருவருக்கும் தக்கவயது வந்தபிறகு, சர்வசக்தியுள்ளவரும் ஏகபரிபூரணருமாயிருக்கின்ற கடவுள் ஒருவருண்டென்று திடபுத்தி கொள்ளவேண்டுமென்பதும், ஒவ்வொருதினமும் ஐந்துவேளைநியமனப்படி தவறுநேராமல் அவரைத்தொழவேண்டுமென்பதும், ரம்லான் மாதத்தில் முப்பதுதினங்களினும் நோன்புநோற்கவேண்டுமென்பதும், இயல்புடையவர்களாயிருந்தால் மக்காயாத்திரை செய்யவேண்டுமென்பதும், தனக்குள்ள சொத்திலிருந்து பிரதிவருஷம், 100-க்கு $2\frac{1}{2}$-வீதம்கழித்து ஏழைகட்குத் தருமஞ்செய்யவேண்டுமென்பதும், வட்டிவாங்குதல் பொய் வஞ்சகம் விபசாரம் லாகிரிவஸ்துபானம் முதலியவற்றைக் கட்டாயம் நீக்கவேண்டுமென்பதும் ஆகிய இவைபோன்ற இன்னும் அனேக கட்டளைகளேயாம்.

இவ்வகைக் கட்டளைகளுள்ள இந்தமதத்தில் சிலர் அக்கட்டளைகளைக் கிஞ்சித்தும் கவனியாதவர்களாய் அசட்டைசெய்து, அவைகட்குநேர்மாறான செய்கைகளைச் செய்துகொண்டுவருவதன்றியும், அடர்ந்த தாடியும் பரந்தபேட்டாவும் (தலைப்பாகை) அகன்ற ஜுப்பாவும் (சொக்காய்) பூண்டுகொண்டு, பார்ப்பவர்கள் இவர்பெரிய ஆலிம்சாயபுஎன்று மதிக்கும்படி பகல்வேஷம்போட்டுக்கொண்டு திரிகிறார்கள். இவர்களை முஹம்மதியரென்று சொல்லலாமா? பொய்வேஷக்காரரென்றே கூறவேண்டுமல்லவா?

இதுபோலவே ஹிந்துக்களிலும் சைவ வைஷ்ணவ முதலிய சமயபேதங்கள் பலவாகவும், அவ்வச்சமயங்கட்குரிய கட்டளைகள் ஒழுங்குகள் பற்பலவாகவும் அவ்வேதங்களில் விதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறிருந்தும் அவ்வம்மதங்களிலுள்ளாரில் உண்மையாளர்கள் சிலர் நீங்க, ஏனையோர்யாவரும், காவியுடைதரித்துக்கொண்டு உருத்திராக்கமாலை போட்டுக்கொண்டு விபூதிபூசிக்கொண்டு சடைவளர்த்துக்



கொண்டு, அச்சைவாகம விதிகட்கு நேர்முரணான கூடாவொழுக்கங்களுடையவர்களாய், பார்த்தோர்யாவரும் தம்மைப் பரமசைவரென்று மதிக்கும்படிக்கும், துவாதசநாமங்களைப்போட்டுக்கொண்டு துளசிமணிமாலையைமாட்டிக்கொண்டு நாலாயிரப்பிரபந்தத்தைப் பாடிக்கொண்டு அவ்வைஷ்ணவவிதிகட்கு நேர்முரணான கூடாவொழுக்கங்களுடையவர்களாய்ப் பார்த்தோர்யாவரும் தம்மைப் பரமவைஷ்ணவரென்றுமதிக்கும்படிக்கும் திரிகின்றார்கள். இன்னுமுள்ள மதஸ்தர்களிலும் பற்பலர் இவ்வாறேயிருக்கின்றார்களென்பதிற் றடையாது?

இவர்கள்யாவரும் உண்மையில் அவ்வம்மார்க்கங்களின் அபிமானிகளல்லரென்றும் பொய்யரென்றும் பகல்வேஷக்காரர்களென்றும் கூறுதற்கு ஆக்ஷேபமென்ன? ஆகையால் ஒவ்வொருவரும் யோசிக்கவேண்டியதென்னவென்றால், இவ்வுலகம் நாம்வசித்தற்குரிய நிலையான வாசஸ்தானமல்ல, வழிப்போக்கர்களிறங்கியிருக்கும் சத்திரத்திற்குச்சமானமானதென்றும், இதில்நாம் இன்னும் சொற்பகாலம்தான் வாழ்ந்திருப்போமென்றும் நிச்சயித்துக்கொண்டு, நம்முடைய ஆயுணாள்வரையில் நமது மதக்கோட்பாடுகளுக்கு மாறுபடாத உண்மையுள்ள விசுவாசிகளாயிருந்து, வேதக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொண்டு, கடவுளின்மீது பக்திவிசுவாசம்வைத்து அவருடைய உண்மை நேசராய் நடந்துவந்தால் அந்தியத்தில் நாம் முத்திவாழ்வடைந்து பேரானந்தமுறுவதற்குச் சந்தேகமில்லை. பொய்யராகவும் வேஷதாரிகளாகவுமிருந்து நமது வாணாளை வீணாளாக்கினால் மரித்தபின்பு, ஐயோ! ஐயோ! என்று அவதிப்படும்படியான அந்தஸ்தோடு சதா நரகவேதனை பட்டுக்கொண்டிருக்கநேரிடும்.

---

## (Benjamin Franklin) பெஞ்ஜமின் பிராங்க்லின் என்னும் மஹாவல்லபருடைய நீதிமொழிகள்.

ஓர் அரசன் தனது குடிகளையழைத்து உங்களுடைய காலத்தில் பத்திலொருபாகத்தை இராஜாங்கவிஷயத்தில் செலவுசெய்யவேண்டுமென்று கட்டளையிடுவானாகில், குடிகளெல்லாம் அவனைக் கொடுங்கோலரசனென்று கூப்பிடுவதிற்றடையுண்டோ? அதுபோலச் சோம்பலானது நம்மில் அநேகருடைய வாழ்நாளின் விசேடபாகத்தைக் கொள்ளைகொண்டுபோகின்றதே! இதற்கு யாரைக்குறைகூறுவது? சோம்பலாற் பற்பலவியாதிகளுற்பத்தியாகி வாணாள்குறைகின்றது. இரும்பாலாகிய சாவிகளேயாயினும் சதா உபயோகப்படுத்திவருவதால் சற்றுதேய்ந்தபோதினும் கருநிறம்நீங்கிப் பளபளப்புள்ள நிறம்

பெற்றுச் சீக்கிரம் உடைந்து போகாமல் அனேகவருஷம் உறுதியாக நல்ல ஸ்திதியிலிருக்கும். உபயோகிக்காமற் சும்மா வைத்திருக்கும் இரும்புசாவிகள் துருப்பிடித்து விகாரரூபங்கொண்டு சீக்கிரம் உடைந்து கெட்டுப்போகும். இதுபோல் சதாமுயற்சியுடன் உழைத்துவருபவர்களுடையசரீரத்தில் இரத்தவோட்டம்திகரித்துச் சரீரத்திற்கு வலுவையுண்டாக்கி யாதொருவியாதியுமின்றி நெடுநாள்வாழச்செய்கின்றது. சரீரமுயற்சியின்றிச் சோம்பலாற் காலத்தைக்கழிப்பவர்களுடைய சரீரத்தில் இரத்தவோட்டம் கெட்டுப்போய்ப் பற்பலவியாதிகளை விளைவித்துச் சீக்கிரம் மரணத்திற்கேதுவாக்கிவிடுகின்றது. இரும்பைத் துருதின்றுவிடுவதுபோலச் சோம்பல் வாணாளைத் தின்றுவிடுகின்றது. நெடுநாள் ஜீவிக்கவேண்டுமென்று நீ எண்ணினால் உன்காலத்தைச்சோம்பலால்போக்காதே. ஏனென்றால், உனது வாணாள் காலத்தால்தான் செய்யப்பட்டிருக்கின்றது. தூங்கின நரி இரை இழந்தது என்னும் பழமொழியை மறந்துவிட்டு எவ்வளவு நேரம் தூக்கத்திற்போக்கிவிடுகின்றோம், சமாதிக்குழியில் தூக்கத்திற்கு வேண்டிய சாவகாசமிருக்கின்றது. இப்போதேன் காலத்தை விரயஞ்செய்யவேண்டும். காலமானது மற்றெல்லாவஸ்துவைப்பார்க்கினும் மதிப்பேறியதாயிருப்பதால் விருதாவில் செலவு செய்த காலத்தைப்பற்றி நாம் எவ்வளவு துக்கிக்கவேண்டும். சென்று போன காலம் திரும்ப வரப்போகிறதில்லை, போதும் என்று சொல்லப்பட்டகாலம் எப்போதும் மிகச்சொற்பமாகவேயிருக்கும். ஆகையால் சோம்பலைத்தவிர்த்துச் சுருசுருப்பாய் வேலைசெய்யவேண்டும். சிறுகச்சிறுக மலையையும் பிளக்கலாம் என்பதுபோல, சிறுகச்சிறுகத் தொடர்ச்சியாய் வேலைசெய்துவந்தால் பெருத்தலாபத்தையடையலாம். சோம்பேறிக்குச் சொற்பகாரியமும் கஷ்டமாய்த்தோற்றும். முயற்சியுடையவனுக்குக் கடுமையானவேலையும் சுளுவாய்த்தோற்றும். படுக்கையிலிருந்து நேரம்சென்றெழுந்திருப்பவன் நாள்முழுவதும் வேலைசெய்தும் தன்வேலையைப் பூர்த்தியாய் முடிக்கமாட்டான். ஏனென்றால் சோம்பற்றனம் மிக மெதுவாகவே நடக்கும். ஆகையால் தரித்திரமும் அவனைச் சூழ்ந்துகொள்வதற்கேதுவாகும். உன்னுடையவேலையை நீவெருட்டு. அது உன்னைவெருட்டுவதற்கிடங்கொடாதே. வெள்ளெனப்படுத்து விடியுமுன் எழுந்திருந்தால் தேகாரோக்கியமும் புத்திதீட்சணியமும் அஷ்ட ஐஸ்வரியமும் உண்டாகும். நாம் முயற்சியுடையவர்களாயிருந்தால் நம்காலத்தை நல்லகாலமாக்கிக்கொள்ளலாம். முயற்சியுடையோனிகழ்ச்சியடை



யான், சோம்பலாளன் தேம்பித்திரிவான், கஷ்டமில்லாமல் இலாபமில்லை. என்னுடைய கைகளே! எனக்கு ஒத்தாசைசெய்யுங்கள், எனக்கு நிலமில்லை, நிலமிருந்தாலும் அவைகளுக்கு வரி விதிக்கப்பட்டுப்போய்விட்டது, வியாபாரம்செய்பவன் சொத்துடையவனாயிருக்கிறான். ஒருதொழிலைச்செய்கிறவன் கவுரவமும் இலாபமுமுள்ள உத்தியோகத்தை வகிக்கிறான். ஆகையினால் சொத்திருக்கிறது சாப்பிட்டுக்கொண்டு தூங்கியிருக்கலாமென்றெண்ணாமல் வியாபாரமாவது அல்லது வேறெந்தத்தொழிலாவது செய், நீ சவுக்கியமாய் வாழ்ந்துகொண்டிருப்பாய். நாம் முயற்சியுடையோராயிருந்தால் பட்டினியால் வருந்தவேண்டியநிமித்தமில்லை. வேலைசெய்பவன்வீட்டில் பசிவந்து எட்டிப்பார்த்தாலும் உள்ளே நுழைவதற்குத் தைரியங்கொள்ளாது. முயற்சியுள்ளவன் கடனைத்தீர்க்கிறான். சோம்பேறி கடனை அதிகப்படுத்திக்கொள்ளுகிறான். உன் தாய்தந்தையர் உனக்கு யாதொருசொத்தும் சேகரித்துவைக்காமற்போனால்தானென்ன? புதையல் அகப்படாவிட்டால்தானென்ன? சுருசுருப்பு அதிர்ஷ்டத்தின் தாயாயிருக்கிறது. சுருசுருப்புள்ளவர்கட்கே கடவுள் சகலசம்பத்தையும் கொடுக்கின்றார், சோம்பேறிகள் தூங்கட்டும், நீ மெள்ளனவெழுந்து ஆழமாயுழுது பயிர்செய். அப்போது நீ வைத்துக்கொள்வதற்கும் விற்பதற்கும் தானியம் கிடைக்கும். நாளைக்கு எத்தனை தடைகள்நேருமோ உனக்குத்தெரியாதாகையால், இன்றைக்கே எல்லாவேலைகளையும் முடித்துக்கொள். இன்றைக்கு உன்னால் செய்யக்கூடிய வேலைகளை நாளைக்கென்று வைக்காதே. நீ ஒரு எஜமானனுக்குள் வேலைக்காரனாயிருந்து, எஜமானனுடைய வேலையைப்பார்க்காமல் காலங்கழிப்பதை எஜமானன் பார்த்துவிட்டால் நீ வெட்கமடைவாயல்லவா? நீயே எஜமானனும் வேலைக்காரனுமாயிருந்துகொள். இப்போது சோம்பலாய்க் காலங்கழிப்பதற்கு நீ வெட்கமடையவேண்டாமா? உனக்காகவும் உன்குடும்பத்துக்காகவும் உன் தேசத்துக்காகவும் உன் அரசனுக்காகவும் எவ்வளவோ வேலைசெய்யவேண்டும். ஆகையால், இடையைவரிந்துகட்டு, தொழிற்குரிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வேலைக்குப்போ. கையுறைபோட்ட பூனை எலி பிடிக்காது. வேலைசெய்யச் சக்தியற்றவனாயிருந்தால் விடாமுயற்சியாய்ச் சிறுகச்சிறுகச்செய், அப்போது நல்ல அனுகூலமுண்டாகும். தொடர்ச்சியாயோடும் சிறுதாரைஜலம் கருங்கல்லையும் கரைத்துவிடும். பொறுமையினாலும் விடாமுயற்சியினாலும் சுண்டெலியானது கப்பல்வடத்தையும் கடித்துத்தகர்த்துவிட்டது. சிறுவெட்டு பருத்த கரங்

களையும் விழப்பண்ணும். சிறு உளியால் பெருத்தகற்களையும் தகர்க்கலாம்.

என்று பெஞ்ஜமின் பிராங்க்லின் என்னும் மஹாசாஸ்திரி பேசி வருகிறார். இவர் ஆதியில் ஏழையாயிருந்து தன் சுயமுயற்சியினாலேயே கல்விகற்று அனேகசாஸ்திரங்களில் விற்பன்னராகி, அநேக நூதன விஷயங்களைக்கண்டுபிடித்து அதிக செல்வவானாகவும் கீர்த்திவானாகவும் கவுரவவானாகவுமிருந்தார். இவ்வுபதேசங்களொவ்வொன்றையும் நாம் செவ்வையாய்க்கவனித்து அதன்படி நடந்தால் நாமும் கவுரவமும் கீர்த்தியும் ஐஸ்வரியமும் அடையலாமென்பதற்குச் சந்தேகமில்லை.

## பாகசாஸ்திரம்.

### 20. கோதுமைநொய்ச்சாதம்.

இதற்கு மிகப்பெரிதும் மிகச்சிறிதுமல்லாத நடுத்தரமான கோதுமை நொய்யையே உபயோகிக்கவேண்டும். இந்தச்சாதம்தாமதமாய் ஜீரணமாகும்குணமுடையது. மிதமாய்ப்பிரதி தினம் புசித்துவந்தால் சரீரத்திற்கு வலுவைக்கொடுக்கும். ஸ்தூல சரீரமுடையவர்களுக்கும் மதுமேகரோகிகளுக்கும் இது மிக்கபிரயோஜனத்தைத்தரும். இதைச்செய்யும் பாகம் எப்படியென்றால்:—

இரண்டுபடி ஜலம் கொள்ளுகிற ஒருதவலையில் ஒருபடிகுளிர்ந்த ஜலம் விட்டு அடுப்பின்மேல்வைத்துக்காய்ச்சி, ஜலம்கொதிக்கத்தொடங்கியவுடனே, ஒன்றரைப்பலம் நெய்யை அந்தஜலத்தில்விட்டு, பிறகு அரைப்படி கோதுமைநொய்யை அதிற்கொட்டிக் கரண்டிக்காம்பினாற் கிளறிக்கொண்டிருந்து, நொய்முக்காற்பாகம் வெந்தபதம் பார்த்து அடுப்பைவிட்டிறக்கி, மற்றொருமுறை கிளறி ஐந்துநிமிஷம்வரையில் புகையில்லாத நெருப்புத்தணலின்மேல் மூடிவைத்து, அதன்பின் எடுத்து உபயோகிக்கவேண்டும்.

### 21. குழம்புக்கு உபயோகிக்கும் கலவை.

மிளகாய் பலம் 2. உளுத்தம்பருப்பு பலம் 5½. கடுகு பலம்-½ கொத்துமல்லிவிதை பலம்5½ வெந்தயம் பலம்2. சீரகம் பலம் 1. தேய்த்த எள் பலம் - 5½ கொப்பரைத்தேங்காய்த் திருகல் பலம்-3. ஆகிய இவைகளில் மிளகாயைமட்டும் கொஞ்சம் நல்லெண்ணெய்விட்டு வறுத்துக்கொண்டு, கொப்பரைத்தேங்காய் தவிர, மற்ற அறுதினுசுகளையும் தனித்தனியே எண்ணெய்விடாமல் வறுத்தெடுத்து, இவ்வாறு வறுத்தசாமான்களையெல்லாம் ஒன்றாய்க்கலந்து பொடிசெய்து, அப்பொடியுடன் கொப்பரைத்தேங்காய்த் திருகலையும்சேர்த்து, மறுபடியும் கொஞ்சம் இடித்துவைத்துக்கொண்டு, குழம்புக்கலவை கூட்டவேண்டியவைகட்கெல்லாம் இந்தப்பொடியை உபயோகித்துவரவேண்டும்.



### 22. தாளிதம்

பின்னாற்கூறப்படும் தாளித அன்னங்களுக்கும் காய்கறி பதார்த்தங்களுக்கும் முக்கியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய தாளித முறையாவது:—

நெய்அல்லது நல்லெண்ணெய் ஒருபாத்திரத்தில்விட்டு அடுப்பேற்றி, அதில்சொறசொறவென்ற சப்தம்நின்றவுடனே, மிளகாய்க்குக் காம்பைக் கிள்ளிவிட்டுச் சிறு துண்டுகளாக நறுக்கிச் செவ்வனே காய்ந்திருக்கும் நெய் அல்லது எண்ணெயிற்போட்டு, மிளகாய் பாதிவேக்காடானவுடனே உளுத்தம்பருப்பைப்போட்டு, இதுவும் கொஞ்சம் சிவந்ததருணத்தில், கடுகை அத்துடன் போட்டுக் கிளறி, சடபடவென்கிற சப்தம் பூரணமாய்நின்று போகும்வரையில் அடுப்பில் வைத்திருந்து, பிறகுஎடுத்து எந்தபதார்த்தத்திற்குப் போடவேண்டுமோ அதிற்கொட்டிச் செவ்வனே கலந்துகொள்ளவேண்டும். சிலசமயம் தாளிதத்துடன் பெருங்காயம் கருவேப்பிலை முதலியவை போடவேண்டுமானால், கடுகுபோட்டுச் சப்தம் நின்றபிறகு அவைகளைப்போடலாம்.

### 23. கத்திரிக்காய்ப் புளிக்குழம்பு.

இளசாய்ப்பார்த்தெடுத்த 12-பலம் கத்திரிக்காயைக் காம்பு முதலியவைபோக்கித் துண்டுதுண்டாய் நறுக்கி, ஒருபடிஜலம்கொள்ளும் ஒருபாத்திரத்தில் காற்படிஜலம்விட்டு அடுப்பிலேற்றிக் கொதிக்கவைத்து, நறுக்கிவைத்திருக்கும் கத்திரிக்காய்த்துண்டுகளை அதிற்போட்டு, மேலொருபாத்திரத்தால்மூடி, காய் அரைவேக்காடாய் வெந்தபிறகு, நல்லஜலம் காற்படி புளி பலம்1½ ஆகிய இந்தஇரண்டையும் ஓர்மண்பாத்திரம் அல்லது ஈயம்பூசின பாத்திரத்திற் போட்டுச் செவ்வனேகரைத்து, அப்புளியிலுள்ள கோது கொட்டை முதலியவைகளை நீக்கிவிட்டு,ஒருபலம் 21 - நெ. குழம்புக்கலவையையும் முக்காலேயரைக்கால் பலம் உப்பையும் கரைத்த புளியிற்சேர்த்து, வெந்துகொண்டிருக்கும் கத்திரிக்காயிற் கொட்டிக் கிளறவேண்டும்.உடனே கறிமஞ்சட்பொடி வீசம் ரூபாயெடை கொதித்துக் கொண்டிருக்கும் குழம்பிற்போட்டு, குழம்பு நன்றாய்க்கொதித்துக் கத்திரிக்காய்முழுவதும் வெந்து ஜலமும் கொஞ்சம் சுண்டியபிறகு, இன்னும்

ஜலம் அதிகமாயிருந்தால், வறுத்த அரிசிமா பலம் ½, வீசம்படி ஜலத்திற்கரைத்துக் குழம்பில்வார்த்துக் கிளறவேண்டும். அதன்பின் நெய் பலம் ½-மிளகாய் பலம் ⅛-கடுகு பலம் ⅛-ஆகிய இவைகளை 22-நெ. தாளிதமுறைப்படி தயார்செய்து குழம்பிற்கொட்டவேண்டும். வேண்டுமானால் ஒரு ரூபாயெடை ஜலத்தில் இரண்டுகுன்றியெடை பெருங்காயத்தைக்கரைத்து அக்குழம்பிற்சேர்க்கலாம். இதுபோலவே ஏனைய காய்கிழங்கு வகைகளின் குழம்புகளைச்செய்துகொள்ளவும்.

## கைத்தொழில்.

### 24. Soda water.

### ஸோடாவாட்டர் செய்யும் முறை.

இரண்டு டம்ளர்களிற் குளிர்ந்தஜலம் நிறைத்துக்கொண்டு, அவற்றுள் ஒன்றில் அரைத்தேக்கரண்டியளவு கார்பொனெட்ஸோடாவும் (Corbonate of Soda) மற்றொன்றில் அதேயளவு டார்டாரிக் ஆஸிட்டும் (Tartaric acid) போட்டு இரண்டும் தனித்தனிகரைந்தபின், இரண்டாவது டம்ளரிலிருக்கும் ஜலத்தை முதல் டம்ளரில் ஊற்ற, உடனே அந்தஜலத்தில் வாயுவின் சக்தியால் ஓர்வகை கொந்தளிப்புண்டாகும். அப்போது யாதொரு தாமதமுமின்றிக்குடித்துவிடவும். ஷாப்புகளிலிருக்கும் ஸோடா வாட்டரின் குணங்களெல்லாம் இந்த ஜலத்திற்குண்டு. இவ்வாறு நாமே செய்வதனால் புட்டி 1-க்கு இரண்டணா கிரயம் கொடுத்து வாங்கும் ஸோடாவாட்டர் ஒருபைசா கிரயத்தோடு முடியும்.

### 25. வேறொருவிதம்.

மேற்கூறிய ஸோடாவையும் டார்டாரிக் ஆஸிட்டையும் ஒரேயளவாக எடுத்துக்கொண்டு, ஈரமற்றதும் சுத்தமுள்ளதுமான கல்வத்திற்போட்டு நன்றாய்ப்பொடிசெய்து ஒருபுட்டியில்கொட்டிக் கார்க்பதித்துவைத்துக்கொள்ளவும். ஸோடாவாட்டர் வேண்டும்போது இந்ததூளிற் கொஞ்சம் எடுத்து ஒரு டம்ளர் ஜலத்திற்போட்டவுடனே கொந்தளிப்புண்டாகும். அது அடங்குமுன் ஜலத்தைப்பானஞ்செய்யவும். இதுவும்மேற்கூறிய குணத்தையேகொடுக்கும்.

### 26. துப்பாக்கிமருந்து செய்யும்விதம்.

கால் அவுன்ஸ் கட்டைக்கரியும் அதே எடைக் கந்தகமும் எடுத்து ஒரு கல்வத்திற்போட்டு நன்றாய் அரைத்துப் பொடிசெய்து, வேறேகல்வத்தில் அரைத்துப் பொடிசெய்த ஒன்றேகால் அவுன்ஸ் பெட்டிலுப்பும் கொஞ்சம் ஜலமும் அத்துடன் கலந்து லகுவால் நன்



றாய்ப்பிசைந்து நிழலில் உலரவைத்து விடவும். உலர்ந்தபின் அதை மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் மரக்கட்டையால் அரைத்துப்பொடிசெய்து, சிறுகண்ணுடைய ஜல்லடையொன்றிற் கொட்டியரித்து, பத்திரமாய் எடுத்துவைத்துக்கொண்டு உபயோகித்துக்கொள்ளவும். இது அபாயகரமான தொழிலாகலின் வெகு ஜாக்கிரதையாய்ச் செய்யவேண்டும்.

## ஜாலவித்தை.

### 27. செத்தபிராணிக்கு உயிருண்டாக்க.

இச்செய்கை சர்வசிருஷ்டிகராகிய கடவுளுக்கேயன்றி வேறொருவருக்கும் ஏலாது. ஆனால்இவ்விடத்தில் விநோதவிநோதத்தொழிலைக்கச் செய்வதுபோல் ஒருவேடிக்கை காட்டுகின்றோம். அதாவது-இந்திரகோபப்பூச்சியைச் செவ்வனே காயவைத்துத் தூள்செய்து கீரைப்பாத்தியில் விதைவிதைப்பதுபோல ஷை தூளைப் பாத்தியில் தெளித்துத் தண்ணீர்வார்த்து வைக்கோலால் மூடிவைக்கவும், இவ்வாறே ஷை பாத்திக்கு மூன்று தினங்கள் வரையில் தண்ணீர்தெளித்துவந்தால், நிலத்தின் தன்மைக்கேற்கச் சில நிலத்தில் மறுநாளிலும் சில நிலத்தில் இரண்டாம்நாளிலும் சில நிலத்தில் மூன்றாம்நாளிலும் ஷை இந்திரகோபப்பூச்சிகள் அநேகம் உயிருடன் உற்பத்தியாகும்.

### பால் உதிரமாக.

சில இந்திரகோபப்பூச்சியைப் புல்லுக்குள் வைத்துப் பசுவுக்குத் தின்னக்கொடுத்து, அப்பசு தண்ணீர்குடிக்கும் தொட்டியிலும் ஷை பூச்சியைத்தூள்செய்து கலக்கிவிட்டால், மறுநாள்முதல் அப்பசுவின்பால் இரத்தம்போன்றிருக்கும். இதற்கு மாற்று எப்படியென்றால், அப்பசு தண்ணீர்குடிக்கும் தொட்டியைச் செவ்வனே கழுவிச் சுத்திசெய்து, அதில் நல்ல தண்ணீர் வார்த்துக் கொஞ்சம் சுக்குத்தூளைப்போட்டுக்கலக்கி அத்தண்ணீரைக் குடிப்பாட்டிக் கட்டிவைக்க இரண்டு மூன்று வேளைகளிற் பால் வெண்மைநிறமாய் மாறிவிடும்.

### 29. பழத்தையறுத்து அதில் உதிரம்காட்ட.

ஒரு எலுமிச்சம் பழத்தில் ஊசிபுகும்படியான துளைசெய்து, அத்துளையினுள்ளே கொஞ்சம் மஜெண்டர் பவுடரைச் செலுத்தி, ஷை துளை வாயை மெழுகினால் மூடி மடியில் வைத்துக்கொண்டு, வேறு எலுமிச்சம்பழத்தை வாங்கித் தந்திரமாய் உள்ளேவைத்துவிட்டு, முன்பழத்தைக்கையிலெடுத்துக்கொண்டு, ஊசி குத்தியிருக்கிற முனையில் கத்தியினாலறுக்க, அதினின்றும் உதிரம் சொரியும்.

### 26. சீசாவுக்குள் முட்டையைவிட.

ஒரு முட்டையைச் சீர்மைக்காடியில் மூன்று நாள் ஊறவைத்தெடுத்துப் பார்க்க, கொள கொளவென்று துவண்டுபோகும். அதை மெல்லியதாய் நீட்டிச் சீசாவுக்குட் செலுத்த உள்ளேபோகும். பிறகு அதில் ஜலம் வார்த்தால் அந்த முட்டை கெட்டியாய்விடும். பார்ப்போர்கள் இச்சீசாவில் முட்டை எவ்வாறு சென்றது என்று ஆச்சரியப்படுவார்கள்.

## கல்வி.

(16 - வது பக்கத்தொடர்ச்சி.)

இந்நாற்பயன்களையே முன்னர் இருபகுப்பாக்கி இகானந்தம் பரானந்தமெனக் கூறியுள்ளோம். அத்தகைய இருவகையானந்தங்களையுமடையச்செய்வதும் அதற்குரிய எவ்வகைவித்தைகளையும் விளக்குவதும் கல்வியேயாயின், இக்கல்வியின்றி எவ்வித்தையைக்கற்று எப்பயனை எக்காலத்தில் எவ்வாற்றால் எவரால் அடையக்கூடும். இது குறித்தே அறமாதிய நாற்பயனையும் கொடுக்கத்தக்கதும், நற்புகழ் வாய்க்கச்செய்வதும், ஓர் துயரம்வந்தகாலத்து அதைநிவாரணிக்கத்தக்கதும் கல்வியேயாகலின், அதைப்பார்க்கினும் மானிடர்க்கு உற்றதுணையாயுள்ளது வேறொன்றின்றென்னும் கருத்தையமைத்து,

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூஉங் கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை" என ஆன்றோர் கூறியுள்ளார்.

முற்கூறிய அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கனுள் ஒன்றற்கொன்றியைபாயிருப்பதை ஈண்டுவிளக்குதும். அஃதெவ்வாறெனின், அறம்புரிதலாற் பொருள்விர்த்தியாதலும், பொருணிறைதலால் இன்பம்பூரணமாதலும், இன்பம் பூரணமாதலே வீட்டின்பயனாதலும் சுருதி யுக்தி அனுபவமென்னும் மூன்றற்கும் ஒத்திருப்பதைக்காண்க. இவ்வாறாகிய இந்நான்கும் கல்வியானன்றி ஏனையெவற்றானும் எவர்க்கும் எய்தாது. ஆயின்கல்வியில்லார்க்குப் பொருள்விர்த்தியாதலும், அப்பொருளால் அறம் வளர்தலும் இன்பம் விருத்தியாதலும் இன்றேயெனின், கல்வியில்லார்க்குப் பொருள்விர்த்தியாயினும், அப்பொருள் பேடிகையிற்கிடைத்த வாள்போன்று தன்க்குரிய பெரும் பிரயோசனத்தையும் சிறப்பையும் அடையமாட்டாது. அவ்வாறடையாதபோது அதற்குப் பொருளென்னும் பெயருங்கூறப்படாது, அதனால் அப்பொருளையுடையோனடையும்



இன்பமும் பூரணஇன்பமாகாது, இன்பம் பூரணமாகாவிடத்து அதனை முத்தியின்பம்போன்று பெருமிதத்துடன் கூறவேலாது. இதனானன்றே மேற்கூறியவாறு கல்வியின் பயனாக நாம் அடையும் அறமாதிநான்குமே மேம்பாடுடைத்து.

அன்றியும், உலகத்துள்ள சராசரவுயிர்களுக்குள் ஓரறிவுமுதல் நாலறிவுவரையிலுள்ள அசரவுயிர்கள் நீங்கச் சரவுயிர்களாய் ஐயறிவுடன் பகுத்தறிவுங்கூடிய மானிடர்கள் இகலோகபாக்கியமாகப் பெறத்தக்கனவும் பரலோகபாக்கியத்திற்குக் காரணமாயுள்ளனவும் கல்விச்செல்வம் பொருட்செல்வம் என்னும்இரண்டுமே. இவ்விரண்டனுள் கல்விச்செல்வமே பொருட்செல்வத்தையடையவும் அதனைவிர்த்தியாக்கவும் தக்கவழியிற் பிரயோசனப்படுத்தவும் ஏற்றகருவியாகும். இத்தகைய செல்வங்களிரண்டையுமே செல்வங்களென்று பெரியோர்கள் வரையறுத்திருக்கின்றனர். இதனை,

"கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படு - மில்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்" என்னும் ஆன்றோர்வாக்கானுமறிக.

(இன்னும் வரும்)

## விநோதார்த்தப் பதங்கள்.

"ஏன் அம்மா ஒருநாழிகையாய் என்னை உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கின்றாய்." என்றொராடவன் ஓர்ஸ்திரீயைக் கேட்டான். அதற்குஅவள் "தங்களைப்பார்த்தால் என்கணவன்போலிருந்தது, ஆகையாற்றான் அப்படிபார்த்தேன், கோபிக்கவேண்டாம்பிரபு." என்று சொல்லிப்போய்விட்டாள்.

"உன்மனைவி உன்னை எவ்விதமாய்க்கோபித்தபோதினும் நீ என் பதில் சொல்லுகிறதில்லை." என்று ஒருவன் மற்றொருவனைக்கேட்டபோது, அவன், "போ போ பைத்தியக்காரா! என்மனைவிக்கு நான் பயப்பட்ட ஆசாமியா? அவள் கொட்டத்தை ஒருநொடியில் அடக்கிவிடுவேன். ஆனால் இடிபோன்ற அவளுடையதொனிக்கல்லவோ நான் அச்சமுற்றிருக்கின்றேன்." என்றான்.

"இந்தவருஷத்தில் விவாகம் அதிகமாய் நடந்திருக்கிறது." என்று ஒருவன் மற்றொருவனுடன் கூறியபோது, அருகிலிருந்த வேறொருவன், "ஆம் புருஷர்களைவிட ஸ்திரீகளுக்குத்தான் அதிகவிவாகம் நடந்திருக்கிறது." என்றான்.

"எல்லோரும் தருமம்செய்வது புண்ணியம்" என்று ஒருவர்பிரசங்கஞ்செய்தனர். அதைக்கேட்ட சோம்பேறிப்பையனொருவன்

"ஆ! ஆ! இவர்மிகவும் நல்லபிரசங்கி, கடவுள் இவருக்குப் பூரணாயுளைக்கொடுத்து, உலகமெங்குமலைந்து திரிந்துகொண்டிருக்கச் செய்வாராக" என்று ஆசீர்வதித்து, "இதோ நான் யாசிப்பதற்கு இப்போதே புறப்படுகிறேன்" என்று சொல்லிப்போய்விட்டான்.

புருஷனும் பெண்சாதியும் எந்நேரம் சச்சரவுசெய்துகொண்டிருந்த ஓர்வீட்டிற்கு ஒருவன்வந்து, அந்த புருஷனைப்பார்த்து "நீங்களிருவரும் எந்நேரமும் என் சச்சரவுசெய்கின்றீர்கள், ஒருமனதாயிருக்கலாகாதா?" என்றனன். அதுகேட்ட அப்புருஷன், "ஐயோ! எங்களிருவர்க்கும் ஒரேமனதிருப்பதனாற்றானே தினந்தோறும் சச்சரவாயிருக்கின்றது. அஃதெப்படியென்றால், அவள்பேரில் அதிகாரம் செலுத்த எனக்கிஷ்டம் என்பேரில் அதிகாரம் செலுத்த அவளுக்கிஷ்டம்." என்றான்.

## வாணாள்யாத்திரை.

ஒரு தேசத்திலிருந்து மற்றொருதேசத்திற்கு யாத்திரை செய்யும் ஒருவன், ஏதோ ஓர் விஷயத்தைத் தன் கருத்தில் உன்னியே அவ்யாத்திரையைத் தொடங்குவானேயொழிய ஒருகாரணமுமின்றி யாத்திரை தொடங்கவேமாட்டான். அக்காரணமும் தனக்கு நயமுள்ளதாகவே உத்தேசிக்கப்பட்டிருக்குமேயல்லது நஷ்டம்விளையத்தக்ககாரணமாயிராது. இதுபோல் நாம் நமதுவாணாள் யாத்திரையை நடத்திவருவதும் முடிவில் ஓர் பிரயோஜனத்தைக் கருதியேயல்லது நிஷ்பிரயோஜனத்திற்கல்ல. தேசாந்தரயாத்திரை செய்யத்தொடங்குவோன் வழியில் தனக்குவேண்டிய ஆகாராதிகளும் ஆயுதவகைகளும் தட்டுமுட்டுசாமான்களும் ஆடைமுதலியவும் குறைவின்றிச்சேகரித்துக்கொண்டு யாத்திரை போகத்தக்க சுலபமார்க்கங்களையும் விசாரித்துத்தெளிந்து, சகல்முஸ்திப்புடனேபோய்த் தான் நினைத்தகாரியத்தைத் திருப்தியாய் முடித்துக்கொண்டு வருவதற்காகவே புறப்படுகின்றான். இதுபோலவே நாமும் நம்முடைய வாணாள்யாத்திரையை ஆரம்பிக்கும்போதே நமது அபேட்சையைச் சித்திசெய்துகொள்வதற்காகவேண்டிய அநுகூலமான சகல முஸ்திப்புகளையும் சேகரித்துக்கொண்டு ஆயத்தப்படவேண்டிய தவசியமல்லவா! நமது அந்தியத்தின் கருத்து என்னவென்றும், அதைச்சயிப்பதற்குப் போகும் பிரயாணத்திற்காக எவ்வகைச்சாமான்களைச் சித்தப்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும், எவ்விதமாய் நாம் பிரயாணம் செய்யவேண்டுமென்றும் கவனிப்போம். (இன்னும் வரும்.)

கடவுள் துணை.

# விநோத விசித்திரப் பத்திரிகை.

1900-ம் ௵

OFFICE OF THE REGISTRAR 10 APR 1900 MADRAS

புஸ்தகம் 1.] ஏப்ரல்௴ 1௳ ஞாயிற்றுக்கிழமை

## கடவுள் உண்டு.

(38-ம் பக்கத் தொடர்ச்சி.)

கர்த்தாவின்றிக் காரியம் நடவாதென்று முன்னமே நிரூபித்திருக்கிறோம். இன்னும் அதைப்பற்றிய சில திருஷ்டாந்தங்களை எடுத்துக்கூறுவோம். மூடனாற் செய்யப்பட்ட எந்தச்செய்கையும் யாவர்க்கும் அருவருக்கத் தக்கதாகவே இருக்கும். உதாரணமாக மூடனாகிய ஓர் கொற்றன் கட்டியவீடு இலக்ஷணப்பழுதுள்ளதாகவும் சவுகரியக்கேடுள்ளதாகவுமிருக்கும். அத்தொழிலிற்றேர்ச்சியுள்ள ஓர் கொற்றன் கட்டியவீடோ மிக அலங்காரமுள்ளதாகவும் பார்ப்பதற்கு மனோரம்மியமானதாகவும் சுகாதாரமுள்ளதாகவும் இருக்கும். இன்னும் சிற்பசாஸ்திரமும் தேர்ந்தவனாயிருக்கின், சாமான்ய புத்தியினால் நிதானிக்கக்கூடாத அவ்வளவு விசித்திரம் அமைந்ததாயிருக்கும். இது யாவர்க்கும் நிராக்ஷேபமான விஷயமல்லவா? 2-வது சஞ்சிகையின் 1-வது 2-வது படங்களைக் கவனிப்போம். நமது தேகத்திற்கு அஸ்திவாரமாய் இயற்றப்பட்டுள்ள எலும்புகள் எவ்வளவு ஒழுங்காய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. மிருதுவான தொழில்களுக்குரிய பாகங்கட்கு மிருதுவான எலும்புகளும், கடினமான தொழில்களுக்குரிய பாகங்கட்குக் கடினமான எலும்புகளும், உள்ளுறுப்புக்கட்குச் சேதம் வராமற் காக்கவேண்டிய பாகங்கட்கு, அவைக்குத்தக்க பக்குவமான கூடுகளும், கணுக்களின் இணைப்புகளும், எலும்புகளின் கோணங்களும், (பின்னால் விவரித்துக் கூறுவதுபோன்று) இவ்வெலும்புகள் பொருந்

யப்பட்டிருக்கும் தசைகளின் அலங்காரங்களும், அவைகளின் வரிச்சல்களும், அவைகட்குப் போஷணைத் தாரைகளாகிய நரம்புகள் வேயப்பட்டிருக்கும் உபாயங்களும், இவைகளை மூடிக்கொண்டிருக்கும் ஜவ்வுகளின் ஒழுங்குகளும், இவைகளனைத்தையும் மூடிக்கொண்டு அழகான ரூபமாகக் காண்பித்தற்குரிய மேற்றோலின் அழகும், அவற்றினின்றும் கழிவான பதார்த்தங்கள் வெளிப்படுவதற்காக எண்ணிறந்த துவாரங்களாகிய மயிர்க்கால்களும், ஆகிய இத்தனைபேதங்களானவஸ்துக்கள்கூடிய இந்த தேகமென்னும் கூட்டிற்குள், விலைமதிப்பற்ற மாணிக்கம்போன்றதாய் விளங்கும் ஆன்மா என்னும் ஓர் அபுரூபப்பொருளும் அமைந்திருப்பதை நாம் ஒவ்வொருவரும் சற்று சாவகாசமாயிருந்து விசேட கவனத்துடன் ஆராய்ந்து பார்ப்போமானால் இந்த அற்புதச்செய்கை எவ்விதமாக நமக்குத் தோற்றுமென்பது அவரவர்கள் அனுபவத்தில் விளங்கும். (இன்னும் வரும்).

## வைத்தியம்.

(40 - வது பக்கத்தொடர்ச்சி).

எலும்புகள் சுகமுள்ளவைகளாயிருக்கும்படி மனிதர்கள் சுறுசுறுப்பாய் ஓடியுலாவி வேலைசெய்யவேண்டும். வேலைசெய்வதனால் அவைகள் அதிகமாய்ப்பருத்து உரத்துவளர்கின்றன. வேலைசெய்யாமல் சோம்பலாளராயிருப்பவர்களுடைய எலும்புகள் பலஹீனமடைகின்றன. கைகால்களையசைத்து வேலைசெய்வதனாலேயே, அவைகளிலுள்ள எலும்புக்குரிய பதார்த்தங்கள் சரியான பிரமாணமாய்க்கூடித்திரளும். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வலிவுக்குமேற்பட வேலைசெய்யலாகாது. பிள்ளைகளுடைய எலும்பிலே சுண்ணாம்பைப்பார்க்கினும் ஜிலட்டின் அதிகமாயிருப்பதனாலே அவைபலக்குறைவுள்ளவைகளாயிருக்கின்றன. பிள்ளைகள் இலேசானவேலைகள் மாத்திரம் செய்யக்கூடியவர்கள். அவர்களுடைய இளமையான எலும்புகள் பாரமானவேலைகள் செய்வதற்கேற்றவைகளல்ல. வயோதிகப்பருவமடைந்த மனிதனுடைய எலும்பிலே ஜிலட்டினைவிடச் சுண்ணாம்பு அதிகம். இது அவைகளை இலகுவாய்த்தெறிக்கவும் வேலைசெய்வதற்குத்தகாதவைகளாகவும் செய்கிறது. யௌவனமுடையவர்களின் எலும்புகளுக்குப் பெரும்பாலும் மோசம்வாராமல் வேண்டியவரையில் வலிவுகொடுக்கத்தக்கஅளவு ஜிலட்டினும் சுண்ணாம்பும் எலும்புகளிலே சேர்ந்திருக்கின்றன. ஆகையால் அவர்கள் எவ்வளவுபாரமான வேலைகளையும் செய்யக்கூடியவர்களாயிருக்கின்றார்கள்.

(இன்னும்வரும்.)



## நாடிப்பரீட்சை.

நாடிப்பரீட்சையில் தெரிந்துகொள்ளவேண்டிய சில முக்கிய விஷயங்களை அடியில் விவரிக்கின்றோம். அதாவது:—

நாடிபார்க்கும் ஸ்தானங்கள் - நாடியைப்பிடித்துப் பார்க்கும் விதம் - சரீரத்தின் பேதாபேதங்கள் - நாடிபார்க்கும்போது நோயாளி இருக்கவேண்டிய நிலைமை முதலியவைகளே.

இவற்றுள்நாடிபார்க்கும் ஸ்தானங்களாவன:—கைகளிலும் கண்டத்திலும் கன்னச்சுழிகளிலும் காற்பெருவிரலுக்குமேலும் கணுக்காலின் உட்புறத்திலும் நாடியைப் பிடித்துப் பரீட்சிக்கலாம். ஆனால், கையைப்பிடித்துப் பார்க்கும் பரீட்சைதான் எல்லாவற்றிற்கும் உத்தமம்.

நாடியைப்பிடித்துப் பரீட்சிக்கும் விதம்:—கையில் பெருவிரற்பக்கமாகவிருக்கும் ஆரை எலும்பின்மேல் ஓடும் நாடியை மணிக்கட்டுக்கு ஒரு அங்குலம் மேலாக மூன்று விரல்களாற் சமமாகவும் மெதுவாகவும் அழுத்திப்பார்க்கில் நாடிநடைதோன்றும். விரல்களை அதிகமாய் அழுத்தினால் நாடிநரம்பில் ஓடும் இரத்தம் தடைபட்டு நாடிநடை அகப்படாது. இவ்விதமாக நாடிநடையைப் பரீட்சித்தபின்பு, விரல்களை மாறி மாறி அழுத்தியும் தளர்த்தியும் பரீட்சிக்கவேண்டும். இப்படி பரீட்சிப்பதில் நாடிநடையின் பலத்தை அறிந்துகொள்ளலாம்.

சரீரத்தின் பேதா பேதங்கள்:—பயங்கொண்டவர்களிடத்திலும் முன்கோபிகளிடத்திலும் வைத்தியன் சென்றவுடனே நாடிபார்க்கலாகாது. ஏனென்றால், அவர்களுடைய இருதயம் அதிக துரிதத்திற் பேதித்து நடக்கும். அப்போது அதற்கனுகுணமாகவே நாடியும் படபடத்தோடும். ஆதலால், இக்குணங்களுடையவர்களிடத்திற் சிலநேரம் பேசிக்கொண்டிருந்து வைத்தியரைக்கண்டவுடனே காணும்திகில் அடங்கிய பின்பு நாடியைப்பரீட்சிக்கவேண்டும். இவ்வாறே பிணியாளன் நடந்துவந்தவுடனேயும் மனோசாஞ்சல்யமடைந்திருக்கும்போதும் அமிதமான சந்தோஷமுள்ளவனாயிருக்கும்போதும் எண்ணெய்தேய்த்து ஸ்நானம் செய்த பிறகும் போஜனம் செய்தவுடனேயும் நித்திரைசெய்யும்போதும் நாடியைப் பரீட்சிக்கலாகாது.

நாடிபார்க்கும்போது பிணியாளன் இருக்கவேண்டிய நிலைமை:—நாடிபார்க்கும்போது பிணியாளன் உட்கார்ந்துகொண்டாவது [illegible]

ஹீனஸ்தனாயிருந்தாற் படுத்துக்கொண்டாவதிருக்கலாம். நின்றுகொண்டிருக்கலாகாது. ஏனென்றால், அப்போது அப்பிணியாளனுக்கு நாடி அதிக துரிதமாய்நடக்கும்.

அல்லாமலும் வலக்கை இடக்கை என்னும் இரண்டு கைகளினுமே நாடியைப் பரீட்சிக்கவேண்டும். புருஷர்கட்கு வலக்கையிலும் ஸ்திரீகளுக்கு இடக்கையிலும் பார்க்கலாமென்பது சாஸ்திர யுக்தமேனும் இரண்டு கைகளிலும் பார்ப்பதே உத்தமம். ஏனென்றால், சாதாரணமாய்ப் பார்க்கும் வலக்கையின் நாடி சிலதருணங்களிற் பருத்தாவது சிறுத்தாவதிருக்கும். ஆகையால் இரண்டு கைநாடிகளையும் பரீட்சிக்கவேண்டும். மேலும், சிலர்கைகளில் நாடி சுபாவமாய் ஓடும் இடத்தைவிட்டுப் புரண்டோடும். அப்போது நாடி இருக்கவேண்டிய ஸ்தானத்தில் நாடிநடை காணப்படாதாகையால், அது புரண்டிருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துப் பின்பு நாடியைப் பரீட்சிக்கவேண்டும்.

நாடிபார்க்கும் இடத்திற்குமேலாகப் பிகுவாய் யாதொருகட்டும் இருக்கக்கூடாது. சில ஆண்பாலார் தமது கைளிற் காப்பைப் பிகுவாய்ப் போட்டுக்கொண்டும், சில பெண்பாலார் காப்பையாவது வளையலையாவது கைகளிற் பிகுவாய்ப் போட்டுக்கொண்டுமிருப்பார்கள். அதனால் நாடிநடையின் சுபாவங்குறைந்து தோன்றும், அல்லது விரல்களுக்குத் தோன்றாமற்போவதும் உண்டு.

நாடிநடை உண்டாவதற்குக் காரணம்:—இருதயத்தின் இடப்புறச்சடரம் குவியும்போது அதிலிருந்து இரத்தம் கண்டறையின்வழியாகச்சென்று சகல நாடிநரம்புகட்கும் பரவும். அப்போது நாடிநரம்புகள் விரியும். மறுபடியும் அவ்விடப்புறச்சடரம் விரியும்போது நாடிநரம்பிலிருக்கும் இரத்தங்குறைந்து நாடி சுருங்கும். இவ்வாறு இருதயம் விரியவும்குவியவுமிருப்பதால் அதனுடன் சேர்ந்த நாடிநரம்புகள் விரியவும் குவியவுமிருக்கும், இச்செய்கைக்குத்தான் நாடிநடையென்றுபெயர். நாடிநடை இருதயநடைக்கு ஒத்திருக்கும். ஆதலால் நாடி நடையானது இருதயத்தின்நடை இவ்விதமென்று நமக்குத்தெரிவிக்கின்றது. தேகத்திலிருக்கும் கருவிகளுக்குள் இருதயமானது ஓர்பிரதானமான இராஜகருவியாயிருக்கின்றது. அதன்நடையும் சரீரஸ்திதிக்கு ஒத்திருக்கும். தேகத்திற் பிணிகண்டால் இருதயத்தின் சுபாவநடை போய்விடும். சரீரத்துள்ள பிணியை இருதயம் முன்னே அறிந்துகொண்டு நாடிநரம்பின் மூலமாய் நமக்குத் தெரிவிக்கின்றது.



ஆகையால், நாடிநரம்புநடக்கிற பேதங்கள் நமக்குநன்றாகத் தெரியாவிட்டால் தேகத்திலுள்ள வியாதி நமக்குச் செவ்வனே விளங்கமாட்டாது. (இன்னும் வரும்.)

## 31. நேர்வாளசுத்தி.

நேர்வாளக்கொட்டையை உடைத்து மேலோட்டை நீக்கிப் பருப்பை எடுத்து, எருமைச்சாணிப்பாலில் ஓரிரவு ஊறவைத்து, மறுநாள் எடுத்துக்கொதிக்கவைத்து, பிறகெடுத்துக்கழுவி, மேலேயுள்ள மெல்லிய சருகையும், பருப்பை இரண்டாகப்பிளந்து உள்ளேயுள்ள முளையையும் போக்கிவிட்டுப் பருப்பைமாத்திரம் கொஞ்சம் பச்சரிசிக்கஞ்சி புளியிலை இவைகளுடன்சேர்த்துக் காய்ச்சிக் கொதிவந்தபிறகு இறக்கி, பருப்பை எடுத்து வெய்யிலிற் காயவைத்துக் கொஞ்சம் எலுமிச்சம்பழரசத்துடன் கலந்து, மறுபடியும் வெய்யிலில் நன்றாய்க்காயவைத்துப் புட்டியிலடைத்துவைக்கவேண்டும். உபயோகப்படுத்தவேண்டியபோது தேவையுள்ளவரையிலெடுத்து, நெய்யில் வறுத்துக்கொள்ளவேண்டும். இது மிகமேலானசுத்தி. இதைப் பேதிமருந்துகளிலும் இன்னும் அநேகமருந்துகளிலும் உபயோகப்படுத்தலாம். நேர்வாளத்தைச் சுத்திசெய்யாமல் ஔஷதங்களுக்கு உபயோகிக்கலாகாது.

## பேதிமருந்துகள்.

தேகஸ்திதியையும் சரீரசுபாவத்தையும் கண்டறிந்து அதற்குத் தகுந்த பிரகாரம் பேதிமருந்துகளை உபயோகிக்கவேண்டும்.

பேதிமருந்து மூன்றுவகைப்படும்.

32. (1-வது:)—வயிறுகடுத்து அதிகமாய்ப் பேதியாகிறவை, கோரமானபேதி ஔஷதங்கள். அவையாவன:—நேர்வாளம்-மக்கி-கடுகுரோகணி-ஜாலப் முதலியவைகளே.

33. (2-வது):—ஜலம்ஜலமாய்ப் பேதியாகும்படி செய்கிறமருந்துகள் நீர்ப்பேதிமருந்துகள் என்னப்படும். அவையாவன:—இந்துப்பு-சீர்கம இந்துப்பு-திராட்சஉப்பு-ஸல்பேட் ஆவ் பொடாஷ் முதலியவைகளே.

34. (3-வது):—சாந்தமாய்ப் பேதியாகிற மருந்துகளுக்குச் சுகபேதி என்று பெயர். அவையாவன:—ஆமணக்கெண்ணெய்-நிலவாரை-ரேவற்சின்னி-மாக்னிஷியா-சரக்கொன்றைப்புளி-புளி-ஆற்றுத்தும்மட்டி-கரியபோளம முதலியவைகளே.

## பாகசாஸ்திரம்.

## Bagara Pulave,

### 35. பகாரா புலாவ்.

சம்பாரங்கள்:—24-வது பக்கத்திற் கூறியபடி சுத்திசெய்த அரிசி படி 1, நெய் பலம்-8, மேல்தோல்நீக்கி மெல்லிதாய் அரிந்த வெங்காயம் பலம் 4, கழுவி மேல்தோல்நீக்கி அம்மியில்வைத்து அரைத்தெடுத்த இஞ்சி பலம் இரண்டரை, மேல்தோல்நீக்கி அரைத்தெடுத்த பூண்டு பலம் இரண்டரை, இலவங்கம் பலம் கால், இலவங்கப்பட்டை பலம் கால், ஏலக்காய் பலம் கால், உப்பு கைப்பிடியால் ஒருபிடி, அடிவேரைத்தறித்துக்கழுவிய பச்சைக்கொத்துமல்லித்துளிர் கைப்பிடியால் கால்பிடி, ஜலம் படி ஒன்றரை, அரிசிபுதிதாயிருந்தால் ஜலம் படி ஒன்றேகால்.

பாகம்:—அரிசியை ஜலத்திற்கொட்டி அரைமணிநேரம் ஊறவைத்து, மேற்கூறியுள்ள ஒருபிடி உப்பை, முன்அளந்துவைத்திருக்கும் ஜலத்தில் அரைஆழாக்கெடுத்து அதிற்கரைத்து, அடியில் தங்கும் கல் மண் மண்டிமுதலியவைகளை நீக்கித் தெளிவையிறுத்து, அளந்திருக்கும் மிகுதி ஜலத்துடன் கலந்துவைத்துக்கொள்ளவேண்டும்.

சமையல்:—இரண்டுபடி ஜலம்பிடிக்கும் தேக்சாவென்று சொல்லப்படுகிற ஈயம்பூசின வாயகன்ற ஒருசெப்புப்பாத்திரத்தில் நெய்யைவிட்டு அடுப்பிலேற்றிக்காய்ச்சிச் சொற சொறவென்ற சத்தம்நின்றவுடனே, வெங்காயத்தை அதிற்போட்டுக் கப்கீர் என்னும் ஜல்லிக்கரண்டியினாற் கிளறி, அது சிவந்துவருந்தருணத்தில் பூண்டை அதிற்கொட்டிக் கிளறவேண்டும். பிறகு கொஞ்சம் பச்சைக்கொத்துமல்லித் துளிர் அதிற்போட்டுக்கிளறிவிட்டு இவையாவும் சிவந்தவுடனே, பாகம்செய்து வைத்திருக்கும் ஜலத்தை அதிற்கொட்டி மூடியால் மூடிவிடவும். பிறகு மூடியைத்திறந்து, இஞ்சி, இலவங்கம், இலவங்கப்பட்டை, ஏலக்காய் ஆகிய இவைகளை முறையே ஒவ்வொன்றாய் அதிற்போட்டுத் தீயைச் செவ்வனேமூட்டி நன்றாய்க்கொதித்தபிறகு இன்னும்கொஞ்சம் பச்சைக்கொத்துமல்லித்துளிர் அதிற்போட்டு, இரண்டுநிமிஷத்திற்குப்பிறகு முன் ஊறவைத்திருக்கும் அரிசியைக்களைந்து நீர்போக்கி, அதில்எடுத்துக்கொட்டி நன்றாய்க்கிளறி மூடிவிட்டுக் கொஞ்சநேரம்சென்றுதிறந்து, மறுபடி ஒரு முறை கிளறவேண்டும். நீர்வற்றிச் சாதம் அடியில் அமுங்கியபின்பு, முக்கால்வாசிவெந்த . படிகம்பார்த்து மீண்டும் ஒரு முறை நன்றாய்க்கிளறித்



தேக்சாவின்வாய்க்குப் *பேட்கொடுத்து மூடியினால் மூடி அடுப்புக்கட்டைகளை இழுத்துவிட்டுப் புகையில்லாத தணலில் வைத்துத் || தம்முக்குவிடவேண்டும். சற்றுநேரத்திற்குப்பிறகு தேக்சாவின்வாயிலிருந்து ஆவிபுறப்படும். அத்தருணத்தில்திறந்து சரியான பதத்தில் வெந்திருக்கிறதாவென்று பார்த்து, இறக்கிவைத்துக்கொள்ளவும்.






4-ம் படம்.

3-ம் படம்.




5-ம் படம்.

3-ம்படம்:—இரும்பினால்செய்த ஜல்லிக்கரண்டி அதைத்தான் கபகீர் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

5-ம்படம்:—இதைத்தான் டோராவென்று சொல்லப்பட்டிருக்கிறது. பலாவ் தயாராகும்போது கஞ்சியுடன் சாதத்தை மொள்ளுவதற்காக உபயோகிக்கப்படவேண்டியது. படத்தில் காட்டியபடி 9-அங்குலம் குறுக்களவுள்ள ஒருசெப்புப்பாத்திரத்தில் 44அங்குலம் நீளமுள்ள மரப்பிடி ஒன்று இணைத்துக் கொள்ள வேண்டும்.

|| 4-ம் படம்:—சாதம் தம்முக்குவிட்டிருக்கிற விதம். இதில் 1-ம் நெ. தேக்சாவென்னும் செப்புப்பாத்திரத்தை 3-5-5-நெ. உள்ள மூன்று அடுப்புக்கட்டிகளின்மேல் வைத்திருக்கிறது. (3 நெ. அடுப்புக்கட்டி பின்பக்கத்தில் மறைந்திருக்கிறது கப்பாவித்துக்கொள்ளவேண்டும்) அடுப்பின் தரையிலுள்ள நெருப்புக்கட்டிகளைச் சுற்றிலும் ஒதுக்கி மத்தியில் காலியாய் வைத்திருக்கிற பாவனை நெ.4. தேக்சாவின் வாய்க்குப் பேட்கொடுத்து வாய்க்குச்சரியான மேல்மூடியினால் மூடி அந்தமூடியில் நெருப்புக்கட்டிகளை அள்ளிப் பரவலாய்ப் போட்டிருக்கிறபாவனை நெ. 2. இதுதான் தம்முக்கு விடுகிறவிதம்.

* பேட்கொடுப்பது:—தேக்சா வாயினசுற்றளவுக்குச்சரியாய்ச் சுத்தமான வெள்ளைச்சவுக்கம் ஒன்றை ஜலத்தில் நனைத்துப்பிழிந்து முறுக்கி தேக்சாவாயின் கங்கில் சுற்றிவைத்து ஆவி போகாவண்ணம் மூடியினால் அழுத்தி

பேட்கொடுப்பதற்குமுன் கிளறும்போது, தண்ணீர்போதாதென்று தெரிந்தால் தக்கபிரகாரம் ஒன்றுஅல்லது இரண்டு ஆழாக்கு வெந்நீர் விட்டுக் கிளறி முன்போலவே மூடிவைக்கவும். சற்றுநேரத்திற்குப் பிறகு, சரியான பதத்தில் வெந்திருக்கும். சாதம் சுகந்தமாகவும் அதிமாதுர்யமாகவும் வெகுநேர்த்தியாகவு மிருக்கும்.

## Agni Pulave or Biryani.

## 36. அக்னிபுலாவ் அல்லது பிர்யானி.

சம்பாரங்கள்:—சுத்திசெய்த அரிசிபடி 5, நெய் வீசை $1\frac{1}{2}$, மிகவும்கொழுப்புள்ள ஆட்டுக்கடாவின் மாமிசம் பலம் 240, மேல்தோல் நீக்கி மெல்லிதாய்ச்சீவிய வெங்காயம் வீசை $1\frac{1}{4}$, மேல்தோல்நீக்கி அம்மியில் வைத்தரைத்த பூண்டு பலம் 10, கழுவி மேல்தோல்நீக்கி அம்மியில்வைத்தரைத்த இஞ்சி பலம் 6, இலவங்கப்பட்டை பலம் 1, இலவங்கம் பலம் $\frac{1}{2}$, ஏலக்காய் பலம் $\frac{1}{4}$, வேர்தறித்துக்கழுவிய பச்சைக்கொத்துமல்லித்துளிர் கைப்பிடியால் பிடி 6, கழுவிய புதீனாஇலை பிடி 2. குங்குமப்பூ வாராகனெடை $\frac{1}{2}$, வெந்நீரிற்போட்டுத் தோல்நீக்கியும் கைப்புநீக்கியும் நல்லதாகத்தேர்ந்தெடுத்த வாதுமைப்பருப்பு பலம் 5, (இவ்வைந்து பலப்பருப்பையும் குங்குமப்பூவையும் வெவ்வேறாக நுண்மையாய் அரைத்துவைத்துக்கொள்ளவும்,) கெட்டித்தயிர்படி $\frac{3}{4}$, உப்பு சுமார் ஆழாக்கு 3, பத்து எலுமிச்சமபழத்தின்ரசம், பன்னீர் பலம் 2, பசுவின்பால் அல்லது எருமைப்பால் படி-அரை.

பாகம்:—ஷை மாமிசத்தைத் தண்ணீர்வார்த்துக்கழுவி ஜல்லிகூடையிற்போட்டுப் பலகையின்மேல் தண்ணீர்வடியும்படி வைக்கவேண்டும். பத்துப்படிஜலம்கொள்ளும் ஓர்பாத்திரத்தில் தண்ணீர் காய்ச்சிவைக்கவேண்டும். உப்பு கறியின் நிதானத்திற்குத்தக்க அளவாய் எடுத்துக் கொஞ்சம் ஜலத்தில் கரைத்து, அடிமண்டி, கல், மணல் முதலியவைகளை நீக்கித் தெளிவையிறுத்துத் தயிருடன்கலந்து கொள்ளவேண்டும். அரிசியை $\frac{1}{2}$-மணிநேரம் ஜலத்தில் ஊறவைக்கவேண்டும். அதன்பின் பத்துப்படி பிடிக்கத்தக்க ஈயம்பூசிய வாயகன்ற ஓர்செப்புப்பாத்திரத்தை நன்றாய்க்கழுவி, அடுப்பின்மீதேற்றி நெய்யை அதில்வார்த்துத் தணல் மூட்டிவிடவும். அந்தநெய்யில் சொறசொற என்ற சத்தம் அடங்கினவுடனே, வெங்காயத்தைப்போட்டுக் கட்கீர்என்னும் இரும்புஜல்லிக்கரண்டியினாற்கிளறி முக்கால்வாசி சிவந்துவரும்பக்குவத்தில், அரைத்துவைத்திருக்கும் பூண்டை



அதிற்போட்டுக்கிளறவும்; பிறகு பச்சைக்கொத்துமல்லித்துளிர் பிடி 3, புதீனாஇலை பிடி 2, இவைகளை அதிற்போட்டு எல்லாம் சிவந்துவரும்பக்குவத்தில் இறைச்சியை எடுத்து அதிற்கொட்டிச் செப்புச்சட்டியின்மூடியினாலே உடனேமூடிவிடவும். பிறகு திறந்து கிளறித் தயிரைவார்த்து மறுபடிகிளறவும். அதன்மேல் இஞ்சி இலவங்கப்பட்டை இலவங்கம் ஏலக்காய் கொஞ்சம் பச்சைக்கொத்துமல்லித்துளிர் என்னும் இவைகளை முறையே ஒவ்வொன்றாகப்போட்டு நன்றாய்க்கிளறி, உப்பு சரியாயிருக்கின்றதாவென்று பதம்பார்த்து, அதிகமாயிருந்தால் அரிந்தவெங்காயம் இன்னும் கொஞ்சம் சேர்க்கவும், உப்பு குறைந்திருந்தால் தேவையுள்ளவரையில் எடுத்துத் தண்ணீரிற்கரைத்து முன்போலவே அடிமண்டி மணல் கல் முதலியவைகளைநீக்கித் தெளிவையிறுத்துச்சேர்க்கவும். இவ்வாறாக உப்பைச்சரிபார்த்துக்கொண்டு செவ்வனே கிளறி மூடிவிடவேண்டும். இறைச்சி செவ்வனேவெந்து தண்ணீர்சுண்டி நெய் மேலேமிதக்கும் பருவத்தில் அடுப்புக்கட்டைகளை எடுத்துவிட்டு, புகையில்லாததணலில்வைத்து, டோராவினால் அரைவாசிநெய்யை எடுத்து வேறுபாண்டத்தில் வைத்துக்கொள்ளவும். முன்னமே சுடவைத்திருக்கும் வெந்நீரில் 4-படிஎடுத்து, பாதிப்பாலை அதிற்கலந்து தணலில் வெந்துகொண்டிருக்கும் மாமிசத்தில்வார்த்து, கொஞ்சம் பச்சைக்கொத்துமல்லித்துளிர், புதீனா, எலுமிச்சம்பழரசம் என்னும் இவைகளையும் அதிற்கொட்டிச் செவ்வனேகிளறி மூடிவிட்டு, அடிபற்றாமல் அடிக்கடி ஜாக்கிரதையாய்த்திறந்து கிளறிக்கொண்டேயிருக்கவேண்டும். இப்படி பத்து நிமிஷம்வரையில் ஷை தணல்நெருப்பில்வைத்திருந்தால் மாமிசம் மலர்ந்துபோம். இவ்வாறு தயார்செய்யப்பட்ட மாமிசத்திற்கு அக்னி என்றுபெயர். இவ்வண்ணம் அக்னிதயாராகிற மேற்குறித்த 10-நிமிஷத்திற்குள்ளாகப் பலாவ் அதாவது அரிசியின்பாகத்தைத் தயார்படுத்திக்கொள்ளவேண்டும்:—அஃதெவ்வாறெனில்.

பத்துப்படி ஜலம்கொள்ளத்தக்க ஈயம்பூசிய வேறொரு செப்புப் பாத்திரத்தில், முன்னமே கொதிக்கவைத்திருக்கும் வெந்நீரிலே தேவையானவரையிலெடுத்து ஊற்றிக்கொண்டு அதற்குநிதானமான அளவு உப்பும்கரைத்து அதில்வார்த்து, ஊறவைத்திருக்கும் அரிசியை நன்றாகக்களைந்தெடுத்து அதிற்கொட்டிச் செவ்வனேகிளறி மூடிவிட்டு முக்கால்வாசிவெந்தபதம்பார்த்து, ஒருஜல்லிக்கூடையை ஓர்செப்புச் சட்டியின்வாய்க்கு மேலாகவைத்து, அக்கூடையில் கெட்டியா

யும் சுத்தமாயுமுள்ள ஒருசவுக்கத்தைப்போட்டு, வேகிறசாதத்தைக் கஞ்சியுடனே டோராவினுல் மொண்டு கூடையிற்கொட்டவேண்டும். இப்படிசெய்வதனுல் அதிலுள்ள கஞ்சியானது அடியிலிருக்கும் செப்புச்சட்டியில் வடிந்துபோகும். சாதம் கூடைமேல்விரித்துள்ள சவுக்கத்தில் தங்கிவிடும். வாதுமைப்பருப்புடன் அரைத்த குங்குமப்பூ கொஞ்சம் சேர்த்து மிகுதிப்பாலில் அரைவாசி அதிற்கலந்து வெந்துகொண்டிருக்கிற அஃனியில் தெளிக்கவும்; பிறகுகூடையிலிருக்கும் சாதத்தை எடுத்து அந்த அஃனியிற்கொட்டிவிடவேண்டும். இதில் நின்றும் வடிந்திருக்கிற கஞ்சியைப்பின் உபயோகத்திற்காகப்பத்திரப்படுத்திவைக்கவேண்டும். இந்தக்கஞ்சியில் சுமார் அரைப்படி எடுத்து, முன் அஃனியிலிருந்து எடுத்துவைத்திருக்கும் நெய்யையும் கொஞ்சம் பாலையும் ஒன்றுய்க்கலந்து, அந்தச்சாதத்தின்மேற் பரவலாய் ஊற்றவும். பிறகு அரைத்துவைத்திருக்கும் குங்குமப்பூவை மிகுதிப்பாலிற் கலக்கிமேலேதெளிக்கவும். அதன்பின் பாத்திரத்தின்வாய்க்குப்பேட்வைத்து மூடித் தம்முக்குவிடவேண்டும். சற்றுநேரம்சென்றபின் வாயிலிருந்து ஆவிகிளம்பிச் சுகந்தவாசனையுண்டாகும். அப்போது திறந்து வாயின் ஓரங்களிலுள்ள வியர்வையைத் துணியினுல் துடைத்துவிட்டுச் சுற்றுப்பக்கங்களிலும் நடுவிலுமுள்ள சாதத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கப்கீரினுல் எடுத்துப்பார்த்து, வெந்துபோய்ச் சரியானபதத்திலிருந்தால் பன்னீரைத்தெளித்துக் கிளறி இறக்கிவிடலாம், ஆனுல் ஒருபக்கத்தில் வேகாமல் நின்றிருந்தால், நடுவிற் பள்ளம்செய்து வேகாதபாகத்தை அதில்தள்ளி, முன்பத்திரப்படுத்திவைத்திருக்கும் கஞ்சியில் கொஞ்சம் நிதானமாய்விட்டு மூடித் தம்மில்வைத்தால் ஐந்து அல்லது பத்து நிமிஷத்திற்குள் சரியானபதமாய் வெந்துவிடும். பிறகு இறக்கிவைத்துக்கொண்டு, சாதத்தைக் கீழும்மேலுமாகச் செவ்வனேகிளறி உபயோகப்படுத்தவேண்டும். இந்தச்சாதம் அதிகயாதாரியமாகவும் மகாருசிகரமாகவும் விசேஷ சுகந்தமாகவுமிருப்பதுடன், தாதுவிர்த்திக்கு மிகவும் நேர்த்தியான நல்ல பிரயோசனத்தைத் தரத்தக்க ஔடதத்தைப்போலுமிருக்கும்.

## கைத்தொழில்.

### 37. தரையில் தார்பூசும் விதம்.

எந்தத் தரையில் தார்பூசவேண்டியதோ அந்தத் தரையைச் சமப்படுத்திக்கொண்டு, அதன்மேல் தாரை உருக்கி இலேசாய்ப்பூசி அது உலர்வதற்கு முன்னமே ஒரு சல்லடையில் மணலைக்கொட்டிக்



கொண்டு அத்தார்பூசிய தரைமுழுவதும் பரவும்படி ஜல்லிக்கவும்; இது உலர்ந்தபின் மறுபடியும் இலேசாய்த் தார்பூசிச் சல்லடையில் மணலைக்கொட்டி முன்போலவே ஜல்லிக்கவும், இவ்வாறு நான்கைந்து முறை செய்தால் அந்தத்தரை அதிக கெட்டியாய்விடும்.

### 38. புத்தகத்தின் காகிதங்களில் எண்ணெய்பட்டால் அதைப்போக்க உபாயம்.

எந்த காகிதத்தில் எண்ணெய்படிந்திருக்கிறதோ அந்த காகிதத்தில் சுத்திசெய்த கர்ப்பூரத்தைலத்தை ஒரு புருசாற்பூசி, அது உலர்ந்தபின் எண்ணெய் படிந்திருக்கும் இடத்தில் ஒயின் ஸ்ப்ரிட்ஸ் (Spirits of wine) திராவகத்தைத் தடவிச் சற்று நேரம்வைத்திருந்தால் அந்த காகிதத்திற் படிந்திருந்த எண்ணெய்க்கசிவுமுழுமையும் நீங்கிவிடும்.

### 39. பித்தளைச் சாமான்களைத் துலக்கும் விதம்.

சுத்தஞ்செய்யவேண்டிய பித்தளைச் சாமான்களை நெருப்பருகில் வைத்துச் சற்றுச்சூடாக்கி, அந்தச்சூடு தணியாமுன் நவாச்சாரத்தை (Sal ammoniac) நன்றுய்ப்பொடிசெய்து ஜலத்திற்கரைத்துப் பித்தளைச்சாமான்களைத் துலக்கினுல், பித்தளையிலுள்ள களிம்பு நீங்கிப் பளபளப்பாயிருக்கும்.

### 40. இன்னொருவிதம்.

வாஷிங்ஸோடா (Washing Soda) வைப்பொடிசெய்து ஜலத்திற் போட்டு அது நன்றுய்க் கரைந்தபிறகு, அந்த ஜலத்திற் பித்தளைச் சாமான்களைப் போட்டு அடுப்பிலேற்றிக் கொதிக்கவைத்தெடுத்தால், பித்தளையிலிருக்கும் களிம்பெல்லாம் போய்ச் சுத்தமாகும்.

### 41. சாயங்கெடாதபடி வஸ்திரத்தைத் தோய்க்கும்விதம்.

குளிர்ந்த ஜலத்தில் $\frac{1}{4}$ பவுன் ஸோப் (Soap) பைப் போட்டு அது கரையும்வரையிலும் கொதிக்கவைத்து, அதன்பின் அதிலே கொஞ்சம் படிகாரத்துண்டைப்போட்டு மீண்டும் கொதிக்கவைத்து, தோய்க்கவேண்டிய உடைகளை இந்தஜலத்தில் தோய்த்து உலரவைக்கவும். மறுபடியும் ஜலம்வேண்டியிருந்தால் அதிலும் படிகாரத்தைப் பொடித்துப் போடவேண்டும். இவ்வாறு தோய்த்துவந்தால் ஆடைகளிலுள்ள சாயம் அணுவளவும் கழியாது.

## பலவித மத்தாப்பு செய்யும்முறை.

42. வெள்ளை மத்தாப்பு:—பொட்டிலுப்பு 4-அவுன்ஸ் கந்தகம் 1-அவுன்ஸ் நேர்த்தியானகட்டைக்கரி 1-அவுன்ஸ் ஆகிய இவைகளைப் பொடிசெய்து கலந்து கொளுத்தவும்.

43. நீலமத்தாப்பு:—பொட்டிலுப்பு 4-அவுன்ஸ் கந்தகம் 2-அவுன்ஸ் (Sulphuret of Antimony) சல்பரட் ஆவ் ஆன்டிமொனி 1-அவுன்ஸ் ஆகிய இவைகளைத் தனித்தனி பொடிசெய்து கலந்துகொளுத்தவும்.

44. சிவப்புமத்தாப்பு:—(Chlorate of potass) க்ளோரேட் ஆவ் பொட்டாஷ் 1-அவுன்ஸ், கந்தகம் $1\frac{1}{2}$-அவுன்ஸ், (Sulphuret of Antimouy) சல்பரட் ஆவ் ஆன்டிமொனி 1-அவுன்ஸ், (Nitrate of Strontian) நைட்ரேட் ஆவ் ஸ்டிரான்ஷியன் 6-அவுன்ஸ், கட்டைக்கரி கால் அவுன்ஸ் ஆகிய இவைகளை முற்கூறியபடி தனித்தனி பொடிசெய்து கலந்து கொள்ளுத்தவும்.

45. சிவப்புமத்தாப்பு வேறுமுறை:—கட்டைக்கரி அரை அவுன்ஸ் பொட்டிலுப்பு 1-அவுன்ஸ், கந்தகம் 1-அவுன்ஸ். (Nitrate of Strontian) நைட்ரேட் ஆவ் ஸ்டிரான்ஷியன் 4-அவுன்ஸ். ஆகிய இவைகளைப் பொடிசெய்து கலந்து கொளுத்தவும்.

46. பச்சைமத்தாப்பு:—(Chlorate of potass) க்ளோரட் ஆவ் பொட்டாஷ் 1-அவுன்ஸ், கந்தகம் 1-அவுன்ஸ், கட்டைக்கரி கால் அவுன்ஸ் (Sulphuret of Antimony) சல்பரட் ஆவ் ஆன்டிமொனி 1-அவுன்ஸ். (Nitrate of Barytes) நைட்ரேட் ஆப் பாரைட்ஸ் 6-அவுன்ஸ் ஆகிய இவைகளைத் தனித்தனியே பொடிசெய்து கலந்து கொளுத்தவும்.

47. பச்சைமத்தாப்பு வேறுமுறை:—கந்தகம் 2-அவுன்ஸ் (Sulphuret of Antimony) சல்பரட் ஆவ் ஆன்டிமொனி 1-அவுன்ஸ். (Nitrate of Barytes) நைட்ரேட் ஆவ் பாரைட்ஸ் 4-அவுன்ஸ், (Boracic acid) பொராசிக் ஆஸிட் 4-அவுன்ஸ் ஆகிய இவைகளைத்தனித்தனி பொடிசெய்து கலந்துகொளுத்தவும்.

குறிப்பு:—மேற்கூறிய முறைகளுக்குள்ளே எந்தெந்தமுறையில் க்ளோரேட் ஆவ் பொட்டாஷ் (Chlorote of Potass) சேருகிறதோ அந்தந்தமுறையைச் செய்யும்போதெல்லாம் மிக்க ஜாக்கிரதையாயிருக்கவேண்டியது அத்தியாவசியம். அம்மருந்திற் சேர்கின்ற மத்தா



ப்புத்திரவியங்களைத் தனித்தனியாகப்பொடிசெய்துகலக்கவேண்டும். கலந்தபிறகு, கல்வத்திலாவது உரலிலாவதுவைத்து இடிக்கவேகூடாது. அப்படி இடித்தால் பெருத்த அபாயமுண்டாகும்.

## ஜாலம்.

**48. வெறுங்கூடையிலிருந்து பலவகைப்பட்சிகளை வரவழைக்க.**

பிரம்பு அல்லது மூங்கிற்பத்தைகளால் ஒன்றரையடி உயரமும் அதே அளவு அகலமும் வைத்து ஒரு கூடையை வாட்டமாய்ச்செய்து, அக்கூடையின் உள்வாய்முனையில் சிறிய அறைகளாக எட்டு தடுத்து, அதற்குத்தக்க தட்டிகள் வைத்துக்கூடையின் விளிம்பில் ஸ்ப்ரிங் என்னும் விசைக்கம்பியைச்சேர்த்து, அக்கம்பியை அழுத்தினால் தட்டி திறக்கும்படியாகவும், விட்டுவிட்டால் மூடிக்கொள்ளும்படியாகவும் விசைவைத்து, அப்படிப்பட்டவிசை ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமற்செய்து, அக்கூடையிலுள்ள அறைகள் யாவும் பார்ப்பவர்கட்கு அக்கூடைமுனையின் கூறுகத்தோற்றும்படியமைத்து, அக்கூடையின் உள்ளும் புறம்பும் செம்மண் பூசிவைத்துக்கொள்ளவேண்டும். அக்கூடையிலமைத்துள்ள கள்ள அறைகளுக்குள்ளே ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாய்ப் புறாக்குஞ்சு கோழிக்குஞ்சு கிளிக்குஞ்சு மைனாக்குஞ்சு காடைக்குஞ்சு கவுதாரிக்குஞ்சு கொக்குக்குஞ்சு கொண்டலாத்துக்குஞ்சு என்னும் இவைகளை முன்னமே அதனதன் இறகுகளைக்கத்திரித்து, அக்கூடையின் அறைகளில் அடைத்துவைத்துக்கொண்டு, அவைகள் சுவாசிக்கும்படி அக்கூடையிற் சிறு துவாரங்களும் செய்துவைத்துக்கொள்ளவேண்டும். சபையில் இவ்வித்தையைக்காட்டுவதற்கு நடிக்கும்போது, அக்கூடையை எடுத்து அங்குள்ளவர்களனைவர்க்கும் காட்டி, இக்கூடையில் இப்போது ஒன்றுமில்லையல்லவா? இதோ! ஓர் கொடிக்குள்ளாக இதனுள்ளிருந்து பற்பல பறவைகள் வரச்செய்கின்றேன் பாருங்களென்று வாய்ச்சாலக்கான வார்த்தைகளைக்கூறி, கூடையின்மேல் ஒரு குட்டையை விரித்து மூடி, ஓர் அறையின் ஸ்ப்ரிங்கை அழுத்த ஒரு தட்டி திறந்து அதிலுள்ள ஒருவகைப்பட்சி அக்கள்ள அறைக்குவெளியேவந்துவிடும். உடனே அக்கூடையின்மேல் மூடிய குட்டையை எடுத்துவிட்டு, மறுபடியும் கூடையை எல்லோருக்கும் காட்டி, அதிலிருக்கிற பட்சியை எடுத்து வெளியே விடவேண்டும். இவ்வாறே எட்டு அறைகளிலுமுள்ள பட்சிகளை எட்டு முறைகளிலும் வெளியே எடுத்துவிட்டால், பார்ப்பவர்களனைவரும் அதியாச்சரியமுறுவார்கள்.

## 49. பட்சிகளின்சங்கீதம்.

ஒரு கார்க்குத்துண்டை ஜலத்திற் சற்றுநேரம் ஊறவைத்து எடுத்துக்கொண்டு, பின்பு ஓர் திரட்சியான சீசா லாம்பு சிம்னி கண்ணாடிக்குழாய் என்னும் இவற்றுள் எதாவதொன்றின்மேல் அக்கார்க்குத்துண்டைப் பரபரவென்று தேய்த்தால், அநேகவகைப் பட்சிகள் ஒன்றாகக்கூடி ரீங்காரம் செய்வதுபோலத் தோன்றும். அல்லாமலும் சமீபத்திற் பூனையிருந்தால் அத்தொனியுள்ள பட்சிகளைப்பிடிப்பதற்காக இங்குமங்கும் தேடித்திரியும் அப்போது பார்ப்பவர்கள் யாவரும் இது வாஸ்தவத்திற் பட்சிகளின் தொனியேயென்று ஆச்சரியப்படுவார்கள்.

## 50. முட்டையின்மேல் வர்ணம் கொடுக்கும்விதம்.

நானாவித நிறமுள்ள நாடாத்துண்டுகளைச் சேர்த்து முட்டையின் மேற்புறத்தில் அழுந்தியிருக்கும்படியாகக் கெட்டியாய்ச் சுற்றிக் குளிர்ந்த ஜலத்திற் போட்டுப் பத்துநிமிஷம் வரையில் நெருப்பின்மேல் வைத்திறக்கி, முட்டையின்சூடு ஆறினபிறகு நாடாத்துண்டுகளைப் பிரித்துவிட்டால் அந்நாடாக்களின் சாயம் முட்டையினுடைய மேற்புறத்திற்படிந்திருக்கும். அதன்மேல் வார்னிஷ் பூசினால் பார்ப்பதற்கு வெகு நேர்த்தியாயிருக்கும்.

### விநோதார்த்தப்பதங்கள்.

ஒருவன் தன் புஸ்தகங்களை விற்று ஜீவித்துவரும்போது, தன் பிதாவுக்கெழுதியதாவது:—அப்பா! இப்போது நான் இராமாயண பாரத பாகவதகாலக்ஷேபம் செய்துவருகிறேன் என்பதே.

அப்பா! எங்கே சந்தியாவந்தனம் பண்ணினாயென்று கேட்டதற்கு, கோயிலின் குளத்திற் பண்ணினேன் என்றான். அந்தக்குளத்தில் ஜலமில்லையே என்றதற்கு, இருக்கிறதென்று கோடியாத்துக் குப்பனுக்கு யாரோ சொன்னாராமே என்றான்.

அப்பா கோடிவீட்டு ரெங்கன் மிகவும் நல்லவன், நீர் கடைக்குப் போயிருக்கும்போது நம்மாத்துக்கு வந்து, எனக்கொருகாசு கொடுத்து விட்டுப் போகும்போது அம்மாளைக்கட்டி முத்தமிட்டுக்கொண்டான்; என்று ஓர் குழந்தை தன் பிதாவுடன் கூறியது.

ஓர் வைத்தியன் ஒரு பிணியாளனுடைய கையைப்பிடித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில் என்னைப்போக்கிறியென்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறதாகத் தோன்றுகிறது என, அப்பிணியாளன்



ஐயா! வைத்தியர்கள் கையைப்பார்த்துத் தேகத்தின் வியாதியை அறிவார்கள், தாங்கள் மனதின் நிலைமையையும் அறிகிறீர்களே தங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம் என்றான்.

ஓர் தருமசத்திரத்தில் இராக்காலத்தில் மூன்றாம்பந்தியில் சாப்பிட்ட ஓர்பிராமணன் அச்சத்திரத்திற்குச் சமீபத்திலுள்ள குளத்திற்குக் கைகழுவப்போனான். மூக்குப்பிடிக்கச் சாப்பிட்டிருந்ததால் தட்டுக்கெட்டுத் தடுமாறி, வழியில் படுத்திருந்த ஓர் எருமைக்கன்றின்மேல் விழுந்தான். அப்போது அவன் அக்கன்றின் வயிற்றைத் தடவிப்பார்த்து வயிறு புடைத்திருக்கக்கண்டு கன்றென்றறியாமல் என்ன ஓய்சாஸ்திரி உம்பாடு பலமாயிருக்கிறதே! முதல்பந்தியோ? என்றான்.

## 51. உடைகளில் தீப்பிடித்தால்

உடுத்துக்கொண்டிருக்கும் உடைகளில் தீப்பிடித்து, அதனால் அபாயங்கள் நேரிட்டிருப்பதை நம்மவர்களில் அநேகர் அநேகசந்தர்ப்பங்களிற் பார்த்தும் கேட்டுமிருக்கலாம். இவ்வபாயத்தினின்றும் தப்பித்துக்கொள்வதற்கேற்ற உபாயம் ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கவேண்டியது அத்தியாவசியமென்பதற் கையமில்லை, ஆகையால் அத்தகைய உபாயம் இன்னதென்பதைக்குறித்து இங்கெழுதுகின்றோம். அக்கினிக்கொழுந்திற்கு எப்போதும் மேல்நோக்கிச்செல்வதே இயற்கையாகலின், ஒருவர்உடுத்திருக்கும் வஸ்திரத்தில் தீப்பிடித்தவுடனே, அவர்நிற்கவாவது ஓடவாவது மேட்டிலிருந்து பள்ளத்திலிறங்கவாவது பள்ளத்திலிருந்து மேட்டிலேறவாவது நினைக்கவுங்கூடாது. ஆனால், என்னதான் செய்யவேண்டுமென்றால், தீப்பிடித்த தக்ஷணம் தரையில்படுத்துக்கொண்டு சமீபத்தில் அகப்படக்கூடிய பாய் கம்பளம் ப்ளான்கெட் ஜமுக்காளம் முதலிய இத்தகைய வேறு எவ்வகையான பளுவுள்ள போர்த்துக்கொள்வதற்குத்தக்க வஸ்துவையாவது எடுத்து, சிரசுநீங்க ஏனைய அவயவங்கள்யாவும் மறையும்படி காற்று உள்ளேசெல்லாதவாறு அழுத்தமாய்ச்சுற்றிவிடவேண்டும். (தலையையும் உள்ளேவைத்துச்சுற்றினால் புகையினாலே மூச்சுத்திணறும்.) மேற்சொல்லியவஸ்துக்களில் எதுவும் சமீபத்திலகப்படாதபோது, உடனேதரையிற்படுத்துக்கொண்டு இரண்டுகால்களையும் நீட்டிவிட்டுச் சக்கரம்போலப் புரண்டுகொண்டேயிருக்கவேண்டும். சரீரத்தின்பளுவு அவ்வக்கினிக்கொழுந்தில் ஏறஏற அக்கினிபற்றாமல் அவிந்துபோம். குழந்தைகளுடையில் தீப்பிடித்தாலும் மேற்சொல்லியவாறே செய்யவேண்டும். இவ்வக்கினியபாயம் நேர்ந்தகாலத்தில்

ஒவ்வொருவிநாடியும் அபாயகரமானதாயிருக்கிறபடியால், பிறருடைய உதவிக்காக எதிர்நோக்குவாரும் படுத்துப்புரண்டுகொண்டே, தங்களுக்கு உதவிசெய்யவேண்டியவர்களுடைய பெயரைச்சொல்லி உரத்தசத்தத்துடன் அழைக்கலாமேயொழிய எழுந்துநின்று ஓரடியேனும் பெயர்த்துவைக்கலாகாது. இவ்வகையான அபாயங்கள் திடீரென்று சம்பவிக்குங்காலத்தில், மனக்கலக்கத்தினால் இன்னதுசெய்வதென்று புலப்படாதாகையால், மேற்கூறிய பிரயோகங்களை ஒவ்வொருவரும் செவ்வனே தங்கள் தங்கள் சித்தத்திற் பதியவைக்க வேண்டும்.

## 52. நெருப்புக்காயங்களும் சிகிச்சைகளும்.

கட்டைநெருப்பு-பழுக்கக்காய்ந்த இரும்பு-கொதிக்கிறஜலம்-காய்ந்தஎண்ணெய்-கொதிக்கிற ஜலத்தினின்றுண்டாம் ஆவி-உருக்கினஈயம் முதலியவை சரீரத்திற்படுவதால் உண்டாகும் காயங்கட்கு நெருப்புக்காயங்கள் என்றுபெயர்.

இக்காயங்கள் இரண்டுவகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவற்றுள் முதலாவது:—அக்கினியின் உஷ்ணம் சரீரத்திற்சுலபமாய்ப்படுவது, அவ்வாறு பட்டவிடம் சிவந்துபோம். அல்லது அவ்விடத்திற் கொப்புளம்உண்டாம். இரண்டாவது:—அக்கினியின் உஷ்ணம்விசேடமாய்ச்சரீரத்தில் தாக்குவது. அவ்வாறு தாக்கினால், தாக்கினவிடம் கெட்டுப்பிராணனற்றுப்போம். இவ்விரண்டினுள் பிந்தியது முந்தியதைப்பார்க்கினும் விசேடதொந்தரையும் மோசமுமுடையது.

பொதுவாக இவ்விருவகைக்காயங்களுள், அவைகாணும் அவயவபேதத்தினால் குரூரம் சாந்தம் என்னும் இருபகுப்புள்ளவைகளாயிருக்கின்றன. எவ்வாறெனில், கால்கைமுதலிய அவயவங்களிலுண்டாகும் நெருப்புக்காயங்களைவிட, மிக முக்கியமான யந்திரங்களடங்கியுள்ள இடங்களாகிய வயிறு நெஞ்சு சிரசு கழுத்து முதலிய அவயவங்களிலுண்டாகும் நெருப்புக்காயங்கள் விசேடமோசமானவைகள். அன்றியும், மிகச்சிறிய இடத்தில் அதிக ஆழமாய் வெந்திருக்கின்ற நெருப்புக்காயத்தாலுண்டாகும் மோசத்தைவிட, தோலின் மேற்புறமாகவே நெடுக வெந்துபோயிருக்கும் நெருப்புக்காயத்தினுண்டாகும்மோசம் விசேடமானது. ஏனெனில், தோலின்மேல் நெடுக வெந்துபோன வேக்காட்டினாலே, தோலின்வழியாக வேர்வை விஷங்கள் வெளிப்பட்டுக்கொண்டிருந்த மயிர்க்கால்கள் அடைபட்டமையின் அவ்விஷநீர் தடைபட்டுச் சரீரத்திற்றானே தங்கி, குடல் சுவாசக்கருவியாகிய நுரையீரல் மூத்திரக்கருவி முதலிய உள் யந்திரங்களை வியாதிக்குட்படுத்திப் பற்பல தொந்தரைகளையும் மோசங்களையும் விளைவிக்கும். (இன்னும்வரும்.)

கடவுள் துணை.

# விநோத விசித்திரப் பத்திரிகை.

## 1900-ம் ௵

புஸ்தகம் 1.] மேமீ 1௳ செவ்வாய்க்கிழமை. [No. 5

## கடவுணீதி.

ஓர் உன்னதமான மலையில் வசித்துக்கொண்டிருந்த சந்நியாசியொருவர், இவ்வுலகத்தில் நடக்கும் காரியங்களைக்கவனித்து, துன்மார்க்கர்களாயுள்ளவர்கள் தங்கள் நடத்தைக்கேற்கத் தாங்களடையவேண்டிய துக்கத்திற்குப் பதிலாகச் சுகம் அனுபவிப்பதையும், சன்மார்க்கர்களாயுள்ளவர்கள் தங்கள் நடத்தைக்கேற்கத் தாங்களடையவேண்டிய சுகத்திற்குப் பதிலாகத் துக்கம் அனுபவிப்பதையும் கண்கூடாகப் பார்த்துத் திகைப்புற்றவராய், இவ்வுலகத்திற்கு முதற்காரணர் பூரண நீதியுடையவராயின், இவ்வித மாறுதல்கள் நடத்தலெவ்வாறென்றெண்ணி, அவ்வெண்ணத்தினாற் பலபல சந்தேகங்களடைந்து மனவருத்தமுற்று, இவ்வித சந்தேகங்களையும் மனவருத்தத்தையும்நிவர்த்தித்துத் தெளிவையும்நிம்மதியையும் கொடுக்கவேண்டுமென்று கடவுளை நோக்கித் தியானம்செய்துகொண்டிருந்தார். இவ்வாறிருக்கும் சந்நியாசி ஓர்நாள் தமது தியானம் கலைந்து, அம்மலையடிவாரத்திலுள்ள ஓர் சுனையில் ஓடுகின்ற நீரோட்டத்தை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது ஓர் மனிதன் குதிரைமேலேறிச் சவாரிசெய்துகளைத்தவனாய், அச்சுனையினிடத்தில் வந்து சேர்ந்து குதிரையைவிட்டுக் கீழேயிறங்கி, தன்தோளில்மாட்டிக்கொண்டிருந்த பொற்காசுப்பையைக்கழற்றிக் கரையின்மேல் ஓர் ஓரத்தில் வைத்து

விட்டு,தண்ணீர்மொண்டுகுடித்துத் தாகசாந்திசெய்துகொண்டு இளைப்பாறித்திரும்பிப்போகையில், பொற்காசுநிறைந்த பையை எடுத்துக்கொள்ள மறந்து குதிரைமேலேறி வேகமாய்ப்போய்விட்டான். அவன் போன சற்று நேரத்திற்குள் வேறொரு பிரயாணி களைத்தவனாய்த் தண்ணீர் குடிக்க அங்குவந்தபோது, பொற்காசு நிறைந்த பையைப் பார்த்துப் பொட்டென்றெடுத்து மறைத்துக்கொண்டு அதி தீவரமாய் நடந்துவிட்டான். அதன் பின் சற்றுநேரம்பொறுத்து விறகுவெட்டுவோனொருவன் காடெங்கும் அலைந்து திரிந்து வெகு பிரயாசத்துடனே விறகுகளைவெட்டிப் பெருஞ்சுமையாக்கித் தலைமேற் சுமந்து களைத்தவனாய் அச்சுனைக்குவந்து சுமையை இறக்கிவிட்டுத் தண்ணீர் குடித்துத் தாகவிடாய் தணிந்து, தனதுஆயாசம் தீரும்பொருட்டு அக்கரையின்மேற் சற்றுநேரம் படுத்திருந்தான். அத்தருணத்திற் பையை மறந்துவிட்டுப்போன குதிரைச்சவாரிப்பிரயாணி வழியிற்போகையில் தன்பொற்காசுப்பையின் ஞாபகம்தோன்றி, திடீரென்று குதிரையைத்திருப்பி அதிவேகமாய் அச்சுனையண்டைவந்து, அதன்கரையெங்கும் தேடித் தன்பொற்காசுப்பையைக் காணாமையால், அங்குபடுத்திருந்த அவ்விறகுதலையனே இப்பையை எடுத்திருக்கவேண்டுமென நிச்சயித்துக்கொண்டு, அவனைப்பார்த்து நான் இங்குவைத்துப்போன பொற்காசுப்பைஎங்கே என்றான். அதுகேட்ட விறகுதலையன் வாஸ்தவத்தில் ஒன்றுமறியாதவனாகையால் உண்மையாகவே நானொன்றுமறியேன் என்றான். அப்போது குதிரைச்சவாரிப்பிரயாணி மிகவும் கோபாவேசங்கொண்டு, தன் உடைவாளையுருவி அவ்விறகுதலையனை ஒரேவெட்டாகவெட்டி, அவனுடையமூட்டை முடிச்சுகளைச்சோதித்துப்பார்த்துத் தன்னுடைய பொற்காசுப்பை அகப்படாமையால் மனவருத்தத்துடன் திரும்பிப்போய்விட்டான். இவையனைத்தையும் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த சந்நியாசியானவர், பெருமூச்செறிந்து, ஆ! கடவுளே!! ஒன்றுமறியாத ஏழையொருவன் அநியாயமாய்த் தன்னுயிரைப் பறிகொடுத்தானே. இதென்னவிபரீதம்! என்னஅலங்கோலம்!! அப்பொற்காசுப்பையை அபகரித்தவனொருவனிருக்கக் குற்றமற்றவிறகுதலையன் கொலையுண்டானே! என்றுமனம்பதறி நாக்குளறிப் புலம்பினார். அப்போது, "ஓ! சந்நியாசியே! இதைப்பற்றி உனக்கென்னகவலை? இது உன்னுடையவேலையல்லவே, உன்சொந்த வேலைகளிலுள்ள குற்றத்தையுணராத நீ பிறருடைய குற்றத்தை என் கவனிக்கநாடுகின்றாய். ஒருநிமிஷத்திற்குமுன் நீசெய்திருக்கிறவேலை இன்னதென்றும், ஒருநிமிஷத்திற்குப்பின் நீசெய்யப்போகிறவேலை இன்னதென்றும் மறதியுள்ளவனும் உணராதவனுமாகிய நீதானா சர்வஞானமும் சர்வசக்தியுமுடையஜகத்ரட்சகரின் கிர்த்தியத்தை அளந்தறியச் சக்தியுடையவன்? ஓ! தபோதனனே! தொடுத்தகருமத்தைமுடித்துவிடுவேனென்னும் தைரியமில்லாத நீதானா கோடானுகோடி அற்புதச்செயல்களை அடைவாகச் செய்துவரும் ஆண்டவருடைய கிர்த்தியத்தைக் கண்டறியப்போகின்றாய்? ஓ! ஞானியே! உனக்குச்சமீபத்திலுள்ளதும் உன்திருஷ்டிக்ககப்படக்கூடியதுமான ஒருபொருளினுண்மையைக்கூட அறிந்துகொள்ளக்கூடாதநீதானா, உனதறிவிற்குப் புலப்படாத அனந்தசக்தியையுடைய அறிவாளரின் அற்புதத்தை அளவிடப்போகின்றாய்? ஓ! யோகியே! உனது சுற்றத்தார்களின் அவாவைத் திருப்திசெய்யவலாதநீதானா, அண்டகோடிகளிலுள்ள சர்வான்மாக்களின் அபீஷ்டங்களனைத்தையும் அப்போதைக்கப்போது திருப்திசெய்விக்கும் அதிகாரஸ்தருடையதிருவுள்ச்செயலின்திறத்தைக்காண்பவன்? இது மதியீனம்! மதியீனம்!! அவருடைய கிரியைகள்உன்னுடைய பராக்கான பார்வைக்கு எவ்வாறு தோற்றினும் அதைப்பற்றி எப்போதும் உன்மனதிற்சந்தேகங்கொள்ளாதே. சர்வலோகாதிபரானவர் ஓரணுவளவும்பழுதுறாத நீதிபரரென்பதைமாத்திரம் உன் மனதில் உறுதியாய் வைத்துக்கொள். அவர்இவ்வுலகத்தையாளும்விதம் அணுவுக்கணுவாகவும் மகத்துக்கு மகத்தாகவும் உள்ளீடாகவேயிருந்து நடத்திவருவதாயிருக்கின்றது. கருவிகளையும் ஹேதுக்களையும் கொண்டே தமது திருவுளப்பாங்கை நடத்திவருகின்றார். மானிடர் இவ்விஷயங்களையுணராமையால், அவரது திவ்வியலட்சணங்களையும் அவரது அதிசயச்செயல்களையும் அறியாமல் ஐயமுறுகின்றார்கள். இது பிழையாகும். ஆகிலும் நீ இப்போது கண்டகாட்சியின் உண்மையை உணரவேண்டுமானால் இதோதெரிவிக்கின்றேன் கேள்.



பொற்காசுப்பையைக் கண்டெடுத்தவனுடையபிதாவின் ஆஸ்தியை அநேகவருஷங்களுக்குமுன்னே குதிரைச்சவாரிப் பிரயாணியின் தகப்பன் அபகரித்துக்கொண்டானாகையால், ஆஸ்தியை இழந்தவனுடைய குமாரன், ஆஸ்தியை அபகரித்தோன் குமாரனுடைய பொற்காசுப்பையைப் பெறும்படி செய்தோம். சிறிதுகாலத்திற்குமுன் விறகுதலையன் காட்டில் தனியேவந்துகொண்டிருந்த குதிரைச்சவாரிப் பிரயாணியின் தகப்பனைக் கொலைசெய்திருந்தான், அதனால் கொலையுண்டோன் குமாரனால் விறகுதலையன் கொலையுண்ணச்செய்

தோம். ஓ! தபசியே! காரியம் இவ்வாறிருப்பதனால், முன்னும் பின்னும் சம்பந்தமாயுள்ள விஷயங்களையறியச் சக்தியில்லாதநீ, கடவுளுடைய செயல்களைப்பற்றிச் சந்தேகங்கொள்ளும் மதியீனத்தை இன்றோடே விட்டு விடு,'' என்னும் அசரீரிவாக்குப்பிறந்தது. இவ்வசரீரியைக்கேட்டசந்நியாசி தம் மதியீனத்தையுணர்ந்து அத்தியந்த பணிவாய்க் கடவுளுக்கு வணக்கஞ் செலுத்தி, அவரை நோக்கி, சர்வஞானமும் பூரணநீதியுமுள்ள கடவுள் நீரே, உமக்குமறைவாயிருக்கும் இரகசியமொன்றுமில்லை, உமது நாமம் என்றும் துதிக்கப்படவேண்டும் என்று ஸ்தோத்திரம் செய்து தன் ஆசிரமத்திற்குப் போய்விட்டார்.

## நாடிப்பரிட்சை.

### 57 - நே. தொடர்ச்சி.

ஆரோக்கிய ஸ்திதியிலிருக்கும் சம்பூர்ணவயதுடைய ஆண்பாலாருக்கு நாடி வரிசைக்கிரமமாய்நடக்கும். ஆரோக்கியஸ்திதியிலிருக்கும் பெண்பாலாருக்கும் குழந்தைகளுக்கும் நாடி அதிகதீவரமாய் நடக்கும். அன்றியும் அவைகள் சன்னமாயுமிருக்கும். வயோதிகப்பருவத்தில் நாடிநரம்பின்புரைகள் கொஞ்சம் உறுதியுள்ளனவாதலால் நாடிகள்வலுவுள்ளனவாய் விரல்களுக்குத் தட்டுப்படும். இதனடியிற்கண்ட அட்டவணையில் வயதிற்குத்தக்கபடி ஒருமினிட்நேரத்தில் நாடியசைவின் பிரமாணம் இவ்வளவென்று காட்டியிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| அப்போதுதான் பிறந்தசிசுவுக்கு | மினிட் | 1-க்கு | 140-தரம் அடிக்கும் |
| பாலியத்தில் | டி | டி | 120முதல் 130-தரம் வரையில் அடிக்கும் |
| குழந்தையில் | டி | டி | 100-தரம் அடிக்கும் |
| யவ்வனத்தில் | டி | டி | 90 டி டி |
| சம்பூர்ணபருவப்புருஷனுக்கு | டி | டி | 70 முதல் 75 - தரம் வரையில் அடிக்கும் |
| சம்பூர்ணபருவப்பெண்ணுக்கு | டி | டி | 75-முதல் 80-தரம் வரையில் அடிக்கும் |
| க்ஷீணபருவத்தில் | டி | டி | 70-தரம் அடிக்கும் |
| வயோதிகப்பருவத்தில் | டி | டி | 75-தரம் முதல் 80-தரம் வரையில் அடிக்கும். |

வேறுவிதங்களாலும் நாடிநடை பேதப்படும்,

| | | | |
|---|---|---|---|
| மனிதன் நிற்கும்போது | மினிட் | 1-க்கு | 79-தரம் அடிக்கும் |
| டி உட்கார்ந்திருக்கையில் | டி | டி | 70 டி |
| டி படுத்திருக்கையில் | டி | டி | 67 டி டி |



ஆகையால் படுத்திருக்கும்போதும் உட்கார்ந்திருக்கும்போதும் நாடியைப் பரிட்சிக்கவேண்டும். நடந்துவந்ததனாலே சரீரம் அலண்டிருந்தால், நாடிநடை படபடத்திருக்கும். நித்திரையில் நாடிநடை தணிந்திருக்கும். சாப்பாடு சூடானபதார்த்தங்கள் சாராயம் புகையிலைமுதலிய லாகிரிவஸ்துக்கள் என்னும் இவைகளால் நாடிநடை தீவரப்படும். வெய்யில் ஜலம் நித்திரைபங்கம் மனச்சஞ்சலம் அதிக துர்ப்பலம் இரத்தப்பெருக்கு முதலியவைகளால் நாடிநடைக்குப்படபடப்புக்காணும். மினிட் ஒன்றுக்கு 75-தரம் அடிக்கவேண்டியநாடி இவ்வாறான ஹேதுக்களினாலே, மினிட் ஒன்றுக்கு 100-தரம் 120 -தரம் சிலதருணங்களில் 200-தரம் என்னும் இவ்வாறுயரும். குளிர் அதிக நித்திரை பசி வியசனம் என்னும் இவை முதலியவைகளினால் நாடிநடைமந்தப்படும். அப்போது மினிட்ஒன்றுக்கு66-தரம் 55-தரம் என்னும் இவ்வாறு குறையும். ஆரோக்கியஸ்திதியிலிருக்கும் சம்பூர்ணவயதுடைய புருஷனுக்கு மினிட் ஒன்றுக்கு 70-முதல் 75-தரம் வரையில் அடிக்கும். இதுதான் கிரமநாடி. இத்தொகைக்கு மேற்பட்டாற் படபடத்த நாடியென்றும் குறைந்தால் மந்தநாடியென்றும் பெயர். (இன்னும்வரும்).

## விஷநிவாரணி.

இது பாம்புகடி விஷநாய்கடி தேள்கொட்டுமுதலிய சகலவிஷங்களையும் நிர்மூலமாக்கி நற்சுகத்தைக்கொடுக்கக்கூடிய சஞ்சீவிக்கொப்பான ஔஷதம் என்று ப்ரான்ஸ் தேசத்தின் பிரதான பட்டணமாகிய பாரிஸ்நகரத்தில் வசிக்கும் ஒருயோகீஸ்வரர் சொல்லுகின்றார்:—

கலைமான்கொம்பைக் கொண்டுவந்து விரல்நீளமும் விரல்கனமும் இருக்கும்படி துண்டுதுண்டாய் நறுக்கி 5 அவுன்ஸ் நிறுத்துக்கொண்டு 4-படி ஜலம் கொள்ளத்தக்க வாய் அகன்ற ஒருபுதிய மட்பாண்டத்தில் அரைவாசி ஆற்றுமணலைக்கொட்டி டி மான்கொம்புத் துண்டுகளை அந்தமணலுக்கு நடுவில்வைத்துப் பானைக்கு முக்கால்வாசி ஜலம் ஊற்றிப்பிறகு கருவேலம்பட்டை 1 அவுன்ஸ் அன்னபேதி 2-திராம்—ரூபார்ப் (Rhubarb) 2 - திராம்-ஆகிய இவைகளை நன்றாயிடித்து அந்தப்பானையிற்போட்டு அடுப்பில் வைத்து எரித்து, நீர்வற்றி டி மான்கொம்புத்துண்டுகள் கறுப்பாகிறவரையில் ஓர் கரண்டியினாற் கிளறிக்கொண்டேயிருக்கவேண்டும். டி மான் கொம்புத்துண்டுகள் கறுப்பானவுடனே பானையைக் கீழே இறக்கி ஆறியபின்பு டிகொம்புகளையெடுத்து ஒருதுண்டுடனே மற்றொருதுண்டைச் செவ்வனே

தேய்க்கவேண்டும். அந்தத்துண்டுகள் யாவும் பாலிஷ் ஆகிறவரையில் அதாவது மிருதுவாய்ப் பளபளப்பாகிறவரையில் தேய்த்து முலைப்பால் அல்லது சீர்மைத்திராட்சக்காடியில் அரைமணிநேரம் அவைகளை முழுகவைத்துப் பிறகெடுத்துப் பத்திரப்படுத்திக்கொள்ளவும்.

விஷந்தீண்டியவுடனே கடிவாயில் இந்த மான்கொம்புத்துண்டுகளில் ஒன்றை வைத்தால் உடனே அதைப்பிடித்துக்கொண்டு, விஷம் முழுவதும் உறிஞ்சியபிறகு விட்டுவிடும். அதன்பின் அக்கொம்பை எடுத்து முன்போலவே முலைப்பால் அல்லது காடியில் அரைமணி நேரம் முழுகவைத்தால் அவ்விஷத்தைக் கக்கிவிடும்.

சிலந்திக்கட்டிகளிலுள்ள சீய் துர்நீர் முதலியவைகளை எடுப்பதற்குக் கட்டி பழுத்தபிறகு கொஞ்சம் கீறிவிட்டு இந்தக்கொம்புத்துண்டை வைத்தால் அச்சீய் துர்நீர் முதலியவற்றை உறிஞ்சிவிடும். அதன்பின் முன்போலப் பாலில் ஊறவைத்துச் சீய் அல்லது துர்நீரைக் கக்கவைக்கவேண்டும்.

இந்தக்கொம்பைத்தண்ணீர்வார்த்திழைத்து உள்ளுக்குக்கொடுத்தால், காக்கைவலி முதலிய சகல வலிகளையும் நிர்மூலமாக்குவதோடு வயிற்றிலுள்ள பூச்சிகளைப்போக்கித் தலைநோயையும் சவுக்கியமாக்குமென்று, முற்கூறப்பட்டுள்ள யோகீஸ்வரர் மிகவும் நிச்சயமாகச்சொல்லுகிறார், இது மிகவும் சுலபமான பாகமானதால் யாவரும் செய்து பரீட்சித்துப் பார்க்கலாம்.

## குழந்தைகளின் பாதுகாப்பு.

மானிடர்களாகிய நாம் நமக்கு அழகானகுழந்தைகள் பிறக்கவேண்டுமென்றும், அவைகள் சுகசரீரிகளாய்ப் பூரணாயுளுடனிருக்கவேண்டுமென்றும் விரும்புவது நம்மனைவர்க்கும் இயற்கையல்லவா? அவ்வித புத்திரப்பேற்றையடைவதற்குத் தாய்தந்தையர் அறிவாளிகளாயிருக்கவேண்டியது அத்தியாவசியம். ஏனெனில், அறிவாளியானவன், தான் எண்ணியஎண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு முன்பின்நேரிடும் விஷயங்களைச் செவ்வனேயாலோசித்துத் தன்எண்ணத்திற்குப் பிரதிகூலமானவற்றை நீக்கி அனுகூலமானவற்றையே தேர்ந்து ஒழுங்கானமுறைமையில் நடந்துகொள்ளுவான். அறிவற்றவனோ தனக்கு நன்மைவிளைக்கக்கூடியவை இவையென்றும் தீமைவிளைக்கக்கூடியவை இவையென்றும் உணரும் திறமையில்லாமையால், தன்மனம்போனவழியேநடந்து பெருந்துன்பங்களை விளைத்துக்கொள்ளுவான். ஆகையால் மாதாபிதாக்கள் புத்திகோசரமுடையவர்களானால்அழகும் சுகசரீரமுமுள்ளகுழந்தைகளைப்பெறலாம். இதன் விவரத்தை அடியிற்குறிக்கும் விஷயங்களால் அறிந்துகொள்ளலாம்.

"தாயைப்போற்பிள்ளை நூலைப்போற்சீலை" என்னும்பழமொழிப்படியே, தாய்தந்தையர் சுகசரீரிகளாகவும் பலசாலிகளாகவுமிருந்தால் குழந்தைகளும் அவ்வாறேபிறப்பதற்குத் தடையில்லை. பெற்றோர் பலஹீனர்களாகவும் பிணியாளர்களாகவுமிருக்கின் பலர்ஷ்டிகமும் சுகசரீரமும் வாய்ந்தபிள்ளைகளை எவ்வாறு பெறுவது. நமது இந்துதேசத்தின் அநேகபாகங்களில் வழக்கமாய்விட்ட பாலியவிவாகம் மிகவும் கெடுதியைவிளைவிக்கத்தக்கதாயிருக்கிறது. மானிடசரீரத்திலுள்ள உறுப்புக்கள் ஆண்பாலாருக்கு 25-வயதிலும் பெண்பாலாருக்கு 20-வயதிலும் பூரணவளர்ச்சியடைகிறபடியால், இவ்வயதுகளுக்கு மேற்பட்டே ஆண்பால் பெண்பால் என்னும் இருதிறத்தவர்க்கும் சம்போகத்திற்குப் பக்குவகாலம் வாய்க்கிறதென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தப்பக்குவ வயதிற் குழந்தைகள் பிறந்தால் அவைகள் அழகுள்ளவைகளாகவும் பலமுள்ளவைகளாகவும் சுகசரீரமுள்ளவைகளாகவும் ஆயுள்விர்த்தியுள்ளவைகளாகவுமிருக்கும். இன்னும்ஆண்பாலாருக்கு 22 வயதிற்குமேற்பட்டும் பெண்பாலாருக்கு 18 வயதிற்கு மேற்பட்டும்உறுப்புக்கள் பூரணவளர்ச்சிக்குச் சமீபித்துவிட்டபடியால், அப்போது சம்போகம் நிகழ்ந்து குழந்தைகள் பிறந்தபோதினும் அவைகளும் மேற்சொல்லிய லட்சணங்களமைந்த குழந்தைகளாயிருக்குமென்று சிலசாத்திரங்கள் கூறுகின்றன. ஆனால், கேவலம் பாலியவயதாகிய 12-14-16-வது வயதுகளில்சம்போகித்துக் குழந்தைகள் பிறந்தால், அவை பிஞ்சிலே பழுத்த பழத்தைப்போன்று அவலட்சணமாகவும் பலஹீனமாகவும் அற்பாயுளுடையவைகளாகவுமிருக்கும். அக்குழந்தைகளைப் பிறந்தவுடனேபார்க்கும்போது எலிக்குஞ்சுகளைப்போலவும் பூனைக்குட்டிகளைப்போலவுமிருக்கும். செவ்வனே பக்குவம் வாய்த்த பின்பு பழுத்த ஓர் பழத்தின் விதையை நாட்டினாற் செடிகள்செழிப்பாகவும் உறுதியாகவும்வளர்ந்து மிகமாதுர்யமானகனிகளை விசேஷமாய்க்கொடுக்கும். பக்குவம் வாய்க்காதகனியின் பிஞ்சுவிதையைநாட்டினாற் செடிகள் நறுங்கிப்போய்க் கனிகளைக் கொடாமற் சீக்கிரத்தில் உலர்ந்துவிடும். அதுபோலப் பாலியவயதுள்ள ஆண்பால் பெண்பால் என்னும் இருதிறத்தவரின் சுக்கிலசுரோணிதம் இளசாயிருப்பதால், அதனாலே பிறக்கும் சிசுக்களும்

பலஹீனமுடையவைகளாயும் பிணியுள்ளவைகளாயும் அற்பாயுளுள்ளவைகளாயுமிருக்கும். இன்னும் இவ்வாறு பிஞ்சிலேபழுத்த தாய்தந்தையருக்குக் குழந்தைகள் பிறந்தாலும் அவைகளைக்காப்பாற்றச் சக்தியிருக்குமாவென்று கவனிப்போம்.

இந்தப் பாலிய தாய்தந்தையர்கள் இப்பிரபஞ்ச விவகாரங்கள் முழுவதையும் அறிந்துகொள்ளச் சக்தியடையாமல், தங்கள் தாய்தந்தையரின் உபகாரத்தையே முற்றிலும் எதிர்பார்க்கத்தக்க பருவமுடையவர்களாயிருப்பதால்; இவர்கள் ஒரு குழந்தைக்குத் தாய்தந்தையர்களானால் குழந்தையை எப்படிக்காப்பாற்றுவார்கள்? அன்றியும் தாங்களே இன்னும் குழந்தை என்னும்பருவத்தைக் கடக்காதவர்களாதலால், தங்களுக்குக்குழந்தை பிறப்பதென்றால் குழந்தைக்குக் குழந்தையைக் காப்பாற்றும் இயல்பு எப்படியுண்டாகும்? மாதா பிதாக்களுக்கு மக்களைப்பாதுகாக்க வேண்டிய முறைமை நன்றாய்த்தெரிந்திருக்கவேண்டியதவசியம். அப்படியிருக்க, மாதாபிதாக்களாதற்குப் பருவம் வாய்க்காத குழந்தைகள் மக்களைப்பாதுகாக்கும்தொழிலை மேற்கொள்ளுதல், அரிவருக்கமெழுதவறியான் அருங்காவியத்தை அரங்கேற்றுதல் போலாம். தனக்குத்தெரியாத காரியத்திற்பிரவேசிப்பவன் அவமானமடைந்து அலங்கோலப்படுவானென்பதுபோல, பாலியத் தாய்தந்தையர்கள் தங்கள் பாலர்களைப்பாதுகாக்கப்பலகாலும் துன்பமடைவதன்றியும் அறியாமையினால் தங்கள் பாலரையும் அனியாயமாய்க் கொன்றுவிடுவார்கள். (இன்னும் வரும்.)

## (52) நெருப்புக்காயங்களும் சிகிச்சைகளும்.

68 - ம் - பக்கத்தொடர்ச்சி.

நெருப்புக்காயத்திற்கு உடனே செய்யவேண்டிய மிகவும் முக்கியமான காரியம் என்னவென்றால், நெருப்புக்காயத்தின்மேற் கொஞ்சமேனும் காற்றுப்படாமல் காக்கவேண்டும். நெருப்புப்பட்டவுடனே எவ்வளவு சீக்கிரத்தில் அக்காயத்தின்மேல் காற்றுப்படாமற்செய்கிறோமோ அவ்வளவு சீக்கிரத்தில் நோய் குறைந்து காயம் ஆறிப்போம், இதற்காகப் பின்காட்டிய பக்குவங்களைச்செய்யலாம்.

தெளிந்த சுண்ணாம்புத்தண்ணீரையும் தேங்காயெண்ணெய் அல்லது நல்லெண்ணெயையும் சரிபாகமாயெடுத்துக் கலப்பதனாலுண்டாகும் பால்போன்ற தைலத்தை நெருப்புக்காயங்களின் மேல் நன்றாய்ப்பூசி அதன்மேல் துணியைச்சுற்றிவைத்தால் மிக்க பிரயோசனமுண்டாகும்.



கருவேலம்பிசின் அல்லது விளாம்பிசின் எடுத்துத்தண்ணீரிற் சேர்த்துப் பசைசெய்து காயத்தின்மேல் நன்றாய்ப்பூசினால் உடனே குணமுண்டாகும்.

மெல்லிதான கோதுமைமா அரிசிமா சீர்மைச்சுண்ணாம்புத்தூள் என்னும் இவைகளைக்காயத்தின்மேற் கனக்கத்தூவிவைத்தால், அக்காயத்தின்மேற்காற்றுப்படாது, அன்றியும் அக்காயத்திலிருந்து சுரக்கும்நீரைச் சுவற்றிக்கொள்ளும்.

வெட்டின மிருதுவான பருத்திப்பஞ்சை எடுத்து எண்ணெயில் தோய்த்தாவது தனியாயாவது நெருப்புக்காயங்களின்மேல் நன்றாய்ப் பொதிந்துகட்டிவைத்தாற் பிரயோசனமுண்டாகும்.

படிகாரம் அன்னபேதி என்னும் இவற்றை வெறும்ஜலத்தோடாவது கடுக்காய்த்தண்ணீரோடாவது சேர்த்துக் காயத்தின்மேற் போட்டால் குணமாகும். இவ்வாறே (இங்கி) எழுதுகிற மையையும் போடலாம்.

பிராந்தி சாராயம் மயில்துத்தம் பால்துத்தம் என்னும் இவற்றை ஜலத்திற் சேர்த்து உபயோகிக்கலாம், இவைகள் முந்தி எரிவை யுண்டாக்கினபோதிலும் சற்று நேரத்திற்குள்ளே குணத்தை யுண்டாக்கும்.

நெருப்புப்புண்களின்மேற் பொருக்குகளுண்டானால் மாவைக் கிளறிப் போல்டிஸ் கட்டிவரவேண்டும். சிலவேளை நெருப்புப்புண்களிலிருந்து வடியும்நீர் ஓர்வகைக் கரகரப்புள்ளதாயிருந்து, அது பட்ட இடங்களிலெல்லாம் புண்களையுண்டாக்கும். இப்படிப்பட்ட புண்களின்மேல் சீர்மைச்சுண்ணாம்புத்தூளைத் தூவுகிறதினாலும், மாவைக் கிளறிப் போல்டிஸ் கட்டுகிறதினாலும் குணமுண்டாகும்.

கொதிக்கிற ஜலம் முதலியவற்றால் கொப்புளங்களுண்டானால், அவைகளை ஊசியாற் பத்திரமாய்க்குத்தி உள்நீரை வடித்துவிட்டபின்பு மேற்சொல்லிய மருந்துகளைப் பிரயோகிக்கவேண்டும். கொப்புளத்துத்தோலையுரிக்கலாகாது. அவ்வாறு செய்தால் புண்ணிற் சீய்கோத்துத் தொந்தரையுண்டாம்.

நெருப்புக்காயத்தினால் நோய் அதிகமாயிருந்தாலும் அல்லது நித்திரை பிடியாதிருந்தாலும் வயதிற்கேற்றவாறு அளவுப்படுத்தி அபினைக்கொடுக்கலாம். பெரியவர்களுக்கு ஒருவேளைக்கு ஒரு குண்டுமணியின் நிறை அபினைக்கொடுக்கலாம். சிறு பிள்ளைகளுக்கு இவ்வபினைக்கொடுப்பது நல்லதல்ல.

கடுமையான நெருப்புக்காயம் பட்டவுடனே உண்டாகும் மயக்கத்திற்குக் கொஞ்சம் பிராந்தியும் ஜலமும் கொடுத்தால் நல்லது. மலக்கட்டாயினும் சுரமாயினும் கண்டிருந்தால், சிற்றாமணக்கெண்ணெய் எப்ஸம்ஸால்ட் (Epsom Salt)என்னும் உப்பு முதலிய குளிர்ச்சியான பேதிமருந்துகளைக் கொடுக்கவேண்டும்.

சுவாசவநத்தம் நேரிட்டால் ஒருதொட்டியில் வெந்நீர் வார்த்து அதிற் கொஞ்சம் நேரம் உட்கார்ந்து, நெருப்புப்பட்ட பாகந்தவிர மற்றைப்பாகங்களெல்லாம் வெந்நீர் படும்படிசெய்யவேண்டும். பின்பு கடுகையரைத்து மார்பின்மேற் போல்டிஸ்செய்து போடவேண்டும்.

நெருப்புக்காயங்கள் ஆறிவரும்போது தோல் சுருங்கிப் பலசங்கடங்களையும் அந்தக்கேட்டையும் உண்டாக்குமாதலால், அச்சமயத்தில் வெகு எச்சரிக்கையாய்க் காயம்பட்ட பொருத்துக்களை நீட்டிவைத்துக்கொண்டு, சற்றுநேரத்திற்கொருமுறை அவைகளைநீட்டிமடக்கியசைத்தும் வரவேண்டும்.

கழுத்தில் நெருப்புக்காயம்பட்டால் தலையை நிமிர்த்திவைத்துக்கொண்டிருக்கவேண்டும். இல்லாவிடில் கழுத்துத்தோல் சுருங்குவதாலே தாடையும் நெஞ்சும் பொதிந்து முகம்கவிழ்ந்துவிடும்.

முழங்காற்பொருத்திற் காயம்பட்டால் காலைநீட்டி வைத்திருக்கவேண்டும். இல்லாவிடில் பின்பு நீட்டமுடியாமல் அது மடங்கிப்போய்விடும். இதைத்தான் காடுகெட்டிக்கொண்டதென்பார்கள்.

நாசித்துவாரம்முதலிய சரீரத்துவாரங்களில் நெருப்புக்காயம்பட்டால், அவற்றுள் எண்ணெய்ச்சீலையை வைத்துவரவேண்டும். அவ்வாறு வைத்துவராவிட்டால், அத்துவாரங்கள் அடைபட்டுப்போம்.

அக்குள் அரை விரற்சந்துகள் முதலிய இடங்களில் நெருப்புக்காயம்பட்டால், எதிர்பக்கங்கள் ஒட்டிக்கொள்ளாதபடி இடையில் எண்ணெய்ச்சீலை போட்டுவரவேண்டும்.

மேலேகூறிவந்த சிகிச்சைகளனைத்தும் ஒவ்வொருவருக்கும் முக்கியமாய்த் தெரிந்திருக்கவேண்டியது அவசியமாகையால், அவரவரும் இவைகளைச் செவ்வனே கவனத்தில் வைக்கவேண்டும்.

## கைத்தொழில்.

### 53. நேர்த்தியான கறுப்பு இங்கி.

கடுக்காய்த்தூள் பலம்-11 அன்னபேதித்தூள் பலம்-8 ஆல்கஹால்திராவகம் அதாவது றெக்டிபைட் ஸ்பிரிட்ஸ்ஆவ்ஒயின் (Rectified spirits of wine) பலம்-3 உயர்ந்த நீலப்பவுடர் பலம்-1 ஜலம் பலம்-77.



இவற்றுள் நீலப்பவுடரை ஸ்பிரிட்ஸ்ஆவ்ஒயினில் போட்டு மூடிவைத்தால் 3மணி நேரத்திற்குள் கரைந்துபோகும். கடுக்காய்த்தூளை ஜலத்திற்போட்டுக் காய்ச்சிச் செவ்வனேகொதிவந்தபின், அன்னபேதித்தூளை அதிற்போட்டுக்காய்ச்சி இறக்கிவைத்து ஒருமணிநேரத்திற்குப் பிறகு வடிகட்டி நீலப்பவுடரைக்கரைத்திருக்கும் ஆல்கஹால்திராவகத்தை எடுத்துக்கலந்து மறுபடியும் வடிகட்டிப் புட்டியிலடைத்து வைத்துக்கொள்ளவும், இது மிகவும் நேர்த்தியான இங்கி.

### 54. சிவப்பு இங்கி.

ஸ்பிரிட்ஸ் ஆவ் ஒயின் (Spirits of wine) பலம்-$18\frac{1}{2}$ மஜண்டாபவுடர் பலம்-$1\frac{7}{8}$ சுத்தஜலம் பலம்-125 விளாம்பிசின் பலம்-$7\frac{1}{2}$ இவற்றுள் மஜண்டா பவுடரை ஸ்பிரிட்ஸ் ஆவ் ஒயினிற்போட்டு, 3மணி நேரம் மூடிவைக்கக்கரைந்துபோகும். விளாம்பிசினை ஜலத்திற்போட்டுக்கொதிக்கவைத்திறக்கி, இளஞ்சூடாயிருக்கிறசமயத்தில் பவுடர்கரைந்திருக்கிற திராவகத்தை அதிற்கொட்டிக்கலந்து வடிகட்டிப் புட்டியில் வார்த்துக்கொள்ளவும்.

### 55. ஊதா இங்கி.

மேலே கூறியுள்ள மஜண்டாபவுடருக்குப் பதிலாக ஊதாப்பவுடரை வாங்கி எல்லாச் சாமான்களையும் அதே அளவாயெடுத்துக்கொண்டு முன்போல் இங்கிசெய்து கொள்ளவும்.

### 56. நீல இங்கி.

உயர்ந்த நீலப்பவுடர் பலம்-3. ஆக்ஸாலிக் ஆஸிட் (Oxalicacid) பலம்-1 விளாம்பிசின் பலம்-1 ஜலம் பலம்-30. இவற்றுள் ஆக்ஸாலிக் ஆஸிட்டில் நீலப்பவுடரைக் கலந்துகொள்ளவும், விளாம்பிசினை ஜலத்திற்போட்டுக் கொதிக்கவைத்திறக்கி இளஞ்சூடாயிருக்கும் சமயத்திற் கரைந்திருக்கும்நீலப்பவுடரைஅதிற்கொட்டிவடிகட்டிக்கொள்ளவும்.

### 57. பச்சை இங்கி.

உயர்ந்த பச்சைப்பவுடர் அவுன்ஸ் 2 - க்ரீம் ஆவ் டார்டார் (Cream of tartar) அவுன்ஸ் 1 - ஜலம் அவுன்ஸ் 12-இவைகளை ஒன்றாய்க்கலந்து செவ்வனே கொதிக்கவைத்திறக்கி ஆறியபின் வடிகட்டிக்கொள்ளவும்.

## Sealing wax.

### 58. முத்திரைபோடும் அரக்கு.

கறுப்புவர்ணமுள்ள அரக்கு :— வெனிஷியன்டர்பன்டைன்

(Venetian turpentine) பலம்-183. அவலரக்கு பலம்-300. ரோஜனம் பலம்-16½. தேவையுள்ளவரையில்லாம்ப்ளாக், இவற்றுள் அவலரக்கையும் ரோஜனத்தையும் செவ்வனே தூள்செய்து ஒருபாண்டத்திற்போட்டு அடுப்பிலேற்றிச் சிறுதீயாயெரிக்கவும். சாமான்களெல்லாம்செவ்வனே உருகியபின்பு லாம்ப்ளாக்தூளைப்போட்டுக்கிளறித் தீயை எரிக்காமல் நெருப்புத்தணலில்வைத்துக்கொண்டு, வெனிஷியன் டர்பன்டைனை அதில்விட்டுக்கிளறியபிறகு, முன்னமேநனைத்துவைத்திருந்த மேடுபள்ளமில்லாமல் மெருகமைந்த ஒரு கருங்கல்லின்மேல், ஒருகரண்டியால் மொண்டுவார்த்து, கையில்தண்ணீரைத்தொட்டுக்கொண்டு தேவையுள்ளவரையில் பருமனாகவும் நீளமாகவும் அதைச்சுருட்டிச்செவ்வனேயுருட்டி ஜலத்திற்போட்டுவிடவும். இவ்வாறாகவேசுருட்டியுருட்டி ஜலத்திற்போட்டுக் கொண்டேவந்து, பிறகுஅவற்றையெல்லாம் எடுத்துப்பெட்டியில்பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

## 59. தோலுக்குப்போடுகிற கறுப்புவார்னிஷ்.

அவலரக்கு பலம்-12. வெள்ளைக்கற்பூரத்தைலம் பலம்-5. (Sandarch) ஸாண்டார்ச் பலம்-2. லாம்ப்ளாக் பலம்-1. ஸ்பிரிட்ஸ்ஆவ் டர்பன்டைன், பலம்-4. ஸ்பிரிட்ஸ் ஆவ்ஒயின் (Spirits of wine)பலம்,96. இவற்றுள், 1-வது 3-வது ஆகிய இரண்டுசாமான்களையும் தூள்செய்து ஒருபாண்டத்திற் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து, உருகினபிறகு லாம்ப்ளாக்கைத்தூள்செய்து அதிற்போட்டுக்கிளறவும், பிறகு கீழே இறக்கி ஸ்பிரிட்ஸ் ஆவ் ஒயினை அதில்விட்டுக்கிளறிக் கற்பூரத்தைலத்தைவிட்டுப் பிறகு ஸ்பிரிட்ஸ் ஆவ் டர்பன்டைனைவிடவும். இவையாவும் கலக்கும்படி கிளறி ஆறவிட்டுப் புட்டியில் வார்த்துக்கொள்ளவும்.

## 60. பட்டுவஸ்திரங்களிலுள்ள எண்ணெய்ச்சிக்கெடுக்க.

அப்பளாகாரம் ஆஸ்ட்ராகாம் சர்க்கரை எலுமிச்சம்பழரசம் என்னும் இவைகளை நிதானமாய் எடுத்துக் கொஞ்சம் ஜலத்திற்கரைத்து, அதிற்பட்டுவஸ்திரத்தைத் தோய்த்து ஓரிரவு ஊறவைத்து மறுநாள் துவைத்தால் அழுக்கெல்லாம் நீங்கி நூதனவஸ்திரத்தைப்போற் பளபளப்பாயிருக்கும்.

## பாகசாஸ்திரம்.

### 61. வாதுமைப்பருப்புசேர்ந்த கோதுமை அல்வா.

அரைப்படி கோதுமையைப் பக்குவமாய் வறுத்து ஜலத்தில் இரண்டுநாள் ஊறவைத்தெடுத்து, வெண்ணெய்போலரைத்து 3-படி ஜலத்திற்கரைத்து, வேறொருபாத்திரத்தின் வாயில் ஒருமெல்லியசீலை போட்டு, அதை அதில்எடுத்துவிட்டு வடிகட்டிக்கொண்டு, அந்தபாண்டத்தின் வாயைமூடி அசையாமல் 2-மணிநேரம்வைத்திருந்து, பிறகு அதைக்கலக்காமல் அதன்தெளிவான ஜலத்தைவடித்துவிட்டு, அடியிலிருக்கும் குழம்புபோன்ற கூழை எடுத்துக்கொள்ளவும்.



நல்லஜலம் படி காலேயரைக்கால், நெய்பலம் ஒன்று, இவ்விரண்டையும் ஒன்றாய்ச்சேர்த்து அடுப்பில்வைத்துக்காய்ச்சி, அது செவ்வனே கொதிவந்தபிறகு, மேல்தோல்நீக்கிய வாதுமைப்பருப்பு பலம் 5. நொய்போற்பொடிசெய்தகற்கண்டுபலம்-5. சீனிச்சர்க்கரை பலம் 20. ஏலரிசிப்பொடி பலம்-¼. ஜாதிக்காய்த்தூள் பலம்-அரைக்கால். என்னும் இவ்வைந்துவஸ்துக்களையும் கொதித்துக்கொண்டிருக்கும் ஜலத்திற்போட்டு, (வாதுமைப்பருப்பைப்போட்டு 5. நிமிஷங்கட்குப் பின், மற்றவஸ்துக்களைப்போடவேண்டும்.) நன்றாய்க்கொதிக்கும்போது, முன்பு சித்தப்படுத்திவைத்திருக்கும் கோதுமைக்கூழை அதிற்கொட்டி மொத்தையாகும்வரையிற் கிளறிக்கொண்டேயிருந்து, அத்தருணத்தில் அரைவராகனெடை குங்குமப்பூவைப் பாலிலரைத்து அதிற்போட்டுக்கிளறவும். விடாமற்கிளறிக்கொண்டேயிருந்து கையிலெடுத்து உருட்டினாற்றிரளும் பக்குவத்தில் இறக்கி, சுத்தமான ஓர்தாம்பாளத்தில்நெய்தடவி, அதில்அல்வாவைக்கொட்டி, மூன்றங்குலம் கனமுள்ளதாய்ப் பரப்பிவைத்து, இறுகியபின்பு ஓர்கத்தியினால் சதுரமாகக்கீறிப் பில்லைகளாக்கி எடுத்துவைத்துக்கொள்ளவும்.

### 62. கோதுமை அல்வா.

கல் மண் உமிநீங்கிய கோதுமை படி-1. நெய் வீசை-1¼. ஆஸ்ட்ராகாம்சர்க்கரை வீசை-4. என்னும் இவற்றுள், கோதுமையை இரண்டுநாள் ஊறவைத்து எடுத்து வெண்ணெய்போலவரைத்து 4-படி ஜலத்திற்கரைத்து, வேறொரு பாத்திரத்தில் மெல்லிய துணிபோட்டு அதில் இதைவடிகட்டி, அந்தபாண்டத்தின்வாயை மூடி அசையாமல்இரண்டுமணிநேரம்வரையில் ஓரிடத்திலேவைக்கவும். பிறகுஅதைக்கலக்காமல் தெளிவான ஜலத்தைவடித்துவிட்டு, அடியிலிருக்கும் குழம்புபோன்ற கூழை எடுத்துவைத்துக்கொள்ளவும், (இந்தக்கூழைக்காயவைத்துப் பவுடராக எடுத்துக்கொண்டால்அதற்குநிஷாஸ்தாவென்று பெயர் சொல்லப்படும்.) ஒரு வாயகன்ற செப்புப்பாத்திரத்தில் முன்கூறிய கூழைவிட்டுக் கொஞ்சம் நெய்யும்விட்டு ஒருஅழுத்தமான துடுப்பினாற் கிளறவேண்டும். ஏற்கெனவே சர்க்கரையைப் பாகுகாய்ச்சிவைத்துக்கொண்டு, கிளறுகிற அல்வாவில் இந்த சர்க்கரைப்பாகிற் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு நெய்யையும் அவ்வாறே கொஞ்சம் கொஞ்சமாய்விட்டு, நன்றாய்க்கிளறவேண்டும். நெய் சர்க்கரைப்பாகு முதலியவைவிட்டபிறகும் கிளறிக்கொண்டேவரவேண்டும். ஓயாமற் கிளறிச் சரியான பதத்திற்கு வரும்போது அல்வா மெழுகுபோல் திரண்டு முன் இழுத்துக்கொண்ட நெய்யிற் சிலபாகத்தைக் கக்கும். அப்போது இறக்கி ஒரு பாத்திரத்தில் எடுத்து வைத்துக்கொள்ளவும். அல்வா ருசியாயிருக்கும். எத்தனைநாளிருந்தாலும் கெட்டுப்போகாது, கக்கினநெய்யைவடித்துவைத்துக்கொள்ளவும். இந்த நெய்யை எதற்கும் உபயோகித்துக்கொள்ளலாம்.

## ஜாலம்.

### 63. ஜனங்கள்முகத்தைப் பச்சைவர்ணமாய்க்காட்டுவதற்கு.

ஸ்பிரிட்ஸ் ஆவ்வையினில் ( Spirits of wine ) கொஞ்சம் உப்பும் மஞ்சளும் தூள்செய்து போட்டால் கரைந்துபோகும். அதன்பின் அதில் ஒருதிரியைநனைத்து ஓர்இருட்டறையிற் கொளுத்தினால், அங்குள்ளவர்கள் முகமெல்லாம் பச்சையாய்த்தோற்றும்.

### 64. பேசுந் தலை.

இந்த ஜாலவித்தையை இத்தேசத்தில் திருவிழாமுதலிய விசேஷகாலங்களில் அநேகர்கண்ணுற்றிருந்தும் அதன்சூட்சுமம் இன்னதென யாரும் அறிந்தாரில்லை. வேடிக்கையைப் பார்ப்பதற்காகப் பலர் ஓரறைக்குட்சென்ற சிலநிமிஷங்கள் பொறுத்து, அங்குவேடிக்கை காட்டுவோன் ஒருதிரைச்சீலையைத் திறக்கின்றான். அவ்வாறு திறந்தவுடனே, அங்கு ஓர் சிறு அறையும் மூன்றுகால்களுள்ள மேஜையின் மேல் உடலற்ற தலையும் பார்ப்பவர்க்குத்தோன்றுகின்றது. இத்தலை தன் கண்களைத்திறந்து அங்கு வந்திருப்பவர்களைப்பார்க்கையில், வேடிக்கைகாட்டுவோன் அத்தலையைச் சிலகேள்விகள் கேட்கின்றான். அதற்கு அந்தத்தலையானது தக்கவிடையைத் தருகின்றது. பின்பு



6-வது படம்.

திரைமூடப்படுகிறது. அவ்வாறுமூடியபின்பார்ப்போர்வெளியில்வந்துவிடுகின்றார்கள். இவ்வளவு வரையில்தான் பார்ப்போர் அறிவார்கள். அதன் சூட்சுமத்தைப்பற்றித் தெளிவாய் அடியில் விளக்குவாம்:—

வேடிக்கைபார்ப்பவர்கட்கு மேஜையின் அடியில் மூன்றுகால்க



ளொழிய வேறொன்றும் தோன்றாவிடினும், நிச்சயமாகச் சுமார் 2 - அடி அகலமும் 3 - அடி உயரமுமுள்ள ரசம்பூசிய இரண்டு கண்ணாடிப்பில்லைகளை 7 - வது படத்திற்காட்டியபடி மூன்று கால்களுடைய ஒரு மேஜையின் முன்புறமாகக் கால்களுக்கிடையில் வலம் இடமாகிய இரண்டு பக்கங்களினும் வைத்திருக்கின்றது. அந்தக் கண்ணாடிப் பில்லைகளின் ஓரங்கள் மேஜையின்கால்களால் மறைக்கப் பட்டிருக்கின்றன. இந்தக் கண்ணாடிகளின் அளவுக்கே மேஜையின்கால்களும் அகலம் உயரத்தில் சரிபார்த்து வைத்திருக்கின்றன. அகலத்தில் கண்ணாடியின்இரண்டு ஓரங்களும்2-கால்களால் மறைக்கப் படும்படி யாகவும் உயரத்தில் கண்ணாடிகள் பூமிமட்டத்திலிருந்து மேஜையின் மேற்பலகையின் அடிமட்டத்திற்குப் பொருந்தியிருக்கும்படியாகவும் இயற்றியுள்ளன. மேஜையின் மேற்புறமானது வட்டவடிவான பலகைத் துண்டால் மூடியிருப்பதுடன்அப்பலகையில் ஒருமனிதன் தன் தலையைமாத்திரம் நுழைக்கக்கூடிய அவ்வளவு துவாரமும் செய்திருக்கிறது. இவ்வாறு ஜோடித்தமேஜையை அறையின் மத்தியில் நிற்கவைத்தபிறகு, சிவப்புவஸ்திரத்துண்டுகள் மூன்றை, 7-வது படத்திற்காட்டியிருக்கிறபடி, வலப்புறத்திலொன்றும் இடப்புறத்திலொன்றும் மேஜையின்பின்புறத்திலொன்றுமாகத் திரைபோலக்கட்டி வைத்திருக்கின்றன. இவ்வாறு செய்வதனால் F பக்கத்திலிருக்கும்துணியினுருவம் AB கண்ணாடிகளாற் பிரதிபிம்பிக்கப்பட்டுப் பின்புறத்துணியாகத்தோன்றும். அவ்வாறே E பக்கத்திலிருக்கும் துணியும் BC கண்ணாடிகளாற் பிரதிபிம்பிக்கப்பட்டு இதுவும் பின்புறத்துணியாகவேதோன்றும். பின்புறத்தில் மற்றொரு சிவப்புத்துணியும் முன்னமே கட்டியிருப்பதால், H என்ற ஸ்தானத்திலிருந்து பார்ப்பவர்கட்கு மேஜையின் அடிப்புறத்தில் மூன்று கால்களொழிய வேறொன்றுமில்லாததாகப்புலப்படும். ஆகவே, இரண்டுகண்ணாடிப்பில்லைகளின் பின்புறத்தில், 6-வது படத்திற் காட்டியிருப்பதுபோல், ஒருமனிதன் மேஜைக்குள்ளே ஒளித்திருந்து, தன் தலையைமாத்திரம் மேஜையின்மே

A. மேஜையின்கால்.
B. ௸
C. ௸
AB. ரசம்பூசியகண்ணாடி
BC. ௸
D. மேஜையின்மேற் பலகையின் மத்தியில் ஒருவன் தலை தாராளமாய்ப் புகக்கூடிய அவ்வளவு துவாரம்.
E. சிவப்புத் திரை.
F. ௸
G. ௸
H. வேடிக்கை பார்ப்போர் நிற்குமிடம்.




7-வது படம்.

ற்புறப்பலகையிற்செய்துள்ள துவாரத்தின் மூலமாய் வெளிப்புறத்திற்காட்டுவானாயின், பார்ப்பவர்கட்கு உடலற்றதலையை மேஜையின்மேல் வைத்திருப்பதுபோலத் தோற்றும். இந்தவேடிக்கையைக்காட்டும்போது பார்க்கவருபவர்களை, மேஜைக்கெதிரில் 10-அடிக்கப்பால் நிற்கவைக்கவேண்டியதவசியம், அவர்களை ஷை மேஜையின் அதிசமீபத்தில் நிற்கவைத்தால் அவர்கட்கு யாதோராச்சரியமும் உண்டாகாது, சூட்சுமம் எளிதில் வெளியாய்விடும்.

## 65. விநோதார்த்தப்பதங்கள்.

ஒருவக்கீல் தன்கட்சிக்காரனைப்பார்த்து உன்கணக்கைப் பிரதிவாதியிடத்திற் காட்டினையா என்றான். அதற்குக்கட்சிக்காரன், ஆம் காட்டினேன் என்றான். மீண்டும் வக்கீல் அக்கட்சிக்காரனைப்பார்த்துப் பிரதிவாதி என்னசொன்னான் என்றான். குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ளச் சொன்னான் என்றான். அதற்கு நீ என்னசெய்தாய் என்று மீண்டும் வக்கீல்கேட்டபோது, நான்தான் தங்களிடத்தில் வந்திருக்கிறேனே என்றான்.

ஒருவன்மற்றொருவனைப்பார்த்து நம்முடையமெத்தைமேல் நல்ல காற்று வீசுகிறதென்றான். அதுகேட்டிருந்த வேறொருவன், அப்பா! மெதுவாய்ச்சொல், மியுனிஸிபாலிட்டியார் காதில்விழுந்தால்உடனே வரிவிதித்துவிடுவார்கள் என்றான்.

தேங்காய் திருடுவதற்காகத் தென்னமரத்தின்மீதேறிய ஒருவன் அத்தோட்டக்காரன்வருவதைக்கண்டு கீழேஇறங்கிவருகையில், தோட்டக்காரன் மரத்தண்டைவந்து நின்று ஏன் தென்னமரத்தின்மீதேறினை என்றான். அதற்கு அத்திருடன் கன்றுக்குட்டிக்குப் புல்லறுக்க ஏறினேனென்றான். அப்போது தோட்டக்காரன் தென்னமரத்திற் புல்லிருக்குமா என்றான். அதுகேட்டதிருடன் இல்லாமையாற்றான் இறங்கிவந்தேனே ஈதறியாயா அசடனே என்றுசொல்லிக்கொண்டே போய்விட்டான்.

இரவில் நித்திரைசெய்துகொண்டிருந்த ஒருவனிடத்தில் வேறொருவன் வந்து உன்மனைவி இறந்துவிட்டாளென்றுரைத்தான், அதுகேட்ட தூங்குமூஞ்சி "ஐயோ! பொழுதுவிடிந்தால் துக்கப்படவேண்டுமே" என்று கூறிப் போர்வையை இழுத்துப்போர்த்துக்கொண்டுறங்கினான்.

ஒருவன் கடிதாசி ஆடிக்கொண்டிருக்கும்போது தன்தாய் இறந்துவிட்டாளென்று கேள்வியுற்று, "இந்தவழியாகத்தானே சவத்தைத் தூக்கிக்கொண்டு போகவேண்டும், அப்போது நான்போய்ச்சேர்ந்துகொள்வேன் போடுஇன்னும் இரண்டாட்டம்" என்றான்.

கடவுள் துணை

# விநோத விசித்திரப் பத்திரிகை.

1900-ம் ௵

புஸ்தகம் 1 ] ஜூன்௴ 1௳ வெள்ளிக்கிழமை. [No. 6.

## கடவுள் உண்டு.

(54 - ம் பக்கத்தொடர்ச்சி.)

இன்னும் சகலமான சராசரங்களுக்கும் ஆதாரமான இப்பெரும்பூகோளத்தைக் கவனிப்போம். எந்தப்புறத்திலும் நம்மைச்சுற்றிச் சூழ்ந்து கொண்டிருக்கும் அளவிறந்த ஆகாயத்தையும் சமுத்திரத்தையும் சற்று அண்ணாந்துபார்த்தால், ஆகாயமெங்கும் நிறைந்து நமக்கு ஒளிகொடுக்கும் அநேகமாயிரம் நட்சத்திரங்களையும், இப்பூமியிலுள்ள பிராணிகளெவற்றிற்கும் பிராணாதாரமாய் எந்தப்புறமும் சூழ்ந்திருக்கும்வாயுமண்டலத்தையும், அளவுக்கடங்காமல்ஆரவாரித்துக்கொண்டிருக்கும் ஆழியசமுத்திரத்தையும் உற்றுப்பார்த்துப் பிரமிக்கிறோம். இப்பூமியை இவ்வாறு அந்தரத்திலோடும்படி யமைத்த அதிசயத்தைப்பார்த்து ஆச்சரியப்படுகிறோம். இதற்கு அஸ்திவாரம் ஏற்படுத்தியிருக்கும் அற்புதத்தைக்கவனித்து அகமகிழ்கின்றோம். இவையாவும் எவ்வித அற்புதச்செய்கையென்று ஆழ்ந்தகருத்தோடு ஆராய்ச்சிசெய்து பாருங்கள். இன்னும் இப்பூமியின் மேற்புறம்இப்பொழுதிருப்பதைப்பார்க்கினும்சிறிதளவு அதிகமாய்உறுதிகொண்டிருக்குமாயின், மானிடர்கள்பயிர்த்தொழிலுக்குப் பண்படுத்தச்சற்றும் உதவியற்றதாய்விடும். இப்பொழுதுள்ள அளவினும் குறைந்த உறுதியுடையதாயிருக்குமாயின், பிராணிகளின் அடிவைப்பைத் தாங்கவே

லாது சேற்றிலிட்ட கால்போற்புதைந்துபோம்படிநேரும். இவ்வாறிப்பூமியை அமைத்திருப்பதனால் உண்டாகிவரும் நன்மைகளுக்களவுண்டோ? இயற்கையில் வெட்டவெளியாய்க்கண்ணுக்குக் கொடுமைசெய்யுமிடங்களெல்லாம், கண்குளிரக்காணும் விநோதக்காட்சிகளுடையவையாகின்றன. இரண்டொரு வருஷத்திற்குள்ளாகக் காய்கனிமலர்தழைமுதலியவை நிறைந்தமரமும்செடிகளுமடர்ந்த பெரும்தோட்டங்களும் தோப்புகளுமுடையவைகளாய், மனிதர்க்குமிக்கமனோகரமான காட்சியுடையவைகளாய் விடுகின்றன. இவ்வளவு உபயோகமுள்ள இப்பூமியின் சம்பத்தைக்குறைப்பதுஒன்றுமேயில்லை. அதுஎத்தனையோ ஆண்டுகளாய்த்தன்விளைவுகளை இவ்வுலகத்தார்க்குச்சதாஅளித்துவருகின்றதே அதனால் அதற்கு அழிவுஅல்லதுமுடப்பாகிலும் மேலிட்டதுண்டா? என்றும்ஏகரீதியாகவேதன்உடம்பினின்றும் அளவற்றஐஸ்வரியங்களை அளித்துவருகின்றது. நாளாவிலேமனிதர்கள்வயதின்முதிர்ந்துமாண்டு, ஒன்றின்பின் ஒன்றாய்ப்பல தலைமுறைகள்கழிந்துவரினும், இப்பூமிமாத்திரம் வருஷந்தோறும் வளர்பிறைச்சந்திரன்போல் மீண்டு மீண்டும்இளமைபெறுகின்றது. இதைப்பின்னும் பண்படுத்தினால், தற்காலநிலைமையினும் பதினாயிரமடங்கு மிகுதியாய்ச் செழித்தோங்கும். இப்பூமி எங்கும்ஏகரீதியாயிராமல், உயர்ந்தும் தாழ்ந்தும் பற்பலவிதமாகவேறுபட்டு அமைந்திருப்பது அதற்கோர் அற்புதக்காட்சியாயிருப்பதுடன்கூட நமக்கு மிக்கஉபயோகமுமாகின்றது.

கடவுள்கருதிய இடங்களில் குன்றுகளும் மலைகளும் உயர்ந்தெழுந்திருக்கின்றன. அகாதமாய்க்கணவாய்கள் ஆழ்ந்திருக்கின்றன. அவ்விடங்களில் ஆடுமாடுகளுக்கு உபயோகமான இலைகள் அபரிமிதமாக வளருகின்றன. சமபூமியான நாடுகளில் பயிர்கள் பொலிவுற்றிருக்கின்றன. அரசன் வரும் அதிசயத்தைக் காணத்தக்க ஓர் நாடகசாலைபோலக்கொஞ்சம் உயர்ந்த குன்றுகளில் பலவகைப் பழச்செடிகளும் கொடிகளும் மரங்களும் வளர்கின்றன. பெரியமலைகள் ஆகாயமளாவ உயர்ந்து, சிகரங்களில் வெள்ளிமலைபோல வெளேலென்று பனிமூடி வெளுத்திருக்கின்றன. அவற்றின் பாரிசங்களினின்றும் பெருகிவருகின்ற பிரவாகங்களே பெரியநதிகளுக்குப் பிறப்பிடமாகின்றன. இப்பிரவாகங்களுக்குத்தான் அருவிகளென்றுபெயர். மானிடதேகத்துள்ள எலும்புகள் தசைகளைத்தாங்குவதுபோல, பருவதப்பிராந்தியங்களிலுள்ள பெரும்பாறைகளே அம்மலைகளை உறுதியாகத்தாங்குகின்றன.



இவ்வண்ணம் இப்பூமி ஓரிடத்திற்கோரிடம் வேறுபட்டிருப்பது நாடுகட்கோர் அற்புதக்காட்சியாகின்றது. மேலும், அதுவே மன்னுயிர்களின் விருப்பங்களெல்லாம் நிறைவேறுவதற் கேதுவுமாகிறது.

இப்பூமியில் உற்பத்தியாகின்ற பொருளெல்லாம் மீண்டும் ஐம்பூதக்கூறுகளாகப்பிரிந்து, அதிலேயே அடக்கமாகிப் புதிதாகப் பொருள்கள் பல உற்பத்தியாவதற்கும் ஏதுவாகின்றது. பூமியில் நாம் ஒரு விதைவிதைப்போமானால், இப்பூமி அதைப்போல ஆயிரம்பங்கு அதிகமான பயன் தரத்தக்க பொருளாக்கி நமக்குத்தருகின்றது. மேலும், இப்பூமி மாடமாளிகை கூடகோபுரம் கோயில் குளம் சத்திரம்என்னும பலவகையானகட்டிடங்களைக்கட்டுவதற்குபயோகமான பலவகைக்கற்களை நமக்கு உற்பத்தியாக்கித் தருகின்றது. மனிதர்க்கு மிக்க உபயோகமானதும் மேன்மைபெற்றதுமான பலவகைத் தாதுவர்க்கங்களைக் கர்ப்பத்தில் அடக்கிக்கொண்டிருக்கின்றது. (இன்னும் வரும்.)

## குழந்தைகளின் பாதுகாப்பு.

(76 - ம் பக்கத்தொடர்ச்சி.)

முற்பத்திரிகையிற் கூறியபடி பாலியத்தாய்தந்தையர் தங்கள் குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டிய இயல்புக்குறைவினால் அவைகளைக் கொன்றுவிடுவதன்றித்தாங்களும் தங்கள் பருவம் வாய்க்குமுன் சம்போகிக்கத் தொடங்கினமையால், அதிக சிறுவயதிலேயே அதாவது 30-35 வயதிற்குள்ளே சரீரம்தளர்ந்துஅதிக துர்ப்பலமடைந்து, பலவியாதிகட்குள்ளாகிமுதுமையதிகரித்துஅகாலத்தில்மரணமடைகின்றார்கள். அருமையாய்ப்பெற்றெடுத்து அன்பாய்வளர்த்த அருமந்தக்குழந்தைகளை விசேஷசுகத்துடனே நெடுங்காலம ஜீவித்திருக்கவிரும்பும் அன்னைதந்தையர் இவ்விஷயங்களனைத்தையும் செவ்வனே கவனித்துத்தங்கள் குழந்தைகட்குத்தக்க வயதுவந்தகாலத்தில் விவாகம் செய்து பக்குவமானபின்சம்போகவாழ்க்கையிற் சேர்க்கவேண்டும். சிறுவயதிற் கலியாணம்செய்து கண்ணுக்கழகாய்ப் பார்க்கவேண்டுமென்றெண்ணும் பேதையர் தங்கள் மக்கட்குச் சத்துருக்களேயன்றித் தாய்தந்தையரல்லர்.

குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டிய விஷயம் குடும்பவிவகாரங்களுக்குள் அதிக முக்கியமானதாயிருந்தும், அநேகர் இதை அலட்சியம் செய்துவிடுவதால் ஆயிரக்கணக்கான குழந்தைகள் அகாலத்தில் மாண்டுபோகின்றன. பெற்றோர் இவ்விவகாரங்களில்ஞானமுடையவ

ர்களாயிருந்தால் அவ்வளவுகெடுதிநேரிடுவதற்குஏதுவில்லை,குழந்தையைப்பாதுகாக்கவேண்டிய ஒழுங்குகள், அக்குழந்தை தாய்வயிற்றிலிருக்கும்போதே கவனிக்கப்படவேண்டும்.முன்பேகூறியுள்ளபடி தாய் சுகசரீரியாயிருந்தால் பிள்ளையும் சவுக்கியமுடையதாயிருக்கும். இதற்காகக் கவனிக்கவேண்டிய முக்கியக்குறிப்புகளாவன. தாய் கர்ப்பமாயிருக்கும்போது, நல்ல ஆகாரம் உயர்ந்த தின்பண்டமுதலியவை புசிக்கவேண்டும். அற்பச்சிற்றுண்டிகளைத் தவிர்க்கவேண்டும். மனதிற்சஞ்சலம் கொடுமை பொறாமை. பொய் வஞ்சகம் சூதுமுதலிய துர்க்குணங்களை நீக்கி, கடவுள்பக்தி உதாரகுணம் கெம்பீரம், தயாளம் சாந்தம் கிருபை அன்புமுதலிய சற்குணங்களோடு மனதைநிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வைத்திருக்கவேண்டும். அழகான ரூபங்களையும் படங்களையும் கண்ணாற்பார்க்கவும் மனதிற் சிந்திக்கவும்வேண்டும். விகாரரூபங்களைப்பார்க்கவும் சிந்திக்கவுமாகாது.

அழகானசோலைகள்புட்பச்செடிகள் இவைமுதலியவற்றைப் பார்க்கலாம்.லாகிரிமுதலியகெட்டவஸ்துக்களை அறவேவிட்டொழிக்கவேண்டும். கர்ப்பகாலத்தில் தாய்எந்தவிதச்செய்கைகளை அநுஷ்டிக்கிறாளோஅவைகளேவயிற்றிலுள்ளசிசுவுக்கும்பற்றுமாகையால்முற்கூறிய விஷயங்களில் தாய்மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.இன்னும் கர்ப்பஸ்திரீயானவள் தன்உடம்பு அடிவயிறு ஸ்தன்னியங்கள்முதலியவை நாளுக்குநாள் பருத்துவரும்படி உடைகளைப்பிகுவில்லாமல் உடுக்கவேண்டும். இறுக்கியுடுத்தினால்தனக்கும்சிசுவுக்கும்அபாயத்தை விளைவிக்கும். வாரத்திற்கிரண்டுமுறைஇளவெந்நீரில் ஸ்நானம் செய்துவருவதுடன் பிரதிதினமும் மெல்லியவஸ்திரத்தை வெந்நீரில் நனைத்து மேல்முழுதும் தேய்த்து உலர்ந்ததுவாலையால் துடைத்துவிடவேண்டும். பிரதிதினமும் மெதுவாய்க்கொஞ்சநேரம் உலாவவேண்டும். புதிதும் சுத்தமுமான காற்றுள்ளவீட்டில் அவள்வசிக்கவேண்டும். (இன்னும் வரும்.)

## வைத்தியம்.

### எலும்புகள்.

(54 - ம் பக்கத்தொடர்ச்சி.)

இளவயதிலே புழுக்களும்முள்ளந்தண்டெலும்புகளும் மிருதுவாயும் இணக்கமாயும் இருக்கின்றன. உடுப்பினாலே உடம்பைவரிந்து இறுக்கிக்கட்டினால்,நெஞ்சு வயிறுஎன்னும்இவைகளொடுங்கி, அவைகளிலுள்ள சுவாசப்பை இரத்தாசயம்இரைப்பை முதலியவைகளுக்கு



நஷ்டமுண்டாகுமாகையால், குழந்தைகளுக்கு உடுப்புகளைப் பிகுவில்லாமலே உடுக்கவேண்டும்.

பிள்ளைகள் எப்போதும் நிமிர்ந்துநிற்கவும்நிமிர்ந்திருக்கவும்அப்பியாசப்படுத்தப்பட்டுவரவேண்டும். அப்படிச்செய்வதனால் முள்ளந்தண்டுக்கு நேர்மையும் சுகமும்உண்டாகும். வழக்கமாகச் சுமைகளைத் தலையில் தூக்கிக்கொண்டு போகின்றவர்களுக்கு முள்ளந்தண்டு மிகவும் நேராயிருக்கும்.

சிலவேளை பிள்ளைகள் எழுதும்பொழுதும் படிக்கும்பொழுதும் தங்கள் முள்ளந்தண்டு ஒரு பக்கமாய் வளையும்படி அத்தருணத்துவசதிக்காக ஒருபக்கமாய் மேஜையிலே சாய்ந்துகொள்ளுகிறார்கள். இவ்வாறு சாய்ந்திருப்பது ஒரு தோளுயரவும் மற்றைத்தோள் தாழவும் பண்ணுகின்றது. ஒரு தோளை அப்படிச் சற்றுநேரம்மாத்திரம் உயர்த்தியிருப்பதனாலே மோசம்வராது. அப்படியிருக்கவேண்டுமாயின், சற்றுநேரத்திற் கொருதரம் பக்கமாற்றிவந்தால் யாதொரு மோசமும் நேரிடாது. ஒரே பக்கமாகச் சாய்ந்திருக்க அப்பியாசப்படுத்தலாகாது.

குழந்தைகளை எப்பொழுதும் ஒரே பக்கத்தில்மாத்திரம் வைத்துக்கொண்டு திரிவதனால்,சிலருடைய முள்ளந்தண்டு ஒருபக்கம் நெளிவுகொள்ளும். அப்படிநெளிவுகொள்ளாதபடிக்கு இரண்டுபக்கத்திலும் மாற்றிமாற்றி வைத்துக்கொண்டுவரவேண்டும். இதுவுமன்றிக் குழந்தைகளை ஒரே பக்கத்தில் வைத்திருப்பதனாலும், அல்லது தினமும் ஒரே பக்கமாய்ப் படுக்கச்செய்வதனாலும் அவைகளின் தலைவடிவமும் முகவடிவமும் சிலவேளை மாறிப்போம்.

ஒரு எலும்புப்பொருத்து விலகினால் கூடிய சீக்கிரத்தில் அதன் தானத்திலிருக்கும்படி அதை இழுத்துவிடவேண்டும். அப்படிச்செய்வதற்குத் தாமதம் எவ்வளவோ அவ்வளவாக அதைமீண்டும் சரிப்படுத்தும் பிரயாசமும் அதிகமாயிருக்கும்.

ஒரு எலும்பு முறிந்துபோனால் அதன் தலைப்புகள் நொக்குவைத்துப் பொருந்தும். முறிந்த எலும்பு ஒருவாரத்திற்குள்ளே ஊறத்தொடங்கும். அதுமுறிந்தபின் சற்றுநேரத்தில் அதற்கயலான தசை வீங்கத்தொடங்கும், அம்முறிவுபொருந்த அச்சுவைத்துக் கட்டுகிறவர்கள் உண்டாகும் வீக்கத்திற்கு இடமிருக்கத்தக்க நுழைவாக அச்சைக்கட்டவேண்டும். அப்படிச்செய்யாமல் இறுக்கிக்கட்டினால் நோயாளிக்கு அதிக உபாதையுண்டாவதுமன்றிச்சதையும் அழுகி அவ

யவக் குறைவுமுண்டாகும். சிறு பிள்ளைகளுடைய எலும்புகள் குருத்தாயிருப்பதனால் மோசம் சம்பவித்தபோதிலும் முறியாமல் வளைந்துமாத்திரமிருக்கும். (இன்னும் வரும்.)

## நாடிப்பரிட்சை.

(73-ம் பக்கத்தொடர்ச்சி.)

நாடியின் ஒவ்வோர் அடியும் சுருக்காய் அடிப்பதாக விரல்களுக்குத்தட்டுப்பட்டால் அது தீவிரநாடியென்று பெயர்பெறும். இவ்விதமாய் அடித்துக்கொள்ளும்போது அடியானது வேகமாய்மாத்திரம் தோற்றுமேயொழிய அதன் நடையின்தொகை அதிகப்படாது.

நாடிநாளமயில் இரத்தம் நிறைந்தோடினால் நாடிநாம்பு பருத்திருக்கும் இதற்குப்பூர்ணநாடியென்றும், இரத்தம் குறைந்தோடினால் நாடி சிறுத்திருக்கும்; இதற்குச் சுட்கித்தநாடியென்றும்பெயர்.

மும்முரவியாதி தொடங்குகின்றவனுக்கும் இரத்தபுஷ்டியுள்ளவனுக்கும் நாடிபூர்ணநடையிலிருக்கும். அதிகபலவீனனுக்கும்பாண்டுரோகஸ்தனுக்கும் இரத்தம் அதிகமாய் நஷ்டப்பட்டவனுக்கும் நாடி சுட்கித்து நூலிழைபோல் நடக்கும்.

சுரரோகத்திற்கு நாடிநடை தீவிரமாயிருக்கும், ஆனால் நாடிநடை உபயகதியாய், அதாவது நாடியின் ஓரடி இரண்டடியாக விரல்களுக்குத்தட்டுப்பட்டால், அவ்வியாதி அசாத்தியமென்று எண்ணிக்கொள்ளவேண்டும். ஆயினும் நாடி உபயகதியாய் நடக்கும்போது மூக்கில் இரத்தம் கண்டால் வியாதிசாத்தியமாகும்.

நாடிநடையின் வித்தியாசங்களைத் தெரிந்துகொள்வது மிகக்கடினமாகையால் வழக்கத்தினாலும் விசேஷஅனுபவத்தினாலும் தெரிந்துகொள்ளவேண்டும். வியாதியஸ்தனுடைய நாடியைப் பரிட்சிக்கும்போது, இன்னின்ன வியாதிக்கு நாடிநடை இன்னின்னவிதமாயிருக்குமென்பதை நிதானித்து மனத்திற் பதியவைத்துக்கொண்டால், பிறகு நாடியைப்பரிட்சிக்கும்போதெல்லாம், இவ்விதநடைக்குஇவ்விதவியாதியென்று நிர்ணயித்துச்சொல்லக்கூடும். இது கூர்ந்தபுத்தியும்ஆழ்ந்தகருத்தும் தேர்ந்தகல்வியும்நீண்டஅநுபவமும் மாறாதகவனசக்தியும் உடையவர்கட்குமாத்திரமேசாத்தியமாகும்.

## 66. படிகாரத்தின் குணம்

குழந்தைகளுக்குக் கண்ணோய்கண்டால் 3-க்ரெயின் படிகாரத்தை (வயதுவந்தவர்களுக்கானால் 6-க்ரெயின்) ஒரு அவுன்ஸ் ஜலத்திற்கலக்கிப் பிரதிதினம் 4-5-முறை கண்களைக் கழுவவும். அதில் ஒரு



சீலைத்துண்டை நனைத்துக் கண்களை அடிக்கடி ஒற்றிக்கொள்வது நலம். கண் இமைகள் அதிகமாய் வீங்கியிருந்தால், காலையில் முந்திப் புளியிலைவேகவைத்த ஜலத்தினாற்கண்கழுவிப் பிறகு கால்மணிநேரம் சூடான முலைப்பாலைவிட்டுக்கழுவி, இமைகளை மெல்லெனத்திறந்து, பிறகு முற்கூறிய படிகார ஜலத்தைச் சொட்டுச்சொட்டாய் விடவும். கண்களிற் கடினமான அடிபட்டபிறகு, வலியும் சூடும் நீங்கிச் சிவப்புமாத்திரமிருந்தால், அரைதிராம் படிகாரத்தை நுண்மையாய்ப்பொடித்துக் கோழிமுட்டையின் வெள்ளைக்கருவுடன் கலந்து, அதைச்சுத்தமான மெல்லிய பழஞ்சீலையின் இரண்டுதுண்டிலேவைத்துக் கண்ணின்மேலே சிலமணிநேரம் வைத்திருக்கவேண்டும்.

மூக்கிலிருந்து மிகுதியாய் இரத்தம்போனால் 120-க்ரெயின் படிகாரத்தை 8-அவுன்ஸ் தண்ணீரிற்கலக்கிப் பீச்சாங்குழையாலாவது மெல்லிய சீலைத்துண்டாலாவது மூக்கினுட் செலுத்தினால் நிற்கும். அட்டைகடித்த காயத்திலிருந்து இரத்தம்வந்தால் கொஞ்சம் படிகாரத்தை நுணுக்கிக் கடிவாயில்வைத்து விரலாற் கொஞ்சநேரம் அழுத்திக்கொண்டிருந்தால் நிற்கும்.

சுரமில்லாமல் மூலத்திலிருந்து இரத்தம்போனால், 100-க்ரெயின் படிகாரத்தை 6-அவுன்ஸ் தண்ணீரிற்கலக்கி, ஒரு மெல்லிய சீலைத்துண்டை அதில் நனைத்து ஆசனவாய்க்குள் வைத்திருந்தால் இரத்தம் நிற்கும்.

குழந்தைகளின் மலத்துவாரவழியாய்க் குடல்தள்ளினால், ஒரு பலம் கடுக்காயைச் சிதைத்து ஒருபுட்டி தண்ணீரிற்போட்டுக் காய்ச்சி இறுத்துக்கொண்டு, அதில் 60-க்ரெயின் படிகாரத்தைக் கலக்கிப் புட்டியில் நிரப்பி, வெளியே தள்ளினகுடலை உள்ளேதள்ளி, முற்கூறிய ஜலத்தைத் துணியினால் நனைத்தெடுத்துத் தினமொன்றுக்கு 3-4-முறை ஆசனவாயில் போட்டுக்கொண்டுவரவும். இப்படிச்செய்வதனால் மலத்துவாரத்தைச் சுருக்கிக் குடல் இறங்குவது நிற்கும்.

(இன்னும் வரும்.)

## கைத்தொழில்.

## 67. வீடுகளின்சுவர் ஈரமாயிருந்தால்

நாம் வசிக்கும் வீட்டின் சுவர்கள் ஈரமாயிருந்தால், அந்த ஈரவாடை ஜனங்களின்மேற்படுவதனால் வியாதியுண்டாகும். அவ்வித ஈரவாடை தேகத்திற்படாமல் தடுக்கும் உபாயம் எதுவென்றால்:—

தேயிலைப் பெட்டிகளுக்குப் பாக்செய்யும் மெல்லிய காரீயத்த கட்டைச் சுவர்களிற் பரப்பி மெல்லிய செம்பு ஆணிகளால்அடித் துப் பதியவைத்து, அதற்குமேல் வால்பேபர் அல்லது வேறெந்தக் கடிதாசிகளைக்கொண்டாவது ஒட்டிவிடவேண்டும். இவ்விதம் செய் வதனால் சுவர்களின் ஈரவாடை வெளிவராது.

## 68. அறைகளுக்கு நேர்த்தியானவெள்ளை.

நாலுபவுன் சுண்ணாம்புநீற்றை மூன்றுபடிஜலத்திற்கரைத்துவை த்துக்கொள்ளவும். இரண்டு அவுன்ஸ் வச்சிரப்பசையை ஜலத்திற் போட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாட்காலையில் அடுப்பில்வைத்து அது கரைகிறவரையிலெரித்துக் கரைந்தபின் சுண்ணாம்பு கரைத்து வைத்திருக்கும் ஜலத்துடன் கலந்து உபயோகித்தால் வெகுநேர்த்தி யான வெள்ளையாயிருக்கும்.

## 69. ஜர்மன்ஸில்வர் அல்லது நிக்கில்ஸில்வர் சாமான் களுக்குப் பாலிஷ்கொடுக்கும் விதம்.

கொஞ்சம் வெந்நீரிற் கொஞ்சம் படிகாரத்தைத் தூள்செய்து போட்டுக் கொஞ்சம் சவுக்காரத்தையும் அதிற்கரைத்துப் பாலிஷ்செ ய்யவேண்டிய சாமானை அந்த ஜலத்தில் நனைத்துச் சுத்தமான பிளா னல் அல்லது தளமர்ன துணியினாலே செவ்வனே தேய்க்கப் பாலிஷ் ஆகிப் புதிய சாமானைப்போற் பளபளப்பாயிருக்கும்.

## 70 உடைந்தபீங்கான் அல்லது கிளாஸை ஒட்டவைக்கும் பசை.

கொதிக்கிறஜலத்தில் ஒரு ஒயின்கிளாஸ் எடுத்து அதில் அரை அவுன்ஸ் வெண்மையான விளாம்பிசினை நுணுக்கிப்போட்டுத் தே வையானமட்டும் (Plaster of Paris) பிளாஸ்டர் ஆவ் பாரிஸ் அதனுடன் கலந்து பசைபோற்செய்துகொள்ளவும். உடைந்த பொருத்துக் களுக்கு இந்தப்பசையைப் புருசினால் தடவி, இரண்டுபிளவுகளையும் ஒன்றாய்ப்பொருத்திக் காயவைத்துவிடவும். அது உறுதியாய்ஒட்டிக் கொள்வதன்றியில் உடைந்த பாண்டமாகத்தெரியாது.

## 71. படங்களின் சட்டங்கள் அழுக்காய்விட்டால்,

படங்களின் சட்டங்கள் அழுக்காய்விட்டால் முந்தி ஒரு மெல் லிய துணி அல்லது புருசு இவைகளினால் மெதுவாய் அதிற்படிந்தி ருக்கும் தூசுமுதலிய அழுக்குகளைச் செவ்வையாய்த் துடைத்து



விட்டுப் பிறகு ஒரு புருசினால் (Linseed Oil) லின்ஸீட் ஆயிலை மெது வாய்ச் சட்டங்களில் தடவினால் பளபளப்பாய்ப் புதியசட்டம்போலி ருக்கும்.

## 72. கில்ட்சட்டங்கள் அழுக்காய்விட்டால்.

சட்டங்களில் ஈ பீச்சினதாற் கறுப்புப்புள்ளிகளிருக்கும், அவை களைப்போக்க, ஒரு மெல்லிய துணியை வெந்நீரில் நனைத்து, மெது வாய்ச் சட்டத்தின்மேல்தேய்த்து, ஷை புள்ளிகளை எடுத்துவிட்டு, வேறு சுத்தமான துணியால் துடைத்துவிட்டு, உலர்ந்தபின் கோழி முட்டையின் வெண்கருவை ஒரு புருசினால் எடுத்துத் தடவினால் புதியசட்டம்போல் அதிகமினுமினுப்பாயும் பளபளப்பாயுமிருக்கும்.

## 73. நீலநிறமுள்ள முத்திரை அரக்கு.

அவலரக்கு 233-பலம் ரோசனம் 33-பலம் நீலப்பவுடர் 33- பலம் (Venetian turpentine) வெனிஷியன் டர்பன்டைன் 100 பலம் என் னும் இவைகளை 58-ம் நெ. முறைப்பிரகாரம் செய்துகொள்ளவும்.

## 74. சிவப்புநிறமுள்ள முத்திரை அரக்கு.

அவலரக்கு 233-பலம், சாதிலிங்கப்பவுடர் 83-பலம் கற்பூரத் தைலத்துடன் சேர்த்தரைத்த சீர்மைச்சுண்ணாம்புக்குழம்பு பலம்-3 (Venetian turpentine) வெனிஷியன் டர்பன்டைன் பலம் 133-இவை களை 58-ம் நெ. முறைப்படி செய்துகொள்ளவும்.

## 75. மாம்பழத்தை நாட்படவைக்கும் உபாயம்.

மாம்பழத்தைக்கழுவிச் செவ்வையாய்த் துடைத்துவிட்டு அப்ப டியே ஒருவாயகன்ற சீசாவிற்போட்டு, அது நிறையும்படி நல்லநெ ட்டித்தேன்விட்டுக் காற்றுப்புகாமல் வைத்தால் எத்தனை நாளைக்கும் கெட்டுப்போகாமலிருக்கும். மாதுளம்பழத்தையும் இதுபோற் செய் தால் நெடுநாளைக்கு வைக்கலாம்.

## 76. எலுமிச்சம்பழம் நாட்படவைக்க.

ஒரு பாண்டத்திற்கொஞ்சம் ஈரமாயிருக்கிற மண்ணைப்போட்டு, அந்தமண்ணுக்குள் தேவையுள்ள எலுமிச்சம்பழத்தைச் செருகிப் பாண்டத்தின் வாய்க்குச்சரியான மூடிபோட்டுக் காற்றுப்புகாமல்சீலை மண்செய்துவைத்தால்எத்தனைநாளைக்கும் பச்சையாகவே இருக்கும்.

## பாகசாஸ்திரம்.

## 77. ஸாதா சொஜ்ஜி.

ஒருபடி அரிசியை ஒரு சட்டியிற் கொஞ்சம் கொஞ்சமாய்ப்போ ட்டுப் பொரித்து மணல் நிறமாகும்படி வறுத்தெடுத்துக்கொண்டு

5-படி ஜலம் கொள்ளும் ஒரு பாத்திரத்தில் 3 படி சுத்தித்த ஜலத்தைவிட்டு அடுப்பில்வைத்துக்காய்ச்சி, ஜலம்கொதிவந்தவுடனே வறுத்துவைத்திருக்கும்அரிசியைக்களைந்து ஜலத்தைவடித்துவிட்டுக் கொதித்துக்கொண்டிருக்கும் ஜலத்திற்கொட்டி 2-ம் நெ. பிரயோகப்படி செய்து கொள்ளவும்.

## 78. தாளித சொஜ்ஜி.

ஒருபடி அரிசியை ஒருசட்டியிற் கொஞ்சம் கொஞ்சமாய்ப்போட்டுப்பொரித்து மணல்நிறமாகும்படி வறுத்தெடுத்துக்கொண்டு, ஐந்துபடி ஜலம்கொள்ளும் ஓர் ஈயம்பூசிய செப்புப்பாத்திரத்தில் 3-பலம் நெய்விட்டுக் காய்ச்சி நெய் காய்ந்தவுடனே, மிளகாய் பலம் கால், உளுத்தம்பருப்பு பலம் ½-கடுகுபலம் ¼-இவைகளைக் காய்ந்திருக்கும் நெய்யில் போட்டு 22-ம் நெ. தாளிதமுறைப்படி தாளிதம் தயாரானவுடனே, கருவேப்பிலைஅரைக்காற்பலம்அதிற்போட்டுச் சடபடவென்ற சத்தம்நின்றபிறகு நல்லஜலம் இரண்டுபடியில் அரைப்பலம் உப்பைக் கரைத்துத் தெளிவெடுத்து, அந்த ஜலத்தைத் தாளித்தபாத்திரத்திற் போட்டுமூடியால் மூடிப் பிறகு திறந்து, மஞ்சட்பொடி அரைக்கால் ரூபாயெடை அதிற்போட்டுச் சற்றுநேரத்திற்குப்பின் ஜலம் கொதிவந்தபோது வறுத்துவைத்திருக்கும்அரிசியைச்செவ்வையாய்க்களைந்து, ஜலத்தைவடித்துவிட்டுக் கொதித்துக்கொண்டிருக்கும் ஜலத்திற்கொட்டிக் கரண்டிக்காம்பினாற் கிளறிக்கொடுத்து மேல்மூடியால் மூடி வைக்கவேண்டும். கொஞ்சநேரத்திற்குப்பின்பு அரிசி முக்காற்பாகம் வெந்தபதம்பார்த்துக் கரண்டிக்காம்பினாற் செவ்வையாய்க் கிளறிக் கொடுத்து அடுப்புக்கட்டைகளைநீக்கிவிட்டு, 35-ம் நெ. பாகத்திற்சொல்லியிருக்கிறபடி தம்முக்குவிடவேண்டும். பிறகு ஒருசிறு சட்டியில் 2-பலம் நெய்விட்டு வேறொருசிறிய அடுப்பில்வைத்துக்காய்ச்சி, நெய் காய்ந்தவுடனே மிளகு அரைக்காற்பலம் சீரகம் அரைக்காற்பலம் இவையிரண்டையும் அதிற்போட்டுப் பொரித்துக் கீழே இறக்கி, உடனே 2-ரூபாயெடை பெருங்காயத்தைச் சிறுதுண்டுகளாய் நறுக்கி அதிற்போட்டுப் பெருங்காயம் பொரிந்தவுடனே, பெருங்காயத்தை மட்டும் அதிலிருந்து நீக்கிவிட்டு, மற்றைய மிளகுசீரகம் இரண்டையும் நெய்யுடன்சேர்த்துத் தம்முக்குவிட்டிருக்கும் சொஜ்ஜியில்விட்டுக்கிளறி மூடிவிட்டு 5-நிமிஷமளவும் முன்போல் தம்முக்குவிட்டு இறக்கி உபயோகப்படுத்திக்கொள்ளவும்.



## 79. துவரம்பருப்புத்துவையல் அல்லது சட்டிணி.

அரைப்பலம் நல்லெண்ணெயை ஒருசட்டியில் விட்டுக்காய்ச்சி, காம்புகிள்ளியமிளகாய்பலம்கால் மேற்படி எண்ணெயிற்போட்டுப்பக்குவமாய் வறுத்துப் பாதி வறுபட்டபின் இரண்டுபலம் துவரம்பருப்பை அதனுடன்போட்டுக் கொஞ்சம் சிவக்கும்வரையில் வறுத்து, ஒன்றரைப்பலம் தேங்காய்த்திருவலை அவைகளுடன்சேர்த்து வறுக்கவும். இம்மூன்றும் காந்திப்போகாமற் பக்குவமாய் வறுத்தெடுத்து, அம்மியில்வைத்து, உப்பு பெருங்கற்களாக அரைப்பலம், கோதுகொட்டைமுதலியவைநீக்கிய புளிஅரைப்பலம், காயம் மூன்றுகுன்றியெடை, என்னும் இவைகளைமுறையே ஒவ்வொன்றாகவைத்துச் சிறுகச்சிறுகக் கொஞ்சம்கொஞ்சம் ஜலம்தெளித்து அரைத்து மொத்தை செய்துகொள்ளவும். மிகநேர்த்தியாயிருக்கும். காயம் பிரியமில்லாதவர்கள் அதை நீக்கிவிடலாம். இதுபோலவே உளுத்தம்பருப்பு கடலைப்பருப்பு பயற்றம்பருப்பு, முதலியவைகளையும் பாகம்செய்து கொள்ளவும்.

## 80. மாங்காய் ஊறுகாய்.

மாங்காய் 100-வாங்கி, ஒவ்வொன்றையும் கொட்டையுடனே 8-துண்டுகளாக நறுக்கி; (கொட்டைக்குள்ளிருக்கிற பருப்பைநீக்கிவிடவும்.) ஜலத்திற்போட்டு நன்றாய்க்கழுவிஜலத்தைவடித்துவிட்டு ஓர் தட்டிற் போட்டு வைத்துக்கொள்ளவும்.

உப்புபருங்கற்களாய் படி 2½—மிளகாய்பலம் 40-மஞ்சள் பலம்8 இம்மூன்றையும் தனித்தனியிடித்துக் குங்குமம்போற் பொடிசெய்து வைத்துக்கொள்ளவும். 7½—பலம் வெந்தயத்தை ஒருபலம் நல்லெண்ணெய்விட்டுச் சிவக்கும்படி வறுத்துக்கொள்ளவும். 2½-பலம் பெருங்காயத்தைமேலே வறுத்த வெந்தயத்துடன் கலந்திடித்துப் பொடியாக்கி மேற்கூறிய மூன்றுபொடிகளையும் இத்துடன் சேர்த்துக்கலந்து ஓர் ஈயம்பூசிய தாம்பாளத்திற் கொட்டிவைத்து 20-பலம் நல்லெண்ணெயை அதில்விட்டுச் செவ்வனே கிளறி வேறொரு தாம்பாளத்தில் இந்தப்பொடியிற் கொஞ்சமும் நறுக்கிவைத்திருக்கு மாங்காயிற் கொஞ்சமும் எடுத்துநன்றாய்க்கலந்து ஒரு ஜாடியிற் போடவேண்டும். இவ்வாறே மற்றையபாகமும் மாங்காயும் கொஞ்சம் கொஞ்சமா யெடுத்துக்கலந்து ஜாடியில் போடவேண்டும், பிறகு ஒரு துணியினால் ஜாடியின்வாயைக்கட்டிப் பளுவான ஓர்பாத்திரத்தினால் வாயைமூடி 2-அல்லது 3-நாள்கட்குப்பின் அகப்பை அல்லது ஒரு

இரும்புக்காண்டியினுல் நன்றாய்க் கிளறிக் குலுக்கிவைக்கவேண்டும் எட்டுநாளைக்குப்பிறகு உபயோகிக்கலாம், நாட்செல்ல நாட்செல்ல அதிக ருசியாயிருக்கும்,

## 81. மாங்காய்த்துவையல் அல்லது சட்ணி.

மேல்தோல் கொட்டை முதலியவைகளை நீக்கி மெல்லிதாய்ச் சீவிய மாங்காய்பலம் 4½-நல்லெண்ணெய் பலம் ¼ - வெந்தயம் பலம் ¾ கடுகுபலம் காலேயரைக்கால் காயம் வீசம்பலம் மஞ்சள்பொடிவீசம் பலம், மிளகாய் காலேயரைக்காற் பலம் உப்புபலம அரையேஅரைக்கால், நல்லகாடி புட்டி அரை இவற்றுள் நல்லெண்ணெயை ஓர் வாணுவில் விட்டுக்காய்ச்சிஎண்ணெய்காய்ந்தவுடனே வெந்தயத்தை அதிற்கொட்டி ஓர் அகப்பையினுல்கிளறிக்கொடுத்து சிவந்தவுடனே கடுகைப்போட்டுக் கிளறவேண்டும்; பிறகு சடபடவென்றசப்தம்நிற்கும் தருணத்தில் காயத்தைச் சிறுதுண்டுகளாய் நறுக்கி அதிற்போட்டு பின் மஞ்சட்பொடியையும் போட்டுக்கிளறி அடுப்பை விட்டுக் கீழே இறக்கிவைத்துக்கொண்டு மிளகாயைக் கொஞ்சம் நல்லெண்ணெய்விட்டுப் பக்குவமாய்வறுத்துக்கொண்டு, அந்த மிளகாயையும் உப்பையும் உரலிற்போட்டு நன்றாய் இடித்துத்தூளாக்கி மேலேசீவிவைத்திருக்கும் மாங்காயை உரலிலிருக்கும் பொடியுடன் போட்டுக் கலந்து பின்பு வாணுவிலிருக்கும் கடுகுவெந்தயத்தாளிதத்தை யதிற்கொட்டிக் காடியை விட்டு அகப்பையினுல் நன்றாய்க்கிளறி ஒருஜாடியிற்போட்டு வாய்க்குத்துணிகட்டிவைத்து வெய்யலில் வைத்துக்கொண்டு வரவேண்டும். இது அதிக நாட்பட வைக்கலாம்.

## 82. காபிஎடுக்கும் இங்கி.

கறுப்பு சிவப்பு ஊதா நீலம் பச்சை என்னும் இவற்றுள் எதாவது ஓர்வகை இங்கியில் பலம்-8-எடுத்து 6-பலம் க்ளிஸரின் (Glycerine)உடன்கலந்துகொண்டு உபயோகிக்கலாம். அல்லது மேலேகூறியவகைகளின் ஒருவகைஇங்கியில் அவுன்ஸ் 1. எடுத்து ஸிம்பில் ஸிரப் (Simple Syrup) அதாவது ஷர்பத்துப் பதத்திற்காய்ச்சி எடுத்த சர்க்கரைப்பாகு 1¼-திராம்கலந்துகொண்டாலும் நல்லஇங்கியாய்விடும்.

## 83. மரச்சாமான்களுக்கு உபயோகிக்கும் வார்னிஷ்.

தூள்செய்த ஸாண்டார்ச் (Sandarch) பலம் 240, அவலரக்கு பலம்-60, ரோசினம் அதாவதுசீமைக்குங்கிலியம்பலம் 122 ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயின் (Sprits of wine) பலம் 1500.



வெனிஷியன்டர்பென்டைன் (Venetian Turpentine) பலம்-180, இவற்றுள். முந்தியமூன்று சாமான்களையும் செவ்வனே தூள்செய்து ஒரு பாண்டத்திற்போட்டு அடுப்பில்வைத்துச் சிறுதீயாகஎரித்து எல்லாச்சரக்கும் உருகிஜலரூபமானபிறகு கீழேஇறக்கி ஸ்பிரிட்ஸ் ஆவ்ஒயினைக் கொஞ்சம் கொஞ்சமாய்விட்டுக்கிளறிக் கொண்டேயிருந்து கடைசியில் வெனிஷியன் டர்பென்டைனை அதில்விட்டுக்கிளறிப் புட்டியிலடைத்துக்கொள்ளவும்.

## விநோதார்த்தப்பதங்கள்.

ஓர் ஊரில் பரமலுத்த னொருவனிருந்தான். அவனுடைய லோபத்தனத்தை யறியாமல் அவனிடத்தில் ஓர் சங்கீதவித்துவான் பரிசு பெறக்கருதி ஒருநாட்காலையிற் சென்றான். அவனைக்கண்டமாத்திரத்தில் உலுத்தன்முகமன்கூறி, அவனை ஒரு புறமிருத்தி, ஐயா! பாட்லாமென்றான். அப்புலவன் வஞ்சனையின்றி, சங்கராபரணம் தோடி தன்னியாசி பியாக்குமுதலிய அருமையான இராகபேதங்களைக்கொண்டு, கல்லுங்கரைந்துருகுமாறு அன்று சூரியாஸ்தமனம்வரையிற் பாடி நெஞ்சுவரண்டிளைத்தான். உலோபியோ இடையிடையே எழுந்து அகத்துக்குட்சென்று ஆகாராதிகளை அருந்திவந்து பாட்டைச் செவியார விடாது கேட்டுக்கொண்டிருந்தான். அவ்வித்வான் இளைத்துச்சோர்வதைக்கண்ட அவ்வன்னெஞ்சவுலுத்தன் தன்னுடைய காரியஸ்தனையழைத்து, "அடா! ஓர் பெரிய தட்டில் ஆயிரம் பூவராகனையும் ஜோடுசால்வையையும் எடுத்துவை" என்றான். இதைக்கேட்ட புலவன் மனவெழுச்சியுண்டாய் பைரவி கல்யாணி பூபாளம்முதலிய இன்னும் மகா அருமையான இராகங்களைக்கொண்டு இரவு பன்னிரண்டு மணிவரையிலும் பாடி மெய்சோர்ந்தான். அதுவரையிலாவது போதுமென்று சொல்லாமல் உலுத்தசிகாமணி தன்வேலைக்காரனை மீண்டும் அழைத்து, "அடா! அந்தத்தட்டில் நான்கு காசி பீதாம்பரம் இரண்டுஜதை கடகங்கள் இருபது கல்லிழைத்த பதக்கங்கள் பத்து மோதிரங்கள் ஆகிய இவற்றையும் எடுத்துவை" என்றுரைத்தான், இதைக்கேட்ட புலவன் அயர்வுநீங்கிச் சூரியோதயம்வரையில் மூச்சுப்பிடித்துக்கொண்டு மனக்களிப்புடனேகேதாரகௌளமுதலிய இன்னும் சிறந்த ராகங்களைப் பேராசையாற்பாடி மூர்ச்சித்தான். கடைசியாய்ப் புலவனெழுந்து, "தனவானே! இனி என்னால் முடியாது. விடைதரவேண்டும்!" என்றான். அதற்கு "உலுத்தன், ஐயா! தாங்கள் அதிகபிரயாசைஎடுத்துக்கொண்டீர்கள், நல்லது போய்வாருங்கள்.!" என்றான். இதைக்கேட்டவுடனே நிற்கவும் சக்தியற்றபுலவன் பிரமித்து

ஒன்றுந்தோன்றாமல், தெருவாயிற்படிவரையில் உலுத்தன்முன்னும் தான்பின்னுமாகச் சென்றபோது, உலுத்தன், "நல்லது போய்வாருங்கள்" என்று மீண்டும் சொல்லித் திரும்பினான். இதைக்கேட்ட சங்கீதவித்வான் வெட்கத்தையும்விட்டு, "மகாப்பிரபு! ஒன்றுமில்லாமலனுப்பிவிடுகிறீரே? பெரியதட்டும்சால்வைகளும் பூவராகன்களும் ஆபரணங்களும் என்னாய்முடிந்தன" என்றுவாடிய முகத்தோடுகேட்டான். அதற்கு அந்தப்பாம உலுத்தன், "ஓய் நீர் என்ன எனக்குச் செய்தது? என்காதுக்கு இனிப்பாய் ஏதோ சிலவற்றை நீர் சொன்னீர் உம் காதுக்கு இனிப்பாய் ஏதோசிலவற்றை நான் சொன்னேன், இரண்டும் சரியாய்ப்போகவில்லையா? உமக்கு வாரிக்கொடுக்க நீர் எனக்கென்னவாரிக்கொடுத்தது; போம் போம பைத்தியக்காரப்புலவரே" என்று சொல்லித்துரத்திக் கதவைத்தாளிட்டுக் கொண்டான். ஆகையால் உலுத்தனிடத்தில் அன்பு அருள் என்னும் இவை மருந்துக்கும் கிடைக்காது. ஈகையுள்ளானிடத்தில் அவை பூரணமாய்க் குடிகொண்டிருக்கும். இதனாலன்றோ, "அன்பிலாரெல்லாந் தமக்குரியரன்புடையா - ரென்புமுரியர் பிறர்க்கு." என ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.

ஓர் அரசன் தனதுசபாமண்டபத்திற் கொலுவிருக்கையில், தூரதேசத்திலிருந்த ஓர் சிறந்தவித்வான் தனதுபாண்டித்தியத்தை அவ்வரசனுக்குக் காட்டிப்பரிசுபெறக்கருதி அவ்வரசன் முன்வந்து நின்றான். அவனைக்கண்ட அரசன் தன்முகத்தைப்போல அவ்வித்வான் முகமிருந்ததால், அவ்வித்வானை நோக்கி, "ஓய் உன்தாயார் இந்த ஊர் வழியாக எப்போதாவது வந்திருப்பாளா"? என்றான். அது கேட்ட வித்வான், "மகாப்பிரபு! என்தாயார் பெண்பாலாகையால் ஒருபோதும் வந்ததேயில்லை, ஆனால், எனது பிதா இவ்வூரில்வந்து சிலகாலம் வசித்திருந்ததாகக்கேள்வி." என்றான். உடனே அரசன் சபையார்க்குமுன் அவமானமடைந்தவனாய்த் தலைகுனிந்தான்.

ஓர் நியாயாதிபதி ஓர்சாட்சிக்காரனைப்பார்த்து, "உனக்கெத்தனை பிள்ளைகள்." என்றதற்கு அச்சாட்சிக்காரன், "ஐயா! பெற்றது என் மனைவியாகையால் அவளைக் கேட்டுவந்து சொல்லுகிறேன்" என்றான்.

மற்றோர் நியாயாதிபதி அவ்வாறே ஒரு சாட்சியைப்பார்த்து, "உன்வயதென்ன" என்றான். அதற்கவன் "கணக்குத்தெரிந்த உங்களுக்குத் தெரியாதது எனக்குத் தெரியுமா"? என்றான்.

ஓர் திருடன் ஓடும்போது அவனைத்தொடர்ந்த போலீஸ் சேவகன், "பயலேநில்" என்றான். இதைக்கேட்டதிருடன், "முகத்துக்குப்பின்னுற் பேசுகிறவர்களைக் கண்டால் எனக்குப்பிடிக்கிறதில்லை." என்று சொல்லிக்கொண்டே ஓட்டம்பிடித்தான்.



## Photography.

## 81. பொட்டோகிறுப் படம்பிடிக்கும் விதம்.

பொட்டோகிறுபி என்பது பொருள்களின் உருவங்களைப்பிடிப்பதற்குப்பெயர். இக்காலத்தில்அநேகர் இத்தொழிலைக்கைக்கொண்டு ஏராளமான பொருள்சம்பாதித்து வருவது நம்நேயரில் அநேகருக்குத்தெரியாததல்ல. ஆனால், நம்மையொப்பநேயரில் ஒவ்வொருவருக்கும் இந்த சாஸ்திரத்தின் நுட்பங்கள் தெரிந்திருக்கவேண்டுமென்பது நமது கருத்தாகையால், இதைக்குறித்து இங்ஙனம் விரிவாக எழுதத்துணிந்தோம்.

பொட்டோகிறுபியைப்பற்றி எழுதத்தொடங்குமுன் சிலகுறிப்புகளை நம் நேயர்களுக்கெடுத்துரைப்பது அவசியமாகத்தோன்றுகின்றது. நம்பத்திரிகை ஆரம்பமானதுமுதல் சென்ற ஆறுமாதகாலமாய் நம்நேயரில் அநேகர் மிக ஊக்கமுடையவர்களாய்இப்பத்திரிகையில் எழுதப்பட்டுவரும் அநேக விஷயங்களை அப்போதைக் கப்போது பரிட்சித்துப் பார்த்துத் தாங்கள் திருப்தியடைந்ததன்றியில் நன்றிகூறி நமக்கு அநேகமடிதங்கள் எழுதிவருகின்றார்கள். இவைகளை நாம் சந்தோஷத்துடன் அங்கீகரித்து அவர்களுக்குப்பிரதிவந்தனம் கூறுகின்றோம். ஆனால், சிலர்மட்டும் சிலசில பாகங்களில் தவறிவிடுவதாக எழுதுகிறார்கள். இவர்களுக்கு நாம் கூறுவதாவது; நமது வீட்டுஸ்திரீகள் அவர்களுடைய பாலியம் முதல் அந்தியம்வரையில் சமையற்பாகத்தில் அனுபோகப்பட்டவர்களாயிருந்தும், சிலசில சமயங்களில் கைப்பிசகுகளினுற் பாகத்தில் தவறிவிடுகிறார்களல்லவா? இதுபோல எந்தப்பாகமும் சிலவேளைகளில் தவறிப்போகக்கூடும். முக்கியமாய்முந்திச்செய்திராததொரு புதியபாகத்தைச்செய்ய எத்தனிக்கும்போது விசேஷகவனத்துடன் செய்யவேண்டும். அதில் முதன்முறை தவறுதல்நேரிட்டால் இரண்டாம்முறையும் முயற்சித்துப் பார்க்கவேண்டும். அப்போது அவசியம் கைகூடிவரும். இதைக்கவனியாத சிலர் முதன்முறை நேர்ந்த பிசகினால் மறுபடி அதை அலட்சியம் செய்து விடுகிறார்கள். எத்தொழிலையும் அடுத்தடுத்து முயன்றால் கடைசியில் கைகூடிவருமென்று பெரியோர் கூறுவர். இதனை "உறுதியப்ப கடைபோகாவேனும் - இறுவரைகாறுமுயல்ப." என்னும் ஆன்றோர் வாக்கானுமறியலாம். நாம் கூறிவரும் பாகங்களுக்குச் செலவும் சொற்பமேயாகையால்

தாங்கள் பரீட்சைபார்க்கும் பாகங்களில் முதல்முறை பிசகினாலும் பெருநஷ்டமடையார்கள், இரண்டாம்முறை அனுகூலமடைவார்கள். சிலர்பத்திரிகையைவாசித்துவிட்டு வீசிவிடுவதும் வழக்கம். அவ்வாறு செய்வதழகன்று. ஏனென்றால், அற்பமானபாகமாயிருந்தபோதினும், அதைச்செய்துபரீட்சித்துப்பார்த்தால் அதன் நுட்பங்கள் தெரிந்துகொள்வதன்றியில் அதன் மூலமாய் அநேகதந்திரங்களும் நுட்பங்களும் யுக்திகளும் வெளிவரும். ஏட்டுச்சுரைக்காய் கறிக்காகாதென்பதுபோலப் புத்தகத்திலுள்ள விஷயங்களைப்புத்தகத்திலேயே விட்டுவிடாமல் அவைகளை அனுபவமாக்கிக்கொள்வதே புத்திசாலிகட்கடையாளம். ஆகையால் நம்நேயர்கள்யாவரும் நம்பத்திரிக்கையின் பாகங்கள்ஒவ்வொன்றையும் பரீட்சைபார்த்து அனுபவமடைய வேண்டுமென்பதே நமது கொள்கை. இனிகாலத்திற்குக்காலம் அதிக மேலானவிஷயங்களும் அபூருபமானமுறைகளும் எழுதிவருவோமாகையால்,நமது நேயர்கள்யாவரும் அவைகளைச் செவ்வனே அனுபவப்படுத்திக்கொள்ளவேண்டும்.

இங்ஙனம் மேற்கூறப்பட்டுள்ள விஷயங்களை எழுதவேண்டிய அவசியம் என்னவென்றால், போட்டோகிறுப் கல்வியைக்கொண்டு அனேக அரியவிஷயங்களைத் தெரிந்துகொள்ளக்கூடுமாகையால், இதை அலட்சியம்செய்யாமல் நம்நேயர் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ளவேண்டுமென்பது நமதுகருத்தாயிருப்பதே அதனாற்றான் இவ்வளவாகவற்புறுத்திக்கூறும்படி நேரிட்டது. இன்னும் போட்டோகிறுப் பிடிக்கும் யந்திரங்கள் சீர்மையிலிருந்து வருபவைகளைவாங்குவதாயிருந்தால் ரூபா 100-200-300 வரையில் பிடிக்கும். ஆனால், நமதுநேயர்களிற் சிலர் இவ்வளவுவிலைகொடுத்து வாங்கக்கூடாதவர்களாயிருப்பதனாலே, சீர்மையிலிருக்கும் பெரிய (Firm) பர்ம்களுக்குளெழுதிச் சாமான்களை வரவழைத்து நமது ஆபிஸிலேயே ஷை போட்டோகிறுப்யந்திரத்தைத்தயார்ப்படுத்துகிறோமாகையால், வேறுபக்கத்தில் விளம்பரத்திற் குறிப்பிட்டிருக்கிறபடி ஷை யந்திரங்கள்மருந்து முதலிய சாமான்களை மிகச் சொற்பக்கிரயத்திற்கு நமமிடத்திற்பெற்றுக்கொள்ளலாம். போட்டோகிறுப்பைக் கற்றுக்கொள்ள இஷ்டமுடையவர்கள், ஆரம்பிக்கும்போதே யந்திரங்களையும் வாங்கிவைத்துக்கொண்டால்தான் அவர்களுக்கு ஒவ்வொரு விஷயமும் செவ்வனேபுலப்படும். இனி அடுத்த பத்திரிகைமுதல் போட்டொகிறுப்படம் பிடிக்கும் சூட்சங்களைப்பற்றித்தெளிவாய் எழுதிவருவோம்.

கடவுள் துணை

# விநோத விசித்திரப் பத்திரிகை

1900-ம் ௵

160962

புஸ்தகம் 1 ] ஜூலை ௴ 1௳ ஞாயிற்றுக்கிழமை. [No. 7.

## கடவுள் உண்டு.

7m 2/11/1990
N001

(97-ம் பக்கத்தொடர்ச்சி.)

இன்னும் இப்பூமியினின்றும் உண்டாகின்ற செடி கொடிகளை விசாரித்துப்பார்ப்போம். அவற்றின் வகை இத்தனையென்று எண்ணிச்சொல்ல எவராலுமேலாது. அவற்றுள் ஒவ்வொன்றின் இயற்கையும் குணமும் ஒவ்வோர்வகையாயிருக்கும். இவ்வுலகம் உண்டான நாள்முதலாக உண்டாகி எங்கெங்கும் பரவியிருக்கும் விஸ்தீரணமான காடுகளைக் கவனியுங்கள். அதியுன்னதமாயுயர்ந்த ஆகாயமுழுவதும் பரவியிருப்பதுபோலப் பூமிக்குள்ளும் அபரிமிதமான வேர்களோடி எவ்விடத்தும் வியாபித்துள்ள விருக்ஷங்களையும் ஆராயுங்கள். அத்தகைய விருக்ஷங்களனைத்தையும் எவ்வகைக் காற்றிற்கும் அசையவொட்டாமல் உறுதியாக நிலை நிறுத்திக் காக்கின்றவை அவற்றின் வேர்களே. அவ்வேர்களே பூமிக்குள் நாட்டிய குழைகள் போன்றிருந்து அவ்விருக்ஷங்கள் வளர்வதற்குவேண்டிய பூமியின் சாரங்களை நாற்புறத்தினின்றுமிழுத்து அடிமரத்திற் கொண்டுபோய்ச்சேர்க்கின்றன. மெல்லிதான விருக்ஷத்தினுட்புறம் வெயில் காற்றுகளில் அடிபட்டு அழியாதபடி அவற்றின் மேற்பட்டையே மிகுபத்திரமாகக் காக்கின்றது. வேர்கள் அடிமரத்திற் கொண்டுபோய்ச்சேர்த்த சாரங்களை, அநங்கிளைகள் பற்பல வழியாகப்பிரிந்து அம்மரம் முழுவதும்

செல்லும்படிச்செய்கின்றன. கோடைகாலத்திற் கதிரவனுடைய கொடிய கிரணங்களால் நாம் வருந்தித்தவிக்காதபடி அம்மரங்கள் நமக்கு நிழல் கொடுத்துக்காக்கின்றன. குளிர்காலத்திலும் நாம் குளிரால் வருந்தாதபடி அவைநமக்குச் சூடுண்டாக்குகின்றன. மரக்கட்டைகள் அடுப்பெரிப்பதற்குமாத்திரமே உபயோகப்படுவனவல்ல. வீடுகட்டுவதற்குவேண்டிய உத்தரம் முதலியவை, மேஜை நாற்காலி முதலிய வீட்டுச்சாமான்கள், கப்பல் வண்டிஎன்னும் இவைபோன்ற மனிதரார்செய்யக்கூடிய இன்னும் அநேக விதப்பொருள்களுக்கும் உபயோகமாகின்றன. கனிவிருக்ஷங்கள் நிறையப்பழுத்துச் சுமை தாங்கமாட்டாமல் தலை தாழும்போது, அப்பழங்களைப்பெற்றுக்கொள்வதற்கு நம்மைவருந்திஅழைப்பதுபோன்றிருக்கின்றன. பெரிய விருக்ஷங்களிலுள்ள புதுமை யத்தனையும் ஒரு சிறுசெடிக்குள்ளாகவே அடங்கியிருக்கின்றன. செடிகளில் நம்முடைய ஆகாரத்திற்கும் ஔஷதங்களுக்கும் உபயோகப்படும்படியான எண்ணிறந்த பொருள்களுண்டு. ஒவ்வொரு செடிகளினின்றும் உண்டாகும் பொருள்களால் அனேக அற்புதச்செய்கைகளைச்செய்கிறோம். சகலவியாதிகளும நிர்மூலமாவதும் பலவித மூலிகைகளாலேயே. இம்மூலிகைகளைக்கொண்டே சகல உலோகங்களையும் வேற்றுருவமாய் மாற்றிவிடுகிறோம். இப்பூமி தன்னிலையிற் சிறிதும் வேற்றுமைப்படாமலிருந்து தன் விளைவுகளில் மாத்திரம் இவ்வகையான வேறுபாடுகளை உண்டாக்குகின்றது.

நீரைக்குறித்து யோசிப்போம். அது திரவமாய் ஊடுருவிப்பாயத்தக்க ஓர் வகைப்பொருள். அது நமதுகைக்குப்பிடிபடத்தக்க பொருளன்று. அதற்கு எவ்வித உருவமுங்கிடையாது. அது எதிற்சேர்கின்றதோ அவ்வடிவமாகின்றது. நீரை நன்றாகக்காய்ச்சினால் அது நமது கண்களுக்குப்புலப்படாத பொருளாகமாறிப்போம். நீரெல்லாம் ஒருமிக்க அவ்வாறே மாறிப்போயின், உடனே இப்பூமிமுழுவதும் உலர்ந்து கல்லாகிப்போம். இந்தத்திரவப்பொருளை நமக்குத்தந்த காருண்யரே அதை வெகுகருத்தாக இப்பூமிமுழுவதும் பரவியிருக்கும்படி படைத்திருக்கின்றனர். நீர் மலையினின்றும் பெருகிவந்து கணவாய்களின் வழியாய்ப் பெரிய நதிகளிற் புகுந்து சுற்றிச்சுழன்று நாடுமுழுவதும் நீர் பாய்ச்சிக்கொண்டோடி நானாதேசத்து வர்த்தகங்கட்கும் மத்தியகட்டமான சமுத்திரத்திற்குச் செழிப்புண்டாகும்படி அக்கடலில் விழுகின்றது. நாடுகளுக்குநிலையான பிரிவுபோலிருக்கும் இந்தச் சமுத்திரம் எல்லாத்தேசத்தார்க்கும் பொதுவானமத்தியமார்க்கமாம் இந்தியாதேசத்திலுள்ளவர்கள் ஐரோப்பாவுக்குப்போகவும், ஐரோப்பியர் அமெரிக்காவுக்குப்போகவும் அமெரிக்கர்கள் சீனதேசத்திற்குப்போகவும், இவ்வாறே ஓர் தேசத்தார் மற்றோர் தேசத்திற்குப்போகவும், ஏற்ற வழி துறைகளெவையும் இந்தமகா சமுத்திரத்திலல்லவா இருக்கின்றன. நமது தேகத்திற்குள் இரத்தம் ஓடிப்பாய்வதுபோல் நீர் பூமிக்குள் எங்கெங்கும் பரவியிருக்கின்றது. மேலும், கடல்நீர் என்றும் ஒரே அளவான பெருக்கமும் வற்றமும் உடையதாயிருக்கக் காண்கிறோம். அணையில்லாத இவ்வகண்டசமுத்திரம் இப்போதிருக்கும் அளவுக்குச்சற்று அதிகரித்தால், பூமிமுழுவதும் அமுங்கி அதிலுள்ள சகல வஸ்துக்களும் அடியோடே மாண்டுபோமல்லவா? அபாரமான இந்த சமுத்திரத்தை இவ்வண்ணம் ஒரே அளவாய் அடக்கி ஆண்டுவருவதற்கு ஒருவரிருக்கவேண்டியது அவசியமல்லவா? இன்னும் ஆகாயத்தில் மேகங்கள்திரண்டு எங்கும் இருள்மூடிப்பெய்கின்ற மழை சிறுசிறு துளிகளாகவும் தாரைகளாகவும், ஆகாயத்திலிருந்து பூமியிலிறங்குகிறதேயன்றிப் பெரியகட்டிகளாகவும் பெரியதாரைகளாகவும் இறங்குகிறதில்லையே! அப்படிபெய்தாற் பூமியிலுள்ள பிராணிகளுக்கு எவ்வளவு கெடுதிவிளையுமென்று சிந்தித்துப்பாருங்கள். ஆகாயத்தில் அந்தரமாயமைத்திருக்கும் இந்த ஜலப்பிரவாகத்தைப்பூலோகத்திற்குப் பிரயோசனமாகும்படி இறக்குகின்ற தந்திரத்தையும் யுக்தியையும் கவனியுங்கள். மழையில்லாத சிலகாலங்களிற் பனியாகப்பெய்யவைத்துப் பயிர்களுக்குச்சலத்தை ஊட்டப்படுகின்றன. இவ்வித மழை பனி இல்லாவிட்டால் நாம் பயிரிடுகிறதெங்கே? ஜீவிக்கும்படியான வழியேது? சிலசமயங்களில் நமக்குத்தாகம் நேரிட்டபோது, உடனே பானம்பண்ணுவதற்குச்சலம் அகப்படாவிட்டால் நாம் எவ்வளவு கஷ்டப்படுகிறோம். இவ்வாறே நமக்கும் ஏனைய சகல பிராணிகளுக்கும் பயிர்செய்வதற்கும் ஸ்நானபானாதிகட்கும் இன்றியமையாததாய் இயற்றப்பட்டுள்ள இந்தச்சாதனமாகிய ஜலத்தை, அதிகப்படுத்தாமலும் குறைக்காமலும் அவரவர்கள் அவசியத்திற்குத் தக்கவாறு ஆங்காங்கு அளித்துக்கொண்டு வருகின்ற அதிசயத்தை ஆழ்ந்துபாருங்கள். (இன்னும் வரும்.)



## வைத்தியம்.

### எலும்புகள்.

(90-ம் பக்கத்தொடர்ச்சி.)

எலும்பு முறிந்தாலும் சீக்கிரம்கூடிவிடும். முறிந்தஎலும்பு ஊறியபின் அந்த அவயவத்திலே கொஞ்சகாலம் வரையில்நோயும்விறைப்புமிருக்கும். அவைகளைநீக்கப்பற்றுப்போடுவதாவது, வசைஎண்ணை

பூசுவதாவதுசரியானதல்ல. ஏனெனில், அந்த அவயவத்தைவில்லங்கமாய்ப் பாவிப்பதனால் அது திரும்பவும் முறியாதபடிக்கு, அங்குள்ளநோய் அப்பொருத்து பலக்குமளவும் அதற்கொரு காவலாகவிருக்கின்றது. நோய் தோற்றுகபடிக்குமுறிந்த அவயவத்தைப் படிப்படியாய் அசைத்து வழங்கிவர அங்குள்ள விறைப்பும் நோயும் தானே தீர்ந்துவிடும்.

மனிதர்வெகுநாட்படவியாதியாய்க்கிடந்தாலும்,விசேஷமாய்ப்பொருத்துக்களிலேஎந்தநோய்வந்தாலும், அவர்களுக்குத் துணையாயிருப்பவர்கள், வியாதிக்காரருடைய பொருத்துக்கள் ஒரு கிடையாய் அசைவின்றிக் கிடக்கவிடாமல்,இடைக்கிடையே அப்பொருத்துக்களின் நிலையை மாற்றிவைக்கவேண்டும். இப்படிச்செய்யாமல் விட்டுவிட்டாற் பொருத்து விறைத்துச்சிலவேளை அசைக்கக்கூடாமற் போய்விடும். இதனாலேயே சிலர் முடவராய்ப்போனார்கள்.

எவ்வளவு கவனமாயிருந்தாலும் வியாதியின் தன்மையினாலே பொருத்துக்கள் சிலவேளை அசையாமல் விறைத்துப்போம். முழங்கைப் பொருத்திலே இப்படிப்பட்ட மோசம் நேரிட்டால், உள்ளங்கை மேலுக்கு நிற்கத்தக்கதாய்அதை மார்போடே வளைத்துவைக்கவும், முழந்தாள் பொருத்திலே அவ்விதமோசம் வந்தால் அதைக் கொஞ்சங்குறைய நேராய் வைக்கவும். இப்படிச் செய்து வைத்தாற் பொருத்து அசையக்கூடாமல் விறைத்துப்போனாலும், கையினாலே அள்ளிச்சாப்பிடவும் காலினாலே நடக்கவும் கூடியதாய்வரும். இதுகாறும் எலும்பைப்பற்றி முக்கியமாய்த்தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்களைக்கூறினோம். இனிஅடுத்த பத்திரிகைமுதல் தசைகளைப் பற்றி எழுதுவோம்.

### 85. படிகாரத்தின் குணம்.

(91-ம் பக்கத்தொடர்ச்சி.)

நுரைசரல் இரைக்குடல்முதலிய உள்ளுறுப்புக்களில் நின்றுஇரத்தம்போனால் வேளையொன்றுக்கு 8 கிரெயின் படிகாரமாகத் தினம் 3 வேளை கொடுக்கவும் 3. வேளை கொடுத்தபிறகு வியாதிகுணமாகாமல்அதிகப்பட்டால்உடனே ஔஷதத்தை நிறுத்திவிடவேண்டும். வியாதியுடன் சுரமும் கூடியிருந்தால் முற்கூறிய ஔஷதம் கொடுக்கக்கூடாது. வேறு பிரயோகம் எப்படி யென்றால், 120 - கிரெயின் படிகாரத்தை அரைப்புட்டி பசுவின் பாலிற்போட்டு ஒரு புதுச்சட்டியில் வார்த்து, அடுப்பில்வைத்துப் பத்துநிமிஷம் வரையிற்காய்ச்சி



உடனே சீலையில் வடிகட்டிக்கொண்டு ஆறினபின், வேளைக்கு ஒன்றரை அவுன்ஸ் வீதம் தினம் 3-வேளை கொடுக்கவும். இதனுடன் ஒரு கிரெயின் அபினுங் கூட்டிக்கொடுத்தால் மிகுந்த குணமுண்டாகும். ஆனால், வயது சென்றவர்கட்குமட்டுந்தான் அபின் சேர்த்துக்கொடுக்கலாம். பெண்களுக்குச் சுரோணிதநீர் அதிகமாயும் இடைவிடாமலும் போகிறதற்கும், மூலமுளையில் நின்று இரத்தம் போகிறதற்கும் மேற்சொன்ன ஔஷதம் பிரயோசனப்படும்.

தொண்டை புண்ணாய் அல்லது சிவப்பாயிருக்கிற தொண்டை நோய்க்குக் கடுக்காய்க்கியாழம் அரைபுட்டியில் 120-கிரெயின் படிகாரமும் கொஞ்சம் தேனும் கூட்டித்தினம் 3-4-வேளை வாய்கொப்பளிக்கச்செய்யவேண்டும்.இரசஞ்சேர்ந்த ஔஷகம் சாப்பிட்டதனாலாவது மற்றெந்தக் காரணத்தினாலாவது,பல் ஈறிலுண்டாகும் இரணம் முதலியவியாதிகட்குப் படிகாரத்தைக்கடுக்காய்க்கியாழத்திற் கலக்கி வாய் கொப்பளிக்கச்செய்தால் சௌக்கியமாகும். சிறு குழந்தைகளுடைய வாயிலுண்டாகும் வெண்ணிறமான புண்களுக்கு, 10-கிரெயின் படிகாரத்தை நுணுக்கி அரை அவுன்ஸ் தேனிற்கலந்து விரலால் தொட்டு வாயினுள் பூசிவந்தால் சவுக்கியமாகும்.

குழந்தைகளுக்குக் கக்கிருமல் கண்டால் 3-கிரெயின் படிகாரத்தை நுணுக்கித் தேனிற்கலக்கித் தினம் 2-3-வேளை கொடுக்கவும். இதிற் குணம் காணாவிட்டால்படிகாரத்தின் எடையை அதிகமாக்கி அதனுடன் கொஞ்சம் காயமும் சேர்த்துக்கொள்ளவும்.

ஆண்குறியின் நீர்த்துவாரத்தி லல்லாமல் அதன் நுனித்தோலில் நின்று ஒரு விதமான வெள்ளை நீர் வருகிறதற்கு ஒரு அவுன்ஸ் ஜலத்தில் 30-கிரெயின் படிகாரத்தைக்கலக்கி அத்தோலினுள் விட்டுக்கொள்ளவும். ஆண்குறியைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். பெண்களுக்குக் காணும் மேகவெள்ளைக்குப் படிகாரத்தைக் கடுக்காய்க்கியாழத்திற்கலக்கிப் பீர்ச்சாங்குழலால்மர்மஸ்தானத்திற் செலுத்திக் கழுவவேண்டும். அல்லது அழுக்கில்லாத ஒரு மெல்லிய சீலைத்துண்டை அதில் நனைத்து உபஸ்தத்தினுட் செலுத்திவைக்கவும். இவ்வாறு செய்யும்போது, 10-கிரெயின் படிகாரத்தைத் தேனிற்கலந்து தினம் 3-முறை உள்ளுக்கும் கொடுக்கலாம்.

கெடுநாட்பட்ட நாற்றமுள்ள படரும் புண்களுக்குப் படிகாரத்தூள் 8-திராம், காசுக்கட்டித்தூள் 2 - திராம், அபின் ஒருதிராம்,

* மெழுகுபிளாஸ்த்திரி2-அவுன்ஸ. இவைகளில் அபினை முன்னதாகப் பிளாஸ்த்திரியுடனே செவ்வையாய்க் கலந்துகொண்டுபிறகு, மற்றெல்லா மருந்துகளையும் சேர்த்தரைத்து ஒரு துணியில் தடவிக் காலை மாலை என்னும் இரண்டு வேளையும் புண்ணிற்போட்டு வந்தால் ஆறிப்போம். இதில் எரிச்சலுண்டானால் அதன் காரத்தைக் குறைப்பதற்காக மெழுகு பிளாஸ்த்திரி எடையை அதிகமாக்கிக்கொள்ளவும். இரணங்களில் அதிகமாய் வளரும் துர்மாமிசங்களுக்குப் பொரித்த படிகாரத்தூளிற் கொஞ்சம் தூவினாற் குணமாகும்.

மூட்டுவீக்கங்களுக்கும் அடிச்சதைவு சுளுக்கு இவைகளாலுண்டாகும் வீக்கங்களுக்கும் அரை புட்டிகாடியும் அதற்குச் சமன்சாராயமும் கலந்து 4 கிரெயின்ஸ் படிகாரத்தூள் அதிலிட்டுக் கலக்கி அதிற் சீலையை நனைத்து ஷை வீக்கங்களுக்குப் போடவேண்டும். படிகாரத்தூள் 8 கிரெயின்ஸ் காசுக்கட்டித்தூள் 10 கிரெயின்ஸ் கருவாப்பட்டைத்தூள் 6-கிரெயின்ஸ், இவற்றைக்கொஞ்சம்விளாம்பிசின் ஜலம் விட்டு அரைத்து, மிளகுப் பிரமாணம் மாத்திரை செய்து உலர்த்தி வைத்துக்கொண்டு, வாந்திபேதி கண்டவுடனே, தேனிற் கலக்கிக் கால்மணிக்கு ஒரு மாத்திரை வீதம் கொடுத்துக்கொண்டு வந்தால், வியாதி மூர்க்கங் கொள்ளாமல் சாந்தமாய்ச் சுகுணமுண்டாகும். பிராயமானவர்களுக்குப் பேதிகடினமாயிருந்தால், மேற்சொன்னமருந்தில் அபின் ஒருகிரெயின் சேர்த்துக் கொள்ளவும், குழந்தைகளுக்கானால் ஒரு கிரெயின் அபினில் பத்தில் ஒரு பங்கு சேர்க்கலாம். ஒன்று அல்லது இரண்டுமுறை கொடுத்தபின் மயக்கம்காணில் உடனே அபின் சேர்ந்த மருந்தை நிறுத்திவிடவேண்டும்.

நெடுநாட்சென்றவயிற்றுப்போக்குக்குப் படிகாரம் 10கிரெயின்ஸ் வசம்புத்தூள் 15 கிரெயின்ஸ்அபின்அரைகிரெயின் இவைகளைக் கலந்து கொடுக்கவும். இவ்விதம் பிரதிதினம் 3 வேளை கொடுக்கவும்.

நீர் அதிகமாய்ப் போவதைக் குறைப்பதற்கு ஒருபடி பசுவின் பாலில் 2 திராம் படிகாரத்தூளைப் போட்டுக் காய்ச்சி, இறக்கி வடிகட்டி வேளை 1-க்கு 4 அவுன்ஸ் வீதம் ஒரு நாளைக்கு 3 முறை சாப்பிட்டு வரவேண்டும்.

---

* மெழுகு பிளாஸ்த்திரி:—தேன்மெழுகுவெள்ளையாய் எடுத்து அவுன்ஸ் 2, ஒருசட்டியிலிட்டுக் காய்ச்சி உருகியபின், தேங்காயெண்ணெய்5-அவுன்ஸ் அதனுடன் விட்டுக்கலக்கிஇறக்கிஆறியபின், டப்பியில் வைத்துக்கொள்ளவும். இதுவே மெழுகு பிளாஸ்த்திரி. சகலரணங்களுக்கும் துணியில் தடவிப்போடலாம்.



படிகாரத்திற்கு நீரைவரட்டுகிற குணமிருப்பதால், சிலருக்கு வாயும் நெஞ்சும் உலர்ந்து கொஞ்சம் தாகமெடுக்கும், மலம் இறுகிப் போகும். பிராயமானவர்களுக்கு வேளை யொன்றுக்கு 10 முதல் 20 கிரெயின்ஸ் வரையிலும், குழந்தைகளுக்கு 1-முதல் 5 கிரெயின்ஸ் வரையிலும் அளவாகக் கொடுக்கலாம். அளவுக் கதிகமாய்ச் சாப்பிட்டால் குமட்டல் வாந்திவயிற்றுக்கடுப்பு பேதிமுதலிய துர்க்குணங்கள் கண்டு வயிறு புண்ணாகும்.

## 86. படிகாரகிலேதம். (Alum Lotion.)

### மேகப்படை ரணம் மூலம் பவுத்திரம் முதலிய வியாதிகளுக்குக் கிலேதமென்னும் கழுவுகிற மருந்து,

படிகாரம் 5 திராம், நெல்லிக்காய்க்கெந்தகம் $2\frac{1}{2}$ திராம், இரண்டும் செவ்வையாயரைத்து, 10 அவுன்ஸ் ஜலத்திற் கலந்து புட்டியிலடைத்துக் கொண்டு ரணங்களைக் கழுவிவரவும்.

## 87. முற்கூறியவியாதிகளுக்கு வேறுகிலேதம்.(Lotion.)

படிகாரம் திராம் 3, நவாச்சாரம் திராம் 1, இவைகளையரைத்து 8 அவுன்ஸ் உயர்ந்தபன்னீரில் கலந்து புட்டியிலடைத்து வைத்துக் கொண்டு ரணம் முதலியவியாதிகளைக் கழுவவும். அல்லது துணியை நனைத்து அதன் மேற்போட்டு அடிக்கடி அந்த ஜலத்தினால் நனைத்துக் கொண்டேயிருந்தால் வெகு சீக்கிரத்தில் சுகுணத்தைக் கொடுக்கும்.

## 88. மேகவெள்ளைக்குப் பீச்சுமருந்து.

படிகாரத்தூள் கிரெயின்ஸ்24-(Sulphate of Zinc) ஸல்பேட் ஆவ் ஸிங்க் கிரெயின்ஸ் 24, இவைகளை அரைத்து 8-அவுன்ஸ் பன்னீரிற் கலந்துகொண்டு புட்டியிலடைத்து, மேகவெள்ளைகண்டவர்களுக்கு பீர்ச்சாங்குழலால்ஆண் அல்லதுபெண் குறிகளைக் கழுவிவந்தால், எரிச்சலைத்தணித்து ரணத்தை ஆற்றி வெள்ளைவீழ்தலை நிறுத்தும்.

## குழந்தைகளின் பாதுகாப்பு.

(88-ம் பக்கத்தொடர்ச்சி.)

கர்ப்பஸ்திரீ மலஜலம் கிரமமாய்க்கழிக்கும்படியான வழிகளைத் தேடிக்கொள்ளவேண்டும். இளங்கர்ப்பத்தில் ஆகாரத்தினளவைக்குறைத்தும், கர்ப்பம் முதிரமுதிர ஆகாரத்தைக்கொஞ்சம் கொஞ்சமாய் அதிகப்படுத்திக்கொண்டும் வரலாம். ஆனால், அஜீரணத்தைக்

கொடுக்கும்விதமாய் அளவுக்குமேற் கொள்ளக்கூடாது. ஒவ்வோர் வேளையிலும் செவ்வனே பசியெடுக்கும்படியான ஜாக்கிரதைசெய்து கொண்டுவரவேண்டும். ஒருநாளைக்கு ஒரேவேளை இறைச்சிசேர்த்துக்கொள்வது நலம். கொழுப்புள்ளபதார்த்தங்களையும், கடுமையாய் ஜீரணிக்கத்தக்க பதார்த்தங்களையும் நீக்கவேண்டும். கர்ப்பஸ்திரீ தனக்குப்போதுமான தூக்கம்கொள்ளவேண்டும். அதாவது இரவு 9-அல்லது 10-மணிக்குப் படுக்கைக்குப்போய்க் காலை 5 - மணிக்கு எழுந்து தன் காலைக்கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். சில சோம்பேறி ஸ்திரீகள் அற்பவிஷயங்களைப் பிரமாதப்படுத்திக்கொண்டு, பலசாக்குப்போக்குகள் சொல்லிக்கொண்டு, நாள்முழுவதும் படுத்து உறங்கிக்கொண்டிருப்பார்கள். இதுமிகக்கெட்டவழக்கம். இதுவே அவர்களுக்கு வியாதியையுண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆதலால், அதைமுற்றும் பரிகரிக்கவேண்டும். அதிகாலையிற் காலைப்போஜனம் சாப்பிடவேண்டும். இன்னும்தான் சௌக்கியத்தை அனுபவித்தற்கேற்றதாக எந்தெந்த நற்கிருத்தியங்களைத் தன் அனுபோகத்தில் அனுஷ்டித்து வந்தாளோஅவற்றையெல்லாம் கைவிடாமல் சுகத்தைக் கவனித்துவரவேண்டும். ஒருஸ்திரீ கர்ப்பமாயிருக்கும்போது,அவளுடைய குடும்பத்தார் அவள் மனதைச் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் வைத்துவர முயலவேண்டும். அவளுக்கு வியசனம் பயம் கோபம் முதலியவையுண்டானால் வயிற்றிலிருக்கும் சிசுவுக்கும் பங்கமுண்டாகும். இவ்விதம் மேற்கூறப்பட்டுள்ள ஒழுங்குகளைக் கவனித்து ஷை ஸ்திரீ சௌக்கியமான ஸ்திதியிலிருந்துவந்தால், வயிற்றிலுள்ள சிசுவும் ஆரோக்கிய ஸ்திதியிலிருப்பதுமல்லாமல், பிரசவகாலத்தில் தனக்கும்சிசுவுக்கும் யாதொருகஷ்டமும் தீங்கும நேரிடாமல் சுகமான பிள்ளைப்பேற்றையும், அதற்குப்பின் நோயினாற் பீடிக்கப்படாமற் சவுக்கியவிர்த்தியையும் அடைவதற்கோர் அஸ்திவாரமாகவுமிருக்கும். இன்னும் பிரசவகாலமும் நீடித்திராமல் சீக்கிரத்திலேயே சிசு உதயமாய்விடும். முக்கியமாய்க் கர்ப்பம் தரிக்கிறகாலத்தில் குழந்தையின் தகப்பன் சுகஸ்திதியிலிருக்கவேண்டும. பத்துமாதம் வரையிற் சுமந்திருந்து பெற்றஅருங்குழந்தையின்மேல்தாய்க்குஅளவிறந்த அன்புஇருக்கிறதென்பதிலையமில்லை. ஆனால்,அக்குழந்தையைக்காப்பாற்றும்படியான மார்க்கத்தைத்தெரிந்துகொள்ளாத அனேகம் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை அகாலத்தில் மாளவைத்து அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறார்களாகையால், அவ்வித அஞ்ஞானத்திற் கிடங்கொடாமல்



ஒவ்வொருவரும் குழந்தைகளைப்பாதுகாக்கவேண்டிய இயல்பைக்கற்றுக்கொண்டு, அதைத்தங்கள் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதேயல்லாமல், தங்கள் புத்திரர்களுக்கும் புத்திரிகளுக்கும்சிறுவயதிற்றானே கற்பித்துக்கொடுக்கவும் வேண்டியது முக்கியகடமை.

(இன்னும்வரும்.)

## பாக சாஸ்திரம்.

### 89. மல்கோபாப்புலாவ்.

மாம்பழத்தில் உயர்ந்த தினிசான மல்கோபா என்னும் பெயருடைய பழம் அல்லது வேறே உயர்ந்த தினிசுமாம்பழத்தில் அரைப்படி ரசம் பிழிந்துகொண்டு ஒருபடி சுத்த ஜலத்துடன்கலந்துகொண்டு ஒரு பாத்திரத்தில் விட்டு வைத்துக்கொள்ளவேண்டும்.

சம்பாரங்கள்—சுத்தி செய்த பச்சரிசி படி 1, நெய் பலம் 4, அரிந்த வெங்காயம் கைப்பிடியால் ஒருபிடி, அரைத்த இஞ்சிபலம் 2, அரைத்த பூண்டு பலம் 2, இலவங்கம் இலவங்கப்பட்டை ஏலக்காய் என்னும் இவைகள் தினிசுக்குப் பலம்கால், பச்சைக் கொத்துமல்லித்துளிர் கைப்பிடியால் ஒருபிடி, பசுவின்பால் படி கால், வெள்ளைச் சர்க்கரை பலம் 25, குங்குமப்பூ வராகனெடை கால்.

பாகம்—இவற்றுள் அரிசியை இரண்டு மூன்று முறை ஜலம் விட்டுக் கழுவிய பிறகு, அரைமணி நேரம் ஜலத்தில் ஊறவைத்தெடுத்து நீரைவடிகட்டி, ஒரு பாத்திரத்தில் ஒரு பலம் நெய்யைவிட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சி, அதில் ஷை அரிசியைப் போட்டுக் கரண்டியினாற் கிளறிக் கொண்டேயிருந்து அரைவேக்காடாய்க் (கொஞ்சம் சிவக்கும்வரையில்) வறுத்தெடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். சர்க்கரையை27ம் பக்கத்திற் கூறிய 7வது பாகப்படி அதற்குப் போதுமானஅளவு ஜலம் விட்டுச் சர்பத்துப்பதத்திற் பாகுகாய்ச்சிக் கொள்ளவேண்டும்.

பிறகு ஈயம் பூசிய ஓர்செப்புப் பாத்திரத்தில் நெய்யை விட்டுக் காய்ச்சி 35ம் செ. பாகப் பிரகாரம் பாகம் செய்து முக்கால் பாகம் வெந்தபதத்திற் குங்குமப்பூவையரைத்துப் பாலிற் கலக்கிச் சர்க்கரைப்பாகையும் அதனுடன் சேர்த்து, அடுப்பிலிருக்கும் சாதத்தில் பரவலாய் விட்டு ஜல்லிக்கரண்டியினால் கிளறிவிட்டுத் தம்முக்குவிட்டுச் சற்று, நேரத்திற்குப்பிறகு இறக்கி உபயோகித்துக் கொள்ளவேண்டும். சீதம் மிக்க நேர்த்தியாகவும் சுகந்தமாகவும்மிருக்கும்.

## 90. பருப்புச்சமையல்.

ஒருபடி ஜலத்தை ஒரு பாத்திரத்திற் போட்டு அடுப்பில் வைத்துக்காய்ச்சி, ஜலம் செவ்வனே கொதிவந்த பிறகு, சுத்திசெய்த காற்படி துவரம்பருப்பை அதிற் கொட்டி மஞ்சட்பொடி விசம் ரூபாயெடை நெய் பலம் அரை என்னும் இவைகளையும் அதனுடன் போட்டு, பாத்திரத்தின் வாயை ஒரு தாம்பாளத்தினால் மூடிவைக்கவேண்டும். பிறகு ஷை பருப்பு பஞ்சுபோல் வெந்த பதம் பார்த்துக் காற்பலம் பொடி செய்த உப்பை அதிற்போட்டு, ஒரு கரண்டியின் தலையினால் செவ்வனே மசிக்கவேண்டும். கொஞ்சம் நேரத்திற்குப் பின் அப்பருப்பின் ஜலம் வற்றிக் கொஞ்சம் மொத்தையான பதம் பார்த்து அடுப்பைவிட்டிறக்கி உபயோகித்துக் கொள்ளவும். இதைப் போலவே பயற்றம்பருப்பு உளுத்தம்பருப்பு என்னும் இவைகளையும் பாகம் செய்யலாம். ஆனால், பயற்றம் பருப்பைச் சில சமயங்களில் வறுக்காமலும் உமிநீக்கியும், உளுத்தம்பருப்பை மாத்திரம் எப்போதும் வறுத்தே உமிநீக்கியும் உபயோகப்படுத்தலாம்.

## 91. கத்தரிக்காய்த் தயிர்ப்பச்சடி.

சொத்தையில்லாததாயும் இளசாயுமுள்ள பருமனான கத்தரிக்காய்களை எடுத்துப் புகையில்லாத்தணலின் மேல் வைத்து முழுதும் வேகும்படி செவ்வனே திருப்பிக் கொடுத்து, பக்குவமாய்ச் சுட்டு அல்லது ஜலத்தில் வேகவைத்தெடுத்துக் கொண்டு, ஆறவிட்டு மேல் தோலையுரித்து, அதில் 12பலம் நிறுத்தெடுத்து ஓர் பாத்திரத்திற் போட்டு தயிர்படி கால், உப்பு பலம் கால், காம்பு நீக்கிச் சிறு துண்டுகளாய் அரிந்த பச்சை மிளகாய் பலம் அரை, ஆகிய இவைகளை அதனுடன் போடவும். (கத்தரிக்காய் சூடாயிருந்தால் தயிர் உடைந்துபோம்) எல்லாச் சம்பாரங்களையும் செவ்வனே பிசைந்து வைத்துக் கொள்ளவும். பின்பு ஒரு பாத்திரத்தில் அரைப்பலம் நெய்யை விட்டுக் காய்ச்சி, மிளகாய் அரைக்காற்பலம், உளுத்தம் பருப்பு காற்பலம், ஆகிய இவைகளைக் காய்ந்திருக்கும் நெய்யில் 22ம் நெம்பர் முறைப்படி தாளிதம் செய்துகொண்டு பச்சடியில் கொட்டிவிடவேண்டும்.

இந்தப்பச்சடியைப் போலவே, பறங்கிக்காய் புடலங்காய் நெல்லிக்காய்மாங்காய் வாழைக்காய்வெள்ளரிக்காய்வெண்டைக்காய்முதலிய காய்களையும் உருளைக்கிழங்கு கருணைக்கிழங்கு நூக்கோல் பீட்ரூட் முதலிய கிழங்குகளையும் பாகம் செய்து கொள்ளலாம்.



## ஜாலம்.

## 92. தேக்கரண்டியை உருகச்செய்வதற்கு.

நான்கு அவுன்ஸ்(Bismith)பிஸ்மத்தை ஒரு மூசையிற்போட்டுக் கொல்லனுலையில் வைத்து ஊதி உருகும் தருணத்தில், $2\frac{1}{2}$ அவுன்ஸ் காரீயம் $1\frac{1}{2}$-அவுன்ஸ் வெள்ளீயம் ஆகிய இவ்விரண்டையும்மூசையிற் போட்டு எல்லாம் சேர்ந்துருகியபின் எடுத்துக்கட்டியாக வார்த்துக் கொண்டு, அந்தகட்டியைத் தட்டானிடத்திற்கொடுத்துத் தேக்கரண்டிகளாகச்செய்து வைத்துக்கொள்ளவும். விருந்தாளிகள் வந்திருக்கையில் அவர்கட்கெதிரில், ஒரு கோப்பையிலே சூடான தேத்தண்ணீரைவிட்டு, அதில் இத்தேக்கரண்டியைப்போட்டுக்கலக்க அந்தச்சூட்டினால் அக்கரண்டி கரைந்துப்போம். அதுகண்ட விருந்தாளிகளனைவரும் ஆச்சரியப்படுவார்கள். (ஆனால் அத்தேத்தண்ணீரைச் சாப்பிடக்கூடாது.)

## 93. இருட்டறையிற் பிசாசுரூபம் காண்பிக்க.

துப்பாக்கிமருந்திற் கொஞ்சம் பிசின் தண்ணீர்கலந்து, ஓர் இருட்டறையின் சுவற்றில் பயங்கரமான பிசாசுருவத்தை எழுதிக்காய்ந்த பிறகு, வேடிக்கை பார்ப்[illegible]ர்களைச் சுவற்றிற் கெதிராகத் தூரத்தில் நிறுத்தி, அவ்வுருவத்தின் கோடுகளினுடைய ஓர் பக்கத்தில் நெருப்புக்குச்சியார் கொளுத்திவிட்டால், அவ்வுருவமுழுதும் சடுதியிற் பற்றிக்கொண்டு ஷை உருவம் திடீரெனத்தோன்றி மறைந்துபோம். (ஷை உருவம் எழுதும்போது அதன் கோடுகளெல்லாம் ஒன்றொடொன்று கலந்திருக்கவேண்டும்.) பார்ப்பவர்கள் பிரமித்து விடுவார்கள்.

## 94. மோதிர வித்தை.

ஒன்றரையடி நீளமும் ஓரடி உயரமுமுள்ள ஒரு மரப்பெட்டிசெய்து, அதின் விலாப்புறத்தில் ஒரு கள்ள அறைவைத்து, பெட்டியின்வாயிலே அழுத்தினால் அக்கள்ள அறையின் கதவு திறக்கும்படியாகவும் விட்டுவிட்டால் அது மூடிக்கொள்ளும் படியாகவும் ஓர் ஸ்பிரிங் வைத்துக்கொள்ளவேண்டும். அவ்வறைக்குள் கழுத்திலே மோதிரமாட்டிய இரண்டுபுறாக்குஞ்சுகளை எற்கனவேவிட்டு மூடி, அதன்பின்பெட்டியின்மேன் மூடியைத்திறந்து பெட்டிக்குள் ஒன்றுமில்லையென்றுயாவருக்குங்காட்டிஇரண்டுபுறாமுட்டைகள்வாங்கி அதில் இரண்டு மோதிரங்களைக்கட்டி, ஜனங்களுக்குக்காட்டிப் பெட்டிக்குள் அவைகளைப்போட்டு, கொஞ்சம்பிராந்திஅல்லது சாராயம்அந்தமுட்டைமேல்விட்டுக்கொளுத்திவிட்டால், அதுபற்றிக்கொண்டுமுட்டை

யுடைந்துபோம். உடனே கள்ளஅறையின் ஸ்பிரிங்கை அழுத்திவிட்டுப்பெட்டியைமூடி, மறுபடியும் திறந்துகாட்ட இரண்டு புறாக்குஞ்சிகளின் கழுத்திலும் இரண்டுமோதிரங்கள் கோத்திருக்கக் கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

## 95. மாய இங்கி.

ஆக்ஸாலிக் ஆஸிட் (Oxalic acid) திராவகத்தில் ஆக்ஸைட் ஆப் கோபால்ட் (Oxide of Cobalt) என்னும்மருந்தைக்கலக்கி அதிற்கொஞ்சம் பொட்டுப்பைப் போட்டு இங்கிசெய்துகொண்டு, இதிற்பேனாவைத்தோய்த்து எழுத எழுத்து ஒன்றுந்தோன்றாது. ஆனால் அக்காகிதத்தை அக்கினிச் சுவாலையிற் காட்டினால் எழுத்துக்கள் ரோஜாப்பூநிறமாய்த் தோன்றும்.

## 96. வேறுமுறை.

நைட்ரேட் ஆப் பிஸ்மத்தை (Nitrate of Bismuth) ஜலத்திற்கலக்கிப் பேனாவைத் தொட்டெழுதினால், எழுத்து உலருகிறவரையிலும் தோன்றிப்பிறகு மறைந்துபோம். அதன்பின் அக்காகிதத்தைத்தண்ணீரில் தோய்த்தால் எழுதின எழுத்துக்கள் மறுபடியும் தோன்றும்.

## 97. ஒருவன்நினைத்த எண்ணைச் சொல்லுவதற்கு.

ஒருவன் தான் நினைத்த ஓர் தொகையை அத்தொகையாலேயே பெருக்கிப்பிறகு,முன் நினைத்ததொகையில்ஒன்றைக்கழித்து,மிகுதிவந்த எண்ணை அத்தொகையினாற்றானேபெருக்கி. பிறகுமுன்பெருக்கினதொகையில் இரண்டாவது பெருக்கின தொகையைக்கழித்து, மிச்சமுள்ள எண்ணில் ஒன்றைக்கூட்டினால் வரும் தொகை எதுவோ அதிற்பாதிதான் அவன் நினைத்த தொகையாகும்.

உதாரணம்,

நினைத்த எண்——10.

10×10——100.

10—1———9

9×9———81

100—81———-19

19+1———-20

20-தில் பாதி—10. இதுவே நினைத்த எண்.



# Photography.

## 98. பொட்டோகிராப் படம்பிடிக்கும் விதம்.

பொட்டோகிறுப் படம் பிடிக்கும் கருவிக்கு (Camera) காமராவென்று பெயர் அது நாற்சவுக்கமுள்ள ஒரு சிறுபெட்டி; அதன் ஓர் பாகத்துமத்தியில்,வட்டமான தொளைசெய்து ஓர்வகைப் பூதக்கண்ணாடியைச் செருகியிருக்கும். இப்பூதக்கண்ணாடிக்கு (Lens) லென்ஸ் என்று பெயர். இப்பூதக்கண்ணாடியின் மூலமாய்ப்பெட்டிக்குள் யாதோரொளியும்செல்லாதவண்ணம் மூடிவைக்கச் சிறுடப்பிபோன்ற மூடியொன்றிருக்கும்; அதற்கு (shutter) ஷட்டர் என்றுபெயர். இந்த காமரா என்னும்பெட்டியை ஓரிடத்தில்வைத்து,யாராவதொருவனைச் சுமார் பத்தடிக்கப்புறத்தில் லென்ஸுக்கெதிரில் நிற்கவைத்து, பெட்டியின்பின்புறத்திலிருக்கும் சொறசொறப்பானகண்ணாடியைப் பார்ப்போமானால்,எதிரில்நின்றுகொண்டிருக்கும்மனிதனுடைய உருவம் தலைகீழாய் உண்மையான நிறங்களுடன் தோன்றும். இப்போது நாம்கூறியசொறசொறப்புக்கண்ணாடியை (Ground glass) க்ரௌண்ட் க்ளாஸ் என்று சொல்லப்படும். பெட்டியிற்செருகியிருக்கும் லென்ஸ் மூலமாய் வரும் ஒளியைத்தவிரவேறுவழியால்எவ்விதவெளிச்சம்பட்டாலும் அவ்வுருவம் மங்கலாகத்தோற்றுமாகலின்; நாம்பின்புறத்திலிருக்கும் கண்ணாடியால் பார்க்கும்போது காமராவின் பின்பாகத்தையும் நம்தலையையும் சேர்த்து ஒரு கறுப்புத்துணியாற் பின்புறத்தை மூடிக்கொண்டுபார்க்கவேண்டும். அப்படிசெய்தும் இன்னும் அவ்வுருவம் தெளிவாய்த்தோன்றாவிடின், தெளிவடைகிறவரையிலும் பெட்டியின்செருகையாவது லென்ஸ் குழலையாவது முன்னுக்கு அல்லது பின்னுக்கு இழுத்துப்பார்க்கவேண்டியது. இத்தொழிலுக்குப் (Focusing) போக்கஸிங் என்றுபெயர். இதுவுமன்றிக் க்ரௌண்ட் க்ளாஸை எடுத்துவிட்டு அதைச்செருகியிருந்தவிடத்தில் டார்க்ஸ்லைட் என்னும் ஓர்வித மூடியைச்செருக வேண்டியிருக்கும். அதைப்பற்றிப்பின்னால் விவரித்துக்கூறப்படும். (இன்னும் வரும்.)

## வாணாள் யாத்திரை.

(52-ம்-பக்கத் தொடர்ச்சி.)

நாம் கண்காணா இராச்சியத்திலிருந்து, புறப்பட்டு இப்பூலோகத்திலுதித்து, மறுஉலகத்திற்குப்போய், லாபம் நஷ்டம் அதாவது சுகம் துக்கம் என்னும் இரண்டுசாதனங்களுள் ஒன்றையடைவதற்கு இப்பூலோகததிலேயே வாணாள்யாத்திரை செய்கின்றோம். அதாவது

இனி நாம் சதா வாசம்செய்யக்கூடிய சுகம் துக்கம் என்னும் இரண்டு ஸ்தலங்களுக்குள் ஒன்றிற்குப் போய்ச்சேருவதற்குச் சன்மார்க்கம் துன்மார்க்கமென்னும் இரண்டிலொருபாதையைக் கைக்கொண்டு கடைசியில் இவ்வாழ்நாள் யாத்திரைமுடிந்தபின் அதாவது நாம் மரணமடைந்தபின் சன்மார்க்கத்தால் பிரயாணம்செய்தவர்கள் சுகமென்னும் ஸ்தலத்திற்கும் துன்மார்க்கத்தாற் சென்றவர்கள் துக்கமென்னும் ஸ்தலத்திற்கும் போய்ச்சேரவேண்டும். இவ்விரண்டினுள் சுகமென்னும் ஸ்தலத்தை யடைவதற்கே நாம் யாவரும் கருதுவோமாகையால், அவ்விதசுகத்தைத் தரக்கூடிய ஸ்தலத்தை யடைவதற்காகவே நாம் கருத்துவைத்துப் பிரயாணத்தை ஆரம்பிக்கவேண்டும். நாம் ஒரு தேசத்திலிருந்து வேறொரு தேசத்திற்குச் செல்ல, முந்தி ஆகாராதிகளைச் சித்தப்படுத்திக்கொண்டு, சன்மார்க்கத்தைத் தேடிப்பிடித்து, நமக்குற்ற துணையும் சேகரித்துக்கொண்டு, வழியில் கள்ளர் வேடர் துஷ்டமிருகங்கள் இம்சிக்காதபடி, தக்க ஆயுதங்களையுமெடுத்துக்கொண்டு புறப்படவேண்டும். இவ்வளவு ஜாக்கிரதையுடனே புறப்பட்டால்தான் நாம் சேரிய ஸ்தலத்திற்குச் சுலபமாகவும் யாதோரிடையூறின்றியும் சௌக்கியமாகப் போய்ச்சேரலாம் என்பது யாவருமறிந்த விஷயமே. அதுபோல நமது வாழ்நாள் யாத்திரைக்கு நம் சித்தப்படுத்திக்கொள்ளவேண்டிய கருவிகள் எவையெனில் கல்வி, சன்மார்க்கம், பக்தி, நன்னடத்தை ஆகிய இவைகளே, எனவே கல்வியே ஆகாரவகைகள், ஒரே கடவுளை விசுவாசித்திருப்பதே சன்மார்க்கம், பக்தியே உற்ற துணை, நம்முடைய நன்னடத்தைகளே நமக்கு ஆயுதங்கள். ஆகையால், கல்வியைக் குற்றமறக்கற்று, நன்மை தீமை இவை இவையென்றுணர்ந்து, தீமையை நீக்கி நன்மையான காரியங்களையே கையிருப்பாக ஆகாரத்திற்குச் சமானமாய் வைத்துக்கொள்ளவேண்டும். கடவுளொருவருண்டென்பதுதான் சகலமார்க்கங்களிலும் உண்மையான மார்க்கமாகையால் அம்மார்க்கத்தைக் கடைப்பிடியாகக்கொள்ளவேண்டும். கடவுளின் மீது அன்பு விசுவாசத்தை நாளுக்குநாள் அபிவிர்த்திசெய்து பக்தி என்பதைத் துணைக்கருவியாகக் கைக்கொள்ளவேண்டும். நன்னடத்தை என்னும் ஆயுதத்தால் துர்நடத்தைகள் என்னும் கள்ளர் வேடர் துஷ்டமிருகங்களைத் தலைகாட்டவொட்டாமல் வெட்டி நாசப்படுத்திவிடவேண்டும். அதாவது, சதா சற்கிருத்தியங்களை அனுஷ்டித்துவரவேண்டுமேயொழியத் துர்க்கிருத்தியங்களைச் சொப்பனத்திலும் நினைக்கவேகூடாது. இவ்விதமாக உலகவியாபாரத்தை நடத்திவந்தால், நல்லலாபம்பெறும்படியான முத்திமார்க்கத்தை யடைந்து



சதா ஆனந்தித்திருக்கலாம் என்பதிற் கிஞ்சிற்றேனும் ஐயமேயில்லை. ஆகலால் இச்சிறிய விஷயத்தை ஒவ்வொருவரும் ஆழ்ந்த கருத்துடன் சிந்தித்து அதின்படி நடந்துவர முயலவேண்டும்.

## 99. தாகத்தைத் தீர்த்துக்கொள்வதற்கோர் சுலபமார்க்கம்.

அனேகர் உஷ்ணகாலத்தில் தாகவிடாய்கொள்ளும்போதெல்லாம் மடமடவென்று ஏககாலத்தில் 2 - 3 - சொம்புத்தண்ணீர் குடித்துவிடுகிறார்கள். இது கூடாதகாரியம். அவ்வாறு தண்ணீர் குடித்தும் மறுபடியும் தாகம் தணியாமையினால் மீண்டும் அவ்வாறே குடித்துத் தேகத்தில் வியாதியை வரவழைத்துக்கொள்ளுகிறார்கள். ஆகையால், அடியில்வரும் உபாயத்தைத் தப்பாமற்செய்தால் அதிகமாய்த் தண்ணீர் குடிக்காமலே தாகவிடாய் தணிந்துபோகும். அதாவது:— தாகவிடாய்கொண்ட காலத்திற் கொஞ்சமாய்த் தண்ணீரைத் தொண்டையில் வார்த்துக்கொண்டு, முக்கியமாக உள்நாக்கில் நன்றாய் ஈரமுண்டா[illegible] சற்றுநேரம் வைத்திருந்து மெல்லவிழுங்கினாலுஞ் சரி, உ[illegible]ட்டாலுஞ்சரி தாகவிடாய் வெகுசாய்த் தணிந்துபோம். [illegible] கூறியவாறு உஷ்ணகாலத்தில் தாகவிடாய் நேர்ந்தபோது [illegible] வந்தால் அதிகநலமுண்டாகும்.

## தண்ணீரில் வீழ்ந்தவன் தப்பித்துக் கொள்ளும் வகை.

ஆ[illegible] குளம் ஏரி முதலானவைகளில் குளிக்கிறவர்கள் நீந்தத்தெரிந்தவர்களாயினும் தெரியாதவர்களாயினும் சில சமயங்களில் தவறிவிழுந்து அனேகர் மரணமடைகின்றனர். அவ்வாறு நேரிடாவண்ணம் அடியிற்குறித்திருக்கும் சிலவிஷயங்களைக் கவனத்தில் வைக்கவேண்டும். தண்ணீரில் விழுந்தவன், தான் உடுத்திருந்த வஸ்திரத்தைக் களைந்துவிட்டுக் கரைசேர்வதற்காகத் தன்னாற்கூடியமட்டும் முயற்சித்தும் முடியாமையால், இனி நீந்தச் சக்தியில்லையென்று கண்டால், அ[illegible]பாது தைரியத்தோடு தண்ணீரின்மேல் மல்லாந்துபடுத்துக்[illegible]ண்டு, மூக்கையும் கால்விரல்களையும் தண்ணீருக்குவெளியே தெரியும்படி தூக்கிவைத்து இரண்டுகைகளையும் அடியிலிருக்கும்படி பின்னாற்சேர்த்துக் கட்டிக்கொண்டிருக்க[illegible]

வாயிருக்கின் நெடுநேரம் வரையில் தண்ணீரில் அமிழாமல் மிதக்கலாம். தண்ணீரில் நீந்துவது சரீரமுயற்சிகளில் ஒன்றானபடியால், யாவரும் நீந்தக்கற்றிருக்கவேண்டும். முக்கியமாய் ஆறு குளம் ஏரி இவைகளில் ஸ்நானம்செய்பவர்களுக்கு நீந்தத் தெரிந்திருக்கவேண்டும். நீந்தக்கற்கும்போதே முற்கூறியபடி தண்ணீரில் மல்லாந்து மிதப்பதற்காக அப்பியாசித்துவரவேண்டும். இந்த அப்பியாசம்செய்திருந்தால், நீந்துகையில் இளைப்புற்றபோதும் தண்ணீரில் தவறிவிழுந்தபோதும, அதிவிசேடமான அனுகூலமுண்டாகும்.

## விநோதார்த்தப்பதங்கள்.

ஒருவன் ஓர்தோட்டத்திலுள்ள மரத்தைப்பார்த்து, „இந்தமரம் நன்றாய் வளர்ந்திருக்கின்றது." என்றான். அதுகேட்ட அத்தோட்டக்காரன், " தண்ணீர்கூட நானல்லவோ மொண்டுக்கொண்டு வந்து கொட்டுகிறேன், இந்த முண்டத்துக்கு வளர்தலைவிட வேறென்ன வேலை" என்றான்.

ஆற்றங்கரையிலிருந்த பிராமணனொருவன், அவ்வாற்றின் நடுவில் கம்பளமூட்டைபோலொன்று போவதைக்கண்டு, நீந்திப்போய் அதைக்கெட்டியாய்க் கட்டிக்கொண்டான். அது இவனை நன்றாய்க்கடிப்பிடித்துக்கொண்டது பிறகுஅம்மூட்டைஅவனை விடாததைக் கண்ட அப்பிராமணன், "இதேது நாம் விட்டாலும் இந்தக்கம்பளமூட்டை நம்மை விடமாட்டேன் என்கிறதே" என்று அதை உற்றுப்பார்த்தான். அப்போது அது கம்பளமூட்டையல்ல ஓர்கரடி என்று கண்டான். உடனே திகில்கொண்டு "எனது பேராசையால் ஆற்றோடேபோகின்றேன்" என்று அலறிக்கொண்டே போனான்.

ஒருவனை மற்றொருவன்பார்த்து, " உன்மனைவி அதிக அழகுள்ளவளா?" என்று கேட்டான். அது கேட்ட அவன், "ஆஹா! அவள் அழகுக்கென்ன குறைவு? அவள் சிரிக்கத்தொடங்கும்போதெல்லாம் கடிக்கத் தொடங்குவது போலிருக்கும். " என்றான்.

ஒருவன் ஓர் ஸ்திரீயை நோக்கி, " உன் இடையில் வஸ்திரமில்லாதிருப்பானேன். " என்று கேட்டான். அவள் உடனே இடுப்பைத் தடவிப்பார்த்து, " ஓகோ ! எங்கேயோ நழுவிவிழுந்து விட்டது" என்று சொல்லிக்கொண்டே ‍ ·ணமுடையவளாய் ஓடி ஒளித்துக்

கடவுள் துணை.

# விநோத விசித்திரப் பத்திரிகை.

1900-ம் ௵

புஸ்தகம் 1] ஆகஸ்டு௴ 1௳ புதன்கிழமை. [No. 8.

## கடவுள் உண்டு.

இன்னும் காற்றைக்குறித்து யோசிப்போம். இதுகண்களுக்குப் புலப்படாதமென்மையும் சூட்சுமமுமான ஓர்வஸ்து. இதனுடைய பராக்கிரமத்தைப் புயலடிக்கும்போது நாம்பார்த்திருக்கிறோம். அநேகமரங்களையும் வீடுகளையும் சேதப்படுத்தி ஜனங்களுக்குப் பலவகை நஷ்டங்களைவிளைவித்துவிடுகின்றது. காற்றுவீசாம லிருந்துவிட்டாலோ புழுக்கம் அதிகமாய் அதனாலுண்டாகும் இம்சை சகிக்கக் கூடாததாயிருக்கின்றது. இவ்வாறான ஓர் அரியவஸ்துவை நம்முடைய சௌக்கியத்திற்காகச் சிருட்டித்து, அதுமீறாமலும் குறையாமலும் நமது சுகத்திற் கேற்ற அளவாய்க் கொடுத்துக்கொண்டுவரும் ஞானத்தைக் கவனியுங்கள். மச்சம் முதலிய நீர்வாழ்வன அந்நீரில்லாவிடின் எவ்வாறு ஜீவிக்காவோ அதுபோலவே காற்றில்லாவிட்டால் நாம் ஜீவிக்கமாட்டோம். நாம் ஆகாரமின்றிச் சிலகாலம் ஜீவிக்கக்கூடும், ஆனால் காற்றின்றிமாத்திரம சிலநிமிஷங்கூடச் சீவிக்கமாட்டோம்.

நாம் தாய்வயிற்றிலிருக்கும்போதே சுவாசமாகிய காற்று தேகத்திற்புகுந்து ஜீவகாலம் வரையில் நம்மோடிருந்து நாம் மரிக்கும்போது நம்மைவிட்டுப் பிரிந்துபோய்விடுகிறது. இந்த தந்திரத்தைக் கவனியுங்கள்.

இன்னும் அக்கினியைக்குறித்து யோசித்துப்பார்ப்போம். இது என்ன சக்தியுடைய ஒருவஸ்து? அதனுடைய பிரகாசத்தையும் காரத்தையும்கவனியுங்கள். அக்கினியின்றி ஆகாரம் சமைப்பதற்கு ஏதுகரமில்லை. அதன் பிரகாசமின்றி மற்றைய உலகவிவகாரங்களை நடத்திக்கொள்வதற்கு அசக்தர்களாயிருக்கின்றோம். நம்தேகத்தில் சதா அக்கினியிருந்துகொண்டே யிருக்கிறது. அது இல்லாவிட்டால் ஜீவியோம். இவ்வித பிரயோசனமுள்ளவஸ்து அளவில் மீறிவிட்டால் அனேக மாடமாளிகை கூட கோபுரம் முதலியவைகளையும் பெரிய பட்டணங்களையும் அழித்து நாசமாக்கிக் கோடிக்கணக்கான நஷ்டத்தை விளைவிக்கின்றது. சிலதேசங்களிலுள்ள அக்கினிமலைகள் சிலகாலத்தில்உக்கிரம்கொண்டுவெடித்துச் சிகரத்திலிருந்து அக்கினிச்சுவாலையை வீசிக் கற்களையெல்லாம் பாகைப்போல் உருக்கிப் பிரவாகமாயோடச்செய்து அநேகம் சிறந்தபட்டணங்களை நாசமாக்கி விடுகின்றன. இவ்வளவு கொடூரமுள்ளவஸ்துவை அதிகப்படுத்தாமலும் குறைக்காமலும் நம்முடைய பிரயோசனத்திற்குத் தக்கவாறு அமைத்துவைத்திருக்கும் அதிசயத்தைக் கவனியுங்கள்.

இன்னும் ஆகாயத்தைக் கவனிப்போம். நம்முடைய தலையை உயர்த்தி அண்ணாந்துபார்த்தால் ஒரு அழகான அகண்டமேல்மூடி கவிழ்த்திருப்பதைக் காண்கின்றோம். இதைத்தான் வானம் என்று சொல்லப்படுகின்றது. இதிற் பலவிதவர்ணங்களாக மேகங்கள் ஓடுவதும் பிரகாசம் பொருந்திய சூரிய சந்திர நட்சத்திரங்களெல்லாம் நடமாடிவருவதும் அங்கிருந்து மழைகொட்டுவதும் மின் மின்னுவதும் இடிஇடிப்பதும் இரவு பகலுண்டாவதும் ஆகிய செயல்களைக் கவனியுங்கள். இவ்வஸ்துக்களெல்லாம் அவ்வவற்றின் தொழில்களை வற்றையும் கிரமமாகவும் ஒழுங்காகவும் எத்தனையோ வருஷங்களாக நடத்திவருவதை ஆராய்ந்துபாருங்கள்.

மேலேகூறப்பட்டுள்ள ஒவ்வொருவிஷயத்தையும் சாங்கமாகவும் அமரிக்கையாகவும் தனிமையாகவுமிருந்து ஆலோசனை செய்துபார்த்தால், இவைகள்யாவும்தாமே நடக்கப்பட்ட காரியங்களல்லவென்றும் ஏதாவதொரு சக்தியினால்தான் இத்தனை உலகவிவகாரங்களும் நடந்துவருகிறதென்றும் அறிவாளிகளுக்குப் புலப்படாமலிரா. ஒருவன் நடுச்சமுத்திரத்தில் ஜலத்தின்மேல் நடந்துபோவதாகப் பாவிப்போம். இவனைக்கண்ட ஜனங்கள் இவனுடைய சாமர்த்தியத்தைப் புகழ்ந்து ஆச்சரியப்படுவோர்களல்லவா? ஆனால், அநேகர் நெடுங்காலமாய் ஜலத்தின்மேல் நடக்கும் அப்பியாசம் செய்திருந்து, ஜனங்கள் சதா அதைக்கண்ணுற்று வருவார்களாயின், சமுத்திரஜலத்தின்மேல் நடந்தவனுடைய செய்கை ஜனங்களுக்கு அவ்வளவு ஆச்சரியமாகத் தோற்றாது. பார்ஸி ஆட்டமுதலிய நாடகங்களும், சர்க்கஸ்முதலிய ஆட்டங்களும் முதல்முறை பார்க்கும்போது ஜனங்களுக்கு வியப்பாகத் தோற்றுகின்றன; அவைகளை நெடுநாள் கண்ணுற்றுவந்தால் சாதாரணமாய்விடுகின்றன. ரெயில்தந்தி முதலியவை பிரதமத்தில் ஸ்தாபிக்கப்படும்போது அதிக ஆச்சரியம் உண்டாயிருக்க வேண்டுமல்லவா? இப்போது அவைகளைப்பற்றி ஆச்சரியப் படுகின்றார்களா? இதுபோல் இப்பிரபஞ்சத்தையும்இதிலுள்ள சராசரங்களனைத்தையும் இதில்நடந்துவரும் தொழில்கள் எவற்றையும் யோசிக்கின், அவை ஒவ்வொன்றும் மனிதர்களுடையபுத்திக்குஎட்டாத ஆச்சரியத்தையுண்டுபண்ணக்கூடியவைகளாயிருப்பதிற் சந்தேகமேயில்லை. ஆனால், இவர்கள்பிறந்தநாள்முதல் அவைகளைக்கண்ணுற்ற மிட்டுக்கொண்டே வருகிறபடியால், அவைகளின்பெருமையும்மதிப்பும் மனிதர்களுக்குச் சாதாரணமாய்விட்டது. இப்பூலோகத்திலுள்ள பொருள்கள் ஒவ்வொன்றிலுள்ளும் கடவுள்தமது உண்மையைச்செவ்வனே விளக்கிக்காட்டியிருப்பதால், அறிவாளிகள் ஆழ்ந்த கருத்துடன் இவைகளைச் சிந்தித்துப்பார்த்தால், அவைகளுடைய மதிப்பும் மேன்மையும் அறிந்து கொள்வதன்றி, இவைகள்யாவும் தாமாகவே நடந்துவருகின்றனவல்லவென்றும், எவ்விஷயத்திலும் மதிப்புக்கடங்காத மகாமகிமைபொருந்திய ஒருசக்திதான் இவ்விதத் தொழில்களுக்கும் காரணகர்த்தாவாயிருக்கவேண்டுமென்றும் தெரிந்துகொள்ளாமலிரார்கள். அந்தச்சக்தியைத்தான் **கடவுள்** என்று சொல்லப்படுகின்றது. (இன்னும் வரும்.)



## வைத்தியம்.

(101-ம் பக்கத்தொடர்ச்சி.)

### தசைகள்.

தசை என்பது—சிவப்பு நிறமுள்ள சிறு இழைப்புத்திரிகள் திரண்டு அடுக்கடுக்காய்ச் சரீரத்தில் அமைந்திருப்பதற்குப் பெயர். இதையே மாமிசம் சதை இறைச்சி புலால் ஊன் பேசி என்றும் கூறப்படும். இதில் சிலது அகலமாயும் சிலது நீளமாயுமிருக்கும். அநேகம் சிறு இழைகள் சேர்ந்து ஒவ்வொரு மாமிசம் ஏற்படுகின்றது. இழைகளையும் மாமிசங்களையும் ஒன்றோடொன்று இணையும்படி வலைபோன்ற ஜவ்வால் கட்டியிருக்கும். எலும்புடன் ஒட்டிக்கொண்டி-

ருக்கிற மாமிசங்கள் வெளுத்துப் பலரூபங்களாயிருக்கும். இவற்றுள் சில நரம்புகளைப்போல் நீண்டும் சில அகன்றும் இருக்கும்.

தசைகளின் தொகையைக் கூறுமிடத்து, தலையில் 84, கழுத்தில் 65, முண்டத்தில் 174, உற்காயமிரண்டினும் 112, அதக்காயமிரண்டினும் 116, ஆகக்கூடிய தசைகள் 551ம் அல்லாமல் இன்னும் அனேக சிறு தசைகளும் உண்டு. எல்லாவற்றையும் கூட்டிச்சொல்லுமிடத்து, மனித தேகத்திலுள்ள தசைகள் ஏறக்குறைய 600 - உண்டு, என்றாலும் இத்தொகையிலே குடல் முதலிய உள்ளுறுப்புக்களின் தசைகள் அடங்கவில்லை.

நமது சரீரத்தில் இருவகைத் தசைகளுண்டு. இவ்விரண்டினுள் ஒன்று மனதிற்கிசைந்து நடப்பவை, மற்றொன்று மனதிற்கிசையாமல் சுயேச்சையாய் நடப்பவை. இரைப்பை குடல் இருதயம் என்னும் இவைகளிலிருக்கும் தசைகளுக்குச் சுயேச்சையாய் நடக்கிற குணமுண்டு, இவை மனதிற்கு வசப்படாது. இவை நமது சுவாதீனத்திற்கு வயப்படாமலிருப்பதால் மனதிற் கிணங்காத தசைகளெனப்படும். மற்றவைகள் நமது சுவாதீனத்திற்கு வயப்படுவதால் மனதிற் கிணங்கிய தசைகளெனப்படும்.

நாம் எழுதும்போதும் தம்புரு முதலிய வாசிக்கும்போதும் கையிலே உண்டாகும் அற்ப இயக்கங்களும், கொல்லன் அடிக்கும் உரமான அடியும் சுமைகாரன் மிதிக்கும் பாரங்கொண்ட உரத்தமிதியும் ஆகிய இவைபோன்ற இயக்கங்களும், தசைகளின் இழைகள் சுருங்கி இழுப்பதனால் உண்டாகின்றன. திருஷ்டாந்தமாகத் தசைகளும் வன்னைசக்ளும் எலும்பிலிருப்பது, கப்பலின் பாய்களுக்கும் அதன் மரங்களுக்கும் கயிறுகளிருப்பது போலிருக்கின்றன. கயிறுகளின் இயக்கத்தாலே பாய்களும் பாய்மரங்களும் திசைமாறி நிற்கிறதுபோலத் தசைகளின் இயக்கத்தினாலே சரீரத்திலுள்ள எலும்புகளும் நிலைமாறுவதனால் அவயவங்கள் ஆடுகின்றன.

நடத்தல் பிடித்தல் முதலியவைகளைச்செய்கின்ற தசைகள் அவைகளை நடப்பிக்கும் ஆட்களுடைய சித்தத்திற்கு அமைந்தனவாயிருக்கின்றன. அதெப்படியெனில், ஒருவன் நடக்கப் பிரியப்படுவானாகில் எவ்வளவு நேரத்திற்கும் நடக்கலாம். பிரியப்படானாகில் நடவாமல் நிற்கலாம். மூச்சுவிடவும் விழுங்கவும் உதவியாயிருக்கும் தசைகள் கொஞ்ச அளவுமாத்திரம் சித்தத்திற்கு அமைந்தனவா



யிருக்கின்றன. அதெப்படி எனில், மூச்சை அடக்குவதற்கு விரும்பினால் சில நிமிஷம் வரையில் அடக்கலாம். அதிகநேரம் அடக்க முடியாது. அப்படியே விழுங்க விரும்பினால் வாய்க்குள் இரையுமிழ்நீர் இல்லாதபோது இரண்டொரு முறைக்குமேல் விழுங்க ஏலாது.

இரத்தாசயம் இரைப்பை முதலியவைகளிலுள்ள பேசி இழைகள் கொஞ்சமென்றாலும் சித்தத்துக்கு அமையாதவைகள். எப்படியெனில், இரத்தாசயம் இரைப்பைமுதலியவற்றின் செயலைநிறுத்த விரும்பினால் நம்மால் முடியாது. தசையின் ஒவ்வோர் இழையிலும் தொடுத்திருக்கும் ஒவ்வோர் நரம்புக்கழியின் கூந்தல்வழியாயும் சித்தமானது சதையை இயக்கிச் சுருங்கப்பண்ணுகின்றது.

தசைகள் நீண்டு தளர்ச்சியாயிருந்தபோதிலும் அவைகள் சுருங்கியிருக்கும்போது அதிகமாய்ப் பருத்துத் தடித்து விம்மியிருக்கும். அவைகள் சற்றுநேரம் மட்டும் சுருங்கி விம்மிப் பிரயாசத்தைத் தாங்கி நிற்கும். பின்பு இளைத்து நடுங்கி இளகிநீளும், கையை அல்லது காலை நீட்டி அந்தரத்திலே சற்றுநேரம் பிடித்துக்கொண்டிருந்தால் இதை அறியலாம். இப்படியே தசைகளெல்லாம் இளகி ஓய்ந்துகொள்ளும்படி நித்திரையிலே கைகால் முதலிய அவயவங்களின் சோர்வு நிலையே இடங்கொடுக்கின்றது. தசைகள் மாறிமாறிச் சுருங்குவதும் நீளுவதும் அடியில்வரும் திருஷ்டாந்தத்தாற் காண்க.

முழங்கைக்கும் கைக்குளசுக்கும் இடையிலே இடக்கையைவலக்கையினாலேகெட்டியாய்ப்பிடித்து, அவ்வேளையிலே இடக்கையிலுள்ள விரல்களை மாறி மாறிமுடக்கிக்கொண்டும் நீட்டிக்கொண்டுமிருந்தால், முன்கையிலுள்ள தசைகள் அதிலுள்ளவிரல்களின் இயக்கத்திற் கிணங்கச் சுருங்குவதும் நீளுவதும் விளங்கும். விரல்கள் முடங்கும்பொழுது முன்கையின் முற்பேசிகள் விம்மிப் பிற்பேசிகள் நுகைவாகின்றன. விரல்கள் நீளும்போது முற்பேசிகள் நீண்டு பிற்பேசிகள் விம்முகின்றன. முற்பேசிகள் பிற்பேசிகள் மாறி மாறிச் சுருங்குவதும் நீளுவதும் கைகால்களின் சகல இயக்கங்களாலும் அறியலாம்.

தசைகளைச்சூழவும் அவைகளின் இடைவெளிகளிலும் மஞ்சள் நிறமான ஓர்வகைக்கொழுப்பு இருக்கின்றது. அந்தக்கொழுப்பு அதிகமாயிருப்பதனால்தான், குழந்தைகள் வாலிபர் முதலியோரின் உடம்பு திரண்டு புஷ்டியாயிருக்கின்றது. வயது முதிர்ந்தவர்களுக்குஇது அதிகக்குறைவாயிருக்கும். நாம் வியாதியாயிருந்து போஜனம் உண்

ணக்கூடாதகாலத்தில் சரீரம் அந்தக்கொழுப்பினாலே போஷிக்கப்படுகின்றது. அவ்விதத்தருணங்களிலே இந்தக்கொழுப்பு இரத்தமாய் மாறுவதனால் முகம் சுரித்துக் கண்தாழ்ந்து எலும்புகள் தோன்றும்.

(இன்னும் வரும்.)

## 101. மாங்கொட்டைப் பருப்பு.

மாங்கொட்டைப்பருப்பை உலர்த்தித் தூள்செய்து புட்டியிலடைத்து வைத்துக்கொண்டு, 20 - அல்லது 30 - கிரெயின்வரையில் தேனிலாகிலும் வெல்லத்திலாகிலும் கலந்துகொடுத்தால் வயிற்றிலுள்ளகிருமிகளை வெளியாக்கும். மாதவிடாய் அதிகமாய்ப் போவதையும் மூலத்திலிருந்து இரத்தம் விழுவதையும் நிறுத்தும். மாங்கொட்டைத்தூளுடன் கொஞ்சம் சீனக்காரத்தூளைச்சேர்த்து மூக்கிலுருஞ்சினால் மூக்கிலிருந்து இரத்தம் போவதை நிறுத்தும். மாங்கொட்டைத்தூளில் அரைத்துலாம் எடுத்துத்தயிரிற்கலந்து உள்ளுக்குக் கொடுத்தால் வயிற்றுளைச்சல் கடுப்பு சீதபேதி முதலியவைகளைச் சொஸ்தப்படுத்தும்.

## 102. கைகால்பிடிப்பு தேகத்திலுளைச்சல் இவைகளுக்கு.

நன்னாரிவேர்ஷர்பத்து அவுன்ஸ் 12 - பொடாஷ் அயடிடம் கிறெயின்ஸ் 15 - ஆகிய இவை இரண்டையும் ஒன்றாய்க்கலந்து ஓர்புட்டியிலடைத்துக்கொண்டு, வேளை ஒன்றுக்கு இரண்டு அவுன்ஸ் வீதம் தினம் 3 - வேளை சாப்பிட்டுவந்தால் முற்கூறியவியாதிகள் சௌக்கியமாய்விடும்.

## Photography.

### 103. போட்டோகிராப் படம் பிடிக்கும்விதம்.

(Dark slide) டார்க் ஸ்லைட் என்பதுஎன்னவென்றால்:– காமராவின் பின்பக்கத்தில் க்ரௌண்ட்க்ளாஸ் செருகியிருந்த இடத்திற்சேர்க்கிற ஓர்மூடி. இதன் முன்பக்கத்தில் ஓர் செருகுப்பலகை இருக்கும். அதை மேல்பக்கத்தால் எடுக்கவும் மறுபடி செருகவும் கூடியதாயிருக்கும். அதற்குப்பின்பக்கத்தில் ஒருகண்ணாடி செருகுகிறதற்கு ஒருகாடியிருக்கும். இந்தக் காடியில் கண்ணாடி செருகவும் எடுக்கவும் கூடும். இவ்வித செருகுப்பலகையும் செருகுக் கண்ணாடியுங்கொண்ட மூடிக்குத்தான் (Dark slide) டார்க் ஸ்லைட் என்றுபெயர். இதிற் செருகும் கண்ணாடிக்கு (Dry plate) ட்ரை ப்ளேட் என்று சொல்லப்படும். இதுசீர்மையில் தயாராகி வருகின்றது. எங்கும் ஷாப்புகளிற் கிரயத்திற்கு வாங்கிக் கொள்ளலாம். இந்தக்கண்ணா



டிக்கு ஒருபக்கத்தில் மருந்து தடவியிருக்கும். அந்தப்பக்கத்தைக் கையினால் தடவிப்பார்த்தால் சொரசொரப்பாயும் மற்றப்பக்கத்தைத்தடவிப்பார்த்தால் மழமழப்பாயுமிருக்கும். இந்த ட்ரை ப்ளேட் என்னும் கண்ணாடியைக் கொஞ்சமேனும் வெளிச்சப்படாமல் எப்போதும் இருட்டான இடத்திலேயே வைத்திருக்கவேண்டும். கொஞ்சம் வெளிச்சம்படினும் கெட்டுப்போம், பிறகு வேலைக்குதவாது. இதுவிஷயத்தில் அதிக கவனமாயிருக்கவேண்டும். இப்போது டார்க்ஸ்லைட் இன்னதென்றும் ட்ரைப்ளேட் இன்னதென்றும் தெரிவித்துவிட்டோம். இனி இவைகளை உபயோகப்படுத்தும் விதத்தைத் தெரிவிக்கின்றோம்.

சென்றபத்திரிக்கையிலே, காமராவுக்கெதிரில் மனிதனை நிற்கவைக்கவாவது அல்லது உட்கார வைக்கவாவது வேண்டுமென்றும், பிறகு காமராவின் லென்ஸ் என்னும் பூதக்கண்ணாடியினால் அவனைப் பார்த்து, அவனுடைய உருவம் சரியாகத்தோன்றும்படி, ஷை லென்ஸ் செருகை முன்பின் இழுத்துச் சரிப்படுத்திவைத்துக்கொண்டு, க்ரௌண்டு கிளாசை எடுத்துவிட்டு டார்க்ஸ்லைடைச் செருகவேண்டுமென்றும் கூறியிருக்கின்றோமல்லவா? அதைஎப்படிச்செருகவேண்டுமென்பதை இங்குக்கவனிக்கவேண்டியது அவசியம். முந்தி டார்க் ஸ்லைடிலுள்ள செருகுப்பலகை செவ்வையாய்ச் செருகியிருக்கவேண்டும். பிறகு டார்க்ஸ்லைடையும் ட்ரைப்ளேட்டையும்கொஞ்சமும்வெளிச்சமில்லாதஓர் இருட்டறையிற்கொண்டுபோய், ட்ரைப்ளேட்டின்சொரசொரப்பானபக்கத்தைக் கையினாற்றடவிப்பார்த்து, அந்தப்பாகம் மேலே இருக்கும்படியாகஷை டார்க்ஸ்லைடிலுள்ள கண்ணாடியைச்செருகவேண்டிய காடியிற்செருகி, வெளிச்சம் கொஞ்சமும் படாமற் கறுப்புத்துணியினாற் செவ்வையாய் மூடி, வெளியே கொண்டுவந்து காமராவின் பின்பக்கத்தில் க்ரௌண்ட் க்ளாஸை எடுத்துவிட்டு டார்க்ஸ்லைடைச் செருகிவிடவேண்டும். பிறகு லென்ஸ் குழலை ஷட்டர் என்னும் மூடியினால் மூடிவிட்டு, உருவம் பிடிக்கவேண்டிய மனிதனை அசையாமலும் செவ்வையாகவும் இருக்கச்செய்து, முந்தி டார்க்ஸ்லைடின் செருகுப்பலகையைத் திறந்து, பிறகு லென்ஸ் குழலின் ஷட்டரைத்திறந்து மூன்றுவினாடி நேரம்விட்டு ஷட்டரினால் லென்ஸ் குழலை மூடிவிடவேண்டும். இப்போது உருவம் ட்ரை ப்ளேட்டில் விழுந்து விட்டது. பின்பு டார்க் ஸ்லைடின் செருகுப்பலகையைச் செருகிவிட்டு, டார்க் ஸ்லைட் முழுமையும் காமராவினின்றும் எடுத்து, வெளிச்சப்படாமல் கறுப்புத்துணியாற் செவ்வையாய் மூடிக்

கொண்டு எடுத்துப்போய் இருட்டறையில் பத்திரமாய் வைத்துவிடவும். இனி ட்ரைப்ளேட்டிலுள்ளபடத்தை வெளிப்படுத்தும் முறைமையைப்பின்னல் விவரமாகத்தெரிவிப்போம். (இன்னும் வரும்.)

## 104. பாலைக்காப்பாற்றும் வகை.

(a) பாலைக்காய்ச்சி அதைச் சுடச்சுட ஒரு சீசாவில் நிறையவார்த்துக் கொஞ்சமும் காற்றுப்புகாமல் கார்க்குவைத்தடைத்து அரக்கினால் வாய்க்கு முத்திரைபோட்டுவிடவேண்டும். இந்தப்பாலைக்காய்ச்சும்போது கொஞ்சம் சர்க்கரை சேர்த்துக்கொள்வது மிகவும் உத்தமம். இந்தப்பக்குவத்தினற் பாலானது 2-3-மாதம்வரையில்கெட்டுப்போகாமலிருக்கும். ஆனால், வெண்ணெய்மட்டும் பாலைவிட்டுப் பிரிந்துநிற்கும். இதை நீக்கவேண்டுமானல் காய்ச்சினபாலுடன் கோழிமுட்டையின் மஞ்சட்கரு கொஞ்சம் சேர்க்கவேண்டும்.

(b) பாலைக்காய்ச்சாமல் வைக்கவேண்டுமானல்:—கொஞ்சம் (Corbonate of soda)சோடாப்வுடனும்சர்க்கரையும்சேர்த்துக் காற்றுப்புகாமல் முன்போற் புட்டியிலடைத்துவைத்தால் 10-15-நாள் வரையிற் கெட்டுப்போகாமலிருக்கும்.

(c) பாலுக்கு மிகவும் மெதுவாய்ச் சொற்பச்சூட்டைப் பிரயோகித்துக் காய்ச்சிவந்து கடைசியில் கட்டியாய்ப்போனபிறகு, அதை வெய்யிலில் வைத்துச் செவ்வையாயுலர்த்திக் காற்றுப்படாதபடி தகுந்தபாத்திரங்களில்வைத்துக்கொள்ளவும், தேவையானபோது இக்கட்டிப்பாலிற் கொஞ்சமெடுத்துத் தண்ணீரிற்சேர்த்தால் நேர்த்தியான பாலாகிவிடும். பாலைக்காய்ச்சும்போது கொஞ்சம் சர்க்கரை அதனுடன் சேர்த்துக்கொள்வது உத்தமம்.

## 105. முட்டையைப் பரிட்சிக்கும் விதம்.

(a) முட்டையை வெளிச்சத்திற்பிடித்துப் பார்த்தால், புதுமுட்டையானல், உட்பக்கத்தில் முட்டைமுழுதும் வெளிச்சமாயிருக்கும், பழையமுட்டையானல் உச்சியிற்சற்று வெளிச்சமாயும் மற்றைப்பக்கங்களில் அதில் அரைவாசி வெளிச்சமாயுமிருக்கும். கெட்டுப்போன முட்டையானல் முழுவதும் இருளடைந்திருக்கும்.

(b) 10-அவுன்ஸ்தண்ணீரில் 1-அவுன்ஸ் உப்பைக்கரைத்து அத்தண்ணீரில் முட்டைகளைப்போட்டால், நல்லமுட்டைகள் மூழ்கிக் கீழேயிறங்கிவிடும். கெட்ட முட்டைகள் மேலேமிதக்கும் மிகவும் கெட்டமுட்டைகள் சுத்தஜலத்திற்கூட மிதக்கும்.



## 105. கோழிமுட்டைகள் கெட்டுப்போகாமல் நாட்படவைக்கும் முறைகள்.

(a) விசேடமாய்க் கொதிக்கிறஜலத்தில் முட்டைகளை ஒருநிமிஷம் வரையிற் போட்டெடுத்து, குளிர்ச்சியானஇடத்தில் வைப்பது.

(b) விளாம்பிசினை ஜலத்திற்கரைத்துக் கூழ்போற் செய்துகொண்டு, முட்டையின் ஓடுமுழுவதிலும் அக்கூழ் ஒட்டும்படி அதில் முட்டையை நனைத்தெடுத்துக் காயவைத்துக் கொள்வது.

(c) ஜாடியில் சோற்று உப்பைக்கொட்டி அதில் முட்டைகளைப்பரவலாய்வைத்து, மேலுக்கும் உப்பைக்கொட்டி ஜாடிவாயைமூடிவைத்துக்கொள்வது.

(d) சுண்ணும்புகரைத்த ஜலத்தில் முட்டைகளைப்போட்டு வைத்துக்கொள்வது.

(e) சுண்ணம்புநீர் பவுண்ட் $2\frac{1}{4}$-சோற்றுப்பு அவுன்ஸ் 6. க்ரீம் ஆவ் டார்டார் (Cream of tar tar) அவுன்ஸ் $\frac{1}{2}$-வெந்நீர் கொஞ்சம் கடுக்காய் 3. இவற்றுள் சுண்ணம்பையும் உப்பையும் ஒரு ஜாடியிற் போட்டு, வெந்நீர் வேண்டியவரையில் அதில்வார்த்து, அவ்வெந்நீரின் சூடுதணிந்துகுளிர்ந்தபிறகு, க்ரீம் ஆவ் டார்டாரை அதிற்சேர்த்து, பிறகு கடுக்காய்த்தோலைத் தூள்செய்து அதிற்போட்டு, இவைகளைத்தயார்படுத்திய தினத்திற்குமறுதினம் முட்டைகளை அதில்முழுகும்படி போட்டு ஜாடிவாயை மூடிவைத்துக்கொள்ளவும். மேற்கூறிய நான்குமுறைகளைப்பார்க்கினும்இம்முறையே மிகச்சிரேஷ்டமானது. இவ்வாறுசெய்தால் எத்தனைமாதத்திற்கும்முட்டைகள் கெட்டுப்போகாமலிருக்கும்.

கைத்தொழில்.

## 106. நாக முட்டை.

பொடாஷியம் டைக்ரோமேட் (Potassium Dichromate) 2 அவுன்ஸ்.
பொடாஷியம் நைட்ரேட் (Potassium nitrate) 1-அவுன்ஸ்.
வெள்ளைச்சர்க்கரை 3-அவுன்ஸ்.

இவைகளைத் தனித்தனியே அரைத்து ஒன்றாய்க்கலந்து சிறிதாய்மத்தாப்பு வத்திகள் செய்து காயவைத்து, இவற்றுள் ஒன்றை எடுத்துக் கொளுத்தினல், மத்தாப்பிலிருந்தும் நாகம் சீறி வெளியிற் புறப்படுவதுபோலப் புகைபுறப்படும். பார்ப்பவர்கள் சர்ப்பம் வந்துவிட்டதென்று வெருளுவார்கள். இம்மருந்திலுள்ளபொடாஷியம் டைக்ரோமேட் நஞ்சானதையால் அதைப்பொடிசெய்கையில் அதனுலுண்

டாகும் தாசின்வாசனை காசியிலேற்றதபடி வெகு ஜாக்கிரதையாய்ப் பொடிக்கவேண்டும்.

### 107. ஒருமெழுக்குவத்தியை இரவுமுழுவதும் எரியவைக்க உபாயம்.

மெழுக்குவத்தி எரியும்போது, அதிக நுண்மையாயரைத்த சோற்றுப்பை, வத்தியில் வந்து பிடிக்கும் வரையில் உருகிவருகிற மெழுக்கின்மேற் கொஞ்சங் கொஞ்சமாய்ப் போட்டுக்கொண்டே வரவும். வத்தி எரிகிற திரியில் உப்புத்தூள் பற்றிக்கொண்டால் நிறுத்திவிடவேண்டும். அவ்வோரேவத்தி இரவுமுழுவதும் எரிந்துகொண்டிருக்கும். ஆனால் பிரகாசம் மாத்திரம் கொஞ்சம் மங்கலாயிருக்கும்.

### 108. தூண்டிலில் மீன்பிடிக்க.

தூண்டிலில் மீன்பிடிப்பவர்கள் ரோடியம் ஆயில் (Rhodium oil) என்னும் தைலத்தை மீன்பிடிப்பதற்காக உபயோகப்படுத்தும் இரையுடன் கலந்து தூண்டில் போட்டால் அதிக தூரத்திலுள்ளமீன்களெல்லாம் வந்து கவ்வும்.

### 109. புஸ்தகத்தின் விளிம்புகளுக்குக் கில்ட்கொடுக்க.

கில்ட் கொடுக்கவேண்டிய புஸ்தகத்தின் விளிம்பு வளைந்திராமல் தட்டையாயிருக்கும்படி வைத்து, ஒரு பிரஸ்ஸிற் கொடுத்து, அதிக இட்டமாய் இறுக்கிப் பிடித்துக் கொள்ளச்செய்யவேண்டும். எந்தவிளிம்புக்குக் கில்ட்கொடுக்கவேண்டுமோ அந்த விளிம்பு மேற்பக்கமாயிருக்கவேண்டும். விளிம்பு மிருதுவாகும்படியாக ஒருகத்தியினால் மெதுவாய்த்தேய்த்துச் சீவவேண்டும். பிறகு முட்டையின் வெண்கருவிற் கொஞ்சம் ஜலம்விட்டுக் கலக்கிக்கொண்டு, சின்னபுருஷினால் ஷை விளிம்புக்குத்தடவி, ரேக்குத் தகட்டை விளிம்புக்குச்சரியாகக் கத்தரித்து அதிற்போட்டால் ஒட்டிக்கொள்ளும். பிறகு, அந்தவிளிம்புக்குச் சரியானகனமுள்ள அதிகமிருதுவான கட்டை அல்லது கல்லைக்கொண்டு அழுத்தித் தேய்த்தால் ரேக்குத்தகடுகள் அதில் ஒட்டிக்கொண்டு பாலிஷ் ஆய்விடும். இவ்வாறே புஸ்தகத்தின் முன்றுவிளிம்புகட்கும் கில்ட் கொடுத்துக் கொள்ளலாம்.

### 110. செம்பு பித்தளை ஜர்மன்ஸில்வர் முதலியவைகளாற் செய்யப்பட்ட சாமான்களுக்கு வெள்ளிகில்ட் கொடுக்கும் பவுடர்.

(Cyanure of Potassium) சைனூர் ஆவ் பொட்டாஷ் திராம் 3. (Nitrate of silver) காடிக்காரம் திராம் 1½. சீர்மைச்சுண்ணாம்பு அவு



ன்ஸ் 1. ஆகிய இவைகளைச் செவ்வையாய் அரைத்து, ஓர் புட்டியில் போட்டுக் காற்றுப்புகாமல் கார்க்போட்டு அடைத்துவைத்துக் கொள்ளவும். பாத்திரங்களுக்குக் கில்ட்கொடுக்க நேர்ந்தபோது, அந்த பாத்திரத்தைச் செவ்வையாய்த்தேய்த்துப் பிரகாசமாக்கிக்கொண்டு, முற்கூறியபவுடரிற் கொஞ்சம் எடுத்து ஒருபாத்திரத்திற் போட்டுக் கொஞ்சமாய் ஜலம்விட்டுக் கெட்டிக் குழம்பாய்ச் செய்துகொண்டு, இச்குழம்பிற்கொஞ்சமெடுத்து, முன்தேய்த்துவைத்திருக்கும் பாத்திரத்திற்போட்டு, பிளானலாலாவது அல்லது வேறுமிருதுவான துணியாலாவது, பெருவிரலைக்கொண்டு விடாமல் அழுத்தித்தேய்க்கவும். இவ்வாறு அந்தப்பாத்திரத்தில் வெள்ளிகில்ட் பிடிக்கின்ற வரையில் ஷை பவுடரினால் செவ்வையாய்விடாமல் அழுத்தித்தேய்த்தால்கில்ட் பிடித்துக்கொள்ளும். எவ்வளவு நேரம் அதிகமாய்நாம் தேய்க்கின்றோமோ அவ்வளவு அதிக நாட்பட்டக் கில்ட் நிற்கும்.

### 111. (Battery) பாட்டரியின்றிச் செம்பு பித்தளை ஜர்மன் ஸில்வர்முதலிய சாமான்களுக்கு வெள்ளி கில்ட் கொடுக்கும் முறை.

இதற்குத் தேவையான பாத்திரங்கள்:—எந்தச்சாமான்கள் கில்ட்கொடுக்கவேண்டுமோ அந்தச்சாமான்கள் யாவும் தாராளமாய் அடங்கும்படியான பெரிய பாத்திரங்கள் 3. இவை பீங்கானுகவாவது மட்பாண்டமாகவாவதிருக்கலாம், வாய்குறுகலாகவும் உயரமாகவுமுள்ள தேக் கோப்பையைப்போல் பீங்கான் கோப்பை அல்லது கிளாஸ் டம்ளர் 2. மருந்து கலக்குவதற்குக் கிளாஸ் அல்லது பீங்கானுல் செய்யப்பட்ட கோல் 1.

இதற்குத்தேவையான சாமான்கள்:—ஓர் துத்தநாகத்தகடு அல்லது கோலை ஒன்றரை முழத்திற்குக்குறையாத ஒருமெல்லிய செம்புக்கம்பியினால் ஒரு முனையில் கட்டிக்கொள்ளவும். ஒருரூபாயெடை முலாம் வெள்ளியை மெல்லிய தகடாகத்தட்டிச் சிறுதுண்டுகளாகக் கத்தரித்துவைத்துக்கொள்ளவும். (Nitric acid) வெடியுப்புத்திராவகம் அவுன்ஸ் 1. (Cyanide of Potash) சைனைட் ஆவ் பொடாஷ் அவுன்ஸ் 1½. கரியுப்பு படி 1½. நகைகளுக்கு மெருகுகொடுக்கிறமெருகு, முன் தேர் 1.

கில்ட் கொடுக்கும்முறை:—ஒருகோப்பை அல்லது டம்ளரில் வெள்ளித்தகட்டுத் துண்டுகளைப்போட்டு நைட்ரிக் ஆஸிட்டை அதிற் போட்டு அரி நெருப்புத்தணலில் 5 நிமிஷம்வரையில் வைத்தாற் கரைந்துபோகும். மற்றொரு கோப்பையில் ஒரு சொங்கை உப்பு அள்ளிப்போட்டுக் கொஞ்சம் ஜலம் விட்டுக்கரைத்து, பிறகு முன்கரைந்துள்ள வெள்ளிஜலத்தை அதில் ஊற்றிவிடவும். பிறகு அதை ஜலம் விட்டுக்கழுவி நீலநிறமாய்வரும் ஜலத்தைக் கீழே கொட்டிவிட்டு வேறேநல்ல ஜலம் விட்டுக்கழுவவும். இவ்வாறே அந்த ஜலத்தில் நீலநிறம் மாறுகிறவரையிற்கழுவி விட்டு, அடியில் வெண்மையாய்ப் படிந்திருக்கும் வெள்ளிப்பவுடரைப் பெரியபாத்திரம் ஒன்றிற்கொட்டி ஸைனைட் ஆவ் பொட்டாஸைப் பொடிபண்ணி அதிற்போட்டால் வெள்ளிப்பவுடர் கரைந்துபோம். இதற்கு (Silver solution) ஸில்வர் சொலூஷன் என்றுபெயர். அதில் இன்னும் கொஞ்சம் ஜலம்விட்டுவைத்துக்கொண்டு, மற்றொரு பெரியபாத்திரத்தில் உப்பைக்கொட்டி ஜலம் நிறையவார்த்துத் தாம்பிரக் கம்பியினாற் கட்டியிருக்கும் துத்தநாகத்தகட்டை அந்த உப்புஜலத்திற்போட்டு, கில்ட் கொடுக்கவேண்டிய சாமானை பளபளப்பாகும்படி துலக்கி அதை செம்புக்கம்பியின் மற்ற முனையில் கட்டி, வெள்ளித்தண்ணீரில் அழுந்தும்படி ஸில்வர் சொலூஷன் இருக்கிற பாத்திரத்திற்போட்டு, கொஞ்சநேரம் சென்றபின் பார்த்தால் சாமானில் மூலாம் படிந்திருக்கும். பிறகு அதை எடுத்து இன்னொருபாத்திரத்தில் ஜலம்விட்டு மெருகு மண்ணினாற் செவ்வையாய்த் தேய்த்தால், கில்ட் பிடித்துப்போம். மறுபடியும் அதை அந்த ஸில்வர் சொலூஷனிற்போட்டு எடுத்துத் தேய்த்துக்கொண்டேயிருந்தால் கில்ட் செவ்வையாய் ஏறும். எவ்வளவு ஜாஸ்தியாகத் தேய்க்கிறோமோ அவ்வளவு நாட்படக்கில்ட் நிற்கும். மேற்கூறிய பாகத்தைச்செய்யும்போது மருந்துகளைக்கலக்கவேண்டி நேரிட்டால் கைபோட்டுக் கலக்காமல் முற்கூறப்பட்டுள்ள கிளாஸ் கோலினாற் கலக்கவும். எவ்வளவு சாமானையும் இதிற்போட்டுக் கில்ட் கொடுக்கலாம். பிறகு வெள்ளித்தண்ணீரை எடுத்துச் சீசாவில் வைத்துக்கொண்டு, மறுபடியும் உபயோகிக்கலாம். அந்தஜலத்தில் சத்துக்குறைந்ததாகில் பழையபடியே (Silver Solution) வெள்ளித்தண்ணீர் செய்து, அத்துடன் சேர்த்துக்கொண்டு உபயோகப்படுத்தலாம். இந்த முறையைக்காண்பிப்பதற்காக மருந்துகளின் அளவை நிதானமாய்க் கொடுத்திருக்கிறது. புத்திசாலிகள் தேவைக்குத் தக்கவிதமாய் அளவெடுத்துச் செய்துகொள்ளலாம்.



## 112. பாகசாஸ்திரம்.

### லான்ஜா.

இரண்டு பலம் நெய்யைச் சட்டியில் விட்டுக்காய்ச்சி, அதில் அரைப்படி கோதுமை நொய்யைப்போட்டுக் காந்திப்போகாமல் பக்குவமாக மணல் நிறமாய் வறுத்து, வேறொருபாத்திரத்திற் கொட்டிக்கொள்ளவேண்டும். ஒருபடி சுத்தஜலத்தை ஒருசட்டியில் வார்த்துக்காய்ச்சிச் செவ்வையாய்க் கொதிவந்தவுடனே, வறுத்துவைத்திருக்கும் நொய்யை அதிற்கொட்டிக்கிளறி, சீனிச்சருக்கரை பலம் 20, ஏலரிசிப்பொடி பலம் கால், தோல் நீக்கி நெய்யில் வறுத்தெடுத்த முந்திரிப்பருப்பு அல்லது வாதுமைப்பருப்பு பலம் 3, ஆகிய இவைகளை ஒன்றாய்க்கலந்து, வெந்துகொண்டிருக்கும் லான்ஜாவிற்போட்டுக்கிளறி, ஜலம் வற்றிச் சாதத்தைப்போலான பதம்பார்த்து, அடுப்பைவிட்டிறக்கி, 5-நிமிஷநேரம் தணலின்மேல் வைத்திருந்து, பிறகு 5 பலம் நல்லநெய் அதில்வார்த்து இன்னொருமுறை செவ்வையாய்க்கிளறிச் சற்றுநேரத்திற்குப் பின் உபயோகிக்கவேண்டும்.

## விநோதார்த்தபதங்கள்.

ஓர் அரசன் தனது மந்திரிமுதலானவர்களுடனே வேட்டைக்குப்போய்த் திரும்புகையில் ஓர் தோட்டத்தின் வழியாகவந்தான். அத்தோட்டத்தின் ஓர்பக்கத்தில் மிக்கவயோதிகப்பருவமுடைய விருத்தனொருவன், நிலத்தைத்தோண்டிப் புளியங்கொட்டையை நட்டுத் தண்ணீர் வார்த்துக்கொண்டிருந்தான். அதுகண்ட அரசன் மிகவும் ஆச்சரியமுடையவனாகித் தனதருகிலிருந்த மந்திரியைநோக்கி, "இந்தக்கிழவனதுபைத்தியகுணத்தைப் பார்த்தீரா? இவனுக்குவயது இப்போது ஏறக்குறையத் தொண்ணூறுக்குமேலிருக்கும், இப்பருவத்தில் இவன் இப்புளியங்கொட்டையை நட்டு, அதுமரமாகிக் காய்காய்த்துப் பழுத்து அந்தப்புளியைத் தான் அனுபவிக்கலாமென்றெண்ணுகிறானோ? சாவுசமீபித்திருப்பதைச்சற்றுங்கவனியாமலும், தொண்ணூறு வயதுவரையில் தான் ஜீவித்திருந்ததற்காகத்திருப்தியடையாமலும், இன்னும் இருபது அல்லது முப்பதுவருஷம் ஜீவித்திருப்பதாய் எண்ணியுமல்லவா இந்தக்காரியம் செய்கின்றான்? இவனுடைய மடமையை என்னென்று கூறுவது," என்றுரைத்து உடல்குலுங்க நகைத்தான். அதுகேட்ட மந்திரி, "மன்னரே! அவ்விருத்தனுடையகருத்தின்னதென்றுணராமல் நாமே பலவிதமாக எண்ணங்கொள்வது நியாயமன்று; அவன் கருத்தின்னதென்று அவனையே கேட்டுத்தெ

ரிந்து கொள்வோம்" என்றுரைத்து, மன்னனையும் கூட்டிக்கொண்டு அக்கிழவன் சமீபத்திற்சென்று, மந்திரி அவ்விருத்தனை நோக்கி, "ஐயா! உமக்கு இப்போதுவயதென்ன." என்றான். அதுகேட்ட அவ்விருத்தன், "எனக்கு இப்போது வயது நான்குதான்." என்றான். அப்போது மந்திரி மிகவும் கோபங்கொண்டு, "என்னஓய், நீர்கூறுவது ஆகாத்தியமாயிருக்கின்றதே." என்றனன். அதற்கு விருத்தன், "ஐயா! நான்கூறியது வாஸ்தவந்தான், அவ்வுத்தரம்ஆகாத்தியமானதென்றெண்ணி என்மேற்கோபிக்கவேண்டாம், எனக்கெப்படி இப்போது வயது நான்கென்றால், எனது ஆயுணாள் முழுமையும் கடவுளொருவருண்டென்பதைச் சற்றும் கவனியாது தீமைகளைத்தையும் புரிந்துதிரிந்து, நான்குவருஷகாலமாய்த்தான் கடவுளொருவருண்டென்னும் உண்மையுணர்ந்து தீமைக்குப்பயந்து நற்கிருத்தியங்களையே சதா இயற்றிக்கொண்டு அக்கடவுள் புகழையேயெப்போதும் பஜித்துக்கொண்டு வருகின்றேனாகையால், (கடவுள் புகழைப்பேசாதநாளெல்லாம் பிறவாநாளே.) எனப்பெரியோர் கூறியுள்ளபடி எனது ஆயுளைக்கணக்குப் பார்க்கையில் நான்கு வருஷங்கட்கு முன்புதான் பிறந்ததாகக்கொள்ளவேண்டியிருப்பதால் எனக்கு வயது நான்கென்றேன்." என்றனன். உடனே அரசன் அவ்வுத்தரத்திற்கு வியந்து ஓராயிரம் பொன் பரிசளிக்கக் கட்டளையிட்டான். அதன்பின் மந்திரிமீண்டும் அவ்விருத்தனைநோக்கி, "நீர் இப்போது புளியங்கொட்டையை நடுகின்ற அபிப்பிராயம் என்ன." என்றுவினவினன். அதற்கு அவ்விருத்தன், "எனது ஆயுணாள்வரையில் ஒருவருக்கும் ஒருபகாரமும் புரியாதவனாகையாலும், இப்போதும் பலர்க்கும்வேறுவகையால் உபகாரம் புரிவதற்குப் பொருளில்லாதவனாகையாலும், என்னுடைய கடமையாகிய பரோபகாரத் தொழிலை இவ்விதம் இயற்றி இதன்பிரயோஜனத்தை எனக்குப் பின்னுள்ள அனேகர் அனுபவிக்கவேண்டுமென்பதே என்கருத்து" என்றான். இதைச்செவியேற்றஅரசன் அவ்வயோதிகனுடைய தருமசிந்தைக்காக மெச்சி இன்னும் ஓர் ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி கட்டளையிட்டான். மீண்டும் மந்திரி அக்கிழவனை நோக்கி "இப்புளியமரம் எத்தனைவருஷத்தில் பலன் கொடுக்கும்" என்றான். அதற்குக்கிழவன் "சாதாரணமாய்ப் புளியமரங்கள் 10-அல்லது 13-வருஷத்திற்குமேற்பட்டுத்தான் பலனைக்கொடுக்கும், ஆனால், நான் நடுகிற புளியமரம் முளைக்கிறதற்கு முன்பாகவே பலனைக்கொடுத்துவிட்டது! பலனென்றாலும் இரட்டைப்பலன்"!! என்றான். அரசன் அவனுடைய அபிரிதவாக்குக்கு ஆநந்தமடைந்து இன்



னும் ஓர் ஆயிரம் ரூபாய்க்கு உத்தரவளித்தான். அதைப்பெற்றுக்கொண்ட அம்மூப்பன் அரசனைநோக்கி "என்ஐயனே! நான்பிறருக்குச் செய்யக்கருதிய உபகாரத்திற்குப்பதில் கடவுள் உடனே எனக்களித்துவிட்டார்" என்றான். அரசன் இன்னும் ஆயிரம் ரூபாய்க்குக் கட்டளையிட்டான். மந்திரி இனி இங்குத் தங்கினால் கஜானாமுழுவதையும் இக்கிழவன் கொள்ளை கொண்டுவிடுவான் என்றெண்ணி அரசன் முதலியவர்களை அழைத்துக்கொண்டு அரண்மனைபோய்ச் சேர்ந்தான்.

ஓர்ஊரில் கிராமாதிபதியாயிருந்த ஒருவன் கிராமாதிபத்தியம்செலுத்துவதோடு அவ்வூரிலுள்ள குடிகளில் எவர்வீட்டிலேனும் மரணம்நேர்ந்தால் அவ்வீட்டிற்குச்சென்று துக்கம்விசாரித்து அவர்கட்குத்தேறுதல் கூறுவது வழக்கம். அவனுக்கிரண்டு குமாரர்களிருந்தார்கள். அக்கிராமாதிபதிக்கு மரணம் நேரிட்டபிறகு, அவன் மூத்த குமாரன் அக்கிராமாதிகாரத்தை வகித்தான். இளையவன் பயிர்த்தொழிலைப்பார்த்துவந்தான். இப்படியிருக்கையில் இளையவன் மூடனும் பொறாமையுள்ளவனுமாகையால், நமது தமையன் கஷ்டமொன்றுமின்றி ஓர்நாள் முழுமையும் சும்மா பேசிக்கொண்டு காலம் கழிக்க நாம் மாத்திரம் இந்தப்பயிர்த்தொழிலை மேற்கொண்டு வெய்யிலிலும் காற்றிலும் மழையிலும் அவதிப்பட வேண்டியதென்ன? ஆதலால், நாம் அந்தக்கிராமாதிகாரத்தை மேற்கொண்டு தமையனுக்கிந்தப்பயிர்த்தொழிலை விட்டுவிடலாமென்றெண்ணி, ஓர்நாள் தமையனைக்கிட்டி "அண்ணா! இன்றுமுதல் கிராமாதிகாரத்தை நான் வகிக்கிறேன், நீர் பயிர்த்தொழிலைப் பார்த்துக்கொள்ளும்." என்றான். அதுகேட்டதமையன் தம்பியைநோக்கி, "அப்பா! கிராமாதிகாரம் செலுத்துவதென்றால் சுலபமானதல்ல, "பேசப்போயினையோ சாகப்போயினையோ" என்னும் பழமொழிப்படி, விவகாரம் தெரிந்துபேசாவிட்டால் வினையாய்வந்து முடியும், நீயோவிவகாரப் பழக்கமில்லாதவன், ஆதலால் நீஇந்தக்கிராமாதிகாரத்தை மேற்கொண்டுநிர்வாகிக்கமாட்டாய்" என்று பலவிதமாகக் கூறியும் கேளாமையால், அவனிஷ்டப்படியே கிராமாதிகாரத்தை அவன் வசம் ஒப்பித்து, அவனைப் பழக்குவதற்காக, ஓர்நாள் ஓர்வீட்டில் அவ்வீட்டுக்காரனுடைய தாயார் இறந்துபோனதைப்பற்றித் துக்கம்விசாரிக்க நேர்ந்தபோது தன்தம்பியை அழைத்துக்கொண்டு சென்று, அவ்வீட்டுக்காரனைக்கண்டு, "உன்தாய் உனக்குமாத்திரம் தாயென்று நினையாதே, இவ்வூரிலுள்ளாரனைவர்க்குந்தாயாயிருந்து அவரவர்கள்மனமும்சந்தோஷிக்கும்படிசெய்துவந்

தாள், என்செய்வது, விதியைவெல்ல யார்தரம் ஆகலால் நீவிசனப்படுவதிற் பயனென்னை." என்று தேறுதல் கூறினான். இதுகேட்டுக்கொண்டிருந்த தம்பி, இதுதான் துக்கம் விசாரிக்கும் மாதிரி எனத்தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு தமையனுடன் வீட்டுக்குத்திரும்பினான். அதுமுதல் கிராமாதிகாரத்தைத் தம்பியே வகித்துக்கொண்டான். சிறிதுநாள்கழிந்தபிறகு மற்றோர் வீட்டில் அவ்வீட்டுக்காரனுடையமனைவி இறந்துபோனாள். அத்துக்கத்தை விசாரிப்பதற்காகச்சென்ற தம்பி, அவ்வீட்டுக்காரனைக்கண்டு, "உன்னுடையமனைவி உனக்குமாத்திரம் மனைவியாயிருந்தாளென்று நினைக்கவேண்டாம், இவ்வூரிலுள்ளாரனைவர்க்கும் மனைவியாயிருந்து அவரவர்களையும் சந்தோஷிப்பித்து வந்தாள்" என்றனன். இதுகேட்ட அவ்வீட்டுக்காரன் துக்கத்தை மறந்து கோபாவேசங்கொண்டு அருகிலிருந்த ஆற்காட்டு ஜோட்டினால் ஆறடி அடித்துத் துரத்திவிட்டான். அப்படி அடிபட்டுக்கொண்டு வந்த இளையவன் மூத்தவனைக்கண்டு, "அண்ணா! நான் பழையபடிப் பயிர்த்தொழிலையே பார்த்து வருகின்றேன். கிராமாதிகாரம் உனக்கே தக்கதாகையால் நீயே அதை ஒப்புக்கொள்" என்று கூறி அவ்வாறேபார்த்துவந்தான். ஆதலால் "பழக்கமில்லாக்காரியத்திற் புகுவோன் பங்கமடைவான்" என்பது நிச்சயம்.

வெகுகாலமாய் விறகுவெட்டி விற்றுக் கஷ்டஜீவனம் செய்துகொண்டிருந்த ஓர்கிழவன் ஓர்நாள் தன்வழக்கப்படி காட்டில் விறகொடித்துக்கொண்டிருக்கையில் தன்கஷ்டத்தை நினைத்துத் துக்கித்து, "யமதூதா! என்னைக்கொண்டு போகமாட்டாயா?" என்றான். அப்போது அவ்வழியாய்ச்சென்றுகொண்டிருந்த யமதூதன் அக்கிழவன்அருகில்வந்து, "ஏன் என்னைக்கூப்பிட்டாய்." என்றான். அப்போதுகிழவன் திடுக்கிட்டு, இதேது "விளையாட்டுக்குக்கூறியது வினையாய்முடிந்தது" என்னும் பழமொழியைப்போல, நாம் சும்மா துக்கத்தாற்சொன்னமாத்திரத்தில் நிஜமாகவே யமதூதன் வந்துவிட்டானே என்று அச்சமுற்று, "அப்பா! இந்த விறகுக்கட்டைக் கொஞ்சம் தூக்கிவிடு" என்றான்.

ஒருவன் தன் தகப்பனுக்கு அமாவாசையின்று தருப்பணம் கொடுக்கப்போகையில், அவன்பிள்ளை அவனைமடிபிடித்துக்கொண்டு "அப்பா! நீர்மட்டும் உமது பிதாவுக்குத் தருப்பணம் கொடுக்கப்போகின்றீரே, அவ்வாறு நான் உமக்கு எப்பொழுது தருப்பணம் கொடுக்கிறது! அதைச்சொன்னால்தான் விடுவேன்." என்றான்.

கடவுள் துணை.

# விநோத விசித்திரப் பத்திரிகை.

1900-ம் ௵

புஸ்தகம் 1] செப்டம்பர்மீ 1௳ சனிக்கிழமை. [No. 9.

## கடவுள் உண்டு.

119-ம்-பக்கத்தொடர்ச்சி.

இன்னும் நமது தேகத்தில் ஆன்மா என்னும் ஒருவஸ்து இருக்கிறதாக நாம் திட்டமாய் அறிந்திருக்கின்றோம். இந்த ஆன்மா நமது தேகத்தில் தரித்திருக்கின்ற வரையில் தேகத்திலுள்ள ஒவ்வோருறுப்பும் எத்தனையோ அபரிமிதமான வேலைகளெல்லாம் நடத்திவருகின்றது. கண்ணானது இதர சிருஷ்டிகளைப் பார்க்கவும் புத்தகம் முதலியவைகளிலுள்ள விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும், காதானது சகல தொனிகளையும் இராகங்களையும் கேட்கவும், மூக்கானது வாசனைகளை அறியவும், வாயானது கோடானுகோடி வார்த்தைகளைப் பேசவும் சங்கீதங்களைப்பாடவும், கையானது அநேக அபுரூபமான விசித்திரவேலைகளைச் செய்யவும், காலானது ஆயிரக்கணக்கான மைல்களுடைய தூரங்களை நடந்துசெல்லவும், மற்றும் வெளியுறுப்புக்கள் ஒவ்வொன்றும் தத்தம் தொழில்களை நடத்திக்கொண்டுவருகையில், உள்ளுறுப்புக்களாகிய இரைக்குடல் பிரதிதினமும் தன்னிடம் வரப்பட்ட ஆகாராதிகளை ஜீரணமாக்கிமலஜலாதிகளை வெளியில் தள்ளிச் சத்தானவஸ்துவை இருதயத்திற் சேர்ப்பிப்பதும், இருதயமானது அந்தச்சத்தை இரத்தரூபமாகச் சரீரமுழுமையும் செல்லவைப்பதும், மற்றும் சகலஉள்ளுறுப்புக்களும் இதுபோலவே தத்தம்

தொழில்களைப்புரிந்து வருவதும் ஆகிய விஷயங்களெல்லாம் எவ்வளவு ஒழுங்காக நடந்துவருகின்றன. இத்தனை விவகாரங்களையும், இந்த ஆன்மா என்னும் சக்தி சரீரத்திலிருந்து நடத்திவருகின்றதேயன்றி முற்கூறப்பட்டுள்ள உறுப்புக்கள் தாமாகவே அவைகளை நடத்திவரவில்லை. எப்படியெனில், இந்த ஆன்மாவானது சரீரத்தைவிட்டுப் பிரிந்தக்ஷணமே எல்லா உறுப்புக்களின் தொழிலும் கெட்டுப்போகின்றன. அப்போது சரீரமானது உணர்ச்சியற்ற சுவர்போலவும் பட்டுப்போன மரம்போலவும் ஆய்விடுகின்றது. ஆகையால், தேகத்தில் நடந்துகொண்டிருந்த கோடானுகோடி விவகாரங்களெல்லாம் ஆன்மா என்னும் ஓர் சக்தியினால்தான் நடந்துவந்தன என்று தெரிந்திருக்கின்றதல்லவா? அந்த ஆன்மாவை நாம்கண்ணாற்காணக்கூடாவிட்டாலும் ஆன்மா என்னும் ஓர் சக்தி நமது தேகத்திலிருந்து இத்தனைவிவகாரங்களையும் நடத்திக்கொண்டு வந்திருக்கிறதென்று சற்றும்சந்தேகமின்றி நிச்சயிக்கின்றோமல்லவா? இதுபோல் இப்பிரபஞ்சத்தில் நடந்துவருகிற சகல கருமங்களும் கர்த்தாவென்னும்அந்த ஒரே கடவுளால் நடந்துவருகின்றனவேயன்றித் தாமாகவே நடந்து வரவில்லை.

இன்னும் 1-10-100-1000-10000-100000-கோடி நூறுகோடி முதலியயாவும் ஆதியாகியஒன்றில் நின்றும் உற்பத்தியாகிவந்திருக்கின்றன. ஆதியாகிய அந்தஒன்றுஇல்லையாயின் மற்ற ஒன்றுமேயில்லை. அதுபோல், கோடானுகோடி அண்டசராசரங்கள் யாவும்ஒரே கடவுளினின்றும் உற்பத்தியாகி இருக்கின்றனவென்பதிற் சற்றும் சந்தேகமேயில்லை. ஆகையால், **கடவுள் ஒருவர் உண்டு** என்பது மிகவும் உண்மை. இதுகாறும் நாம் கூறிவந்துள்ள முகாந்தரங்களையும் அத்தாட்சிகளையும் ஆழ்ந்த கருத்துடன் ஆராய்ச்சி செய்துபார்த்தால் சர்வசிருஷ்டிகளுக்கும் ஆதிகர்த்தாவாகிய கடவுள் ஒருவர் இருக்கிறாரென்பது செவ்வையாய் விளங்காமலிராது. நாஸ்திகமதம் நீங்கலாக ஆஸ்திகர்களாகிய ஒவ்வொருமதஸ்தருடைய வேதசாஸ்திர புராணங்களிலும் கடவுள்ஒருவர் உண்டு என்பதைச் செவ்வையாய் விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றன என்று முன்னமே யெடுத்துக்காட்டியிருக்கிறோம். விஷயங்களை உறுதிப்படுத்தக்கூடிய சுருதி யுக்தி அநுபவம் என்னும் மூன்றனுள் கடவுளுண்டு என்னும் விஷயம சுருதியும் யுக்தியுமாகிய இரண்டினால் இதுவரையில் ஸ்தாபிக்கப் பட்டாயிற்று. இனி அக்கடவுளை யடையத்தக்கமார்க்கங்கள் இவையென்றுமுறையேகாட்டி அவரவர்கள் அநுபவத்திலும் விளங்கக் கூறுவாம்.



## குழந்தைகளின் பாதுகாப்பு.

(109 - ம்-பக்கத்தொடர்ச்சி.)

உலகத்திலுள்ளசகலபாக்கியங்களிலும் சந்தானபாக்கியமே சிறந்ததென்றுயாவரும் ஒப்புக்கொள்வார்கள், அந்தப் பாக்கியத்தைப்பெறுவதற்கு அனேகர் எவ்வளவோகஷ்டநஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். இவ்வாறு பிறக்கும் பிள்ளைகள் சன்மார்க்கப்பிள்ளைகளென்றும் துன்மார்க்கப்பிள்ளைகளென்றும் இரண்டு பகுப்புடையவர்களாகின்றார்கள். சன்மார்க்கப்பிள்ளைகள் தங்கள் தாய்தந்தையரின்கட்டளைகட்குக் கீழ்ப்படிந்து கடவுள்பக்தி பரோபகாரசிந்தை ஆசை அன்பு அபிமானம் முதலியசற்குணங்களிற் றலைமையுற்றவர்களாகிச் சற்புத்திரரெனப் பெயர்வகித்துப் பெற்றோர்க்கும மற்றோர்க்கும் நல்லபிள்ளைகளாகின்றார்கள். அத்தகையபிள்ளைகளைப்பெற்றோரும் மனப்பூரிப்புடையவர்களாய் அப்பிள்ளைகளால் தாங்களடையத்தக்க சுகானுபவங்கள்யாவும்குறைவின்றியடைகின்றார்கள். இதனாலன்றோ திருவள்ளுவரும், "ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்." எனத்திருவாய்மலர்ந்திருக்கின்றனர். இவ்வாறு மனப்பூரிப்பும் சுகானுபவங்களும்அப்பிள்ளைகளால்அடையத் தொடங்கியதாய்தந்தையர், இப்பிள்ளைப்பேற்றுக்காகத் தாங்கள் முன்பனுபவித்த கஷ்டநஷ்டங்களுக்குப் பரிகாரமடைந்தவர்களாகின்றார்கள். ஆனால், துன்மார்க்கப்பிள்ளைகளோவென்றால், இவையனைத்திற்கும்நேர்மாறான துர்க்குணங்களாலும் துர்ச்செய்கைகளாலும் பெற்றோர்க்கும்மற்றோர்க்கும்தங்கள் வாணாள்முழுவதும் தீங்கையே விளைப்பவர்களாகவிருத்தலின் யாவரும்வெறுக்கத்தக்கதுஷ்டமிருகங்கட்கொப்பாகின்றார்கள். இத்தகையபிள்ளைகளால் அக்குடும்பத்திற்கு என்றும் மாறாக்கெடுதிகள் வாய்த்தலாலே, அத்தகையபிள்ளைகளைக் குலத்தைக்கெடுக்கவந்த கோடரிக்காம்புகள் என்பதற்கு ஆட்சேபமில்லை. இவ்வாறானபிள்ளைப்பேற்றையடைந்து அக்குடும்பம் அவதிப்படுவதைப்பார்க்கிலும் சந்ததி விர்த்தியில்லாமற் போவதேநன்று. இதனாலன்றோ அதிவீரராமபாண்டியரும், "அச்சமுநாணமுமறிவகத்தில்லாக் கொச்சைமக்களைப் பெறுதலி னக்குடி-யெச்சமற் றேமாந் திருக்கை நன்றே." என்றனர். இதுபோலவேபெண்பாற்குழந்தைகளும் நற்குணம் நன்னடையுடையவைகளா யிருந்தாற்றான் தங்கள்வாணாள்முழுவதும் சௌக்கியமாயிருப்பதல்லாமலும் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் கீர்த்தியை விளைவிப்பார்கள். துர்க்குணமுடைமையால் துஷ்டிகளாய்விட்டால்

தங்கள் வாணாள் முழுவதும் துன்பானுபவங்களடைவதன்றியும் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் தீராத்துயரத்தைத் தேடிவைப்பார்கள். ஆகையால், குழந்தை பெற்றதுமுதல் அக்குழந்தைக்குச் சத்விஷயத்தைப் போதித்துச் சன்மார்க்கத்திற் பழக்கிவரவேண்டுமென்னும் கவனத்தைத் தாய்தந்தையர்கள் இடைவிடாச் சிந்தனையாகக் கொண்டு நடத்திவரவேண்டியது அவசியம்.

இன்னும் குழந்தை பிறந்தபிறகு அதற்கு நோய்முதலிய துன்பங்களணுகாமல் காப்பாற்றவேண்டியதும் அவசியமே. ஆனால், அவற்றின் விவரங்கள் யாவும், இனி எழுதப்போகும் பிரசவத்தைப்பற்றிய விஷயத்திற் சவிஸ்தாரமாய் எழுதப்படுமாகையால், இவ்விடத்திலே அதுவிஷயத்தைச்சேர்ந்த முக்கியமான சிலவற்றை மாத்திரம் தெரிவித்துவிட்டு, அவர்களை நன்னடத்தையிற் பயிற்றிவரவேண்டிய முறைமைகளையும் தீய ஒழுக்கத்தில்நின்றும் பாதுகாக்க வேண்டிய ஒழுங்குகளையும் எடுத்துக்கூறுவோம்.

முன்பு 109 - ம் பக்கத்திற்கூறிமுடித்ததுபோல், தாயானவள் தன்னுடைய தேகத்தையும் தான் உடுத்திருக்கும் வஸ்திரத்தையும் வசிக்கும் வாசஸ்தானத்தையும் சுத்தியாய்வைத்திருக்க வேண்டியது எவ்வளவுமுக்கியமோ அவ்வளவு முக்கியமாகவே முற்கூறிய விஷயங்களிலெல்லாம் குழந்தையையும் சுத்தியாய் வைத்திருக்க வேண்டியது அவசியம். அன்றியும் குழந்தையிருக்கும் இடத்தில் சுத்தமான ஆகாயம் செல்லும்படியாகவும் செய்து வைக்கவேண்டும். குழந்தைகளுடைய தேகத்தைத் திறந்துவைக்காமல், மெல்லியதாகவும் லேசானதாகவுமுள்ள ஊல்முதலியவற்றால் நெய்யப்பட்ட வஸ்திரங்களைக்கொண்டு சொக்காய் தொப்பி கால் உறை முதலியவை பிகுவின்றித் தளர்ச்சியாயிருக்கும்படி தைத்துப் போடவேண்டும். தினந்தோறும் ஒருமுறை சற்று வெதுவெதுப்பாகவுள்ள வெந்நீரில் ஸ்நானம்செய்து வைக்கவேண்டும். தாய் குழந்தைக்குப் பால்கொடுக்கும்போது தன்மனதை அமரிக்கையாகவும் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வைத்திருப்பதுமல்லாமல் குழந்தை நல்ல அழகும் சற்குணமுமுடையதாகவும் கடவுள்பக்தியுடையதாகவும் ஆகவேண்டுமென்று பால்கொடுக்கும் ஒவ்வொரு வேளையிலும் மனதிற்சிந்தனைசெய்துவரவேண்டும். பால்கொடுக்கும் வேளையில் பயங்கரம் திகில் முதலியவையில்லாமலும், எப்படிப்பட்டகெட்ட எண்ணங்களையும் மனதிற்கொள்ளாமலும் இருக்கவேண்டும். பால் கொடுக்குங்காலத்தில் தாய்அருந்தும் போஜனாதிகள் உயர்ந்ததாகவும்



மிதமாகவு மிருக்கவேண்டும். சுத்தமான ஜலத்தைப் பானம்பண்ணவேண்டும். அற்பமான உணவுகளையும் லாகிரிவஸ்துக்களையும் அருந்தலாகாது. தாய்ப்பாலே குழந்தைகளுக்கு மிகவும் நன்று. தாய்க்குப்பாலில்லாக் காரணத்தால், பாற்காரியை வைப்பதானால், அவள் நல்லவங்கிசத்திற் பிறந்தவளாகவும் தெய்வபக்தியுடையவளாகவும், சன்மார்க்கத்திற் செல்லத்தக்க சற்குணமுடையவளாகவும் சரீரத்தில் அற்பவியாதியுமில்லாதவளாகவும் செவ்வனே தேர்ந்தெடுத்து வைக்கவேண்டும். தாழ்ந்தஜாதிஸ்திரீகளும் துர்க்குணமுள்ளவர்களும் வியாதியுள்ளவர்களும் துஷ்டிகளுமாய் இருந்தால் அக்குணங்கள் யாவும் அப்பாலைக்குடிக்கும் குழந்தைக்கும் பற்றுமாகையால், முதலிற்கூறிய குணங்களமைந்தஸ்திரீகளகப்படாவிட்டால் பசுவின்பாலில்அடியிற்கண்ட அளவாகச் சுத்தஜலத்தைக்கலந்துகொஞ்சம்வெள்ளைச்சர்க்கரையும் சேர்த்துக்காய்ச்சிக்கொடுத்துக்கொண்டு வரலாம். பின்னால் கூறப்பட்டுள்ள தாழ்ந்தஜாதி ஸ்திரீகளின்பாலை ஒருவேளைக்குக்கூடக்குழந்தைகளுக்குக் கொடுக்கலாகாது. எருமைப்பால் தனித்தாவது பசும்பாலுடன் கலந்தாவது கொடுக்கலாகாது.

## பசும்பாலில் ஜலம் கலந்து காய்ச்சவேண்டிய அளவு.

| குழந்தையின் வயது. | இத்தனை பாகம் பால். | இத்தனை பாகம் ஜலம். |
|---|---|---|
| 2-நாள் முதல் 10-நாள் வரையும் | $1\frac{1}{4}$ | $3\frac{1}{4}$ |
| 10 ,, 20 ,, | $1\frac{3}{4}$ | $4\frac{1}{4}$ |
| 20 ,, 30 ,, | $2\frac{1}{2}$ | 6 |
| 1-மாதம் முதல் $1\frac{1}{2}$-மாதம் வரையில் | 3 | $6\frac{3}{4}$ |
| 1 ,, 2 ,, | $3\frac{1}{2}$ | 7 |
| 2 ,, $2\frac{1}{2}$ ,, | 4 | $7\frac{1}{2}$ |
| $2\frac{1}{2}$ ,, 3 ,, | $4\frac{1}{2}$ | ஷை |
| 3 ,, $3\frac{1}{2}$ ,, | 5 | ஷை |
| $3\frac{1}{2}$ ,, 4 ,, | $5\frac{1}{2}$ | ஷை |
| 4 ,, $4\frac{1}{2}$ ,, | 6 | ஷை |
| $4\frac{1}{2}$ ,, 5 ,, | $6\frac{1}{2}$ | ஷை |
| 5-மாதம் முதல் 6-மாதம் வரையில் | 7 | 7 |
| 6 ,, 7 ,, | 7 | 7 |
| 7 ,, 8 ,, | 8 | 6 |
| 8 ,, 9 ,, | $8\frac{1}{4}$ | 6 |
| 9 ,, 10 ,, | $8\frac{1}{2}$ | 6 |
| 10 ,, 11 ,, | $8\frac{3}{4}$ | $6\frac{1}{4}$ |
| 11 ,, 12 ,, | 9 | $5\frac{1}{2}$ |
| 12 ,, 15 ,, | $9\frac{1}{4}$ | $5\frac{1}{4}$ |
| 15 ,, 18 ,, | $9\frac{1}{2}$ | 5 |
| 18 ,, ,, | 10 | 5 |

## Photography.

### 113. போட்டோகிராப் படம்பிடிக்கும்முறை.

124 - ம் - பக்கத்தொடர்ச்சி.

சென்ற பத்திரிகையில் டார்க்ஸ்லைடைக் காமராவில் நின்றும் எடுத்து வெளிச்சம்படாமல் கறுப்புத்துணியால் மூடிக்கொண்டுபோய் இருட்டறையில் வைக்கும்படி சொல்லியிருக்கிறோம்.

படம்பிடிக்கும்போது மூன்றுநிமிஷநேரம் லென்ஸ்குழையைத் திறந்துவைக்கவேண்டுமென்று முன்னமே கூறியிருக்கின்றோமல்லவா? ஆனால், சிலசமயத்தில் அதற்குக் குறைவானகாலம் வரையிலும் சிலசமயத்தில் அதிகமான காலம்வரையிலும் லென்ஸ்குழையைத் திறந்து வைக்கும்படி நேரும். அதைப்பற்றிய விவரத்தையும் படம்பிடிக்கும் காலத்தில் இவ்வளவு வெளிச்சமிருக்க வேண்டுமென்பதையும் பிறகு தெரிவிப்போம்.

இப்போது ட்ரைப்ளேட்டிலுள்ள படத்தை வெளிப்படுத்தும் முறையை விளக்குகின்றோம். அச்செய்கைக்கு Developing டெவலப்பிங் என்றுபெயர். இது செய்வதற்கு அடியிற்குறித்திருக்கும் சாமான்களைச் சித்தப்படுத்திக்கொள்ளவேண்டும்.

சிவப்புக்கண்ணாடிபோட்ட லாந்தர் ஒன்று.

அடியில் தட்டையாயும் விளிம்பு சற்று உயரமாயுமுள்ள அகலமான தட்டைப்பீங்கான் அல்லது டிஷ் மூன்று.

பெரியதொட்டி சின்னதொட்டி என்னும் இவ்விரண்டிலும் நிறைய ஜலம்.

அந்தஜலத்தை எடுத்து ஊற்றுகிறதற்கு ஓர் செம்பு.

(அந்தஇருட்டறைக்குள் தண்ணீர்க்குழாயிருந்தால் மிகவும் உத்தமம்.)

சன்னத் தராசு ஒன்று.

நிறுக்கிறதற்கு அவுன்ஸ் திராம் க்ரெயின்ஸ் முதலானஎடைகள்.

ஜலம் அளவுக்குக்கோடுபோட்ட அவுன்ஸ்திராம் அளவுகிளாஸ் ஒன்று.

வாயகன்ற கோப்பை ஒன்று.

ஆகிய இவைகளைச் சித்தப்படுத்திக்கொள்ளவேண்டும்.

டெவலப் செய்வதற்குத் திராவகம்:—10-அவுன்ஸ் ஜலம் கொள்ளும்படியான புட்டி ஒன்றில் (Bromide of Potassium) ப்ரோமைட்ஆவ் பொடாஸியம்-திராம்-(Drachms) 2.



Liquor ammonia லிகர் அமோனியா அவுன்ஸ்-2. ஜலம் அவுன்ஸ்-4.

இவைகளை ஒன்றாய்ப்போட்டுக் குலுக்கிக் கல்கார்க் போட்டு அடைத்து அதற்குச் சொலூஷன்நெம்பர்1 என்று பெயரெழுதி ஒரு லேபில் ஒட்டிக்கொள்ளவும்.

முற்கூறப்பட்டுள்ள சாமான்களுடனே ட்ரைப்ளேட் வைத்திருக்கும் இருட்டறைக்குட்போய்ச் சிவப்பு லாந்தருக்குத் தேங்காயெண்ணெய் அல்லது நல்லெண்ணெய், அல்லது மெழுக்குவத்தி போட்டுக்கொளுத்தி லாந்தருக்கு 10-அடி தூரத்தில் நாம் உட்கார்ந்துகொண்டு பின்சொல்லுகிறபடி செய்யவேண்டும்.

மேற்கூறிய கோப்பையையெடுத்து அதில் மூன்று அரிசியெடை (Pyrogalic acid) பைரோகாலிக் ஆஸிட்போட்டு இரண்டு அவுன்ஸ் சுத்தஜலம்விட்டால் கரைந்துபோகும். பிறகு இந்த கோப்பையிலிருக்கிறசொலூஷனுடன், 1-ம் நெம்பர்சொலூஷனில் 4 - துளி கலந்து ஒரு டிஷ்ஷில் விட்டுக்கொள்ளவும். பின்பு டார்க்ஸ்லைடிலிருந்து ட்ரைப்ளேட்டைப் பக்குவமாயெடுத்துச் சிவப்புலாந்தர் வெளிச்சத்திற் பார்த்தால், அதில் உருவம் ஒன்றும் தோன்றாது. விரலில் கொஞ்சம் ஜலத்தைத் தொட்டுக்கொண்டு அந்த ட்ரைப்ளேட்டின் ஒரு மூலையில் தொட்டுப்பார்த்தால் பிசுபிசுப்பாயிருக்கும். அந்தப் பக்கத்தில்தான் மருந்து தடவியிருக்கிறபடியால் அந்தப்பக்கம் மேலேயிருக்கும்படியாகவும் மற்றப்பக்கம் அடியிலிருக்கும்படியாகவும் டிஷ்ஷில் தயார்ப்படுத்தி வைத்திருக்கும் சொலூஷனிற் போடவேண்டும். பிறகு, ஷை டிஷ்ஷிலிருக்கிற சொலூஷன் அந்த ட்ரைப்ளேட்டின்மேல் சமமாகப்பரவும்படி டிஷ்ஷை இரண்டு கைகளாலும் பிடித்து நாலாபக்கமும் அசைக்கவும். சில நிமிஷத்திற்குள் அந்தப்ளேட் ஒரு விதமான கறுப்புநிறமாகிவிடும். அதைச்சிவப்புலாந்தர் வெளிச்சத்திற் பார்த்தால், நிஜமான உருவத்தில் வெண்மையாயிருக்கவேண்டியபாகம் கறுப்பாகவும் கறுப்பாயிருக்கவேண்டியபாகம் வெண்மையாகவும் தோற்றும். இப்படி மாறுதலாயிருப்பதனாலே அதற்கு (Negative) நெகெட்டிவ் என்று பெயர். சில சமயத்தில் அந்த நெகெட்டிவ் ப்ளேட்டில் சிலபாகம் உருவமடைந்தும் சிலபாகம் உருவமடையாமலும் இருக்கிறதுமுண்டு. அப்படியிருந்தால் கோப்பையில் 1-ம் - நெம்பர் சொலூஷனில் 6 - துளிவிட்டுப் பிறகு அதை எடுத்து, டிஷ்ஷிலிருக்கும் சொலூஷனுடன் கலந்து

நெகெட்டிவ் ப்ளேட்டை முன்போல் அதிற்போட்டுக் கையினாலெடுத்தசைத்துச் சிவப்புக்கண்ணாடி வெளிச்சத்திற் பார்த்தால், உருவம் செவ்வையாய்த்தோன்றும். இரண்டாம்முறை நெகெட்டிவ் ப்ளேட்டை டிஷ்ஷிலுள்ள சொலூஷனில் அதிக நேரம் வைக்கக்கூடாது. நிதானமாய்ப் பார்த்துச் சீக்கிரத்தில் எடுத்துவிடவேண்டும். இவ்வளவுநேரம் வைக்கவேண்டுமென்று அனுபோகத்திற் செவ்வையாய்த் தெரிந்துவிடும். உருவம் செவ்வையாய்த் தெரிந்துவிட்டபிறகு சிவப்புலாந்தருக்குச் சமீபத்தில் ஷை நெகெட்டிவ் ப்ளேட்டைக்கொண்டு போகலாம். கெட்டுப்போகுமோ என்கிற சந்தேகமில்லை. பிறகு டிஷ்ஷிலிருக்கிற சொலூஷனைக் கீழே ஊற்றிவிட்டு நெகெட்டிவ் ப்ளேட்டைச் சின்னதொட்டியிலுள்ள ஜலத்திற் போட்டுவிடவேண்டும். ஒருமணிநேரத்திற்குப் பிறகு அந்த தொட்டிஜலத்தைக் கீழே ஊற்றிவிட்டு வேறுபுதியஜலம்நிரப்பி இன்னும் ஒருமணிநேரம் அதை வைக்கவேண்டும். உபயோகப் படுத்தாமலிருக்கிற இரண்டு டிஷ்ஷில் ஒன்றை எடுத்து. அதில் 10-பலம் சுத்தஜலம் விட்டுப் பிறகு 4-பலம் படிகாரத்தைத் தூள்செய்து அதிற்போட்டு, அதுகரைந்தபின்பு தொட்டியிலிருக்கும் நெகெட்டிவ்ப்ளேட்டை எடுத்துப் படிகாரஜலத்தில் முழுகும்படி போடவும். அதன்பின் இரண்டுநிமிஷங்கள் கழிந்தபோது, எடுத்து ஒரு பெரியபுட்டி அதாவது 24-அவுன்ஸ் பிடிக்கும்புட்டி எடுத்து, அதில் 10-அவுன்ஸ் ஜலம்வார்த்து 2½-அவுன்ஸ் (Hypo sulphite of soda) ஹைபோஸல்பைட்ஆவ்ஸோடா (இதைச்சாதாரணமாய் ஐபோ என்று சொல்வதுமுண்டு.) அந்த ஜலத்திற் போட்டுக்கரைந்தபிறகு, அதில்தேவையுள்ளவரையில் எடுத்து உபயோகப்படுத்தாமலிருக்கிற மூன்றாவது டிஷ்ஷில் போட்டு நெகெட்டிவ்ப்ளேட்டை 2-நிமிஷநேரம் அதிற்போட்டெடுத்துத் தொட்டியைச் செவ்வையாய்க் கழுவி விட்டு ஷை ப்ளேட்டைப்போட்டு நிறையஜலம்விடவேண்டும். ஒருமணிநேரம் பொறுத்து அந்த ஜலத்தை எடுத்து ஊற்றிவிட்டு வேறே ஜலத்தை விடவேண்டும். இவ்வாறு மூன்றுமுறை ஜலத்தை மாற்றவேண்டும். இதுதான் அதைக்கழுவுகிறமுறை. ஜலத்தில் எவ்வளவு அதிகநேரம் ஊறவைக்கின்றோமோ அவ்வளவு அதிகநாட்படப் படம் செவ்வையாயிருக்கும். புதிய ஜலம்விட்டு அடிக்கடி மாற்றிக்கொண்டு வருவதைப்பார்க்கினும், ஷை ப்ளேட் போட்டிருக்கும்தொட்டியில் ஜலம் விழுந்துகொண்டேயிருக்கும்படியாகத் தண்ணீர்க்குழாயைத் திறந்துவைத்துவிடுவது மிகவும் மேலானகாரியம். இந்த நெகெட்டிவ் ப்ளேட்டை இனிப்பயமின்றி வெளிச்சத்திற் கொண்டு



போகலாம். இனி கண்ணாடியிலுள்ள படத்தைக் கடிதாசியில் எடுக்கும் விதத்தைப் பிறகு தெரிவிப்போம். (இன்னும்வரும்.)

## பாகசாஸ்திரம்.

### 114. Biryani - பிர்யானி வேறு முறை.

சம்பாரங்கள்:—சுத்திசெய்த அரிசிபடி ஒன்று. நெய்-பலம்-15. நல்ல கொழுப்புள்ள ஆட்டிறைச்சி பலம்-60. மேல்தோல் நீக்கி மெல்லிதாய்ச்சீவிய வெங்காயம்-பலம்-10. மேல்தோல்நீக்கி மெல்லிதாய் அரைத்த பூண்டு-பலம்-1¼. கழுவிமேல்தோல்நீக்கி மெல்லிதாயரைத்த இஞ்சி-பலம்-2. இலவங்கம்-துலாகால். இலவங்கப்பட்டை துலா அரை. ஏலக்காய் துலாகால். மேல்தோலையும் கைப்புள்ளவைகளையும் நீக்கிய வாதுமைப்பருப்பு-துலா-3. ஜலம் அல்லது பன்னீர் விட்டரைத்த குங்குமப்பூ-வராகனெடை-கால். புளித்ததயிர்-ஆழாக்கு-3. எலுமிச்சம்பழம் இரண்டிற்பிழிந்தரசம். அரைத்தபச்சைமிளகாய் பலம்-1. கழுவிவேர்தறித்த பச்சைக்கொத்துமல்லித்தளிர் கைப்பிடியால் ஒருபிடி. புதினா அகப்பட்டால் கொத்துமல்லித்தளிரிற் பாதிபோடவும். பசு அல்லது எருமைப்பால்-படி-கால். (எருமைப்பால் உத்தமம்) உப்பு-ஆழாக்கு முக்கால்.

பாகம்:—ஷை இறைச்சியைத் தண்ணீர் வார்த்துச் செவ்வையாய்க்கழுவி, ஜல்லிக்கூடையிற்போட்டுப் பலகையின்மேல் தண்ணீர் வடியும்படி வைக்கவேண்டும். அரிசியை 4-முறை ஜலம் விட்டுக்கழுவி அரைமணிநேரம் ஜலத்தில் ஊறவைக்கவும். 3 படி ஜலம் கொள்ளும் இரண்டு தேக்சாவைச் செவ்வனேகழுவி ஒன்றில்நிறைய ஜலம் வார்த்து ஒரு அடுப்பில்வைத்துக் கொதிக்கவைக்கவேண்டும். மற்றொரு தேக்சாவை வேறொரு அடுப்பில்வைத்துத் தீமூட்டி நெய்வார்த்துச் செவ்வையாய்க் காய்ந்தபிறகு, வெங்காயத்தை அதிற்போட்டுக் கப்கிரினாற் கிண்டி, வெங்காயம் முக்கால்வாசி சிவந்துவரும்போது அரைத்தபூண்டை அதிற்போட்டுக்கிளறி அதுவும்சிவந்து வரும் தருணத்தில், கழுவிவைத்திருக்கும் இறைச்சியை அதிற்போட்டு, பிறகு தயிர் இலவங்கம் இலவங்கப்பட்டை ஏலக்காய் அரைத்தஇஞ்சி அரைத்தபச்சைமிளகாய் பச்சைக்கொத்துமல்லித்தளிர் புதினாமுதலியவைகளைப்போட்டு, இரண்டு ரூபாயெடை உப்பைக்கொஞ்சம் ஜலத்திற்போட்டுக்கரைத்து மண்டிநீக்கித் தெளிவை அதில்விட்டு, உப்பு சரியாயிருக்கிறதாவென்று பதம்பார்த்து, எல்லாவற்றையும் ஒன்றாய்ச்சேர்த்துக் கப்கிரினாற்கிளறி மூடியினால் தேக்சாவை மூடி

விட்டு அடுப்பை எரிக்கவும். இவ்விதம் எரித்து நீர்சுண்டி நெய்மேலே மிதக்கும்போது, அடுப்புக்கட்டைகளை நீக்கிவிட்டுப் புகையில்லாத தணலில்வைத்து, இப்போது தயாராயிருக்கும் குர்மாவிலிருந்து அரைவாசி நெய்யை டோராவினாலெடுத்து வேறுபாண்டத்தில் வைத்துக்கொள்ளவும். கொதிக்கிற வெந்நீரில் ஒரு ஆழாக்கு எடுத்துப்பாலிற் கலந்து குர்மாவிற்போட்டுக் கொஞ்சம் பச்சைக்கொத்துமல்லித் தளிர் எலுமிச்சம்பழரசம் அரைத்த வாதுமைப்பருப்பு இவைகளை அதிற்போட்டுச் செவ்வையாய்க் கிளறிவிட்டு மூடிவிடவும்.

மற்றொரு தேக்சாவிற் கொதிக்கிற ஜலத்திலே தேவையுள்ளவரையிலெடுத்துக்கொண்டு ஊறியிருக்கும் அரிசியை எடுத்து நீரைவடிகட்டி அதிற்போட்டு, உப்பு பலம் ஒன்று கரைத்துத் தெளிவிறுத்து அதில் வார்த்து வேகவைத்து முக்காலே அரைக்கால்வாசி வெந்தபதம்பார்த்து, 36-ம்-நெம்பர் முறையிற் சொல்லியிருக்கிற முறைப்பிரகாரமெடுத்து அண்டியிற் கொட்டி கப்கீர்காம்பினால் (உள்ளிருக்கும் இறைச்சி மேலே தெரியாவண்ணம்) ஷை சாதத்தைப்பரவலாகச் செய்து எடுத்துவைத்திருக்கும் பாதிநெய்யைப் பரவலாய் அதில்வார்த்து அரைத்துவைத்திருக்கும் குங்குமப்பூவை அதில் தெளிக்கவும். பிறகு 35-ம்-நெம்பரில் கூறியமுறைப்படிபேட்கொடுத்துத்தம்முக்குவிட்டு 15 - நிமிஷங்கழித்து இறக்கிக் கொள்ளவும். இதில் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் யாவும் 35-36-ம் நெம்பர் முறைகளில் தெரிந்துகொள்ளலாம். சாதம் எடுக்கும் முன் ஒருமுறை செவ்வையாய்க் கிளறிவிட்டுப் பிறகு ஒரு பக்கத்திலிருந்து சாதத்தை எடுத்துவரவும். இதுவும் ஒரு மேலானபாகம்.

## 115. (Dalcha) தால்ச்சா.

சம்பாரங்கள்:—இறைச்சி பலம்-6. கத்தரிக்காய்-வீசை-அரை. கடலைப்பருப்பு-ஆழாக்கு. க. வறுத்தரைத்த மிளகாய்-துலா-1½. வறுத்தரைத்த கொத்துமல்லிவிதை, துலா-1. அரைத்தமஞ்சள் துலா கால். கோதுகொட்டையில்லாத புளி-துலா-6. நெய்-பலம்-1. தோல் நீக்கி மெல்லிதாயரிந்த வெங்காயம்-பலம்-2. அரைத்தபூண்டு-பலம் கால். இவற்றுள் கத்தரிக்காயைச்சிறுதுண்டுகளாய்நறுக்கிச் சொத்தை நீக்கி ஒருபாத்திரத்தில் போட்டுத் துண்டுகள் முழுகும்படியாக ஜலம் வார்த்துவைக்கவும். (இப்படிச்செய்தால் கைப்பு இராது.)

பாகம்:—நெய்யை ஒரு சட்டியில் விட்டு அடுப்பேற்றித் தணல் மூட்டிச் சப்தம் தணிந்தபின் வெங்காயத்தை அதிற்போட்டு முக்காற்



பாகம் சிவந்தபிறகு பூண்டைப்போட்டுக்கிளறி, அதுவும் சிவந்தபிறகு இறைச்சியைக்கழுவி அதிற் கொட்டிச் சட்டிவாயை மூடியினால் மூடி உடனேதிறந்து, இரண்டுதுலா உப்பை ஜலத்திற்கரைத்துத் தெளிவைஅதில் ஊற்றி, பிறகு அரைத்த மிளகாய் மஞ்சள் மல்லி இவைகளையும் அதிற்போட்டுக்கிளறி மூடிவிடவும். (இதற்கு முன்பே கடலைப்பருப்புக்குத் தேவையான அளவு ஜலம்விட்டு ஒரு சட்டியிற்போட்டு வேகவைக்கவேண்டும்.) இறைச்சி செவ்வையாய் வெந்தபதம்பார்த்து, ஜலத்திற்போட்டிருக்கும் கத்தரிக்காய்த்துண்டுகளை எடுத்து அதிற்போட்டு இறைச்சியும் கத்தரிக்காய்த்துண்டுகளும் சேர்ந்து வெந்தபிறகு, கால்படி வெந்நீர் அதில் விடவும். (இந்தத் தண்ணீர் விட்டபிறகுதான் காய்த்துண்டுகள் செவ்வையாய் வேகும்.) இறைச்சியும் காயும் சேர்ந்து செவ்வையாய் வெந்தபிறகு ஒரு ஆழாக்கு ஜலத்திற் புளியைக்கரைத்து அதில்விடவும். உடனே வேகவைத்திருக்கும் கடலைப்பருப்பை அதில் எடுத்துப்போட்டுச் செவ்வையாய்க் கிளறி 5-நிமிஷங்கழித்து இறக்கிக்கொள்ளவும்.

## 116. சாதாச்சட்ணி.

மேல்தோல்நீக்கி மெல்லிதாயரிந்த வெங்காயம்-பலம்-2. அரைமூடிதேங்காய்த்திருகல் - 4 எலுமிச்சம்பழரசம் - பச்சைமிளகாய் பலம்-க. பருங்கற்களாகவும் கற்கள் கிளிஞ்சில்முதலியவை இல்லாமலாராய்ந்ததாகவுமுள்ள உப்பு-துலா-முக்கால்-இவற்றுள் உப்பையும் பச்சைமிளகாயையும் அம்மியில்வைத்துச் செவ்வையாயரைத்துப்பிறகு தேங்காய்த்திருகலையும் சேர்த்தரைத்து வழித்தெடுத்து ஒரு பாத்திரத்திற்போட்டு, அரிந்தவெங்காயத்தையும் எலுமிச்சம்பழரசத்தையும் அதிற்கொட்டிச் செவ்வையாய்க் கையினாற் பிசைந்துகொள்ளவும். இப்படிச்செய்து உபயோகிப்பதன்றியில் ஒருதுலா நல்லெண்ணெயில் கொஞ்சம் கடுகு கருவேப்பிலைபோட்டு மேற்சொல்லிய கூட்டை அதிற்கலந்து தாளிதம்செய்து நீர்சுண்டும்படி வற்றவைத்தும் எடுத்து உபயோகிக்கலாம். பின்சொல்லிய பாகத்தை-4-5-நாள் வரையில் வைக்கலாம்.

## 117. சிரா.

ஒரு பலம் நெய்யை ஒரு பாணையில் விட்டுக்காய்ச்சி, செவ்வையாய்க் காய்ந்தபிறகு காற்படி கோதுமைநொய்யை அதிற் கொட்டிப் பக்குவமாய்வறுத்தெடுத்துக்கொண்டு, முக்காற்படி பாலை அடுப்பில் வைத்துக்காய்ச்சிச் செவ்வையாய்க் கொதித்தவுடனே, வறு

த்துவைத்திருக்கும் கோதுமை நொய்யை அதிற்கொட்டிக்கிளறிஒரு கொதிகண்டதக்ஷணம், (பத்துப்பலம் சீனிச்சர்க்கரையை முன்மே பாகுசெய்துவைத்து) அதில் விட்டுக் கிளறிக்கொண்டேயிருந்து மூன்று கொதிவந்தபிறகு, கொட்டையில்லாத்திராட்சிப்பழம் பலம் 2½-தோல்கைப்புநீக்கிமெல்லிதாகவும் நீளமாகவும் அறுத்தவாதுமைப்பருப்பு பலம் 2½-ஏலரிசிப்பொடி பலம்-கால். என்னும் இவைகளை அதிற்போடவேண்டும். பிறகு, நான்கு குன்றியெடை குங்குமப்பூவை ஒரு ரூபாயெடை பசுவின்பாலிலரைத்து, அதிற்போட்டு எல்லாவற்றையும் நன்றாக் கிளறி 5 பலம் நெய் அதில்வார்த்து, வாயைச் செவ்வையாய் மூடி, 5-நிமிஷம் வரையிற் புகையில்லாத தணலில்வைத்து, 5-பலம் கற்கண்டை மிளகுப்பிரமாணம் உடைத்து அதில் தூவிக்கிளறிஇறக்கிக்கொண்டு, உபயோகிக்கவும். மிக்கமதுரமாயிருக்கும்.

### 118. புளிச்சாதம் அல்லது புளியோரை.

சுத்திசெய்த அரைப்படி அரிசியைச் செவ்வையாய்க் களைந்து ஒன்றரைப்படி சுத்தஜலத்துடன் ஒரு பாத்திரத்திற்போட்டு, சாதாரணமாய்ச்செய்வதுபோற் சமையல்செய்துகொண்டு, வாயகன்றஒரு பாத்திரத்திற்கொட்டி, 3-பலம் நல்லெண்ணெயை அதில்விட்டுச் செவ்வையாய்க்கிளறவும்.

6-பலம் நல்லெண்ணெயை ஒரு பாத்திரத்தில் விட்டு அடுப்பில் வைத்துக்காய்ச்சிச் செவ்வையாய்க் காய்ந்தபிறகு, வேறொருபாத்திரத்திலே அரைப்படி சுத்தஜலத்தில், புளி-6-பலம், பொடிசெய்த உப்பு-1½-பலம்-என்னும் இவைகளைப்போட்டுப் புளியிலுள்ள கோதுகொட்டை இவ்விரண்டையுமநீக்கிக் கரைத்துவைத்துக் கொள்ளவும். பிறகு மிளகாய்-பலம்-2 கடுகு பலம் - கால், வெந்தயம்-½ரூபாயெடை, காயம் - ⅛ரூபாயெடை, ஆகிய இவைகளை 22 - வது தாளிதமுறைப்படி காய்ந்திருக்கும் எண்ணெயில் தாளிதம் செய்து; இவைகளுடன் மஞ்சட்பொடி கால்ரூபாயெடை, கருவேப்பிலை ஒரு ரூபாயெடை, இவ்விரண்டையும் போட்டுக் கரண்டிக்காம்பினால் எல்லாவற்றையும் கிளறிக்கொண்டு, தயாராகவைத்திருக்கும் கரைத்தபுளியை அந்தத் தாளிதத்திற்கொட்டி, அடிகாந்திப்போகாமல் அடிக்கடி கிளறிக்கொண்டேயிருந்து, ஜலம் சுண்டிப்போய் மொத்தையாய் லேகியத்தைப்போலாகும்பதத்தில் முன் தயாராக் வைத்திருக்கும் சாதத்திற் கொட்டிக்கலந்து எடுத்துவைத்துக்கொள்ளவும். இதை உடனே எடுத்து ஒருபாக்குப்பாளையில் கட்டிவைத்திருந்தால், 10-15, தினவரையிற் கெடாமலிருக்கும்.



### 119. எள்ளுப்பொடிகலந்த சித்திரான்னம்.

சுத்திசெய்த அரைப்படி அரிசியை ஒரு நாழிகைவரையில் ஊறவைத்திருந்து செவ்வையாய்க் களைந்து ஜலத்தைவடித்து, மூன்றுபடி ஜலங்கொள்ளும் பாத்திரத்தில் ஒன்றரைப்படி ஜலம்விட்டு அடுப்பில்வைத்துக்காய்ச்சி, அதில் கால்ரூபாயெடை மஞ்சட்பொடியும் போட்டுச் செவ்வனே கொதிவந்தபின், வடியவைத்திருக்கும் அரிசியை அதிற்கொட்டிக் கரண்டிக்காம்பினாற் கிளறிக்கொண்டு மூடிவைக்கவேண்டும். அரிசி முக்காற்பாகம் வெந்தபதம்பார்த்து, அந்தத்தவலையைக் கீழே இறக்கிச் செவ்வையாய்க் கஞ்சியைவடித்துவிட்டு, 5-நிமிஷம்வரையிற்புகையில்லாததணலின்மேல்வைத்திருந்து, 3-பலம் நல்லெண்ணெயை அதில்விட்டுச் செவ்வையாய்க்கிளறி ஒரு பாத்திரத்தினால் மூடி, இன்னும் 3-நிமிஷநேரம் தணலின்மேல்வைத்துக் கொண்டிருந்து இறக்கி ஒரு கற்பலகையிற் கொட்டிப்பரப்பி ஆற்றிவிடவேண்டும்.

பிறகு, மிளகு-பலம்-கால், சீரகம்-பலம்-அரைக்கால், வெந்தயம்-பலம் வீசம், கொத்துமல்லிவிரை-பலம்-கால், மிளகாய்-பலம்கால், உளுத்தம்பருப்பு-பலம்-ஒன்றரை. ஆகிய இவைகளை வறுப்பதற்கு மட்டும் போதுமான நல்லெண்ணெயைக்கொஞ்சங்கொஞ்சமாய் விட்டு வெவ்வேறாய் வறுத்துப் பொடிசெய்து ஒன்றாய்க்கலந்து, கற்பலகையின்மேலுள்ள சாதத்திற் செவ்வையாய்க் கலந்து பொடிசெய்த அரைப்பலம் உப்பை அதிற்றூவி, இரண்டுபலம் நல்லெண்ணெயை விட்டுப் பிசையாமல் விரல்களாற் செவ்வையாய்க்கலந்து, குவியலாக்கிக் கையால் அழுத்திவைத்துக்கொள்ளவேண்டும். பிறகு காற்படி சுத்தஜலத்தில் 3½-பலம் புளியைப்போட்டுக் கரைத்துக் கோதுகொட்டைமுதலியவைகளைநீக்கி, அரைப்பலம் பொடித்த உப்பை அதிற் போட்டுக் கரைத்துவைத்துக் கொள்ளவும்.

6-பலம் நல்லெண்ணெயை ஒருபாணலிற் போட்டு அடுப்பில்வைத்துக்காய்ச்சிச் செவ்வையாய்க்காய்ந்தபிறகு, ஒரு பலம் மிளகாயைச் சிறுதுண்டுகளாகக் கிள்ளி அதிற்போட்டு, மிளகாய் பாதிவேக்காடானவுடனே அரைப்பலம் கடுகை அதனுடன்போட்டுச் சடபடவென்கிற சத்தம்கண்டு கடுகுபாதிவெடித்தபின், ஆறுபலம் கடலைப்பருப்பை முந்தியே ஊறவைத்திருந்து ஈரம்போக்கித் தாளிதத்திற்போட்டு நன்றாய்க் கிளறிக்கொடுத்துக் கடலைப்பருப்பும் வறுபட்டுத்தாளிதம் தயாரானவுடனே, அடுப்பைவிட்டிறக்கிக் கருவேப்பிலை பலம் கால், காயம் அரைக்கால் ரூபாயெடை, இவைகளைத்தாளிதத்திற்போ

ட்டுச் சடபீடவென்ற சத்தம்நின்றவுடனே, அதிலிருக்கும் காயத்தை மட்டும் எடுத்துப்பொடிசெய்து அந்தத்தாளிதத்திலேயே போட்டு, அதில் முன்புகைரத்துவைத்திருக்கும் புளியை ஊற்றி, மறுபடியும், அடுப்பின் மேலெடுத்துவைத்துக்கிளறி, அந்தப்புளி லேகியம்போலானபதம்பார்த்து, அதைக்குவியலாக்கிவைத்துள்ள அன்னத்திற்கொட்டிச்சுத்திசெய்துஊறவைத்துக்கழுவித்தோல் எடுத்துவறுத்த எள்ளு பலம்-2. அந்தச்சாதத்தில் தூவி எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்துகொண்டு உபயோகிக்கவேண்டும். இது மிகவும் மதுரமாயிருக்கும்.

## 120. எரிமலைஜாலம்.

அதிக உக்கிரமான கோடைகாலத்தில் ஒரு பெரிய மைதானத்திலுள்ள மேடான இடத்திலேபோய், காலை - 9-மணிக்கு இரண்டடி ஆழத்தில் ஒரு குழிதோண்டி, அக்குழிநிறையக் கட்டையைநிரப்பி, செவ்வையாய் ஒருமணி நேரம் எரியவிட்டு, நெருப்புக்களையெல்லாம் அப்பள்ளத்தினின்றும் எடுத்துவிட்டு, கால்மணிநேரம் ஆறியபிறகு, கெந்தகம் பவுன் - 28. இரும்புத்தூள் பவுன் - 28. ஆகிய இவை இரண்டையும் தனித்தனியே அரைத்துத் தூள்செய்து கலந்து, கொஞ்சம் தண்ணீர்வார்த்துப் பிசைந்து மொத்தையாக்கி முன்வெட்டியுள்ள குழியிற்போட்டுச் செவ்வையாய்க்காய்ந்த மணலை மேலே கொட்டிக் குழியை மூடிவிடவும். அவ்வாறு மூடிய இரண்டுமணி நேரத்திற்குப் பின், அக்கினிமலையினுடைய உக்கிரத்தைக் காட்டும். எவ்வாறெனில், அந்தக்குழியினின்றும் புகைபுறப்பட்டுக்கொண்டும். ஒருமாதிரியான கர்ஜ்ஜனைதோன்றிக்கொண்டும், மணலைச் சுற்றிலும் வீசிக்கொண்டுமிருக்கும். இது மிகவும் விநோதமாயிருப்பதுமன்றி ஜனங்கள் சமீபத்திற் போகக்கூடாமலுமிருக்கும். குழியில் மருந்துபோட்டுத் தயார்செய்வது ஒருவருக்கும் தெரியக்கூடாது. வேலைகளையெல்லாம் முன்னதாகவே முடித்துவைத்துக்கொண்டு, நான் மந்திரத்தினால் இப்போது எரிமலையுண்டாக்கப் போகின்றேன் பாருங்களென்றுசொல்லி, அந்தக்குழிக்குச் சற்றுதூரத்தில் உட்கார்ந்து ஜெபம்செய்துகொண்டேயிருக்கவேண்டியது. ஜனங்கள் யாவரும் வெகு ஆச்சரியப்படுவார்கள்.

## 121. சூரியகிரணத்தால் தீயுண்டாக்க.

ஒரு தட்டையான பீங்கானிற் கொஞ்சம் ஸ்பிரிட்ஸ் ஆவ்வையின் விட்டு, அதற்குள் கால்ரூபாயைப்போட்டு ஒரு கண்ணாடியைச் சூரியனுக்கெதிரிற் பிடித்து அக்கிரணத்தை ஸ்பிரிட்ஸிலுள்ள கால்ரூபாயில் விழும்படிசெய்தால், உடனே ஸ்பிரிட்ஸ் பற்றிக்கொள்ளும்.



## 122. வேறுமுறை.

வெய்யில் அதிக உக்கிரமாயிருக்கும் பகல் 12-மணிவேளையில், கொஞ்சம் தளமான ரசம்பூசாத கண்ணாடியைச் சூரியனுக்கெதிரிற் பிடித்துக் கண்ணாடிக்குக் கீழே விழப்பட்ட சூரியனுடைய கிரணத்திற் கொஞ்சம பஞ்சைவைத்தாற் சூரியகிரணம் பஞ்சிற்பட்ட 5-நிமிஷத்திற்குள் பஞ்சில் நெருப்புப் பற்றிக்கொள்ளும்.

## 123. இரும்பைஒருநொடிக்குள்தண்ணீரைப்போலுருக்க.

ஒரு இரும்புக்கம்பியைக் கொல்லனுலையில்வைத்துப் பழுக்கக்காய்ச்சி எடுத்து, கெந்தகக்கோல் அல்லது கட்டியை அதற்குமேல்வைத்தால் உடனே இரும்பு உருகிச் சொட்டுச் சொட்டாய்ப்பூமியில்விழும்.

## 124. ஒன்றுமுதல் 12-வரையிலுள்ள எண்களை இரண்டு பத்தியாக எழுதி ஒவ்வொரு வரியையும் கூட்டினால் வரப்பட்ட மொத்தம் சமமாயிருக்கவேண்டும்.

உதாரணம்:—1-2-3-4-5-6-7-8-9-10-11-12.

1+12=13.
2+11=13.
3+10=13.
4+ 9=13.
5+ 8=13.

## விநோதார்த்தப் பதங்கள்.

ஓர் அரசனிடத்தில் ஓர் மந்திரியிருந்தான். அவன் எந்த சந்தர்ப்பத்திலும் "இதுவும் ஓர் நன்மைக்கு ஏதுவே." என்று சொல்வது வழக்கம். இப்படியிருக்கையில், ஓர்நாள் அவ்வரசன் மாம்பழம் ஒன்றை அறுத்துச்சாப்பிடும் பொருட்டுக் கத்திஎடுத்து அறுக்கையில், அவ்வரசனுடைய கைப்பெருவிரலிற் காயம்பட்டது. உடனே அவ்வரசன் மந்திரியையழைத்துத் தனது கைப்பெருவிரலைக் காட்டி வருந்தினன். அதுகேட்ட மந்திரி தனது வழக்கப்படியே, "இதுவும் ஓர் நன்மைக்கு ஏதுவே." என்றான்: அப்போது அரசன் அதிகமாகச்சினந்து, நமது துக்கத்தைச் சற்றும் கவனியாதவனாய் இதுவும் ஓர் நன்மைக்கு ஏதுவே என்கின்றானே, இவனை நம்மிடத்தில் வைத்திருக்கலாகாதென்று தீர்மானித்துக்கொண்டு, மந்திரியைப்பார்த்து, "இன்றுமுதல் நீ நமது சமுகத்திற்கு வரவேண்டாம்." என்று உரைத்தான். அப்போதும் அமமந்திரி, "மகாப்பிரபு! இதுவும் ஓர் நன்மைக்கு ஏதுவே" என்று சொல்லிக்கொண்டே போய்விட்டான். பிறகு அவ்வரசன் வேறொருவனை மந்திரியாக ஏற்படுத்திக்கொண்டு அரசாட்சிசெய்துவந்தான். இவ்வாறிருக்கையில், ஓர் நாள் அரசன் அப்புது மந்திரியுடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அங்கு வேட்டையாடுகையில் மந்திரி ஓர் பக்கமும் அரசன் ஓர் பக்கமுமாகப் பிரிந்து வேட்டையாடினார்கள். அவ்வேட்டை முடிவில் அரசனுக்கு தாகவிடாய் நேர்ந்தமையால், வேட்டைக்குரிய ஆயுதங்களைத்தைத

யும் ஆள்விசம் ஒப்பித்துவிட்டு நிராயுதபாணியாய்த் தாகவிடாய் தணியத்தக்க தண்ணீர் எங்கு கிடைக்குமென்று தனியாக வருகையில், அங்கு ஓர் கோயிலிருக்கக்கண்டு, இக்கோயிலருகிற் குளமிருக்குமென்றெண்ணி அங்கு வந்தான். அது காளிகோயிலாகையால் அங்கு அக்காளிக்கு ஓர் நரபலிகொடுத்து அவளிடத்தில் வரம்பெறவேண்டுமென்று வெகுநாளாய்க் காத்திருந்த ஒருவன், இவ்வரசனைக்கண்ட மாத்திரத்தில் தனதெண்ணம் நிறைவேறிற்றென்று குதூகலித்தவனாய்க் காளியைநோக்கிப் பிரார்த்தித்து, இதோவருகின்ற இவனைப் பலியாகக்கொண்டு எனக்கு வரங்கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பித்தான். உடனே காளி பிரசன்னமாய் அவ்வரசனைப்பார்த்துக் கைப்பெருவிரலிற் காயமுள்ள இவ்வங்கவீனனை நான் பலியாகக் கொள்ளமாட்டேனென் றுரைத்துப்போயினள். அதுகண்ட அரசன் இன்று நாம் உயிர்பிழைத்தோம் என்றெண்ணிக்கொண்டு தாகந்தணியத் தண்ணீர்குடித்துச் சென்றனன். இவன் வேறொரு வழியாய்ச் சென்றவுடனே, இவனைத்தேடிக்கொண்டு மந்திரி அவ்வழியேவந்து அக்காளிகோயிலைக் கிட்டினன். அக்கோயிலிற் காத்துக்கொண்டிருந்த அப்பாவி, இவனைக்கண்டமாத்திரத்தில் காளிக்கறிவித்தான். அவள் அவன் அவயவபங்கமில்லாதிருந்ததைப்பார்த்துப் பலியாகக்கொண்டு, தன்னைப் பிரார்த்தித்தவனுக்கு வேண்டிய வரத்தைக்கொடுத்தனள். அவன் வரம்பெற்றுக்கொண்டு தன் வீடுபோய்ச்சேர்ந்தான். அதன்பின் அரசன் மந்திரியைத்தேடிக்கொண்டு வந்து காளிகோயிலிற் பிரேதமாயிருப்பதைக்கண்டு துக்கித்து, அதை ஆள்களைக்கொண்டு எடுப்பித்துப்புதைத்துவிட்டு அரண்மனைக்குவந்து சேர்ந்து, வேறு தக்க மந்திரிகள் அகப்படாமையால் மீண்டும் அப்பழைய மந்திரியையே வரவழைத்து, "முன் என் கைப்பெருவிரலறுபட்டபோது, இதுவும் ஓர் நன்மைக்கு ஏதுவே என்றாயே அதன் கருத்தென்ன." என்றான். அம்மந்திரி காட்டில்நடந்த செய்திகள் யாவும் உணர்ந்தவனாகையால், "அன்று இக்கைப்பெருவிரல் அறுபடாதிருந்தால் இன்றுதேவரீர் காளிக்கிரையாகவேண்டுமல்லவா?" என்றான். அதுகேட்ட அரசன் ஆச்சரியமுடையவனாகி, மீண்டும் அம்மந்திரியைநோக்கி, "நான் இன்றுமுதல் நீ என்சமூகத்திற்கு வரவேண்டாம் என்றபோதும் அவ்வாறே கூறினையே அதன் கருத்து என்ன" என்றான். அப்போது மந்திரி "மகாப்பிரபு! அன்றுமுதல் நான் நில்லாதிருந்தால் இன்று உம்முடன் கூடவந்த மந்திரி அடைந்தகதியை நானடையவேண்டுமல்லவா என்றான்." உடனே அரசன் அதிக ஆச்சரியமுடையவனாகி, இம்மந்திரியைப்போன்ற மதியூகிகள் கிடையார் என நிச்சயித்து, அவனை முன்பு இகழ்ந்துரைத்ததற்காகத் தன்னைத் தானே நிந்தித்துக்கொண்டு, "நீ இனி ஒருகாலத்தும் என்னை விட்டு நீங்காமலிருக்கவேண்டும்." எனப் பிரார்த்தித்துக்கொண்டான். அம்மந்திரியும் அதற்கிணங்கி அவனை விட்டு நீங்காமலிருந்தான்.

கடவுள் துணை:


# விநோத விசித்திரப் பத்திரிகை.

1900-ம் ௵

புஸ்தகம் 1] அக்டோபர் ௴ 1௳ திங்கட்கிழமை. [No.10.


## ஞானம்.

இதுகாறும் யாம்கூறிவந்த முகாந்தரங்கள் யாவும், சர்வசிருஷ்டிகளுக்கும் கர்த்தாவாகிய சர்வவல்லபனென்னும் கடவுளொருவருண்டென்பதை நிச்சயமாக ஒருவாறு விளக்கிக்காட்டின. இனி அச்சர்வவல்லபதயாநிதியின் சந்நிதானத்தைச்சார்வதற்கேற்ற சகலமார்க்கங்களையும் சவிஸ்தாரமாகச் சாற்றுகின்றோம். இவ்வித நன்மார்க்கமொன்றையே ஞானமார்க்கமென்று நல்லோர்பலரும் நவிற்றுதலால், இதனைவிவரிக்கும் இவ்விஷயத்திற்கு ஞானமென மகுடஞ்சூட்டி எழுதத்தொடங்கினன். இம்மார்க்கமுணர்ந்த அறிவிற்குப் பேரறிவென்றும், இதனாலனுபவிக்கப்படும் இன்பத்திற்குப் பேரின்பமென்றும், அவ்வின்பப் பெருக்காகிய ஆனந்தத்திற்குப் பேரானந்தமென்றும் அறிஞர்கள் யாவருமறைகின்றார்கள். இவ்வறிவிற்கும் இவ்வின்பத்திற்கும் இவ்வின்பப்பெருக்கிற்கும் ஏன் அவ்வாறு பெயர்களிட்டார்களெனின், இவைக்குமேற்பட்டது வேறில்லாமையாலென்க. அவ்வாறான பேரின்பமடைந்தவர்களே பெரியோர்களென எம்மதத்தினரும் எவ்வருணத்தினரும் எவ்வாச்சிரமத்தினரும் சம்மதித்திருக்கின்றார்கள். இவ்வறிஞர்களாகிய பெரியோர்கள், உலகத்தில் நம்போன்றவர்களால் மதிப்புடன் அனுபவிக்கப்படும் இன்பங்களனைத்தையும் சிற்றின்பமெனவிகழ்ந்து வெறுக்கின்றார்கள். ஏனெனில், தாங்களனு

பவிக்கும்பேரின்பத்தை நோக்குகையில், அவ்வின்பத்திற்குமுன் இச்சிற்றின்பமானது, கற்கண்டினாற்செய்து பன்னீர்கலந்து அதிமாதுரியமாயுள்ள இலட்டுகம் முதலிய மிட்டாய் தினிசுகளுக்குமுன் பனவெல்லத்தினாற்செய்துருட்டிய பட்சணத்தைப்போலவும், விலையுயர்ந்த வைரக்கடுக்கனுக்குமுன் படிகக்கற்கடுக்கனைப்போலவும், பதினாயிரம்ரூபாய் விலைபெற்ற பட்டுச்சரிகைச்சேலைக்குமுன் பத்துரூபாய்விலைபெற்ற பருத்திநூற்சேலையைப்போலவும் வெள்ளிடைமலையாகவிளங்கலாலென்க. தீ நீர் காற்றென்னும் மூன்றினாலும் அதிசுலபத்தில் அழிக்கமுடியாத மாளிகையில்வசிக்கும் கனதனவான்கள் கூரையினால்வேய்ந்தகுடிசையை ஓர் பொருளாகமதிப்பார்களா? அதுபோல், பேறு இழவு இன்பம் பிணி மூப்பு சாக்காடு என்னும் இவ்வறுவகைத் துன்பமும் அணுகப்பெறாத பேரின்பசுகத்தைப்பெற்றபெரியோர்கள், மேற்கூறியஆறுக்கும் இலக்காகநிற்கும் இச்சிற்றின்பதுக்கத்தைக் கனவினும் ஓர்திரணத்திற் கொப்பாகவேனும் மதிப்பார்களா? மதியார் மதியார்! அத்தகைய பேரின்பத்தை அவர்கள்போல் நாமும் அடையவேண்டுமென்று அந்தக்கரண அவாவோடு அவரவர்களும் தங்கள்தங்கட்கியன்றவரையில் இடைவிடாமுயற்சியுடனிருக்கவேண்டியது முக்கியகடமையென்பதிற்றடையுண்டோ? ஆதலால், அவ்வாறடைதற்கேற்ற வழிவகைகளை முறைமையுடன் இங்ஙனம் எழுதத்தொடங்குவதால், இவைகளை மிக்க ஆழ்ந்தகருத்துடன் ஆராய்ச்சிசெய்யவேண்டுவதோடு அவற்றை அனுஷ்டானத்திற்கொண்டுவர முயலவும்வேண்டும். இப்பேரின்பசுகத்தை அடையத்தக்கமார்க்கங்கள் பற்பலவாகவும், ஒவ்வொன்றும் மஹாதுரபாரமானதாயுமிருக்கின்றதென்பது சர்வமதசம்மதம். இவ்வாறான அரும்பெரும்விஷயத்தை இச்சிறுபத்திரிகைவாயிலாயெழுதப்புகுந்தது, உலகத்துள்ளபெரியமலைகளெவைக்குள்ளும் பெரிதாகிய இமயமலையை ஓர்சிறுகடுகுக்குள் நுழைக்கத்தொடங்கியதுபோலவும், இவ்விஷயத்திற்கும் எனக்குமுள்ள தாரதன்மியத்தை யோசியாமல் யான் இதனையெழுதத்துணிந்தது, மெலிந்துநொந்த ஓர் சிற்றெறும்பு அகண்டசமுத்திரத்தை நீந்தி அக்கரைசெல்ல நிச்சயித்ததுபோலவும், இவ்வுலகத்துள்ள அறிவிற்சிறந்த அறிஞர்களுக்குமுன் இவ்விஷயத்தைக்கூற யானெழுந்தது, ஓர் குழந்தை தன்பெற்றோர்களிடத்தில் மதலைச்சொற்களாற் பேசத்தொடங்கியதுபோலவுமிருக்குமென்பதிற் சந்தேகமில்லை. ஆயினும், இவ்வரும்பெரும் விஷயத்தில் அனேகநாளாய் எனக்குள்ள ஆசையினாலும் அன்பினாலும் இதை இப்பத்திரிகையில் எழுதத்துணிந்தேன். இதில் ஏதேனும் தவறுகள் நேரிடின்,



குழந்தைகளின் மதலைச்சொற்களில் நேர்ந்ததவறுகளைப் பெற்றோர்கள் குற்றமாகக்கொள்ளாது திருத்தி இதோபதேசஞ் செய்வதுபோல், கனந்தங்கிய அறிஞர்கள் அத்தவறுகளைக் குற்றமாகக் கொள்ளாமல் என்னுடைய பிழைகளைத் திருத்துதல் செய்வார்களென் றெதிர்பார்க்கின்றேன்.

விஷயங்கள் எழுதிவரும்போது நேரிடக்கூடியதவறுகளை அறிவாளிகள் நமக்கெடுத்துக்காட்டினால், அவைகள் சரியாயிருக்கும் பட்சத்தில் அடுத்தபத்திரிகையில் அதைத்திருத்திக்கொள்வோம். அவர்கள்கூறும் திருத்தம்பிசகாயிருக்கின் அதற்குத்தக்க சமாதானத்தைவிரித்துக்கூறுவோம். அல்லாமலும், இவ்விஷயம் ஆஸ்திகமார்க்கங்களெவற்றிற்கும் பொதுவாயெழுதப்பட்டுவருகிறதென்பதையும் கனவான்கள் கவனிக்கவேண்டும். (இன்னும்வரும்.)

## வைத்தியம்.

122-ம்-பக்கத்தொடர்ச்சி.

### தசைகள்.

பொருத்துக்கள் அசைக்கப்படும்போது தசைகள்சுருங்குவதும் நீளுவதுமாகிய விதத்தை இதனடியிற்காண்க

நெற்றியின் பேசிகள் சுருங்கக் கண்புருவங்கள் உயரும்.

கண்களைச்சுற்றியிருக்கும் பேசிகள் சுருங்குவதனாற் கண்கள் மூடப்படும்.

மூக்கடியிலுள்ள பேசிகள் இழுப்பதனாலே மேலுதடு உயருகின்றது.

வாயைச்சுற்றியிருக்கும் பேசி சுருங்குவதனாலே அது குவிந்து சுருங்குகின்றது.

முகத்தின்கீழ்ப்பகுதியிலுள்ள பேசிகள் சுருங்குவதனாற் கீழுதடுகள் தாழும்.

கழுத்தின் முற்பக்கத்திலுள்ள பேசிகள்சுருங்குவதனால் வணங்கும்பாவனையாகத் தலை முன்னுக்குச் சாய்கின்றது.

கழுத்தின் பிற்பக்கத்திலுள்ள பேசிகள் சுருங்குவதனால் அண்ணாக்கும்பாவனையாய்த் தலைநிமிரும்.

முண்டத்தின் முற்பக்கத்துக் கீழ்ப்பகுதியிலுள்ள பேசிகள் சுருங்குவதனாலே சரீரம் முன்னுக்குவளைந்து பழுக்களும்இறங்கும்.



8-வது படம்



9-வது படம்.

இப்படங்களில் மானிடதேசத்தில் முன்பக்கம் பின்பக்கமாக இரண்டு பக்கங்களிலுமுள்ள பேசிகளைக் காண்பிக்கப் பட்டிருக்கின்றது.

---

முண்டத்தின் பிற்பக்கத்துக் கீழ்ப்பகுதியிலுள்ள பேசிகள் சுருங்குவதனாலே முள்ளந்தண்டு நிமிருகின்றது.

நெஞ்சிலுள்ள பேசிகள் சுருங்குவதனாலே தோள்கள் முன்னுக்கு வளைக்கப்படுகின்றன.

முதுகின் மேற்பகுதியிலுள்ள பேசிகள் சுருங்குவதனாலே தோள்கள் பின்னுக்கேகுகின்றன.

தோளிலிருக்கும் ஒரு பேசியினாலே புயம் உயர்த்தப்படும்.

மார்பிலும் முதுகிலுமிருக்கும் இரண்டு பேசிகளினாலே புயம் பழையபடி வாங்கப்படும்.



புயத்தின் முன்பக்கத்திலிருக்கும் பேசிகள் சுருங்குவதனால் முழங்கை முடங்கும்.

புயத்தின் பின்பக்கத்திலிருக்கும் ஒருபேசி சுருங்குவதனால் முழங்கை நிமிரும்.

கைக்குளசும் விரல்களும் முன்கையின் முற்பக்கத்துள்ள பேசிகளால் முடப்படும்.

முன்கையின் பிற்பக்கத்துள்ள பேசிகளால் கைகளும் விரல்களும் நீளும்.

குந்தியிருக்கத்தக்கதாகத் தொடையை முடக்கும் பேசிகள் தொடையின் முற்பக்கத்திலும் முண்டத்தின் முற்பக்கத்துக் கீழ்ப்பகுதியிலும் இருக்கின்றன.

முண்டத்தின் கீழ்ப்பகுதியிலும் தொடையின் மேற்பகுதியிலும் பிற்பக்கத்திலும் பேசிகள் சுருங்குவதனால் தொடைநீளும்.

தொடையின் முற்பக்கத்திலுள்ளபேசிகள் முழங்காலை நீட்டும்.

தொடையின் பிற்பக்கத்திலுள்ளபேசிகள் முழங்காலைமுடக்கும்.

முழங்காலுக்குக் கீழாக முற்பக்கத்துள்ளபேசிகள் காற்குளசிலே பாதத்தைவளைத்து விரல்களை நீட்டும்.

முழங்காலுக்குக்கீழாகப் பின்பக்கத்துள்ளபேசிகள் காற்குளசிலே பாதத்தை நீட்டி விரல்களைவளைக்கின்றன.

சரீரத்திலுள்ளபேசிகளின் இடமும்தொழிலும்தெளிவாய் அறியவேண்டுமானால், கை கால்களை ஆட்டி அந்தந்தப்பேசியைக் கையினாலே அழுத்திப்பார்க்கவும். பேசிமிகுதியாய் இயங்குவதனால் அதற்குச்செல்லும் இரத்தம்அதிகப்பட்டு அதன்நிறம் மிக்ககருமையடையும். உதாரணமாக:—கோழியானது பறக்கிறது அருமை, ஓடுவதோ அதிகம். இதனால் அதன்நெஞ்சிலுள்ள பேசி வெள்ளையும் காலிலுள்ள பேசி கறுப்புமாம். மிகுதியாகப்பறக்கும் பட்சிகளிலும் நீந்தும் தாராமுதலிய பிராணிகளினுடைய நெஞ்சுபேசி காற்பேசி ஆகிய இரண்டும் கருநிறமாயிருக்கும். (இன்னும் வரும்.)

## 125. வாந்திபேதி.

இது மிக்க குரூரமுள்ள கொள்ளைநோய்களில் ஒன்று. உலகத்தின் பலபாகங்களிற் சிலசில காலங்களிலேதோன்றி வருஷாவருஷம் ஆயிரக்கணக்கான ஜனங்களைக் கொள்ளைகொண்டுபோகின்றது; இச்சென்னைநகரிலும் இதைச்சார்ந்த சிலஜில்லாக்களிலும் இன்னும் இவ்

விந்து தேசத்தின் பலபகுதிகளிலும் இந்தப்பயங்கரமானவியாதி இப்போது நடமாடிவருகின்றமையால், இந்தவியாதியைப்பற்றி முக்கியமாய் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளவேண்டிய சிகிச்சைகளை இப்போதே எழுதுவது அவசியமானபடியால் அதைப்பற்றி அடியில் விவரிக்கிறோம்.

இந்தக்கொடியரோகத்திற்குச் சாதாரணமாய் வாந்திபேதியென்றும் விஷபேதியென்றும் ஊழிக்காற்றென்றும் சொல்லப்படுகின்றது. இது நமதுதேசத்தில்முதல்முதல் 1817-ம் வருஷத்தில்தான்தோன்றியது. இதுகாலவித்தியாசத்தினாலும்சீதோஷ்ணம்மாறுதலாலும் துர்நாற்றமுள்ளகாற்றினாலும் உண்டாகிறதென்றுபண்டிதர்கள் பலவிதமான அபிப்பிராயங்கொள்ளுகின்றார்கள். ஆயினும், அதனுடையசரியான காரணத்தை ஒருவரும் இதுவரையிற் கண்டுபிடிக்கவில்லை. ஆனால், அதிகநெருக்கமாயுள்ள இடங்களிலும் சுசியில்லாத இடங்களிலும் மற்ற இடங்களை விட விசேடமாய்ப்பரவுதலால், ஓர் விதமான விஷக்காற்று உண்டாகி இரத்தத்திற்கலந்து அதைமுறித்து நீராக்கிப் பலவிதமான பேதிகளையுண்டாக்குகிறதென்று யாவரும் ஒப்புக்கொள்வார்கள்.

அந்தவிஷக்காற்று சருமத்தின் வழியாகவோ அல்லது சுவாசப்பையின் வழியாகவோ அல்லது குடலின்வழியாகவோ இரத்தத்திற் செல்லுகிறதென்று சொல்லமுடியாது. ஆகிலும் சுவாசத்தாற்செல்லுகிறதென்று ஊகிக்கஇடமுண்டு. இன்னும் ஷை வியாதி ஒரு ஊரில் அதிக மும்முரமாய்ப் பிரவேசித்திருக்குங்காலத்தில், ஜனங்களுக்குப் பயத்தாலும் திகிலாலும் பேதிகாண்பதுமுண்டு.

இந்தவியாதி வேட்டையாடும்போது ஜனங்களை அதன்வலையிற் சிக்கவைப்பதற்குப் பல முகாந்தரங்களுமுண்டு. அவையாவன:— கெட்டுப்போன மச்சங்கள் - மாம்சங்கள் - அழுகிப்போன காய்கறிகள் - பழுக்காதகனிவகைகள் ஆகிய இவைகளைப் புசிப்பது அசுத்த ஜலபானம், சாக்கடை நாற்றம் - கெட்டவஸ்துக்கள் விற்பது - குப்பை முதலிய துர்க்கந்தம் - மதுபானம் - அசுத்தி - கெட்ட ஈரக்காற்று - தேகபலத்தைக்குறைத்து அதிக ஆயாசத்தைவிளைவிக்கின்ற வேலைகள் - சரியானநேரத்திற் போஜனம் அருந்தாமலிருத்தல் முதலியவைகளே. இவற்றால் ஷை வியாதிக்கு இரையாய்விடுகின்றார்கள். ஆகையால், ஷை வாந்திபேதி வியாபித்திருக்கின்ற நாட்களில், நல்லகாற்றுள்ளவீட்டில் குடியிருக்கவேண்டும். அது ஈரமில்லாமல் உலர்ந்தஇட



மாகவும் மேடான இடமாகவுமிருக்கவேண்டும். அக்காலத்திற் பேதிக்குச் சாப்பிடக்கூடாது. இராக்காலங்களில் வெளியேதிரியலாகாது. இம்முறைகளையெல்லாம் அதிககவனமாய் அனுசரிக்கவேண்டும்.

(இன்னும்வரும்.)

## மூலிகைச் சூட்சம்.

சாதாரணமாய் ஜனங்களுக்குத்தெரிந்திருக்கிற அனேகமூலிகைகளிற் பலவிதகுணங்களும் அபூர்வமான சூட்சுமங்களுமிருக்கிறபடியால், அவைகளை எவர்களும் தெரிந்திருக்கவேண்டியது அவசியம். அவ்வாறு தெரிந்துகொண்டு அவைகளைக்கவனத்தில் வைத்திருந்தால், தக்கசமயங்களிற் பெருத்த உதவியாயிருக்குமென்பதிற் சந்தேகமில்லை. நாம் அப்போதைக்கப்போது இப்பத்திரிகையின் மூலமாய் மூலிகைகளின் அனேகசூட்சுமங்களைத் தெரிவித்துக்கொண்டுவருவோமாகையால், நம்நேயர்கள் அவைகளைக் கவனித்து அவற்றின்பயனையடைவார்களாக.

### 126. பாக்குமரம்.

இதற்குக் கமுகு என்றும்பெயர். இது சாதாரணமாய் இந்தியாவின் பலபாகங்களிலும் அகப்படக்கூடியவிருட்சம். இதன் சோலையிலுட்கார்ந்துஅவற்றின் நிழலும்காற்றும் தேகத்திற்படும்படிசெய்தால், இராஜகருவிகளுக்குப்பலத்தைக்கொடுத்துத் தேகாரோக்கியமுண்டாக்கி உஷ்ணத்தைத்தணிக்கும்; அதன்பட்டையிற்சாதம்சாப்பிட்டால், முகவசீகரம் தேககாந்தி ஜீரணசக்தி என்னும் இவைகளையுண்டாக்கி வாதபித்தபாதைகளை நீக்கும். பட்சவாதத்தினாற் கைகால் சோர்ந்துபோவதற்குஷை பட்டையைச்சிதைத்துவைத்துக்கட்டினால் அனுகூலமுண்டு. பாக்கை வெற்றிலையுடன் சேர்த்துச்சாப்பிடும்போது அதன் குணமாவன:—உஷ்ணிக்கும்பித்தத்தையும்வாதத்தையும்உற்பத்தியாக்கிமலத்தையிளக்கும்- கபம்-சுவாசகாசம்-ஜுரம்- கிருமிரோகம்-வாய்நாற்றம்என்னும்இவைகளைநீக்கும். இருதயத்திற்குப்பலத்தைக்கொடுக்கும், நீரைவறட்டும்,பல்லுக்குப்பலத்தைக்கொடுக்கும், தேகத்திலுள்ள துர்நீரையகற்றும், வயிற்றிலுள்ளவாயு சிரத்திற்கேறவொட்டாது, நரம்புகளுக்குவலுவைக்கொடுக்கும், ஜலதோஷத்தைநீக்கும். பாக்கை மாத்திரம் தனியாகச்சாப்பிட்டால் இரத்தத்தைமுறிக்கும், பாண்டுரோகத்தையும்வீரியநஷ்டத்தையும் உண்டாக்கும், வயிற்றில்வாயுவை அதிகப்படுத்திக் குடலுக்குப் பலவீனமுண்டாக்கிவிடும்.

வெற்றிலைபாக்கைத்தின்றதனால் மேற்கூறியவாறு தூர்க்குணங்களுண்டாயின், அதற்குமுறிவு எப்படியென்றால்:—கத்தீரா என்னும் வாலுழுவைமப்பிசின் - கடல்நுரை-புங்கங்கொட்டைரசம் - பேய்த்தும்மட்டிவேரின்ரசம்-என்னும் இவைகளில் ஏதேனும் ஒன்றை, வேளைக்கு அரைவராகனெடைவீதமெடுத்துப் பிரதிதினம் மூன்றுவேளையாக மூன்றுநாளைக்குக்கொடுக்க முறிந்துபோம். பாக்குத்தின்றதனாற்சோபம் மயக்கமகண்டால், தன் அக்குளையேனும் கருங்கல் மண் என்னும் இவைகளில் ஜலத்தைத்தெளித்தேனும் முகரவேண்டும். ஜலத்தை முகத்தில்தெளித்துக்கொள்ளவேண்டும். முகத்திற்காற்றுப்படும்படி ஈரத்துணியால் வீசவேண்டும். புளி சர்க்கரை என்னும் இவற்றைத் தனித்தனியாகவேனும், தேனும் சர்க்கரையும் கலந்தேனும் அரைவராகனெடையளவாக உள்ளுக்குக்கொடுக்கவேண்டும். இவ்வாறுசெய்தால்அச்சோபமும் மயக்கமும் நிவாரணமாகும்.பாக்குச்சுட்டகரியினாற் சதா பல்துலக்கிவந்தால்பல்வலியுண்டாகாததுடன் பற்களும்கெட்டிப்படும், பல்லில் முத்தைப்போன்ற பிரகாசமுண்டாகும், வாய் நாற்றமுண்டாகாது.

## Photography.

## 127. பொட்டோகிராப்படம் பிடிக்கும்முறை.

141-ம் பக்கத் தொடர்ச்சி.

பொட்டோகிராப் படம்பிடிப்பதற்குப் பலவிதமான காமராக்களும் பலவிதமானமருந்துகளும் பலவிதமான முறைகளுமிருக்கின்றன. நமதுநேயர்களுக்கு இதனுடைய முக்கியதாற்பரியத்தைத் தெரிவிப்பதற்காக, ஒருவிதமானகாமராவையும் சகாயமான மருந்தையும் சுலபமான முறையையும் இதில்நாம் எழுதிவருகின்றோம். சென்றபத்திரிகையில் நெகெட்டிவ்ப்ளேட்செய்யும் பாகத்தைத்தெரிவித்தோம். இனி இந்த நெகெட்டிவ்ப்ளேட்டிலிருக்கும படத்தைக் கடிதாசியிலெடுக்கும் முறையைத்தெரிவிப்போம். இதற்கு(Positive)பாசிட்டிவ் என்றுபெயர்.

Sensitised Albumenised paper ஸென்ஸிடைஸ்ட் ஆல்பியூமனைஸ்ட் பேப்பர் என்னும் கடிதாசி ஷாப்புகளில் கிரயத்திற்குவாங்கலாம்.இந்தக்கடிதாசியைவாங்கி நெகெட்டிவ் கண்ணாடியின் அளவாகக் கத்தரித்துக்கொள்ளவேண்டும்.(Printing frame)ப்ரின்டிங் ப்ரேம் என்னும்மரத்தினாற்செய்யப்பட்ட ஒருவகைச்சட்டமுண்டு.அதன் ஒருபக்கத்தில்சாதாரண வெள்ளைக்கண்ணாடியும் மறுபக்கத்தில் ஒருபலகைமூடியுமிருக்



கும் அந்தமூடியை அழுத்திப்பிடித்துக்கொள்வதற்காகSpring என்னும் ஓர்ருவில் அதற்குமேற்பொருத்தியிருக்கும்.இவ்வாறுள்ள ப்ரின்டிங் ப்ரேமை மேஜையில்வைத்து அதிலுள்ள கண்ணாடிக்குமேல் நெகெட்டிவ் ப்ளேட்டைப் படமுள்ளபக்கம் மேலேயிருக்கும்படியாகவைத்து;அதற்குமேல் கத்தரித்துவைத்திருக்கிற ஸென்ஸிடைஸ்ட் பேப்பரை, அதில்மருந்துதடவியிருக்கும்பக்கம் படத்திற்பொருந்தும்படி வைத்து, அதற்குமேல்அது பிகுவாயிருக்கும்படியாகக் கொஞ்சம் கடிதாசிகளைப்பரப்பி, அதன்மேல் மரமூடியினால்மூடிச் செவ்வனே அழுத்திக்கொள்ளும்படி ஸ்ப்ரிங்கினாற் பிகுவாய் முடுக்கிவைத்து, பிறகு அந்த ப்ரின்டிங் ப்ரேமை மல்லாத்தி, வெய்யில் அதிலுள்ள வெள்ளைக்கண்ணாடியிற் படும்படி வைக்கவேண்டும். வெய்யிலில்லாவிடில் நிழலிலும் வைக்கலாம். வெய்யிலில்வைத்தால் கடிதாசியிற் சீக்கிரம் படம் இறங்கிப்போம். ஆனால், வெகுநேரம் வெய்யிலிலிருந்தால் படம்கெட்டுப்போம். நிழலில்வைத்தாற் படமிறங்கச்சற்றுநேரஞ்செல்லும். ஆகையால், படத்தை அடிக்கடி எடுத்துப்பார்த்துக்கொண்டேயிருக்கவேண்டும். எவ்வளவுநேரம் வெய்யிலில் அல்லது நிழலில்வைக்கவேண்டுமென்பது அனுபோகத்தில் தெரிந்துவிடும். படம் ஷை ஸென்ஸிடைஸ்ட்பேப்பரில் செவ்வனேவிழுந்தபிறகு அதைஎடுத்துக்கொள்ளவும். இப்போது படம் சிவப்புநிறமாகத்தோன்றும். இதைக் கறுப்புநிறமாக மாற்றவேண்டியவிவரத்தை இனித் தெரிவிப்போம். இத்தொழிலுக்கு (Toning) டோனிங் என்றுபெயர். இந்த(Positive)பாசிட்டிவ்படத்தை வெளிச்சம்படாமல் இருட்டிலேயே வைத்திருக்கவேண்டும், வெளிச்சம் அதிகமாய்ப்பட்டால் எல்லாம் சிவப்பாய்விடும். ஆகையால், ப்ரின்டிங் ப்ரேமிலிருந்து படத்தை எடுத்தவுடனே ஓர் இருட்டறையிற்போய் அந்தஇருட்டறையின்ஜன்னலுக்கு மஞ்சள் அல்லது சிவப்புநிறமுள்ள துணியைக்கட்டிக்கொண்டு, அந்தவெளிச்சத்தில் இதனடியிற்கூறியவாறு வேலைசெய்யவும். அந்த அறைக்குள்ளே ஒருதொட்டியில் ஜலம்வார்த்து, அந்தஜலத்தில் 15 நிமிஷம்வரையில் படத்தைப்போட்டுவைத்து எடுத்துக்கொள்ளவும். இவ்விடத்தில் இரண்டுபீங்கான் டிஷ் தயார்ப்படுத்திவைத்துக்கொள்ளவேண்டும்.அவ்விரண்டில்ஒன்றுக்கு டோனிங் டிஷ் என்றும், மற்றொன்றுக்கு Fixing பிக்ஸிங் டிஷ் என்றும் பெயர். இவ்விரண்டிலும் டோனிங் சொலூஷன் பிக்ஸிங் சொலூஷன் என்னும் இரண்டுவித மருந்துகளைத்தயார்செய்துவைத்துக்கொள்ளவேண்டும். டோனிங் சொலூஷன்செய்கிறமுறை எப்படியென்றால்:—.

Acetate of Soda ஆஸிடேட்ஆவ் ஸோடா கிரெயின்ஸ் 20
Distilled water சுத்தஜலம் அவுன்ஸ் .. 8
* Gold Solution கோல்ட்சொலூஷன் திராம் 1

ஆகிய இம்மூன்று சாமான்களையும் இரண்டுதினங்கட்கு முன்பாகவே கலந்து கல்கார்க்குப்புட்டியிலடைத்துஇருட்டறையில்வைத்துக்கொள்ளவும். இதற்குத்தான் டோனிங் சொலூஷன் என்றுபெயர். இதை டோனிங் டிஷ்ஷிற்போட்டுத் தொட்டியிலிருந்தெடுத்த கடிதாசிப்படத்தை, படம்அடிப்பக்கமாகவிருக்கும்படி அந்தடிஷ்ஷிலுள்ள சொலூஷனிற்போட்டுப் படத்திலுள்ள சிவப்புநிறம்மாறிக்கறுப்புநிறம் உண்டாகிறவரையில் அதைஅலசிக்கொண்டேயிருக்கவேண்டும். கறுப்புநிறம் சரியாகவாராவிட்டால் கோல்ட்சொலூஷனில் இன்னும்ஒருதுளிவிட்டுக்கொள்ளலாம். இந்த டோனிங்சொலூஷனில் எத்தனைபடம்வேண்டுமானாலும் போட்டுக்கழுவலாம். ஆனால், படத்திற்குத்தக்கவிதமாகக்கொஞ்சம் கொஞ்சமாய்க் கோல்ட் சொலூஷனைக் கலந்துகொண்டேவரவேண்டும். வேலைசெய்தபிறகு இந்தடோனிங்சொலூஷனை மறுபடியும் கல்கார்க்புட்டியிலடைத்துக்கொண்டால் பின்னால் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். படத்திற்குக்கறுப்புநிறம்வந்தபிறகு தொட்டியில்ஜலம்விட்டு அதிற்போட்டுக்கால்மணிநேரம் கழிந்தபிறகு, அந்தஜலத்தைஊற்றிவிட்டுப் புதியஜலம்வார்த்து அதிற்படத்தைப்போடவேண்டும். இவ்வாறு மூன்றுமுறை ஜலத்தைமாற்றிப் படத்தை எடுத்துக்கொள்ளவும். இப்போது படத்தின்நிறம் கறுப்பாய்விட்டபோதினும் வெளிச்சம்பட்டால் முழுவதுமேகறுப்பாகிக் கெட்டுப்போம். அப்படிகெட்டுப்போகாவண்ணம், இப்போதிருக்கும் நிறத்தைஸ்திரப்படுத்துவதற்காக பிக்ஸிங்சொலூஷனில் அடியிற்கூறிய முறைப்படிபோட்டெடுக்கவும், இப்போது டோனிங் டிஷ்ஷை எடுத்துத்தூரத்தில் வைத்துவிட்டு பிக்ஸிங் டிஷ்ஷை எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த டிஷ் டோனிங் டிஷ்ஷைவிடக் கொஞ்சம் ஆழமாயிருக்கவேண்டும். பிக்ஸிங் சொலூஷன் செய்யும்முறை எப்படியென்றால்:—

* Gold Solution கோல்ட் சொலூஷன் செய்யும் முறை எப்படியென்றால்:—இரண்டு அவுன்ஸ்புட்டியில் 15 திராம் டிஸ்டில்ட் வாடர்விட்டு ஷாப்புகளில்விற்கப்பட்ட Tube of Gold ட்யூப் ஆவ் கோல்ட் என்னும்மருந்தை வாங்கித்தெறித்துப் போகாமற்பக்குவமாயுடைத்து, உடைந்த சீஷாத்துண்டுகளுடன் மருந்தை டிஸ்டில்ட்வாடரிருக்கிற புட்டியிற்போட்டுவிடவும். அதிலுள்ள மருந்துகரைந்தபின் சீஷாத்துண்டுகளைப்பக்குவமாய் நீக்கிவிடவும். இதுதான் கோல்ட் சொலூஷன்.



Hyposulphite of Soda ஹைபோஸல்பைட்ஆவ்சோடா பவுண்ட் ½
வெந்நீர் அவுன்ஸ் 24
Bicarbonate of Soda பைகார்பனேட் ஆவ்சோடா அவுன்ஸ் ¼

ஆகிய இம்மூன்றையும் ஒன்றாய்க்கலந்து பிக்ஸிங் டிஷ்ஷிற்போட்டுத்தொட்டியிலிருந்து கழுவியெடுத்திருக்கும் படத்தை, படம் அடிப்பக்கமாகவிருக்கும்படி அந்தடிஷ்ஷிற்போட்டு, 15-நிமிஷத்திற்குப்பிறகெடுத்து, முன்கழுவியதுபோலத்தொட்டியில் தண்ணீர்வார்த்து அடிக்கடி ஜலத்தை மாற்றிக்கொண்டேயிருக்கவும். ஒன்றுக்குமேற்பட்ட படங்களிருந்தால் பிக்ஸ்பண்ணும்போது ஷை பிக்ஸிங் டிஷ்ஷில் படங்களை ஒன்றின்மேலொன்றாகப்போட்டுக் கொஞ்சநேரம் சென்றபிறகு, அடியிலிருக்கிறபடத்தை மேலேஎடுத்துவிடவும். சற்றுநேரத்திற்குப்பிறகுஅடியிலிருக்கிற வேறொருபடத்தைமேலேஎடுத்துவிடவும். இவ்வாறுஎல்லாப்படங்களையும் மாற்றிக்கொண்டேவந்து தொட்டியிலெடுத்துப்போடவும், இவ்விதமாக எவ்வளவு அதிகமாய்க் கழுவுகின்றோமோ அவ்வளவுக்கு அதிகநாள்வரையிற் படம் நன்றாயிருக்கும். தொட்டியிற்படத்தைப்போட்டுத் தண்ணீர்க்குழாயைத் திறந்துவிடுவதுநலம். இவ்வாறே ஒருநாள் முழுவதும் வைத்துப் படத்தை எடுத்து ப்ளாட்டிங்பேப்பரில் அழுத்தி ஜலத்தை எடுத்துவிட்டு வெய்யிலில்வைத்து உலர்ந்தபின் பசைதடவி அட்டையில் ஒட்டிக்கொள்ளவும். (இன்னும்வரும்.)

## 128. இரும்புஅல்லது எஃகினாற்செய்த கத்திமுதலிய எந்தஆயுதங்களிலேனும் பெயர்போட.

பொட்டிலுப்பு நவச்சாரம் மயில்துத்தம் என்னும்இம்மூன்றையும் சமனெடையாக எடுத்துக்கொஞ்சம் ஜலம்வார்த்துச் செவ்வனேயரைத்து மொத்தையாக்கி வைத்துக்கொள்ளவும். தேன்மெழுக்கையுருக்கிப் பேனாவையும் சூடாக்கிக்கொண்டு, அந்தப்பேனாவில் உருகியிருக்கிற மெழுக்கைநனைத்து, மேற்கூறிய எவ்வகை ஆயுதங்களிலேனும்நமக்குப் பிரியமான எழுத்தை எழுதி, மேலேகூறியுள்ள மருந்துக்கலவைமொத்தையை அந்த எழுத்துக்குமேலே கத்தியினாற்பூசி 15-நிமிஷம் வெய்யிலில்வைக்கவும். மேலேபூசியிருக்கும் கலவை காய்ந்துபோனால், கொஞ்சம் எலுமிச்சம்பழரசம் மேலேதெளிக்கவும். பிறகெடுத்து மேலே பூசியிருப்பவைகளைநீக்கிப் பார்த்தால், மெழுக்கினால்எழுதப்பட்டஇடம் நீங்க மற்றஇடம் கரைந்துபோயிருக்குமாகையால் நாம்எழுதிய எழுத்து செவ்வனே தோற்றும்.

### 129. பட்டுவஸ்திரங்களிற் கறைபிடித்தால்.

Essence of Lemon எஸ்ஸென்ஸ் ஆவ் லெமன் அவுன்ஸ் 2. கற்பூரத்தைலம் அவுன்ஸ் 1. ஆகிய இவ்விரண்டையும் கலந்து புட்டியிலடைத்துவைத்துக்கொண்டு, பட்டுவஸ்திரங்களில் எவ்விதமானகறைகள்பட்டபோதினும், கந்தைத்துணியை மேற்படி தைலத்தில் நனைத்துக் கறைபட்டவிடத்திற் செவ்வனேதேய்த்துச் சோப்புபோட்டுக் கழுவிவிடவேண்டும்.

### 130. வெள்ளி அல்லது பொன் சரிகையைத்துலக்க.

கடையில்விற்கின்ற கோதுமைப்பழையரொட்டியைச் சிறுதுண்டுகளாயறுத்து ஒருபாத்திரத்திற்போட்டுக் கொஞ்சம் நீலப்பவுடரை அதனுடன்கலந்து, கொஞ்சம்தண்ணீர்விட்டு இரண்டையும் செவ்வனேபிசைந்து சரிகைக்குத்தடவிவிடவேண்டும். கொஞ்சம் உலர்ந்தபின் ஒருபிளானல் துண்டினாலும் பிரஷ்ஷினாலும் செவ்வனே அழுத்தித்தேய்த்து மேற்படி பசையைநீக்கிவிடவேண்டும். பிறகு மிருதுவான வெல்வெட்துண்டினால் மெல்லச் சரிகையைத்தேய்க்கவும். சரிகை கருப்புநிறம்மாறிப் புதிதாகத்தெரியும்.

### 131. உபயோகப்படுத்தாத புதியகத்திகளைத் துருப்பிடிக்காமல்வைக்க.

ஒருபெட்டி அல்லது பாத்திரத்திற் சுண்ணாம்புநீற்றைப்போட்டு, கத்தியின்பிடிமாத்திரம் மேலே இருக்கும்படியாகவும் மற்றபாகமெல்லாம் மேற்படி சுண்ணாம்பு நீற்றுக்குள்ளாக இருக்கும்படியாகவும் செருகிவைத்தால், எத்தனைவருஷம்வைத்திருந்தாலும் பளபளப்பாய்ப்புதிதாகவேயிருக்கும், கறுக்காது. ஆனால், பிடியில்மாத்திரம் சுண்ணாம்புநீறு படக்கூடாது, பட்டாற் பழுப்புநிறமாய்விடும்.

### 132. மரச்சாமான்களுக்குப்பூசும் வார்னிஷ்.

Sprits of wine ஸ்பிரிட்ஸ் ஆவ் ஒயின் புட்டி 1. அவலாக்குத்தூள் பலம் $2\frac{1}{2}$. Sandarach சாண்டர்ஸ் பலம் $\frac{1}{2}$. ரூமிமஸ்தகித்தூள் பலம் $\frac{1}{2}$. பறங்கிச்சாம்பிராணித்தூள்-பலம் $\frac{1}{2}$. ஆகிய இவைகளை ஒன்றாய்ச்சேர்த்துக் குலுக்கிக்கொள்ளவும். அவ்வாறுகுலுக்கினால்எல்லாச்சாமான்களும் கரைந்துபோம். அதன்பிறகு உபயோகிக்கலாம்.



### 133. வார்னிஷ் பூசும்விதம்.

மரச்சாமான்களுக்கு வார்னிஷ் பூசவேண்டியிருந்தால், முந்தி அச்சாமானை மணற்கடிதாசியினாற் செவ்வனேதேய்த்துத் தேன்மெழுக்கை ஒரு சட்டியிற்போட்டுருக்கி அடுப்பைவிட்டிறக்கி அது ஆறிவருந்தருணத்தில், கொஞ்சம் கற்பூரத்தைலம் அதில்விட்டு நன்றாய்க்கலந்துகொள்ளவேண்டும். (அதிகசூடாயிருக்கும்போது கற்பூரத்தைலத்தையூற்றினால் பற்றிக்கொள்ளும்.) அந்தமெழுக்கை ஒருதுணியில்வைத்து மரச்சாமானுக்குச் செவ்வையாய்த்தேய்த்து, பிறகு மணற்கடிதாசியினால் அந்தச்சாமானை நன்றாகத் தேய்த்துவிட்டு வார்னிஷைப் பிரஷ்ஷினாற்பூசவும்.

### 134. பச்சைமரம் பட்டுப்போகச்செய்ய.

மரத்தின் ஆணிவேரைத் தொளைத்து, அதில் ஒருபலம் பாதரசத்தைவிட்டுஅடைத்து மூடிவிடவும். அல்லதுகெந்தகம் பலம் ஒன்று வெள்ளைப்பாஷணம் பலம் ஒன்று ஆகக்கூடிய இவ்விரண்டையும் பொடிபண்ணி, மரத்தின் ஆணிவேரைத்தொளைத்து அதற்குள் இத்தூளைப்போட்டு அடைத்து மூடிவிடவேண்டும். இவ்வாறு செய்தால் அன்றுமுதல் ஒருமாதத்திற்குள் அந்தமரம்காய்ந்துபோகும்.

### 135. மரத்திற் பூச்சிவிழுந்திருந்தால்.

தாம்பரக்கம்பி ஒன்று துத்தநாகக்கம்பி ஒன்று ஆகியஇவ்விரண்டையும்சேர்த்து, மரத்தின் பெரியவேரொன்றிற் சுற்றிவிட்டால், எவ்வகைப்பூச்சியாயிருந்தாலும் 5 தினங்கட்குள்ளாக மாண்டுவிடும்.

### 136. புஷ்பங்களின்நிறத்தை மாற்ற.

சிவப்புநிறப்புஷ்பத்திற்குக்கெந்தகப்புகையைக் காட்டினால்வெண்ணிறமாய்விடும். பின் வெல்லத்தின்புகையைஅதற்கு காட்டினால் பழையசிவப்புநிறம்வந்துவிடும். குங்குமப்பூவைத்தண்ணீரிலரைத்து வெண்ணிறப்புஷ்பத்திற்குத் தெளித்தால் மஞ்சள்நிறமாய்விடும். அதையேசிவப்புநிறப்புஷ்பத்திற்குத்தெளித்தால்பொன்னிறமாய்விடும்.

### 137. கனிகளின் உருசியை அதிகரிக்கச்செய்ய.

முளைக்கவைப்பதற்காக வைத்திருக்கும் எந்தக்கனியின்விதையையேனும், ஒருநாள் கெட்டித்தேனில் ஊறவைத்து மறுநாள் பூமியில்நட்டு நல்லஜலம்வார்த்துவரவேண்டும். அந்தச்செடியின்கனி முன்னிருந்ததைவிட உருசியாயிருக்கும்.

## 138. தலைவெட்டும் ஜாலம்.



10-ம் படம்.



11-ம் படம்.

தலைவெட்டும் ஜாலமென்பது-கொலை செய்ததன்காரணமாக அரசனாற் சிரச்சேதம் என்னும் தண்டனையைப்பெற்ற குற்றவாளியைக்கொலையாளிகொலைக்களத்திற்கொண்டுபோய்க் கொன்றதாகவும் உயிர்ப்பித்ததாகவும் நாடகத்தின் முடிவில்காட்டுகிற ஓர் ஜாலம். அஃதெவ்வாறெனில் - குற்றவாளியைக் கொலைக்களத்திற்குக்கொண்டுபோனகொலையாளி, குற்றவாளியை இங்கும் 10 - ம் படத்திற் காட்டியிருக்கிறபடி அவ்விடத்துள்ள ஓர் மேசையின்மேற் குப்புறப்படுக்கவைத்து, அவன் தலையை ஓர்துணியினால் மூடிக் கையிற் கத்தியைப் பிடித்துக் கொண்டு, அங்குநிறைந்துள்ள ஜனங்களைநோக்கி ஏ! பிரஜைகளே! இதோ மேசையின்மேற் குப்புறப் படுத்துக் கொண்டிருக்கும், இம்மனிதன் கொலை புரிந்தகாரணத்தால் அரசன் ஆக்ஞைப்படி தன்னுயிரை இழக்கநேர்ந்தது. ஆதலால், இதை நீங்கள் ஒவ்வொருவரும் கவனித்துக் கொலை



என்பதைக் கனவிலும் நினையாவண்ணம் எச்சரிக்கையாயிருக்கவேண்டியது அவசியம். இவ்வுபதேசத்தைமீறிக் கொலைபுரிவீர்களாயின் நீங்களும் இக்கதியை அடையவேண்டுவதவசியம் எனக் கூறிக்கொண்டேவந்து, படுத்திருப்பவன்தலையைத் தன்கையிற்றாங்கிய கத்தியினலறுத்துக் கையிலே, தூக்கிக்கொண்டவுடனே தலையறுந்த முண்டத்தின் கையுங்காலும் உதைத்துக்கொள்கின்றது. சற்றுநேரம்வரையில் அத்தலையைத் தன்கையிலே வைத்துக்கொண்டுபரிதாபமானசில வார்த்தைகளைப்பேசியபின்பு, அதனை அதன் முண்டத்தின்பக்கத்திலேவைத்துத் துவாலையால் மூடிவிடுகின்றான். உடனே தலையைமூடியிருக்கும் துவாலையை எடுத்துவிட்டு வெறுமனே வைக்கின்றான். அதன்பின் இரண்டு நிமிஷங்கள்கழித்து, அந்தத்தலையின்வாயில் ஒருசுருட்டைவைத்துப் பற்றவைக்கின்றான். அவ்வாறு சற்றுநேரம்வரையில் வைத்துக்கொண்டிருந்தபிறகு, அத்தலை சுருட்டின்புகையைக்குடிக்கத்தொடங்குகின்றது. அப்போது மூக்கிலிருந்து புகையும் வருகின்றது. அன்றியும், முன் சிமிட்டாதகண்களையும் சிமிட்டி முழிகளையும் புரட்டுகின்றது. அப்போது கொலையாளி நான் மந்திரத்தினலே இத்தலையை இப்போதுஉயிர்ப்பித்தேனென்கின்றான். மறுபடியும் அந்தத்தலையின்மேல் துவாலையைப்போட்டு மூடி, தலைக்கு மட்டும் உயிர்கொடுத்தது பெரியகாரியமல்ல. அதன் உடலுக்கும் உயிர்கொடுக்கின்றேனென்று கூறி, அந்தத்தலையை முன்போல்க் கையினற்றூக்கி ஜனங்களுக்குக்காட்டி, முண்டத்துடன் சேர்த்துத் துவாலையால்மூடி, ஜெபம்செய்து தண்ணீர்தெளிக்கின்றனன். உடனே வெட்டுப்பட்ட மனிதனெழுந்து யாவருக்கும் சலாம் செய்துகொண்டு திரைக்குள்ளே போகின்றான். இந்தப்படிக்கு வெகு வேடிக்கையாய் இந்த ஜாலவித்தை முடிவுபெறுகின்றது. இதனுடைய இரகசியத்தை 11 - ம் படத்தில் விளக்கியிருக்கின்றது.

இப்படத்திற் பார்க்கிறபடி, மேசைப்பெட்டிக்குள்ளே ஓர் மனிதனிருக்கின்றான். அவனுடைய தலையைப்போலவே மண்ணினல் ஓர் தலைசெய்து, அந்தத்தலையின் கழுத்தடியில், சிவப்பு மஜிண்டாப்பவுடரைக்கரைத்துநிரப்பிய தோற்பையைப் பொருத்திவைத்திருக்கின்றது. குற்றவாளி மேஜையிற்படுத்தவுடனே, கொலையாளி துவாலையால் தலையைமூடுகின்றான். குற்றவாளிஅப்போது அந்தமேஜையின்மேற்பக்கத்துள்ள ஓர் துவாரத்தினல்தன்தலையைஉள்ளே நுழைத்துவிடுகின்றான். அந்தக்ஷணமே மேஜைக்குள்ளேயிருக்கின்றமனிதன் மண்ணினற்செய்த தலையை அந்தத்துவாரத்தின் வழியாகவே மேஜையின்

மேலே கொலையாளியின் கையிற்கொடுக்கின்றான். பிறகு கொலையாளி குற்றவாளியின் தலையை அறுப்பதுபோல அம்மண்தலையிற் பொருத்தியிருக்குந்தோற்பையையறுக்கின்றான். அப்பையிலுள்ள பவுடர்தண்ணீர் இரத்தத்தைப்போலப் பிரவாகித்தோடுகின்றது. பிறகு அம்மண் தலையைத்தூக்கிஎல்லாருக்குங்காட்டி முண்டத்தின்பக்கத்தில் வைத்துத்துவாலையால்மூடுகின்றான். அந்தஇடத்தில்ஒருதுவாரமிருக்கின்றது. அத்துவாரத்தின்வழியாய் மண்தலையை உள்ளே எடுத்துக்கொண்டு, உள்ளேயிருக்கிறமனிதன் தன்தலையை வெளியேநீட்டுகின்றான். இத்தவேலை இவ்விடத்தில் நடந்துகொண்டிருக்கும்போது, கொலையாளி பலவகைப் பகடிவார்த்தைகளால் ஜனங்களின் கவனத்தைத் தன்வசத்திற்கிரகிக்கின்றான். சுருட்டுக்குடித்துத்துவாலையால் தலையை மூடும்போது முன்புதலைநீட்டியமனிதன் தன்தலையைஉள்ளே வாங்கிக்கொண்டு மண்தலையைமேஜையில் வைத்துவிடுகின்றான். முண்டத்தோடு தலையைப் பொருத்தவைத்துத் துவாலையை மூடினவுடனே உள்ளேயிருப்பவன் மண்தலையை உள்ளே எடுத்துக்கொள்கின்றான். குற்றவாளி முன்புஉள்ளே செருகியிருக்கும் தன்தலையை வெளியே இழுத்துக்கொண்டு எழும்பிவிடுகின்றான். இக்காட்சி ஜனங்களுக்கு மிகவும் ஆச்சர்யமாகவேயிருக்கும்.

கொலையாளியின் கையில் இருக்கும் துவாலைக்குட்டையின் பிரயோசனம் இப்போது இன்னதென்று நன்குவிளங்கும். மேசையின் மேல் மனிதன் குப்புறப் படுத்துக்கொண்டு தன் தலையை மேசைக்குள் நுழைத்தவுடனே, உள்ளிருந்து வரும் மண்தலையை ஜனங்கள் கண்டுகொள்ளாதபடிக்கும் வெட்டுண்டதலையை எடுத்துமேசையின் ஓர்பக்கத்தில் வைக்குந்தருணத்தில் இத்தலையை உள்ளுக்கு வாங்கிக்கொண்டு மேசைக்குள்ளிருப்போன் தன்தலையைக்கொண்டு வருவதையும், பின்பு சுருட்டுப்பிடித்துக்கொண்டிருக்கும்மனிதன்தலையைத் திடீரென எடுத்து முண்டத்தோடுவைக்க எத்தனிக்கும்போது உள்ளிருக்கும் மனிதன்தன்தலையை உள்ளுக்கிழுத்துக்கொண்டு உடனே பதிலுக்கு மண்தலையைக்கொடுப்பதையும், கடைசியாக வெட்டுண்ட தலையை முண்டத்தோடு சேர்க்கிறபோது அந்தக்ஷணமே மேசைக்குள்ளிருக்கும் மனிதன் இந்த மண்தலையை உள்ளுக்கு வாங்கிக்கொள்வதையும், அதேநேரத்தில் கொலையுண்டமனிதன் தன்தலையை மேசைக்கு வெளிப்புறத்தில் கொண்டுவருவதையும், வேடிக்கை பார்ப்பவர்கள் அறிந்துகொள்ளாமல் மறைக்கும்பொருட்டே 10-ம் படத்தில் மேசையின்மேல் வலப்புறமூலையில் வெண்மையாகத் தோன்றுவது அக்குட்டைதான். இந்தவித்தையை பகிரங்கத்தில் செய்யத்தொடங்குமுன் அந்தரங்கத்தில் சரியாய்ச்செய்யப்பழகவேண்டும்.

கடவுள் துணை.

# விநோத விசித்திரப் பத்திரிகை.

1900-ம் ௵

புஸ்தகம் 1] நவம்பர் ௴ 1௳ வியாழக்கிழமை. [No 11.

## ஞானம்.

இவ்விஷயம் அதிக மேம்பாடுற்றதென்பதும், அதுகுறித்தே கோடானுகோடி சிறந்தநூல்களுண்டாயிருக்கின்றனவென்பதும் திண்ணம். அவ்வரும்பெருங்கிரந்தங்கள் தம்முள்ளடக்கிக் கொண்டுள்ள முக்கியவிஷயங்களைச் சுலபமாயறிந்துகொள்ளும்படி, மிகச்சூட்சமாக யாவரும் உணரத்தக்க எளிய நடையில்எழுதிவருவோமாகையால், நமதன்பர்கள் ஒவ்வொருவரும் இதில் மிக்ககவனத்தைச்செலுத்தி விஷயங்களைப் பொதுநோக்கத்துடன்கிரகித்து, அதன்படிநடந்து நித்தியானந்தச் சுகமடைவார்களெனக் கருதுகின்றோம். அவ்வாறே கருணாகரக்கடவுள் கிருபைபுரிவாராக.

எவ்வகைக்கிரியையையும் நாம்சாத்தியப்படுத்தவேண்டுமாயின், அதற்கு மூன்றுவகைக்குணங்கள் அமையவேண்டும். அவை - புத்திநுட்பம் கவனம் விடாமுயற்சி என்பவைகளே-இவற்றுள் புத்திநுட்பத்தைப்பற்றி யோசிக்குங்கால், புத்தியினாற் பகுத்தறிவும், பகுத்தறிவினால் பொய்யிது மெய்யிது நன்மையிது தீமையிதுவென்று தெளியுந் தெளிவுமுண்டாகின்றது. ஆகலின், பகுத்தறிவென்பதொன்றில்லையாயின், மிருகத்திற்கொப்பாவோமென்பதற்கையமின்று. பகுத்தறிவுக்குக்காரணமாகிய புத்திநுட்பமில்லாதவனுக்கு எவ்வகையுபதேசங்களும் பிரயோசனப்படமாட்டா. ஒருகுருவானவர் தன்மாணாக்கனுக்கு உபதேசஞ் செய்துகொண்டிருக்கையில், "யாம் கூறிவந்த

உபதேசங்கள்யாவும் நுழைந்ததா" வென்று மாணாக்கனை வினவினர். அவர் உபதேசிக்கத் தொடங்கியதுமுதல் அதுவரையில் அவ்விடத்திலுள்ள ஓர் வளையிலே நுழைந்துகொண்டிருந்த எலியையம்மாணாக்கன் நோக்கிக்கொண்டிருந்தமையால், ஆசிரியர்கேட்ட வினாவிற்கு விடையாக, "எல்லாம் நுழைந்தது வால்மாத்திரம் நுழையவில்லை." என்றனன். ஆகையால், இவ்வகையான மூடசிகாமணிகளுக்கு எவ்வகையோர் எத்தகைய உபதேசங்கள் புரியினும் பயன்யாது? எனவே, எவர்புரியும் எத்தகைய அற்ப உபதேசமும் அறிவாளிகளுக்கு அபிவிர்த்தியாய்ப்பயனுண்டாம் என்பதாயிற்று. அவ்வாறு புத்திநுட்பமுடைய அறிவாளிகளாதற்குப் பெற்றோர்கள் இளமைப்பருவமுதல் நற்பழக்கத்திற்பயிற்றிக் கல்வியைக்கற்றுக்கொடுக்கவேண்டியதே முக்கியகாரணமாகும். இவ்வாறு இளமைப்பருவமுதல் நற்பழக்கமும் கல்வியும் இடைவிடா முயற்சியுடன் பயிற்றிவந்தால், அவ்வாறு பயிற்றப்பட்டவர்கள் அறிவாளிகளாவார்களென்பதற்கு ஐயமேயில்லை.

அறிவென்பது பொதுப்பட எல்லா உணர்ச்சிக்கும்பெயராயினும் ஞானம் என்பதற்கே சிறப்புப்பெயராமென்பது அறிஞர்கொள்கை. அத்தகையஞானத்தைச் சாதித்துச் சாத்தியமாக்குதற்கு அறிவாளிகளுக்கேலுமேயன்றி அவிவேகிகளுக்கேலாது. ஆகையால், இஞ்ஞானமென்னும் அறிவையெய்துதற்குப் புத்திசாதுர்யம்அவசியம்வேண்டும். முதலிற்கூறியமூன்றனுள் முதலாவதாகிய புத்திநுட்பத்தைப்பற்றி இதுகாறும் கூறிமுடித்தோமாகலின், இனிஇரண்டாவதாகிய கவனம் என்பதைப்பற்றிக் கூறுவோம்:—

ஒருவன் புத்திநுட்பமுடையவனேனும் கவனமற்றவனாயிருந்தால், தான்தொடுத்தகருமத்தை முடிக்கச்சாத்தியமாகாது. ஏனெனில், எக்காரியத்திலும் கவனமில்லாவழி அதற்குரிய முயற்சிகள் இவைஇவை எனமுறைப்படத்தோன்றாது. அவ்வாறு தோன்றாதபோது அம்முயற்சிகளில் ஊக்கம்பிறவாது. ஊக்கமின்றி அம்முயற்சிகள்நிறைவேறா. அவைநிறைவேறாக்கால் காரியம்சித்தியாகாது. ஆகையால் இவை எவற்றிற்கும் கவனமே முக்கியமென்பதையறிக. உதாரணமாக - ஒருவன் ஒருகடிதத்தை வாசிக்கின்றானென்று வைத்துக்கொள்வோம். அவ்வாறுவாசிக்கையில் வாசிப்போனுடைய கருத்தாவது; அதிலுள்ளவிஷயங்களை உணரவேண்டுமென்பதல்லவா? அவ்வாறுணர்வதற்கு அவன் தனது கவனத்தைச்செலுத்தாதபட்சத்தில் அவ்விஷயங்கள் கருத்திற்குப்புலப்படுமோ? அவ்வண்ணம் புலப்படாவிடின்



அவனுக்குப்புத்தி நுட்பமிருக்கினும் அதுயாதுபயனைத்தரும்? ஆகலின், ஒருவன் எவ்வளவு புத்திநுட்பம்வாய்ந்தவனாயினும் தனது கவனத்தைச் செலுத்தினாலன்றித் தானெடுத்தகாரியத்தை நிறைவேற்றிக்கொள்ளமாட்டான். இதுகாறும் இரண்டாவதாகிய கவனத்தைப்பற்றிக்கூறி முடித்தோமாகலின், இனிமூன்றாவதாகிய விடாமுயற்சியைப்பற்றிக் கூறுவோம்:—

ஒருகாரியத்திற்காக முயற்சிக்கத்தொடங்குவோர் ஆரம்பசூரத்துவமாக முதலிற்சிறிதுகாலம்வரையில் முயற்சித்துக்கொண்டிருந்து பிறகு கஷ்டமாயிருக்கின்றதென்றெண்ணிச் சோர்வடைந்து விட்டுவிடுகிறார்கள். நற்காரியம்புரியத் தொடங்குவோர்கட்குப்பல இடையூறுகள் ஒன்றன்பின் ஒன்றாய் நேரிடுவதியல்பாகலின், அவ்விடையூறுகட்குச்சகியாமல்முயற்சியைக்கைவிடுகின்றவர்களும்பலராம். இத்தகையோர்கள் எவ்வளவுபுத்திநுட்பமும் கவனமுமுடையவர்களாயினும் தாங்கள்தொடுத்தகருமத்தைத்தங்களபீஷ்டப்படி நிறைவேற்றச்சக்தியற்றவர்களே என்பதற்கணுத்துணையுமையமில்லை. எவ்வகையான இடையூறுகள் எவ்வகையானநிர்ப்பந்தங்கள் எவ்வகையானசங்கடங்கள்நேரிடினும் அவையனைத்தையும் அற்பமுமகவனியாமற் றாம்தொடுத்தகாரியத்திற் சலிப்பின்றி ஊக்கத்துடனே முயற்சித்துவருவதுதான் விடாமுயற்சியெனப்படும். இவ்வகைவிடாமுயற்சியுடையோராய்க் கிரமமாகவும் தொடர்ச்சியாகவும் முயற்சித்துவந்தால், எறும்பூரக்கற்குழியும் என்னும் பழமொழிக்கிணங்க எவ்வளவுகஷ்டமானகாரியமாயிருக்கினும், நாளாவர்த்தியில்அது அதிஇலேசானகாரியமாய்முடிந்து பெரும்பயனையடையலாமென்பது நிச்சயம். இதனானன்றே "முயற்சியுடையாரிகழ்ச்சியடையார்." என்னும்பழமொழியும்வழங்குகின்றது. ஆதலால், ஞானமார்க்கத்திற் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும் முற்கூறியபுத்திநுட்பம் கவனம் விடாமுயற்சி என்னும் மூன்றினும் விசேடப்பட்டவர்களாயிருக்கவேண்டுமென்பது வெள்ளிடைமலைபோற் றெள்ளிதின்விளங்கும். (இன்னும்வரும்.)

## 139. குழந்தைகளைப் பாதுகாக்கும் இயல்பு.

137 - ம் பக்கத் தொடர்ச்சி.

குழந்தைகளைப்போஷித்துப்பாதுகாத்துவரும் விஷயத்தைக்குறித்து, ஸ்திரீகளின்பிரஸவத்தைப்பற்றிப் பேசுமிடத்தில் தொடர்ச்சியாய் எழுதப்படுமாகையால், பிள்ளைகளைத்துரப்பியாசத்தினின்றும் நீக்கிச் சற்புத்திரர்களாக்கும் முறைமையைமாத்திரம்இப்போதெடுத்

தாக்கூறுகின்றோம். ஓர்விவசாயி தன் கழனியில் விரைதெளித்தபிறகு, அது பயிராகித் தனக்குத் தானியமென்னும்பலனைக் கொடுக்கிறவரையில், பிரதிதினம் பயிரைப்போய்ப்பார்த்து, மிருகாதிகள்நெருங்கி அவற்றையழித்துவிடாமல் வேலிகட்டி, அவற்றிற்குக்காலக்கிரமப்படி ஏற்றக்குறைவின்றி ஜலத்தைப்பாய்ச்சி அப்பயிருடனேகலந்து முளைத்துள்ள விசாதிகமான புற்பூண்டுகளைக்களைந்து, அப்பயிருக்கு இடையூறு விளைத்துக்கெடுத்தற்கேதுவாகிய ஏனையவை அனைத்தையும்நீக்கத்தக்க நன்முயற்சிகளையேசெய்வதில் அதிககவனம் செலுத்திவரின், அப்பயிருக்கணுவளவும்சேதமின்றி அதனாலடையத்தக்கபலன்முழுமையும் அவ்விவசாயி அடைவானல்லவா? விதைவிதைத்தபின் அப்பயிரிற்கிஞ்சித்தும் கவனமின்றி மேற்கூறிய முயற்சிகளொன்றேனும்புரியாமல் அஜாக்கிரதையாயிருந்தவிவசாயி அப்பயிராலாய பிரயோஜனத்திலெள்ளளவேனும்அடையவேனுமோ? ஏலாதல்லவா? அதுபோலவே, அநேகநாள்தவம்புரிந்து ஆவலாய்ப் பெற்றெடுத்த அருமைக்குழந்தையைப் பிரதிதினமும்கவனித்துச் சன்மார்க்கவழியிற்பயிற்றிவந்தால், அப்பிள்ளை உலகத்தாரனைவர்க்கும் நல்லபிள்ளையாய்க்கீர்த்தியடைந்து, தான்க்ஷேமமாய்வாழ்ந்து பெற்றோர்க்கும்மற்றோர்க்கும் உபகாரியாயிருந்து, மறுவுலகத்திலும் சதா ஆனந்தத்திலிருப்பான். இதனாற் பெற்றோருக்கும் ஈருலகத்திலும் ஆனந்தமும் விசேடலாபமும் கீர்த்தியுமுண்டாகும்.

ஆனால், அப்பிள்ளையைக்கவனியாமல் மனம்போனபோக்கில் விட்டுவிட்டால், துஷ்டனாகவும் துன்மார்க்கனாகவும் ஆவதுடன், பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் மாறாத்துன்பங்களைவிளைவித்து இவ்வுலகத்தில் அபவாதம் பெற்றுக்கொள்வது மன்றியில் மறுவுலகத்திலும் சதா துன்பத்திலாழ்ந்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பான். ஆதலால், தங்களருமைக்குழந்தை அவ்வாறுதுன்பப்படாவண்ணம், பெற்றோர் அப்பிள்ளையின்மீது அதிககவனம்வைத்துச் சற்புத்திரனாக்கமுயலவேண்டும். இக்கருத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு வேண்டும் உபாயங்களைக் கர்ப்பந்தரிப்பதற்கு முந்தியேகவனித்துவரவேண்டும். எவ்வாறெனில், எப்போதும் ஸ்திரீபுருஷர்களிருவரும் நற்குணமுடையதாகவும் பரிசுத்தமுடையதாகவுமுள்ள உணவையேபுசித்துவரவேண்டும். * விலக்காயிருக்கப்பட்டவைகளை அறவே ஒழிக்கவேண்டும். சம்போககாலத்திற் சற்புத்திரனுதிக்க வேண்டுமென்று இருவரும் கடவுளைத் தியானம் செய்யவேண்டும். பிள்ளைக்குப்பாலூட்டுங்காலத்திலும் அப்பிள்ளை சற்குணமுடையவனாயிருக்கவேண்டுமென்று தாயானவள் சதா சிந்தனைசெய்துவரவேண்டும். குழந்தை மழலைச்சொற்கள் பேசத்தொடங்கும்போதே தாய்தந்தையர் அதற்கிணக்கமானவார்த்தைகளாக அதனுடன் மரியாதைவார்த்தைகளையே பேசிவரவேண்டும். அதாவது-வா போ இரு என்றுசொல்லாமல் வாருங்கள் இருங்கள் உட்காருங்கள் என்றுசொல்லும்படி கற்பிக்கவேண்டும். சிறுகுழந்தையாயிற்றே இதனை இவ்வாறுமரியாதையாய்க்கூப்பிடுவது தகுமோவென்று சிலர் நினைக்கக்கூடும் அவ்வாறு அவர்களைக்கூப்பிடுவதால் நம்முடைய கௌரவம்குறைந்துபோகாது. நாம் எப்போதுகுழந்தைக்கு நன்னடக்கையைக்கற்றுக்கொடுக்க ஆரம்பிக்கின்றோமோ? அப்போதே, அக்குழந்தை நாம்நடப்பவைகளைப்பார்த்து, அவ்வாறு நடக்கத்தொடங்குகின்றது. அக்குழந்தையையாவது அதற்கெதிரில்மற்றவர்களையாவது, துர்ப்பாஷையாய் ஏசலாகாது. ஆரம்பமுதற்கொண்டே கடவுட்பத்தியைக்குறித்து உபதேசித்துவரவேண்டும். அக்குழந்தைக்கெதிரில் கணவன்மனைவி அல்லது இதரமனிதர் சண்டைசச்சரவுபோட்டுப் யேசித்திட்டிக்கொண்டிருக்கலாகாது. துன்மார்க்கப்பிள்ளைகளோடும் துஷ்டப்பிள்ளைகளோடும் சேர்ந்துவிளையாட இடங்கொடுக்கலாகாது. ஆனால், நல்லபிள்ளைகளுடன் சிலநேரம்விளையாடவிடலாம். அதுவும் பிதாவின் எதிரிற்றானே விளையாடவேண்டும். குழந்தைகள் அற்பப்பிசகுகள் செய்தபோதிலும் உடனே கண்டித்து அதைத்திருத்தல் செய்யவேண்டும். (இன்னும்வரும்)

* முகம்மதியமார்க்கத்தில் விலக்கப்பட்டவைகளுக்கு ஹராம் என்று கூறப்பட்டிருக்கின்றது. அவை - லாகிரிவஸ்துக்களும் அசுசியான மாமிசம் முதலிய இன்னும் சிலபதார்த்தங்களுமே.



## 140. வாந்திபேதி.

155-ம் பக்கத் தொடர்ச்சி.

இன்னும் வாந்திபேதி வியாபித்திருக்குங்காலத்தில் பிரதிதினம் ஸ்நானஞ்செய்து சரீரத்தையும் வஸ்திரங்களையும் சுத்தமாய்வைத்துக்கொள்ளவேண்டும். வீடுமுழுமைக்கும் சுண்ணாம்படித்து வீட்டிலுள்ள ஒவ்வொரு பாகத்தையும் சுத்தமாய்வைத்திருக்கவேண்டும். வீட்டின்ஜலதாரை அல்லது சாக்கடையை ஒவ்வொருநாளும் புதிய ஜலம்விட்டுக்கழுவிக்கொண்டுவரவேண்டும். பாகஞ்செய்வதற்கும்பானம்பண்ணுவதற்கும் உபயோகிக்கும்ஜலத்தை வடிகட்டிக்கொள்ளவேண்டும். அவ்வாறுவடிகட்டுகையிற் பின்னாற்கூறியவாறு வடிகட்டிக்கொள்வதுநலம். அதாவது:— மூன்றடுக்கில் மூன்று பானைகளை

ஒன்றன்மேலொன்றாகவைப்பதற்கேற்க, மூன்று மரங்கள் இணைத்துக்கட்டி, அந்தமூன்றுதட்டிலும் மூன்றுபானைகளை வைத்து, மேற்பானையின் அடியில் மூன்றுதுவாரங்களிட்டு, மிகச்சிறிய பரற்கற்களை அப்பானையின் காற்பாகமட்டும்கொட்டி, அதற்குக் கீழடுக்கிலிருக்கும் நடுப்பானையிற் காற்பாகமட்டும் பருமணலுள்ள ஆற்றுமணலைப் போட்டு, அதன்மேல் அடுப்புக்கரியிற்கொஞ்சமெடுத்து ஒன்றிரண்டாயுடைத்துப்போட்டு, அதன் அடிப்பாகத்திலும் மூன்றுதுவாரங்களிட்டு, முதற்பானையிற் சலத்தைவிட்டுமூடுவதாம். இவ்வாறுசெய்வதால், மேற்பானையிலுள்ள சலம் சிறுதுவாரங்களின் வழியாகச்சொட்டென்றுநடுப்பானையில் விழுந்து, அதன்பின் அதிலுள்ள துவாரத்தினின்றும் கடைசியாய் அடிப்பானையில்விழும். இதுதான்ஜலத்தின் சுத்தியாம். இவ்வாறு ஒவ்வொரு ரெயில்வேஸ்டேஷனிலும் தண்ணீர்வடிக்கட்டியிருப்பதை நமதுநேயர்கள் அனந்தம்முறை பார்த்திருக்கலாம். இவ்வண்ணம் வடிக்கட்டியசலத்தைச்சாப்பிடுவதே உத்தமமாகும். இவ்வாறு செய்துகொள்ளவேலாதவர்கள் - சலத்தைச் சுடவைத்துக் குளிர்ந்தபிறகு வஸ்திரத்தால் வடிக்கட்டிக்கொண்டு உபயோகிக்கலாம். இந்தவியாதிவியாபித்திருக்குங்காலத்தில் எலுமிச்சம்பழரசம் பிரதிதினம் சாப்பிட்டுவருவதும், வேப்பமரங்களடர்ந்துள்ள சோலைகளின்காற்று சரீரத்திற்படும்படி உலாவிவருவதும் நன்மையென்றும், அவ்வாறு செய்வதனால் ஷெ வியாதி சமீபத்திலணுகாதென்றும் சில அறிவாளிகள் கூறுகின்றார்கள்.

வியாதியின்லட்சணங்கள்:— இவ்வியாதிக்கு முக்கியமாய் மூன்றுகுறிகளுள. அவை - பேதியும்வாந்தியும்காணுதல் - பேதிவாந்தியுடன் குறட்டைவலி இசிவு சரீரக்குளிர்ச்சி க்ஷீணநாடி முதலியவை தோன்றல் - தளர்ச்சி துர்ப்பலம் முதலியவை மேம்படல் என்னும் இவைகளே. அன்றியும், இவ்வியாதியுடையோர்க்குக்காணும் வாந்தியும் பேதியும் ஓர் வகைக் கஞ்சித்தண்ணீர்போலிருக்கும். கால்களிலும் வயிற்றிலுமுள்ள சதைகளுக்குவலிகண்டு பிகுவாய்விடும். மூத்திரம்சற்றேனும் இறங்காது. தாகம்விர்த்தியாகும். நாடிநடையும் சுவாஸநடையும் வேகங்குன்றி விசேடதளர்ச்சியுற்றுச் சரீரம்நாவுசுவாஸம் என்னும் இவைகள் சில்லிட்டுப்போகும். விரல்கள் சிலிர்த்துச் சரீரமும் உதடுகளும் நீலநிறமாய்விடும். குரற்கம்மல்தோன்றித் தொனிமாறுபடும். முகமும் சரீரமும்வாடிவிடும். சரீரமெங்கும் பிசின்போலொட்டத்தக்க வியர்வை அதிகமாயுண்டாகும். கண்கள் குழிவிழுந்துவிடும்.



பிறகு சுவாஸம்மிருதுவாகி நாடிநடையின்றி இரத்தவோட்டம்நின்றுபோம். பிராணன்நீங்குகிறவரையிற் புத்திதெளிவாயிருக்கும். இதிற் சாதார்ணமாய் 3-மணிநேரம்முதல் 18-மணி நேரத்திற்குள் மரணம் சம்பவிக்கும். இதற்குமேற்பட்டால் சுகுணங்கள்பிறப்பதற்கிடமுண்டு. சிலருக்கு வெகுசீக்கிரத்திற் சௌக்கியமாய்விடும். சிலசமயம் சுகுணங்கண்டபோதிலும், மூத்திரம் சற்றேனுமிறங்காமல் இரத்தத்திற்றங்கி விஷமித்துஆளைப்பரமபதத்துக் கேற்றிவிடும். அதனுடன் தலைவலி உறக்கம் இசிவு வாந்தி நெஞ்சிற்கபம் க்ஷயம் என்னும் இவைகளும் உண்டாகும். சிலருக்கு அற்ப சுரங்கண்டு பிறகுதணிந்து சீக்கிரத்திற் சௌக்கியத்திற்குவந்துவிடும். சிலருக்குச்சுரம் அதிகரித்து விசேஷ க்ஷீணமுண்டாகி நல்லசிகிச்சையால் வியாதிபஸ்தர் பையப்பையச் சௌக்கியமடைவதும்உண்டு. ஒவ்வொருவேளையில் முதலிலேபேதிகண்டுபிறகு மற்றைக்குணங்கள்யாவும் காண்பதுமுண்டு.
(இன்னும்வரும்.)

## 141. பிரஸவம்.

ஸ்திரீகளுடைய வாழ்நாட்களில் பிரஸவகாலம்பெரும்பாதையை அனுபவிக்கக்கூடிய காலமானபோதிலும், சாதாரணமாய்அதுவழக்கத்தில்வந்துவிட்டது. அன்றியும், இக்காலத்தில் ஜாக்கிரதையாயிருந்து, அதற்குச் செய்யவேண்டிய பக்குவங்களைக்கிரமமாய்ச் செய்து வந்தால், சுகமும்பலமுமுள்ள பிள்ளைகளைப் பெறுவதுமல்லாமல் தாயாரும் சௌக்கியமாகப் பிள்ளைப் பேற்றையடைவதற்கேதுவுண்டு. ஆகையால், ஸ்திரீகளைக் கர்ப்பகாலம் முதற்கொண்டு, அதிஜாக்கிரதையுடன் சௌக்கியமாய் வைத்துக்கொண்டு வரவேண்டியதோடு, பிரஸவகாலத்திலே மருத்துவசாஸ்திரத்திற்றேர்ந்து அனுபோகசாலிகளாயுள்ள மருத்துவச்சிகளைக்கொண்டே மருத்துவம் பார்க்கவும் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இக்காலத்தில் ஆங்கிலேய பாஷையிலுள்ள மருத்துவச்சிகிச்சைகளில் தேர்ந்தவர்களே தக்கவர்களாயிருக்கின்றார்கள். அந்த சாஸ்திரத்திற் பழக்கமில்லாத அநேகர் மருத்துவத்தொழிலை மேற்கொண்டு அத்தொழிலைப்புரியும்போது, அநேககெடுதிகளை விளைத்துவிடுகின்றார்கள். சிலர் கல்வியில்லா மூடத்தன்மையுள்ள மருத்துவப்பெண்களைக்கொண்டும், இன்னும் சிலர் மூடத்தனமுள்ள கிழவிகளைக்கொண்டும் மருத்துவம்பார்க்கின்றார்கள். தங்கள் அருமையான மனைவிமார்களை இவ்வாறான மூடப்பெண்கள்

வசம் ஒப்புவிப்பதனால் அநேக அபாயங்களுண்டாகின்றன. சிலசமயங்களில் தாய்க்கும் பிள்ளைக்கும் மரணம் நேரிடுகின்றது. சிலசமயங்களில் கர்ப்பப்பை இடம்மாறியும், சிலசமயங்களில் கர்ப்பப்பை விழுந்துபோய் ஒருபாகம் வெளிப்பட்டும், சிலசமயங்களில் அப்பை கிழிந்தும் போகின்றதனால், அந்தஸ்திரீகள் மறுபடியும் கர்ப்பந்தரிப்பதற்கேலாமல், தங்கள் ஆயுள்வரையிற் பலவித நோய்களாற் றுன்பப்பட்டுக்கொண்டிருப்பார்கள். இவ்வித மூடச்சிகிச்சைகளினால் அநேக தாய்மாரும் குழந்தைகளும் அநியாயமாய் மாண்டுபோகின்றார்கள். ஆங்கிலேயத்திற்பயின்றுள்ள மருத்துவச்சிகளோ விசேட தொகை கேட்பார்களாயினும், அவர்களகப்படக் கூடிய இடமாயிருந்தால் அவர்கள்கேட்கும்தொகை கொடுப்பதற்கு இயல்புடையவர்கள் அவசியம் அவர்களைக்கொண்டே மருத்துவம்பார்த்துக் கொள்வது நலம். ஏழைகளுக்கும்கிராமங்களில்வசிப்பவர்களுக்கும்ஆங்கிலேய மருத்துவச்சிகிச்சையில்தேர்ந்த மருத்துவச்சிகள் அகப்படுவது கஷ்டசாத்தியமாகையால், நாம் இப்பத்திரிகையில் இதைப்பற்றித் தொடர்ச்சியாய் எழுதிவரும்விஷயங்களைப் புருஷர்கள் செவ்வையாய்க் கற்றுக்கொண்டு, தங்கள்பெண்களுக்கும் கற்பித்திருப்பார்களாயின், சொற்ப அனுபோகமுடையமருத்துவச்சியைக்கையில்வைத்துக்கொண்டு கிஞ்சித்தும்அபாயமின்றித் தாங்களே அதற்குரிய சகல வேலைகளையும் செவ்வையாய்ப்பார்த்துக்கொண்டுபோய்விடலாம். ஆகையால், நமது வீட்டுப்பெண்களுக்கு இதுவிஷயத்தைச்செவ்வையாய்க்கற்றுவைக்கவேண்டும். அல்லது, புருஷர்கள் பிரசவ அறைக்குட் பிரவேசிக்கக்கூடாவிட்டாலும், வெளியேயிருந்துகொண்டே அந்தந்தசந்தர்ப்பங்களுக்குத்தக்க உபாயங்களைச்சொல்லிக்கொடுக்கவுங்கூடும். இவ்விஷயத்தை மூன்று பகுதியாகப்பிரித்து அவற்றுள் முதலாவது- கர்ப்பந்தரித்தது முதல் பிரஸவமாகிறவரையில் கர்ப்பஸ்திரீ நடந்துவரவேண்டிய முறைகளும், பிண்டோற்பத்தியின் கிரமங்களும்; இரண்டாவது-கஷ்டமின்றிப் பிரஸவமாகும்படியான முயற்சிகளும், பிரஸவச்சிகிச்சைகளும் ; மூன்றாவது - பிரஸவத்திற்குப்பிறகு ஸ்திரீயின் சௌக்கியத்தைக் கவனிக்கவேண்டியதும், குழந்தையைக் காப்பாற்றிப் பரிபாலனஞ் செய்யவேண்டிய அம்சங்களுமாக எழுதிவருவோம். இவை முக்கியமாய் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டியவிஷயங்களானபடியால்இவைகளைக் கவனத்தில் வைப்பார்களாக.

(இ-வரும்.)



## பாகசாஸ்திரம்.

### 142 கோழிக்கறி குற்மா

முட்டையிடுகின்றதும் மிகவும் கொழுப்புள்ளதுமான கோழியொன்றைப்பார்த்துவாங்கி, அதன்கழுத்திலுள்ளநரம்புகள் அறும்படியாகக்கழுத்தை முக்காற்பாகம் + அறுத்து, பூமியிற்சற்றுநேரம் போட்டுவைத்திருந்து, இரத்தம்வெளியிற்பாய்ந்து உயிர்நீங்கியபின் அதை எடுத்து, வயிற்றைக்கீறிக் குடல்முதலியவற்றை எடுத்துவிட்டு, அதிகமாய்க்கொதிக்கிற ஜலத்தில்அதைநனைத்தால் அதன்உரோமங்களையெல்லாம் மிகச்சுலபத்திற்களைந்துவிடலாம். ஆனால், அவ்வாறு நனைத்தவுடனே சீக்கிரத்தில் உரோமங்களைக்களைதல்வேண்டும். சற்றுத்தாமதித்தால் உரோமங்களைக்களைதற்குக்கஷ்டமாகும். அன்றியும், உள்ளிருக்கும் குடல்முதலியவற்றை நீக்குவதற்குமுன் அதை ஜலத்தில் நனைக்கவேகூடாது. இவ்வாறு அக்கோழியின் உரோமங்குடல் முதலியவைகளைச்செவ்வனே களைந்தபிறகு சிறுதுண்டுகளாயறுத்துப் பின்பு அத்துண்டுகளையும் செவ்வனேகழுவி ஒருபாத்திரத்தில்வைத்துக்கொள்ளவேண்டும்.

சம்பாரங்கள்:—நெய்—பலம்-$2\frac{1}{2}$. தோல்நீக்கிமெல்லிதாயரிந்த வெங்காயம்—பலம்—2. தோல்நீக்கி யரைத்தபூண்டு—பலம்—$\frac{1}{2}$. வறுத்தரைத்த கொத்துமல்லி விதை—பலம்—$\frac{1}{4}$. அரைத்தமஞ்சள் அரைதம்படி எடை-அரைத்த ⊙ கரமஸாலா - அதாவது—இலவங்கம் இலவங்கப்பட்டை ஏலக்காய் என்னும் இம்மூன்றும் துலா—$\frac{1}{2}$ —உப்பு—துலா—1. பச்சைக்கொத்துமல்லியிலைத்துளிர் பிடி—1. புளித்ததயிர் ஆழாக்கு—1. ஒருஎலுமிச்சம்பழத்தின்ரசம். முற்றினதேங்காயின் அரைமுடியில் வரும்பால்.

---

+ ஆடுகோழி என்னும் இவைகளைப்போன்ற ஜீவப்பிராணிகளையறுப்பதற்கு முஹம்மதியர்கள் ஸபஃசெய்கிறதென்று கூறுவார்கள். அதாவது - அவர்கள் புரோகிதர்களைக்கொண்டு மந்திரம்சொல்லியறுப்பதே. இவ்வாறு செய்வதனால் அத்தோஷம் நிவாரணையாவதுமன்றி, மாமிசத்தின் உருசியும் விசேடப்படும். பம்பாய் கல்கத்தாமுதலிய இடங்களில்வசிக்கும் அநேக ஐரோப்பியபிரபுக்கள் முஹம்மதிய புரோகிதர்களால் ஸபஃ செய்யப்படாத மாமிசங்களைப் புசிக்கிறதேயில்லை.

⊙ கரமஸாலா என்பது இலவங்கம் இலவங்கப்பட்டை ஏலக்காய் என்னும் இம்மூன்றுக்கும் ஒரேவார்த்தையாய்ச்சொல்லப்படும். நாம்கூறும்பாகங்களிற்கரமஸாலா என்றுவரும்போதெல்லாம் மேற்கூறிய மூன்றையுமே சேர்க்கவேண்டும்.

பாகம்:—வெங்காயம் நெய் பூண்டு தேங்காய்ப்பால் எலுமிச்சம்பழரசம் ஆகிய இவைகள் தவிர, மற்றைச்சம்பாரங்களைத் தயிருடன் கலந்து, பாகப்படுத்திவைத்திருக்கும் கோழியிறைச்சியிற்போட்டு, உப்பைக்கரைத்து மண்டிநீக்கித் தெளிவையிறுத்து அதனுடன்சேர்த்து, இவைகளெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து ஒருபாத்திரத்திற் கொட்டி ○அரைமணிநேரம் வைக்கவேண்டும்.

வாய் அகன்றதாயும் ஈயம் பூசினதாயுமுள்ள ஓர் செப்புச்சட்டியை அடுப்பிலேற்றி, நெய்யைவிட்டுச் சட சடவென்றசத்தம் அடங்கியபின் வெங்காயத்தை அதிற்போட்டு, அது பொன்னிறமாய்ச்சிவந்து வரும்போது பூண்டைப் போட்டு, அது சிவந்துவரும்போது மாமிசக்கூட்டை அதில் எடுத்துப்போட்டுக்கிளறி மூடிவிடவேண்டும். மறுபடியுந்திறந்து அந்தத்தயிர்த்தண்ணீர் சுண்டுகிறவரையிற் கிளறிக்கொண்டேயிருந்து, தேங்காய்ப்பால்எலுமிச்சம்பழரசம் என்னும் இரண்டையும் ஒன்றன்பின் ஒன்றாக விட்டுக்கிளறியபின் தம்முக்குவிடவேண்டும். அதாவது-அடியிலுள்ள நெருப்புக்கட்டிகளையெல்லாம் நீக்கிவிட்டுச் சட்டியின்வாயை மேல் மூடியினால் மூடிவைத்தல். இவ்வாறு 15 நிமிஷம்வரையில் அடுப்பின்மேற்றானே இருந்தபிறகு இறக்கிக்கொள்ளலாம். இக்குற்மா மிக்கமாதுர்யமாயிருக்கும். இன்னும் வேறெந்தப்பட்சி மாமிசங்களிலேனும் குற்மா செய்யவேண்டுமாயின், இவ்வாறே செய்துகொண்டால் விசேஷ உருசியாயிருக்கும்.

## 143. கோழி மாமிசப் பொறியல்.

142.நெ-பாகத்தைப்போலவே கோழியைப்பக்குவப்படுத்திக்கொள்ளவேண்டும். ஆனால், மாமிசத்தைத் துண்டுகளாய் வெட்டாமல், உரோமம் குடல் முதலியவற்றை நீக்கிச்சுத்தப்படுத்திய கோழியை முழுமையாகவே வைத்துக்கொண்டு, அம்முழுவதிலும் உள்ள தசைகளைக் கத்தியினாற் கீறிவிடவேண்டும்.

சம்பாரங்கள்:—இதற்கும் 142 நெ-பாகத்திற்சொல்லிய சம்பாரங்களேதான்சேர்க்கவேண்டும். ஆனால், அடியிற்குறித்ததுமட்டுமே வித்தியாசம்:— அதாவது-தேங்காய்ப்பால் தயிர் என்னும் இவற்றைச்

○ மாமிசம் அல்லது மச்சம்முதலிய பதார்த்தங்களைப் பாகப்படுத்தும்போது, உப்புமுதலிய மற்றசம்பாரங்களெல்லாம் கலந்தபின் கால்அல்லது அரைமணிக்குப்பிறகு, அடுப்பிலேற்றினால்தான் உப்புசெவ்வையாயுறைக்கும். சீக்கிரத்தில் அடுப்பிலேற்றிவிட்டால் உப்பு செவ்வையாயுறைக்காது.



சேர்க்காமல், பப்பிளிக்காயைத்தோல்சீவி ஒரு சிறியதுண்டறுத்துக்கொண்டு, அதையரைத்துமஸாலாவுடன்சேர்த்துக்கொள்வதே. நெய்-பலம் ரு. மஸாலாவெல்லாம் ஒன்றாய்க்கலந்து உப்புக்கரைத்ததெளிவையும் அதனுடன்சேர்த்துப்பாகப்படுத்திக்கொண்டு, முன்புகீறிவைத்திருக்கும் முழுக்கோழியின் கீறல் மாமிசங்களினுள்ளெல்லாம் அம்மஸாலா கூட்டைச் செவ்வையாய்த் திணித்து, மேற்பக்கங்களினும் செவ்வையாய்ப்பூசி, அம்முழுக்கோழியைச் சேர்த்துக்கட்டி ஒருபாத்திரத்தில் ஒருமணிநேரம்வரையில் வைத்திருக்கவேண்டும்.

பாகம்:—சட்டியில் நெய்வார்த்து அதை அடுப்பிலேற்றி, முன்கூறியபாகப்படி வெங்காயம் பூண்டு போட்டுத்தாளிதஞ்செய்து, பக்குவப்படுத்தி வைத்திருக்கும் கோழியைஅதிற்போட்டு, கிளறிக்கொண்டேயிருக்கவேண்டும். அடிப்பற்றாமற் கிளறிக்கொண்டேயிருந்தால் முந்தி அதிலுள்ள நீரைக்கக்கி நெய்யை உள்ளேயிழுத்துக்கொண்டு பிறகு நீரைவற்றவைத்து அந்நெய் முழுமையையும் கக்கிவிடும். அப்போது, மஸாலாவெல்லாம் செவ்வையாய்ப்பொரிந்து மாமிசம் நன்றாய் வெந்திருக்கின்றதா என்று பார்த்து இறக்கிக்கொள்ளவும்.

## 144. தருமம்.

தருமம் என்பது—பொருள்தேடியுண்ணுவதற்குச் சக்தியில்லாத குருடர் முடவர் வியாதியாளர் விருத்தர் அனாதரவுற்றவர் அனாதச்சிசுக்கள் முதலியோர்க்கு அன்னவஸ்திரங்கொடுத்தல்-வறியவர்க்கன்னமிடல்-சத்திரங் கட்டல்-குளம் வெட்டல்-தண்ணீர்ப் பந்தல்வைத்தல்-கல்விச்சாலை ஏற்படுத்தல்-அக்கல்விச்சாலையில்கற்கும் ஏழைப்பிள்ளைகட்குப் பொருள்வாங்காது வித்தைகற்பித்தல்-அநாதைப்பிள்ளைகட்கு அன்னவஸ்திரமீந்து கல்வி பயிற்றுவித்தல் முதலியனவாம். நாம்நிர்ப்பாக்கியர்களாகவும் வறியவர்களாகவுமிருக்கும் பட்சத்தில், மேலேகூறப்பட்டுள்ள தருமங்களைச் செய்வதற்கு நாம் கடமைப்பட்டவர்களல்ல. ஆனபோதிலும், நம்மாலியன்றவரையில் நாம்எவ்வகையிற்பிறருக்கு உபயோகப்படவேண்டுமோ, அவ்வகையில் தருமஞ்செய்வது பெருந்தன்மைக்கழகு. அதாவது - நாம் அரைவயிற்றன்னஞ்சாப்பிடுகையில், ஒரு வறியவன் வந்து நம்மை அன்னங்கேட்டால், நாம் சாப்பிடுவதில் அரைப்பிடி சாதமாகிலும் அவனுக்குக் கொடுத்துச் சாப்பிடுவதுதான் நலம். இவ்விதபிரமாணத்தை மீறித் தனவந்தர்களாயுள்ளவர்களிற்சிலர், மிகக்கடினசித்த முடையவர்களாகி, யாசகர்களை அடித்துத்துரத்துவதும், பலவகையான இகழ்ச்சிமொழி

களைக்கூறுவதும், அவர்களைப்பரிகசிப்பதும் ஆகிய இவ்விததுரப்பியாசமுடையவர்களாயிருக்கின்றார்கள். இன்னும் சிலபிரபுக்கள் நிர்ப்பாக்கியர்களாயுள்ள ஏழைகண்மீது கிஞ்சித்தும் இரக்கமற்றவர்களாய், யாசகர்கள் வந்து கேட்டபோது அவர்களுக்கு அரைக்காசும் கொடாமல் துரத்திவிட்டு, தாங்கள் கீர்த்தியடையவேண்டுமென்றெண்ணிப் பெருத்தகாரியங்களிற்றலையிட்டுக்கொண்டு ஆயிரக்கணக்கான ரூபாய்களைச்செலவுசெய்துவிடுகிறார்கள். எப்படியெனில், திவான் பஹதூர் ராய்பஹதூர் K. C. I. என்னும் இவைபோன்ற அனேகபட்டங்களைப்பெறுவதற்காகவும், தங்களைப்போன்றபிரபுக்களுக்கு விருந்தளிப்பதற்காகவும், கவர்னர்-கவர்னர் ஜெனரல் முதலிய அதிகாரிகளின் பேட்டி காண்பதற்காகவும், பலவித வேடிக்கை கேளிக்கைகளிலும் பாணம் மத்தாப்புகளிலும் பெருந்தொகையாகப் பணத்தைச் செலவுசெய்து வீணுக்குகின்றார்கள். இத்தகையோரைப்பற்றி யாம் சற்றுலோசிப்போம். தருமம் செய்யவேண்டுமென்பது கடவுளுடைய கட்டளை. அதாவது-ஒரு எஜமானனிடத்தில் ஆயிரம் வேலைக்காரர்களிருக்கின்றார்கள். அவன் அந்த ஆயிரம்பேரில் ஒருவனைத் தலைவனாக்கி, மற்றெல்லாருடைய சம்பளத்தையும் அந்தத்தலைவனிடத்திற்கொடுத்து, அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்படி திட்டம் பண்ணுகிறான். அதுபோலவே அத்தலைவன் அவர்களனைவர்க்கும் கொடுக்கின்றான். அத்தலைவன் அவ்வாறு கொடாமல் அத்தொகை முழுவதையும் தானே அனுபவித்துக்கொண்டால் அவன் அந்த எஜமானனால் தண்டனையடைவான். இது போலவே, ஒருவனுக்கு ஐஸ்வரியத்தைக்கொடுத்து அனேக தரித்திரர்களுக்குப் பங்கிட்டுக்கொடுக்கும்படி கடவுள் ஆஞ்ஞாபித்திருக்கின்றார். இந்தக் கட்டளையைத் தான் தருமம் என்று கூறப்படுகின்றது. இக்கட்டளைப்பிரகாரம் தருமம்புரிந்தால் பரலோகத்திற் சுகத்தையடைகின்றான். இல்லையாயின், அவர் கட்டளையைமீறி நடந்ததற்காகச் சதாதுன்பத்திலேயே கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பான். இன்னும் கடவுள் கட்டளையிட்டதுடன் சும்மாவிருந்துவிடவில்லை. துன்புற்றவர்களிடத்தில் அன்புவைக்கவேண்டுமென்னும் பிரமாணத்தைக் நமக்குச் செவ்வையாய்த்தெரிவிக்கின்றார். எப்படியெனில், ஒருவன் பெருத்த சீமானாயிருக்கின்றான்-அவன் அனேக வகை காணி பூமி ரொக்கம் ஆடை ஆபரணம் மாணிக்கம் வைரம் வைடூரியம் முதலிய இரத்தினங்கள் ஆடுமாடுமுதலிய சிவப்பிராணிகள் குதிரை ஒட்டகம் யானை முதலிய வாகனாதிகள் என்னும் அளவற்ற ஆஸ்திவந்தனாயிருக்கின்றான். இவ்



வாறிருந்தபோதினும், வாஸ்தவத்தில் அவனை நோக்கிப் பார்த்தால், அவனும் ஓர் யாசகனாகவேயிருக்கின்றான். எப்படியெனில், இவ்வளவு திரண்ட ஆஸ்திகளிருந்தும் ஒரு வருஷத்தில் மழையில்லாவிட்டால் இரண்டு கைகளையும் தூக்கி மழைப்பிச்சை கேட்கின்றான். அஃதில்லாவிட்டால் இவன் கதி அதோகதிதானே! இவன் பூமியைத் தின்பானா? நகையை விழுங்குவானா? இரத்தினத்தைப்புசிப்பானா? ஒரு கவளம் அன்னத்தைத் தவிர ஒன்றும் பிரயோசனமில்லையே. முற்கூறியபடி மழைப்பிச்சை கேட்ட இந்தத் தனிகயாசகனுக்கு அந்தக்கருணாநிதி கிருபைகூர்ந்து, ஏராளமான பிரவாகத்தை ஆகாயத்திலிருந்து கொட்டும்படி செய்கின்றாரல்லவா? இதனாலே, ஜலத்தினால் தரித்திரப்பட்ட நீ என்னிடத்தில் யாசகம் பெற்றுக்கொண்டதுபோல, ஆகாரத்தினாற் கஷ்டப்பட்ட ஒருவனுக்கு நீ யாசகம் கொடுக்கவேண்டியது நீதி என்று குறிப்பிக்கின்றதல்லவா? இவ்விதமாகத் தருமம் செய்யவேண்டுமென்னும் மார்க்கத்தைக் கடவுள் நமக்குக் காட்டுவதன்றியும், வேதங்களின் மூலமாய்க் கட்டளைகளும் கொடுத்திருக்கின்றார். (இன்னும்வரும்.)

## 145. நோட்டு அடிக்கும் ஜாலம்.

வெற்றுக்கடிதாசியை நோட்டின் அளவாகக்கத்திரித்து, அதை 12-ம்படத்திற் காட்டியபடி யந்திரத்திலுள்ள இரண்டுருளைகட்கும் நடுவிற்கொடுத்து அய்யந்திரத்தின் கைப்பிடியாற் சுழற்றினால், 100 ரூ 1000 ரூ நோட்டுகள் யந்திரத்தின் மறுபக்கத்தால் வெளிப்படும். வெற்றுக்கடிதாசியைச் சபையோர்கட்கெதிரிற் செவ்வையாகக்காட்டியபிறகு, எந்திரத்தினின்று நாணய நோட்டுகளை அவர்களுக் கெடுத்துக்காட்டுகையில் யாவரும் ஆச்சரியப்படுவார்கள்.

இதன் இரகசியத்தை அடியில்விவரிக்கின்றோம்:—இந்த யந்திரத்தில் அதாவது 12-ம்படத்தில் காட்டியபடி மேலே ஒருஉருளை கீழே ஒருஉருளை இணைத்திருக்கின்றது. இதிலுள்ள கைப்பிடியால் இதைச் சுழற்றி முன்பக்கத்தில் ஒருகடிதாசியைக்கொடுத்தால், அதைப்பிரஸ் பண்ணி மறுபக்கத்தில்தள்ளிவிடும். பஞ்சுஅரைக்கின்ற மனையை நம் நேயர்களிற்சிலர் பார்த்திருக்கக்கூடும். அதைப்போலவே இந்தயந்திரத்தையும்பாவித்துக்கொள்ளலாம். இந்தஉருளைகளின்நீளத்தில், அகலமாயுள்ள ஒருகறுப்புத்துணியை அதிகநீளமாயெடுத்து, மேல்உருளையில் அதிகமாகவும் கீழ்உருளையிற்கொஞ்சமாகவும் அடியிற்கூறியபடி சுற்றிவிடவேண்டும். மேல் உருளையிற் கறுப்புத்துணிசுற்றும்போது,



12-ம் படம்.



13-ம் படம்.

100 ரூ 1000 ரூ நோட்டுக்களாகத் தேவையுள்ளவரையில் எத்தனை நோட்டுகளாவது ஒவ்வொன்றாய் அதிற் கொடுத்து 13ம்-படத்திற் காட்டியபடி மேலுருளைச் சுற்று பின்பக்கம் போகும்படியாகவும் கீழுருளைச்சுற்று முன்பக்கமவரும்படியாகவும் சுற்றிவிடவேண்டும். அதன்பின் கைப்பிடியால் சுழற்றும்போது இரண்டு உருளைகளும் சுழலும். அப்போது மேலேயிருக்கிற உருளையிலுள்ள கறுப்புத்துணி பின் பக்கமாய்ப் பிரிந்து கொண்டே போகும். பிரிந்த அந்தத் துணி கீழேயிருக்கிற உருளையில் முன் பக்கமாய்ச் சுற்றிக்கொண்டே வரும். அப்போது நாம் முன்பக்கத்திற் கொடுக்கிற காகிதம் கீழுருளையிலுள்ள துணியிற் சுற்றிக்கொண்டே உள்ளேபோய்விடும். மேலுருளையிலுள்ள துணி பின்பக்கமாகப் பிரிந்துகொண்டே வருகின்றபடியால் அதில் ஒளித்துவைத்திருக்கின்ற நோட்டுத்தாள்கள் பின்பக்கத்திற்போய் விழுந்துவிடும்.



## 146 முட்டைஜாலம்.

ஒரு மேஜையின்மேல் நான்கு டம்ளர் வைக்கவேண்டும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அடையாளமிருக்கவேண்டும். அது எப்படியெனில், க-ச-ட-த என்னும் நான்கெழுத்தையும் நான்கு டம்ளருக்கு அடையாளமாக வைத்துக்கொள்ளலாம். இவற்றுள், க- ச என்னும் இரண்டு டம்ளரிலும் அரைப்பாகம்வரையிற் சுத்தஜலம் விடவேண்டும். ட-என்னும் டம்ளரில் முந்திய இரண்டு டம்ளர்களிலும் விட்ட அளவாகவே ஜலம் விட்டுக் காற்படி உப்பைக் கரைத்துத் துணியில் வடிக்கட்டி அந்த ஜலத்தை டம்ளரில் ஊற்றிவிடவும். நான்காவதாகிய த-என்னும் டம்ளரில் அதே அளவு ஜலத்திலே அரைக்காற்படி உப்பைக்கரைத்து வடிக்கட்டிய ஜலத்தை விடவும். இவ்வகையாகஜலங்களை நிரப்பிய நான்குடம்ளர்களையும் மேஜையில் வைத்தபிறகு, க-என்னுட் டம்ளரில்மூன்றுபுதியமுட்டைகளைப்போட்டால், அம்மூன்றும் அமுங்கி அந்த டம்ளரின் அடிப்பக்கத்திற் போய் உட்கார்ந்துபோம். இதை ஜனங்கள் பார்த்தபிறகு, அந்த மூன்று முட்டைகளையும் எடுத்து, மற்ற மூன்று டம்ளர்களிலும் ஒவ்வொன்றாய்ப் போட்டால், ச என்னும் டம்ளரிற் போட்டமுட்டை அடியில் தாழ்ந்துபோகும். ட என்னும் டம்ளரிற் போட்டமுட்டை ஜலத்தின் மேல்மட்டத்தில்மிதக்கும். த என்னும் டம்ளரிற் போட்டமுட்டை ஜல மட்டத்திற்குப் பாதியளவில் நின்றுபோகும். இம்முட்டைகள் முந்தி ஒரு டம்ளரிற் போட்டபோது எல்லாம் அமுங்கிப்போய்ப் பிந்தி ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருப்பதைப் பார்த்தவர்கள் யாவரும் மிகவும் ஆச்சரியப்படுவார்கள்.

## 147. கத்தியில் துருப்பிடித்திருந்தால்.

துருப்பிடித்த கத்திக்கு (Sweet Oil) ஸ்வீட் ஆயில் என்னும் எண்ணெயை ஒருநாளைக்குப் பூசிவைத்திருந்து மறுநாள் சீர்மைச்சுண்ணாம்புபோட்டுத் துலக்கிவிட்டால் புதிய கத்தியைப்போலவே பளபளப்பாயிருக்கும்.

## 148 வீடுகளிலுள்ள தூண் நிராவி முதலியவைகட்குப் பூசும் மெருகெண்ணெ.

* மண் எண்ணெ—வீசை - 6 - டாமர் என்னும் சீமைக்குங்கிலியம் வீசை - $1\frac{1}{2}$ - நாட்டுக் குங்கிலியம் வீசை-$1\frac{1}{2}$- முந்தி மண் எண்ணெயை அடுப்பேற்றி மெதுவாகக்காய்ச்சி இருவகைக் குங்கிலியத்தையும் தூள்பண்ணி, அதிற்போட்டுக் கலக்கி விரலால் தொட்டுப்பா

* மண் எண்ணெ என்பது கிரோசன் ஆயிலுக்கும் சொல்லலாம். ஆனால், இவ்விடத்தில் அந்த அர்த்தமல்ல. மண்எண்ணெ என்று ஒருவிதஎண்ணெ கறுப்புநிறமுள்ளது கடைகளில் வாங்கலாம், அதுதான் இவ்விடத்தில் உபயோகிக்கவேண்டியது.

ர்த்தால் பிசுபிசுப்புக்காணும்வரையில் அடுப்பில்வைத்திருந்திறக்கி உபயோகித்துக் கொள்ளலாம். அடுப்பு மெதுவாயெரியவேண்டும். அதிகமாயெரிந்தாற் பற்றிக்கொள்ளும்.

### 149. உதிர ஓட்டம்.

மானிடதேகத்திலுள்ள நரம்புகள் பதின்மூவாயிரமென்று கணிக்கப்பட்டிருக்கின்றன. உதிரமானது இருதயத்தினின்றும் நுரையீரலுக்குச்சென்று, மீண்டும் இருதயத்திற்கேகி, அவ்விடத்தினின்றும் சரீர முழுவதும் வலைபோற் பின்னப்பட்டுள்ள பதின்மூவாயிரம் நரம்புகளின் வழியாய்ப் போய், பின்னும் இருதயத்திற்குத் திரும்பி வருகின்றது. இவ்வளவு வேலைகளும் இரண்டு நிமிஷங்களுக்குள் நடக்கின்றன.

### 150. சமுத்திர சலத்தின் வித்தியாசம்.

Pacific பாஸிபிக் சமுத்திர ஜலத்தில் ஒரு டன் நிறையுள்ள ஜலத்தைக்காய்ச்சினால் 79 பவுண்ட் நிறையுள்ள உப்பு உண்டாகின்றது. Atlantic அட்லான்டிக் சமுத்திர ஜலத்தில் ஒரு டன் நிறையுள்ள ஜலத்தைக்காய்ச்சினால் 81 பவுண்ட் உப்பு உண்டாகின்றது. Dead sea டெட்ஸீ என்னும் சமுத்திர ஜலத்தில் ஒரு டன் நிறையுள்ள ஜலத்தைக்காய்ச்சினால், 187 பவுண்ட் உப்பு உண்டாகின்றது. ஆதலால், சமுத்திர ஜலம் பொதுவாக உப்பு உண்டாமியற்கையுடைத்தேனும், சிறப்பாக நோக்குமிடத்து அவ்வந்நிலக் கூறுபாட்டின்படி உப்பு விளைவு ஏற்றக்குறைவாயிருப்பதென்பதை அறியவேண்டும்.

### 151. ஆப்தவாக்கியம்.

எவன் தனக்குச் சம்பந்தமற்றதாயும் உனக்கு இரகசியமாயுள்ளதாயுமிருக்கிறவிஷயத்தைக் கூர்மையாய் விசாரிக்கின்றானோ? அவன் விஷயத்தில் நீ எச்சரிக்கையாயிருப்பாயாக.

உன்னுடைய மனதிலுள்ள ஓர் இரகசியத்தை உனக்குப்பிராணசிநேகிதனாயிருக்கப்பட்ட ஒருவனிடம் சொல்லி, இதை வேறொருவருடனும் சொல்லாதே என்று அவனை வற்புறுத்துகின்றாய். உனக்கு ஐக்கியமாயிருக்கும் உன்னுடைய மனமே அந்த இரகசியத்தைக் காப்பாற்றச் சக்தியில்லாமலிருக்கும்போது, உன் பிராணசிநேகிதன் அதைக் காப்பாற்றுவானென்று நீ எப்படி நம்புகிறாய்.

உன்னிடத்தில் முகஸ்துதியாய்ப் பேசுகின்றவனை நம்பிப்பூரிக்க வேண்டாம். உன்னிடத்தில் ஏதோ ஒன்றைக் கிரகிக்கிறதற்காகவே அவன் அப்படிப் பேசினதன்றி, உன்னைப் பின்னால் அவ்விதம் துதிக்கமாட்டான்.

கடவுள் துணை.

# விநோத விசித்திரப் பத்திரிகை.

1900-ம் ௵

புஸ்தகம் 1] டிஸம்பர் ௴ 1௳ சனிக்கிழமை. [No. 12.

## ஞானம்.

167-ம் பக்கத் தொடர்ச்சி.

ஞானமார்க்கத்திற் பயிலவேண்டுமென் றெண்ணுகின்றவர்கட்குப் புத்திநுட்பம் கவனம் விடாமுயற்சி என்னும் மூன்றும் அவசியமென்று நிரூபித்தோமல்லவா? மேற்கூறிய முக்குணங்களும் வேரூன்றிச் சிறப்புறுதற்கு அம்மூன்றின் அநுகுணங்களாகிய ஆசை அன்பு வைராக்கியம் என்னும் இம்மூன்றும் இன்றியமையாதனவாயிருக்கின்றன. இவற்றுள் ஆசையென்பது-ஓர்விஷயத்திற் பொதுவாகப்பிரீதிகொள்ளல். அன்பென்பது-அந்தப் பிரீதி விசேடித்துச் சிறப்பாதல். வைராக்கியமென்பது-அச்சிறப்புக் கெவ்விதத்திலும் அழிவுநேராவாறு திடமுற்றிருத்தல். இம்மூன்றும் முற்கூறிய மூன்றிற்கும் சாதனமாயிருத்தலின் அவைகட்கு அநுகுணங்களெனப்படும். இனி முற்கூறிய மூன்றனுள் முதன்மைபெற்றுள்ள புத்திநுட்பமுள்ளோன் "புலிபசிக்கினும் புல்லைத்தின்னாது." என்னும் மூதுரைக் ணங்க, எவ்வகையான அசந்தர்ப்ப தருணங்களினும் அற்பவிஷயத்தையபேட்சித்து அதனால்வரும் புன்சுகத்தைப் பொருளாகக்கொண்டு இழிந்த கருமங்களியற்றான். "முதலையும் மூர்க்கருங்கொண்டது விடார்." என்பதுபோலத் தான் பிடித்ததையே பிடிவாதமாகச் சாதியாமல் நடுவுநிலைமையுடன் முதலில் தான்கொண்ட அபிப்பிராயம் நியாயவிரோதமென்று தெரிந்தமாத்திரத்தில் தனது அபிப்பிரா

யத்தை மாற்றிக்கொள்ளுவான். இவ்வாறு மாற்றுதற்கான நடுவுநிலைமையென்னும் சிறந்தகுணம் அவனுக்கமைந்திருத்தலின், எப்போதெப்போது ஓர் காரியத்திற் பிரவேசிக்க எண்ணங்கொள்ளுகின்றானோ அப்போதைக் கப்போதும் அக்காரியத்தின் தன்மை இத்தகைத்தெனத் தீரவிசாரித்து, யாதோராட்சேபமின்றித் தடையறமுடித்து பெரும்பயன் விளைத்துப் புகழ்தருதற்கேதுவான பெருமிதமுற்ற அரியவிஷயங்களையே செய்யத்தொடங்குவான். அத்தகைய அரியவிஷயங்களெவற்றினும் மேம்பட்டதான ஞானமார்க்கத்திலொழுகுதற்கு அவ்வாறான புத்திநுட்பமுடையோனே அருகனென்பது சொல்லாமேயமையும். உலகத்திலுள்ள எவ்விஷயத்தையேனும் ஒருவன் முற்றுணர்ந்து தேறவேண்டின் அவ்விஷயத்தில் ஆசைபதியாவிடின் அவ்விஷயத்துள்ள அரும்பெரும்பயன்கள் எளிதில் விளங்கா. அவ்வாறு விளங்காதவரையில் அவன் அவ்விஷயவுணர்ச்சி முற்றும் பெற்றவனாகான். ஆகலின் புத்திநுட்பம்வாய்க்கினும் அதற்கநுகுணமான ஆசை வாய்க்காவிடிற் பயனில்லை. எவ்வாறெனின், விபசாரம் புரிவோனொருவன், ஓர் மாதைக்கண்டு மையல்கொண்டானென்று வைத்துக்கொள்வோம். அவள்மீது தனக்குதித்த ஆசையின் காரணமாகத் தான் அவளையணைதற்குவேண்டிய முயற்சிகளனைத்தையும் முடிவுறச்செய்து, அதற்குவேண்டிய பெருந்தொகையான திரவியத்தையும் விரயஞ்செய்கின்றான். இவ்வளவுக்கும் மேற்பட்டு அம்மாதின் மனதைக் கரைத்துத் தனக்கு வசியமாம்படி செய்யக்கூடிய வல்லபமுடைய பல்வேறு தூதர்களையும் ஏவி, அத்தூதர்கள் அவளிசைந்ததைத் தெரிவித்தவளவில், அச்சமயம் பெருமழைபெய்யினும் பேரிடியிடிக்கினும் கடுவெய்யில்காயினும் கருக்கிருள்மூடினும் அவ்வகாதங்களனைத்தையும் அணுவளவும் சிந்தியாது அவற்றால் விளையக்கூடிய அபாயங்கட்கச்சமுறாமல் தனதெண்ணத்தை முடிக்கும்வரையிற் பேய்போற்றிரிந்து, உண்ணும்போதும் உறங்கும்போதும் உரையாடும்போதும் உலாவும்போதும் அவள் கவனமே கவனமாகக்கொண்டு பைத்தியங் கொண்டவனைப்போற் சிந்தைக்கலக்கமுறுகின்றான். இவ்வாறாகவே கட்குடியனும் தனதுற்றார்வெறுக்கினும் ஊரார்பகைக்கினும் மற்றார்சிரிக்கினும் மக்கண்மனைவி வயிறெரியினும், தனது போதையாற் கீழேவீழ்ந்து காயமெல்லாங் காயங்களாயினும் மன்னராற்றண்டனைபெற்று மானபங்கநேரினும், தனது தனதானியங்களும் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் ஆடையாபரணங்களும் யாவுமழியினும், இவ்வளவு அபா



ரக்கேடுகளையும் சற்றேனும் சிந்தையிற்கருதாமல் கட்குடியிற்றானே கவனம் வைத்திருப்பானல்லவா! இத்தகைய கெடுதிகள் யாவும் மனத்திற்றாக்காமல் மறந்திருக்கச் செய்வதெது? அவனவனும் தான் தான் கருதிய ஓர் பொருளிடத்து வைத்துள்ள ஆசையின் பெருக்கல்லவா? கள் காமம் என்னும் இழிவான இவ்விரண்டில் அவனவனுக்குதித்த ஆசையின் பெருக்கே மேற்கூறிய அபாரமான பேராபத்துக்களனைத்தையும் திரணமாக மதிக்கச்செய்ததென்றால், நாம் கூறப்போகும் ஞானமார்க்கத்தில் மனத்தைச்செலுத்தி ஆசையைப் பெருக்குவோர்க்கு எத்தகைய கஷ்டநிஷ்டூரங்களும் திரணமாகத்தோன்றுமென்பதிற் சந்தேகமென்னை? ஞானமார்க்கத்திலிவ்வாறான ஆசையையுதிக்கச்செய்வதற்கு முந்திமுந்தி மனம் நன்றாய் அதிற்பற்றச்செய்யவேண்டும். அவ்வாறு பற்றச்செய்தல் ஏககாலத்திலாகக் கூடியதல்லவாகையால், நாளாவர்த்தியில் "எறும்பூரக்கற்குழியும்." என்பதுபோலச் சிறுகச்சிறுகப் பழக்கவேண்டும். இவ்வித அப்பியாசத்தை இடைவிடாது கடைப்பிடியாகப்பிடித்து வைராக்கியத்துடன் சாதிப்பார்களாயின், அம்மார்க்கத்தி லர்ஸ்சயுநிப்பதற்குத் தடையில்லை. அவ்வாறுதித்த ஆசை விர்த்தியாதற்கும் விரோதமில்லை. சாதாரணமாகச் சித்திரமெழுதக் கற்றுத்தேறவேண்டுமாயினும் நாடோறும் எழுதியே பழக்கவேண்டும். கல்விகற்கவேண்டுமாயினும் அட்சரம்சொற்கள் பொருள்கள் முதலியவற்றைத்தினந்தோறும் நாவினாற் கூறிக்கூறியே பழக்கவேண்டும். அவ்வாறு கற்ற கல்வியைத் திரப்படுத்தவேண்டுமாயினும் பிரதிதினமும் மனத்திற் சிந்தித்துச் சிந்தித்தே பழக்கவேண்டும். இதனாலன்றோ "சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம் வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்." எனப் பெரியோர் கூறியுள்ளார். அன்றியும் "சாதனமின்றியொன்றைச் சாதிப்பாருலகிலில்லை." எனவும் வழங்குகின்றதே. எந்த விஷயத்தையும் எவனொருவன் ஆரம்பசூரத்துவமின்றி ஒருபடித்தாக நியதியுடன் அப்பியாசித்து வருகின்றானோ அவன்மாத்திரமே அந்தவிஷயத்தில் விற்பன்னனாவானேயன்றி ஏனையோனாகான். ஆதலால் இவ்வாறு பழக்குவதற்கு அவ்விஷயத்தில் ஆசையில்லாவிடத்து ஊக்கமுறியாதென்பது தெள்ளிதின் விளங்கலில் புத்திநுட்பமுடையோனுக்கு அதற்கநுகுணமான ஆசையும் அவசியம் வேண்டுமென்பது சித்தம். இதுவரையில் ஞானமார்க்கத்திற்குரிய விஷயங்களை யாராய்வதற்குப் புத்திநுட்பமும், அவ்வாராய்ச்சியில் மனஞ்செல்லுவதற்குப் புத்திநுட்பத்திற் கநுகுணமான ஆசையும் உதிக்கவேண்டுமென்ப

தைப்பற்றிக் கூறிமுடித்தோம். இனி ஞானமார்க்கத்தி லாசைதோன்றிப் புத்திநுட்பத்துடன் ஆராய்ந்து தெளிந்தபின் அவ்வாறு தெளிந்த அரியவிஷயங்களைக் கவனிப்பதைப்பற்றியும் அவ்வாசையின் மேலீடாகிய அன்பைப்பற்றியும் கூறுவாம்.

சாதாரணமான விஷயங்களில் வெகுநாளாய்ப் பழகியிருந்த மனம் ஞானமென்னும் அரும்பெரு நவீனவிஷயத்தில் ஆசைவைத்தலே துர்லபம். அவ்வாறாசைவைத்தபோதினும் புத்திநுட்பம் வாய்ந்து ஆராய்தலதனினும் துர்லபம். அவ்வளவு துர்லபமாயாராய்ந்த விஷயங்களை இடைவிடாது சிந்தித்துக் கவனத்தில் வைப்பது துர்லபத்திலும் துர்லபம். ஆகலின், ஈண்டு கவனம் என்பதைப்பற்றி யூகிக்குதும். கவனமென்பது ஞாபகமென்றும் நினைவென்றும் சிந்தனையென்றும் பெயர்பெறும். எந்த விஷயத்தைப் பற்றியேனும் ஒருவனுக்குக் கவனமில்லாதபோது, அவன் அந்த விஷயத்தில் எவ்வளவு தேர்ந்தவனாயினும் அவ்விஷயமுழுதும் அவனுக்கும் பிறர்க்கும் பயன்படாமற்போமென்பதில்லையென்னே ! ஆகலாற் கவனமென்பது விஷயவுணர்ச்சியுள்ள ஒவ்வொருவனுக்கும் அத்தியாவசியம் வேண்டற்பாலதெனப் பெறப்பட்டது. அக்கவனமென்பது ஒருவனுக்கு எதனிடத்து நீங்காதிருக்குமென்று யோசிக்கின், அவனுக்கு எவ்விஷயத்திற் பிரீதியதிகமோ அவ்விஷயத்திற்றானென்று புலப்படுதலால், கவனமென்பதற்கு அநுகுணம் பிரீதியின்மேம்பாடான அன்பென்பதிற்றடையாது? அன்பே கவனமென்பதற் கநுகுணமென்று ஐயமறத்தெளிந்த நாம், ஞானமார்க்கத்திற் கவனம் வைக்கவேண்டுமென்றெண்ணும்போதே அம்மார்க்கத்திற் பிரீதியை அதிகப்படுத்தலவசியமென்பதை நன்குணர்கின்றோமல்லவா? ஞானமார்க்கத்திற் பிரீதியை அதிகப்படுத்தி வருவோமாயின் உலகமார்க்கத்தின்பிரீதி நாளுக்குநாள் தேய்பிறைச் சந்திரனைப்போற்றேய்ந்து ஞானமார்க்கப் பிரீதியே மேம்படுமென்பது கூறவும் வேண்டுமோ? இவ்வண்ணம் மெய்ஞ்ஞான மார்க்கப்பிரீதி மேற்பட்டு அஞ்ஞானமார்க்கப்பிரீதி கீழ்ப்பட்டகாலத்தும், அப்பிரீதி அறவே யொழிந்தகாலத்தும் அவ்வநுபவமுடையவன் சாதாரணமானிடரினின்றும் பிரிக்கப்பட்ட பரிசுத்தனாகையால், அவனுக்குச் சிறுகச்சிறுகப் பேரின்பவாசல் திறக்கப்பட்டும் சிற்றின்பவாசல் மூடப்பட்டும் வருமென்பதற்குத் தடையேயில்லை. மெய்ஞ்ஞானமார்க்க வாராய்ச்சியிற்றேர்ந்த ஒருவனுக்கு அவ்வாராய்ச்சியிற் கவனமும் அதற்கநுகுணமாகப் பிரீதியின்மேம்பாடான அன்பும் அத்தியாவசியம் வேண்டுமென்பதைப்பற்றியும்



அவ்விரண்டினாலடையும் பயன்களைப் பற்றியும் இதுவரையிற் கூறிமுடித்தோம். இனி விடாமுயற்சியை அதற்கநுகுணமான வைராக்கியத்தோடுசேர்த்துக் கூறுவோம்.

மெய்ஞ்ஞானமார்க்கத்தி லாசையுதித்துப் புத்திநுட்பத்துடனாராய்ந்து, அவ்வாறாராய்ந்த விஷயமேம்பாட்டா லன்புதோன்றிக் கவனமாறாதிருக்கினும், ஒவ்வோர்கால் இவ்வுலகமார்க்கப்பிரீதி அதனை மறக்கச்செய்து தன்வசமாக்கினுமாக்கும். இவ்வாறனேகர் மெய்ஞ்ஞானமார்க்கத்திற்சென்று திடம்பெறநில்லாது அஞ்ஞானமார்க்கத்தில் மீண்டும் வந்துவிட்டார்களென நாம் கேள்வியுறுவது மல்லாமல், "மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டனன்" "மறந்துவிடுத்தேன் மதிகெட்டேன்" என அன்னோர் வாக்கியங்களை வாசித்துமிருக்கின்றோமாகலின், அக்கவனம் மாறாதிருப்பதற்கு விடாமுயற்சியும் அதற்கநுகுணமான வைராக்கியமும் அவசியம் வேண்டும். விடாமுயற்சி என்பது - நாம் எடுத்துக்கொண்ட காரியத்தை முடிப்பதற்கான முயற்சியை நாம் செய்தபோதிலும், அம்முயற்சி அக்காரியத்திற்கு நேரடுத்ததாயமையாமையாலோ, அன்றி அக்காரிய முடித்தற்குரிய காலம் வாய்க்காமையாலோ நிறைவேறாமற் போவதுமுண்டு. அவ்வொருமுறையில் நிறைவேறாமையைக்கொண்டே அயர்வுற்று அம்முயற்சியைக் கைவிடாமல் அடுத்தடுத்து முயலுதலாம். அவ்வாறு முயலவேண்டுதல் கடமையென்றன்றோ? "உறுதிபயப்ப கடைபோகாவேனு - மிறுவரைகாறுமுயல்ப" எனப் பெரியோர் கூறியுள்ளார். இவ்வாறடுத்து முயலுதற்கநுகுணமா யிருப்பதெது? எடுத்த காரியத்தை எவ்வாற்றினு முடிக்கவேண்டுமென்னும் திடச்சித்தமான வைராக்கியமன்றோ! சாதாரணமான உலகமார்க்கத்திற்குரிய ஓர் விஷயத்திற்கே விடாமுயற்சியும் வைராக்கியமும் அத்தியாவசியம் வேண்டுமென்று மேற்கூறிப்போந்ததால் வெள்ளிடைமலைபோல் விளங்க, உலகமார்க்கத்திற் கதீதப்பட்ட மெய்ஞ்ஞானமார்க்கத்திற்கு அவ்விரண்டும் இன்றியமையாதனவென்றியம்பவும் வேண்டுமோ ? மேலும், சர்வசிருஷ்டிகளிலும் மேம்பட்ட சிருஷ்டியான மானிடர்களாகிய நாம் சித்திபெற்றுவிட்டால் நம்மால் முயற்சித்து முடிக்கக்கூடாத விஷயமொன்றுமேயில்லை. ஆதலால் உலகமார்க்கப் பிரீதியினாலே மெய்ஞ்ஞானமார்க்கப்பிரீதி மறக்கநேரிடாவாறு விடாமுயற்சியும் வைராக்கியமும் கடைப்பிடியாகக் கொள்ளவேண்டும். இவ்வாறான அறுகுணங்களும் வாய்க்கப்பெற்ற அறிஞர்களை பேரி

ன்பவாசலிற் பிரவேசிப்பார்களென்றும், அவ்வாறு பிரவேசித்த வளவில் வேண்டுவார் வேண்டிற்றீயும் விமலர் அன்னோர் விரும்பியவண்ணம் விழைவுடனளிப்பரென்றும் மேலோர் கூறுவர்.

அத்தகைய அறிஞர்களே உலகவசியர்களென்றும், நாடினநாட்டங்கணன்கமையப்பெற்றோர்களென்றும், அவர்களே மிகத்தேர்ந்த பண்டிதோத்தமர்களென்றும், சோதிடநிபுணர்களென்றும், வாஸ்தவ மந்திரவாதிகளென்றும், கைவல்ய ரசவாதிகளென்றும், சக்கரவர்த்திகளென்றும், தனவான்களென்றும், சர்வபோக சுதந்தரர்களென்றும், பெரியோர்கள் பலராலும் புகழப்படுகின்றார்கள். அவர்கள் தவிர உலகத்துள்ள ஏனையவைத்தியர்கள் சோதிடர்கள் மந்திரவாதிகள் ரசவாதிகள் என்னும் இவர்கள் யாவரும், "மெய்யறியாப் பொய்யனுக்குப் பிள்ளை நால்வர் - வேதிக்கும் ரசவாதி மூத்தோனவான் - மையல் செயும் மாந்திரிகனிரண்டாம பிள்ளை - மதிகெடுக்குஞ் சோதிடன்றான் மூன்றாம் பிள்ளை - கையறியாப் பண்டிதனே நான்காம் பிள்ளை காசினியி லிவர்கொடுமை கணிக்கொணாது" என்று பெரியோருரைத்தபடி பொய்யர்களென்பதிற் றடையில்லை. ஏனெனில், மேற்கூறிய நால்வருள் முதற்பிள்ளையான ரசவாதி, அவ்வித்தை கூறியுள்ள நூலின்றேர்ச்சி சற்றுமின்றி, அந்நூலிலுள்ள பொருள் தனக்கு நன்கு விளங்கியதுபோல் நடித்துத் தானும் பயனடையாது பிறரையுங் கெடுக்கின்றமையானும், மாந்திரீகனென்பவனும் அவ்வாறே ஜாலவித்தைகளாற் பிறரை மயக்கி மந்திரசித்தி பெற்றோனைப்போல் நடிக்கின்றமையானும், சோதிடன் கிரகநிலைகளின் கணிதம் தனக்கே நன்குபுலப்படா திருப்பதுணர்ந்தும் புலப்பட்டவனைப்போல் நடிக்கின்றமையானும், பண்டிதன் தாதுலட்சணம் சற்றுமறியாதிருந்தும் சர்வமுந் தெளிந்தவனைப்போன்று நடிக்கின்றமையானும், இந்நால்வரும் பொய்யர்களென்பது திண்ணமே. இந்நால்வரும் பொய்யர்களாயின் இவ்வித்தைகளொன்றினும் மெய்யர்களில்லையோவெனின், மேற்கூறியவாறு மெய்ஞ்ஞானப் பிரீதி மேம்பாட்டால் விமலருள் பெற்ற மேலோரே இத்தகைய வித்தைகளில் மெய்யர்களாமென்க. அம்மெய்ஞ்ஞானிகள் இந்நான்கு வித்தைகளில் உண்மையாகத் தேர்ந்தவர்களென்பதோர் புகழோ? அவர்கள் கடலைக் கடப்பார்கள் ககனத்திற் பறப்பார்கள், உலகமுழுவதையும் உள்ளங்கையிலடக்குவார்கள், அன்றியும் தீராதநோயைத் தீர்க்கவும், முடியாதகாரியத்தை முடிக்கவும், பேய் பில்லி சூனியமென்பவற்றைப் போக்கவும்; கன்



மலையைப் பொன்மலையாக்கவும், அவ்வரும்பொன்மலையை அரதனமலையாக்கவும் வல்லபமுள்ளார்களெனவும் மகான்களெனவும் புகழப்படுவார்கள். ஆகையால் எவ்வகை வித்தைகளினும் இன்னோரே உண்மைப் பண்டிதர்களென்ப துரைக்கவும் வேண்டுமோ? இவர்களுண்மைப் பண்டிதர்களாகையால் உவகைக்கடலில் மூழ்கிய உத்தமோத்தமர்களென உலகமெங்கும் எக்காலத்தினுந் துதிக்கப்படுகின்றார்கள். இவ்வாறான மெய்ஞ்ஞானமார்க்கத்திற் கைவல்யமுற்ற பெரியோர்கள் பலரை நம்நேயர்களிலனேகர் கண்கூடாகத் தரிசித்தும், அவர்களியற்றிய அற்புதச் செயல்களைச் செவிகளாற் சிரவணித்தும், அன்னோருடைய அதிவிநோத அபூர்வசரிதங்களைப் பலநூல்கள் வாயிலாய்க் கற்றுணர்ந்து மிருக்கலாம். அம்மெய்ஞ்ஞானியர்களை முஹம்மதியர் ஔலியாக்களென்றும், இந்துக்கள் சுவாமிகள் பெரியோர்கள் மகான்கள் என்றும் கூறுவர். இவர்களுள் மகா அற்புதச் செயல்கள் புரிந்திருப்பவர்களுடைய சரிதைகளிற் சிலவற்றை அடுத்த பத்திரிகையிலெடுத்துக் கூறுவோம். (இன்னும்வரும்.)

## பத்திரிகை விஷயம்.

சர்வஜீவதயாபரராகிய கடவுளினருளால் இப்பத்திரிகைக்கு இம்மாதத்துடன் வயதொன்றாயிற்று. சென்றபதினொருமாதங்களினும் யாதோர்விக்கினமின்றி இதைநடத்திவந்த தயாபரருக்கு அனந்தந் துதிகூறி, இதை ஆதரித்துவந்த நமது பத்திரிகாபிமானிகளையும், மிக்கபிரயாசத்துடனே அநேகம் கையொப்பக்காரர்களை நமக்குச் சேகரஞ்செய்துகொடுத்த நமது ஏஜெண்ட்மார்களையும், இம்மை மறுமைப்பயன்களான சகலசம்பத்துக்களிலும் குறைவற்று வாழ்விக்கும்படி அச்சர்வஜீவதயாபரரைச் சதா பணிந்துகுறையிரக்கின்றோம். இன்னும் இப்பத்திரிகையை வாசித்துச் சாராம்சங்களைக்கிரகித்துத் தாங்கள் திருப்தியடைந்ததுமன்றி அத்திருப்தியை உள்ளபடி எமக்குக் கடிதமூலமாக அப்போதைக்கப்போ தறிவித்துவந்த கடிதநண்பர்களுக்கும் வந்தனமளிக்கின்றோம். உலகத்திற்குபகாரமாயிருக்கவேண்டுமென்னுங் கருத்துடனே இப்பத்திரிகையைத் தொடங்கியதற்கேற்றவாறு, அனேகர் இதனாற் பலவாறுபிரயோஜனமடைந்து வருவதாகவும், இதனை வாராந்தப் பத்திரிகை யாக்கல்வேண்டுமென்றும் நமக்கெழுதி வருகின்றார்கள். அவ்வாறு செய்தல் மிகச்சுலபமாய் முடிவதாயினும், "எண்ணித்துணிக கருமந்துணிந்தபி-னெண்ணுவமென்பதிழுக்கு" என்னும் ஆன்றோர் வாக்கியப்படி, எக்கருமத்தை

யும் இயற்றத்தொடங்குமுன் செவ்வனே யாலோசித்து, அது ஸ்திரமாகவும் நீடூழியாகவும் நடந்துவரத்தக்க ஏற்பாட்டுடன் நடத்துவதுதான் அழகென்பது நமது நண்பர்கட்குத் தெரியாததல்ல. ஓர் பத்திரிகையை நடத்திவருவது சுலபமான காரியமல்ல, அதனாலுண்டாகும் பிரயாசமும் கஷ்டமும் பொருட்செலவும் இவ்வளவென்று புத்திமான்களறிந்தேயிருக்கின்றார்கள். நமது பத்திரிகையின் செலவையும் பிரயாசத்தையும் சந்தாத்தொகையையும் யோசித்துப் பார்க்கையில் எவர்க்கும் நன்கு விளங்காமற்போகவில்லை. காகிதக்கிரயம் அச்சுக்கூலி படம்போடுவதற்கு என்கிரேவிங்சார்ஜ் பைண்ட்கூலி தபால்முத்திரைத்தொகை சிப்பந்திச்செல்வு ஆபிஸ்வாடகை என்னும் இவைகட்குரிய திரவியமொத்தத் தொகையையும், ஒவ்வோர் மாதத்திற்கும் வேண்டிய விஷயங்களை அவ்வவற்றிற்கேற்ற பற்பல நூல்களை யாராய்ந்து தேர்ந்தெடுத்தெழுதும் பத்திராதிபருடைய பிரயாசையையும் நன்குயோசித்து, இவ்வளவுக்கும் ஈடாக வேண்டிய சந்தாத்தொகையையும் யோசித்துப்பாருங்கள். இவ்வாறு பொருட்செலவு செய்து சரீரவுழைப்போடு மனோவுழைப்பும் எடுத்துக்கொண்டு பத்திரிகையை நடத்திவரவேண்டியது பத்திராதிபருடைய கடமையென்பதும், அப்பத்திரிகையை ஆதரித்துவரவேண்டியது பத்திரிகாபிமானிகளின் கடமையென்பதும் உலகறிந்த விஷயம். பத்திராதிபர் தம் கடமையைச் செலுத்திவருங்காலத்தில், பத்திரிகாபிமானிகளும் தங்கள் கடமையைச் செலுத்திவரவேண்டியது முக்கியமல்லவா? "தூண்டினவிரல் சுவர்க்கம்பெறும்" என்னும் பழமொழிப்படி, ஒவ்வோர் சந்தாதாரர்களும் தங்கள் தங்கள் நண்பர்களைத் தூண்டுதல்செய்து, தங்களாலியன்ற வரையில் ஒன்றிரண்டு புதிய சந்தாதாரர்களையேனும் சேர்த்துவரமுயன்று வருவார்களாயின், "பலதுளிபெருவெள்ளம்" என்பதுபோலச் சந்தாதாரர்கள் விர்த்தியாகிப் பத்திரிகைக்குரிய ஷை செலவுகளனைத்திற்கும் இத்தொகையே போதுமானதாய் நமது பத்திரிகை நாளாவர்த்தியில் விர்த்தியாய்வரும். நமது நேயர்களின் வேண்டுகோளுக்கிணங்க, இதுகாறும் பதினாறு பக்கங்களாக வெளிவந்த இப்பத்திரிகை, இனி 1901-ம் ௵ ஜனவரி௴ முதல் 24 பக்கங்களாக வெளிவரும். கடவுள் கிருபையால் காலம் செல்லச்செல்ல இப்பத்திரிகை விர்த்தியாகி வாராந்தப் பத்திரிகையாய் வருமென்பதிற் சந்தேகமில்லை. அன்றியும், அனேக அரியவிஷயங்களும் எழுதப்பட்டும் வருமென்பதை நம்நேயர்களறிவார்களாக. தற்காலத்துள்ள நம் கையொப்பக்காரர்களுட்



சிலர், கடவுள் விஷயத்தைப்பற்றி விரிவாயெழுதவேண்டுமென்றும், சிலர் கைத்தொழிலைப்பற்றி விரிவாயெழுதவேண்டுமென்றும், சிலர் வைத்தியத்தைப்பற்றி விரிவாயெழுதவேண்டுமென்றும், சிலர் ஜாலத்தைப்பற்றி விரிவாயெழுதவேண்டுமென்றும் பலவாறு நமக்கு எழுதிவருகின்றார்கள். அவர்களுக்கு யாம் கூறுவதாவது - ஒவ்வொருவரும் பொறுமையுடனிருந்து பத்திரிகையைக் கிரமமாக வாசித்துவரவேண்டு மென்பதும், இப்பத்திரிகை தற்காலம் ஒற்றைவயதுடைய பாலகனாயிருப்பதால் வயது முதிரமுதிர மேற்கூறிய பலவகை விருப்பத்தினர்க்கும் அப்பல்வேறு வகையினும் உபகாரியாய் விடுமென்பதிற் சந்தேகமில்லையென்பதும், அப்போது ஒவ்வொருவரும் தாம்தாம்கொண்ட கருத்துக்களை நிறைவேற்றிக்கொண்டு திருப்தியடையக் கூடுமென்பதுமே.

## 152. கருப்போற்பத்தி.

பிரஸவத்தைப்பற்றிப் பேசுவதற்குமுந்தி, ஸ்திரீகளுக்குக் கருப்பந்தரிக்கும் விவரத்தைத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகையால், அதைக்குறித்த சிலவிசேஷக்குறிப்புகளை இங்ஙனம் எடுத்துக்கூறுகின்றோம். ஸ்திரீகளின் கருப்பாசயத்து மேற்பாகத்தின் இரண்டுபக்கங்களிலும் முறையே 3-4 அங்குல நீளமுள்ள இரண்டுநாடிகள் வெளிப்பட்டிருக்கும். அவற்றுள் ஒவ்வொன்றின் நுனியினும் கிண்ணிபோன்ற உருவமுண்டாயிருக்கும். இக்கிண்ணிகளையொட்டிச் சிறிய வாதுமைக்கொட்டைகளையொத்த இரண்டுபீஜங்களிருக்கும். இவைமுறையே 1-$1\frac{1}{2}$-இன்ச் அளவுள்ளவைகளாயிருக்கும். இவற்றையே ஸ்திரீபீஜங்களென்றுரைக்கப்படும். இப்பீஜங்களிரண்டும் வெகுநுட்பமான சிறியஅணுக்களால் நிறைந்திருக்கும். அவ்வணுக்களே பிரவிடைகாலந்தொடங்கி ஒவ்வொன்றாய்ப்பக்குவப்பட்டு அணுமாத்திரமான சினையாய்வெளிப்படும். அந்தச்சினைகள் எப்போது வெளிப்படுமென்னில், பாலியஸ்திரீகள் பக்குவமடைவதற்குமுன் யௌவனதசையாரம்பிக்குங்காலத்தில், தேகத்திலே இரத்தபுஷ்டியுண்டாய்த் தேகம்மாறுதலடைந்து, மர்மஸ்தானத்திலுற்ற அவயவங்கள்விரிந்து, பீஜங்களிலுள்ள ஒருசினைமுற்றி அணுத்திரளாய் வெளிப்படும். இவ்வாறு ஸ்திரீக்குமுதல்முறை ஷை சினை வெளிப்படுவதற்கு, ருதுவாதலென்றும் பிரவிடையாதலென்றும் பவிஷ்டியாதலென்றும் திரட்டியாதலென்றும் புஷ்பவதியாதலென்றும் பெரியமனுஷியாதலென்றும் புத்தியறிதலென்றும் கூறுவர். முதல்முறை ருது

வாகும்போது மர்மஸ்தானத்திலும் சரீரத்திலும் சிலவித்தியாசங்களுண்டாகும். அவை-சரீரவலி கடுப்பு அசதி சோம்பல் அடிவயிற்றிற்பாரம் முகவேறுபாடு தொனிவேறுபாடு தனம்பருத்தல் சரீரகாந்தி முககாந்தி முகப்பருக்கள்புறப்படுதல் மர்மஸ்தானத்தில் உரோமங்கள் முளைத்தல் என்னும் இவைகளே. கருப்பாசயத்திலிருந்தூறிக்கொண்டிருக்கும் ரஜம் ஸ்திரீபீஜங்களிலுள்ள ஜவ்வில் நிறைந்தபிறகு சினை துரிதமாய் முதிரும். கருப்பாசயத்தில் அதிகமாய் உதிரம்பெருகுவதால், அதன் உட்சருமம் விம்மித்தடித்திருக்கும். சினைமுதிர்ந்து பீஜங்களினின்றும் புறப்படும்போது, இவ்வுட்சருமத்தில் நிறைந்திருக்கும் உதிரம் ஒழுகத்தொடங்கும். இவ்வண்ணம் இரண்டு மூன்று தினங்கள்வரையில் ரஜமொழுகிப்பிறகு குறைவுபட்டுக் கடைசியாய் முற்றும்நின்றுபோம். முதன்முறை பிரவிடையானபிறகு, 28 தினங்கட்கொருமுறை ஸ்திரீபீஜங்களிலிருந்து ஒருசிறுசினை பக்குவப்பட்டுவெளிப்படும். இவ்விதமாக ஒவ்வொருமாதத்திலும் ஒவ்வொரு சினை முற்றிவெளிப்படும். அப்போது கர்ப்பப்பையிலிருந்து ரஜம்ஊறிக்கொண்டிருக்கும். அவரவருடைய சரீரக்கூறுபாட்டிற் கேற்றவாறு, சிலருக்கு - 1 - 2 - நாள் வரைக்கும், சிலருக்கு 3 - 4 - நாள் வரைக்கும், சிலருக்கு 7 - 8 - நாள் வரைக்கும் ரஜம் ஒழுகும். அவ்வாறொழுகும் ரஜமும் சரீரக்கூறுபாட்டிற்கேற்றபடி சிலருக்கு-2 - 3 - பலம் நிறையுள்ளதாகவும், சிலருக்கு 5 - 6 - பலம் நிறையுள்ளதாகவும் ஒழுகும். ஆனால், பிணியுள்ளவர்கட்கு அளவுக்குமேற்பட்டும் அளவுக்குக்குறைந்தும் முற்றுமில்லாமலும்போகும். அவ்வாறே வியாதியுள்ளவர்களிற்சிலருக்கு ஒருமாதத்திற்குமேற்பட்டும் சிலருக்கு 28-தினங்கட்குட்பட்டும் ௸ ரஜவொழுக்குக்காண்பதுண்டு. இவ்வாறு ஒவ்வொருமாதமும் ரஜஸ்வலையாய்க்கொண்டு, சுமார் 40-45-50 வயதுவரையிலிருக்கும். பிறகு ௸ ரஜம்வெளிப்படாது.

(இன்னும்வரும்.)

## 153 தாதுபுஷ்டிக்குரசாயனம்.

வெங்காயச்சாறு தேன் என்னும் இவ்விரண்டையும் சமனெடையாக நிறுத்துக்காய்ச்சி நீர்சுண்டியபிறகு எடுத்து ஆறவிட்டுப் புட்டியினிரப்பிக்கொண்டு, காலையில்மட்டுமே ஒருபலம் கொஞ்சம் ஜலத்திற்கலந்து சாப்பிடவும். அசதி சோம்பல் முதலியவை நீங்கித் தேகத்திற்கும் இடைக்கும் வலுவைக்கொடுத்துத் தாதுபுஷ்டியுண்டாக்கும்.



## 154. தாதுபுஷ்டிக்கு மாஜூன்.

உலர்த்தி இடித்துத்தூள்செய்து வஸ்திரகாயம்பண்ணிய ஆனைநெருஞ்சிற்றூள்-பலம்-4 ௸ ஆனைநெருஞ்சிற்சமூலமாகப் பச்சையாய்க்கொண்டுவந்து இடித்துப்பிழிந்தசாறு-பலம்-12-இச்சாற்றைக் கொஞ்சங் கொஞ்சமாய் ௸ சூரணத்திற்கொடுத்து வெய்யிலிற்காயவைத்தெடுத்துப் புட்டியினிரப்பிக்கொள்ளவும். இவ்வாறுசெய்த சூரணத்திற்பலம் இரண்டும் தோல்சீவிய சுக்குத்தூள் துலா-$2\frac{1}{4}$ம், அக்கிராகாரத்தூள் துலா-$2\frac{1}{4}$ம் ஒன்றாய்க்கலந்து, அத்தூள்கள்கொள்ளும்வரையில் இஞ்சிமுறப்பா அல்லது இஞ்சிதித்திப்பிலுள்ள கற்கண்டுப்பாகுசேர்த்துக் கலந்துவைத்துக்கொண்டு, பிரதிதினமும் காலையில் மாத்திரம்-$2\frac{1}{4}$-துலாம் அளவாகச்சாப்பிட்டுக் காய்ச்சியபசுவின்பால் ஆழாக்குசாப்பிடவும். இது வீரியவிர்த்தியையுண்டாக்கித் துரிதஸ்கலிதத்தைநிறுத்தி மேகவெட்டையைப்போக்கி விசேஷ பசியுண்டாக்கும்.

## 155. வெடியுப்புச் சுன்னம்.

வெடியுப்பு-பலம்-1-ஆமையோடு - பலம் - 3 - இவ்விரண்டினுள் ஆமையோட்டைச்செவ்வனே இடித்துத்தூள்செய்து, அத்தூளிற்பாதியை ஓர்குடுவையிற்போட்டு, அதன்மேல் வெடியுப்பைவைத்து, மீண்டும் மற்றைப்பாதி ஆமையோட்டுத்தூளையும் அதன்மேற்கொட்டி, குடுவைவாய்க்குச்சில்லிட்டுச் சீலைமண்செய்து, 30 வரட்டியிற் புடம்போடச்சுன்னமாம். இதை நீரடைப்பு சதையடைப்பு முதலிய வியாதிகட்கு அனுபானத்திற் கொடுக்கத்தீரும்.

## 156. தேன்மெழுக்கைச் சுத்திசெய்ய.

தேன் அடைபிழிந்தபிறகு, அந்தமெழுக்கை ஒருபாத்திரத்திற்போட்டு அடுப்பேற்றி யுருக்கி, வேறொரு வாயகன்ற பாத்திரம்நிரம்பச் சுண்ணாம்புத்தெளிவுநீர்வார்த்து, அப்பாத்திரத்தின் வாய்க்கு துணணிய கண்களுள்ள மயிர் அல்லது இருப்புச்சல்லடையை வைத்து, உருக்கிய மெழுக்கையெடுத்து அதில் வார்க்கவும். மறுபடியும் அம்மெழுக்கை யெடுத்துருக்கி முன்போல் வடிகட்டவும். இவ்வாறு ஏழுமுறைசெய்தால் மெழுக்குவெண்ணிறமாகிவிடும். ஆனால், ஒவ்வோர் முறையினும் சுண்ணாம்புத் தெளிவுநீர் புதிதாயிருக்க வேண்டும்.

## 157. நாட்டுச்சவுக்காரம் செய்யும்முறை.

சுண்ணாம்புக்கல்-சேர்-5. பூநீறு-சேர்-10, தேங்காயெண்ணெய்-சேர்-10, கொழுப்பு-சேர்-5. இவற்றுள் சுண்ணாம்புக்கல்லை-40-சேர்

ஜலத்திலும், பூநீற்றை-20-சேர் ஜலத்திலும் தனித்தனி கரைத்து வெவ்வேறு பாத்திரங்களில் வைத்துவிடவும். ஒருநாளைக்கு மூன்று முறை கலக்கிவைத்து மூன்றுநாளைக்குப் பிறகு, ஒவ்வொன்றிலும் தெளிவெடுத்துக்கொண்டு, இரண்டுவகைத் தெளிவுநீரையும் ஒன்றாய்க்கலந்து ஒரு பாத்திரத்தில் வார்த்துக்கொண்டு, அடுப்பேற்றிச் சுடவைக்கவும். கொழுப்பையும் எண்ணெயையும் ஒன்றாய்ச் சேர்த்துருக்கி, முன் சுடவைத்திருக்கும் தெளிவுநீரில் உருக்கிய எண்ணெயைக் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டுக் கிளறிக்கொண்டே வரவும். குழம்பிவரும் தருணத்தில் அச்சில் வார்த்துக் கொள்ளலாம்.

### வெள்ளைச்செம்பு அல்லது
### 158. ஜர்மன்ஸில்வர் செய்யும்முறை.

தாம்பரம்-4. நாகம்-3. நிக்கல்-2. என்னும் எடையாக நிறுத்தெடுத்து, இவற்றுள் நிக்கலை முதலில் ஓர் கெட்டியான மூசையிலுருக்கிக்கொண்டு. தாம்பரத்தை அதிற்போட்டு இவ்விரண்டும் செவ்வனேயுருகிக் கணவிட்டாடும்போது, நாகத்தைப்போட்டு அதுவும் அவற்றோடு கலந்தவுடனே, அதிசீக்கிரத்தில் இறக்கி இஷ்டமான அச்சில் வார்த்துக்கொள்ளலாம்.

### 159. உயர்வான ஜர்மன்ஸில்வர் செய்யும் வேறுமுறை.

தாம்பரம்-5. நாகம்-3. நிக்கல்-3. என்னும் எடையாக நிறுத்தெடுத்து இவைகளையும் முற்கூறிய முறைப்படியே செய்துகொள்ளவும்.

### 160 வேறுமுறை.

நிக்கல்-2. தாம்பரம்-5. நாகம்-2. என்னும் எடையாக நிறுத்தெடுத்து இவைகளையும் முன்போற்செய்துகொள்ளவும். இது மிக வெண்மையாயிருக்கும்.

### 161. திராட்சைச்செடி.

வெண்ணிறத்திராட்சச்செடியில் ஒருகிளையும் கருநிறத்திராட்சச்செடியில் ஒருகிளையும் அறுத்து, இவ்விரண்டையும் ஒவ்வொர்பக்கத்திற் கொஞ்சம் கொஞ்சம்சீவி, சீவிய இரண்டுபக்கங்களையும் ஒன்றாகப் பொருத்திவைத்து, மிருதுவான நூலினாற்கட்டிப் பூமியிற் புதைத்து நல்லஜலம் வார்த்துவரவேண்டும். இவ்வாறுசெய்தால் இச்செடியிலே வெண்ணிறம் கருநிறம் செந்நிறம் என்னும் மூவகை நிறங்களுள்ளகனிகள் முறையே ஒன்றின்பின் ஒன்றாக உண்டாகும்.



### 162. வெள்ளரிவிதை.

பசுவின்பால் தேன் என்னும் இவ்விரண்டையும் ஒன்றாகக்கலந்து வெள்ளரிவிதையை அதிற்பிசைந்து ஒருநாள்வைத்து, மறுநாள் எடுத்துப் பூமியில்நட்டு நல்லஜலம் விட்டுவரவேண்டும். இவ்வாறுசெய்துவந்தால், அதன்கனி பெரிதாயிருப்பதுடன் விசேட உருசியாகவுமிருக்கும்.

### 163. இனிப்பு மாதுளை.

இனிப்புமாதுளஞ்செடிக்குப்பிரதிதினம் ஓர் ஆட்டின் இரத்தம் வீதம் 6மீ வரையில் விட்டுக்கொண்டேவரவேண்டும். இவ்வாறு செய்துவந்தால், அச்செடியின்கனிகள் விசேடமாயிருப்பதுடன் விதைகள் பருமனாகவும்உயர்ந்தகுணமுள்ள கெம்பைப்போன்ற சிவப்புநிறமாகவும் மிக்க அழகாகவுமிருக்கும். இனிப்புமாதுளஞ்செடியைநட்டு ஒருவருடங்கழிந்தபிறகு, புளித்தகாடியை நாளொன்றுக்குக் காற்படிவீதம் ஒருமாதம்வரையில் அதன்வேரில் விட்டுக்கொண்டேவந்தால் இனிப்புமாதுளமாய்மாறிக் கனிகள் அதிகபுளிப்பாயிருக்கும்.

### 164. புளிப்பு மாதுளை.

புளிப்பு மாதுளஞ்செடியில் 6 மாதம்வரையில் மனிதர்மூத்திரம் விட்டுக்கொண்டேவந்தால் புளிப்புமாறி இனிப்பாய்விடும்.

### கைத்தடி குடை பாதரட்சை.

ஒருவர் வெளியே புறப்படுகையில் கைத்தடி குடை பாதரட்சை என்னும் இம்மூன்றும் இன்றியமையாதனவாய் வேண்டற்பாலனவென்பதையும், அவ்வொவ்வொன்றாலும் விளையும் பயன்களிவையிவை என்பதையும் அடியில்வரும் மூன்று வெண்பாக்களினுரைகளால் நன்குணரலாம்.

### 165. கைத்தடியின்பயன்.

முனியதட்டு முட்டீக்கு முன்னீ ரளக்குங்
கனியுதிர்க்குங் கவ்வுநாய் காக்குந்—தனிவழிக்குப்
பத்திரம தாக்கும் பயந்தீர்க்கும் பாம்படிக்குங்
கைத்தலத்திற் றண்டிருந்தக் கால்.

(இ - ள்.) ஒருவர் வெளியே போகையில் அவர்கையில்தடியிருக்குமாயின், அது முனி முதலியவற்றை அச்சுறச்செய்யும், எதிரிலுள்ள முள்ளைத்தாக்கிவிடும், முற்பட்டவழியிலுள்ள நீரையளந்து ஆழங்காட்டும், ஓர் விருட்சத்திலுள்ள பழத்தையுதிர்த்துக்கீழே தள்ளும், அவரைக் கடிக்கவருகின்ற நாயினின்றும் காப்பாற்றும், ஒன்றியாய்ச்செல்லும் மார்க்கத்திற்குச்சாக்கிரதையை விளைவிக்கும், அச்சத்தைப்போக்கும், பாம்பைக்கொல்லும். எ - று.

எனவே, ஒருவர் கையிற்பிடித்த தடியானது, அரவத்தாற் பயத்தை யுண்டாக்கும் பேய்முதலியவற்றை அதட்டியோட்டுவதற்கும், வழியிற்கிடக்கும் முள்ளைத்தூக்கியெறிவதற்கும், எதிரிலுள்ள ஜலத்தின் ஆழத்தை அளந்துபார்ப்பதற்கும், தாம் இச்சித்த ஓர் கனியை அவ்விருட்சத்தினின்றும் உதிர்ப்பதற்கும், கடிக்கவரும் நாயையோட்டித் தமமைக் காப்பாற்றிக்கொள்வதற்கும், ஒத்தாசையில்லாத மார்க்கத்திற்குச் சந்தடிகாட்டிக்கொண்டு சாக்கிரதையாய்ப் போவதற்கும், கள்ளர் முதலியோர்வரினும் இத்தடியாலடித்துப் போக்கலாமென்னும் தைரியத்தாற் பயமற்றுச்செல்வதற்கும், பாதையிற் பாம்பைக்காணின் அதைக்கொல்வதற்கும் உபயோகமாகுமென்றபடி. இது உடையான்செயலை உடைமைமேலேற்றிக்கூறியவாறு.

## 166. குடையின்பயன்.

பகலோன் றெறுங்கிரணம் பாய்பறவை யெச்ச
மிகமே லுறுதகற்றும் விண்ணின்—முகிலதனாற்
பெய்யுமழை யைத்தடுக்கும் பேரழகு மாமொருவர்
கையிற் குடையிருந்தக் கால்.

(இ-ள்.) ஒருவர் கையிற்குடையிருந்தால், அக்குடை தன்னையுடையவர்க்கு, சூரியனுடைய கிரணமும ஆகாயத்திற் பறக்கின்ற பட்சிகளின் உச்சிட்டங்களும், விசேடமாக மேலே படாதபடி நீக்கும், ஆகாயத்திலே மேகத்தினாற் பொழியப்படும் மழைநீர் மேலே விழாவாறு தடைப்படுத்தும், மிக்க அழகு மாகும். எ - று.

எனவே, ஒருவர் கையிற்பிடித்த குடையானது, சூரியனுடைய வெப்பத்தையும் பறவையெச்சங்களையும் தம்மேற்படாமற் செய்துகொள்வதற்கும், ஆகாயத்தினின்றும் மேகங்களாற்பொழியப்படும் மழைநீர் தம்மேற்படாமற்றடுத்துக்கொள்வதற்கும் உபயோகமாவதன்றியும் அழகாகவுமிருக்கும் என்றபடி. இதுவும் உடையான் செயலை உடைமைமேலேற்றிக்கூறியவாறு.

## 167. பாதரட்சையின்பயன்.

கல்லு முறுத்தாது காலின்முட் டையாதிங்
கெல்லமார்த் தாண்டன்சூ டேறு-துதொல்லைமிகு
மாலை யிருளில் வழிநடக்கக் கூசாது
காலிற் செருப்பிருந்தக் கால்.

(இ-ள்.) ஒருவர் காலிலே செருப்பிருக்குமாயின், அவருக்குக் கற்கள் உறுத்தாது, கால்களில் முட்கள் ஏறாது, இவ்வுலகத்திற் சிறந்த ஒளியுடையவனான சூரியனது உஷ்ணம் சிரத்திற்சேராது, துன்பம் விசேடப்படுகின்ற மிகுந்தமயக்கமுள்ள இருட்காலத்திலே, பாதையில் நடப்பதற்குக் கால் கூச்சமுறாது எ-று.



எனவே, ஒருவர் தம்காலிற் போட்டுக்கொண்ட செருப்பானது, கால்களில் கல்லுறுத்தாதிருப்பதற்கும், முள்தைக்காதிருப்பதற்கும், சூரிய உஷ்ணம் சிரசிற்சேராதிருப்பதற்கும், இருட்காலத்தில் வழிநடக்கக் கால்கள் கூசுதலடையாதிருப்பதற்கும் உபயோகமாம் என்றபடி.

## 163. நூல் அல்லது வஸ்திரத்திற்குச் சாயங்கொடுக்கும் விதம்.

சீர்மைச் சரக்கு வருவதற்கு முந்தி இந்தியாவில் வஸ்திரங்கட்குப் பலவகையான பட்டைச் சாயங்களும் கட்டைச் சாயங்களும் வித்துச் சாயங்களுங் கொடுத்து வந்தார்கள். சீர்மையிற் பல்வேறான அழகுள்ள சாயங்கள் தயார் செய்யப்பட்டு இவ்விடத்திற்கு வந்த பிறகு, சுளுவான வழியில் வேலைசெய்யத் தொடங்கி விட்டார்கள். அவ்வகையான சுருக்க வழிகளையே இங்கெடுத்துக் கூறுகின்றோம். அவற்றுள், நூல்-துணி-பட்டு-கம்பளி-நார்-கோரை-ஓலை-காகிதம்-தகடு என்னும் இவைகளுக்குப் போடப்பட்ட அல்ஜரின் சிவப்பு கந்து சிவப்பு-பச்சை-கிளிப்பச்சை-மஞ்சள்-பட்டுமஞ்சள்-காலமஞ்சள்-கறுப்பு-ஊதா-ரோஸ்-கெட்டிரோஸ்-ப்ரவுன்-காக்கி முதலிய மீப்பாய்ச்சாயம் பவுடர் சாயங்களும், துணிகளின்மேல் அச்சிடுகிற விதங்களும், அப்போதைக்கப்போது முறையே ஒவ்வொன்றாய் எழுதிக் கொண்டு வருவோம்.

பட்டணம் லேஞ்சி சிவப்புச்சேலை முதலியவைகளுக்குக் கொடுக்கிற சிவப்புச் சாயத்திற்கு அல்ஜரின் அல்லது கொழும்புச்சாயம் என்று பெயர். இதன்பாகம் எப்படியென்றால்,— எட்டு ராத்தல் நிறைகொண்ட வெள்ளைக்கச்சைப்பீஸ் துண்டு ஒன்று அல்லது வெள்ளை நூலுக்குச் சாயங்கொடுக்க வேண்டுமானால் எட்டுராத்தல் நூல் எடுத்துக்கொள்ளவும். அவைகளிற் கஞ்சியிருந்தாற் செவ்வனே ஜலத்தில் அலம்பிக் கஞ்சியைப்போக்கவேண்டும். அதன்பிறகு அதற்காகப் பிச்சுக்காரம் செய்யவேண்டும். அஃதெப்படியென்றால்:—நல்லெண்ணெய்படி-அரை-அப்பளாகாரம்-வீசை-உ. ஒரு பாத்திரத்திற் சலம்வார்த்து அப்பளாகாரத்தை அதிற்போட்டுக் கரைத்து, அதன்பின் நல்லெண்ணையை அதில் விட்டுக் கலந்துகொ

ண்டால் அது பால்போலாய்விடும். இதைத்தான் பிச்சுக்காரமென்று சொல்லப்படும். முன்பு கஞ்சிபோக்கி வைத்திருக்கும் நூல் அல்லது துணியை இந்தக் காரத்தில் நனைத்தெடுத்துப் பிப்பாயை இரண்டாக அறுத்து ஒரு பாதிக்குள் அதைப்போட்டுக் காலாற் செவ்வையாய் மிதிக்கவேண்டும். பிறகு பிழிந்து காயவைக்கவேண்டும். ஒருநாளைக் கொருமுறையாகப் பத்துநாளைக்குப் பத்துமுறை இவ்விதம் செய்து, அதன்பின் சுத்தஜலத்திற் செவ்வையாய் அலம்பிப் பிழிந்து காயவைத்துவிடவேண்டும்.

அதன்பின் ஒரு அண்டாவில் ஜலம்விட்டு, உலர்ந்த காசாந்தழை இரண்டுவீசை நிறுத்தெடுத்திடித்து அதிற்போட்டு அரைமணிநேரம் ஊறவைத்த பிறகு, அலஜரின் என்னும கொழும்புச்சாயத்தில் ஒன்றேகால் பவுண்ட் எடை அதிற்போட்டுக் கலக்கி, அதன்மேல் காரத்திற்போட்டு வைத்திருக்கும் நூல் அல்லது துணியை அதிற்போட்டு எல்லாவிடங்களிலும் படும்படி செவ்வையாய் அலசி, 2-4-6-8 என்னும் மணிநேரங்கள் வரையிலும் அல்லது ஒருநாள் முழுமையும் ஊறவைக்கலாம். (எவ்வளவுநேரம் அதிகப்பட ஊறவைக்கின்றோமோ அவ்வளவுக்கும் நன்மையேயாம். ஆனால், ஒருநாளைக்கு மேற்பட்டு ஊறவைக்கவேண்டியதில்லை.) அதன்பின்பு அண்டாவுடனே தூக்கி அடுப்பில் வைத்தெரித்து, ஜலத்திலிருக்கும் சாயம் துணியிற் பிடித்து ஜலம் தெளிகின்றவரையிலெரித்திறக்கி, சுத்தஜலத்தில் அலம்பிக் காயவைத்து மடித்துக்கொள்ளவேண்டும். எட்டுராத்தல் துணிக்குக் காசாந்தழை-வீசை-2. சாயம் $1\frac{1}{4}$ பவுண்ட். ஆனால் எத்தனை ராத்தல் துணி அதிகமாய்ப் போடப்படுகிறதோ அத்தனைக்குத் தக்கபடி காசாந்தழையையும் சாயத்தையும் அதிகமாக்கிக் கொள்ளவும். காரத்திற்கு நல்லெண்ணெய் $\frac{1}{2}$ படி முதல் நான்குபடி வரையிற் சேர்க்கலாம். எவ்வளவு அதிகமாய்ச் சேர்க்கின்றோமோ அவ்வளவுக்கும் கெட்டிச்சாயமாய் நிற்கும். மறுபத்திரிகைமுதல் தொடர்ச்சியாய் மற்றைச் சாயங்கள் கொடுக்கிற விதமும் புடவை லேஞ்சு முதலியவை அச்சடிக்கின்ற விவரமும் விரிவாய்க் கூறிவரப்படும். இந்தக் கொழும்புச்சாயத்தில் * 10-16-20-32-40-70-100, டிக்ரிவரையில் இருக்கின்றன. உயர்ந்த டிக்ரியாயிருந்தால், சாயம் நெடுநாள் வரையில் கெட்டிச்சாயமாய் நிறமாயிருக்கும்.

* இந்த சாய்தினுசுகள் சாப்புகளில் வாங்கலாம் ஒவ்வொருபவுண்டின் கிரயம் அடியில் வருமாறு 16-டிக்ரி, ரூ. 1. 20-டி, ரூ. 1-2. 40-டி, ரூ. 3-0-0. 100-டி, ரூ. 5-8 0. வாங்கியனுப்பும்படி நமக்கு முற்பணமனுப்பினால் அனுப்பக்கூடும் முற்பணமனுப்பாவிடில் கடிதம் கவனிக்கப்படமாட்டாது.



## ஆப்தவாக்கியங்கள்.

கல்வியைக்கற்பது முக்கியமாயினும் அதைப்போல் நடப்பது அதனினுமுக்கியம்.

நீ நன்னடக்கையுடையவன்றானென்று முதலில் நீ உன்னையறிந்துகொண்டால் பிறகு எல்லாரும் உன்னையறிந்து மதிப்பார்கள்.

குருவின் உபதேசத்தைக்கவனி, அவர் ஒழுக்கத்தைக் கவனியாதே.

சொல்வோன் மூடனாயினும் அச்சொல் மூத்தோர்சொல்லாயின், அச்சொல்லைக் கவனிப்பதை விட்டு அவன் மூடத்தனத்தைக் கவனியாதே.

பைசாவைக் காப்பாற்றினாற் பைக்கட்டு நிரம்பப் பணத்தைக் காண்பாய்.

தனது பூர்வஸ்திதியை நினைப்பவனே சதாகாலமும் சிறப்படைவான்.

## கண்களுக்கெட்டும் சிருஷ்டிகளெல்லாம் கர்த்தருண்மையைக்காட்டுகின்றன.

ஓர் ஊரிலுள்ள கூலிவேலைசெய்யும் ஒருத்தி, தன் இரண்டு குமாரர்களுடன் வேலைக்குப்போய், சாயந்திரம் 6 மணிக்கு வீட்டுக்கு வந்தாள். வீட்டில் தீபம ஏற்றிவைத்திருப்பதைப்பார்த்த அவ்விரண்டு குமாரர்களும், வீட்டில் ஒருவருமேற்றாமல் தீபம் தானாகவே எரிந்துகொண்டிருக்கிறதென்றெண்ணி ஆச்சரியப்பட்டுத் தங்கள் தாயைப் பார்த்து, "அம்மா! இத்தீபம் தானாகவே எவ்வாறெரிந்துகொண்டிருக்கின்றது." என்று கேட்டார்கள். அதுகேட்ட தாயார், "பிள்ளைகளே! யாராவதொருவர் ஏற்றிவைத்திருப்பார்கள்." என்றாள். "வீட்டில்தான் ஒருவரு மில்லையே? இத்தீபம் தானாகத்தான் எரிகின்றது" என்று மீண்டும் அக்குமாரர்கள் கூறினார்கள். அப்போது வெளியேபோயிருந்த அப்பிள்ளைகளின் பிதாவந்து, அப்பிள்ளைகளை நோக்கி, "மைந்தர்களே! நானே இத்தீபத்தை ஏற்றிவைத்து வெளியிற்போய் வந்தேன், ஒருவரும் ஏற்றாமல் தீபம் தானாக எரியாது, இதுமாத்திரமன்றி இன்னும் எவ்வகைக் காரியங்கட்கும் ஒவ்வோர் கர்த்தாவிருக்கவேண்டும்." என்று தெளிவாய்ப் புத்தி கூறினான். மறுநாட் காலையிற் சூரியோதயமாகும்போது அப்பிள்ளைகள் தந்தையை நோக்கி, "எந்தையே! நேற்றிரவு தீபம் தானாகவே எரியாதென்று சொன்னீர்களே! இதோ பிரகாசிக்கின்ற இத்தீபத்தைக் கொளுத்தினவர் யார்?" என்றார்கள். அதுகேட்ட பிதா "ஆ ஆ என் அருமைப்புத்திரர்களே! என்று முத்தமிட்டு முகத்தோடு முகம் வைத்தணைத்துக்கொண்டு, "சர்வலோக சிருஷ்டிகரும் சர்வஜன ரட்சகருமாகிய கடவுள் ஒருவரிருக்கின்றார். அவர்தான் இத்தீபத்தை ஏற்றியிருக்கின்றார். அது தானாக உற்பத்தியாகாது" எனக்கூறினான். ஆதலாற் கண்களுக்குப் புலப்படும் எவ்வஸ்துவைக்குறித்து யோசிக்கினும கடவுளுண்மையைக் காட்டுமென்பது கரதலாமலகமாக விளங்குகின்றதல்லவா?

## சமாச்சாரம்.

### ப்ரான்ஸ்தேசத்தில் குருகர்.

குருகர் ப்ரான்ஸ் தேசத்திற்குவந்தபோது அங்குள்ளப்ரெஸிடெண்ட் முதலாகிய சகலஜனங்களும் அதிக மரியாதையுடனும் ஆடம்பரத்துடனும் எதிர்கொண்டு அழைத்து கௌரவப்படுத்தினார்கள். ஆண்சிங்கங்களைப்போன்ற பராக்கிரமம்வகித்த ஆங்கிலேயருடனெதிர்த்துப் போர்புரிந்து அநேகம் வீரர்களைப் பலிகொடுத்துத் தோல்வியடைந்து தன்தேசத்தையுமிழந்து தப்பித்துக்கொண்டு இதரதேசயாத்திரை சென்றாலும், சென்ற இடங்களெல்லாம் மரியாதைகளும் கௌரவப்பட்டங்களும் கிடைத்துவருகிறதல்லவா? இவர் மஹாதீரவீரசூரரென்று சொல்வதற்குத் தடையுண்டோ? மேலும், அவருடையமனைவியாருக்கனுப்பியதந்தியில், "உன்னை ஆசீர்வதிக்கின்றேன், கடவுளை நம்பு. அவரே எல்லாவற்றையும் ஆள்கின்றார். கடவுளை நம்பினவர் கடைத்தேறவரென்பது திண்ணம்." என்று செப்புவதைப்பார்த்தால், இவர் கடவுள்பக்தியுடையவரென்றும் ஒருவாறு சொல்லலாம். ஆனால், ஆங்கிலேயர்களைத் தூஷணித்துப்பேசுவது இவருடைய அந்தஸ்துக்கு ஒருபோதும் அழகன்று.

### குருகர்.

பாரிஸ்நகரத்திலுள்ள டிவல்லிஓட்டலில் மிஸ்டர் குருகருக்கு ஓர்வந்தனோபசாரப் பத்திரிகை படிக்கப்பட்டபோது, மிஸ்ட்டர் குருகர் போவர் விஷயங்களை மத்தியஸ்தத்தால் தீர்க்கவேண்டுமென்றும், சுவாதீனங்கிடைக்கிறவரையிற் போவார்கள் சண்டையைவிடமாட்டார்களென்றும் கூறினார். மிஸ்ட்டர் டெல்காஸியுடன் ஒருமணிநேரம் ரகஸியமாய்ச் சம்பாஷணை செய்தபோது, தாம்கோரிவந்த கோரிக்கையை நிறைவேற்றிக்கொண்டபிறகு தான் ட்ரான்ஸ்வாலுக்குத்தாம் போவதாகவும் சொன்னார். மிஸ்ட்டர் ரோச்சிபோர்ட் கிராஞ்சேய்க்கனுப்பும்படி ஒருகௌரவக்கத்தி குருகரிடம்கொடுத்தார்.

### இப்படியல்லவா அதிர்ஷ்டம் வாய்க்கவேண்டும்?

பாரிஸ்நகரத்தில் தினந்தோறும் கூலிவேலைசெய்து ஜீவனம் செய்துகொண்டுவந்த ஓர் ஏழைப்பெண், ஒருநாள் தன்குடிசையிற் பொன்வைத்து எலிபிடிக்கும்போது, ஓரெலி தப்பியோடி ஓர் செங்கல்லின் மறைவிற் பதுங்கிக்கொண்டது. அதைப்பிடிப்பதற்காக அச்செங்கல்லைப் பெயர்த்தெடுத்தவுடனே, அக்கல்லின்கீழ் 40000 ப்ராங்பெறுமானமான நாணயங்களும் நோட்டுகளும் பத்திரங்களும் இருந்தனவாம். இவ்வாறிப்பெண் பணக்காரியாகவே அநேகம் பிரபுக்கள் இவளை மணஞ்செய்து கொள்ளவந்தார்களாம்.

### ருஷியச் சக்கரவர்த்தி.

சிலநாட்களுக்குமுன் நெருப்புக்காய்ச்சலால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த ருஷியச்சக்கரவர்த்தி இப்போது சௌக்கியமடைந்து வருகின்றாராம்.

கடவுள் துணை.

# விநோத விசித்திரப் பத்திரிகை.

1901-ம் ௵

புஸ்தகம் II] ஜனவரி௴ 5உ சனிக்கிழமை. [No. 1

## ஞானம்.

187-ம் பக்கத்தொடர்ச்சி.

ஞானமார்க்கத்தில் விற்பன்னராவதற்குப் புத்திநுட்பம் கவன
சக்தி ஆசை அன்பு வைராக்கியம் விடாமுயற்சி என்னும் இவைகள்
அவசியம் வேண்டுமென்பதைப்பற்றி இதுகாறும் கூறிவந்தோம்
அவைகளோடு பக்தியும் அவசியம்வேண்டு மென்பதைப்பற்றி, இப
போது தெரிவிக்கின்றோம். பக்தி என்பது வணக்கம்-அதாவது - த
னக்குமேற்பட்டவரொருவரிருக்கின்றாரென்றும், அவருக்குவணங்கி
நடக்கவேண்டுமென்றும் நிச்சயங்கொண்டுநடத்தல். இவ்வாறு நிச்ச
யங்கொண்டதால் அவருக்குக்கீழ்ப்படியாமல் நடந்தாற்கெடுதிநேரு
மென்பது விளங்காமற்போகாது ஆகையினாலே பக்தி என்பது கட
வுளுடைய கட்டளைக்குவிரோதமாய் நடந்தால் தண்டனை நேருமெ
ன்னும் அச்சத்துடனே அவருடையகட்டளையை அணுவேனு மீறுமல்
அந்தக்கரணசுத்தியாய் நடத்தலாம், அவ்வாறுநடந்து அவரைய
றிந்துகொள்பவரைத்தான் பக்தர் என்று சொல்லப்படுகின்றது. க
வுளாலியற்றப்பட்ட கட்டளைகளுக்கு வேதமென்று கூறப்படும்
ஒவ்வொரு மதத்திலும் வேதசாரங்களை யனுசரித்துப் பெரியோர்
ளால், மானிடர் இப்புவியில் நடந்துகொள்வதற்கேற்ற அனே
ஒழுக்குகள் இயற்றப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு முஹம்மதி
யர்களால் ஷரீயத்தென்றும் ஹிந்துக்களால் நீதிமார்க்கமென்று

கூறப்படும். அந்தந்தமார்க்கத்திலுள்ள பக்தர்கள் அந்தந்த மார்க்கவிதிகளில் கிஞ்சிற்றும் பிசகாமல்நடப்பது ஒவ்வொருவருக்கும் முக்கியகடமை. இவ்வகைக் கட்டளைகளில் விதித்தல் விலக்கல் என்னும் இருவகையுண்டு. அவற்றுள், முஹம்மதிய மதத்திலே, சர்வரட்சகராகிய ஆதிகர்த்தா ஒருவருண்டென்று நிச்சயித்துக் கொள்வதும், அவனைப்பிரதிதினமும் ஐந்துவேளைகளிற் தொழவேண்டியதும், வருடத்தில் முப்பதுதினங்கள் நோன்புநோற்பதும், இயல்புடையவர்களாயிருந்தால் தம் ஆஸ்தியிலிருந்து 100இ $2\frac{1}{2}$ வீதம் ஏழைகளுக்குதவவேண்டியதும், மக்காயாத்திரை செய்யவேண்டியதும் ஜீவகாருண்யமாயிருக்கவேண்டியதும் விதிகளென்றும், பொய் கொலைகளவு விபசாரம் கட்குடி பொறாமை பேராசை கோபம் தகாவுணவருந்தல் புறங்கூறல் கொடுஞ்சொற்கூறல் கோள் துர்ப்பாஷை பெரியோர்நிந்தை கடவுள்நிந்தை முதலியவைகளைச் சிரவணித்தல் விலக்கென்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதுபோலவே ஹிந்துக்களின் வேதத்திலும் விதிவிலக்குஎன்றிரண்டுண்டு. அவற்றுள் ஜீவகாருணியம் ஈசுரபக்தி பாசவைராக்கியம் மெய்ஞ்ஞானம் என்னும் நான்குமே விதியென்றும், மேற்கூறிய விலக்குகள் போன்றவையே விலக்கென்றும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறான விதி விலக்குகளில் விலக்குகளைத்தவிர்த்து விதிகளைக்கைக்கொண்டொழுகுவதற்குப் பக்திஎன்னும் உள்ளச்சமும் தாழ்மையுமிருந்தாற்றான் சாத்தியமாகும். ஆதலால், ஞானமார்க்கத்திற் பிரவேசிப்பவர்கட்குப் பக்தியும் அவசியம்வேண்டும். எனவே, ஒருவன் ஞானியாவதற்குப் புத்திநுட்பம் ஆசை அன்பு வைராக்கியம் விடாமுயற்சி கவனசக்தி பக்தி என்னும் இவைகள் அவசியம் வேண்டுமென்பதாயிற்று. இவ்வாறிருக்கும் ஒற்றுமையைச் சற்றும்அறியாத தற்காலப்போலிஞானிகள் அனேகர், தாங்களும்ஞானிகளென்னும் நாமந்தரித்துக்கொண்டு, கடைகளில் விற்கின்ற சில புத்தகங்களை வாங்கி, அவைகளிலுள்ள சிலபாடல்களைப்பாடம்பண்ணிக் கொண்டு, தங்களுடைய ஒழுக்கங்கள் ஷரியத்தென்னும் நீதிமார்க்கத்திற்கு முற்றுமுரணாயிருக்க, அகங்காரமென்னும் போர்வையை அணிந்துகொண்டு, பெரியோர்களை நிந்தித்துப் பலரையும் பலபலவிதமான குதர்க்கக்கேள்விகள்கேட்டு, ஒருவரேனும் தன்னுடைய கேள்விக்குத்தரமளிக்கவில்லை என்று இறுமாப்புற்று, தானே யாவுந்தெரிந்த ஞானியென்று உலகத்தாரை மயக்கித்திரிகின்றார்கள். ஞானமார்க்கத்தில் கிஞ்சித்தேனும் அவர்களுக்கு ஞானமிருந்தால் ஒருபோதும் இவ்வாறுரையார்கள். இத்தகையோர்களைப் பைத்தியக்



காரரென்றும் வேஷதாரிகளென்றும் வயிறுவளர்ப்போரென்றும் முழுமூடரென்றுந்தான் கூறவேண்டும். ஆனால், ஞானவான்களென்னும் பெரியோர்கள், "ஞானிக்கில்லையின்பமுந்துன்பமும்." என்றபடி, தங்களுக்கு மேன்மை வந்தகாலத்தில், தாங்கள்புரியவேண்டியவற்றை மறந்து அகங்கரித்தும், தாழ்மைவந்தகாலத்தில் துக்கத்தையே பெரிதாகமதித்துத்தங்கள் ஒழுக்கங்களைக்கைவிட்டுப் புலம்பியும் திரியமாட்டார்கள். தானென்னுமகங்காரம் அவர்களுக்குக் கிஞ்சிற்றுமிராது எப்போதும்ஒரேதன்மையாக தங்கள்பக்தித்தன்மைக்கு மாறுபடாவாறு சாந்தகுணத்தோடிருந்து மேலானகருமங்களையே புரிந்துவருவார்கள். அவர்கள் தாங்கள் பெரியோர்களென்றும் ஞானிகளென்றும் தங்கள்வாயினால் ஒருபோதும் கூறார்கள். ஆனால், தங்களை உலகத்தார் அறிந்துகொள்ளாவண்ணம் ஒளித்துக்கொண்டே வருவார்கள். இவ்விதக் கிரிகைகளே அவர்கள் பெரியோர்களென்பதற்கறிகுறியாதலால் அத்தகையோரை அவர்களொழுக்கங்களை இடைவிடாமற் சிந்தித்துணரும் யூகமுள்ளோரே அறிவார்கள். (இ-வரும்.)

## பத்திரிகை விஷயம்.

கருணாகரக்கடவுளின் பேரருளால் இப்புதுவருஷமானது நமது பத்திரிகையின் இரண்டாவதுவயதின் ஆரம்பத்தைப் பிரகாசித்துக் காட்டுகின்றதனாலே, நம்நேயர்கள் யாவருக்கும் புதுவருஷச்சோபனங்கூறுகின்றோம். இச்சிறுபத்திரிகையின்மூலமாய்ப் பலவகையான பிரயோஜனங்களையடைந்து வருவதாகப் பலர் எழுதியகடிதங்களைப் பார்த்தானந்திக்கின்றோம். நமது பத்திரிகாபிமானிகளாகிய பிரபுக்கள் பலர் புதுவருஷத்திற்காக அனேகம் புதுசந்தாதார்களைச் சேர்த்தனுப்பியிருப்பதின்பொருட்டு, இருதயபூர்வகமாய் அவர்களுக்குவந்தனம்செலுத்தி, ஈருலகவாழ்க்கையிலும் அவர்களுக்கு மேன்மையைப் பாலிக்குமாறு, இணையின்ஞானபூரணனை இடைவிடாதேத்துகின்றோம். சாதாரணமாய்ப் பத்திரிகைகளை வாசித்தபிறகு, கடைகளிற் சர்க்கரைகட்டுவதற்காவது கற்பூரம்மடிப்பதற்காவது உபயோகப்படுத்திவிடுகின்றார்களே அதுபோலின்றி, நமது பத்திரிகை ஸ்திரீபுருஷர்என்னும் இருவகுப்பினருமுள்ள பாலர்யௌவனர் விருத்தர் ஆகிய யாவர்க்கும் எக்காலத்தினும் எவ்விடத்தினும் எந்தசந்தர்ப்பத்தினும் அநந்தம் பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடியதாயிருப்பதால், இதை ஒவ்வொருவரும்வாங்கித்தாங்கள் வாசித்தபிறகு, புஸ்தகரூபமாய் பைண்டுசெய்து வைத்துக்கொண்டு, தங்கள்

ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் ஆரம்பமுதல் வாசிக்கச் செய்வார்களானால், இதிலுள்ள அனந்தவேடிக்கை விநோதமான விஷயங்களில் ஒவ்வொன்றும் அவர்கள் மனதைக் கவருமாதலால், அதிகப் பிரீதியோடு வாசித்து நாளாவர்த்தியில் அநேக அரியவிஷயங்களைத் தெரிந்துகொண்டு தாங்களுடைய வேண்டிய ஈருலவாழ்க்கைக்கும் இதத்தைத்தேடிக்கொள்வார்களென்பதிற்சந்தேகமில்லை. ஆகையால், இவ்விஷயங்களைச் செவ்வனே கவனித்து, நம்நேயர்கள் தங்கள்நேயர்களையும் தூண்டுதல்செய்து, அவர்களை இப்பத்திரிகைக்குக் கையொப்பக்காரர்களாகச்சேர்த்தால், அதனாலே அவகர்ட்கும்பெருத்தநன்மையுண்டாவதன்றியும் வழிநடப்பவனுக்கு வாகனங்கிடைத்ததுபோலப் பத்திரிகையை நடத்துவதற்காக இயல்புண்டாகிப் பத்திராதிபரும் அதிக ஊக்கத்தோடு பாடுபட்டு இப்பத்திரிகையை மேலும் மேலும் மிக்கவிநோதமாயும் உபயோகமுள்ளதாயும் சிறப்பித்துவருவதற்கு ஏதுவுமுண்டாமென்பது சொல்லாமலே விளங்கும்.

## மந்திரம்.

சென்ற பத்திரிகையில் கூறியவாறு உண்மையான மந்திரவாதி உண்மையான ரஸவாதிஎன்னும் இவைகளுக்கு ஒவ்வோர் அத்தாட்சி இதில் காட்டுகின்றோம்,—

ஒருநாள்ஹபீபேஅஜ்மிஎன்னும்பெரியோரொருவர், பஸரா மஸ்ஜிதிலுட்கார்ந்து, தமது சிஷ்யர்களுக்குஉபதேசம்செய்துகொண்டிருக்கையில், ஒரு கிழவி அவ்விடத்திற்குவந்து அந்தப்பெரியோரைப் பார்த்து, "சர்வரட்சகருடைய அருட்டங்கியதபோதனரே! எனக்கு ஒரு அடிமையிருந்தான். அவன், என்னுடைய சகலவேலைகளையும் பார்த்துக்கொண்டுவந்தான். அப்படிப்பட்டவன் திடீரென்றுகாணாமற்போய்விட்டான். அவனை அநேகநாளாகத் தேடிப்பார்த்தும் அகப்படவில்லை. அவனை வரவழைத்துக்கொடுத்து என்னுடைய துயரத்தை நிவாரணிக்கவேண்டும்." என்று வணங்கிநின்றாள். அதுகேட்ட அப்பெரியவர், கிழவியைப்பார்த்து, "உன்னிடத்தில்ஏதாவதிருந்தால் எனக்குக்கொடு" என்றார். உடனே கிழவி அப்போதுதன் வசமிருந்த இரண்டு பைசாவை அவர்கையிற்கொடுத்தாள். அவர் அதைவாங்கித் தமது பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு பக்கிருக்குக் கொடுத்துவிட்டு, தமதிரண்டு கரங்களையுந் தூக்கிக் கடவுளைப் பிரார்த்தித்தார். அவரவ்வாறுசெய்த 5 நிமிஷத்திற்குள்ளாக அந்த



அடிமை கையில் இறைச்சிவாங்கிக்கொண்டு அப்பெரியவரெதிரில் வந்துநின்றான். அதுகண்ட அங்குள்ளாரனைவரும் ஆச்சரியமுற்று, அந்த அடிமையை நோக்கி, "நீ இப்போது எங்கிருந்து வருகின்றாய்." என்று கேட்டார்கள். அப்போது அவ்வடிமையானவன், "நான் முந்தி இக்கிழவியிடத்தில் அடிமையாயிருந்தபோது நேர்ந்தமனவருத்தத்தினாற் கிழவிக்குத்தெரியாமல் ஈரான்தேசத்திற்கு ஓடிப்போய்விட்டேன். இந்த ஊருக்கும் ஈரான்தேசத்திற்கும் ஒருமாதப் பயணமிருக்கும். அவ்விடம்போன நான் அங்குள்ள ஓர் சாவ்காரிடத்தில் வேலைக்கமர்ந்து வேலைசெய்துகொண்டிருக்கும்போது, இன்றையத்தினம் பஜாருக்குப்போய் இறைச்சிவாங்கிவரும்படி என் எஜமான் கட்டளையிட்டார். அதைவாங்கிக் கையிலெடுத்துக்கொண்டு வீட்டுக்குத்திரும்புகையில், ஒரு பெரும்புயற்காற்றடித்ததனால் அதில் நான் அகப்பட்டுக்கொண்டேன். இப்பொழுது நான் இங்குநிற்கின்றேன். இறைச்சிக்கடையை விட்டுத்திரும்பி, 5 நிமிஷங்கூட ஆகவில்லை. ஒரு மாதப்பயணமாகிய இந்த ஊருக்கு இவ்வளவுசீக்கிரத்தில் நான் எப்படி வந்தேனென்பது எனக்குத்தெரியவில்லை." என்றான். அங்கிருந்தயாவரும் அதுகேட்டுப் பேராச்சரியமுற்றார்கள். உடனே அப்பெரியவர் அவ்வடிமையைக் கிழவியோடுகூட அனுப்பிவிட்டார்.

இவ்வாறு கடவுளின் அருளடைந்தோர்களுடைய மந்திரமே உண்மையான மந்திரம்.

## ரசவாதம்.

பஸராவென்னும் பட்டணத்திற்கருகில் அபுஅய்யூப் என்னும் ஒருவர் தம்முடைய நேயரொருவருடன் சேர்ந்து, ஒருநாள் ஒரு காட்டுமார்க்கமாகப் போய்க்கொண்டிருக்கையில், வேறொருவர் தம் தலையில்விறகுசுமையொன்றைத் தூக்கிக்கொண்டு எதிரேவருவதைக் கண்டு, அவரைநிறுத்தி, "உம்முடைய எஜமான்யார்." என்றுகேட்டார். அதுகேட்ட விறகுதலையர், "என்னுடைய எஜமானர் ஒருவரிருக்கின்றார், அவர் யாவருக்கும் பெரியவர், சகலசற்குணங்களுமமைந்தவர், மிக்க தயாளமுள்ளவர்." என்றார். பிறகு அபுஅய்யூப் மீண்டும் விறகுதலையரைநோக்கி, "ஓ சற்குண சீலரே! இந்த விறகுக்கட்டைக்கொண்டுபோய் என்னசெய்வீர்."? என்றார். அதுகேட்ட விறகுதலையர், "இதைவிற்று ஒருபங்கை ஏழைகளுக்குக்கொடுத்துவிட்டு மற்றைப்பங்கை நான் உபயோகப்படுத்திக்கொள்வேன்."

என்றார். அப்போது அபுஅய்யூபுக்கு அவர்பேரில் இரக்கமுண்டாகி, அவருக்கு ஒரு தொகைப்பணம்கொடுத்து, அத்தொகையினால் அவ்விறகுதலையர் இனிக்கஷ்டப்படாமல் ஜீவித்துக்கொண்டிருக்கட்டும் என்றெண்ணினார். இவருடைய எண்ணத்தை ஞானதிருஷ்டியினாலறிந்துகொண்ட அவ்விறகுதலையர், கையைத்தூக்கிப் பிரார்த்தித்தார். உடனே அவர் தலையிலிருந்த விறகுக்கட்டுமுழுதும் பத்தரைமாற்றுத் தங்கமாய்விட்டது. இதைப்பார்த்த அபுஅய்யூப் திடுக்கிட்டு, அவ்விறகுதலையர் மஹாபெரியவரென்றறிந்துகொண்டார். விறகுதலையர் மறுபடியும் பிரார்த்தனைசெய்தார், அது முன்போலவே விறகுக்கட்டாய்விட்டது. இதுவல்லவோ உண்மையான ரசவாதம்? இவ்வித உண்மைரசவாதிகள் இவ்வாறான அற்புதச்செய்கையைத்தங்களுக்குள் ஒளித்துவைத்துக்கொண்டு, சரீரப்பிரயாசப்பட்டும் கூலிவேலைசெய்தும் உலகத்தில் ஜீவித்துவருகின்றார்கள். ஏனெனில், இப்பொய்யுலக இன்பத்தை அவர்கள் திரணமாயெண்ணிச் சுவர்க்கலோக இன்பமொன்றையே நிச்சயமானதாயெண்ணியிருக்கின்றார்கள். இப்பூவுலகத்திலுள்ள பொய்யான ரசவாதிகளே! தங்களுக்கு அந்தவித்தை சித்தித்துவிட்டால் உலகமுழுமையும் ஒரே நாளிற் பொன்னுலகமாக்கி வாயில் அபக் என்று விழுங்கிவிட எண்ணுகின்றார்கள். ஆகையாற்றான் அவர்களுக்கவ்வேலை சித்திக்கிறதில்லை, அவர்கள் பொய்யர்களாகிவிடுகின்றார்கள்.

## வாந்திபேதி,

### 169. சிகிச்சைகள்.

171-ம் பக்கத்தொடர்ச்சி.

இந்தக்கொடியவியாதி கண்டவுடனே இதற்கு எவ்வளவு சீக்கிரத்திற் சிகிச்சைகள் செய்யத்தொடங்குகின்றோமோ? அவ்வளவும் வியாதி அநுகூலமாவதற்கு ஏதுவாகும். இதற்குக் காலதாமதம்செய்யலாகாது. சாதாரணமாய் இவ்வியாதி இராக்காலங்களிற்றானே பெரும்பாலும்காண்பது வழக்கமாகையால், தனக்குத்தெரிந்த கூரக்காய் வைத்தியம் செய்துக்கொண்டு விடிந்தபின் வைத்தியனைத்தேடுவதுதவறு. ஆதலால் இதிற்கூறியிருக்கும் ஒவ்வொரு அம்சங்களையும் கவனித்து அதன்படி நடத்தினால் விசேஷபிரயோசனம் விளையும். ஒவ்வோர்குடும்பத்திலும் இதற்காக ஔஷதங்கள் தயார்ப்படுத்திவைத்துக்கொள்வதேயுக்தம். ஏனென்றால் அவ்வியாதிகண்டக்ஷணம்



தக்கவைத்தியரொருவரும் அகப்படாதபோது தாங்களேமுன்னின்று இதிற்கூறிய சிகிச்சைகளைச்செய்யலாம், வாந்திபேதி ஆரம்பிப்பதற்குமுன் காணும் வயிற்றுப்போக்குக்கு—படிகாரம் வராகனெடை-8. காசுகட்டி வராகனெடை - 10. கருவர்ப்பட்டைத்தூள் (இலவங்கப்பட்டைதூள்) வராகனெடை. - 6. இம்மூன்றையும் தேன்விட்டுச் செவ்வனேயரைத்து குன்றிமணிப்பிரமாணம் எடுத்துருட்டி, ஒன்று அல்லது இரண்டுமணிநேரத்திற்கொருமுறை, வியாதியின் ஸ்திதிக்குத்தக்கபடிகொடுக்கவேண்டியது. இந்த மருந்தை 4- 5 - முறை கொடுத்தும் பேதிநிற்காவிடில் (Sugar of Lead) வங்க உப்பு வராகனெடை 2. (Colomel) ரசபற்பம் வராகனெடை 3. சூடன் வராகனெடை 2. அபினி வராகனெடை 1. தோல்சீவிய சுக்குத்தூள் வராகனெடை 1. மிளகுத்தூள் வராகனெடை 1. திப்பிலித்தூள் வராகனெடை 1. ஆகிய இவையனைத்தையும் தேன்விட்டரைத்துக் குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைசெய்து, பெரியவர்களுக்கு வேளையொன்றுக்கு இரண்டுமாத்திரைகளும் 15 வயதுள்ளவர்களுக்கு ஒரு மாத்திரையும் 10 வயதுள்ளவர்களுக்கு $\frac{1}{2}$ மாத்திரையுமாகக்கொடுக்கலாம். இவ்வாறு 2 அல்லது 3 மணிக்கொருமுறை சுகுணம்பிறக்கிறவரையில் கொடுத்துவரவேண்டும். இம்மாத்திரையோடு சுக்குக்கியாழமாவதும் ஒமக்கியாழம் அல்லது திராவகமாவது கொடுத்துவரலாம்.

170. கியாழம்:—சுக்கு மிளகு போஸ்தக்காய் சிறுநாவற்பூ அதிவிடையம் கடுக்காய்ப்பூ ஜடாமாஞ்சில் மரமஞ்சள் என்னும் இவைகளைக்கியாழஞ்செய்து ஆரம்பத்திற்றானேகொடுக்கவேண்டும்.

### 171. வாந்திபேதி மாத்திரை.

மிளகு பெருங்காயம் அபினி என்னும் இம்மூன்றும் வகைக்கு க்ரெயின்ஸ் - 12. இவைகளைச்செவ்வனே யரைத்து 12 மாத்திரைகளாக்கி $\frac{1}{2}$ அல்லது ஒருமணி நேரத்திற்கொருமுறையாக அவ்வியாதி தணியும்வரையிற் கொடுக்கலாம்.

### 172. ஷை வேறு முறை.

கற்பூரம் க்ரெயின்ஸ்-5. அபினி க்ரெயின் $\frac{1}{2}$. இவைகளைத்தேனிற் செவ்வனேயரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைசெய்து $\frac{1}{2}$ அல்லது 1 மணிநேரத்திற்கொருமுறை கொடுத்துவரலாம்.

### 173. ஷை வேறு முறை.

மிளகு பலம் - 4. அபினி பலம் - க. கற்பூரம் பலம் - 2 இவைகளை ஜலம்விட்டுச் செவ்வனேயரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைசெய்து ½ மணிக்கொருமுறை ஒவ்வோர் மாத்திரைகொடுத்து ஒரு தேக்கரண்டிபிராண்டி கொடுத்துவரவும்.

மேற்கூறிய மூன்றுவகை மாத்திரைகள் பேதியைக் கட்டுவதற்காக உபயோகப்படுத்தவேண்டியது.

### 174. வாந்திபேதி வியாதியில் நீர் உடைக்க.

மிளகு பலம் 1. வெடியுப்புப்பலம் 1. இவ்விரண்டையும் செவ்வனேயரைத்துக் கால்தூலா எடுத்து எலுமிச்சம்பழ ரசத்திற்கலக்கிக்கொடுத்தால் நீர் இறங்கும். கட்டாது.

### 175. வாந்தியை நிறுத்துவதற்கு.

ஓமம் பலம் 2½. சிவப்புச்சக்கரை பலம் 5. (Sulphuri acid) ஸல்பூரிக் ஆஸிட் கிராம் 1. இவைகளைச்சேர்த்தரைத்தால் மெழுக்காய் விடும். அதிற்கொஞ்சம் கொஞ்சம் எடுத்து, நாவில்தடவிக்கொண்டுவந்தால் வாந்திநின்றுபோம். கடுகு போல்டீஸ் வைத்துக்கட்டினாலும் வாந்திநிற்கும். எப்படியெனில், தண்ணீராவது காடியாவதுவிட்டுக் கடுகைசெவ்வனே யரைக்கவும். அதனுடன் கொஞ்சம் முருங்கப்பட்டையைக் கூட்டிக்கொண்டால் மிகவும் உத்தமம். இவ்வாறுசெய்து ஒரு துணியில்தடவி 10 அல்லது 15 நிமிஷம்வரையில் வயற்றின்மேல் முழுவதும்போட பெருங்குணந்தரும். வியாதியஸ்தன் முற்றும் பலஹீனனாயிருந்தால் இந்தபோல்டீஸை இருதயஸ்தானமாகிய மார்பின் இடதுபக்கத்தில் வைத்துக்கட்டவும். (இன்னும்வரும்)

### 190. கருப்போற்பத்தி.

176-ம் பக்கத்தொடர்ச்சி.

இராஜமானது இரத்தத்தைப்போலச் சிவப்புநிறமுள்ளதாயிருந்தபோதினும் அது இரத்தமாகாது. கருப்பகோசத்தினுடைய உள் ஜவ்விலிருந்தும் * பகமார்க்கத்து உள்ஜவ்விலிருந்தும் ஊறிக்கொண்டிருக்கும் சுவேதத்திரவத்துளிகள் அதிகரித்து இராஜோரத்தத்துடன் கூடுகின்றது. ஆகையால், ஆரோக்கியவதிகளாகிய ஸ்திரீகளின் இராஜம் இரத்தம்போல் உறையாது. இராஜவொழுக்குக் காலத்தில் ஸ்திரீ

* பகமார்க்கமென்பது ஸ்திரீகளின் மர்மஸ்தானத்தின் முகட்டிலிருந்து கர்ப்பப்பைவரையிலுள்ள நீர்த்தாரைக்குச் சொல்லப்படும்.



ளின் சரீரத்துள்ள சில அவயவங்கள் இளகிநிற்பதால், அக்காலத்தி அவர்கள்மேற் காற்றுப்படவொட்டாமலும் குளிர்ந்த ஜலத்திற் ளிக்கச்செய்யாமலும் ஈரமான பூமியிற் படுக்கவொட்டாமலும்வெகு ாக்கிரதையாய்ப் பார்த்துவரவேண்டியது முக்கியகடமை. இதைக் வனியாவிடில் அநேகம்கெடுதிகள்நேரும். இராஜம் ஒழுகுங்காலத் ல், ஸ்திரீபீஜங்களிலிருந்து ஒவ்வொருமாதமும் ஒவ்வொருசினை வெ ிப்படுமென்று முந்தியே சொல்லியிருக்கின்றோம். ஒருவேளை வலப் ஜத்திலிருந்தும் மற்றொருவேளை இடப்பீஜத்திலிருந்தும் அந்தச் னை வெளிப்படுவதுண்டு. அப்போது அதனருகிலுள்ள கர்ப்பநாடி ானது கிண்ணிபோன்ற தனது நுனியினால் அச்சினையைப்பற்றிக் காள்ளும். பிறகு அது நாடோறும் விர்த்தியடைந்து அந்நாடியின் ழியாய் மெல்லமெல்ல நகர்ந்துவந்துகொண்டிருக்கும். அக்காலத் ற் புருஷனுடைய இந்திரியத்திலுள்ள + ஜீவரேணுக்களெதிர்ப்பட்டு வ்விரண்டும் ஒன்றாய்க்கூடிவிடுமானால் கர்ப்பம் ஆரம்பமாய்விட் து. அவ்வாறு ஒன்றுபடாவிட்டால், அந்தச்சினை மெல்லமெல்லக் ர்ப்பகோசத்தைச்சேர்ந்து அதிலுள்ள திரவத்துளிகளுடன்கூடிப் கமார்க்கத்தின்வழியாய் வெளிப்பட்டுப் போய்விடும். இவ்விதமாகச் ில ஸ்திரீகளுக்கு இராஜவொழுக்குநின்ற 4- தினங்கட்குள்ளும், சில நக்கு 7-8-தினங்கட்குப்பிறகும் சினை வெளிப்பட்டுப்போம்.

சம்போகத்தின் இறுதியில் புருஷனுடைய இந்திரியம் வெளிப் டும்போது அது கர்ப்பகோசத்து வாயினுலிழுக்கப்படுகின்றது. அ ங்கிருந்து அதிலுள்ள அநேகமாயிரம் ஜீவரேணுக்கள் கருப்பபிலத் தின் வழியாய் உள்ளேயோடி நான்குபக்கங்களிலும் பரவுகின்றது. அவ்வாறு பரவும் அவற்றுள்ளே சில ரேணுக்கள், ஸ்திரீபீஜத்தினின் றும் வந்துகொண்டிருக்கும் சினையை எதிர்கொண்டு அதனுள் நுழையும். இவ்வாறு இரண்டும் சேர்வது கர்ப்பகோசத்திலாவது கர்ப் பநாடிகளிலாவது அதன் நுனியிலாவது நேரும். அதாவது அப்போது சினை எவ்விடத்தில் தங்குகிறதோ அவ்விடத்தில்தான் உண்டாகும்,

+ புருஷனுடைய இந்திரியத்தில் அநேக ஜீவனுள்ள சிறியகிருமிகளைப் போன்றவை இருக்கின்றன. அவைகட்குத்தான் ஜீவரேணுக்களென்று பெயர். ஒருதுளி இந்திரியத்தில் அநேகமாயிரம் ஜீவரேணுக்களிருக்கும் இதைப்பூதக்கண்ணாடியைக்கொண்டு பார்த்தால் தெரியவரும். சினைக்குள் பிரவேசிக்கும் ஜீவரேணுக்களின் தொகையை நிச்சயிக்கமுடியாது. ஆனால், குறைவானதொகை பிரவேசித்தாற் பெண்சிசுவும், அதிகமானதொகை பிரவேசித்தால் ஆண் சிசுவும் ஜனிக்குமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

முக்கியமாய்க் கர்ப்பநாடிகளிற்றானே உண்டாகலாம். அந்தசிச்சினை ஜீவரேணுக்களுடன் சேர்ந்தபிறகு, தனக்குள் திரிபுகளுண்டாய் நாடியின்வழியே கர்ப்பகோசத்தினுள் மெல்லெனச்சென்று, அதனுடைய உள்தோலில் அப்போது ஏற்பட்டிருக்கும் சிறுசிறுமடிப்புகளில் ஒன்றுடன் ஒட்டிநிற்கும். இவ்வாறு நிற்பதற்குத்தான் கருப்போற்பத்தி என்று கூறப்படும். இது உண்டாவது சாதாரணமாய் ஸ்திரீகளுக்குத் தெரியாது. ஆனால், சிலர்மட்டும் ஒருவிதமானமயக்கத்தினால் தெரிந்துகொள்வார்கள். கருப்பப்பையின் உட்பக்கமாக ஊர்ந்துசெல்லும் ஜீவரேணுக்களுட் சில, சினையிருக்குமிடத்திற்கு நேராய்ப்போகும்பட்சத்தில், 2-3-நாழிகைக்குள்ளாக அதற்குட்பிரவேசிக்கலாம். அவ்வாறு நேரேபோகக் கூடாதபட்சத்தில், சினையும் ஜீவரேணுக்களும் சேர்வதற்கு 7-8-நாட்களும் செல்லும். ஒருக்கால் இரண்டும் சேராமலும்போகலாம். கருப்பகோசம் ஆரோக்கியஸ்திதியிலிருக்கும்போது, ஜீவரேணுக்கள் 10-நாள்வரையில் ஜீவித்திருக்கவும்கூடும். ஆகையால், கருப்போற்பத்தி சம்போகத்திற்கு எத்தனைநாளைக்குப்பிறகு உண்டாயிற்றென்பதை நிச்சயித்துச்சொல்லக்கூடாது. (இ-வரும்).

## 177. தருமம்.

177-ம் பக்கத்தொடர்ச்சி.

கடவுளானவர் ஆன்மாக்களுக்குப் பலவகையிலும் உபகாரம் செய்வதைத்தம்முடைய கிர்த்தியமாகக்கொண்டிருப்பதை நாம் பிரத்தியட்சமாகப்பார்த்து வருகின்றோமல்லவா? ஏழைகளுக்குச் சதா தருமம் புரிவதையே தனது தொழிலாகக்கொண்ட ஓர் அரசன், தன்காரியஸ்தனாகிய ஒருவனிடத்திலே சில பொருளைக்கொடுத்து, தனக்குப்பதிலாக அந்தக்காரியஸ்தனையே அத்தருமத்தை இயற்றச்சொன்னால், அக்காரியஸ்தன் தனக்குக்கிடைத்த அத்தகைய கௌரவத்தால் எவ்வளவு சந்தோஷமடைந்து அத்தொழிலைப்புரியவேண்டும்! கடவுள் தாமாகவேசெய்கிறதொழிலை, மானிடனைச்செய்யும்படி உத்தரவுகொடுத்ததனால் எவ்வளவு கௌரவம் அவனுக்குண்டாயிற்று. எத்தனைசந்தோஷமாய் அத்தொழிலை அவன்புரியவேண்டும். திவான்பஹதூர் ராய்பஹதூர் K. C. I. என்னும் இவ்வுலகத்திற்குரிய பட்டங்களைப்பெறுவதற்கே, எத்தனையோபேர்கள் லட்சக்கணக்கான தொகைகளைச் செலவுசெய்து விடுகின்றார்களே! ஈருலகத்திலும்



மேன்மையடையும்படியான பக்தன் என்னும் சிறப்புப்பொருந்திய கௌரதாப்பட்டத்தைப்பெற்றுச் சௌக்கியமடைவதற்குப்பின்னிடுவதென்றால் இது எவ்வளவு மதியீனம்! ! கவர்னர்ஜனரல் வந்தார், அப்போது இன்னபிரபு மூன்றுலட்சம் ரூபாய் செலவுசெய்து மஹா அருமையாகிய வேடிக்கைகளைச் செய்தார். மஹா அலங்காரமான பந்தல்கள்போட்டார். அற்புதமான பாணவேடிக்கைகள் செய்தார். ஆட்டம் பாட்டம் கூத்து கேளிக்கை மிகவிமரிசையாய் நடத்தினார். ஆஹா! ஹா! இதைப்போல இதற்குமுன் நாம் ஒருபோதும் பார்த்ததுமில்லை, கேள்விப்பட்டதுமில்லை'' என்று ஜனங்கள் பலவாராகப்புகழ்கின்றார்கள். வேறொருபிரபு, 1000 ஏழைகளுக்கு அன்னதானம்செய்தார். அப்போதுஅந்த ஏழைஜனங்கள், ''ஓ!கடவுளே! அந்தபிரபு எங்கள்பசியைத்தீர்த்தார், அவரைப்பூரண ஆயுளுடையவராக்கிச் சகலசம்பத்தையுங்கொடுத்து, மறுவுலகத்தில் இவருக்குச்சொர்க்கவாழ்வைக் கொடுக்கவேண்டுமென்று கூக்குரலிடுகின்றார்கள். இவ்வேழைகளின் கூக்குரலைக்கடவுள் கவனியாமலிருப்பாரா? இன்னும் இந்தப்பிரபுவைப்பற்றி இதரபிரபுக்கள் என்னபேசுவார்கள்? இவர்மஹா தர்மவான், பரோபகாரி என்றும் புகழ்வார்களல்லவா? இவ்வாறேமுதற்கூறியபிரபுவைப்பற்றி, அவன் மஹாகருமி, ஏழைக்கு ஒருதம்படிகூடக்கொடுப்பதில்லை, அவன்கீர்த்திபெறுவதற்காக இவ்வித டம்பமானசெலவுகள் செய்கின்றானென்று பேசுகிறார்கள். சகோதரர்களே! இவ்விருவருக்குள்ள புகழையும் கௌரதாப்பட்டத்தையும் கவனித்தீர்களா? 3-லட்சம் செலவுசெய்ததற்காக அவருக்கு K. C. I. என்னும் எழுத்தைத்தவிர வேறே ஏதேனும் பிரயோசனமுண்டா? ஜனங்கள் ஆஹா! என்று புகழ்ந்தது அப்போதடித்தகாற்றிலேயே அனுதரவாகப்பறந்துபோய்விட்டது. இவ்விரண்டும்நீங்க அப்பிரபுக்கென்று எஞ்சிநின்றது ஒன்றுமேயில்லை. தருமஞ்செய்தபிரபுவுக்கோ இங்கும்அங்குமாகிய எங்குமே கீர்த்தியும்மேன்மையும்மேம்பாடுமென்பதிற்றடையுண்டோ? நம்மிடத்திற் பிட்சைகேட்பதற்காக வரப்பட்ட ஒருயாசகன், தன்மனத்தையொடுக்கி நாணத்தையடக்கி அங்கங்குன்றி இரப்பது என்னும் ஈனத்தொழிலை மேற்போர்த்துக் கொண்டு, நம்மிடம்வந்து பிட்சைகேட்கும்போது, அவனுக்கு இல்லாமையின்பொருட்டு நம்மிடத்தில்வந்து கேட்கும்படிநேரிட்டதென்று சற்றும் உணராமல், அவனுக்கில்லையென்று சொல்வதானது, அவன்வார்த்தையையேநாம் அவனுக்குஉபயோகிப்பதால் அவனிலும் ஈனன் என்பதைச்செவ்வனே விளக்குகின்றது. இக்கருத்தையமைத்தே, ''இரப்பவன் புவிமீதி

லீனனவனுக்கில்லையென்பவனவனிலீனன்." என்றும், "இலனென்னு மெவ்வமுரையாமையீதல் - குலனுடையான்கண்ணேயுள." என்றும் நீதிநூல்களில் விரித்திருக்கின்றன. ஆகையால் இரப்போர்க்கு, அதாவது தங்களுக்குத் தேவையுள்ள உபகாரம்வேண்டுபவர்கட்கு, இல்லையென்று கூறாமல் நம்மாலியன்றவரையில் உபகாரம்புரிவது நமது கடமை. சிலர்மனவருத்தத்துடன் முகத்தைச்சுருக்கிக்கொண்டு கடுகடுத்தவார்த்தையுடன் புரியும்உபகாரம், யாதொருபிரயோசனத்தையுந்தரமாட்டாது. வேறுசிலர் ஏழைகளைப்பார்த்துப் பலவிதமாய் இகழ்ந்தும் பலவந்தமாய்ப்பிடித்துத்தள்ளியும் விடுகின்றார்கள். இது மஹாபாதகமானசெய்கை. "மூடனை மூர்க்கன்கொன்றால் மூர்க்கனை முனிதான்கொல்லும்" என்றபடி. நிராதரவுள்ள ஏழையின்மனதில் வருத்தம் வரும்படிசெய்தவனைக் கடவுள் தக்கபடி தண்டியாமல்விடார். வேறுசிலர் ஏழைகளைப்பார்த்து, நீ தடியனாயிருக்கின்றாய், கடவுள் கொடுத்தகால்கைமுதலிய அவயவங்களெல்லாம் நன்றாயிருக்கின்றனவே! ஏன்போய்க்கூலிவேலைசெய்துஜீவனஞ்செய்யக்கூடாதென்றுகேட்கின்றார்கள். இதுவும்பெருந்தப்பு. ஏனெனில், ஒவ்வொருவரும்தன் தன்தொழிலைப்பார்ப்பதும் தன்னையொருவர் ஒரு கேள்விகேட்டால் அதற்குச்சரியானபதில் கொடுப்பதும் ஒழுங்கேதவிர, இதரகாரியங்களைக்கவனிப்பதும் இதரவிஷயங்களைப்பற்றி ஜவாபுசொல்வதும் அவர் கடமையன்று. யாசகன் இவனிடத்திற்பொருள் கேட்டதற்குச்சமயமிருந்தால் ஏதாவது கொடுத்து உதவிபுரியவேண்டும். இல்லாவிட்டால் இல்லையென்றுமட்டும் சொல்லிவிடவேண்டும். நான் எப்படிப்பட்டவன், என்னைப்பார்த்துச்சொல் என்று அவன்கேட்டால், நீ தடியனாயிருக்கிறாய் என்றும், நான் என்னதொழில்செய்து ஜீவனம் செய்யவேண்டுமென்றுகேட்டால், கூலிவேலைசெய்து ஜீவனஞ்செய் என்றுசொல்வது நியாயந்தான். ஆனால், அவனால் கேட்கப்படாத கேள்விக்கு இவன் பதில்சொன்னால் இவனைப் பைத்தியக்காரனென்றல்லவோ சொல்லவேண்டும். அவன் தடியனாகவிருந்தும் கூலிவேலை செய்யாமலிருந்தும் கடவுள் இத்தனைகாலமாக அவனைக்காப்பாற்றி வந்திருக்கிறாரே! என்று நினையாமல் ஒரேவேளை தன்னைவந்து அவன் கேட்டதில் தனக்கு இவ்வளவு வெறுப்புண்டாய்விட்டதே என்ற மதியீனத்தை எண்ணி, அவன் வெட்கப்படவேண்டாமா? ஆகையால், ஒருவருக்கும் மனவருத்தத்தைக்கொடாமல் இனிய மொழியைக்கூறித் தம்மாலியன்ற உதவிபுரிந்தால் அதற்குப்பதிலாகக் கடவுள் இவருக்கு நல்லுதவிபுரிவாரென்பதற்குச் சந்தேகமில்லை.



## 176. கிருஷித்தொழிலுக்குப் பலவகையானமண்களைப் பற்றித்தெரிந்துகொள்ளவேண்டிய முக்கியஅம்சங்கள்.

பயிர்கள்முளைப்பதற்கு ஆதாரமானதும், பூமியின்மேற்புலத்திற்சொற்ப ஆழமட்டுமுள்ளதுமாகிய மண்ணானது எப்படியுற்பத்தியாகிறதென்னில், ஜலம் பனி ஆகாயம் அல்லது காற்று முதலியவற்றாலும், இன்னும் ரசாயன சாஸ்திரத்திற் கூறும் பற்பல காரணங்களாலும் பூமியிலுள்ள பலவகைக்கற்பாறைகள் தம்கட்டுப்பாட்டை இழந்து தூளாகிப்போகிறதினாலுந்தான். ஆகையால் மண்கள் அல்லது நிலங்களுக்குரிய வெவ்வேறான குணங்கள், அந்நிலங்களுக்கடியிலிருக்கும் கற்பாறைபடுக்குகளின் தன்மைக்கும், அந்நிலங்களுக்குச்சமீபத்திலுள்ள பர்வதங்கள் குன்றுகளிலிருக்கும் கற்பாறைகளின் தன்மைக்கும் தக்கபடி பேதப்பட்டிருக்கும்.

மணலாவது சுண்ணாம்புக்கல்லாவது சேர்ந்தமண்ணானது அதிக கனமுள்ளதாயிருக்கும். பூண்டுகளிலிருந்தும் ஜீவஜெந்துக்களிலிருந்தும் உண்டாகிய இந்திரவஸ்துக்கள் நிறைந்த மண்ணானது இலேசானதாயிருக்கும். களிமண்ணும் இந்திரவஸ்துக்கள் நிறைந்தமண்ணும் ஈரத்தைவெகுசுலபமாய் உறிஞ்சி அதை விட்டுவிடாமற் பற்றிக்கொண்டிருக்கும். இவ்வித மண்ணுள்ள நிலங்களிற் பயிர்கள் செழிப்பாய்விளையவேண்டுமென்றால், அவற்றுள் தங்கியிருக்கும் அமிதமான நீர் வடிந்துபோகும்படி ஏற்றபிரயத்தனங்கள் செய்யவேண்டும். மணலுள்ள நிலங்கள் ஈரத்தை உறிஞ்சிக்கொள்வதுமில்லை, தம்மிலுள்ள ஈரத்தைவிடாது பற்றிக்கொண்டிருக்கிறதுமில்லை. ஆகையால் மணல்தரைகள் கோடைகாலத்தின் உஷ்ணத்தினால் மிகவும் வரண்டுபோகும். அவற்றிலுண்டாயிருக்கும் பயிர்கள் தீய்ந்துபோம். மழைக்காலங்களிலோ மணல்தரையிலுள்ளபயிர்கள் வெகு செழிப்பாய்விளையும். அக்காலங்களில் களிமண்தரையிலுள்ள பூண்டுகள் அமிதமானஈரத்தினால்மடிந்துபோவதற்கேதுவுண்டாகும். களிமண்ணாவது இந்திரவஸ்துக்கள் நிறைந்தமண்ணாவது உள்ள நிலமானது, அதிக உஷ்ணகாலத்திற் காய்ந்துசுருங்கி இறுகிப்போகும். இவ்வாறு மண் சுருங்கிக்கடினமாவதனாற் பூண்டுகளின்வேர்கள் அதிகமாய்நெருக்கப்பட்டுப்போவதுமன்றி, ஆகாயம் உள்ளேபிரவேசிக்க இடமில்லாமலும்போகும். இதனாற்பயிர்களின் வளர்ச்சிக்குத்தடைகணேர்ந்து அவைகள் மடிந்துபோகச் சம்பவிக்கும்.

நிலங்களிற் களிமண்ணானது மிதமாயிருக்குமானால் ஊஷ்ணகாலத்திற்ப்பயிர்களுக்குப் பிரயோனமுண்டாகும். எப்படியெனில், உஷ்ணகாலத்தில் இராக்காலத்தில் பனிபெய்யும்போது, நிலத்திலுள்ள களிமண்ணானது ஈரத்தைவிரைவாய் உறிஞ்சிக்கொண்டு அதைவிடாமற்பற்றியிருக்கும். இதனாற்பயிர்களுக்குப் பகற்காலத்து உஷ்ணத்தினாலுண்டாகும் தீமை குறைவுபடுகின்றது. பயிர்கள் நன்றாய்விளைந்து பூரணப்படுவதற்கு அவைகளிருக்கும் நிலத்திற் போதுமான அளவு ஊஷ்ணமிருக்கவேண்டியதவசியம், அதிக ஈரமான தரைகளிலிருந்து சூரியஊஷ்ணத்தினால் நீராவி இடைவிடாது எழும்பிக்கொண்டிருக்குமாகையால், அத்தரைகள் அதிகக்குளிர்ச்சியுள்ளவைகளாயிருக்கும். எந்தவஸ்துவிலிருந்தாவது ஊஷ்ணத்தினால் ஆவி எழும்பிக்கொண்டிருக்குமாயின், ஆவிவெளியே நீங்கிப்போகப்போக அவ்வஸ்துவினுள்ளிருக்கும் ஊஷ்ணமானது குறைந்துகொண்டேவரும், ஆகவே, அதுமுன்னிலும் அதிகக்குளிர்ச்சியுள்ளதாய்விடும், இது இயற்கைப்பிரமாணமாதலால், பயிர்கள்விளைந்து பூரணப்படுவதற்கு நிலத்தில் விசேட ஈரமிருக்கக்கூடாது. அப்படி.விசேடமாயிருக்குமாயின், ஈரங்குறையும் பொருட்டு நிலத்தினின்றும் நீர்வடிந்துபோகுமாறு முயற்சிசெய்யவேண்டியதவசியம். (இன்னும்வரும்.)

## 179. சாத்திரவிநோதம்.

சாத்திரமானது உலகத்துள்ள இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் முதலிய வற்றின் தத்துவங்களும் அவற்றின் உற்பத்திக்கிரமங்களும் மற்றும் அவற்றிற்குண்டாகக்கூடிய எவ்வகைத்திரிபுகளும் விளக்கிக்காட்டும் நூலாம். அவ்வாறானசாத்திரங்கள் பல்வேறுவகையாகவும், அவ்வவ்வற்றினும் அவ்வவ்விடயங்கட்கேற்ற அநேகவிதசூட்சுமங்களும் விநோதங்களும் விச்சித்திரங்களும் விளக்கியுள்ளனவாகவுமிருக்கின்றன. இவற்றுட் சில, சிறந்தகல்வியுடையோர்களுக்கும் சில, மத்தியதக்கல்வியுடையோர்களுக்கும் இன்னும் சில சாமானியக்கல்வியுடையோர்களுக்கும், விளங்கக்கூடியன வாகவிருக்கும். ஆனால், மேற்கூறிய மூவகையோர்க்கும் அவற்றின் கருத்தைத் தெரிந்துகொள்வதற்குப் புத்திநுட்பமும் கவனசக்தியும் அவசியம் வேண்டும். இவையிரண்டும் அமையாதவர்கட்கு அச்சாத்திரங்களாலுண்டாகத்தக்க பிரயோசனம்வாய்க்காது, ஏனென்றால் கல்வியில்லா மூடர்கட்கெவ்வாறு கற்றோர்வார்த்தை யருவருப்பாகுமோ அதுபோல, புத்திநுட்பமும் கவனசக்தியும் வாய்க்காதவர்க்குச் சாத்திரவிஷயங்கள் அருவருப்புத்தருமென்பதற்குச் சந்தேகமில்லை. அவ்வாறு அருவருப்புற்றபோது அவர்கள் மனம் அதிற்பதியாதென்பதும் துணிபே. அவ்வண்ணம் மனம் பதிக்காதவர்க்கு அச்சாத்திரப்பயன்கள் கிட்டாவென்பது சொல்லாமேயமையும் இதனையன்றோ, "கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற் கூற்றமல்லாத மாந்தர்க் கறங்கூற்ற மெல்லிய வாழைக்குத்தானீன்ற காய் கூற்றங் கூற்றமே யில்லிற் கிசைந்தொழுகாப்பெண்." எனப்பெரியோர் கூறினர். அவர்கட்கவ்வாறு அருவருப்பாயிருக்கினும், இவ்விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கவனித்து ஆராய்ச்சி செய்யக்கூடியவர்களுக்கோ! இஃதோர் அரும்பெருந் தனத்திற்கிணையாமென்பது நிச்சயம். மேலே மகுடம் சூட்டப்பட்ட இவ்விஷயத்தைப்பற்றி அப்போதைக்கப்போது பற்பல விஷயங்களால் நம் நண்பர்கள் யாவரும் தெறிந்துகொள்ளுமாறு எளியநடையில் எழுதிக்கொண்டுவருவோம். அவற்றை ஆழ்ந்தகருத்துடனும் கவனத்துடனும் ஆராய்ச்சிசெய்துவருவார்களாயின் சர்வசாத்திர வல்லபமுடையவர்களாய்த் தங்களுக்குத்தோன்றுமலே நாளுக்குநாள் அறிவுவிர்த்தியும் மனோச்சாகமும்வாய்ந்து அரிய நூதன விஷயங்களைத்தாங்களே இயற்றுதற்குச் சக்த்தியுடையவர்களாய்ச் சர்வகிர்த்தியசாமர்த்தியர்களாவ ரென்பதற்குத்தடையில்லை.

முதலிற் புகைக்கூண்டு ஏன் ஆகாசத்திற்செல்லுகின்ற தென்பதைப்பற்றியும், அது எவ்விதமாய் இயற்றப்படவேண்டுமென்பதைப்பற்றியும் கவனிப்போம். (இன்னும்வரும்)

## 180. பெண்களுக்குக் கல்வி ஏன்?

ஸ்திரீகள் தங்கள் வாணாட்களில் மூன்று பருவமும் ஐந்து அந்தஸ்துமடைகின்றார்கள். அவற்றுள் பருவங்கள் மூன்றாவன:— விளையாடும்பருவம் கல்வி ஒழுக்கம் கற்கும் பருவம்-குடும்ப விவகாரங்களை ஒழுங்கு பெற நடத்தும்பருவம் என்பவைகளே. அந்தஸ்துகளைந்தாவன-குழந்தை-கன்னி-மனைவி-தாய் மாமி என்பவைகளே. இவற்றுள் குழந்தை என்னும் அந்தஸ்தை விளையாடும் பருவத்தினும், கன்னியென்னும் அந்துஸ்தைக்கல்வி யொழுக்கம் கற்கும் பருவத்தினும், மனைவிதாய் மாமி என்னும் மூன்றந்தஸ்துகளையும் குடும்பவிவகாரங்களை நடத்தும் பருவத்தினும் அடைகின்றார்கள். அதாவது தங்கட்குப் பிரிக்கப்பட்டிருக்கும் முப்பருவத்தினும் ஐந்துவித உத்தியோகத்தை வகிக்கின்றார்களென்பதாம். அவற்றுள் குழந்தை அந்தஸ்து தான்

சுவரட்சிக்கப்படுவதிலும் விளையாடுவதிலும் செல்கின்றது. கன்னி அந்தஸ்து கல்வி ஒழுக்கம் கைத்தொழில் கடவுள் பத்தி நடையுடையாவனை முதலியவற்றைக்கற்பதிற் கழிகிறது. அன்றியும் இவ்விரண்டந்தஸ்துக்களும் தாய்தந்தையரால் அதிக கவனத்துடன் காக்கப்படவேண்டியகாலத்தில் வருவது. மனைவி என்னும அந்தஸ்தானது, கணவனுடன்கூடி வாழ்ந்து தம்முடைய கன்னிப்பருவத்திற் கற்றுள்ள கல்வி ஒழுக்கம் முதலிய வற்றால், கணவன்மாமன்மாமிமைத்துனர் நாத்திமார் முதலியோர்க்கு அவரவர்க்கிணங்க நடக்கவேண்டியமரியாதைக் கிரமப்படி நடந்து குடும்பவிவகாரங்களிற் றேறவேண்டிய காலத்தில் வருவது. தாய் என்னும் அந்தஸ்து, கன்னிப்பருவத்தில் தான்கற்றுக்கொண்டு மனைவிப்பருவத்தில் அப்பியாசித்துக்கொண்ட குடும்பவிவகாரங்களைத்தன் சுயேச்சையாய் நடத்துங்காலத்தில் வருவது. அதாவது கணவன் முதலியசுற்றத்தினர்க்கு ஒழுங்காய்நடந்து குடும்பத்திற் கலகம்நேராவண்ணம் ஒவ்வோர் விஷயங்களையும் யுக்தியாகவும் தந்திரமாகவும் நடத்திக்கொண்டு வருவதன்றியும், மக்களைப்பெறுவதும், அவர்களைப்போஷித்துக்காப்பதும் அவர்கட்டுக் கல்வி ஒழுக்கம் கைத்தொழில் கடவுட்பக்தி நடையுடைபாவனை முதலியவற்றைப் பயிற்றுவித்தலும், இவ்விஷயங்களைக் கிரமமாய் நடப்பித்தலுமாம். கடைசியாகிய மாமி என்னும் அந்தஸ்தானது தன்மருமகள் அவளுடையதாய் வீட்டிலே கன்னிகை அந்தஸ்திற்கற்றுக்கொண்ட நல்லொழுக்கங்களை அப்பியாசப்படுத்திவைத்தலும், அவளுடைய கணவன் மாமன் மாமி கொழுந்தன் நாத்தி முதலியோர்க்கு அவரவர்க்குரிய மரியாதைக்கிரமப்படி நடந்து; அவளும் குடும்பவிவகாரங்களில் தேர்ச்சி யடைவதற்கேற்ற விதங்களைக் கற்பிப்பதற்கான காலத்தில் வருவது. ஆக இவ்வைந்து பொறுப்பான உத்தியோகங்களைக் கவனிக்கையில், ஸ்திரீகளாலேயே ஈருலகவிவகாரங்களும் சீர்பெற நடக்கவேண்டியிருப்பதால், அவர்கள் எவ்வளவு புத்திசாதுர்யமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். உலகத்தில் ஒரு உத்தியோகத்தை வகிப்பதற்கு, அதாவது மாஜிஸ்ட்ரேட்டோ தாஸில்தாரோ கலெக்டரோ ஜட்ஜோ கவர்னரோ, இதில் ஏதாவதொன்று, அல்லது வேறு எவ்வித கைத்தாழ்ந்த உத்தியோகம் எடுத்துக்கொண்டாலுஞ்சரி, அல்லது கைத்தொழில் வர்த்தகம் முதலிய எந்தத்தொழிலுள் ஏதாவதொன்றை எடுத்துக்கொண்டாலும் அதைச் சீர்பெற நடத்தவேண்டுமென்றால் எத்தனைகாலம் கஷ்டப்பட்டுக் கற்றுக் கல்வியில்தேர்ச்சியடையவேண்டியதாயிருக்கிறதே! கல்வியின்றி



அவைகளைச் சாதனைசெய்வதற்கு ஒருபோதும் ஆகவே ஆகாதல்லவா? அப்படிக்கிருக்க ஈருலகவாழ்க்கைக்குறிய சகலவிவகாரங்களையும் அடக்கியுள்ள ஐந்து பிரதானமான பொறுப்புள்ள உத்தியோகங்களை வகிக்கவேண்டியவர்களாகிய ஸ்திரீகளுக்குக் கல்வி அவசியம் வேண்டுமென்பதற்கு இன்னும் அத்தாட்சியும் வேண்டுமோ? ஆகையால், ஸ்திரீகளுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதிற் கிஞ்சித்தும் பின்னடையலாகாது. ஸ்திரீகளுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தால், அதனால் அநேகம் கெடுதிகளுண்டாகுமென்று சிலமூடர்களெண்ணுகின்றார்கள், அதைப்பற்றிச் சமயம் வாய்த்த போது விவரிக்கின்றோம். மேலும் முற்கூறப்பட்டுள்ள ஸ்திரீகளின் ஐந்து அந்தஸ்துகளிலும் அவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய கிரமங்களையும் பிந்தி எழுதுவோம்.

## பாகஸாஸ்திரம்.

## Thidar Kabuli Pulay.

### 181. தைதார்கபூலிப்புலாவ்.

*சம்பாரங்கள்*,—சுத்திசெய்த பச்சரிசி படி 1. சுத்திசெய்த கடலைப்பருப்பு படி $\frac{1}{4}$ நெய் பலம் 15. தோல்நீக்கி மெல்லிதாயரிந்த வெங்காயம் பலம் 5. மேல்தோல் நீக்கியரைத்தபூண்டு பலம் $\frac{3}{4}$. வேர்தறித்துக்கழுவியரிந்த பச்சைக்கொத்துமல்லியிலைத்துளிர் பிடி 1. மூன்று எலுமிச்சம்பழங்களின் ரசம் கரமசாலா துலா 1. மேற்றோலும் கைப்புள்ளவைகளும் நீக்கி ஒவ்வொன்றையும் இரண்டுதுண்டாக்கிய வாதுமைப்பருப்பு பலம் 4. பன்னீரிலரைத்த குங்குமப்பூ வராகனெடை $\frac{1}{2}$. உப்பு பலம் $2\frac{1}{2}$ பசு அல்லது எருமைப்பால் படி $\frac{1}{4}$.

*பாகம்*.—கடலைப்பருப்பை 2 மணிநேரம் ஜலத்தில் ஊறவைக்கவேண்டும். அரிசியை 4-முறைகளைந்து ஜலத்திலேபோட்டு ஒரு மணிநேரம் ஊரவைக்கவேண்டும். ஈயம்பூசிய ஓர் செப்புப்பாத்திரத்தில் 4 படி ஜலம்விட்டு அடுப்பிலேற்றி காயவைக்கவேண்டும். இரண்டு படி ஜலம் கொள்ளும் வேறொரு ஈயம்பூசிய செப்புபாத்திரத்தில் நெய்விட்டு அடுப்பிலேற்றி, 35ம்நெ. முறைப்படி வெங்காயம்பூண்டு கரமஸாலா பச்சைக்கொத்துமல்லித்துளிர் என்னும் இவைகளை யெல்லாம் முறையே வொவ்வொன்றாய்ப்போட்டுத் தாளிதஞ்செய்து, ஊறவைத்திருக்கும் பருப்பிலுள்ள ஜலத்தைவடித்து பருப்பைத் தாளிதத்திற்கொட்டிக்கிளறிப் பருப்புநெய்யில்வெந்தபிறகு அரைவாசி நெய்யெடுத்து ஒரு பாத்திரத்தில்வைத்துக்கொள்ளவும். பிறகு ஜலம்

அரைப்படி எலுமிச்சம்பழரசமும் முக்கால்துலா உப்பைக்கரைத்த தெளிவும் என்னும் இம்மூன்றையும் கலந்து அடுப்பிலிருக்கும் பருப்பிற்கொட்டி 5 நிமிஷநேரம் மூடிவைக்கவேண்டும். செவ்வனேசொதித்துக்கொண்டிருக்கும் 4 படி ஜலத்தில் அரிசியைக்கொட்டி மிகுந்துள்ள உப்பைக்கரைத்துத்தெளிவிறுத்து அதில் ஊற்றிக்கிளறி மூடி ஒரு நிமிஷத்திற்குப்பின்திறந்து மறுபடியுங்கிளறி முக்கால்வாசி வெந்தபதம்பார்த்து. 36-ம் நெ. பாகப்படி. ஓர் கூடையில் துணியைவிரித்து அதிற்சாதத்தை எடுத்துக்கொட்டவும். வாதுமைப்பருப்பையும் அரைவாசி குங்குமப்பூவையும் பாலில் கரைத்து மஸாலை பருப்புஎன்னும் இவைகளைக்கலந்துவைத்திருக்கும் செம்புப்பாத்திரத்தில் பரவலாய்ஊற்றிபிறகு கூடையிலிருக்கிறமுக்கால்வாசிவெந்தசாதத்தை எடுத்து அதிற்கொட்டி,எடுத்துவைத்திருக்கிறநெய் பால் மிகுதி குங்குமப்பூ ஆகிய இவைகளை ஒன்றாய்க்கலந்து அந்தச்சாதத்திற்பரவலாயூற்றிப் பாத்திரத்தின் வாய்க்கு பேட்கொடுத்து மூடிவிடவும். அடுப்பை எரிக்காமல் நெருப்புக்கட்டிமட்டும் அடுப்பின்கீழே போட்டுவைக்கவேண்டும். பாத்திரத்தின் வாயிலிருந்து ஆவிகிளம்பினவுடனே, அடியிலிருக்கும் நெருப்புக்கட்டிகளை அடுப்பைச்சுற்றிலும்போட்டு நடுவே நெருப்பில்லாமல்வைக்கவேண்டும். இவ்வாறு 15 நிமிஷம்வரையில் தம்மில் வைத்தபிறகு இறக்கிக்கிளறிவிட்டு உபயோகிக்கலாம். இதுவெகு நேர்த்தியான பாகம்.

## 182. மீன் குற்மா.

புதிதாகவும் நல்லதாகவும் பார்த்துவாங்கியமீனை,செவ்வையாய்க்கல்லிற்றேய்த்துப்பராலை எடுத்துவிட்டு, வால்சிறகுமுதலியவற்றைத்தறித்து நன்றாய்க் கழுவி, துண்டுகளாக அறுத்து ஒரு பவுண்ட் நிறுத்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

சம்பாரங்கள்:—நெய் பலம் 2. மெல்லியதாய்ச்சீவின வெங்காயம் பலம் 2. அரைத்த பூண்டு துலா $\frac{1}{4}$. வறுத்தரைத்த கொத்தமல்லிவிரை துலா $\frac{3}{4}$. வறுத்தரைத்த மிளகாய் துலா $\frac{3}{4}$. அரைத்த மஞ்சள் அரைதம்படி எடை. பச்சைகொத்துமல்லித்துளிர் ஒரு பிடி. கரமமசாலா துலா $\frac{1}{2}$. தேங்காயின் அரைமூடியில்வரும்பால். உப்புதுலா $\frac{1}{2}$.
பாகம்:—நெய். வெங்காயம் பூண்டு என்னும் இம்மூன்றும் நீங்கலாக ஏனையஎல்லாச்சம்பாரங்களையும் தேங்காய்ப்பாலுடன்சேர்த்து, பாகப்படுத்திவைத்திருக்கும் மீன்துண்டுகளை அதிற்போட்டு ஒன்



றாய்க்கலந்து அரைமணிநேரம்வைத்தபின்பு, 142 நீ பாகத்திற்கூறிய கறிதாளிதத்தைப்போல், ஒருபாணையில் நெய்வெங்காயம் பூண்டு என்னும் இவைகளை முறையே ஒவ்வொன்றாய்ப்போட்டு, தாளிதம்செய்து, கூட்டுக்கலவையை அதிற்கொட்டி, மூன்றுநிமிஷத்திற்கொருமுறை சட்டியை இருகைகளாலும் பிடித்தசைத்து அடுப்பில்வைத்து,3 நிமிஷம் பொறுத்து மறுபடியும் முன்போலச் சட்டியைத்தூக்கி அசைக்கவேண்டும். இவ்விதம செய்துக்கொண்டிருந்து அதின் ஜலம் அரைபாகம்சுண்டியபோது, ஷைகரியை தம்முக்குவிட்டு, 10 நிமிஷம் வரையில் அடுப்பில் வைத்திருந்து கீழே இறக்கிகொள்ளவும். அகப்பைபோடக்கூடாது.

## 183. மீன்புளி.

182நெ பாகப்படி சுத்திசெய்து துண்டுகள்செய்த மீன்பவுண்ட் 1. வறுத்தரைத்த மிளகாய் துலா 1. வறுத்தரைத்த கொத்துமல்லிவிரை துலா 1. அரைத்தமஞ்சள் அரைதம்படி எடை. நெய் பலம் 1. மெல்லிதாயரிந்த வெங்காயம் பலம் 1 அரைத்தபூண்டு துலா $\frac{1}{4}$. சீரகம் வெந்தயம் கடுகுஎன்னும் இம்மூன்றும் சேர்த்து அரைதம்படி எடை கருவேப்பிலை 10 இலை. புளி துலா 2. உப்பு துலா $\frac{3}{4}$. தேங்காயின் அரைமூடியில் வரும் தனிப்பால்,

பாகம்:—மீனுடனே கொத்துமல்லி மிளகாய் உப்பு என்னும் இவைகளைச்சேர்த்து, சீரகம் வெந்தியம் என்னும் இவ்விரண்டையும் வறுத்தரைத்துக்கலந்து, புளியிற்கொஞ்சம் ஜலம் விட்டுக்கரைத்து வடிகட்டி, அதனுடன் சேர்த்துக் கால்மணி நேரம் வரையில்வைக்கவும். அதன்பின் நெய் வெங்காயம் பூண்டினால் கறியைத்தாளிதம் செய்து, சிவக்கும்போது கடுகு கருவேப்பிலை போட்டுப்பொரித்து மீன்கலவையை அதிற்கொட்டி அதிலுள்ள ஜலம் அரைபாகம் சுண்டினபிறகு. தேங்காய்பால்விட்டு கறியைதம் முக்கு விடவேண்டும். அவ்வாறுவிட்ட 10 நிமிஷத்திற்குபின் இறக்கிக்கொள்ளலாம். இதற்குப்பின் 182 நீ பாகப்படி அடிப்பற்றுமற் சட்டியைக் கையாற்பிடித்துத்தூக்கி அசைக்கவேண்டுமேதவிர அகப்பைபோடக்கூடாது.

## 184. மீன்பொரியல்

சம்பாரங்கள்:—182 நீ பாகப்படி சுத்திசெய்து அறுத்தெடுத்த மீன்துண்டுகள் பவுண்ட். 1. பச்சைமிளகாய் துலா 1. பச்சைக்கொத்துமல்லித்துளிர் பிடி 1. உப்பு துலா 1. மஞ்சள் அரைதம்படிஎடை

ஏலக்காய் 10 மேற்கூறிய மசாலைகளையெல்லாம் சேர்த்தரைத்து, மீன் துண்டுகளுக்குப்பூசி அரைமணிநேரம் ஒருபாத்திரத்தில்வைக்கவேண்டும். வாணலை அடுப்பிலேற்றி நெய் அல்லது நல்லெண்ணையை அதில்விட்டு சூடானபின்பு மீன்துண்டுகளை இரண்டிரண்டுதுண்டுளாய் அதிற்போட்டுப்பொரிக்கவும். இரண்டுபக்கமும் திருப்பித் திருப்பிபோட்டுப் பொரிக்கவும். தங்கநிறமாய்வரும்போது எடுத்துக் கொள்ளவும்.

## Badam Halvah.

### 185. பாதம் அல்வா.

கைப்புள்ளவை நீக்கித் தோல்போக்கிய வாதுமைப்பருப்புப் பலம் 5, ஆஸ்டிரகாம் சர்க்கரை பலம் 15. குங்குமப்பூ வராகனெடை $\frac{1}{2}$. நெய் பலம $1\frac{1}{2}$. பன்னீர் பலம் $\frac{1}{2}$. வாதுமைப்பருப்பையும் குங்குமப்பூவையும் மெல்லிதாயரைத்து, ஒருபாத்திரத்திற்போட்டு, நெய் சர்க்கரையுடன்கலந்து அரையாழாக்கு ஜலம் அதில் விட்டு அடுப்பேற்றிக்காச்சும்போது. அதைத்தொட்டு இரண்டுவிரல்களால் அழுத்திப் பார்த்தால் நூல்போல்நீண்டு பிசுபிசுப்பாய்வரவேண்டும். அப்பதத்திலிறக்கி ஆறியபின்பு பன்னீர்விட்டு எடுத்துவைத்துக்கொள்ளவும்.

## Firni.

### 186. பீர்னி.

பசு அல்லது எருமைப்பால் படி $\frac{1}{4}$, கோதுமைநொய் ஆழாக்கு அரை, ஆஸ்டிரகாம் சர்க்கரை பலம் 5. பன்னீர் பலம் 1. பாலை அடுப்பேற்றிக்.கொதிவந்தபிறகு, கோதுமை நொய்யை அதிற்கொட்டிக்கிளறிக்கொண்டேயிருந்து, வெந்து இறுகியபின் சர்க்கரையை அதிற்கொட்டி, இன்னும் கொஞ்சநேரம் அடுப்பில்வைத்துக் காச்சி பின் இறைக்கிப் பன்னீர் விட்டுக்கலந்து கொள்ளவும்.

## Zarda or Mitha Khanah.

### 187. ஸர்தா அல்லதுமிட்டாகானா.

குங்குமப்பூ துலா $\frac{1}{4}$. விதையில்லாத திராட்சிபழம் பலம் 2. கைப்புள்ளதின்றி தோல் நீக்கிய வாதுமைப்பருப்பு பலம் $1\frac{1}{4}$ பச்சரிசி படி $\frac{1}{4}$. நெய் பலம் 2. காமசாலை துலா $\frac{1}{2}$. ஆஸ்டிரகாம் சர்க்கரை வீசை $\frac{1}{2}$. இவற்றுள் அரிசியைக்களைந்து $\frac{1}{2}$ மணிநேரம் ஊறவைக்கவேண்டும். சர்க்கரையில் ஒரு ஆழாக்கு ஜலம்விட்டுப் பாகுகாய்ச்சி கொள்ளவும். குங்குமப்பூவை அரைத்துக்கொள்ளவும் நெய்யைவாணலிற்போட்டு அடுப்பேற்றிக் காமசாலையை அதிற்போடவும். சிவந்து வரும்பக்குவத்தில் அதில்அரைப்படிஜலம்விட்டு, அரைத்தகுங்குமப்பூ அதிற்போடவும். செவ்வையாய்க் கொதித்தபிறகு, அரிசியை அதிற் கொட்டவேண்டும். ஜலமெல்லாம் சுண்டியபிறகு 35 நீ பாகப்படி சம்முக்குவிட்டு 15 நிமிஷத்திற்குபின் திராட்சிப்பழம் வாதுமைப்பருப்பு என்னும் இவ்விரண்டையும் அதிற்போட்டுச் சர்க்கரைப் பாகையும் அதிற்கொட்டிச் செவ்வையாய்க்கிளறி மூடிவிடவேண்டும். 5 நிமிஷம்வரையில் அடுப்பில்வைத் திறக்கிக்கொள்ளவும்.



### 188. நூல் அல்லது துணிகளுக்குப் பவ்டர் * சாயங்கொடுக்கும் முறை.

சீர்மையிலிருந்து பலவகைநிறமுள்ள சாயப்பவ்டர்கள் வருகின்றன. அவை எவையென்னில், (Orange) ஆரென்சுக்கலர் (Rose) ரோஸ் கலர், (Yellow) மஞ்சள்கலர் (Red) சிவப்புக்கலர், (Dark Green) கனப் பச்சைக்கலர். (Black) கறுப்புக்கலர் என்பவைகளே. இந்த தினுசுகளில் எவ்வகைநிறமுள்ள சாயம்போட நமக்கு இஷ்டமோ அந்நிறமுள்ள பவுடரில் துலா-1 சோற்றுப்பு 1-துலா சாயம்போடவேண்டிய நூல் அல்லது துணி 8-பவுண்ட் எடை எடுத்துக்கொள்ளவேண்டும்.

செய்பாகம்.-துணி அல்லது நூலிற் கஞ்சி மாவு என்னும் இவைகள் தங்கியிராமல் முந்திச்செவ்வனே துவைத்துப் பிழிந்துவிடவேண்டும். பிறகு ஒருவாயகன்ற பாத்திரத்திலே ஜலம்விட்டு உப்பை அதிற் போட்டுக்காய்ச்சி அதுகரைந்தபிறகு பவ்டரை அதிற்போட்டு, ஜலம் நன்றாய்க்கொதிக்கும்போது, ஷை துணிஅல்லது நூலைப்பிரித்துமடிப்பு சுருக்கம் முதலியவைகளில்லாமல் பார்த்து அந்த ஜலத்தில் நனைத்து அந்தத்துணியிற் சாயம் நன்றாய்ப்பிடிக்கும்படி கோலாற்செவ்வனே புரட்டிவிடவும். ஜலத்திலிருக்கும் சாயம் துணியிற்பற்றி. ஜலம் தெளிகிறவரையில் அடுப்பெரித்துப் பிறகு இறக்கி ஜலத்திற் கழுவி நிழலில் காயவைத்து மடித்துக்கொள்ளவும்.

---

* சாயங்கொடுக்கிற பவ்டர் சீர்மையிலிருந்து வருகிறது ஷாப்புகளில் வாங்கலாம். ஆரஞ்ச் கலர்-கிரயம்-பவுண்ட் 1-க்கு ரூபா-2. ரோஸ்கலர் பவுண்ட் 1-க்கு ரூபா-$2\frac{1}{2}$. மஞ்சள் கலர் பவுண்ட்-1-க்கு ரூபா-2-2-0 சிவப்புக்கலர்ப்வுண்ட் 1-க்கு ரூபா-2. டார்க் க்ரீன் அதாவது கனப்பச்சை-பவுண்ட் 1-க்கு ரூபா-$2\frac{1}{2}$ கறுப்புக்கலர்-பவுண்ட் 1-க்கு ரூபா-2. இவைகள் தேவையானால் நம் மானேஜருக்கு முற்பண மனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

### 189. வஸ்திரத்தில் இரும்புக்கறைபட்டால்.

க்ரீம் ஆப் டார்டார் (Cream of Tartar) கொஞ்சம் ஜலம்விட்டுக்கரைத்துக் கறையிற்பூசி வெய்யலிற்காயவைத்துக் கழுவி விடவும். கறை எடுபட்டுப்போம்.

### 190. வெள்ளி நகைகள் அல்லது பாத்திரங்களைப் பளபளப்பாக்க.

(Hyposulphite of Soda) ஐபோஸல்பைட் ஆப் சோடாவை ஜலத்திற்போட்டுக் கரைத்தபின் வெள்ளிநகை அல்லது பாத்திரத்தை அதிற்போட்டுக் கழுவியெடுத்துக்கொண்டால் அதிக பளபளப்பாயிருக்கும்.

### 191. தங்கம் வெட்டையாயிருந்தால்.

ருமிமஸ்தகி-வெண்காரம் என்னும் இவ்விரண்டையும் சமனெடையாயெடுத்தரைத்துத் தங்கத்தையுருக்கிக் கிராசம்கொடுக்கவும். அல்லது குங்குமப்பூவைக்கிராசம் கொடுக்கவும்.

### 192. வஸ்திரங்களிற் கறையெடுக்க.

கறைபட்டஇடத்தை ஜலத்தில்நனைத்துப் பிழிந்துவிட்டு நெருப்புக்குச்சியைப் பற்றவைத்து, அதினுண்டாகும் கந்தகப் புகையைக் கொஞ்சநேரம் பிடித்துக்கொண்டிருந்தால் கறைமாறிவிடும்,

### 193. வேறுமுறை.

ஸஜ்ஜிக்கார் நாமக்கட்டி இரண்டும் ஸமன்சேர்த்து கொஞ்சம் ஜலம்விட்டரைத்து வஸ்திரத்தில் கறைபட்ட இடத்தில்த்தடவிகாயவைத்து எடுத்து ஜலத்தினால் அலம்பிவிடவும் எவ்விதக்கறையும் எடுபட்டுப்போகும்.

### 194. ஆப்தவாக்கியங்கள்.

முயற்சிசொல்லுகின்றது, "நீ என்னை விசுவாசித்தால், நான்உன்னை மேன்மைப்படுத்தி விடுகிறேன்." அதாவது-முயற்சியுடையோனிகழ்ச்சி யடையான்.

மரியாதை சொல்லுகின்றது, "நீ என்னை அபிமானித்தால், உலகத்திலுள்ள யாவரும் உன்னை யபிமானிக்கச் செய்வேன்."

அதிகாரம் சொல்லுகின்றது, "நீ என்னைக்கைவசப்படுத்தி மேன்மைபெற்றால் உலகத்துள்ளார் யாவரும் உன்னைமேன்மைப்படுத்தும்படி செய்வேன்."



ஐஸ்வரியம் சொல்லுகின்றது, "நீஎன்னை நல்வழியிற்செலவுசெய்தால், உன்செல்வாக்கை ஈருலகத்திலும்மேன்மைப்படுத்துவேன்.

கல்விசொல்லுகின்றது, "செய்கையினாலும் பார்வையினாலும்கேள்வியினாலும் விலக்கப்பட்டிருக்கிற விஷயங்கள் தவிர, மற்றவைகளை என்னிடத்திலிருந்து கற்றுக்கொள். ஈருலகவாழ்க்கையினும் உன்னை சிறந்தவனாகச் செய்வேன்"

புத்திசொல்லுகின்றது. "நீ என்னை நிந்தித்தால் நான்உன்னைப்பைத்தியக்கார ஆஸ்பத்திரியிற் சேர்ப்பேன்."

அன்புசொல்லுகின்றது- "நீ என்னைக்காப்பாற்றினால் நான் உன்னை உலகப்பிரசித்தனாக்குவேன்."

பொறுமைசொல்லுகின்றது, "நீ என்னைக்கைவசப்படுத்து உன்னைச்சயசீலனாக்கிவிடுகின்றேன்."

வியசனம் சொல்லுகின்றது, "நீஎன்னைத்தின்றால் நான் உன்னைத் தின்பேன்" என்பதே, அதாவது-துக்கமுற்றவன் துர்ப்பலனாகின்றான்,

துர்ச்சகவாசம் சொல்லுகின்றது, "நீ என்னுடன் சகவாசஞ்செய், உன்னையாவரும் நிந்திக்கும்படியான மதிப்பில்லா மனிதனாக்கி விடுவேன்."

சாராயம்சொல்லுகின்றது, "என்னைக்கொஞ்சம் முத்தமிடு, உன்னைச் சந்தியிலிழுத்து விடுகின்றேன்."

இருதயம் சொல்லுகின்றது, நீ என்னைச் சுத்தியாகவைத்தால், நான் உன்னைச் சித்திபெறச்செய்வேன்."

வாணாள்சொல்லுகின்றது, "நீ என்னை ஒருபோதும் நம்பாதே, திடீரென்று உன்னைமோசம் செய்துவிடுவேன்.

மரணம்"சொல்லுகின்றது, "நீ என்னை ஒருபோதும் மறவாமற் சதா நினைத்துக்கொண்டிருந்தால்: நான் உன்னைத் தவறானமார்க்கத்தைவிட்டுநீக்கி சன்மார்க்கத்திற் சேர்த்துவிடுவேன்."

பேசுவதற்குமுன்யோசி, பேசியபின்யோசியாதே.

உண்மையன்றென் றுணர்ந்த மொழிகளை உண்மைபோல ஒருபோது முரையாதே.

காலங்கழிகின்றது காலன்சமீபிக்கின்றான். எனுமானதை இப்போதேசெய்.

சுத்தப்படுத்திய இருதயகமலக்கண்ணாடியிற் கடவுளின் பிரகாசம் தோற்றப்பட்டால் முத்திமார்க்கம் முற்றுப்பெற்றதென்பதிற் சற்றும்சந்தேகமில்லை.

## சமாச்சாரம்.

### ஓர் ஆச்சர்யமான சம்பவம்.

பங்காளத்தைச் சேர்ந்த மாங்கீர் ஜில்லாவில், ராஹீட்பூர்க்கிராமத்து ஜமீன்தாராகிய ஜகதாம்பிசிங்என்பவர், சிலதினங்களுக்குமுன் ஒருநாள் தன்மனைவியுடன் வீட்டிற் சயனித்துக்கொண்டிருக்கையில், இரவு சுமார் ஒருமணிக்கு, இரண்டு பெண் பசாசங்கள் படுக்கையறையிற் பிரவேசித்து, அவர் பக்கத்திற் நித்திரைசெய்து கொண்டிருந்த அவர் மனைவியாரைக் கட்டிலினின்றும் தூக்கித் தரையிற் படுக்கவைத்து, அவளுடைய ஆபரணங்களையெல்லாம் கழற்றி அவ்வறையிலிருந்த ஒரு பெட்டியில் வைத்துவிட்டு, அந்த அம்மாளைத் தீயினாற்கொளுத்திவிட்டன. வஸ்திரத்தில் தீப்பற்றி யெரியும்போது, ஒருபொறி கட்டிலின்மேற் படுத்திருந்தகணவன்மேல்விழுந்தது. அவர் உடனே திடுக்கிட்டெழுந்து பார்த்தபோது பசாசங்கள் மறைந்தன. அவர் எரிந்துகொண்டிருக்கும் மனைவியைப்பார்த்து யாது சமாச்சாரம் என்று வினவினர். அப்போது அந்த அம்மாள் இரண்டு பூதங்ள்வந்ததாகவும் அவைகளைக்கண்டவுடனே தனக்குப் பேசநாவெழாதிருந்ததாகவும் ஆனால் தனக்கு நித்திரையின்றி விழிப்போடு சுய அறிவு இருந்ததாகவும் கணவனெழுந்தவுடனே தனக்குப்பேசச்சக்தி வந்ததாகவும் அப்பசாசங்களே தன்னைத் தீயிற்கொளுத்தினதாகவும் கூறி மறுதினம் மரித்தனள். அறை பூட்டியிருக்கும்போதே இவ்வேலை நடந்திருக்கின்றதாம். இது விரோதிகளால் வைப்புவைக்கப்பட்டிருக்கிறதாக நிதானிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய கொடிய துஷ்டர்கள் இம்மை மறுமையென்னும் ஈருலகவாழ்க்கைகளிலும் கோரமாய்த் தண்டிக்கப்படுவார்கள்.

### சந்திரனிலும் ஜனங்களிருக்கின்றார்களா?

கொழும்புக்கனுப்பப்பட்டிருக்கும் போவர் கைதிகளில் வியாதியஸ்தராயிருந்த ஒரு கிழவருக்கு வைத்தியம் செய்த அதிபாலிய டாக்ட்டர், ஓர்நாள் அக் கிழவரோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், அவரைப்பார்த்து, "சந்திரனில் ஜனங்களிருக்கின்றார்களென்பது உமக்குத் தெரியுமா?" என்றுகேட்டார். அது கேட்ட கிழவர், "சந்திரனிலும் ஜனங்களிருப்பார்களா! இது ஒருபோதுமில்லை." என்று பதிலுரைத்தார். அப்போது டாக்ட்டர், "உங்களுடைய நேசர்களாகிய ப்ரென்சுக்காரர்கள் பெரியதூரதிருஷ்டிக்கண்ணாடியொன்று பாரிஸ் பல்பொருட் காட்சியில்வைத்து, அக்கண்ணாடியாற் சந்திரனைப்பார்த்து, சந்திரனிடத்தில் ஜனங்களிருக்கின்றார்களென்று கண்டுபிடித்திருக்கின்றார்களே! இனியாயினும் நீர் நம்பலாகாதா?" என்றாராம். அப்போது கிழவர் "அப்பப்பா! சந்திரனில் ஜனங்கள் குடியேறியிருந்தால், ஆங்கிலேயர் சந்திரனையும் இது வரையில் தங்கள் நாட்டுடன் சேர்க்காதிருப்பார்களா?" என்றனராம்.

கடவுள் துணை.

# விநோதவிசித்திரப்பத்திரிகை.

1901ம் ௵

புஸ்தகம் II] பிப்ரவரிமீ 5உ செவ்வாய்க்கிழமை. [No. 2

## ஞானம்.

201-ம் பக்கத்தொடர்ச்சி.

முற்கூறியபடி புத்திநுட்பம் கவனசக்தி ஆசை அன்பு வைராக்கியம் விடாமுயற்சி பக்தி என்னும் இவ்வெழுவகை இயல்புகளையும் இடையறாமற் கடைப்பிடித்தொழுகிக் கடவுளை நாம் கிட்டுவதற்கு முயற்சிக்கவேண்டும். ஓர் சக்கரவர்த்தியின் சமுகத்திற்குச் செல்லவிரும்புவோன் பிரதமத்தில் தனது சரீரத்தைச் சுத்திசெய்துகொண்டு பின் உயர்ந்த வஸ்திரங்களால் அலங்கரித்துக்கொண்டு, பிறகு தவறான எண்ணங்களைத்தடுத்து நிச்சயமான எண்ணங்களை எண்ணிக்கொண்டு, அப்பால் அவ்வரசசமுகத்தில் அபத்தவார்த்தைகளையொழித்து உண்மைவார்த்தைகளையுரைக்கவேண்டுமென்று உத்தேசித்துக்கொண்டு சென்றுதான் தனது கோரிக்கையைநிறைவேற்றிக்கொள்ளவேண்டும். சாதாரணமாய் நம்போன்ற மானிடசரீரியாய் நம்மையொத்தமுன்னோர்களால் அரசனென்று நியமிக்கப்பட்டு, அக்காலமுதல் இக்காலம் வரையில் நாம்கொடுக்கின்ற இறையினைப்பெற்றுத் தொழில்பார்த்துவரும் சக்கரவர்த்தியின் சமுகத்திற்குச் செல்லும்போதே இவ்வளவு ஒழுக்கங்களமையவேண்டுமானால், அநாதியாகத் தேவாம்சமுடையாராய் எவ்வகையிலும் இணைசொல்லற்கேலாதவராய்ச் சகல ஜீவராசிகளுக்குள்ளே சிரேஷ்டமான நம்போ

ன்ற மானிடர்களால் சாமானிய அறிவுவிளக்கத்தால் அறியக்கூடாதவராய்க் கைம்மாறுவேண்டாக்கருணையாளராய்ச் சிவகோடிகளெத்தனையோ அத்தனையிலும் அவ்வவற்றிற்கேற்றபடி அந்தர்யாமியாய் நிறைந்திருப்பவராயுள்ள சர்வவல்லபரான கடவுளின் சமுகத்திற்செல்லவேண்டுமாயின், எவ்வளவு பரிசுத்தத்துடனும் தாழ்மையுடனும் செல்லவேண்டுமென்பதைச் சற்று யூகிக்கின் மிகவிரிவாய் நமது சிற்றறிவிற்கு அகோசரமாகுமென்பதிற்றடையில்லை. ஆயினும் அத்தகைய கடவுளினது சமுகத்திற்றடையின்றிச் செல்லுதற்கேதுவான தூய்மைகளை வகைகளுமுடையவராய்ச் சென்றுகண்ட செந்நெறியாளர்கள், "தாமின் புறுவதுலகின்புறக்கண்டு-காமுறுவர் கற்றுணர்ந்தார்." என்றதற்கேற்பப் பின்னுள்ளாரும் அவ்வாறொழுகி அவ்விறைவன் சமுகத்தையடையுமாறு அத்தூய்மைகளனைத்தையும் சுருக்கி முப்பாலாக்கிவைத்துள்ளார். அம்முப்பாலெவையெனின், மனப்பால் வாக்குப்பால் காயப்பால் என்பவைகளே. இம்முப்பாலுள் முதலிலமையவேண்டியது மனப்பாற்றூய்மையென்பது மேற்சொல்லிய அடைவினானே நனிவிளங்கும். அம்மனப்பாற்றூய்மையாவது - பொறாமை துராசை கோபம் அசங்காரம் காமம் மயக்கம் உலோபம் முதலியவைகளை நீக்குதலே. இரண்டாவது வாக்குப்பாற்றூய்மையாகும். அதாவது-பொய்கூறல் புறங்கூறல் கடுஞ்சொற்கூறல் முதலியவைகளை நீக்குதலே. மூன்றாவது காயப்பாற்றூய்மையாகும். அதாவது - வீண்தொழில்களியற்றுவதையும் பிறருக்காவது தனக்காவது நஷ்டமுண்டுபண்ணக்கூடிய ஒழுக்கங்களையும் நீக்குதலேயாம். இம்முப்பாற்றூய்மைகளும் அமைவது எவ்வாறெனின், மனத்தின்கணிகழும் தீய எண்ணங்களாகிய அசுத்தத்தைக் கடவுளுடைய தியானமென்னும் ஜலத்தினாலும், வாக்கின்கணிகழும் தீயசொற்களாகிய அசுத்தங்களைக் கடவுளுடைய தோத்திரமென்னும் ஜலத்தினாலும், காயத்தின்கணிகழும் தீச்செயல்களாகிய அசுத்தங்களைக் கடவுளுடைய வழிபாடென்னும் ஜலத்தினாலும் சுத்தப்படுத்தவேண்டும். மேற்கூறியவைகளே திரிகரணங்களின் அசுத்தங்களென்பதையும் அவற்றை மேற்சொல்லிய ஜலங்களினாற்றான் சுத்தப்படுத்தவேண்டுமென்பதையும், "திருக்குறு மழுக்காறவாவொடு வெகுளி செற்றமாகியமன வழுக்கைத்-தியானமென் புனலாற்பொய்புறங்கூற றீச்சொலென் கின்றவாயழுக்கை-யருட்கினார் நினைதுதியெனும் புனலா லவத்தொழி லென்னுமெய் யழுக்கை - யருச்சனையென்னும் புனலினாற் கழுவா வகத்தனே தூய்யுநா



ளுளதோ." என்னும் பெரியோர் வாக்கானுமுணர்க. ஆயின் மனப்பால் வாக்குப்பால் காயப்பாலென்னும் முப்பாலின்கணுள்ள மேற்கூறிய அசுத்தங்களைப்போக்கிவிடின் சரீரசுத்தியாயிற்று. அவ்வித சரீரசுத்தி அகத்தூய்மையென்றும் புறத்தூய்மையென்றும் இருவகைப்படும். அவ்விரண்டனுள் அகத்தூய்மையமையார்க்குப் புறத்தூய்மையமையினும் பயனில்லை. எனவே, அகத்தூய்மை சிறப்பும் புறத்தூய்மை பொதுவுமெனக்கூறப்படும். எவர்க்குச்சிறப்புவிதிகள்யாவும் அமைகின்றனவோ அவர்க்குப் பொதுவும் தானேயமையுமென்பது தேற்றமாகலின், புறத்தூய்மையைப்பற்றிக் கூறவேண்டுவதவசியமின்று. தூய்மைகளிருவகைப்படுமென்பதையும், அவற்றுள் அகத்தூய்மை சத்தியத்தாலமையுமென்பதையும், புறத்தூய்மை ஜலத்தாலமையுமென்பதையும், "புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை-வாய்மையாற் காணப் படும்,". என்னும் ஆன்றோருண்மைவாக்கானுமறிக. அன்றியும். உலகத்தில் நமது கட்புலனுக்குத் திரிசியமாகும் எவ்வகை வஸ்துக்களும் சுத்தமுறாவிடத்து நமக்கு இனிமைபயக்காததுபோன்று, மேற்கூறியவாறு சுத்தப்படாவிடத்துக் கடவுளுக்கு நாம் இனியர்களாகோமென்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றதல்லவா!, சாதாரணமாய் நாம் உடுத்திருக்கும் வஸ்திரமும் அழுக்கடைந்துள்ளபோது நம்மாலும் பிறராலும் அருவருக்கத்தக்கதாகவும், அது சுத்தப்பட்டபோது கண்டோரெவராலும் காதலிக்கத்தக்கதாகவும், நாம் கையாளும் பாத்திரங்களுள் ஒவ்வொன்றும் அதனதன் அழுக்கோடு கூடியிருக்குங்காலத்து அப்பாத்திரங்கள் ஸ்நானபானாதிகளுக்குபயோகிக்கவெவர்க்கும் சம்மதமில்லாதனவாகவும், அவற்றின் அழுக்குகள் கழன்றபோது எவராலும் விரும்பத்தக்கனவாகவும், நாமணிந்துள்ள ஆபரணங்களிற் பதித்துள்ள இரத்தினங்கள் அதனதன் களங்கத்தோடு கூடியிருந்தபோது யாவர்க்கும் மதிப்பற்றனவாகவும், அவற்றைச்சாணையிற்றேய்த்துக் களங்கம் நீக்கியபோது எவர்க்கும் மதிப்புற்றனவாகவும் விலையேறப்பெற்றனவாகவும் விளங்குவதே போதுமான சான்றாம். ஆகலால், மேற்கூறிய மூவகைத்தூய்மைகளுள் முதன்மைபெற்ற மனத்தூய்மைபற்றவர்கள், தம்மைக்கண்டோர் தூய்மையுடையாரென்றெண்ணும்பொருட்டு நீரிற்சதாமுழுகித் தூயராயினும் பயனின்று., இதனை "மனத்தது மாசாக மாண்டார் நீராடி- மறைந்தொழுகு மாந்தர் பலர்." என்னும் பெரியோர் வாக்கானுமறிக. அன்றியும், நாம்புரியும் ஒவ்வொரு செய்கையும், முதலில் மனத்தின்கணுதித்து வாக்கின்கண் வெளிப்

பட்டுக் காயத்தின்கணிகழுதலால் தீயஎண்ணங்கள் மனத்தின்கணுநிக்காவாறு தடுத்துவருவோமாயின், அவை வாக்கின்கண் வெளிப்படுதற்கும் காயத்தின்கணிகழுதற்கும் ஏதுவிாதல்லவா? அவ்வாறன்றி மனம்நீங்க ஏனைய இரண்டுசோலைங்களால்விளையும் தீமைகளைமாத்திரம் ஒழித்துவாலாமேயெனின், மனத்தின்கணுதிக்காத தீமை வாக்கின்கண்ணும் காயத்தின்கண்ணும் கிடையாதென்பது திண்ணமாகலின், அவ்வாறுகூறுதல் பயனிற்சொல்லாய் முடியும். இனி, இம்மனத்தூய்மை எவ்வாறுநேருமெனின், நமக்குதிக்கும் ஒவ்வோரெண்ணத்தையும் மனச்சான்றுக்குமுரணுகாமல் நடுவுநிலைமையுடன் ஆராய்கின்ற ஆராய்ச்சியைக் கைக்கொள்வதால் நேரும். அவ்விதஆராய்ச்சியைக்கைக்கொள்வது சாதுக்களினியல்பாதலால், அத்தகைய சாதுக்களின்சகவாசம் நமக்கு அத்தியாவசியம். சாதுக்களின்சகவாசத்தால் நேர்வது செயற்கையறிவல்லவோ? நமக்குள்ள இயற்கையறிவே போதாதோவெனின், நமது இயற்கையறிவுக்கு ஒவ்வோர்சால் மக்கினம்நோக்கூடும். அத்தகையதருணத்தில் அம்மக்கினத்தைப்போக்கி விளக்கத்தக்கவர்கள் அத்தகைய சாதுக்களேயாகலின் அவர்கள்சகவாசமிருக்கின் ஒருபோதும் மக்கினம்நோமல் பிரகாசித்துக்கொண்டிருக்கும். இதனுனன்றே, "சுடர்விளக்காயினும் நன்றாய் விளக்கிடத்தூண்டுகோலொன்று வேண்டும்" எனப்பெரியோர் கூறியுள்ளார். அன்றியும், நீர் இயற்கையில் உவரற்றதும் இலேசுள்ளதும் வெண்ணிறமுடையதுமாயினும், அதுசேர்ந்த நிலத்தினியல்புக்கேற்ப உவரடைதலும் கடிப்பாதலும் கருமை செம்மைமுதலிய நிறவேறுபாடடைதலும்போன்று, நமதியற்கையறிவு சுத்தப்பட்டிருப்பினும், சகவாசத்தின் செயற்கையறிவாற் பல்வேறு மாறுதல்களடையக்கூடும். அவ்வாறடையாமல் நமதியற்கையறிவு இயல்பாகவிளங்கி மேன்மேலும் அபிவிர்த்தியாதற்குச் சாதுக்கள் சகவாசமே முக்கியகாரணமாகும். இதனுனன்றே, "நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்—கினத்தியல்ப தாகு மறிவு." எனப்பெரியோர் கூறியுள்ளார். (இ-வரும்.)

## 195. அரோகநெறிவினுவிடை.

### வைத்தியனுக்கும் மாணுக்கனுக்கும் சம்பாஷணை.

1. மா. ஐயா! வைத்தியரே! அடியேனுக்கிதுவரையில் தாங்கள் போதித்த நூல்கள் அனந்தமாயினும், அவற்றுட்கூறும் விதிவிலக்குகள் யாவும் ஒவ்வொருவரும் நோயற்ற வாழ்வையடைவதைக் குறித்தவையன்றே? அவ்வாறு பலபடவிரித்துரைத்திருப்பதால் அதிமுக்கியமானவை எவையென அடியேனுக்கு விளங்கவில்லை. இதனடியில் அடியேன் கேட்குமாறு ஒவ்வொன்றுக்கும் முக்கியமானவற்றைமாத்திரம் விளக்கிவந்தால் தெள்ளிதிற்றெளியலாகும்.

வை. அப்பா! அவ்வாறே விளக்குவோம். ஆயின் நீ மாத்திரம் வினுக்களை முன்பின் மாறுதலற்ற அடைவுடன் கேட்கவேண்டும். அஃதெவ்வாறெனில், ஒருவன் காலையில் விழிப்பது முதல் இரவிற் சயனிக்கும்வரையில், அவன் அனுஷ்டிக்கும் அனுஷ்டானங்களில் முக்கியமானவற்றை வரிசையாகக்கேட்டல். இதற்குத்தான் தினக்கிரமாலங்காரமென்று பெரியோர் கூறுவர். இவ்வண்ணம் ஒருதினத்திற்குரியவற்றைக்காட்டிவிட்டால், ஆயுளுள்வரையில் அவற்றையே அனுஷ்டானமாகக் கொள்ளலாமல்லவா?

2. மா. ஆம்; தேவரீர்கட்டளைப்படியே வரிசைப்படக்கேட்கின்றேன், தயவுசெய்து விடையளித்துவரவேண்டும். ஒருவன் நித்திரைவிட்டு எழுந்திருக்கவேண்டிய காலம் எது?

வை. பிராதக்காலம் என்று சொல்லத்தக்க அதிகாலையாகும்.

3. மா. அவ்வாறு அதிகாலையிலெழுந்திருப்பதனுல் என்னென்ன குணங்களுண்டாகும்?

வை. அதிகாலையில் விழித்தால், புத்திக்குத்தெளிவும், சரீரத்துள்ள சுத்தநரம்பிலிருக்கும் ரத்தத்திற்குப் பரிசுத்தமும், பித்தகோபத்தணிவும், வாதபித்த சமனும் உண்டாகும்.

4. மா. இதற்குப்பிரமாணமுண்டோ? அதுயாது?

வை. உண்டு. அது, "புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்குஞ்-சுத்த நரம்பினரற்றாய்மையுறும்-பித்தொழியுந்-தாலவழி வாதபித்தந் தத்தநிலை நண்ணுமதி - காலைவிழிப்பின் குணத்தைக் காண்." என்பதே.

5. மா. விழித்தவுடனே சுத்தஜலமருந்தல் நலமெனச்சிலர் கூறுவர், அதுசாத்திர சம்மதமா? சம்மதமாயின் அதன்குணங்களெவை?

வை. அவ்வாறருந்தல் சாத்திரசம்மதமே. அதன்குணங்களாவன—மலஜலக்கட்டுக்களை நிவாரணித்தல், பித்தாதிக்கத்

தைத்தணித்தல், வாதம் முதலிய மூன்றையும் தத்தமிடங்களிலிருக்கச்செய்தல் என்னுமிவைகளே.

6. மா. இதற்குப்பிரமாணமுண்டோ? அதுயாது?

வை. உண்டு. அது, "தூங்கி விழித்தவுடன் சுத்தோ தகமருந்தி-லோங்கிநின்ற பித்த மொழிவதன்றித் - தேங்கு-மலமூத் திரந்தங்கா வாதாதி யுந்தங் - தலமாத் திரமுலவுந் தான்" என்பதே.

7. மா. விழித்தவுடன் பார்க்கத்தக்க வஸ்துக்களெவை?

வை. தாமரைப்பூ தங்கம் தீபம் கண்ணாடி சூரியன் நெருப்பு செஞ்சந்தனம் கடல் வயல் கன்றையுடையபசு வலக்கரம் மனைவி மிருதங்கம் என்பவைகளே.

8. மா. இதற்குப்பிரமாணமுண்டோ? அதுயாது?

வை. உண்டு. அது, "கஞ்சந்தங் கந்தீபங் கண்ணாடி யெல்லங்கி - செஞ்சந்த நீர்மண் சிவலிங்க - மஞ்சங்கல் - கற்று தமது வலக் கைமனைத டாரியிவை- யுற்றால் விழிப்பிலுத்தமம்" என்பதே.

9. மா. இவற்றுள் உத்தமம் எது? அதன் குணங்களெவை?

வை. கண்ணாடியே உத்தமமானது-அதன்குணங்களாவன-தாது விர்த்தி சந்தோஷம் சகல வஜீகரம் அறிவுதயம் என்னும் இவைகளே.

10. மா. இதற்குப்பிரமாணமுண்டோ? அதுயாது?

வை. உண்டு. அது, "தாதுங் களிப்புஞ் சகல வஜீகரமும்-போத வறிவுமுண்டாம் பூதலத்து-ளுதமுறும்-பண்ணுடிப் பார்க்கும் பனிமொழியே நீவிழிப்பிற்—கண்ணாடி பார்த்திதனைக் காண்." என்பதே.

11. மா. விழித்தவுடன் பார்க்கத்தகாத வஸ்துக்களிவையென்றொருவாறு குறிக்கக்கூடுமோ? கூடுமேல் அவை எவை?

வை. குறிக்கக்கூடும். அவை-அங்கவீனம், வஸ்திரவீனம்,பாவச்செயல், காவிவஸ்திரம், கிரகசங்கை, ஊமை, மொட்டைத்தலை; செவிடு, அழுகை, சடை, விருப்பமில்லாமை, கூன், அழுக்குடம்பு, விரிந்தமயிர்த்தலை, தூங்குமுகம், குஷ்டம், கொலை, எண்ணெய்த்தலை, வியாகூலம், உன்மாதம், தரித்திரம், ஜலதோஷம், க்ஷயம், என்னும் இவ்வகையான



ஆண்பாலார்முகங்களும், ஆருசம் அழுகை அமங்கலம் என்னும் இவைகளையுடைய பெண்பாலார்முகங்களும், சர்ப்பம் பூனை சாம்பல் எருமை விளக்குமாறு கயிறு உலக்கை முறம் என்னும் இவைகளுமாம்.

12. மா. இவற்றிற்குப் பிரமாணமுண்டோ? அதுயாது?

வை. உண்டு. அது, "ஊனமவத் திரம்பவங்கல் லாடைசங்கையூமைதட்டைசெவிடிரங்கல்சடை நிராசை-கூனழுக்குமேனிவிரிமூர்த்தந் தூக்கங் குட்டமற நெய்த்தலையாகுலமுன் மாதந்-தீனமறற் கயமிவையுள்ளார் முகத்துந் தீட்டமுகை விதவைவஞ் சியர்முகத்தங் - கானவர விந்திபவிமூரி மாறு கயிறுலக்கைமுறத்திடத்தும்விழித்த றீதே." என்பதே.

13. மா. அப்பால் மலஜலங்களைத் தடையின்றி விசர்ச்சிக்கவேண்டியதென்பது முக்கியந்தானோ?

வை. ஆம். விழித்தவுடன் செய்யத்தக்கது அதுவேயாகும்.

14. மா. ஆயின், அவ்வாறு செய்வதால் விளையும்குணங்களெவை? அதற்குப்பிரமாணம்யாது?

வை. அவ்வாறு விசர்ச்சனம் செய்வதால், வாதாதிமூன்றும் தத்தம் நிலைமையைக் கடவாதிருப்பதோடு தீபாக்கினி அதிகரித்தலால் நோய்க்கூட்டங்களணுகா. இதற்கு, "இருமலங்கடங்கா விறங்குங்கான் மூன்று—மிருமலக்கடங்கணிலையெய்து-மிருமச்-சமனுக்கினிசாருஞ் சாராநோ யிட்டஞ்-சமனுக் கினைசாரா தாம்." என்பதேபிரமாணமாகும்.

15. மா. தந்தசுத்தி எவ்வெவற்றாற் செய்யலாம்?

வை. தந்தப்பொடி இலை கொம்பு என்னும் இவற்றாற் செய்யவேண்டும். ஆனால், அவைகள் துவர்ப்புள்ளவைகளாக இருந்தால் தந்தங்களிலும் அவற்றின்வேரிலும் காணும் ரோகங்கள் தணிந்து தந்தங்களுறுதியாகும்.

16. மா. இதற்குப்பிரமாணமுண்டோ? அதுயாது?

வை. உண்டு அது,"துகளிலை காட்டமிவை தொட்டுத் துலக்கிற்றுகளிலை காட்டாது கோடங்-துகளிலைகண்-மெய்த்துவரையொத்திருக்கின் மேறுள் வரைமூரன்-மெய்த்துவலர யொத்திருக்குமே." என்பதே.

17\. மா. ஆயின், எவ்வெக்கொம்புகள் முக்கியமானவை? அதனதன்குணங்களெவை?

வை. வேலின்கொம்பு-வேம்பின்கொம்பு- பூலாக்கொம்பு-ஆலின்விழுது-நாயுருவிவேர் என்பவைகளே. இவற்றுள்-வேலின்கொம்புக்குத் தந்தங்களுறுதிப்படும், வேம்பின்கொம்புக்குத் தந்தங்களொளிபெறும், பூலாக்கொம்புக்குத் தாதுவிர்த்தியாம், ஆலின் விழுதுக்குத் திருமகள்விலாசமுண்டாம், நாயுருவி வேருக்கு வசிகரமுண்டாம்.

18\. மா. இதற்குப் பிரமாணமுண்டோ? அதுயாது?

வை. உண்டு. அது "வேலுக்குப் பல்லிறுகும் வேம்புக்குப் பல்துலங்கும்-பூலுக்குப் போகம் பொழியுங்கா- ணாலுக்குத்-தண்டா மரையாளுஞ் சாருவளே நாயுருவி-கண்டால் வசிகரமாங் காண்." என்பதே.

19\. மா. பல்விளக்கத்தகாதவை எவை?

வை. செங்கற்பொடி மணல் கரி தென்னம்பாளை வைக்கோல் என்னுமிவைகளே.

20\. மா. இதற்குப்பிரமாணமுண்டோ? அதுயாது?

வை. உண்டு அது, "கல்லு மணலுங் கரியுடனே பாளைகளுங்-கொல்லைவளர் வைக்கோலுங் கொண்டுநிதம்-பல்லதனைத்-தேய்த்திடுவா ராயினன்னேர்ச் சேராளே சீதேவி-வாய்த்திடுவாண் மூதேவி வந்து." என்பதே.

21\. மா. ஸ்நாஸம் எந்த ஜலத்திற்செய்யவேண்டுவது?

வை. சுத்தஜலத்திற்றான் செய்யவேண்டும்.

22\. மா. அவ்வாறு செய்வதாலுண்டாகுங் குணங்களெவை?

வை. நாட்பட்டதினவு-சோர்வு-எரிவு - தேகக்கனதி என்னுமிவைகள் நிவாரணமாவதுடன், சரீரப்பளபளப்பும் உறுதியும் பசியும் சௌந்தரியமுமுண்டாகும். (இ-வரும்)

### 196. கருப்போற்பத்தி.

208-ம். நம்பர் தொடர்ச்சி.

ஸ்திரீபீஜத்திலிருந்து வெளிப்படும் சினை இரஜவொழுக்கு நின்றபிறகு 4 முதல் 8 தினங்கள்வரையில் கருப்பகோசத்தில் தங்கியிருந்து சென்றுவிடுமென்று முன்னமே கூறியிருக்கின்றோம், ஆகையால், சாதாரணமாய்க் கருப்போற்பத்தி அக்காலத்திற்றானே சித்திக்கவே



### 197. தாடி மீசை உரோமங்கள் வளர்ந்து கருப்பதற்கு.

4\. செ. ஒடிகொலன் அவுஸ் 2. (Tincture of Canthardis) டிங்ச்சர்ஆப் காந்தார்டிஸ் அவுன்ஸ் 2. (Oil of rosemary) ரோஸ்மரி ஆயில் துளி 10 (Oil of Lavendor) லாவண்டர் ஆயில்துளி 10 ஆகிய இவைகளை ஒன்றாய்க்கலந்து புட்டியில் நிரப்பிவைத்துக் கொண்டு பிரதிதினமும் 2-3. வேளை தாடி மீசைகளில் தடவிவந்தால். உரோமங்கள் விசேடமாய் முளைத்துக்கறுக்கும்.

### 198. பித்தளை சாமான்களைப் பிரகாசமாக்க.

(Bicromty of Potash) பைக்ரோமேட் ஆப்பொடாஷ் என்பதை மயனம்போல் அரைத்துக்கொண்டு, அந்தத்தூளுக்கு இரண்டத்தனை எடை (Sulphuric Ocid) ஸல்பூரிக் ஆசிட்போட்டு இவையிரண்டின் எடைக்குச்சரியான ஜலம்விட்டு ஒன்றாய்க்கலந்து, அதிக அழுக்குள்ள எவ்வகைப் பித்தளைச்சாமான்களையும் இதில் நனைத்துத் தேங்காய் நாரினற் றேய்த்தால் வெகுசீக்கிரத்தில் அழுக்குகளெல்லாம் விடுபட்டுப் பிரகாசமாகும்.

### 199. வச்சிரப்பசை எப்போதும் ஜலரூபமாயிருக்க.

வச்சிரம்—பலம் 33. ஜலம் பலம் 36. இவ்விரண்டையும் ஓர்சட்டியிற்போட்டு, மெதுவான தீமூட்டி எரித்து வச்சிரங்கரைந்தபிறகு, இறக்கிக்கலக்கிக்கொண்டேயிருந்து (Nitric Acid) நைட்ரிக் ஆசிட் பலம 3. கொஞ்சம்கொஞ்சமாய் விட்டுக்கலக்கிப் புட்டியில் நிரப்பிவைத்துக்கொண்டால் ஜலரூபமாகவேயிருக்கும். உறையாது. எப்போதும் உபயோகிக்கலாம. மட்டச்சரக்காயிருந்தால். 3 பலம் நைட்ரிக் ஆசிட்விட்ட பிறகும் சிலசமயம் உறைந்துபோகும். அப்போது நைட்ரிக் ஆசிட் கொஞ்சம் அதிகமாய் விட்டுக்கொள்ளவும்.

### 200. இறைச்சியை கெட்டுப் போகாமல்வைக்க.

ஓராட்டின் முழுத்துடையை, துடைப்பக்கம் மேலாகவும் முழங்காற்பக்கம் கீழாகவும இருக்கும்படி தொங்கவைத்தால், அதனுடைய ஜலம்வடிந்து போகாமல் அதிற்றானே தங்கியிருக்கும், கெட்டுப்போகாமல் 3 நாள்வரையில் நிற்கும். குளிர்காலமாயிருந்தால் 8 நாள்கள்வரைக்கும் நாற்றம் அடிக்காமலிருக்கும்.

### 201. வெள்ளி நகைகளை துலக்க.

மறைஎன்னும் மிருகத்தின் கிளை கிளையாயிருக்கும் கொம்புத்தூள்-பலம்-2½. சோற்றுப்பு-பலம்-2½. இவ்விரண்டையும் ஜலம்விட்

டுச்செவ்வனேயரைத்து ஜலத்திற்கலக்கிவிட்டு,வெள்ளிநகை அல்லது பாத்திரத்தை அதிற்போட்டுக்கழுவி எடுத்துக்கொள்ளலாம்.

### 202. தலையிலுள்ள பொடுகுகளை நீக்க.

வெண்காரம் காற்பலம்நிறுத்து அதைக்காற்படி ஜலத்திற்போட்டுக் காய்ச்சித்தலையிற்றேய்த்து ஸ்நானம்செய்துவிட்டால்-3-நாளிற்பொடுகுகளெல்லாம் நீங்கிப்போம்.

### 203. இரத்தக்கறையைப்போக்க.

வஸ்திரத்தில் இரத்தக்கறைபட்டிருந்தால் கறைபட்ட இடத்தில் கிரோஸன் ஆயிலைத்தடவி ஒருமணிநேரம் கழிந்தபின் வெந்நீரூற் கழுவிவிடவும்-இரத்தக்கறைபோகும்.

### 204. கதவு தூண் இராவி முதலியவைகட்கு வர்னம்பூசுவதற்குமுன், அவைகளிற்படிந்திருக்கும புகைக்கறை எண்ணெய்க்கறை அழுக்குமுதலியவைகளைப் போக்க.

உழமண்ணை ஜலத்திற்கரைத்து ஷை மரங்களுக்கு 3-அல்லது-4 முறைதடவி ஊறவைத்துத் தேங்காய்நார்போட்டுத் தேய்த்துக்கழுவிவிடவேண்டும். பிறகு சுண்ணாம்பை ஜலத்திற்கரைத்து அவைகட்குத்தடவித் தேங்காய்நாரினாற்றேய்த்துக் கழுவிவிடவும். அல்லது வெடியுப்பைக்கரைத்த ஜலத்தாற் றேய்த்துக்கழுவினாலும் செவ்வனே சுத்தியாகும். இவ்வித சுத்திசெய்தபிறகு வர்ணம் போட்டால் வர்னம் வெகுநேர்த்தியாய்ப்பிடிக்கும்.

### 205. வாயிலிருந்து நெருப்புப்பற்ற.

அக்கிராகாரம்-நவாச்சாரம். என்னும் இவ்விரண்டையும் சமநிறையாக எடுத்து, இஞ்சிரசத்தில் 4ஜாமம்அரைத்துச் சுண்டக்காய்ப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு, ஒருமாத்திரையை வாயில்போட்டுக்கொண்டு மென்றுவிழுங்காமல், அந்தரசத்தைவாய்முழுவதிலும் உதட்டிலும் செவ்வனே தடவிக்கொண்டு. துணியில் நெருப்புக்கட்டியைவைத்து வாயிற்பற்றவைத்தால் பற்றியெரியும். வாய்சுடாது.

### 206. தண்ணீரில் அமிழ்ந்ததனால் பிரக்ஞையற்றுக்கிடப்பதற்குச் சிகிச்சைகள்.

தண்ணீரில் வீழ்ந்து முழுவதும் அமிழ்ந்துவிட்டவர்களை மறுபடியும் சுகநிலமைக்குக்கொண்டுவருவதற்குஅத்தியாவசியமாய் வே



ண்டியுள்ள கீழ்வரும் சிகிச்சைகளை ஒவ்வொருவரும் கவனத்தில்
வைக்கவேண்டும்.

1வது. தண்ணீரில் விழுந்தவனை எடுத்த உடனே கரையில்படு
க்கவைத்து அவனுடைய சரீரத்திற்காற்றுப்படும்படியாக ஜாக்கிர
தைசெய்துகொள்ளவேண்டும், எனவே விசேஷஜனங்கள் அவனைச்
சூழ்ந்து நிற்காமல் வெளியான இடத்திற்போடவேண்டும்.

2வது. அவனுடைய உதடுகளைத்துடைத்து வாயைத்திறந்து
மண் செத்தை ஏதாவதிருந்தால் அவைகளைவெளியில் எடுத்துவிட்
டு அவன்கவிழ்ந்துகொள்ளும்படி லகுவாகப்புறட்டி அவனுடைய
கைகளில் ஒரு கையை அவனது நெற்றியின்கீழேவைக்கவேண்டும்.
அவனுடைய அடிவயற்றில் ஒரு தலையணையைக்கொடுத்து சற்று உ
யரமாய் வைக்கவேண்டும். இவ்வாறு செய்யின் வாயிலிருந்து தண்
ணீர்வெளிப்படுவதன்றியில் உள்ளிழுத்துக்கொண்டதாவும் வெளி
யில்வரும்.

3. அவனுக்கு சுவாசம் உண்டாகிறதாவென்று சற்றுநேரம்வ
ரையில் சும்மாயிருந்து ஜாக்கிரதையாய்ப்பார்க்கவேண்டும். ஸ்வா
சம் உண்டாகாவிடினும் இரண்டொரு ஸ்வாசம்வந்து நின்றுவிடினு
ம் உடனே அவனை ஒஞ்சரிக்கையாகப் புரட்டி புகையிலைத்தூளையா
வது நவாச்சாரமும் சுண்ணாம்புங்கலந்த தூளையாவது நாசியில் முக
ரும்படி கொடுக்கவேண்டும். அல்லதுதுணியினாலே முகத்தை பர
பரப்பாகத்துடைத்து பின்பு முகத்தின் மேல் குளிர்ந்தஜலத்தையடி
க்கவேண்டும்.

4-வது இவைகளால் குணமுண்டாகாவிடில் அவனைக்கவிழ்ந்து
கொள்ளும்படிக்கவிழ்ந்து கம்பளத்தை மடித்தாவது தலையணையை
எடுத்தாவது அவனுடைய மார்பின் கீழேவைக்க வேண்டும் பின்பு
அவனை ஒஞ்சரிக்கை யாகப்புரட்டி மல்லாக்கத்திருப்பி மறுபடிகவி
ழ்ந்துகொள்ளச் செய்யவேண்டும். இவ்வாறு நாலுவினாடிக்கொரு
தரம் நிதானமாயும் கிரமமாயும் சிலவிசை வலப்புரமாகவும் சிலவி
சை இடப்புரமாகவும் புரட்டிக்கொண்டே யிருப்பதுடன் கவிழ்ந்து
கொள்ளப் புரட்டும்போதெல்லாம் முதுகில் இரண்டு தோள்செக்கை
யின் மத்திக்கீழ் சுறுக்காய் அழுத்தவும் வேண்டியது ஆனால் மல்லா
க்கப்புரட்டும்போது அழுத்தாமல் விட்டுவிடவேண்டும்.

5-வது மிதமிஞ்சிப்போவதற்குள்ளாக இவ்வாறு செய்யின் ஸ்
வாஸமீண்டாய் பிராணன் நிலைக்கும்.

6-வது ஸ்வாஸமுண்டான பின்பு வயிற்றுக்கும் அக்குள்களுக்கும் உள்ளங்கால்களுக்கும் சூடான கம்பளத்தையாவது வெந்நீர்நிரப்பிய புட்டிகளையாவது சுட்ட செங்கற்களையாவது கோதும்பைத்தவிட்டையாவது ஒத்தடங்கொடுக்க வேண்டும். கைகால் முதலியவைகளை கம்பளத்தாலாவது குட்டையாலாவது அடியிலிருந்து மேலேறத் தேய்த்துக் கைகால்களை முறுக்கிப்பிசைய வேண்டும்.

தண்ணீரில் விழுந்து ஒரு மணி நேரமாகாமலிருந்து இச்சிகிச்சைகளை இரண்டு மூன்று மணிநேரம் தொடர்ச்சியாய்ச் செய்யின் விழுந்தவன் உயிர்போனவனைப் போற் கிடக்கினும் சௌக்கியப்பட ஏதுவாகும். உயிர்மறுபடி வருவதைத் தண்ணீரில் வீழ்ந்தவன் ஏங்குவதாலும் வருந்தி மூச்சுவாங்குவதாலும் தேகத்தை வளைக்கிறதாலும் இதய ஸ்தானத்தில் மெல்லமெல்ல அடித்துக்கொள்வதாலும் அறியலாம். உயிர்வந்தபின் சுடுகையான ஒத்தடங்களைக்கொடுத்து சற்று சூடான சுக்குக்குடிநீரைத் தொண்டைக்குள் விடவேண்டும். பிரக்ஞைவந்து சற்று நேரமானபின் கொஞ்சம் கார்ன்புளோர் கஞ்சியையாவது கொழுத்த அரிசிக்கஞ்சியையாவது சுடுகையுடன் கொடுத்து தேகத்தை அமைதலாயும் சூடாயும் வைத்திருக்கவேண்டும். பிரக்ஞை முழுதும் வந்த பின் சில சமயத்தில் சுரமாவது பயித்தியப் புலம்பலாவது பிரக்ஞை ஹீனமாவது உண்டானால் நெற்றிப்பொட்டுகளில் 6 அல்லது 8 அட்டைகளைக் கடிக்கவிட்டு பேதிக்கும் கொடுக்கிறது யுக்தமாயிருக்கும். மேற்சொன்ன அசௌக்கியங்களுக்கெல்லாம் குழந்தைகளை வெந்நீரில் உட்காரவைத்துக் குளிக்கப்பண்ணுவது நலம்.

இதில் மேற்காட்டியுள்ள பிரயோகங்களைக்காட்டினும் கீழ்ச்சொல்லுகிறபடி லகுவாய் பரீட்சிக்கலாம். இரண்டு நாசிகளையும் அடைத்துக்கொண்டு வாயினுள் மற்றொருவனுடைய வாயை வைத்து பலமாய் ஊதி உடனே நெஞ்சின் இரண்டு பக்கங்களிலும் கையை வைத்து உள்ளே பூதின காற்றை வெளிப்படும்படியாயமிழ்த்தவும். இவ்வாறு ஒன்றிரண்டு தடவை செய்தால் போதாது. தேகத்திற் சூடுண்டாய் கால்கை நிமிர்ந்து முறைப்பாகுமட்டும் விடாமற் செய்யவேண்டும். சுவாஸப் பையினுள் காற்றுப்போவதை நிச்சயிப்பதற்கு வாயினுள் சுவாஸத்தை பலமாய் ஊதும்போது கழுத்தின் முன்பக்கத்தில் முனைத்துக்காணும் புடைப்பின்மேற் கையைவைத்தமிழ்த்தவும்.

## 207. கிருஷித்தொழிலுக்குப்பலவகையானமண்களைப்பற்றித்தெரிந்துகொள்ளவேண்டியமுக்கிய அம்ஸங்கள்.

212-ம் பக்கத்தொடர்ச்சி.

பயிர்கள் நன்றாய்வளருவதற்கு, நிலங்களிற் களிமண்ணும் மணலும் சரியானஅளவாய்க்கலந்திருப்பது எவ்வளவு அவசியமென்பதை மேற்கூறப்பட்ட குறிப்புகளாற் றெளிவாயறிந்து கொள்ளலாம், மணலும் களிமண்ணும் ஏற்றஅளவாய்க்கலந்திருக்கும் நிலத்திற்குத்தான் செழிப்புள்ள நிலமென்று பெயர். களிமண்ணும் மணலும் சரியான அளவாய்க்கலந்திருப்பதனால், அவற்றுள் ஒன்றினாலுண்டாகுந் தீமை மற்றொன்றினால்நீக்கப்படவும், இரண்டினுமுள்ள பிரயோஜன குணங்கள் ஒன்றாய்ச்சேரவும் ஏதுவுண்டாகின்றது. களிமண் மணல் சுண்ணாம்பு ஆகிய இம்மூன்றும் ஏற்ற அளவாய்ச் சேர்ந்திருக்கும் மண்ணானது மிக்கசெழிப்புள்ளதாகும். எப்படியெனில், இம்மூன்று வகை வஸ்துக்களும் ஒன்றாய்ச்சேர்ந்திருக்கையில், பூண்டுகளின் வளர்ச்சிக்கு அவசியமான ஈரம் (Corbonic acid Gas; கரியமிலவாயு (Ammonia) நவாச்சாரவாயு முதலியவற்றை நிலமானது விசேடமாயுறிஞ்சிக்கொள்ளும். மண்ணிலடங்கியிருக்கும் வஸ்துக்களநேகம் பூண்டுகட்கு ஆகாரமாக உறிஞ்சிக்கொள்ளப்படுகிறதுமன்றி, அவைகள் இரஸாயன மாறுதல்களையுண்டுபண்ணி, அதனால் பூண்டுகளின் வளர்ச்சிக்கு அவசியமான அநேகமுக்கியகாரியங்களை நடப்பிக்கின்றன, திருஷ்டாந்தமாக மண்ணிலுள்ள சுண்ணாம்பானது பூண்டுகளையும் ஜந்துக்களையும் சேர்ந்தபதார்த்தங்கள் நிலத்திற்சேருகையில், அவற்றைச் சீக்கிறத்திற் கெடும்படி செய்து, அதனால் அவைகள் பயிர்களுக்குஏற்ற ஆகாரமாகும்படி செய்கின்றது. மண்ணிலுள்ள தாவர ஜந்துக்களைச்சேர்ந்த இந்திரவஸ்துக்கள் பூண்டுகள் ஆகாயத்தினின்றும் நவாச்சாரவாயுவையும் கரியமிலவாயுவையும் உறுஞ்சிக்கொள்ளும்படி உதவிசெய்கின்றன. இவ்வாறே மண்ணிலுள்ள பலவகைவஸ்துக்கள் பலவகையான இரஸாயன மாறுதல்களையுண்டுபண்ணிப் பூண்டுகளின்வளர்ச்சிக்கு உதவிசெய்கின்றன. (இன்னும்வரும்.)

## 208. ஹுங்காஎன்னும் தீவருகேயுள்ள ஓர் அதிசயமான குகை.

தென் சமுத்திரத் தீவுகளிலொன்றாகிய ஹுங்கா யென்னும் தீவின்மேல்க்கரைக்குச் சமீபத்தில் மிகவும் அதிசயமான ஓர்குகையிருக்கின்றது, அவ்விடத்தில் கடல் நீர்மட்டத்திற்குமேல் அறுபது அல்லது எழுபதடி உயரமுள்ள கற்பாறையொன்றிருக்கின்றது. இது சாதாரணமான கற்பாறைகளுக் கொப்பாயிராமல் இயல்பாய் மத்தியில் குடைந்தெடுக்கப்பட்டு உள்ளே ஓர் விஸ்தாரமான குகையை உடைத்தாயிருக்கின்றது. இக்குகைக்கு ஒரே ஒருதிறப்புண்டு இத்திறப்பு அக்கற்பாறையின் ஓர்பக்கத்தின் அடிவாரத்தில் நீர்மட்டத்திற்குக் கீழ் 6-7 அடி ஆழத்திலிருக்கின்றது. ஆகையால் இத்திற

ப்பின் வழியாக கடல் ஜலமானது குகைக்குள் கொஞ்சதூரமட்டும் பாய்கின்றது. ஹாங்காதீவரசனாகிய பீனோ என்பவர் சிலசமயங்களில் தம்மிஷ்டர் மந்திரிபிரதானிகள் முதலியவர்களோடு, இக்குகைக்குள் பிரவேசித்து அங்கே கொஞ்சநேரந் தங்கியிருந்து போஜனபானஞ்செய்து, சந்தோஷமாய்க்காலத்தைபின்னிட்டு விட்டுத்திரும்புவது வழக்கமாயிருந்தது. அப்படியே ஒருநாள் சாயுங்காலவேளையில் அவ்வரசன் அக்குகைக்குப்போகத் தீர்மானித்து அவரும் அவரைச்சேர்ந்த பிரதானிகள் முதலியவர்களும் ஒருவர்பின்னொருவராக அதற்குள் பிரவேசித்தார்கள். அச்சமயத்தில் அத்தீவில் அநேகம்வருஷம் வாசம்பண்ணினவரும் இச்சரித்திரத்தை எழுதினவருமாகிய மேஸ்டர் மாரினர் (Mr. Mariner) என்பவர் தற்செயலாய் அக்கடற்கரையோரமாய் வந்தபோது அரசனுடைய பிரதானிகள் ஒருவன் பின் ஒருவனாகக் கடலில்பாய்ந்து முக்குளித்து மறைந்துபோவதைக்கண்டு, மிகவும் ஆச்சரியப்பட்டு, கடைசியிற் கடலிற்பாய எத்தனித்துக்கொண்டிருந்த மனிதனுக்குச் சமீபமாய்போய் அவனைநோக்கி "நீங்கள் இப்பொழுது செய்கிறகாரியம் மஹா ஆச்சரியமாயிருக்கிறது. இது எனக்குச்சற்றேனும் விளங்கவில்லை ஆகையால் தயவுசெய்து இதின் இரகசியத்தை எனக்கு விளக்கிக்காட்டு" என்றார். அதற்கு அவன் நீர் எனக்குப்பின் முக்குளித்து வருவீரானால் முன் ஒருக்காலமும் நீர்பார்த்திராத மஹா அதிசயமான ஓரிடத்திற்கு உம்மையழைத்துக்கொண்டுபோவேன்" என்றான். இதற்கு அவர் சம்மதித்து, அவனுக்குப்பின்னே கடலிற்பாய்ந்து முக்குளித்துச்செல்ல இருவரும அக்கற்பாறையிலுள்ள திறப்பைக்கடந்து குகைக்குள்போய் ஜலத்திற்கு மேலெழுந்தார்கள். மேஸ்டர் மாரினர் குகைக்குள் பிரவேசித்து தலையை ஜலத்திற்குமேலெடுத்த உடனே அரசன் மந்திரிமுதலானோருடை பேச்சு சப்தத்தைக்கேட்டு ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்தார் பின்பு அவருடன்கூட குகைக்குள் பிரவேசித்த பிரதானியானவன் அவருக்குக் கைலாகுகொடுத்து ஜலத்திற்குமேலெழும்பியிருந்த ஒருபாறையின்மேல அவர் மெதுவாய் ஏறி உட்காரும்படி செய்தான், ஜலத்தின் அடியிலுள்ள பொருட்களால் பிரதிபிம்பிக்கப்பட்டுவரும் மிகவும் சொற்பமான ஒளியைத்தவிரவேறு வெளிச்சம இக்குகைக்குள் பிரவேசிக்க இடமில்லாததினால் அதுசற்று இருளடைந்தேயிருக்கும் ஆகையால் ஆட்கள் அதற்குள்பிரவேசித்த உடனே சில நிமிஷநேரமட்டும் அவர்களுக்கு ஒன்றுந்தெரியமாட்டாது. அப்பால் அங்குள்ள இருட்டுக்குக் கண்பழகிப்போக படிப்படியாய் பொருட்



கள் சற்றுத்தெளிவாய்க்காணப்படும். மாரினர் என்பவர் குகைக்குள் பிரவேசித்துச் சற்று நேரமானபின் பீனோ என்னும்அரசனும் அவன் சினேகிதரும் குகைக்குள் ஓரிடத்தில் சௌக்கியமாயுட்கார்ந்திருப்பதைக்கண்டு சந்தோஷப்பட்டார். மேலேகாட்டியபிரகாரம் குகைக்குள் போதுமான வெளிச்சமில்லாததனால் மாரினர் குகைக்குள்ளிருந்து திரும்ப முக்குளித்து வெளியேவந்து கரையேறித் தம்முடைய கைத்துப்பாக்கியில் மருந்துசெலுத்திக்கெட்டித்து அதில் ஜலம் படாதபடி அதைப் பஞ்சு வாழையிலை முதலியவற்றால் நன்றாய்ப் பொதிந்துகட்டித் தம் கையிலெடுத்துக்கொண்டு தம்வேலையாள் ஒருவனைஓர் தீவர்த்தியை அவ்வாறே பத்திரமாயெடுத்துக்கொண்டு தம்பின்னேவரும்படி உத்தரவுகொடுத்து இரண்டாந்தரம் கடலிலிறங்கி முக்குளித்து, குகைக்குள் பிரவேசித்துத் துப்பாக்கிசுட்டுக் காய்ந்தபஞ்சினால் நெருப்புண்டாக்கித் தீவர்த்தியைக்கொளுத்தி அதனால் குகையை மிகவும் பிரகாசமாக்கினார். அக்குகை சிருஷ்டிக்கப்பட்டதுமுதல் அந்நாள்வரைக்கும் இவ்விதவெளிச்சத்தை அங்குக்கிஞ்சித்தும் கண்டதேயில்லை. அவர்கள் இவ்வெளிச்சத்தின் உதவியினால் குகைக்குள்ளெங்கும்போய் நன்றாய்ப்பார்த்தபோது, அது உத்தேசம் 60 அடி அகலமும் 40 அடி உயரமுமுள்ளதாகக் காணப்பட்டது. அதன் பக்கங்களுக்குள் சில சிறு குகைகளோடியிருக்கவுங் கண்டார்கள். இவ்வாறு அவர்கள் அக்குகையைப் பரிசோதித்துப் பார்த்தபின் ஓரிடத்திலுட்கார்ந்து போஜனஞ்செய்துவிட்டுக் கொஞ்சநேரம் பற்பலசங்கதிகளைப்பற்றிச்சந்தோஷமாய்ப்பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அங்கிருந்த ஓர் விருத்தாப்பிய மனிதன் அக்குகை முதலாவது கண்டுபிடிக்கப்பட்டவிதம் முதலியவற்றைப்பற்றிப் பின்வரும் இன்பமான சரித்திரத்தைச் சொன்னான்.

அநேக வருஷங்களுக்குமுன் ஹாங்காதீவிலிருந்த ஓர் பால்யப் பிரதானியானவன் ஒருநாள் கடலிலிறங்கி மேற்கூறிய கற்பாறைக்குச் சமீபத்தில் நீந்தி விளையாடுகையில், ஒரு கடலாமையைக்கண்டு அதைப்பிடிக்கும்படி அதன்பின்சென்று முக்குளித்துச் செல்லுகையில்அது குகைக்குள் பிரவேசிக்கஅவனும்அதற்குப்பின்னேதொடர்ந்தபோது அக்குகையைக்கண்டுபிடித்தான். அதற்குமுன் அக்குகையை அறிந்தவர்கள் ஒருவருமில்லை. அவன் அதைக்கண்டுபிடித்த உடனே அதைஒருவருக்கும் வெளிப்படுத்தாமல் ஓர்பெரிய இரகசியமாய் வைத்திருந்தான். இதற்கு முகாந்தரமியாதெனப் பின்வரும் சங்கதியினால் அறிந்துகொள்ளலாம். (இ-வரும்)

## 203. விநோதார்த்தப்பதங்கள்.

கர்வபீடம் என்னும் ஓர்தேசத்தில் தனியரசுபுரிந்துவந்த அரசனொருவன், செல்வச்செருக்கில் மூழ்கினவனாகி, தான் இவ்வுலகத்தில் எக்காலத்திலும் ஜீவித்திருப்பவனைப்போல அகங்காரங்கொண்டு பல அநீதங்களை நடத்திவந்தான். அவனுடைய மனைவியும் அவனைப்போலவே கர்வித்து அகங்காரத்திற்கு ஓராதனம்போன்றிருந்தாள். ஆண்மகனாகிய அரசனே இறுமாப்புக் கிருப்பிடமா யிருந்தானென்றால், பேதைமையையே பெருங்கலனாகக்கொண்ட பெண்பாலாகிய அவன்மனைவி அவ்வாறிருந்தனளென்பதற்குக் காரணமும் வேண்டுமோ? "அரசனெவ்வழி குடிகளவ்வழி" என்னும் முதுமொழிக்கிணங்க அவ்வூர்க்குடிகளும், யாக்கைநிலையாமை செல்வநிலையாமை உலகவாழ்வினநித்தியம் என்னும் இவற்றை முற்றும் அறியாதவர்களாகி இறுமாப்புற்றிருந்தார்கள். இவ்வாறிருக்கையில், உலகவாழ்வின் அநித்தியத்தை உள்ளபடியுணர்ந்த ஓர் சந்நியாசி அவ்வூர்வழியாய்ப்போக நேரிட்டபோது, அவ்வூரரசன்முதலியோர் கொண்டிருந்த மதிமயக்கத்துக்காகப் பெருந்துயரடைந்து, அவர்களுக்கு நன்னெறியைக்காட்டும்பொருட்டு, அன்றிரவில் அரசனுடைய அரண்மனைக்குள் ஒருவருக்கும் தெரியாமல் பிரவேசித்து, அங்குள்ள ஓரிடத்திற் புலித்தோலைவிரித்துப் பக்கத்திற்கபாலத்தைவைத்துக்கொண்டுபடுத்திருந்தார். இவரைக்கண்ட காவலாளிகள், "ஓய்! நீர் ஏன் இங்குவந்து படுத்துக்கொண்டீர், இதை என்னென்று நினைத்தீர் போம்போம்" என்று அதட்டினார்கள். அப்போது சந்நியாசி சாந்தமாய் அவர்களைநோக்கி, "இதை ஒரு பொதுஸ்தானமான சத்திரம் என்று நினைத்து நான் படுத்துக்கொண்டேன்" என்றார். அது கேட்டவுடனே காவலாளிகள் கலகலவென்று உடல்குலுங்க நகைத்து, "ஓய்! கண்ணில்லாப்பாவி! இது அரசன் அரண்மனை யாச்சுதே! இதைவிட்டுச்சீக்கிரம் ஓடிப்போ" என்றார்கள். இவ்வாறு அவர்கள் அதட்டிக்கொண்டிருக்கையில், தன் சயனஅறைக்குப் போவதற்காக வந்த இராஜஸ்திரீ அங்குவந்து நின்று நடந்த விர்த்தாந்தங்களைக் கேட்டுச் சந்நியாசியைப்பார்த்து, "பளா பளா! நன்று நன்று! சந்நியாசியே! நீர் இதைச் சத்திரமென்று நினைத்தது என்னமதியோ?" என்றனள். அதைக்கேட்ட சந்நியாசி, "அம்மே! இந்த அரண்மனை யாருடையது" என்றார். இராஜஸ்திரீ சந்நியாசியைப்பார்த்து, "இது இராஜாதிராஜராகிய என்னுடைய பத்தாவினுடையது" என்றனள்.



"உன்பர்த்தாவுக்குமுன் இவ்வரண்மனையில் ஜீவித்திருந்தவர்யாவர்!" என்று சந்நியாசிகேட்டார். அதற்கு அவள் "என்பர்த்தாவுக்குமுன் அவர்பிதா இதிலிருந்தார்" என்றாள். அதைக்கேட்ட சந்நியாசி "அவருக்குமுன் இதிலிருந்தவர்யாவர்" என்றார். அதற்கு அவள் "அவருக்குப்பிதா இருந்தார்" என்றாள். அதற்குச் சந்நியாசி "அதற்குமுன் இந்த அரண்மனை யாருடையது" என்றார். அதற்கு அவள் "இது ஒரு வேற்றரசனுடையது அவனை யுத்தத்தில் வென்று இதையும் இத்தேசத்தையும் அவர் கைப்பற்றிக் கொண்டனர்" என்றாள். இதைக்கேட்டுச் சந்நியாசி "அதற்குமுன் இதில்யாரிருந்தது? இது யாருடையது!" என்றார். இவ்வினாக்களைக்கேட்டு மனம் சகியாதவளாகி இராஜஸ்திரீ அதற்குமுன் அவனப்பன் அதற்குமுன் அவனப்பன் என்று பத்துத்தடவை வாயில் நுழையாதபடி பரபரவென்று சொல்லிமுடித்தாள். சந்நியாசி—அம்மே! உனக்குப் பிறகு இம்மாளிகையிலிருப்பவர்கள்யாவர்? என்றார். அதற்கு அவள் என்புத்திரன் என் பௌத்திரன் முதலானவர்கள் என்றாள். சந்நியாசி அம்மா? சுமார் ஆயிரவருஷகாலமாய் இதைக்கையாண்டு இதில் இத்தனைபெயர்குடியிருந்தார்கள், இன்னும் இதில்எத்தனையோபெயர்குடியிருக்கப்போகிறார்கள், இத்தனைபேருக்கும் பொதுவான வாஸஸ்தலமாயிருக்கும் இவ்விடத்தைச்சத்திரமென்று கூறுதுவேறென்னென்று கூறலாம் என்றார். இவர்களிந்தப்படி பேசிக்கொண்டிருந்ததை அடுத்த அறையிலிருந்த அரசன் கேட்டுக்கொண்டிருந்து அவ்விடத்துக்குவந்து அச்சந்நியாசியைப்பார்த்து அவர்கையிலிருந்த மண்டையோட்டைச்சுட்டி "இதை ஏன்வைத்துக்கொண்டிருக்கிறீர்" என்றான்? துறவிக்கு வேந்தன் துரும்பாகையால் சிறிதும் அஞ்சாமல் சந்நியாசி அரசனைநோக்கி "ஐயா! நான்மயானத்தின்வழியாகவருகையில் இக்கபாலத்தைக் கண்டபோது இது மஹாராஜனாகியஉன்னையொத்த ஒரு பிரபுவினுடைய கபாலமோ! அல்லது என்னையொத்த ஒரு ஏழையின் கபாலமோ! என்கிற சந்தேகம் பிறந்தபடியால் அதை அவகாசமாய்ப்பரீட்சித்துப்பார்ப்பதற்காக வைத்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லி அவ்வரசனும் பட்டவர்த்தனியும் சீர்படவேண்டுமென்று உள்ளத்திற்கருதி அவர்களைநோக்கினார். உயிர் நீங்கியபிறகு அரசனும் ஏழையும் ஒருபடித்தாய் விடுகின்றனரேயன்றி எவ்வளவும் வித்தியாசந்தோன்றவில்லையல்லவா? என்று நினைத்து உடனே அவ்வரசனும் அவன்மனைவியும் சந்நியாசியின் வார்த்தைகளினாலும் அவர்கிருபாநோக்கத்தினாலும் ஞானோதயம்பெற்று அவரை நமஸ்கரித்

து அவருக்குவேண்டிய உபசாரத்தைச் செய்து அன்றுமுதல் உலகவாழ்க்கையின் அநித்தியத்தையும் யாக்கை செல்வம் முதலியவற்றின் நிலையாமையையும் உணர்ந்து சாத்மீக குணமுடையவரானார்கள். நாளாவர்த்தியில் அவ்வூர்க்குடிகளும் அங்ஙனமே ஒழுக்கத்திற்சிறந்தார்கள். நித்தியாநித்தியவஸ்துவிவேகம்பெற்ற இச்சந்நியாசியின் நல்வருகையால் சர்வபீடம் என்னும் பெயர்பெற்றிருந்த அவ்வூர் சாத்மீகபீடம் என்னும் பெயரைக் கொஞ்சநாளையில் வகிக்கப்பெற்றது.

"புணர்ந்தபாவமெல்லாம் பரிபூரண முணர்ந்தஞானிவிழிபடவோடுமே." என்னும் பிரமாணத்திற்கு இந்நகரே உதாரணமாயிற்று.

### 210. ஆப்தவாக்கியங்கள்.

1. உன்சுபாவத்தை நீயடக்குவாயாக. அச்சுபாவம் உன்னையடக்கும்படிவிடாதே.

2, உன் சுபாவத்தை நீ எப்போதும் ஜயித்து மேற்கொள்ளப் பழகுவாயாக. அவ்வாறு பழகாவிடில், அச்சுபாவம் கடிவாளமிழந்த காட்டுக்குதிரைபோல் உன்னைவாரிக்கொண்டுபோய் ஒருக்காலும் ஏறிவரக்கூடாத அகாதமான படுகுழியிற்றள்ளிவிடும்.

3. தன்னையடக்குகின்றவனே, சத்துருவின் அரணையழித்துப் பிரவேசிக்கும் சுத்தவீரரினும் உத்தமவீரனாவான்.

4. உன்மனச்சாட்சிக்கு விரோதப்படாதவனாய்ப் பழகிக்கொள். எப்போதும் முணுமுணுத்துக்கொண்டு திருப்தியற்றிருக்கும் சுபாவத்திற்கிடங்கொடுப்பாயாகில், அதனால் உனதுள்ளத்துள்ள சமாதானத்தைக் கெடுத்துக்கொள்வதுமன்றி, யாவராலும் வெறுக்கத்தக்கவனுமாவாயென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

## பத்திரிகை இரவலாகவாங்கி வாசிப்பவர்கள்.

நமது நண்பர்களிற் சிலர் நமக்கெழுதுங்கடிதங்களில், தாங்கள் கிரயங்கொடுத்துவாங்கிப் படித்துவருகின்ற பத்திரிகைகளைத் தங்கள் நண்பர்கள் இரவலாகத் தங்களிடமிருந்து வாங்கிப்போய்ச் சிலர் திரும்பக்கொடாமலும் சிலர் போக்கடித்தும் இவ்விதமாகத் தங்களுக்கு நஷ்டத்தை யுண்டுபண்ணுகிறார்களென்றும், தாங்கள் தாட்சணியத்தினிமித்தம் அவர்கள் கேட்கும்போது கொடாமலிருக்கக்கூ



டவில்லையென்றும், இவ்வாறு செய்வதால் வருஷக்கடைசியில் 12 பத்திரிகைகளையும் ஒருங்குசேர்த்துப் பைண்ட் செய்வதற்குச் சாத்தியப்படவில்லையென்றும் பலவாறெழுதிவருகின்றார்கள். இதற்கு யாம் கூறுவதென்னவென்றால்—சமாசாரப்பத்திரிகைகளாயிருந்தால் அவ்வாறு இரவலாக வாங்கிவாசிப்பதற்கு ஒருக்கால் அநுகூலித்தபோதினும், நம்முடைய விநோதவிசித்திரப்பத்திரிகையை அவ்வண்ணம் உபயோகிப்பது தகாதகாரியமே. ஏனெனில், சமாசாரப்பத்திரிகைகளை ஒருமுறைவாசித்துச் சங்கதிகள் தெரிந்துகொண்டபிறகு மறுமுறைவாசிப்பதற்குப் பிரீதியிராது. நமது பத்திரிகையோ! அப்படிக்கல்ல, ஒவ்வொருவரும் அனந்தமுறை வாசித்துச் சங்கதிகளைக் கிரகித்து அறிவை விர்த்திசெய்துகொள்வதன்றியும், தங்கள் வீட்டு ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் அவற்றைக் கற்றுவைக்கவேண்டியதும் அவசியமாயிருப்பதால் ஒவ்வொருவரும் தங்கள் சொந்தத்தில் கிரயங்கொடுத்துவாங்கிப் பத்திரப்படுத்தி வாசிக்கவேண்டுமேயன்றி இரவல்வாங்கி வாசிப்பது எப்படியிருக்கின்றதென்றால், பிள்ளைமேல்விருப்பமுடையவன் அன்னியர்குழந்தைகளை வாங்கிக்கொஞ்சிவிட்டு வருவதுபோலிருக்கிறது. இரவலாகக்கொடுத்த பொருளைக் கவனமாகக்காப்பாற்றி உடையவருக்குச் சேர்ப்பதைத்தவிர்த்து அவர்கட்கு நஷ்டத்தை விளைவிப்பது அவிவேகிகளுடைய செய்கையேயாம். குணசாலிகளுக்குக்குறிப்பேபோதும்.

### சமாச்சாரம்.

## மாயாவுலகத்தின் மஹாதுக்கம்

துக்கம்—துக்கம்—மஹாதுக்கம்! மஹா மஹா மஹா துக்கம் !!

சக்கரவர்த்தினி மஹாவிக்டோரியா ராணி அம்மாளவர்கள் மரித்தார்கள். 1819-ம் ௵ மே௴ 24௳ இப்பாதகண்டத்திலே இராஜபரம்பரையிலுதித்து, சகலகலாவல்லவராய் 1837-ம் ௵ ஜூன்௴ 20௳ யில் சிங்காசனாதிபதியாய் 1838-ம் ௵ ஜூன்௴ 28௳ பட்டாபிஷேகம்பெற்று 1840-ம் ௵ பிப்ருவரி௴ 10௳ மணம்புரிந்து; 4 புத்திரர்களையும் 5 புத்திரிகளையும் பெற்றுச் சகலபாக்கியங்களினுங் குறைவின்றிச் சாம்பிராஜ்ஜிய சம்பத்துடனே வாழ்ந்துவருங்காலத்தில், 1861-ம் ௵ டிசம்பர்௴ 14௳ வைதவ்வியமடைந்தபோதினும் மனந்தளராது, தம்முடைய பிரஜாகோடிகளிடத்தில் அத்தியந்த விசுவாசமும் அன்பும் வைத்து, மனுநீதிதவறாமல் உலகத்தின் அநேகபாகங்களை ஒப்புயர்வின்றி உலகவியாப்தமான ஏகாதிபத்தியத்தை 63 - வருஷங்கட்கு

மேல் ஆண்டு, பூமியில் ஆறிலொருபங்கும் இப்புவிமாந்தரின் தொகையில் மூன்றிலொருபங்கும் தம்மைச் சக்கரவர்த்தினியாக அங்கீகரிக்க, எப்போதும் வெற்றியும் சுபமும் தமது ஆளுகையின் லட்சணங்களாயமையப்பெற்று, அழியாப்புகழடைந்து, தமது கீர்த்தியும் ஆட்சியின் வல்லபமும் தினேதினே அதிகரித்து, சர்வவிவகாரங்களிலும் மிக்கமேம்பாடுடையதாகிய கடவுட்பக்தியிற் கிஞ்சித்துங்குறைவின்றி. அப்பக்தித் தன்மையைச் சதா தமதிதயத்திலிருத்தித் தம்முடைய 82-வது வயதாகிய 1901ம்-வரு ஜனவரி௴ 22௳ மாலை 6.30க்கு மண்ணுலகைவிட்டு விண்ணுலகிற் சென்றார்கள்.

## வியசனம்—வியசனம்—மஹாவியசனம் ! !

சகலசற்குணங்களும் பொருந்தப்பெற்ற பெண்மணிகட்கெல்லாம் கண்மணியாகிய இம்மாதுசிரோமணி, தமது புத்திர பவுத்திர களத்திராதிகளுக்கு முன்பாகச் சகலசம்பத்துக்களையும் ஆண்டனுபவித்து இவ்வுலகத்தை விட்டகன்றது அம்மாதரசியின் சுற்றத்தினர்க்குத்துக்கமும், பிரஜாகோடிகளாகிய பற்பல தேயங்களினுமுள்ள அனேக ஜனங்களுக்கு ஆறாத்துயரமும் இதர இராஜாக்களுக்கும் அவர்கள் பிரஜைகளுக்கும் ஏக்கமும்பச்சாத்தாபமும் உண்டுபண்ணிற்று. ஒருகுடும்பத்திலொருவரிறந்தால் அக்குடும்பத்தினர்க்கும் அவருடைய சுற்றத்தினர் மித்திரரென்னும் இவர்களுக்கும் துக்கமுண்டாகும். ஒருதேசத்திய மன்னன் மரித்தால்அவனுடைய குடும்பமும் பிரஜைகளும் துக்கங்கொண்டாடுவார்கள். அளவிடற்கரிய அன்பிற்குறைவிடமாகிய அன்னை விக்டோரியாவென்னும் அரும்பெரும் சீமாட்டி விண்ணுலகடைந்ததைப்பற்றி விரிவாயுள்ளவியனுலகத்தில் வியசனப்படாதார் ஒருவரேனுமுண்டோ! இல்லை! இல்லை. எத்தேசத்திலும் எச்சாதியாரும் எவ்வருணத்தினரும் எவ்வயதினரும் வியசனக்கடலில் மூழ்கியேயிருக்கின்றார்கள். ஆகையினால், அப்பெருமாட்டிக்குக்கொண்டாடும்துக்கத்திற்கு மஹாதுக்கம் என்று மேலே மகுடம் சூட்டினோம். "பேதமையென்பது மாதர்க்கணிகலம்." என்னும் முதுரைக்குமுரணாய் விளங்கிய கல்விக்களஞ்சியமும் ஞானபொக்கிஷமுமாகிய சற்குணசிகாமணியென்றும் அற்புதசிந்தாமணியென்றும் சொல்லத்தக்க அவ்வனிதாசிரோமணியின் மரிப்பைக் குறித்த துக்கத்திற்கு அவ்விதமகுடம் சூட்டியது அனைவர்க்கும் அங்கீகாரமாமென்பதற்கு ஆட்சேபமில்லை. மாதாசி மஹாராணி அம்மாளவர்களின் மக்களில்,இப்போது புத்திரர்களிருவரும்புத்திரிகள்நால்வரும் இருக்கின்றார்கள். கருணைக்கடலாகிய இந்தியசக்கரவர்த்தினியின் அங்கத்தைப் பிப்ரவரி௴ 2௳ சனிக்கிழமையன்று கனனஞ்செய்வதற்காகத் தூக்கப்பட்டபடியால் அன்றையத்தினம் பிரிட்டிஷ் அரசாங்கத்தைச்சேர்ந்த ஏகாதிபத்தியம் முழுவதும் விடுமுறை நாளாகக் கொண்டாடப்பட்டது. அம்மாளவர்களின் பிரேதத்தை பிப்ரவரி௴ 4௳ கன கனம் செய்யப்பட்டது. இவ்வளவு சம்பத்துடனே இத்தனை காலம்வரையில் இப்பூவுலகத்தில்வாழ்ந்திருந்த நமது மஹாராணியவர்களினுயிரைக் கொள்ளைகொள்வதற்கும் ஓர்நாள் காத்திருந்ததுபோல் நமதுயிரைக் கொள்ளைகொள்வதற்கும் ஓர்நாள் காத்திருக்கின்றதென்பதையுணர்ந்து, எப்போதும் கடவுட்பக்தியைக் கைவிடாதவர்களாய்க்கவனித்து நடப்போமாக.



## சத்தியநேசன்.

திருநெல்வேலியில் சத்தியநேசன் என்னும் மகுடஞ் சூட்டப்பட்ட ஓர் புதியபத்திரிகை நமக்குக் கிடைத்துவருகிற நன்மைக்காக நாம் வந்தனங்கூறுகின்றோம். இது அலங்காரமான நடையுடனே அனேக அரியவிஷயங்களைத் தன் அங்கத்திலமைத்துக்கொண்டு வெளிவருகிறபடியால், பொதுவாக நம்மவர்களனைவர்க்கும் விசேடபிரயோசனத்தைக் கொடுக்கத்தக்கதென்பதிற் சந்தேகமில்லை. இப்பத்திரிகையையும் அதிபரையும் சகல சம்பத்துடனே நீடூழிகாலம் வாழ்ந்துவரும்படி கடவுள் கிருபைபுரிவாராக.

## ஓர்விண்ணப்பம்.

நாம் முன்தெரிவித்தபடி நமதுபத்திரிகை பிரதிமாதமும் 5௳யில் வெளிப்பட்டுவரும். ஆனால் இம்மாதத்தில் எமக்கு நேர்ந்த சில அசம்பவத்தால் பத்திரிகை தாமதப்பட்டது. ஆகையால், நண்பர்கள் கவலைகொள்ளாமல், எவ்விஷயத்திலும் தவறுகணேர்வது இயல்பென்பதைக்கவனிப்பார்களென்று கோருகின்றோம். கடவுள் கிருபைசெய்தால் இனி பிரதிமாதமும் 5௳ யில் பத்திரிகை வெளிவரும்படி முயற்சிப்போம்.

## King Edward VII Emperor of India.

## இந்து ராஜ்ஜியச் சக்கரவர்த்தியாகிய 7-வது எட்வர்ட்.

காருணியக்களஞ்சியமாகிய காலஞ்சென்ற நமது சக்கரவர்த்தினி அம்மாளவர்களுடைய ஜேஷ்ட குமாரராகிய ப்ரின்ஸ் ஆப் வே

ல்ஸ் அவர்கள் ஜனவரிமீ 23உ தம் தாயார் ஸ்தானத்தில் மகுடம் சூட்டப் பெற்றார். தம்தாயாருடைய அபீஷ்டப்படி 7-வது எட்வர்ட் என்ற நாமமும் சூட்டப்பட்டார். இனி இவரே ஆங்கிலேய தேசத்திற்கு மஹாராஜாவாகவும் இந்தியாதேசத்திற்கு ஏகசக்கராதிபதியாகவும் அரசாண்டு நம்மெல்லோரையும் ஆதரித்து இராஜ்ஜியபரிபாலனம்புரிந்து நீதிதவறாது செங்கோல் செலுத்திவருவார். இச்சக்கரவர்த்தி தமது தாயாருடைய ஆளுகையில் முழுவதும் அநுபோகப்பட்டவராயிருப்பதாலும். தம்தாயாருடைய நோக்கங்களனைத்தையும் தாம் கைவிடாது அனுஷ்டித்துவருவதாக உறுதிமொழி கூறியிருக்கின்றபடியாலும், இராஜ்ஜியபாரத்தை ஒழுங்காய் நடத்திவருவாரென்பதிற் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. இவ்வித அரசரை நமக்கநுக்கிரகித்ததற்காகப் பூரணசந்தோஷமடைந்து, இதயபூர்வகமாகக் கடவுளுக்குவந்தனமளித்து, நமது சக்கரவர்த்தி பூரணசம்பத்துடனும் சகல வைபவத்துடனும் அரோகதிடகாத்திரராகத் தீர்க்காயுளுடன் நீடூழிவாழும்படி நாமெல்லோரும் கடவுளைத்துதிக்கவேண்டும்.

## கடிதம்.

கடிதக்காரருடைய அபிப்பிராயங்கட்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்ல.

---

மகாகனம்பொருந்திய விநோதவிசித்திரப்பத்திராதிபரவர்கட்கு.

துரையே !

கீழேகாணும் வினாக்கட்குக் கற்றறிந்த ஆலிம்களிடத்திலிருந்து தங்கள்பத்திரிகைவாயிலாய்த் தக்க விடைவாங்கித்தரும்படி மிகவும் வந்தனத்துடன் கேட்டுக்கொள்கின்றேன்.

1. இஸ்லாமான ஒவ்வொருவரும் தாங்கள் நபியுடைய உம்மத்தில் சேர்ந்துகொண்டோமென்று எப்படியறிவார்கள் ?

2. நல்ல அமல்களைச்செய்யும் ஒவ்வொருமுஸ்லீமும் தாம்புரிந்த நல்ல அமல்களை ஆண்டவன் கபூல்செய்தானென்பதைஉணரக்கூடுமோ?

3. மழைபெய்கிற நேரத்திலுண்டாகும் முழக்கம் எவ்விதமுண்டாகிறது !

இங்ஙனம்,
M. L. HAMEEDU.
*Dehiowitta.*

கடவுள்துணை.

# விநோத விசித்திரப் பத்திரிகை.

## 1901ம் வரு

புஸ்தகம் II] மார்ச்மீ 5உ செவ்வாய்க்கிழமை. [No. 3.

## ஞானம்.

226 - ம் பக்கத்தொடர்ச்சி.

முற்கூறியபடி சாதுக்களின் சகவாசம் அமையாமல் துஷ்ட சகவாசமமையும்பட்சத்தில் முன்பமைந்திருந்த மனத்தூய்மையுடன் வாக்குத்தூய்மை காயத்தூய்மை என்னும் மூன்றும்முறையே கெட்டுப்போமென்க. எனவே, மனமுதலிய திரிகரணங்களின் தூய்மையென்னும் கொடிபடருவதற்குப் பற்றுக்கோடாயுள்ளது சாதுக்கள் சகவாசமேயாகும். இதனை, “மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு மினந்தூய்மை தூவாவரும்.” என்பதனானுமுணர்க. அஃதன்றியும், மனத்தூய்மையுடையாரெவரோ அவர்க்குமறுமைப்பயனாகிய சர்வரட்சகரின் திருவருள்கிடைப்பதோடு இம்மைப்பயனாகிய நன்மக்கட்பேறு சர்வ வல்லபம் முதலியயாவும் சித்தியாமென்பதிற்றடையில்லை. இன்னும் அம்மனத்தூய்மையுடைய சாதுக்கள் சகவாசத்துடனிருத்தல் அளவிறந்தமேன்மைகளைப்பயந்து உலகமுள்ளளவும் அழியாப் புகழை நிலைநாட்டும். இதனை, “மனந்தூயார்க் கெச்சநன் றாகு மினந்தூயார்க்-கில்லை நன்றாகாவினை.” எனவும், “மனநல மன்னுயிர்க் காக்க மினநல-மெல்லாப் புகழுந் தரும்.” எனவும், “மனநலத்தி னாகு மறுமைமற் றஃது-மினநலத்தி னேமாப் புடைத்து.” எனவும்வரும் ஆன்றோர்வாக்குகளானுமறிக. அத்தகையசாதுக்கள் இத்தகையமேன்

மை எவ்வாறடைந்தார்களெனின், ஓர் கிராமத்தின்கணுள்ள குடிக
ளுக்குள் ஒருவன் விசேட நிலங்களைப் பண்படுத்தி உயர்ந்த தானியங்
களை விதைத்து விடாமுயற்சியுடன் அப்பயிர்க்குச்செய்நேர்த்திகள்
பலவற்றையும் முறைப்படிபுரிந்து தக்ககாலமுணர்ந்து அப்பயிர்களை
யறுத்து அதனையனுபவிப்பானாயின், ஏனைய குடிகள்யாவரும் தாங்க
ளும் அவ்வாறுபயலனையடைவதற்கு அவ்விவசாயியினுடைய உதவி
யைக்கொண்டே முயற்சிபுரியவேண்டுவது தகுதியாமாறுபோல, வெ
ட்டுந்தோறும் தளிர்க்குந்தன்மைவாய்ந்த பாசாடவியென்னும்பெயரு
ள்ள செயல்களாகிய உன்னதமரங்களடர்ந்த காடாரணியத்தை வெட்
டி நிர்த்தூளிசெய்து, கோபங்களென்னும் பலவகைப்பட்ட கணுக்க
ளுடன்கூடிய முட்புதர்களெல்லாவற்றையும் வேரற்றுப் போகும்படிபறித்
தெறிந்து, விசேடித்தகிருபையென்னும் வீரக்கழலைத்தரித்து, வெட்
டத்தக்க வீரத்தன்மையுடைய ஆயுதங்களையேந்தி, அனேககாலமா
கச்சயங்கொண்டோங்கும் அகங்காரமென்னும் பதினறடி வேங்கை
யாகிய புலியைவேட்டையாடி வெட்டி, நாணம் துன்பம் அச்சம்
மயக்கம் கண்டோர்பயங்கொண்டோடும்படி வருகின்ற வெறுப்பு
கடுங்கோபம் என்கின்ற துன்மார்க்க மிருகங்கள் யாவும் தங்கள் கடி
னமாகிய வால்களைக்கிளப்பிக்கொண்டு வீரியத்தைக்கைவிட்டவைக
ளாய்ப் பேரிரைச்சலிட்டு ஒன்றோடொன்று கூடாமல் அச்சமுற்
றோட்டெடுக்குமாறு அடித்து, யாவராலும் வெல்லுதற்கரிய மகாமா
யையென்னும் மலைப்பாம்பை அறிவென்னும் இருதலையீட்டியால்
வெட்டிப் பிளந்தபிறகு, விளக்கமுற்ற அந்தக்கரணங்களுடன் விரி
வாய்ப்பாய்கின்ற தத்துவங்களின்வேரை மேம்பாடுற்ற விசாரணை
யென்னும் மண்வெட்டியைக்கொண்டு வெட்டித்தள்ளி. அகந்தைக
ளென்கின்ற மரங்களையும் வெட்டித்தள்ளி, முன்புவெட்டுண்ட மர
த்துண்டுகளுடனே முட்புதர்களையும் ஒருங்குகூட்டி, அக்கூட்டத்தி
லே தவமென்னும் அக்கினியைமூட்டி, அக்கனல் நன்றாய்ச் சுவாலிக்
கும்படி பூமிக்கும் ஆகாயத்திற்கும் ஒன்றாயிருந்த பெருவெளியில்நி
றைந்துள்ள காற்றையூதி, உண்மையான வடவாக்கினி யென்றுரைக்
கும்படி சுவாலை பரம்பியபிறகு, அழியத்தக்க மாயையென்னும் இரு
ட்கூட்டங்கள்யாவும், கிரணங்களைவிரிக்கும சூரியனுதயமாவதைப்பா
ர்த்தபனிக்கூட்டங்கள்போன்றுமார்க்கத்தைவிட்டுவெளிச்சமுண்டா
க்கி ஏக்கமடையவும், வழியைத்தடுத்து அவ்வழியே வருகின்றவர்க
ளைத்தலைவெட்டிக்கொள்ளையடிக்கின்ற வினைகளொழியுமாறு அக்கா
ட்டைத்தும்சம்பண்ணிக் கொளுத்திய பிறகு, அகந்தைக்குள மென்



னும் கருங்கற்பாறையைச் சுழுமுனையென்னும் உளியினாலேகுறைவ
றவெட்டிப் பறித்து இடகலைபிங்கலைத் தந்திரமென்னும் வண்டியின்மேலே
தூக்கிவைத்து மேலேற்றி, பாசங்களென்கின்ற தோலாலாகிய வடங்
கயிற்றாற்கட்டி, துஷ்டத்துடுக்கு என்னும் காமாட்டி வேலைக்காரர்க
ள் அத்தோல்வடத்தைப்பற்றி இழுத்துச்செல்ல, பரிசுத்தமான உண்
மை ஞானவைராக்கியம் என்னும சாட்டையால் வேலைசெய்வாராக
வென்றடித்து, ஒருவராலும் தூர்க்கப்படாத வறுமையென்னும்புராத
னமான பெரிய கேணியைத் தூர்க்கும்படி அந்தப்பாறையால் நிரப்பு
வித்து, பிரணவ சொரூபத்தையுடைய உண்மையான கரியமேகங்
கள் எங்கும் சூழ்ந்து தங்கள்கால்களை யூன்றிக்கவிந்து சுற்றிலும் ஆ
னந்தமழையென்றும் மழையை விடாமற்பெய்து, சொல்லுதற்கே
லாத மனமென்னும் பூமியானது சுத்தவெளியாகும்படி அச்சுத்திரு
த்தி, மேலான நான்குவேதங்களையே நான்குவரப்புகளாக்கி, துற
வென்கின்ற ஆட்டுக்கிடையை மறித்துவைத்து, வேதாந்தமென்னும்
ஞானவுழவை யுழுவதற்காகச் சூத்திரமென்னுங் கலப்பையிலே, து
ன்பங்கள் இன்பங்கள் என்னும இரண்டு மாடுகளைக்கட்டி, வார்மா
ட்டி, இனிமையாய்த் துள்ளிக்குதித்து வீசிவேபறிச்செல்லும் வே
கத்தையடக்குகின்ற, திடம்வாய்ந்த தூலம் சூக்குமம் ஆசை நிரா
சை தொந்தம் நிர்த்தொந்தம் என்னும் இவ்விலக்கணங்களையுடைத்
தாய்ச் சோதிமயமாகின்ற அறிவென்னும் பண்ணையாள், இதயமென்
கின்ற மேழியைப்பற்றி, தான்சொன்னவாறு அதுவருமபடி கௌரி
குண்டலி என்கின்ற சுழுமுனையாகிய தாற்றுக்கோலையெடுத்துப்
பட்டதும் படாததுமாக வைத்துக்கொண்டு, இடையிலே தரிசுபோ
காதவண்ணம் உழுது, பல சாதிபேதமென்கின்ற பாவனைச்சாதிக
ளைச் சேர்க்கும் களிப்பான சேறுபழுத்து அழுகும்படிகலக்கி, பழக்
கமென்கின்ற நெருக்கத்தையும் கட்டிகளையுமமிதித்தபிறகு, பழகு
தற்கருமையான சமரசமென்கின்ற வரிசையாயுள்ள மூலாதாரம் மு
தலிய ஆறுதாரங்களையும் பரப்பிப் பரம்படித்து, இடைகலை பிங்கலை
என்னும இரண்டையும் பார்த்துக்கொண்டுவருகின்ற சுழுமுனையில்
வாய்த்திருக்கின்ற பிரயோசனமென்னும் கையைக்குலுக்கி, பெரிய
மலையென்றும் அணுவென்றும் அகண்டமென்றும கண்டமென்றும்
எவராலும் பரீட்சிக்கவேலாத ஓர் விதையையும முந்தாமலும் பிந்
தாமலும் விதைத்து, அதற்குரிய பருவம் வாய்த்தபிறகு, அதற்கு
வேண்டிய நீர்போக எப்பொழுதுநீரிருந்தால் எடுத்துவிட்டு, பத்திவைரா
க்கியமென்னும் கடலுங்குமடைதிறந்துவிட்டு, வாய்க்கால்களால்

நீர்பாய்ச்சி, அதுபயிராதற்காகப் பரிபாகப்படத்தக்க பக்குவகாலம் பிசகாமல் பார்த்துக்கொண்டிருந்து தக்கபதத்திலே, அப்பயிரைச்சேர்ந்து படர்ந்துள்ள தொண்ணூற்றாறுதத்துவங்களென்னும் பல களைகளையும் முழுவதும் பறித்து பூரணமாகத் தினைதினை அப்பயிர்க்கதிர்கள் பலகுற்றங்கணீங்கிப் பாலையென்னும் பருவம் முற்றுதலால் அப்பயனை யடைந்த விவசாயிகளாகிய அச்சாதுக்களை நாமடையின் நாமும்அவ்வாறனவிவசாயம்புரிந்து அப்பயனையடையலாம். இதனை

“வெட்டவெட் டத்தளிர்கள் விட்டுப் படர்ந்தடரும் வீசுபா சாடவியெனும்
வினையென்ற பெருமர வனக்கா னகக்காடு வெட்டிநிர்த் தாளிபண்ணி
வெகுளிக ளெனும்பல பறட்டுமுட் காடெலாம் வேரோ டறப்பிடுங்கி
விரிகருணை வீரகண் டாமணி யணிந்துதுணி வீரவா யுதமணிந்து
வெற்றிகொண்டெழுமகங்காரமெனுங் கைப்புலியை வேட்டையாடித்துணித்து
வெட்கமொடு துக்கமும்வெருட்சியுமருட்சியும்வெருண்டோடவருவிராகம்
வெஞ்சின மெனுங்கொடிய துட்டமிரு கங்களும் வெடிவாலெடுத்தெடுத்து
வீறுவிட்டலறியோன் றேடொன்று சேராமல் வெருவியே கிடவடித்து
வெல்லரிய மாமாயை யெனுமலைப் பாம்பினை விவேகமெனு மண்டாவினால்
வெட்டிப் பிளந்தபின் மின்னுகரணத்தொடு விரிந்தோடுகருவி வேரை
மீறிய விசாரமெனு மண்வெட்டி கொடுவெட்டி மேட்டிமைகளென்னுமரமும்
வெட்டுண்டமாறோடு முட்களுஞ்சேர்த்ததின் மெய்த்தவக்கனலை மூட்டி
விண்டலமு மண்டலமு மொன்றாகி நின்றபெரு வெளிவாயுவதனை யூதி
மெய்யானவடவன லெனச்சுடர்பரந்தபின் விளிமாயையெனுமிருளெலாம்
விரிகதிர் வரக்கண்ட பனியின்முக மென்னவழி விட்டுவெளிவாங்கி யெங்க
வெட்டியைக் கட்டிவழி வெட்டிப்பறிக்கின்ற வினையறக்காடுவெட்டிச்
சுட்டபினகர்ச்சைகுண மென்றகற்பாறையைச் சுழியென்னு முளியினாலே
சொச்சமறவெட்டிப்பிடுங்கியிடைபிங்கலைச் சூட்சியென்னுஞ் சகட்டிற்
றாக்கிவைத்தேற்றியே தொந்தங்களென் னுமொரு தோல்வடக்கயிறுகட்டித்
துட்டத்துடுக்கெனுங் காமாட்டியாட்களுந் தோல்வடந்தொட்டிழுக்கத்
தூயமெய்ஞ்ஞானவை ராக்கியக் கடைசியினாற் றெண்டுசெய்யென்றடித்துத்
தூராத மிடியெனுந் தொல்லைப்பெருங்கேணி தூர்க்கவதனுணிரப்பிச்
சொற்பிரணவச்சொருப நிச்சயக்கருமுகில் சூழ்ந்துதங்காலூன்றியே
சுற்றிக்கவிந்துகொண் டானந்த மழைமாரி சோராமலேபொழிந்து
சொல்லரிய நெஞ்சகமெனும் பூமிசுத்தவெளி யாகவச்சுத்திருத்தித்
துய்ய சதுர்வேதத்தைநால்வரப்பாக்கியே துறவெனுங்கிடைமறித்துச்
சுருதிமுடி வென்னுமறி வுழவுழுவதற்கான சூத்திரமெனுங்கலப்பை
துன்பவின்பங்களென்பதிரண்டுமாடாய்ச் சுருக்கிவார் பூட்டியிதமாய்த்
துன்னிந்துதித்தெடுத்தேறியே போகின்ற துடியடக்கின்றவிடமாய்த்
தூலமொழி சூக்குமத் தாசையு நிராசையாய்த் தொந்தமிர்த்தொந்தமாகிச்



சோதிமயமாகின்ற வித்தகப்பண்ணையா டொட்டதயமேழியதனைச்
சொன்னபடிவந்திடக் கௌரிகுண்டலியெனுஞ் சுழிமுனைத்தாறெடுத்துப்
பட்டும்படாதும்வைத்திடைதரிசிலா துழுது பல்வருணபேதமென்னும்
பாவிகச்சாதிவரை கின்றகளியளறது பழுக்கவுழுகக்கலக்கிப்
பழக்கமெனுமடைசலுங்கட்டியுமிதித்தபின் பழகரிய சமரசமெனும்
படிகொண்டமூல முதலாதாரமாறும் பரப்பிப்பரம்படித்துப்
பகருமிருகலைநோக்கி வருசுழியிலமைகின்ற பலவெனுங்கைகுலுக்கிப்
பாரமிலை யோடணுவகண்டமொடுகண்டம் பரிட்சித்தொணுதவிதைப்
பட்டுமுந்தாதுபிந்தாமலேபாவியே பருவமது செய்தபின்பு
பாசடொடுப்பென்றெடுப்பு நீரதனையும் பார்த்துக்கழிததுவிட்டுப்
பத்திவைராக்கியக்கடன் மடைதிறந்துகால் பாய்ச்சியதுபயிராகவே
பரிபாகபக்குவக்காலமது பிசகாது பார்த்துப்பதந்தன்னிலே
பற்றிப்படர்ந்ததொண்ணூற்றாறுதத்துவப் பலகளைய றப்பிடுங்கிப்
பரிபூர்ணமாகவே நாளுக்குநாட்கதிர்ப் பலகோளறப்பரிந்து
பாலையென்னும்பருவ முற்றியேமுத்திப்பலன்பெற்ற சமுசாரிநீ
படைகொண்டமும்மண்டலத்தினுமுன்மகிமையைப்பற்றிப்படர்ந்தகுருவே
பாதபங்கயமதற்காளடிமையாகாது பாவத்தழுந்துவேனோ
பாசவலை வீசியேமோசமது செய்கின்ற பாவையர்க்காளாவனோ.”

என்னும் பெரியோர் வாக்கானுமுணர்க. (இன்னும்வரும்.)

## 211. கருப்போற்பத்தி.

### 208 - ம். பக்கத் தொடர்ச்சி.

ஸ்திரீபீஜத்திலிருந்து வெளிப்படும்சினை இராஜவொழுக்கு நின்றபிறகு 4 முதல் 8 தினங்கள்வரையில் கருப்பகோசத்தில் தங்கியிருந்து சென்றுவிடுமென்று முன்னமே கூறியிருக்கின்றோம். ஆகையால், சாதாரணமாய்க் கருப்போற்பத்தி அக்காலத்திற்றானே சித்திக்கவேண்டும். ஒருக்கால் இரஜோற்பத்திக்கு 2-3 நாள் முற்பட்டுச் சம்போகம் நடந்திருக்குமாயின் ஜீவரேணுக்கள் கருப்பகோசத்திற்குள்ளேயேநின்று பிறகு உற்பத்தியாகும் சினையுடன்சேர்ந்து கருப்போற்பத்தியையுண்டாக்கவுங்கூடும். இரஜோற்பத்திகாலத்தில் சாதாரணமாய் ஒரோ சினைதான் பக்குவப்பட்டு வெளிப்படுவதுண்டு. ஆனால் சிலருக்குச் சிலசமயங்களில் இரண்டுமூன்று சினைகள்கூடப்பக்குவமாகி வெளிப்படும். அதனாற்றான் இரட்டைப்பிள்ளைகள் மூன்றுபிள்ளைகள் பிறக்கிறது. இச்சினைகள் கருப்பகோசத்தில் தங்கியிருக்குங்காலத்திலே ஒன்றோடொன்று உராய்ந்து கலந்துகொள்ளுமாயின் முதுகுமுதலிய பாகங்கள் இரட்டையாய்க் கூடியபிள்ளைகள் பிறக்கின்றன.

ஸ்திரீபுருஷர்களுக்குள் எவருடையமர்ம அவயவங்களிலாவது
இயற்கையாலானதும் அல்லது வியாதியினற்சம்பவித்ததுமான வி
காரரூபங்களோ குறைவுகளோ அனாரோக்கியமான திரவங்களோ
உண்டாயிருக்கினும், சினையிலேனும் ஜீவரேணுக்களிலேனும் ஜீவ
சக்திகுறைவாயிருக்கினும், ஸ்திரீபுருஷருடைய சரீரதத்துவங்கள்
ஒற்றுமையின்றி வேற்றுமைப்பட்டிருக்கினும் கருப்பம் தங்கமாட்
டாது. இதன் விவரத்தை அடியிற் செவ்வனே விளக்குகின்றோம்.

ஆண்குறியும்பெண்குறியும்சாதாரணமாய் 5-6-அங்குல நீளமாக்
வும் ஆழமாகவுமிருக்கும். ஆனல், சிலஸ்திரீ புருஷருக்குச் சரீரசுபா
வத்திற்கேற்றபடி அவைகளினளவு மேற்பட்டும் குறைந்து மிருக்கி
றதுமுண்டு,எப்படியெனில்,சிலபுருஷருக்கு ஆணகுறி 7-8-அங்குல
மாக நீண்டும், சிலருக்கு 3-4-அங்குலமாகக் குறுகியுமிருப்பதுண்டு.
அதுபோலவே ஸ்திரீகளுக்கும் பெண்குறி சிலருக்கு 7-8 - அங்குல்
ஆழமுள்ளதாகவும், சிலருக்கு 3-4-அங்குல ஆழமுள்ளதாகவும் இ
ருப்பதுண்டு. இவ்வாறு ஆண்குறி பெண்குறி என்னும் இவைகளின்
அளவு வித்தியாசப்படுவதனல் இந்திரியம் கருப்பகோசத்திற்குள்ளே
பிரவேசிக்காமல் வெளியிற்றனே தங்கி வீணாய்விடுகின்றது. ஸ்திரீ
புருஷரிருவருக்கும் பெண்குறியும் ஆண்குறியும் சரியான அளவுடனி
ருக்குமாயின்,ஆண்குறியினின்றும் பீச்சப்படும் இந்திரியமானது கரு
ப்பகோசத் துவாரத்துள் பிரவேசிப்பதற்கு ஹேதுவுண்டு. அப்போ
து கருப்பந்தரிப்பதிற்றடையில்லை. பெண்குறி ஆழத்தில் விசேடித்
தும் ஆண்குறி நீட்சியிற்குறைந்து மிருந்தால், இந்திரியம் கருப்பகோ
சத்திற் செல்லாது வெளியிற் பீச்சப்பட்டுப்போகிறது. பெண்குறி
ஆழத்திற்குறைந்தும் ஆண்குறி நீளத்தில் விசேடித்து மிருந்தால்,
ஆண்குறியின் நுனி ஒருபக்கமாய் ஒதுங்கிப்போகும். அப்போது இந்
திரியம் கருப்பகோசத்திற்குட் பிரவேசிக்காமையால் கருப்பந்தரிப்ப
தற்குத்தடைநேருகின்றது. ஆண்குறி மிகவும் பருத்திருக்கினும் பெ
ண்குறி கோணலாய் மடிப்பு விழுந்து நெருக்கமுற்றிருக்கினும் சம்
போககிரியை மிகவும் வருத்தமாயிருப்பதால் கருப்பகோசத்திற்
குள் இந்திரியம் பிரவேசிக்கமாட்டாது. அன்றியும்ஆண்குறியாயினும்
பெண்குறியாயினும், முன்பக்கம் வலப்பக்கம் இடப்பக்கம என்னும்
இம்முப்பக்கங்களுள் எப்பக்கமாவது வளைந்திருக்கினும் ஆண்குறி
யின் நுனிகருப்பகோசத்தின் வாய்க்குநேரே செல்லாமல் இந்திரியம்
வெளியிற்றனே பீச்சப்பட்டுப்போம். ஆண்குறிநுனியின்மேற்றோல்



முன்பின்வழுவாமல் வளைந்து நுனி தெரியாதிருக்குமாயின், அதன்
வழியாய்வரும் இந்திரியம் மேற்றோலினற் றடுக்கப்பட்டு வேகங்கு
ன்றி ஒருபக்கத்தில் ஒழுகிப்போகும். ஆகையால் இவ்விதசந்தர்ப்ப
ங்களிற் கருப்பந்தரிக்கமாட்டாது. கருப்பகோசம் முன்பக்கமாகவந்
து தொங்கியிருப்பதனலாவது இயற்கையினலாவது, அக்கோசத்தி
ன்வாய் ஆண்குறிநுனியை எதிர்கொள்ளத்தக்கதாயிராமல் ஒருபக்க
மாய்ச்சாய்ந்து அல்லது வளைந்து பெண்குறியைச் சேர்ந்திருக்குமே
னும், அக்கோசவாய் பெண்குறியின் உள்ளிருக்கும் தோலின் மடி
ப்பிற் புகுந்திருக்குமேனும், அக்கோசவாய் மிகவும் நீட்சியாய்த்தி
ரைகள் வீழ்ந்திருக்குமேனும், வீக்கத்தாலாயினும் தன்மாமிசவள
ர்ச்சியாலாயினும் இரத்தம் சீழ் முதலியவை கூடியிருப்பதாலாயினு
ம் கருப்பகோசபிலம் மூடிப்போயிருக்குமேனும் உள்ளே இந்திரியம்
பிரவேசிக்கமாட்டாது, இவ்வித சந்தர்ப்பங்களில் ஸம்போகம் ஸ்
திரீகளுக்கு அதிக வருத்தத்தையுண்டாக்கும். கருப்பந்தரிக்கமாட்
டாது. கருப்பகோசம் மிகவும் பலஹீனஸ்திதியிலிருக்கும் போதும்
அது வீரியத்தை இழுத்துக்கொள்ளச்சக்தியற்றதாயிருக்கும் (இ-ம்.)

## 212. சாத்திரவிநோதம்.

### தத்துவ சாஸ்திரம்.

தத்துவ சாஸ்திரமென்பதென்னென்றாராய்வோம். கிரகங்களி
ன்வட்டங்கள், பூமியின்சலனங்கள், பூமியினும் கடலினும் ஆகாயத்
தினும் உண்டாகிய பலவகைத்தோற்றங்கள், மேகத்திலிருந்துவிழுகி
ன்ற மழைக்கும் மலையிலிருந்துவிழுகின்ற அருவிக்கும் கோடைகால
ம் மாரிகாலம முதலிய காலவேற்றுமைக்கும், மீன்கள் நீந்துகிறதற்
கும் பறவைகள் பறக்கிறதற்கும, கடலில் அலைகள் எழும்புகிறதற்கு
ம் கணகளுக்குத்தோற்றும் காட்சிப்பொருள்கட்கும், செவிகளுக்கு
ச்சிரவணமாகிற ஓசைப்பொருள்கட்கும், மனிதர்பிரயோகிக்கிறயந்
திரங்கட்கும் மற்றும் இவைபோன்ற அனேகதோற்றங்களுக்கும்
பிரமாணங்களைவிளக்கிக்காட்டும் சாஸ்திரத்திற்குத்தத்துவ சாஸ்திர
மென்றுபெயர். இதைப்பற்றிய விவரங்களைத்தெரிந்துகொள்வதற்
குக் கணக்காகிய இரேகாகணிதம். வானசாஸ்திரம் - பூகோளசா
ஸ்திரம் - ரஸாயன சாஸ்திரம் - தாதுற்பத்தி சாஸ்திரம் முதலியவை
களைத்தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம. மனிதர்கள் ஒவ்வொ
ருவரும்தத்துவசாஸ்திரத்தை ஏற்றபடி ஆராய்ந்து அதன் உண்மை

களையும் ரகசியங்களையும் தெரிந்துகொள்ளவேண்டியது அதிலும்
அவசியம். அவ்வாறு தெரிந்துகொள்ளாதபட்சத்தில், மாயாவுலகம
ருட்சியால்அநேகபுரட்டுருட்டுகளுககுட்பட்டு அநேகர் தங்களையும்
மற்றவர்களையும வஞ்சிபபதற்கு இடமுண்டாகும். இவ்வாறாகவே
வானசாஸ்திரத்துடனே ஜோதிடத்தையும், ரசாயன சாஸ்திரத்துட
னே ரசவாதத்தையும் சேர்த்து அநேகர் அறியாதவர்களை ஏமாற்றி
வருகிறார்கள். தத்துவ சாஸ்திரத்தின் பிரமாணங்களையறிந்துதேறி
னவர்களோ இவ்வகையான புரட்டுருட்டுகட்கெல்லாம் தப்பித்துக்
கொண்டு, தங்களைமேலான அறிவாளிகளாக்கிக் கடவுளுடையமஹா
அற்புதச்செய்கைகளை முற்றினுமுணர்ந்து அவரைச்சதா பூசித்துவ
ருவார்கள்.

தத்துவ சாஸ்திரப்பிரமாணங்களை ஆராய்வதற்குமுன்பு, நமது
முன்னோர்கள் பூலோகத்துள்ள சகலபொருள்களையும் ஐந்துபகுப்பு
களாகப்பிரித்து, அவைகளை மூலபதார்த்தங்களென்றேற்படுத்தி, அ
வைகட்குப் பஞ்சபூதங்களென்று பெயரிட்டு, இவைகளே தனித்த
னி ஏகபதார்த்தங்களென்றும், இவைகளின் சேர்க்கையாற்றான் மற்
றவையாவும தோற்றப்பட்டனவென்றும் சாதித்திருக்கின்ற பிரமா
ணங்கள் பிசகென்று சாஸ்திரிகளனைவரும் ஒருங்கே மறுக்கின்றவி
ஷயத்தைப்பற்றி யூகிப்போம். பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம்
என்னும் நிலம் நீர் நெருப்பு காற்று விசும்பு ஆகிய இவ்வைந்தில், நி
லம் என்பதனுட்டானே அநேகம் தனி ஏகப்பொருள்களிருக்கின்ற
னவென்றும், நீர் என்பதனுட்டானே பிராணவாயு ஜலவாயு என்
றிரண்டு தாதுக்கள் கலந்திருக்கின்றனவென்றும், காற்று என்பதனு
ட்டானே பிராணவாயு உப்புவாயு என்றிரண்டுதாதுக்கள் கலந்திருக்
கின்றனவென்றும், இவைகளைப் பரிட்சையால்திடமாய் ஒப்புவிக்க
லாமென்றும், இவ்வாறு சொல்லுகையிற் பூதங்களின்தொகை உத்
தேசமாக 54 உண்டென்று விளங்குமென்றும் கூறுகின்றார்கள்.
(இன்னும்வரும்.)

213-ம் பக்கத்தொடர்ச்சி.

**213-ம்—பக்கத்திற்** புகைக்கூடு எவ்விதமாய் ஆகாயத்திற்செல்லுகி
**ன்றதென்பதைப்பற்றியும்** அதை எவ்விதமா யியற்றவேண்டுமென்
பதைப்பற்றியும் பின்னர்க்கூறுகின்றதாகச் சொல்லியிருக்கோமல்ல
வா? அதைநமது நண்பர்கள் இப்போது கவனிப்பார்களாக. புகைக்



கூடென்பது ஒருபம்பரத்தையொத்த வடிவமுள்ளதாய், வெகு
லேசான காகிதத்தினால் அல்லது கில்பூசியபட்டுத்துணியினால் செ
ய்யப்பட்ட ஓர் பை. இப்பையை ஆகாயததிற்செலுத்தியதை அநேக
சந்தர்ப்பங்களில் நமது நண்பர்கள் பார்த்திருக்கக்கூடும். முற்கூ
றியபடி இதைப்பற்றிய விவரத்தைத் தெரிவிப்பதற்குமுன் இதை
ப்பிரதமத்திற்கண்டுபிடித்த சரித்திரத்தை இங்குச்சுருக்கமாயெழுது
கின்றோம்.

அநேக நூற்றாண்டுகளுக்குமுன்னமே, மனிதர்கள் பறவைக
ளைப்போன்று ஆகாயத்திற்பறக்கத்தக்க யந்திரங்களைக்கண்டுபிடிக்
கவேண்டுமென்று முயற்சிசெய்ததாகவும், அப்போது ஏதோசிலயந்
திரங்களைக் கண்டுபிடித்ததாகவும் தெரியவருகிறது. ஆனால், அவை
கள் பிரயோசனப்படவில்லை. சுமார் 182 வருஷங்கட்குமுன் கஸ்ம
ன் என்னும் பெயருடைய போர்த்துக்கல் தேசத்துச் சந்நியாசியொ
ருவன் பறவையைப்போல் ஒருயந்திரம்செய்து, அதன் இறகுகளிற்
குழாய்களமைத்து அவற்றிற்காற்றுபுகும்படிசெய்து அந்தப்பற
வையைக் காற்றிற்பறக்கும்படிசெய்தான். அதற்காக அவனுக்குஅ
திகவெகுமதிகள் கிடைத்தன. ஆனால் அந்தப்பட்சி சிலநாளைக்குள்
உபயோகமில்லாமற்போயிற்று. அவன் மறுபடியும் நாரினாற்பின்ன
ப்பட்ட ஒரு கூடைசெய்து, அதைக்காகிதத்தினால் மூடி ஆகாயத்
தில் சுமார் 200 அடி எழும்புமபடி செய்தான். இதுவும் முந்தியதை
ப்போலவே உபயோகமில்லாமற்போனதால், அநேக கல்விமான்க
ளும் சாஸ்திரிகளும் இதைக்குறித்துச் செவ்வனேயாலோசித்து, எ
வ்விதத்திலாவது சரியான யந்திரமொன்று கண்டுபிடிக்கவேண்டுமெ
ன்று இடைவிடா முயற்சியுடன் அநேகவிதமான கருவிகளைச்செய்
தார்கள். ஆனால், அவைகள்யாவும் ஆகாயத்திற் பறக்கமாத்திரம் கூ
டியனவேயன்றி, வேண்டியவிடத்தில் நிற்கவும கீழேஇறங்கவும், சா
மான்களாவது மனிதர்களாவது உள்ளேயிருக்கவும் தக்கனவாயமை
யவில்லை. ப்ரான்ஸ் தேசத்தில் 1782 ம் வரு ஸ்டிபென்ஸ் ஜோஸப்
என்னும் இரண்டு சகோதரர்களிருந்தார்கள். அவ்விருவருள் ஸ்டி
பென்ஸ் என்பவன் காற்றைப்பார்க்கிலும் அநேகமடங்குலேசாயிரு
க்கும் ஜலவாயுவை (Hydrogen) ஒரு காகிதத்தில்நிரப்பி, அதன் நா
ன்குபக்கங்களையும் நன்றாக அடைத்துவிட்டு, உள்ளிருக்கும் காற்று
சற்றும் வெளிப்படாமற்செய்தால், அக்காகிதம் தானாகவேமேலே
பறப்பதாகத் தற்செயலாய்க்கண்டுபிடித்தான். இந்த உபாயத்தைக்
கொண்டு ஆகாயத்தில் ஏறும்படியான சிலயந்திரங்களை அவ்வூரார்

கண்டுபிடித்தார்கள். முதல்முதல் பிரான்ஸ்தேசத்தில் மான்ட்காலிஷ்யர்என்பவன் பட்டினாலே ஒரு கூடுகட்டிவிட்டான். இதைப்பார்த்தவுடன் இன்னும் அநேகர் இவ்வித கருவிகளைச்செய்துவிட்டுப் பரிட்சித்தார்கள். பிரதமத்திலே இவ்வகையான ஆகாயக் கூடிற்சென்றவர்கள் மனிதரல்ல, அதனுள்ளே ஆடு மாடு கோழி முதலியவற்றைத்தான் வைத்தனுப்பினார்கள். 1783 ம் வருஷத்தில் ஒருபெரிய புகைக்கூடுசெய்து அதில் ஏறிப்போகத் துணிந்தவர்கள் ஆர்லாண்டிஸ் என்பவரும் ரொஸோரியோ என்பவரும்தான். இந்தக்கூடு சுமார் 3000 அடி மேலேபோனபோது, அவ்விடத்திலிருந்துபார்த்தால் பூமியின்மீதிருக்கும் மனிதர்களும் மாடமாளிகைகளும் மிகச் சிறியனவாய்க்காணப்பட்டன. இன்னும் மேலேபோனால் அபாயம் நேரிடுமென்றுதெரிந்து கீழே இறங்கிவிட்டார்கள். இவ்வித புகைக்கூடு பிரான்ஸ்தேசத்தில்தான் முதல் முதல் செய்துவிட்டுக்கொண்டுவந்தார்கள். பிறகு இவர்களைப்பார்த்து இதரதேசத்தார்களும் செய்துவிட ஆரம்பித்தார்கள். இப்போது இவ்வித புகைக்கூடை அநேகவகையாய் விர்த்திசெய்து, ஆகாயத்தில் அனேகமைல் தூரம்போவதற்கும் அவ்விடத்திலிருந்து ஜாக்கிரதையாயிறங்குவதற்கும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு தேசத்தார்கள் ஒருவரோடொருவர் சண்டைசெய்யும் காலத்திலும், இவ்வகைப் புகைக்கூட்டில் ஏறி, ஆகாயமார்க்கமாய்ப்போய்ச் சத்துருக்கள் இறங்கியிருக்குமிடத்திற்கு நேராய் ஆகாயத்திற்றானே நின்றுகொண்டு அவரவர்களிருக்கும் நிலைமையையறிந்து சண்டைசெய்கின்றார்கள். மறுமுறை புகைக்கூடு செய்கிறவித்தைத் தெரிவிப்போம். (இன்னும்வரும்.)

## 214. பகுத்தறிவு.

பகுத்தறிவென்பது விதிவிலக்குகளை யுணரச்செய்யும் அறிவுக்குப் பெயராகும். மனிதன் ஏனைய ஜீவராசிகளினும் மேம்பட்டவனெனப் பெருமையுற்றது பகுத்தறிவினாற்றான். மனிதன் நீங்கலாக ஏனைய ஜீவராசிகளுக்குள்ளே அந்தந்தப் பிராணிகள் தத்தம் இனத்தின் பொதுலட்சணமாயிருக்கும் இயற்கையறிவிற்கேற்றபடி கருமங்களைச் செய்துவருகின்றன. மனிதனோ தன்னுடைய பகுத்தறிவுக்கேற்றபடி காரியங்களை நிர்வகித்துவருகின்றான். அவரவர்களின் பகுத்தறிவியக்கத்திற் கேற்றவாறு அபிப்பிராயங்களும் அமைகின்றன. பகுத்தறிவியக்கத்தை அதிகமா யடையப்பெறாதவர்கள் பெரும்பாலும் நாகரீகமற்ற மிலேச்சர்களே. அவர்கள் செய்கைகள்



யாவும் வெகுசாய் விலங்கு புள் இவற்றைப்போல் தாங்கள் சேர்ந்திருக்கும் இனத்தின் செய்கைகளாயிருக்கும். மனிதனுடைய பகுத்தறிவினியக்கம் அவன் சார்ந்திருக்கும் இனத்திற்கேற்றபடியிருக்கிறதென்றும், அவனுக்கு இயற்கையில் பகுத்தறிவென்பது கிடையாதென்றும், சில மனோதத்துவசாஸ்திரிகள் சாதிக்கிறார்கள். அவர்கள் அங்ஙனம் கூறுவது மோட்சவீடடைதற்குரிய மெய்யறிவென்பதைத்தான். ஆயின் பகுத்தறிவுவேறு மெய்யறிவுவேறோவென்னில், சாதாரணமான விஷயங்களைப் பாகுபாட்டோடுணர்வது பகுத்தறிவென்றும், உண்மையான ஆன்மநிலையைப் பொய்யின்றியுணர்வது மெய்யறிவென்றும் கூறுவதவர்களியல்பு. இதனை, "ஐயறிவறிந்தவை யடங்கினவரேனு - மெய்யறிவிலாதவர்கள் வீடதுபெறாரே." என்னும் ஆன்றோர்வாக்கானுங்காணலாம். ஆதலால் அவர்களுரைப்பதும் முற்றும் பொருத்தமற்றதென் றுரைக்கலாகாது. மனிதனுடைய இயற்கையறிவு வெகுசாய் இனத்திற்கேற்றபடி திருந்துவதாயிருக்கிறதென்பதுமாத்திரம் வாஸ்தவமே. இதுகாரணம் பற்றியே சீர்படவேண்டிய ஒவ்வொருவரும் சாதுசங்கத்தைச் சாரவேண்டுமென்றும், நல்லாரோ டிணங்கவேண்டுமென்றும் தீயார்சார்பைத் திரஸ்காரம் பண்ணவேண்டுமென்றும் ஆன்றோர் பலருங் கூறியுள்ளார். பகுத்தறிவு பழக்கத்திற்கேற்றபடி திருந்துகிற காரணத்தினாலேயே அத்தகைய அறிவு இயற்கையில் மனிதனிடத்திலில்லையென்று சாதிப்பது நியாயவாதத்தில் நிலைக்காது. ஏனெனில், "இணக்கமறிந்திணங்கு." முதலிய போதவசனங்களை யூகித்தறியுமிடத்து, மனிதனிடத்தில் இயற்கையிற் பகுத்தறிவமையாதிருக்கின் ஆன்றோர்கள் "அறிந்திணங்கு." என்பது முதலிய கட்டளைகளை யிட்டிரார்களே. ஆகையால் ஆன்றோர்கட்கு மனிதரிடத்திற் பகுத்தறிவு இயற்கையிலுண்டென்பதே கொள்கையெனல் வெள்ளிடைமலைபோல விளங்குகின்றது. அன்றியும் இப்பூவுலகில் ஒவ்வொருவனும் தான் தான் புரியும் சகல கருமங்கட்கும், கடவுளுடைய சந்நிதானத்தில் உத்தரம் சொல்லவேண்டியவனா யிருக்கிறானென்றும், அவ்வொவ்வொருவனும் இவ்வுலகத்திற் புரியும் நற்காரியங்களுக்காக ஆண்டவனிடத்திலிருந்து ஓர்வகைப்பரிசு பெறுகிறானென்றும், தீக்காரியங்களுக்காக ஒருவகைத்தண்டனை யடைகிறானென்றும் சர்வமதவாதிகளும் சம்மதித்துக்கூறுவர். இதனாலும் இயற்கையிற்றானே மனிதனுக்கு நன்மைதீமைகளைப் பாகுபாடு செய்தற்குரிய பகுத்தறிவைக் கடவுள் படைத்திருக்கிறாரென்பதிற் சந்தேகமில்லை. இவ்வாறு

அவர் படைத்திராவிட்டால் நன்மைக்காகப் பரிசளிப்பதும் தீமைக்காகத் தண்டிப்பதும் அவர் பட்சத்தில் நீதியற்றதாய்முடியும். ஆயின் அவ்வாறான பகுத்தறிவமையப்பெற்ற மானிடர்யாவரும் நன்மை தீமைகளை நன்றாயுணர்ந்து தீயமார்க்கத்தையொழித்துச் சன்மார்க்கர்களாகின்றார்களாவென்னில், இப்போது இத்தனை நிமிஷம் இவ்வளவுமணி என்று ஒரிம்மியளவும் பேதப்படுத்தாது தன்னையுடையவர்கள் கவனியாதிருக்கினும் அழைத்துச் சொல்லுவதுபோல் அப்போதைக்கப்போது அடித்துக் காட்டுகின்ற கடிகாரங்கள் எல்லோரிடத்திலுமிருக்கினும் அதற்குச் சாவிகொடுக்கவேண்டிய நாட்கணக்கின்படி தவறாது சாவிகொடுத்துக்கொண்டும் சாமான்களைத் துடைக்கவேண்டிய நாட்கணக்கின்படி துடைத்துக்கொண்டும் காப்பாற்றி வருபவர்களுக்கு அக்கடிகாரங்கள் உதவியாவதுபோல், மேற்கூறிய காரியங்களைச் சற்றும் கவனியார்கட்கு அக்கடிகாரங்கள் உதவுமா? அப்படியே, தத்தமக்கு வாய்த்துள்ள பகுத்தறிவென்னும் வாளைச் சாத்திரவிசாரணை சாதுசங்கச்சார்பு என்னும் சாணையில் அப்போதைக்கப்போது தீட்டிவந்தால், நாம் சமுசாரமென்னும் காட்டில் காமகுரோத லோபமோக மதமாச்சரியமென்னும் மிருகங்களேர்ந்தபோது, அவ்வவைகளைத் தக்கபடி தண்டித்து வெற்றிபெற்று நிர்ப்பயமாயுலாவி அக்குடும்பாரண்யானுபவங்களைக் குறைவறக் கைக்கொண்டு குதூகலிக்கலாம். அவ்வாறின்றி அவ்வாளைத் துருப்பிடிக்கச்செய்து வைத்துக்கொண்டிருந்தால் குடும்பாரண்யத்தி லுலாவுதல்கூடாது. ஆரண்யத்திலுலாவவே அசாத்தியமானபோது அவ்விடத்திற்றானே நிலையாயிருந்து தவம்புரிய நேருமா? நேராது, ஆகவே, "இல்லறத்தானல்லே னியற்கைத்துறவியல்லேன்." என்று சொன்னபடி இரண்டுங் கெட்டவனாய் உபயபிரஷ்டன் என்னும் பட்டம் சூடிக்கொள்வோம். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நமக்கு வாய்த்துள்ள பகுத்தறிவை அதிக ஜாக்கிரதையுடனே வெகு விரைவில் மேற்சொல்லிய சாணைகளிற்றீட்டிக் கூர்மையுண்டாக்கி வைத்திருக்கவேண்டுமென்பதை உறுதியான வேதவசனமாகக் கடைப்பிடிக்கவேண்டும். ஆயின் சில சமயங்களில் பகுத்தறிவுள்ளவர்களும் நன்மையைத் தீமையாகவும் தீமையை நன்மையாகவும் கொள்ளுகின்றார்களேயென்னின், அவ்வாறு மாறுபடக்கொள்வது பகுத்தறிவின் குறைபாடன்று. பகுத்தறிவானது சுவை - ஒளி - ஊறு - ஓசை - நாற்றம் என்னும் சத்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களாகிய ஐந்தின்வழியேசென்றுதான் பகுத்தறியும். அவ்வைந்துள் எதுகுறைந்



திருக்கின்றதோ அதன் விஷயத்திற் பகுத்தறிவு பயன்படாது. உதாரணமாக, கல்விகேள்விகளின் மேம்பட்டுச் சாதுசங்கப் பழக்கமெய்திய குருடனும் மூக்கடைப்புள்ளவனுமாகிய ஒருவன், அசுத்தமான வஸ்து விருப்பதால் துர்க்கந்தம்வீசும் ஓரிடத்தினுட்கார்ந்திருப்பானாயின், அவனது கல்வி கேள்விகளையும் சாதுசங்கப் பழக்கத்தையும் பகுத்தறிவையும்பற்றிப் பழுதுகூறுதற்கிடமுண்டோ? இல்லை. ஏனெனின், அங்கு அசுத்தபதார்த்தம் உளதென்பதைக் காண்பதற்குரிய கட்புலனும், துர்வாசம் வருவதென்பதை யுணர்தற்குரிய நாசிப்புலனு மின்மையினென்க. இதனானன்றே பிற ஆன்றோரும், "சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தின் - வகைதெரிவான்கட்டேயுலகு" என்றார். ஆதலால், பகுத்தறிவை அதிஜாக்கிரதையுடன் கூர்மையாக்கி நம்மிடத்தில் இலைமறைகாய்போற் கரந்துள்ள துர்க்குணங்களை வேரறக்களைந்து சற்குணங்களைக் கடைப்பிடித்தொழுகுவோமாயின் ஈருலகத்திலும் இதயமகிழ்வெய்தியிருப்பதுடன் கடவுளின் கருணையுடையோராவோமென்பதற்குச் சந்தேகமில்லை.

பகுத்தறிவு துலக்கமடையாமை துலக்கமடைந்தமை என்னும் இவ்விருபகுப்பின் தாரதம்மியத்தைக் குறிப்பாயுணர்ந்துகொள்ளும் பொருட்டே பெரியோர்களிற் சிலர் மானிடர்குணங்களை நான்குபிரிவுகளாகப் பிரித்திருக்கின்றார்கள், அவையாவன:—

1-வது.—ஆடு மாடு பன்றி இவைகளைப்போன்ற மிருகங்களின் குணம்.

2-வது.—சிங்கம் புலி கரடி முதலியவைகளைப்போன்ற துஷ்ட மிருகங்களின் குணம்.

3-வது.—பசாசின் குணம்.

4-வது.—தெய்வகுணம், என்பனவைகளே.

இந்நான்கு பிரிவுகளின் விவரங்களை மறுபத்திரிகையில் எழுதுவோம்.

(இன்னும்வரும்.)

## 215. ஏன்மரணத்திற்கஞ்சவேண்டும்?

உலகத்திலுள்ள சகலஜீவராசிகளும் மரணத்திற்குட்பட்டு இவ்வுலகத்தைவிட்டு நீங்கவேண்டியதவசியமென்று யாவருமறிவார்கள். ஆனால், மரணமடைவதற்குச் சாதாரணமாய் மனிதர்கள்யாவரும் பெரும்பீதியடைவதும் இயற்கைதான். முற்றத்துறந்த முனிவர்க

ளாயுள்ளாரும் மரணமென்றாற் குலைநடுங்குவார்களாயின் ஏனையோர் பெரும்பீதிகொள்வரென்பதைப்பற்றிப் பேசவும்வேண்டுமோ? ஆயின் முற்றத்துறந்த முனிவர்களாய் முத்திமார்க்கத்திற் சித்திபெற்றவர்களாயுள்ள சாத்தியர்களாகிய சாதுக்கள் சாவென்பதற்குச் சற்றேனுஞ் சலனமடையார்கள். அச்சாதுக்களினியல்பித்தன்மைத்தென்பதை, "சகமீதிருந்தாலு மரணமுண்டென்பது சதாநிஷ்டர்நினைவதில்லை—சிந்தையறியார்க்கிது போதிப்பதல்லவே செய்யினும் வெகுதர்க்கமாம்." என்னும் ஆன்றோர்வாக்கானும் காணலாம். உலகத்துள்ள பெருந்தொகையினராய மானிடர்கட்குள்ளே மேற்கூறியவாறு முத்திமார்க்கத்திற் சித்திபெற்ற சாத்தியர்கள் சில்லோர்மாத்திரம் அம்மரணத்திற் கஞ்சாநெஞ்சினராகவும் ஏனைய பல்லோரும் அம்மரணத்தின் பெயரைக்கேட்கும்போதே பயப்பிராந்தி நிறைந்தநெஞ்சினராகவும் இருத்தற்குக்காரணம் என்னையென்று சற்றாலோசிப்போம். ஓர் பெண் தான் பிறந்தது முதல் விவாகமாகிறவரைக்கும் தனது தாய்வீட்டிற்றானே சகலசம்பத்துக்களையும் அநுபவித்துக்கொண்டு அதிக செல்வமாய் வளர்ந்துவருகின்றாள். விவாகத்திற்குப்பிறகு, மாமியார் வீட்டுக்குபோகவேணுமென்றால், அங்குள்ள மாமி மாமன் முதலியவர்களுடைய குணங்களொன்றுமே இவளறியாளாதலால், அங்குபோனால் என்னென்ன துன்பங்கள் நேருமோ? எவ்விதகஷ்டத்தை யநுபவிக்கவருமோ? என்பதை நினைத்து மனதில் அதிககவலைகொள்கின்றாள். ஆனால், அவள் கற்றுணர்ந்து தெளிந்த புத்திசாலியாயிருந்து, தன் பெற்றோரிடத்திலிருக்கும்போதே சகல துர்க்குணத்தையும் நீக்கிச் சற்குணசம்பூரணியாயிருந்தால், தன் மாமியார் வீட்டிற்குப்போவதற்கு முன்னமே, அவ்விடத்துள்ளார் இன்னாரின்னாரென்றும், இன்னாரின்னாருடைய குணங்களிப்படியிப்படியென்றும் நன்குவிசாரித் துணர்ந்திருப்பாளாகலால், தான் அங்குபோனால், இங்கிருக்கும்வரையிலெப்படி தன்பெற்றோருக்கடங்கி நடந்து அவர்களன்பைச்சம்பாதித்தனளோ, அப்படியே அங்கிருப்பவர்களின் குணங்களுக்கேற்ப அடங்கிநடந்து அவர்களன்பையும் சம்பாதித்துக்கொள்ளலாமென்றும், ஆகையால் அங்குத்தனக்கு யாதோர்துன்பமும் நேராதென்றும், எவ்விதகஷ்டமும் சம்பவியாதென்றும், அங்குத் கணவனுக்கு ஆதிக்கமுள்ள இடமாதலால் அவனுடன் கூடிவாழ்ந்து சகல சுகங்களையும் குறைவற அநுபவிக்கலாமென்றும் நன்றாயுணர்ந்து, மாமியார் வீட்டிற்கு மனங்கோணாமற்போவாளல்லவா? இதுவரையிற்கூறிவந்த நியாயத்தா



ல், மனிதனாகிய ஓர் பெண்ணுக்கு இவ்வுலகவாழ்வானது தாய் வீட்டுச் செல்வமென்றும், மறுவுலக வாழ்வானது மாமியார் வீட்டுச்செல்வமென்றும், மரணமானது விவாகத்தைப் போன்றதென்றும் வெள்ளிடைமலைபோல விளங்குகின்றதல்லவா?. ஆயின், மானிடர்களெல்லாம் பெண்களென்றும், இவ்வுலகம் தாய்வீடென்றும், மறுவுலகம் மாமிவீடென்றும் மரணம் விவாகமென்றும் கூறுவது முற்றும் பொருந்துமோவெனின், ஓரிம்மியளவும் குறைவுறாத உவமையாகுமென்பதைத் தெளிவுபடுத்திக் கூறுவோம். எவ்வாறெனின், மானிடர்களாகிய நாமெல்லாம் பெண்களென்று கூறப்படுமோவென்றையுறுகின்றாய், சர்வலோக நாயகன் சர்வலோகநாதன் சர்வலோகத்தலைவன் என்னும் இத்தகைய அளவிறந்த திருநாமங்களையுடைய ஆண்டவரைநோக்க நாமெல்லாம் ஆடவரல்லோமென்பதே தேற்றம். இவ்விஷயத்திலினிச் சந்தேகம் வேண்டியதில்லை. இரண்டாவது இவ்வுலகவாழ்க்கை தாய்வீட்டுச் செல்வம் போன்றதென்றுரைப்பதெப்படி யென்கின்றாய், ஓர் பெண் தன் தாய் வீட்டில் எவ்வளவு சொத்துக்களநுபவித்துக்கொண்டிருந்தபோதினும் மாமியார் வீட்டுக்குப்போகையில் ஓரிம்மியளவாவது அவர்களநுமதியின்றிக்கொண்டுவரவேணுமோ? ஏலாதல்லவா! ஆதலால், மரணமடையும்போது ஓரிம்மியளவுமெடுத்துப்போகவேலாதவிவ்வாழ்வு தாய்வீட்டுச் செல்வம்போன்றதென்றது சரதமே. இவ்விஷயத்திலினிச் சந்தேகம் வேண்டியதில்லை. மறுவுலக வாழ்வு மாமிவீட்டுச்செல்வம் போன்றதென்றது பொருந்துமோவென்கிறாய், மாமியார் வீடுதான் தனக்குரிமையுற்ற வீடாகையால் அங்குள்ள பொருள்களைத் தான் எவ்வளவு அநுபவிக்கினும் கேட்பாரில்லையல்லவா? அதுபோல மறுவுலகத்துத்தானடையும் இன்பதுன்பங்களை எத்தனைகாலம் சலிக்காமல் அநுபவித்துவந்தாலும் தடைப்படுத்துவாரில்லையாகலால், மறுவுலக வாழ்வு மாமியார் வீட்டுச்செல்வம் போன்றதென்றது வாஸ்தவமே. இவ்விஷயத்திலினிச் சந்தேகம்வேண்டியதில்லை. இம்மூன்றும் தாங்கள் விளக்கிக்காட்டியபின் சரியான பொருத்தங்களாகத்தானிருக்கின்றன, இனி மரணமே விவாகமென்றதெவ்வாறு பொருந்தும்? அதனைப் பொருத்திக்காட்ட வேண்டுமென்பாயேல், ஓர் பெண்ணிற்கு விவாகமாகும்போதே தாய்வீட்டுரிமை நீங்கி மாமிவீட்டுரிமைவாய்க்கிறதென்பது வாய்மையல்லவா? அதுபோலவே மரணம் நேரும்போதே இவ்வுலகவுரிமையாகிய தாய்வீட்டுரிமை நீங்கி மறுவுலகவுரிமையாகிய மாமிவீட்டுரிமை வாய்ப்பது கண்கூடாக்கதன்

டிருத்தலின் மரணமே விவாகமென்பதுண்மையே. இவ்விஷயத்திலுமினிச் சந்தேகம்வேண்டியதில்லை. எனவே, ஓர் பெண்ணானவள், தான் தாய்வீட்டிலிருக்கும்போதே கற்றுணர்ந்து துர்க்குணங்களை நிக்கிரகித்துச் சற்குணசம்பூரணியாய்த் தாய்வீட்டிலிருந்த சகலர்க்கும் அடங்கிநடந்து அவர்களன்பைப் பெற்றிருப்பாளாயின், அவள் மாமிவீட்டிற்குச்செல்ல அஞ்சாளென்றும், அவ்வாறு வாய்க்கப்பெறாதவள் அஞ்சி நடுங்கி அலறுவாளென்றும், சற்குண சம்பூரணிகளாயிருக்கும் பெண்கள் சிலரேயென்றும், அப்பெண்களைப்போன்றோரே மரணத்திற் கஞ்சாநெஞ்சினர்களாகிய சிலமகான்களென்றும், அவ்வாறு வாய்க்கப்பெறாத பேதைப்பெண்களே பல்லோரென்றும, அவர்களைப் போன்றோரே மரணத்திற் கஞ்சுமமதியீனர்களாகிய பல்லோரென்றும் விளங்குதலால், நாம் ஒவ்வொருவரும் மரணத்திற்குக் கிஞ்சித்தும் அஞ்சாமல் அதை எதிர்கொள்ள வேண்டுமென்றெண்ணி, சதா சத்விஷயத்திலும் கடவுள் தியானத்திலும் காலத்தைப்போக்கிக் கடவுளையறியும்படியான முத்திமார்க்கத்திற் சித்தியடைய முயன்று வரவேண்டும். மரணத்திற்கஞ்சாதவர்கள் சிலரென்றதற்கும் அஞ்சுவோர்கள் பலரென்றதற்கும் காரணமென்னவெனின், முயற்சியுண்மையும் முயற்சியின்மையுமேயன்றி வேறில்லையென்பதை யூன்றிக் கவனிக்கவேண்டும். இத்தாரதம்மியத்தினுலன்றோ, செல்வர் சிலராகவும் வறியர் பலராகவு மிருக்கின்றார்கள். இதனை, "இலர்பலராகியகாரணநோற்பார்—சிலர்பலர் நோலாதவர்." என்றும், மரணத்தை ஞானியர் திரணமாக மதிப்பாரென்பதை, "புழநெளிந்து புண்ணழுகியோசனைநாறுங்—கழிமுட்டநாற்றத்தவேனும்—விழலர்—விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன்கொள்வார்—களியார்சுமைபோடுதற்கு." என்றும் வரும் ஆன்றோர் வாக்குகளானுமறிக.

## 216. ஆப்தவாக்கியங்கள்.

1. மனிதன் அனுசரிக்கவேண்டிய விஷயங்களில் மெய்யொன்றே முக்கியமும் முதன்மையுமானது.
2. எப்போதும மெய் முன்வந்து நிற்கும் பொய் புறங்காட்டியோடும்.
3. மெய்யுடையோனே மதிப்புடையோனுவான்.
4. மேன்மையான விஷயங்களுக்கெல்லாம் மேன்மையானது மெய்யே, அதை வெறுத்தவன் வீணனுவான்.
5. உண்மை விசுவாசி யுலகப்பிரசித்தன்.
6. உலக நன்மைகளுக்குகந்தவித்துண்மையே.
7. உன் நாவினுனியை யுண்மையினஸ்திவாரமாக்கு.
8. உன் மனச்சாட்சிக் கொருபோதும் பொய்யனுகாதே.
9. மெய்யை நாடினுல் மெய்யனுருவாய்.
10. பிசுகைத்தள்ளிப் பிசாசைவெற்றிகொள்.
11. இருளானது நட்சத்திரங்களைக் காண்பிப்பதுபோல் வியசனமானது உண்மையைக் காண்பிக்கும்.
12. வார்த்தையையும் செய்கையையும் மாறுபடக்காட்டாதே.
13. உண்மைப்பிரகாசம் உன் மனதிற்றரித்தால் உன்னதமகிமுச்சி யுனக்கே சுதந்தரம்.
14. மெய்யைக்கண்டால் முன்னேக்கி நட, பொய்யைக்கண்டாற் பின்வாங்கி நில்.
15. உண்மையையொத்த வுறுதியாநேசர் உலகத்திலெங்குமொருவருமில்லை,



## 217. ஓர் யுக்தி.

ஒருவன் ஒருநாள் ஓர் குளத்தில் ஸ்நானம் செய்யவெண்ணி அக்குளக்கரையில் தன் ஜோடுகளை விட்டுவிட்டுக் குளத்தினுள்ளிறங்கி நீராடிக்கொண்டிருந்தான். அவ்வாறிருக்கையில் அக்குளத்தில் நீராடுவதற்காகவே வந்த வேறொருவன் அதன்கரையில்விட்டிருக்கும் ஜோடுகளிரண்டும் மிகப்புதிதாயும் விலையுயர்ந்ததாயுமிருக்கக்கண்டு அவ்விரண்டையும் எடுத்துச்சுருட்டித் தன் தலையில் வைத்துக் கட்டிக்கொண்டு குளத்திலிறங்கி இவனும் ஓர் பக்கமாய் நீராடிக்கொண்டிருந்தான். அப்போது முதலிலிறங்கிய ஜோட்டுக்குடையவன் நீராடி முடிந்து கரைக்குவந்து வேறுவஸ்திரங்களை யுடுத்துக்கொண்டு அங்குவிட்டிருந்த தன்ஜோடுகளைப்பற்றி வெகுநேரம் தேடிக்கொண்டிருக்கையில், ஜோட்டுத்தலையன் நீராடிமுடிந்து கரைக்குவந்து ஜோட்டுக்குடையவனைக்கண்டு, "ஐயா! வெகுநேரமாக எதைத் தேடுகின்றீர்கள்?" என்றான். உடனே ஜோட்டுக்குடையவன்; "ஐயா! நான் இவ்விடத்தில் விட்டுப்போன ஜோட்டை எந்த அயோக்கியப்பயலோ களவாடினுன் அது குறித்துத் தேடுகின்றேன்." என்

றான். இதுகேட்ட ஜோட்டுத்தலையன் வெகுவாகக்கோபித்து, "என்னகாணும் நீர் அஜாக்கிரதையாயிருந்துவிட்டு எடுத்துப்போனவனை அவமரியாதையாய்ப் பேசுகின்றீர், இதோபாரும் நான் நீராடப்போகையில் எனது ஜோடுகளைத் தலையில்கட்டிக்கொண்டேபோனேன் இப்படியல்லவோ பத்திரப்படுத்தவேண்டும்" என்று சொல்லித் தலையிலிருந்த ஜோட்டையவிழ்த்துக் காட்டினான். அதைப்பார்த்த ஜோட்டுக்குடையவன் அந்த ஜோடுகள் தன்னுடையவைதானென்று நன்றாய்த்தெரிந்துகொண்டு, "ஐயா! இந்தஜோடுகள் என்னுடையவைதான், சும்மாபரிகாசத்திற்கு எடுத்துவைத்திருந்தீர்களோ? கொடுத்துவிடும்" என்றான். அதற்கு ஜோட்டுத்தலையன் கலீரென்றுசிரித்து, "என்ஜோட்டை நான்காப்பாற்றினவகையைக் காண்பித்தால் இந்தஜோடு என்னுடையதுதானென்கின்றாயே! நீ என்ன பைத்தியக்காரனோ அப்படி உன் ஜோட்டைநான் திருடினவனாயின் அந்தஜோட்டை உனக்குக்காட்டுவேனோ? இதிலாவது நீ தெரிந்துகொள்ளக்கூடாதா" என்றான். இவ்வாறிருவரும் சண்டைபோட்டுக்கொண்டு நியாயாதிபதியினிடத்திற்சென்று முறையிட்டுக்கொண்டார்கள். நியாயாதிபதி இருவரையும் விசாரிக்கையில், ஜோடுதிருடினவன், "மஹாப்பிரபு! நான் ஸ்நானம்செய்யவரும்போது எனது வாதியும் அக்குளத்தில் நீராடிக்கொண்டிருந்தார். அப்போது அவர் ஜோடுகள்கரையோரமாயிருந்ததை நான்பார்த்தேன், அவைகளும் என்ஜோட்டைப்போலவே புதியனவாகத்தானிருந்தன. நான் அங்குப்போனபிறகு வேறொருவரும் அங்குவரவில்லை ஆனால் அந்த ஜோட்டை எடுத்தவன் நானல்ல" என்றான். இவைகளைக்கேட்ட நியாயாதிபதி நெடுநேரம் ஆலோசித்து வேறுசாட்சி ருஜுக்களில்லாமையினால், கடைசியாக அவர்களிருவரையும்பார்த்து, "நீங்களிருவரும் ஆளுக்கு ஒவ்வொருஜோடாய் எடுத்துக்கொள்ளுங்கள்." என்றார். களவாடினவன் வந்தகாசுக்கு வட்டமில்லையென்று ஒத்துக்கொண்டான். ஜோட்டுக்குடையவனோ ஒற்றைஜோடு எவர்க்கும் பிரயோஜனப்படாதென்பதையுணர்ந்து தனக்கு அவ்வொற்றை ஜோடு வேண்டாமென்று மறுத்தான். இவ்விஷயத்தினாலே நியாயாதிபதி ஜோட்டுக்குடையவன் இவன்றானென்றுணர்ந்து களவாடினவனைத் தண்டித்து ஜோட்டை உடையவனுக்குச் சேர்ப்பித்துவிட்டார்.

குற்றமுள்ளவர்கள் அதை மறைப்பதற்காக அளவுக்கு மேற்பட்டு வார்த்தையாடுவார்கள்.



## 218. சக்கிலியும் வர்த்தகனும்.

பூர்வகாலத்தில் ஓர்பட்டணத்தின் வீதியொன்றில் ஒருவர்த்தகன் திரண்ட ஐஸ்வரியமுள்ளவனாயிருந்தான். அவன்வீட்டுக்கு அண்டைவீட்டில் ஓர் எளிய சக்கிலி வசித்துக்கொண்டிருந்தான். வர்த்தகன் இரவும் பகலும் பணஎக்கமும் கவலையும் மேற்கொண்டு மனவமைதியைப்பறிகொடுத்துப் பொருள்சேர்க்கும்வகையையே சிந்தித்துக்கொண்டிருந்தான். சக்கிலியோ! நாடோறும் காலைமுதல் மாலைவரையில் உழைத்துப் பாடுபடுகிறவனாயிருந்தும் தன்ஸ்திதியில் மனரம்மியமுள்ளவனாய் எப்போதும் சந்தோஷத்துடன் பாடிக்கொண்டு காலங்கழித்து வருகிறவனாயிருந்தான். ஒருநாள் இவ்விருவரும் ஒருவரையொருவர் சந்திக்கும்படி நேர்ந்தது. அப்போது வர்த்தகன் சக்கிலியைப்பார்த்து, "ஆ! என்நல்லசிநேகிதனே! நீபடுகிற பாட்டினால் எவ்வளவுப்பணம் ஒருவருஷத்தில் சம்பாதிப்பாய்." என்றுகேட்டனன். அதுகேட்ட சக்கிலிசிரித்துக்கொண்டு, "ஐயா! வருஷம் ஒன்றுக்கு எவ்வளவு சம்பாதிப்பாய் என்று கேட்கின்றீர், அவ்விதகணக்கு எனக்குத்தெரியாது, அன்றாடம் உழைத்து அன்றாடம் சாப்பிட்டுவருகின்றேன், இவ்விதமாய் நான்காலந்தள்ளிவர எப்படியோ வருஷமும் முடிந்துபோகிறது. வருஷம் ஒன்றுக்கு எனக்கிவ்வளவு அகப்படுகிறதென்று நான் பார்க்கிறதுமில்லை, எனக்குத் தெரியவும்தெரியாது அன்றாடவுழைப்பினால் அன்றாடபோஜனம் நடந்துவருகிறதென்றுமாத்திரம் எனக்குத்தெரியும்." என்றான். இதைக்கேட்டவர்த்தகன் மீண்டும் சக்கிலியைப்பார்த்து, "அப்படியானால் நாளொன்றுக்கு இவ்வளவுசம்பாதிப்பேனென்று சொல்லுவாயா," என்றான். அப்போதுசக்கிலி, "ஐயா! ஒருநாளைக்குச் சற்று அதிகமாயகப்படும் ஒருநாளைக்குச்சற்று குறைவாயகப்படும், ஆதலால் அதையும் நிகரமாய்ச்சொல்லமுடியாதாயினும், அதுகொண்டு நானும் என்சமுசாரமும் ஜீவித்துவருகிறோம்." என்றான். அப்போது வர்த்தகன், "நல்லது என் சிநேகிதனே! இனிவருங்காலத்தில் உனக்கு யாதோர்குறைவும் நேரிடாதபடி இந்த 100 பொன்காசைத்தருகின்றேன், நீ இவற்றைப் பத்திரப்படுத்திவைத்துக்கொண்டு, உனக்கவசியம் நேரிடுங்காலத்தில் உபயோகப்படுத்திக்கொள்ளலாம்." என்றான். சக்கிலிக்கு அந்த 100 பொன்காசைப் பார்த்தபோது உலகெங்குமுள்ள திரவியங்களனைத்தையுங்கண்டதுபோல விருந்தது. அவன் அப்பொற்காசுகளைச் சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டு தன் வீட்டுக்குத்திரும்பிவந்து அதைவெகுகவலையுடனே பத்திரமாய்ப்

பூமியிற் புதைத்துவைத்தான். அப்போதேதன் மனச்சமாதானத்தையும் புதைத்துவிட்டான். எப்படியெனில், ஐஸ்வரியம் அவனைச்சேர்ந்த நிமிஷம்முதல் நித்திரை அவன்கண்ணைவிட்டு நீங்கிவிட்டது. சந்தோஷமும் பாடல்களும் பறந்துபோய்விட்டன. தீராக்கவலை சந்தேகம் வீண்பயம் முதலியனவ அவன்மனதிற்பற்றி அரித்துக்கொண்டேயிருந்தன. இதனாற் பகல்முழுதும் அவன்கண்கள் புதையலிருக்குமிடத்தை நோக்கிக்கொண்டே யிருக்கும். இரவிலே பூனைமுலியவற்றால் ஏதேனும் அரவமுண்டாயினும், அவன்திடுக்கிட்டு, எங்கே திருடர்கள் பொக்கிஷத்தைக் கொள்ளையிட்டுக்கொண்டு போகின்றார்களோ என்று சம்சயித்து வெகுதிகிலடைந்திருப்பான். இவ்வாறு அவன் வெகுநாளாய்த் தன்பணத்தினிமித்தம் பெரியவேதனையடைந்துகொண்டுவந்ததால், அவன் அலுப்படைந்து, தனது முன்னிலைமையையும் தற்கால நிலைமையையும் ஒத்துப்பார்த்து, தன்னிடத்தில் ஐஸ்வரியம் வந்ததோடு தனக்கிருந்த மனச்சமாதானமும் சந்தோஷமும் நீங்கிவிட்டனவென்றுணர்ந்து, உடனே தன் அண்டைவீட்டுக்காரனாகிய வர்த்தகனிடத்தில் ஓடிப்போய், "ஐயா! நான்பட்டபாடுபோதும், நீர்கொடுத்த 100 பொற்காசையும் திரும்பக்கொடுத்துவிடுகின்றேன், அதைநீரே வைத்துக்கொள்ளும், நீர் என்னிடத்திலிருந் தெடுத்துக்கொண்ட நித்திரையையும் மனரம்மியத்தையும் மாத்திரம் எனக்குத்திரும்பக் கொடுத்துவிடும். உமக்கொரு சலாம் உமது பொருளுக்கிரண்டுசலாம்." என்று சொல்லிக்கொடுத்துவிட்டுப்போய்விட்டான்.

ஏழைகளைவிடப் பணக்காரர்களுக்குக்கவலை அதிகமாயுண்டாய் விடுமென்பதற்கு இது திருஷ்டாந்தம்.

## 219. ஹாங்க என்னும் தீவருகேயுள்ள ஓர் அதிசயமான குகை.

239-ம் பக்கத் தொடர்ச்சி.

அநேகவருஷங்களுக்குமுன் இத்தீவிலுள்ள வாவு என்னும் பட்டணத்தில் ஓர் கொடுங்கோலரசன் ஆளுகைசெய்துகொண்டிருந்தான். அவன் ஜனங்களை மிகவும் ஒடுக்கி வெகு அக்கிரமங்களை நடப்பித்துக்கொண்டுவந்தான். ஆகையால் அவனுக்குக் கீழ்ப்பட்ட பிரதானிகளிலொருவன் அவ்வரசனுடைய துன்மார்க்க நடக்கைகளைச் சகிக்கமாட்டாமல் அவனுடைய பிரஜைகளுக்குள் கலகத்தை



யுண்டுபண்ணி அவர்கள் ஒருமனப்பட்டு அரசனை எதிர்க்கும்படி செய்து அதனால் தங்களைக் கசப்பான அடிமைத்தனத்தில் வைத்திருந்த அவ்வரசனுடைய ராஜ்ஜியபாரத்திற்கு முடிவுண்டாக்கிச் சகலஜனங்களுக்கும் பெரிய க்ஷேமத்தையுண்டுபண்ணவேண்டுமென்று தீர்மானித்ததுமன்றி, இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதில் தனக்கு என்னமோசம் நேர்ந்தாலும் நேரட்டும் என்று ஒன்றுக்குமஞ்சாமல் வெகுதைரியத்தோடு சிலமுயற்சிகளை இரகசியமாய்ச்செய்துகொண்டிருந்தான். இத்தருணத்தில் அவனைச்சேர்ந்த சிநேகிதர்களில் ஒருவன் விசுவாசததுரோகமாய் இச்சங்கதிகளைத் துஷ்ட அரசனுக்கு வெளிப்படுத்தித்தன் சிநேகிதனைக் காட்டிக் கொடுத்துவிட்டான். உடனே அரசன் கடுங்கோபங்கொண்டு அவனைப்பிடித்துக்கொண்டுபோய் நடுக்கடலில் தாழ்த்திக்கொன்றுவிடும்படி கட்டளையிட்டதுந்தவிர, மகா குரூர நெஞ்சமுள்ளவனாய் அம்மனிதனுடைய மனைவிமக்கள் முதலிய வம்சத்தார் யாவரையும் சங்கரித்து நிர்மூலமாக்கிவிடவேண்டுமென்ற மகாகொடிய தீர்ப்பும் பண்ணினான். இப்பிரதானியின் குமாரத்திகளில் ஒருத்தி மகாசௌந்தரிய ரூபமுள்ளவளும் சிறந்தகுணாதிசயங்களையுடையவளுமாயிருந்தாள். இவளை அத்தீவிலுள்ள பிரதானிகளுக்குள் உயர்ந்த அந்தஸ்தையுடைய ஒருவனுக்கு விவாகம் செய்துகொடுக்க நியமித்திருந்தது. இவளும் தன் தகப்பன்வீட்டாரெல்லாரோடுங்கூட மடிந்துபோக இருக்குந்தருணத்தில் பின்னே காட்டியிருக்கும் விதமாய் அம்மோசத்திற்குத் தப்பித்துக்கொண்டாள்.

முன்சொல்லப்பட்ட குகையைக் கண்டுபிடித்த பாலியப்பிரதானியானவனும் மேற்சொல்லிய கொடுங்கோலரசனை வெறுத்தபடியால் அவனுக்குவிரோதமாய் ஜனங்களைக்கலகத்திற்கு ஏவவேண்டுமென்று தீர்மானித்துத் தானும் சிலபிரயத்தனங்களை இரகசியமாய்ச்செய்துகொண்டிருந்தான். இச்சமயத்தில்தான் அவன்மேற்சொல்லிய குகையைக்கண்டு பிடித்தான். அவன் அதைக்கண்டுபிடித்த சங்கதியை வேறொருவருக்கும் சொல்லாமல் இரகசியமாய் வைத்திருந்ததற்கு முகாந்தரமென்னவெனில், தான் அரசனுக்கு விரோதமாய்ச்செய்யும் பிரயத்தனங்கள் சித்திபெறாமற் போகுமாகில் பயங்கரமாய்ப் பழிவாங்குங்குணத்தையுடைய அவ்வரசனுடைய கடுங்கோபத்திற்குத் தான் தப்பி ஓடிப்போய் ஒளித்துக் கொள்ளுவதற்கு அக்குகை மிகவும் ஏற்றதெனக்கண்டு அதை ஒருவருக்கும் வெளிப்

படுத்தாமலிருந்தான். இப்பாலிய பிரதானியானவன் மேலேசொல்லப்பட்ட கன்னிகையின் அதிரூபசௌந்தரியத்தையும் சிறந்தகுணங்களையும் வெகுகாலமாய்க் கவனித்து அவள்மீதுசொல்லிமுடியாத அன்பும்ஆசையுமுள்ளவனாயிருந்தான், ஆனால் அவள்வேறொருவனுக்கு நியமிக்கப்பட்ட பெண்ணாகையால் தனக்கு அவள் பேரிலுள்ள ஆசைப்பெருக்கத்தைத்தன்னாலியன்றமட்டும் அடக்கி ஆளும்படி முயன்றுகொண்டிருந்தான். இப்படியிருக்குங்காலத்தில் அவளுடைய பிதாவானவன் அக்கொடுங்கோலரசனுக்குவிரோதமாய்ச்செய்தபிரயத்தனங்கள் வெளிப்பட்டுப்போக அரசன் கடுங்கோபமடைந்து அவனையும் அவன்வீட்டாரனைவரையும் நிர்மூலமாயழித்துவிடும்படி மகாகுரூர ஆக்கினைசெய்தான். இதைக் கேள்விப்பட்ட மாத்திரத்தில் குகையைக் கண்டுபிடித்த பால்யப்பிரதானியானவன் அக்கன்னிகையினிடத்திற்கு விரைந்தோடிப்போய் அதிசீக்கிரத்தில் அவளுக்கு வரவிருந்தமோசத்தைத் தெரிவித்து அவளைநோக்கி நீ என்னைமோசக்காரனென்று நினையாது உன்சுகவாழ்வை அத்தியந்த விசுவாசத்தோடு கருதுகிறவனென்றே உறுதியாய்நம்பி என் ஆலோசனைக்கு இடங்கொடுப்பாயாகில் உன்னை இப்பெருமோசத்தில் நின்றும் ரக்ஷித்துக் காப்பாற்ற என்னால்கூடும். நான் உன்னை என்கண்மணியைப்போல் பராமரித்துப் பாதுகாத்து வருவேன்” என்று மிகுந்த அன்போடும் உருக்கத்தோடும் சொன்னான். இதைக்கேட்டமாத்திரத்தில் அவள் மனது அன்பினாலும் நன்றியறிந்த சிந்தையாலும் பொங்கிற்று. அவள் அவனை உத்தமசிநேகிதனென்றும் மஹாபெரிய உபகாரியென்றும் நம்பி அவனுடைய நடத்துதலுக்குத் தன்னைமுற்றிலும் ஒப்புக்கொடுக்கச் சம்மதித்து அவன்கையைத் தன் இருகரங்களாலும் இறுகப்பிடித்துக்கொண்டாள். உடனே அவன் அவசியமான எத்தனங்களைச் செய்தபின் அன்று இராவிருட்டில் அவளை இரகசியமாயழைத்துக்கொண்டு வாவுபட்டணத்தினின்றும் புறப்பட்டுக் கடற்கரை சேருமட்டும் காடுகள் புதர்கள் வழியாய்நடந்துபோய் ஆயத்தமாயிருந்த ஒரு சிறுபடகில் இருவரும் ஏறிக்கொண்டு அதிவிரைவாய்த் தண்டுவலித்துக் குகையிலிருக்கும் கற்பாறைக்கு நேராகச்சென்றார்கள். இப்படிச்செல்லுகையில், தான் அக்குகையைக்கண்டுபிடித்தவகையையும் தற்காலத்துக்குத்தான் அவளை அதற்குள் ஒளித்துவைக்கும்படி யோசித்திருப்பதையும் பின்பு நல்லசமயம் வாய்க்கும்போது அவளை அங்கிருந்து பிஜி தீவுகளுக்குக் கொண்டுபோய்ச்சேர்க்க எண்ணியிருப்பதையும் அ



160962

வும் உலகத்தின் பற்பல தேசங்களிலும் விஸ்தாரமாயிருக்கின்றமையால் மறுபடியும் அவைகளிற் பிரவேசிப்பது அழகாயிராது. அவைகளொற் பொதுவாய் எல்லா ஜனங்களுக்கும் அதிகபிரயோசனமுண்டாகுமென்றாவது ஊகிப்பதற்கிடமின்மையால், அவ்விதஏற்பாடுகளுக்கு ஒருவருடன்படியரொவ்வியும் பெரும்பான்மையர் ஒவ்வாமலுமிருக்கக்கூடும். ஆனால், நம்முடைய அபிப்பிராயம் யாதெனில்.

நமது இராஜப் பிரதிநிதியவர்கள் இதுவிஷயத்தில் தக்கபடி முன்வந்து முயற்சித்து, பம்பாய் மதராஸ் என்னும் இவ்விரண்டிடத்துக் கவர்னர்களும் அதற்குதவியாய்நின்றால், இந்தியாவிலுள்ள சகல பிரபுக்களிடத்திலும் சாமானியமான ஜனங்களிடத்திலுங்கூடத்தொகைகள் வசூல்செய்யக்கூடும். வலியக்கொடுக்கும் பிரபுக்களை வேண்டாமென்றுரையாமல் வந்தவரையில் வகைதேடிக்கொண்டு தொகையைச் சேகரஞ்செய்தால், பூமியிற் புதைந்துகிடக்கும் பணங்களும், பாங்கியைத் தாங்கிநிற்கும் பணங்களும், செட்டிகளிடத்திற் குட்டிபோட்டுக்கொண்டிருக்கும் பணங்களும், ஆகிய இவையன்றி இன்னும் பலவகையாகக் குவிந்துகிடக்கும் பணங்களும்திரண்டு,கூடியசீக்கிரத்தில் அனேகங்கோடிக் கணக்கானதொகைகளை வசூல்செய்துவிடலாமென்பதிற் சந்தேகமேயில்லை. இவ்விதம் சேர்ந்த பணத்திற்கு, இந்தியன் விக்டோரியா பாமின் ரிலீப் பண்ட் (Indian Victoria Famine relief Fund) என்ற நாமகரணஞ்சூட்டி, இந்தியாவில்; அடிக்கடி தலை நீட்டிக்கொண்டுவருகிற பஞ்சத்தைத் தலையெடுக்கவொட்டாமற் றறித்துவிடுவதற்குத்தக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதாவது-இந்தியாமுழுதும் ஜலத்தைவிரும்பி வானத்தை நோக்காமல், பூமியிற்றானே நீர்க்கால்களைக்கண்டு சந்தோஷமடையும்படியான ஏற்பாடொன்று, இராஜாங்கத்தார்களுக்குத் தற்செயலான பலசெலவுகள் நேர்ந்தகாலத்தில் பிரஜைகளிடத்தில் வரி ஏற்படுத்தாமல் முற்கூறப்பட்டுள்ள நிதியிலிருந்து வேண்டுமானதொகையை எடுத்துக்கொள்வதொன்று, தற்காலம் குடிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரிச்சுமையைக் குறைப்பதொன்று, ஆகிய இம்மூன்று விஷயங்களையும் மேற்படி நிதியைக்கொண்டு நடத்திவருவார்களாயின், இந்தியாவின் பஞ்சம் பஞ்சாய்ப் பறந்துவிடுமென்பதிற் கொஞ்சமும் சந்தேகமில்லை. அப்போது குடிகளெல்லாம் சந்தோஷமாய் வாழ்வார்கள். “குடியுயரக்கோனுயரும்.” என்றபடி அரசாங்கத்தார்களுக்குப் பெருத்தலாபமும் கீர்த்தியும், நமதன்னை விக்டோரியா அம்மாளவர்களு

வளிடத்தில் தெரிவித்தான். அவள் தன்னைமுற்றிலும் அவனுடைய பராமரிப்புக்கு ஒப்புக்கொடுத்த படியாலும் அவனிடத்தில் அவளுக்குமிருந்த அன்பும் நம்பிக்கையுமிருந்தபடியாலும் அவன்சொல்வதெல்லாவற்றிற்கும் உடனே இணங்கவும் அவன்போகும் வழிகளெல்லாம் தானும் சற்றேனும் சந்தேகியாமற் செல்லவும் மனமுள்ளவளாயிருந்தான். அவர்கள் படகு அக்கற்பாறைக்குச் சமீபமாய்ப்போனவுடனே அவன்முன்னும் அவள் பின்னுமாகப் படகில் நின்றும் ஜலத்திற்குதித்து இருவரும் ஒன்றாக முக்குளித்துக் குகைக்குள் பிரவேசித்து ஜலத்தைவிட்டெழுந்து குகையின் ஓர்பாகத்தில் உட்கார்ந்து, அவன் கொஞ்சகாலத்திற்குமுன் தனக்கென்று அக்குகைக்குள்கொண்டுபோய் வைத்திருந்த கொஞ்சம் போஜன பதார்த்தங்களை இருவரும் சாப்பிட்டுத் தங்களுக்குண்டான சரீரவருத்தத்தினின்றும் மனத்திகில் வேதனையினின்றும் சற்றுநீங்கலாகி இளைப்பாறினார்கள். (இ-வரும்.)

220. சமாச்சாரம்.

## பஞ்சத்தைத் துஞ்சவைக்க ஓருபாயம்.

நமது மகாராணியாரவர்களுடைய கீர்த்திப்பிரதாபத்தை எப்போதும் இந்தியாவில் நிலைநாட்டவைப்பதற்காக, ஓர் ஞாபகச்சின்னம் ஏற்படுத்திவைக்கவேண்டுமென்று நமது இராஜப்பிரதிநிதியாகிய லார்ட் கர்ஸன் பிரபு உத்தேசித்தபடி ஓர்நிதி ஏற்படுத்தப்பட்டு, அனேக இராஜாக்கள் ஜமீன்தார்கள் பெரிய பிரபுக்கள் முதலிய பெரிய அந்தஸ்துடையவர்களெல்லாம் முன்வந்து லட்சககணக்காய்த் தொகைவசூல் செய்யப்பட்டுவருகின்றது. அநேகம் பிரபுக்கள் லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டுக் கொடுப்பதற்குச் சித்தமாயிருந்தும், சிலரிடத்தில் லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டுக் கொடுப்பதை மறுக்கிறார்கள். இவ்விதமாகச் சேர்க்கப்படும் நிதியை எவ்விதமாயுபயோகப்படுத்துவதென்பதைப் பற்றிப் பலர் பல அபிப்பிராயப்பட்டு வருகிறார்கள். பெருங்கீர்த்தியும் புகழும் அடையப்பெற்ற சக்கரவர்த்தினியவர்களுடைய ஞாபகத்தை நிலைநாட்டுவதற்குச்செய்யும் பிரயத்தனங்கள் நூதனமானவைகளாகவும், உலகத்தில் எங்குமே இல்லாதனவாகவும் யாவராலும் புகழத்தக்கனவாகவும், காலஞ்சென்ற மஹா சக்கரவர்த்தினியம்மாளவர்களுக்கும் இருவகையுலகத்திலும்புகழும் சிறப்பும் உயர்சுகமும் எக்காலமும் தந்தருளத்தக்கனவாகவும் இயற்றப்பட்டால்தான் மேலானயுக்தியாக அங்கீகரிக்கப்படும், நூதனக்காட்சிசாலை - கல்விச்சாலை, தொழிற்சாலை - முதலியசாலைகள்யா